# NALADYAR

WITH

## A CLEAR TAMIL COMMENTARY

AND

AN ENGLISH TRANSLATION

OF THE TEXT.

FIRST EDITION.

PRINTED AND PUBLISHED BY

W. PUSHPARATHA CHETTY & CO.,

K. R. PRESS:

289, *Thumboo Chetty Street,*

MADRAS.

—

1892.

*Copy-right.*

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P. O.
RAMNAD DIST.

Digitized by Google

LOAN STACK

Digitized by Google

No. 11430

கடவுள்துணை.

ஜயினமுனிவர்களருளிச்செய்த

நீதிநூலாகிய

# நாலடியார்

என்றுவழங்கும்

## நாலடிநானூறுமூலமும்,

அதற்குத்

தெளிபொருள்விளக்கப்

பதவுரையும்,

ஆங்கிலேய மொழிபெயர்ப்பும்,

289 THUMBOO CHETTY ST. MADRAS

முதற்பதிப்பு.

...ஷ்பாதசெட்டி அண்டு கம்பெனியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும் அச்சுக்கூடத்திற்

பிரசுரஞ் செய்யப்பட்டது.

சென்னபட்டணம்:

1892.

*Copy-right.*

Digitized by Google

# முகவுரை.

நாலடியார் என்பது சங்கமருவிய நீதிநூல்களில் ஒன்று; ஆதலால் இது நாலாயிர வருடங்களுக்குமுன் உண்டானதென்று சொல்லலாம்.

ஒருகாலத்தில் ஜயினமுனிவர் எண்ணாயிரவர்கள் கொடிய பஞ்சத்தால் சுதேசம் விட்டுப் பாண்டிநாடடைந்து அந்நாட்டரசனால் ஆதரிக்கப்பட்டு வந்தனரென்றும், அவர்கள் சிலகாலஞ் சென்றபின்பு பஞ்சம் நீங்கித் தேசம் செழிப்படைந்த தறிந்து, தங்கள் ஊருக்குப்போக விடைதரல் வேண்டுமென்று பாண்டியனைக் கேட்டனரென்றும், மகாராஜா பல சாஸ்திரங்களிலும் வல்ல புலவர்கள் இருப்பது தன் னிராஜசபைக்கு ஓர் அணியெனக் கருதி யிருந்தனனாதலால் அவர்கள் தன்னைவிட்டு நீங்க மனமில்லாதவனாய் அவர்கள் வேண்டுகோளுக் கிணங்கவில்லையென்றும், அதனால் முனிவர்கள் ஒருநாள் இரவில் யாருமறியாதபடி பாண்டிநாட்டை விட்டு அகன்றனரென்றும், பொழுது விடிந்தபின் அம்முனிவர்கள் போனவழி தெரியாமல் திகைத்து அவர்கள் உறைவிடங்களைச் சோதனை செய்யும்போது ஒவ்வொரு முனிவர்களின் ஆசனத்தின்கீழ் ஒவ்வொரு பாடலெழுதிய சீட்டு வைக்கப்பட்டிருந்ததென்றும், அப்பாடல்கள் அநேகமாயும், ஒன்றுக்கொன்று கருத்தில் பொருத்தமில்லாமல் முரணாயு மிருந்தமையால், அரசனது உத்தரவின்படி வைகையில் எறியப்பட்டன வென்றும், அவற்றுள் நானூறு பாடல்கள் எதிர் ஏறிக் கரை சேர்ந்தன வென்றும், அவற்றைப் பாண்டியன் ஒருநூலாக்கி "நாலடியார்" எனப் பெயரிட்டு வழங்கினனென்றும், எஞ்சிய பாடல்களில் கரை சேர்ந்தனவாகிய சில "பழமொழி" "அறநெறிச்சாரம்" என்கிற பெயர்களால் வழங்கி வருகின்றன வென்றுஞ் சொல்லுகின்றனர்.

எங்ஙனமாயினும் இந்நூல் ஒருவர் செய்த தன்றென்றும், சிதறின பாடல்களா லமைக்கப்பட்ட தென்றும் விளங்குகின்றது. ஆகையினாலேயே இதில் ஆங்காங்குச் சில பாடல்கள் அதிகாரத்திற்கு வருந்திப் பொருத்தத் தக்கனவா யிருக்கின்றன. பிற்காலத்தில் பதுமனாரென்னு மோர்புலவர் ஒருவாறு உரைசெய் திருக்கின்றனர். இவரே இந்நூற்குப் பால் இயல் அதிகாரம் என்னும் பாகுபாடு ஏற்படுத்தினரென்று சிலர் கூறுகின்றனர்.


Digitized by Google

இதற்கு "நாலடியார்" என்னும் பெயர் வந்தவாறு என்னெனில், பால்முதலிய பாகுபாடுள்ள நீதி நூல்களுள் திருக்குறள் முதலும் இது இரண்டாவதுமாக மதிக்கப் பட்டது. ஆகவே, குறள்வெண்பாவாலாகிய நூலுக்குக் "குறள்" எனப் பெயர்வந்ததுபோல நாலடி வெண்பாவாலாகிய இதற்கு "நாலடி" எனப் பெயர்வந்ததெனவுணர்க. சித்தியார் கோவையார் என்பதுபோல் கவுரவத்தைப் பற்றி ஆர் விகுதி கூட்ட நாலடியார் என்றாயிற்று.

குறள் நாலடி என்று கூட்டி வழங்குதலால் நாலடி என்பது பிறபாட்டின்மேற் செல்லாது வெண்பாவின் மேலதாயே நின்றது. நாலடி என்பது அன்மொழித்தொகையாய் நேரிசை இன்னிசை வெண்பாக்களை யுணர்த்தி அவைகளாலாகிய நூலுக்கு ஆகுபெயராயிற்று.

இந் நாலடியாருக்கு இதுவரையில் வழங்கிவந்த பல உரைகளையும், சென்னை யூநிவர்சிட்டி பரீக்ஷைக்குப் பல வருடங்களிற் குறித்த பாகங்களுக்குச் சென்னை பிரசிடென்சி காலீஜ் தமிழ்ப் பிரதம பண்டிதராயிருந்த தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியா ரவர்களாலும், மற்ற பண்டிதர்களாலும் இயற்றிய வுரைகளையுந் தழுவி ஓர் உரை இயற்றி "நாலடியார் தெளிபொருள்விளக்கப் பதவுரை" என்கிற பெயரால் வெளியிட்டனம். இதில் அந்தந்தப் பாடல்களுக்குக் கூடியவரையும் பொருளும் கருத்தும் விளங்க எழுதி அவசியமான இலக்கணங்களையுங் காட்டி நன்னூற் சூத்திரங்களையும் குறித்திருக்கின்றனம்; ஆதலால் ஓரிடத்திலெழுதிய வகையைக்கொண்டு மற்ற விடங்களிலும் இலக்கண முதலியவைகளை உய்த்தறிந்து கொள்க.

மேற்படி உரையில் பொருள் விளங்கிய சொற்களுக்கும், முன் ஓரிடத்தில் பொருள் எழுதிய சொற்களுக்கும் பொருள் எழுதாமல் —, இந்தக்கீற்றை அடையாளமிட்டிருக்கின்றோம். வருவித்த சொற்களுக்கும் முன் எழுதியதற்கே பொருள் விளங்க எழுதிய வேறு சொற்களுக்கும் முறையே () [] இவ்வாறு இருபுறத்திலும் பிறை இட்டிருக்கின்றனம்.

கஅஅருஞு }
மார்ச்சுமீ }

ஊ. பு.

Digitized by Google

உ

கடவுள்துணை.

# நாலடியார்

# அதிகார அட்டவணை.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| | கடவுள்வணக்கம் ... ... ... | Invocation. | 1 |

## I. அறத்துப்பால்—On Virtue.

| அதிகாரம். | | | |
|---|---|---|---|
| 1. | செல்வநிலையாமை ... ... | The instability of riches | 2 |
| 2. | இளமைநிலையாமை ... ... | The instability of youth | 11 |
| 3. | யாக்கைநிலையாமை ... ... | The instability of the body | 19 |
| 4. | அறன்வலியுறுத்தல் ... | The source of power of virtue | 26 |
| 5. | தூய்தன்மை ... ... ... | The impurity of the body | 34 |
| 6. | துறவு ... ... ... ... | Asceticism ... ... ... | 42 |
| 7. | சினமின்மை ... ... ... | Placidity ... .. ... | 50 |
| 8. | பொறையுடைமை ... ... | Patience ... ... ... | 57 |
| 9. | பிறர்மனைநயவாமை ... | Not coveting the wife of another | 65 |
| 10. | ஈகை ... ... ... ... | Liberality ... ... ... | 73 |
| 11. | பழவினை ... ... ... | The effects of actions done in a former birth | 81 |
| 12. | மெய்மை ... ... ... ... | Truth ... ... ... | 90 |
| 13. | தீவினையச்சம் ... ... ... | Fear of misconduct ... | 97 |

## II. பொருட்பால்—On Property.

| | | | |
|---|---|---|---|
| 14. | கல்வி ... ... ... ... | Learning ... ... ... | 105 |
| 15. | குடிப்பிறப்பு ... ... ... | High birth ... ... | 113 |
| 16. | மேன்மக்கள் ... ... ... | The good ... ... ... | 121 |
| 17. | பெரியாரைப்பிழையாமை | Against reproaching the great | 127 |
| 18. | நல்லினஞ்சேர்தல் ... ... | Good society ... ... | 134 |
| 19. | பெருமை ... ... ... ... | Greatness ... ... ... | 140 |
| 20. | தாளாண்மை ... ... ... | Perseverance ... ... | 147 |


Digitized by Google

| அதிகாரம். | | | பக்கம். |
|---|---|---|---|
| 21. | சுற்றந்தழால் ... ... ... | The union of relations | ... 154 |
| 22. | நட்பாராய்தல் ... ... ... | The choice of friends | ... 160 |
| 23. | நட்பிற்பிழைபொறுத்தல் | Bearing with the faults of friends | 167 |
| 24. | கூடாநட்பு ... ... ... | False friendship ... | ... 173 |
| 25. | அறிவுடைமை ... ... ... | Wisdom ... ... | ... 179 |
| 26. | அறிவின்மை ... ... ... | Want of wisdom ... | ... 185 |
| 27. | நன்றியில்செல்வம் ... ... | Unprofitable wealth | ... 191 |
| 28. | ஈயாமை ... ... ... ... | Illiberality ... | ... 197 |
| 29. | இன்மை ... ... .. ... | Poverty ... ... | ... 203 |
| 30. | மானம் ... ... ... ... | Honor ... ... | ... 209 |
| 31. | இரவச்சம் ... ... ... | Fear of mendicity | ... 215 |
| 32. | அவையறிதல் ... ... ... | Knowing the assembly | ... 222 |
| 33. | புல்லறிவாண்மை ... ... | Fool's self-conceit | ... 230 |
| 34. | பேதைமை ... ... ... | Ignorance ... ... | ... 237 |
| 35. | கீழ்மை ... ... ... ... | Meanness ... ... | ... 244 |
| 36. | கயமை ... ... ... ... | Baseness ... ... | ... 251 |
| 37. | பன்னெறி ... ... ... | Miscellaneous ... | ... 258 |
| 38. | பொதுமகளிர் ... ... ... | Courtesans ... | ... 265 |
| 39. | கற்புடைமகளிர் ... ... | Chaste women ... | ... 272 |


## III. காமத்துப்பால்—On Love.


| | | | |
|---|---|---|---|
| 40. | காமநுதலியல் ... ... | Amour ... ... | ... 291 |

கடவுள்துணை.

# நாலடியாருரை.

# NALADIYAR.

## கடவுள் வணக்கம்—Invocation.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்
கானிலந் தோயாக் கடவுளை - யாநிலம்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னியவை முடிக வென்று.

(இ-ள்.) வான் இடு வில்லின் - மேகத்தில் உண்டாகிய இந்திரவில்லைப்போன்ற, வரவு அறியா - (உடம்பின்) தோற்றத்தை அறிந்து, வாய்மையால் - சத்தியத்தினால், கால் நிலம் தோயா - பாதம் பூமியிற்படியாத, கடவுளை - தேவனை, எம் உள்ளத்து - எமது மனதில், முன்னியவை முடிக என்று - நினைத்தகாரியங்கள் கைகூடவேண்டுமென்றுசொல்லி, யாம் - நாம், நிலம் சென்னி உற - தரையில் தலை பொருந்தும்படி, வணங்கி சேர்தும் - தெண்டமிட்டுச் சேர்வோம், எ-று.

வானத்தில் தோன்றுகிற வில்லானது இப்போதென்றும் இன்னபடியென்றும் தெரியாமல் உண்டாகி உரு அழிந்துபோவதுபோல் உடம்பும் அழிந்துபோவதனால் அது அழியாமுன்னமே நினைத்தகாரியங்கள் கைகூடும்படி கடவுளை நாம் பணிந்து சேர்வோம் என்பது கருத்து.

கால்நிலந் தோயாமைக்குக் காரணம் வாய்மை. தேவதைகளின் பாதம் பூமியிற் படியாதென்று சாஸ்திரஞ் சொல்லும். இங்கு கடவுளை என்பது அருகனை. இக்காப்பு பதுமனார் செய்ததென்பர்.

இடு—வினைத்தொகை. வில்லின்—இன் உருபு ஒப்புப்பொருளில் வந்தது. அறியா—செய்யா என்னும் வினையெச்சம். முன்னியவை—வினையாலணையும்பெயர்; முன்னு - பகுதி, இ - இன் இடைநிலையின் ஈறு குறைந்தது, அ - சாரியை, வை-விகுதி. என்று—சொல்லெச்சம். சேர்தும் — தனித் தன்மைப்பன்மை வினைமுற்று; உயர்வினால் வந்த பன்மை. முடிக — வேண்டிக்கோடலில் வந்த வியங்கோள்.

---

Knowing that our body is as unstable as the rainbow that appears in the sky, I prostrate before and invoke the God Aruka, whose feet do not touch the earth, that the objects in my view may be well accomplished.

Digitized by Google

# க. அறத்துப்பால்.

# I. OF VIRTUE.

அறத்துப்பால்—தருமத்தைவிளக்கும் பாகம், என உருபும்பயனு முடன்றொக்கதொகையா விரியும். அறமாவது மநு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்.

## க-வது அதிகாரம்—Chapter I.

### செல்வநிலையாமை—The Instability of Riches.

அதாவது செல்வம் நிலையல்லவென்பதைக் குறித்துச் சொல்லியது. செல்வநிலையாமை - செல்வத்தின் நிலையாமையைத் தெரிவிக்கிற அதிகாரம். அதிகாரம் - தலைமை, செல்வநிலையாமையைத் தலைமையாவைத்துச் சொல்லியபாடல் என்பது திரண்டபொருள். மற்றவைகளு மிப்படியே.

அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

(இ - ள்.) அறு சுவை உண்டி - (தித்திப்பு முதலிய) ஆறு உருசிகளையுமுடைய போசனத்தை, இல்லாள் அமர்ந்து ஊட்ட - பெண்சாதி அன்பு கொண்டு உண்பிக்க, மறு சிகை நீக்கி - மற்றொரு கவளத்தைத்தள்ளி, உண்டாரும் - உண்ட செல்வர்களும், வறிஞர் ஆய் - தரித்திரராகி, ஓர் இடத்து சென்று - வேறோரிடம் போய், கூழ் இரப்பர் எனில் - கூழை இரப்பார்களாகில், செல்வம் ஒன்று - செல்வமென்கிற ஒருபொருள், உண்டு ஆக - நிலையாயிருக்கிறதாக, வைக்கல் பாற்று அன்று - வைக்கும்படியான தன்மையுடையது அல்ல, எ-று.

பரிசாரகர் பலரிருக்கையிலும் இல்லாளே அன்பு கூர்ந்து பல இன்சொற்களோடு வேண்டி உண்பிக்கையில் ஒருவகை யுண்டியில் ஒரு கவளமேயன்றி மற்றொன்றை நீக்கிப்புசித்த மிக்க செல்வமுடையவர்க்கும் வேறோ ரிடத்திற்போய் கூழையிரக்கும்படி நேரிடுமானால்

---

1. Even those who have eaten of every variety of food of six flavours, laid before them by their wives with anxious attention, rejecting a second morsel from any dish, may yet become poor and go beggining for pottage. Verily then, riches are but seeming and not to be considered stable.

Digitized by Google

செல்வமென்பது நிலையான பொருளென்று நினைக்கத்தக்கதல்ல என்பது கருத்து.

அறுசுவை உண்டி — இரண்டனுருபும் பயனு முடன்தொக்க தொகை; அறுசுவை - பண்புத்தொகை. உண்டி — உண் - பகுதி, இ - செயப்படுபொருள் விகுதி, ட் - எழுத்துப்பேறு. இல்=இல்லறம், அதற்கு உரியவள் இல்லாள். ஊட்ட—பிறவினை வினையெச்சம்; உண் - பகுதி, டு - பிறவினை விகுதி, முதல்நீட்சி - விகாரம்; ஆக ஊட்டு - பிறவினைப்பகுதி. சிகை=குடுமி, பிசைந்த அன்னத்தில் எடுக்குங்கவளம் அதுபோல் தோன்றுதலால் ஆகுபெயராய்க் கவளத்தை யுணர்த்திற்று. வறிஞர்—ஞகரம் பெயர்ப்பகுபத இடைநிலை. "இலக்கியங் கண்டதற்கு" [நன்-பதவி-சூ-கச.] உண்டு — குறிப்புமுற்று. வைக்கல்—தொழிற்பெயர்; வைக்கலாகியபால்= வைக்கற்பால், இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பால் - தன்மை, அதனையுடையது வைக்கற்பாற்று; று - ஒன்றன்பால்விகுதி, குறிப்புமுற்று; இது அன்று என்பதோடுசேர்ந்து ஒரு தன்மைப்பட்டு எதிர்மறை வினைமுற்றாயிற்று. (க)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

(இ - ள்.) செல்வம்—, அகடு உற - நடுவுநிலைமைபொருந்த, யார் மாட்டும் - யாரிடத்திலும், நில்லாது - நிற்காமல், சகடக்கால் போல- பண்டியின் சக்கரம் போல, வரும் - (கீழ்மேலாகவும் மேல் கீழாகவும்) மாறிவரும்; (ஆதலால்) துகள் தீர் பெருஞ் செல்வம் - குற்றமற்ற பெரிய செல்வமானது, தோன்றியக்கால் - உண்டானல், தொட்டு - (அது) தொடங்கி, பகடு நடந்த கூழ் - எருமைக்கடாக்கள் உழைத்ததனு லுண்டாகிய சோற்றை, பல்லாரோடு உண்க - (ஏழைகள்) பலரோடு (கூடி) உண்ணக்கடவர்கள், (செல்வம் தோன்றியவர்கள்), எ-று.

செல்வம் சகடக்கால்போல் தாழ்ந்து முயர்ந்தும் நிலையின்றி வருவதாதலால் அச்செல்வ முண்டான காலந்தொட்டுப் பலருக்கு மிட்டுத் தாமு முண்பது நலம் என்பது கருத்து.

---

2. When thou hast by blameless means acquired great wealth, then eat with others the rice obtained by oxen labor [cultivation]; for wealth never remains stable with any one but changes like the cart wheel.

Digitized by Google

தோன்றியக்கால் — எதிர்காலவினையெச்சம்; தொட்டு என்ப தோடு அது என்பதை வருவித்துக்கூட்டுக. பகடு நடந்த கூழ் என்பது கடாவின் உழைப்பினாலுண்டான சோற்றில் ஒருவருக்கு மாத்திரஞ் சுதந்திரம் வேண்டாமென ஓரொளிமையைக் காட்டுதற்கு நடந்த என்னும் பெயரெச்சம் காரியப்பெயரைக் கொண்டது. "அறுபொருட் பெயரும் எஞ்சநிற்பது பெயரெச்சம்" என்பதில் உம்மையை எச்சப் பொருளதாவைத்து, பிறபெயரும் என்று உரைத்திருப்பதைக் காண்க. இல்லாது — முற்றெச்சம்; எதிர்மறை வினையெச்சமுமாம். துகள் தீர் என்பதில் தீர் வினைத்தொகையாதலின் பகரம் இரட்டியாது நின்றதென உணர்க. (உ)

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

(இ - ள்.) யானை எருத்தம் பொலிய - யானையின் பிடரானது விளங்கும்படி, குடை நிழல் கீழ் - குடையினது நிழலிலே, சேனை தலைவராய் சென்றோரும் - சேனைகளுக்கு அதிபதியாகிச் சென்ற அரசர்களும், ஏனை வினை உலப்ப - மற்றவினை [தீவினை] கெடுப்பதால், வேறு ஆகி - (முன்னிருந்த நிலையினின்றும்) வேறுபட்டு, தாம் கொண்ட மனையாளை - தாங்கள் கலியாணஞ்செய்துகொண்ட மனைவியை, மாற்றார் கொள - பகைவர் கொண்டுபோக, வீழ்வர் - கெடுவார்கள், எ-று.

சேனைகள் சூழ்ந்துவர யானைமேல் செல்லும் பெருஞ் செல்வமுடைய அரசர்களும் அந்த நல்வினை போய்த் தீவினை வரும்போது தம் மனையாளும் தமக்கு உதவாதபடி பிறர்கொண்டுபோக வறுமையும் சங்கடமும் அடைவர் ஆதலால், செல்வஞ் சதமன்றென நோக்கி அது கிடைத்தபோது தருமசிந்தையோ டிருக்கவேண்டும் என்பது கருத்து.

எருத்தத்தில் பொலிய என உரைக்கவுங்கூடும். பொலிய என்னும் வினையெச்சம் சென்றோர் என்பதற்கு உரியா நின்றது. கீழ்— ஏழனுருபு. உம்மை - உயர்வு சிறப்பு. செல்வம் நல்வினைப்பயனாதலின் ஏனை என்பது தீவினைக்காயிற்று. உலப்ப—இதுவேறாகி என்ப

---

3. Even those kings, who marched as generals mounted gracefully on the backs of elephants under the shade of umbrellas, will when the effect of evil deeds of former birth works their ruin, suffer a change of state and fall for ever, even their wives being carried away by their foes.

Digitized by Google

தற்குக் காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சம். கொள — இது வீழ்வர் என்பதற்குக் காரணம். (௩)

நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

(இ-ள்.) வாழ் நாள் - ஆயுள், சென்றன சென்றன - நிச்சயமாய் விரைவில் போகாநின்றன; கூற்று - எமன், செறுத்து - கோபித்து, உடன் வந்தது வந்தது - கூடவே நிச்சயமாய் வரக் காத்திருக்கிறது; (ஆதலால்) நின்றன நின்றன - இருக்கின்றன இருக்கின்றன என்று நினைக்கப்பட்டபொருள்கள், நில்லா என உணர்ந்து - அப்படி நிற்க மாட்டா [அழியும்] என்று அறிந்து, ஒன்றின ஒன்றின - உங்களுக்குச் செய்யக்கூடியவையாகப் பொருந்தின தருமங்களை, செயின் - செய்யப் புகுந்தால், வல்லே செய்க - துரிதமாய்ச் செய்யக் கடவீர்கள், எ-று.

கூடிய நற்காரியங்களைச் செய்யவேண்டின் சீக்கிரஞ் செய்யவேண் டும், ஆகட்டும் பின்செய்வோ மென்றால் நாம் ஸ்திரமென்று நினைக்கிற பொருள்கள் அழிந்துபோகின்றன, அன்றியும் நமக்கும் நாளேற ஆயுள் குறுக எமன்கொண்டுபோகக் காத்திருக்கிறான், பின்பு நாம் ஒன் றுஞ் செய்யமுடியாது என்பது கருத்து.

சென்றன சென்றன என்னும் அடுக்கு விரைவைக் காட்டுகின் றது. நிச்சயம்பற்றி நிகழ்காலத்தில் இறந்தகாலம் வந்தது. வந்தது வந்தது என்பதும் அப்படியே; ["விரைவினு மிகவினும்" பொது - சூ - ௩௩.] நின்றன நின்றன என்பதில் முதலது முற்றெச்சம், இரண் டாவது வினையாலணையும் பெயர், இங்கும் முன்போல் காலவழுவ மைதி; அங்ஙனம் நினைக்கப்பட்டன என்று பிரகரணத்தால் கொள் ளப்பட்டது. ஒன்றின ஒன்றின என்னும் அடுக்கு அப்போது அப் போது எனக் காலபேதத்தைக்குறித்து வந்தது. வல்லே—இடைச் சொல். கூற்று — சொல்லளவில் அஃறிணையாய் உயர்திணைப் பொரு ளை யுணர்த்துகின்றது. (௪)

---

4. Know thou that those things are unstable which thou deemest stable; and do quickly if thou wouldst, those duties which lie in thy power to perform; for the days of thy life are fast running out and the wrathful Death is expected to come to thee at every moment.

Digitized by Google
ROJA. MUTHIAH
ARTIST

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னாவ தென்று பிடித்திரா - முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடுதீக் கூற்றந்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

(இ - ள்.) என் ஆனும் ஒன்று - ஏதாகிலும் ஒருபொருள், தம் கை உற பெற்றக்கால் - தமது கையிற் சேரப்பெற்றால், பின் ஆவது என்று - (இதனைக்கொடுப்பது) பிற்காலத்தி லாகட்டுமென்று, பிடித்து இரா - பிடித்துவைத்திராமல், முன்னே கொடுத்தார் - முந்தியே கொடுத்தவர்கள், கோடு இல் தீ கூற்றம் - கோணுதலில்லாத தீய எமன், தொடுத்து செல்லும்-கயிற்றாற்கட்டிப் போகின்ற, சுரம் ஆறு-பாலைநில வழியினின்றும், உயப் போவர் - தப்பிப்போவார்கள், எ-று.

பிறர்க்குக் கொடுக்கத்தக்கதாகக் கையிலோர் பொருள் கிடைத்த போதே அதனைக்கொடுப்பவர் எமன் கொண்டுபோகுங் கொடியவழியினின்று தப்பி நல்ல நெறியிற் செல்வர், அதாவது சுவர்க்கநெறியிற் செல்வர் என்பது கருத்து.

சுரம்—காய்ச்சலான என்னவுமாம். தொடுத்த ஆறு என்பது தொடுத்தாறு என்று ஈறு தொகுத்தலாய்க்கொண்டு கட்டியபடியே எனவு முரைக்கலாம்.

தான்கொண்ட கொள்கையைச் சிறிதும் பிசகாமல் நிறைவேற்றுதலால் "கோடு இல் தீக்கூற்றம்" என்றது. பாலை நிலமாவது சிறிதும் நீர் நிழல்க ளில்லாத வெட்டவெளி. சுரம் என்பது 'ஜ்வரம்' என்கிற ஆரியத்தின் திரிபு. என் என்பது இடை குறைந்த எவன் என்னுங் குறிப்பு முற்றினு லணையும்பெயர். ஆனும் என்பது விகற்பப்பொருளில் வந்ததோ ரிடைச்சொல். ஆவது என்பது இங்கு வியங்கோளாக் கொள்ளத்தக்கது. எதிர்கால முற்றாக்கொள்ளினும் கொள்ளலாம். பொருள் சிறிது சுற்றும். (ரு)

இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை - ஆற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
தழீஇந் தழீஇந் தண்ணம்படும்.

---

5. Those who readily gave alms when anything however small came into their hands, without saying "Oh this could be given hereafter," will escape the dreary desert path in which the cruel but just Yama drags his victims bound fast with ropes. [*Yama* = *Angel of Death.*]

6. The day appointed passes not its bound; and there are none in this world who have leaped over his limit and

Digitized by Google

(இ-ள்.) இழைத்த நாள் - (ஆயுளாக) ஏற்படுத்தியநாட்கள், எல்லை இகவா - தமது எல்லையைக் கடக்கமாட்டா; கூற்றம் ஒரீஇ - எமனை விட்டு, பிழைத்து - தப்பி, குதித்து உய்ந்தார் - குதித்து ஓடிப்போனவர்கள், ஈங்கு இல்லை - இவ்வுலகத்திலில்லை; ஆற்ற - நிரம்ப, பெரும் பொருள் வைத்தீர் - மிகுந்த திரவியத்தைச் (சேர்த்து) வைத்திருப்பவர்களே! வழங்குமின் - கொடுங்கள்; நாளை - நாளைக்கே, [சீக்கிரத்தில்], தண்ணம் - பிணப்பறையானது, தழீஇம் தழீஇம் - தழீந்தழீ மென்னுமோசையாக, படும் - அடிக்கப்படும், எ-று.

ஒருவனுக்கு நிர்ணயித்த ஆயுசு ஒரு நிமிஷமும் மேலோடாதாகையால் எமனுக்குத் தப்பிப் பிழைத்தவரில்லை; நீரும் இறந்து போவதற்கு முன்பே பரோபகாரமாகப் பொருளைக் கொடுங்கள் என்பது கருத்து.

தண்ணம் படுமென்றது சாவுக்குக் குறிப்பு. ஆற்ற—வினையுரியாவந்த வினையெச்சம். வைத்தீர்—முன்னிலை வினையாலணையும்பெயர். நாளை என்பது காலவிரைவைக் காட்டியது. வழங்குமின் — மின் - ஏவற்பன்மை விகுதி. (சு)

தோற்றஞ்சான் ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநு நாளுண்ணும் - ஆற்ற
அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

(இ - ள்.) கூற்று - இயமன், தோற்றம் சால் ஞாயிறு - பிரகாசமிகுந்த சூரியனை, நாழி ஆ - படியாகக்கொண்டு, வைகலும் - தினந்தோறும், நும் நாள் அளந்து உண்ணும் - உமது ஆயுளை அளவிட்டுத் தின்கிறது; (ஆதலின்) ஆற்ற அறம் செய்து-மிகுதியாகத் தருமத்தைச் செய்து, அருளுடையீர் ஆகுமின் - கிருபையுள்ளவர் ஆகுங்கள்; (அப்படியாகாமற் போனால்) யாரும் - எப்படிப்பட்டவரும், பிறந்தும் - (மனிதராய்ப்) பிறந்தும், பிறவாதாரில் - பிறவாதார் போலவே (ஆவர்), எ-று.

ஜனங்களே! ஆயுள் சீக்கிரத்திற் கழிந்து போகின்றது; அப்படி கழியாமுன்னமே பரோபகார முதலிய தருமங்களைச் செய்து

---

survived, escaping the clutches of Death. Be therefore liberal, ye who have wealth, for your funeral drum may beat tomorrow.

7. The Death devours away your life daily using the resplendent sun as his measure. Perform therefore virtuous deeds and become compassionate, for otherwise all those that are born will be considered as unborn.

Digitized by Google

உயிர்க்கு உயிராகிய கிருபை உள்ளவனென்று பலருஞ் சொல்லும் படி ஆகுங்கள்; அப்படி ஆகாமற்போனால் தருமங்களைச் செய்யக் கூடிய மனிததேக மெடுத்தும் உபயோகமில்லை என்பது கருத்து.

சூரியன் உதயமாவதனாலே நாளுண்டாகி அழிவதால் சூரியனை அளவுக் கருவியாகவும், அது அழிய ஆயுசு குறைந்துபோவதனால் கூற்ற முண்ணுமென்றும் ரூபித்தார். 'அறஞ்செய் தருளுடையீ ராகுமின்' என்பதை விகுதிபிரித்தல் என்கிற நியாயத்தினால் 'அருளுடையீராகி அறஞ்செய்மின்' என்று மாற்றிப் பொருளுரைத்தல் நேர். பிறவா தாரில்—ஐந்தனுருபு, ஒப்புப்பொருளில் வந்தது. சால் ஞாயிறு—உரி யடியாகப்பிறந்த வினையின் தொகை, உரித்தொடரென்பதே நேர். வைகலும்—உம்மை முற்றுப்பொருளில் வந்தது. (எ)

செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

(இ-ள்.) செல்வர் யாம் என்று - நாம் செல்வமுடையவரா யிருக் கிறோமென்று நினைத்து, தாம் செல் உழி - தாம் போகுமிடங்களில், எண்ணாத - (பிறரை) மதியாத, புல் அறிவாளர் - அற்பபுத்தியுள்ளவர் களுடைய, பெருஞ் செல்வம் - பெரிய சம்பத்தும், எல்லில் - இரவில், கரு கொண்மூ வாய்திறந்த மின்னு போல் - கருமையாகிய மேகம் வாய்திறப்பதனா லுண்டாகிய மின்னலைப்போல, தோன்றி - காணப் பட்டு, மருங்கு அற - இருந்தவிடம் தெரியாமல், கெட்டுவிடும் - அழிந்துபோம், எ-று.

செல்வச் செருக்கினால் பிறரை மதியாத அற்பருடைய செல்வம் மின்னல் தோன்றி அழிவதுபோல் விரைவில் அழிந்துபோம் என்பது கருத்து.

ஜனங்களுடைய தோற்றத்திற்கு வாய் திறந்து விடுவதுபோல் காணப்படுதலால் 'கருங்கொண்மூ வாய் திறந்த' என்றார்.

செல்வர்யாம் என்றது ஓரிடம் பிறவிடந்தழுவிய வழுவமைதி [பொது-சூ உக]. செல்வுழி — செல் உழி.என்பதில் "எகரவினாமுச் சுட்டின் முன்னர்" என்னுஞ் சூத்திரத்தில் 'செறி' என்பதனால் வகரங்

8. The great riches of those little-minded men, who inconsiderately declare themselves as rich men wherever they go, and do not respect others, may be utterly destroyed and vanish like the flash of lightning darting in the night from a black thunder cloud.

Digitized by Google

தோன்றியது; [உயிர் - சூ. கங ன்] உரையைக்காண்க. பெருஞ்செல்வமும் என உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. கொண்மூ—நீரைக்கொள்ளுந் தன்மையால் வந்த காரணப்பெயர் என்னலாம். மூ - விகுதி, இலக்கியங் கண்டதற்கு இலக்கண மியம்பவேண்டுவது நியாயம். திறந்த—இப்பெயரெச்சம் காரியப்பெயர் கொண்டது. (அ)

உண்ணு னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.

(இ-ள்.) உண்ணான் - (ஒருவன்) தான் உண்ணாதவனாயும், ஒளி நிறான் - தன்னிடத்துப் பிரகாசத்தை நிறுத்தாதவனாயும், ஓங்குபுகழ் செய்யான் - வளரும்படியான கீர்த்தியைச் சம்பாதியாதவனாயும், துன் அரு கேளிர் - சேருதற்கு அரிய உறவினருடைய, துயர் களையான் - துன்பங்களை நீக்காதவனாயும், வழங்கான் - (யாசகர்க்குக்) கொடாதவனாயும், கொன்னே - வீணாக, பொருள் காத்திருப்பானேல்—, அஆ - ஐயோ! இழந்தான் என்று எண்ணப்படும் - (அப்பொருளை) போக்கடித்துக்கொண்டானென்று (புத்திமான்களால்) எண்ணப்படுவான், எ-று.

செல்வம் நிலையற்றதாகையால் அது கிடைத்தபோதே தானும் அனுபவித்து நல்லவிஷயத்திலும் உபயோகப்படுத்தாமற் போனால் அதை இழந்ததற்குச் சமானம் என்பது கருத்து.

ஒளி நிறான் என்றது ஆடையாபரணங்களாலே தன்னிடத்து ஒரு பிரகாசத்தை உண்டாக்காதவன் என்றபடி. புகழாவது, தேவாலயம் பிரமாலயம் சத்திரம் சாலை முதலிய செய்தலாலாவது. ஓங்கு புகழ் என்றது மேலுலகங்களிலுஞ் செல்லும்படியான புகழ் என்பதற்கு; புகழினால் சொர்க்கமுண்டு என்பது சாஸ்திரக்கொள்கை. எப்போதோ ஒருகால் எதோ ஒருதுன்ப மடைந்து தம்மவனென்று தன்னிடம்வந்த பந்துக்கள் என்பதற்கு 'துன்னருங்கேளீர்' என்றார்.

நிறான்—நிறு - பகுதி, ஆன் - விகுதி, இடைநிலையின்றி வந்ததனால் எதிர்மறையையுங் காட்டியது; ஆகாரம் புணர்ந்து கெட்டதென

---

9. If a man will not eat to his satisfaction, will not dress himself becomingly, will not do anything which will acquire him a name, will not remove the distress of his dearly obtained relations and will not assist the needy but will only keep watching his wealth, he will surely be supposed by the wise to have lost all he had.

Digitized by Google

வும், ஆ எதிர்மறை யிடைநிலையும் னகரவிகுதியும் வந்தன எனவும் கொள்வது முண்டு. கொன்—இடைச்சொல். அஆ—இரக்கக்குறிப்பு. எண்ணப்படும்—"பல்லோர்படர்க்கை"என்கிற சூத்திரத்தினால் செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது [வினை, சூ. உக.] (௯)

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் - கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

(இ-ள்.) வான் தோய் மலை நாட - ஆகாயத்தை அளாவிய மலைகளுள்ள நாட்டின் அரசனே! உடாஅதும் - தான் உடுக்காமலும், உண்ணாதும் - உண்ணாமலும், தம் உடம்பு செற்றும் - தமது உடம்பை வருத்தியும், கெடாத நல்லறமும் செய்யார் - அழியாத நல்ல தருமங்களையும் செய்யாராகி, கொடாது - (ஆதுலர்க்கு) கொடாமல், வைத்து ஈட்டினார் - ஈட்டிவைத்தவர்கள், இழப்பர் - அச்செல்வத்தை இழந்து போவர்; உய்த்து - (பலமலரினின்றும்) கொண்டுவந்து, ஈட்டும் - சேர்த்துவைக்கிற, தேன் ஈ - தேனீயானது, கரி - (இதற்கு) சாட்சி, எ-று. [ஈட்டல் - சம்பாதித்தல்]

இதற்கும் முற்பாட்டின் கருத்தே கருத்து. தேனீயானது பல பூக்களிலுஞ்சென்று கொண்டுவந்து தேனைச்சேர்த்துவைக்க அதை யாரோ கொண்டுபோவதுபோல் தனக்கும் பிறர்க்கும் பயன்படுத்தாத பொருளைக் கள்ளர்முதலினோர் கொண்டுபோவர் என்பது விசேஷம்.

'தம் உடம்பு செற்றும் கெடாத நல்லறம்'என்றது, தமது உடம்பை அழியும்படி வருத்தினாலும் உடம்பு அழியுமேயன்றி அறம் அழியாமலிருக்கும், அப்படிப்பட்ட தருமத்தை எனச் சிறப்பிக்கும்படி.

உடாஅது முதலிய அளபெடைகள் இசை நிறைக்க வந்தவை. செற்றும்—உம்மை இழிவு சிறப்பு, அறமும்—உயர்வு சிறப்பு; மற்ற உம்மைகள் எண்ணும்மை. வைத்து ஈட்டினார் என்பதை ஈட்டிவைத்தார் என விகுதி பிரித்துக் கூட்டிக்கொள்க. உய்த்தீட்டும் என்பதையும் அப்படி பிரித்து உரைக்கலாம். ஒருகாரியத்தைக் கண்டவனே

---

10. They who, vexing their own bodies by stinting in food and raiment, perform not acts of charity that ever remain undestroyed, but avariciously hoard up a great wealth, will lose it all. O Lord of the mountains which touch the sky! the bees that are driven away from the honey they have collected bear testimony to this.

Digitized by Google

யன்றி அனுபவித்தவனும் சாக்ஷியாவானுகையால், 'தேனீக்கரி' என்ருர். தேன் என்பதைப்பிரித்து ஈட்டினுர் என்பதற்குச் செயப்படு பொருளாவைத்தும் உரைக்கலாம். (க0)

## உ-வது அதிகாரம்.—Chapter II.

### இளமை நிலையாமை.—The Instability of Youth.

அதாவது இளமைப்பருவம் சதமல்லவென்று சொல்லுவது.

நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார் - புரைதீரா
மன்னு விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னுங் கெழுந்திருப் பார்.

(இ - ள்.) நல்லறிவாளர் - நல்ல விவேகமுள்ளவர், நரை வரும் என்று எண்ணி - மூப்பு (நிச்சயமாக) வரத்தக்கது என்று நினைத்து, குழவியிடத்தே துறந்தார் - இளம் பருவத்திலேயே இல்வாழ்க்கையை விட்டார்கள்; புரை தீரா - குற்றம் நீங்காத, மன்னு இளமை - நிலையில்லாத இளமைப்பிராயம், மகிழ்ந்தாரே - (இருக்கிறதென்று) சந்தோஷப்பட்டவர்களே, கோல் ஊன்றி - கோலை ஊன்றிக்கொண்டு, இன்னுங்கு எழுந்திருப்பார் - வருத்தமாக எழுந்திருப்பார்கள், எ-று.

காரியாகாரியங்களைப் பகுத்தறிந்தவர்கள் இளமையுள்ளபோது மகிழாமல் அக்காலத்துக்கு உரிய சுகங்களைக் கைவிட்டிருப்பார்; இளமையிலே மகிழ்ந்தவரோ அது நீங்கி மூப்பு வந்தபோது சுகத்தை யனுபவிக்கச் சக்தியில்லாமையால் வருத்தப்படுவார்கள் என்பது கருத்து.

நரை என்பது மூப்புக்குக் காரிய ஆகுபெயர். குழவியிடத்தே—இடம் - ஏழனுருபு. தாமே யெழுந்திருக்கமாட்டாமல் கோலையூன்றியும் எழுந்திருக்க வருந்துவார் என்பது சுகானுபவசக்தி இல்லாமைக் குக் குறிப்பு. மன்னு—மன் என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம்; ஈறுதொக்கது. இன்னு ஆங்கு என்பது ஈறு தொகுத்தலாய் இன்னுங்கு என்ருயிற்று. (க)

---

1. Those who are truly wise, mindful that gray hair will come, have renounced (the world) in youth. It is only those who rejoice in unstable youth, which is never free from vice, that will have to lean on a staff and rise up with difficulty.

Digitized by Google

நட்புநா ரற்றன நல்லாரு மஃகினர்
அற்புத் தளையு மவிழ்ந்தன - உட்காணய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி.

(இ - ள்.) நட்பு நார் அற்றன - சிநேகங்களாகிய பந்தனைகள் அற்றுப்போயின; நல்லாரும் அஃகினர் - பெண்டுகளும் அன்புகுறைந்தார்கள்; அற்பு தளையும் அவிழ்ந்தன - அன்பாகிய பந்தமும் அவிழ்ந்து போயின; உள் காணய் - மனதிலே யோசித்துப்பார்; வாழ்தலின் - உயிரோடிருப்பதிலே, ஊதியம் என் உண்டாம் - பயன் என்ன உண்டு? ஆழ் கலத்து அன்ன கலி வந்தது - கடலில் முழுகுகின்ற கப்பலிடத்து உண்டாகும் ஓசைபோன்ற (உறவினர் அழுங் குரல்) வந்தது, எ-று.

உறவினர்களும் மனைவிகளும் இனி இவனால் உபயோகமில்லையென்று அன்பில்லாமல் இருக்கவும், தனக்கும் யாரிடத்தும் அன்பு நீங்கியிருக்கவும், மூப்புவந்து நலிய உயிரோடிருப்பதிற் பயனென்ன? அதுதான் சதமோ; சாவுங் கிட்டிற்றே; இவற்றால் இளமை நிலைமையல்லவென்று நீ யோசித்து இளமை மகிழாதே என்பது கருத்து.

நட்பு—நட்பினனுக்கு ஆகுபெயர். என்—எவனென்னும் குறிப்பு முற்று இடைகுறைந்தது. ஆம் - அசை, உண்டாம் என ஒரு சொல்லாகவுங் கொள்ளலாம். வந்தது — நிச்சயம்பற்றி இறந்தகாலமா வந்த வழுவமைதி. கலத்தன்ன—கலத்தது அன்ன, ஈறு தொகுத்தல். ஏ- அசை. (உ)

சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்
பற்கழன்று பண்டம் பழிகாறும் - இற்செறிந்து [ப்
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு.

(இ-ள்.) சொல் தளர்ந்து - பேச்சு ஓசை குன்றி, கோல் ஊன்றி- தடியைப் பிடித்துக்கொண்டு, சோர்ந்த நடையினராய் - தள்ளாடிப்

2. The bonds of friendship are broken; wives have become cold in love; and few the cords of love are loosened. Consider well, what profit is there in living? Oh! it is come, the wail of distress as when a ship founders. [*Wail of distress is the cry of relations*].

3. Those foolish men, who cling to the married state and give themselves up to lust, until their body becomes an object of disgust to all, their speech growing indistinct, their gait becoming unsteady, they themselves being compelled to lean on a staff and their teeth falling out, walk not in the path of virtue which is productive of heavenly bliss.

Digitized by Google

போன நடையுடையவராய், பல் கழன்று - பற்கள் நீங்கிப்போய், பண்டம் பழிகாறும் - (தேகமாகிய) பண்டம் பழிப்பை யடையுமள வும், இல் செறிந்து - இல்வாழ்க்கையில் நெருங்கியிருந்து, காம நெறி படரும் - ஆசைவழியிலே செல்லுகின்ற, கண்ணினார்க்கு - அறிவுடைய வருக்கு, ஏமம் நெறி படரும் ஆறு - சுகமாகிய வழியில் செல்லும் வகை, இல்லை—, எ-று. ஏ - அசை.

மூப்பினால் சுகானுபவத்திற்கு உரிய அங்கங்களெல்லாம் பழுது படச் சாமளவும் உலக இன்பத்தையே நாடினவர்கள் மோட்ச இன் பத்துக்குரிய வழியில் செல்லார்கள் என்பது கருத்து.

சொல் தளர்ந்து, பல் கழன்று, — இவை சினைவினையாதலால் முதல்வினையோடு முடிந்தன [வினை - சூ - உசு.] (ங)

தாழாத் தளராத் தலைநடுக்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டும் - காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்கைக்கோல்
அம்மனைக்கோ லாகிய ஞான்று.

(இ - ள்.) தாழா - குனிந்து, தளரா - தளர்ச்சியடைந்து, தலை நடுக்கா - தலை நடுக்கலெடுத்து, தண்டு ஊன்றா - தடியை ஊன்றிக் கொண்டு, வீழா இறக்கும் - வீழ்ந்து செல்லுகின்ற, இவள் மாட்டும்— இவளிடத்தும், காழ் இல்லா - உறுதி இல்லாத, மம்மர் கொள் - மோ கத்தைக்கொண்ட, மாந்தர்க்கு - மனிதருக்கு, தன் கை கோல் - அவள் கையிலிருக்கும் ஊன்றுகோலானது, அம்மனை கோல் ஆகிய ஞான்று— அவள் தாய்க்கு ஊன்றுகோலா யிருந்த நாளில், அணங்கு ஆகும் - வருத்தமுண்டா யிருக்கும், [மிக்க ஆசை உண்டாயிருக்கு மென்ற படி,] எ-று.

மூப்பினால் முதுகு வளைந்து தலை நடுக்கத்தோடு தள்ளாடிச்செல் லும் இந்தக் கிழவியினிடத்திலும் அவள் பருவமடைந்திருந்த காலத் தில் காமுகர்க்கு ஆசையாய் வருத்தமுண்டாயிருக்கும், ஆகவே இப் போது வெறுக்கத்தக்க நிலையுள்ள இவள் முன் ஆசைப்படத்தக்க வளா யிருந்தாள் என்பது கருத்து.

இதனால் இளமை நிலையல்ல என்றதாயிற்று. தாழா முதலியவை செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள். தலை

---

4. Men must have conceived a very distressing love for her who now stoops with age, staggers, shakes her head, leans on a staff and stumbles, when the staff she now leans upon was the staff of her mother, [*i. e. when she was young*].

Digitized by Google

நடுக்கா என்பது சினைவினையாதலின் முதல்வினையோடு முடிந்தது. இவள்மாட்டும்—உம்மை இழிவுசிறப்பு. கோல்மேல் வைத்து அம்மானை ஆடுகிற வழக்கமும் உண்டு ஆதலால், இவள் இப்பொழுது ஊன்றிக்கொண்டுபோகும் கோல் அம்மனை ஆடும் கோலாகிய காலத்து என்றால் இளமைப்பருவத்து எனவும் கருத்துக் கொள்ளலாம். (ச)

எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றாள் - தனக்குத்தாய்
ஆகி யவளு மதுவானாற் றாய்த்தாய்க்கொண்
டேகு மளித்திவ் வுலகு.

(இ-ள்.) எனக்கு தாய் ஆகியாள் - எனக்குத் தாயா யிருந்தவள், என்னை ஈங்கு இட்டு - என்னை இவ்வுலகத்தில் விட்டுவிட்டு, தனக்கு தாய் நாடி - தனக்கொரு தாயைத் தேடி, சென்றாள் - போனாள்; தனக்கு தாய் ஆகியவளும் - அவளுக்குத் தாயாயிருந்தவளும், அது ஆனால் - அப்படியானால், இ உலகு - இந்த உலகம், தாய் தாய் கொண்டு - ஒருதாய் மற்றொருதாயைத் தேடிக்கொண்டு, ஏகும் அளித்து - செல்லும்படியான ஏழமையை உடையது, எ-று.

தாய் நாடிச் சென்றாள் என்றால் இறந்து இன்னொருத்தி வயிற்றிற் பிறக்கிறாள் என்பதாம். மக்களைப் பெற்று இளமையிலேயே இறக்கிறாள் என்பதனால் இளமை சதமல்ல என்பது கருத்து.

ஆகியாள்—ஆகு - பகுதி, இன் - இடைநிலை, ஈறுகெட்டது, ஆள்-விகுதி, ய்—உடம்படுமெய், சந்தி. ஆகியவள் — இதில் ஈறுகெட்ட இடைநிலைமேல் அகரச்சாரியையும் அள் விகுதியும் வந்தன. தாய்த் தாய்க் கொண்டு என்பதில் முதலது எழுவாயாதலினால் தகரம் விரித்தல்விகாரம், இரண்டாவதில் "இயல்பின் விகாரமும்" என்கிறவிதியால் ககரம் மிக்கது; 'தாய்தாய்க்கொண்டு' என்கிறபாடம் நன்று. 'தாயைத் தாவிக்கொண்டு' எனவும் உரைக்கலாம், அதில் தாய் - வினையெச்சமாம், யகரம் - வினையெச்சவிகுதி. ஏ - அசை. (ரு)

வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க

---

5. She who was my mother, leaving me here, had departed seeking a mother for herself; if this was the case also with her mother, then the wretched nature of this world is that mothers die away, each seeking after another.

6. Unstable joy, like that of a sheep which, when the fragrant garland thick with foliage hangs before it in the hands

Digitized by Google

மறிகுள முண்டன்ன மன்னு மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

(இ - ள்.) வெறி அயர் - வெறியாட்டம் ஆடுகிற, வெம் களத்து - உக்கிரமான இடத்தில், வேல் மகன் பாணி - பூசாரியினது கையில், முறி ஆர் நறு கண்ணி - தளிர்கள் நிறைந்த வாசனையுள்ள பூமாலை, முன்னர் தயங்க - எதிரில் விளங்க, மறி - ஆடு, குளகு உண்ட அன்ன - உணவை உண்டதற்குச் சமானமான, மன்னு மகிழ்ச்சி - நிலையில்லாத சந்தோஷம், அறிவுடையாளர்கண் இல் - விவேகமுள்ளவர்களிடத்து இல்லை, எ-று.

உடனே தன்னை வெட்டுகிறதற்குக் கத்திபிடித்திருக்கிற பூசாரி கையில் தொங்குகிற மாலையிலுள்ள தளிரைத்தின்று அவ்வாடு சந்தோஷப்படுகிறதற்குச் சமானமாயிருக்கின்றது, இன்றைக் கிருந்து நாளை அழியும்படியான இளமையைக்கண்டு மகிழ்தல் என்பது கருத்து.

பலஜெந்துக்களைப் பலியிடுமிடமாதலால் வெங்களமென்றது. வேல் என்பது ஆயுதப்பொதுப்பெயராகையால் இங்கே கத்திக்குக் கொள்க. ஆர்—வினைத்தொகை. நறுங்கண்ணி — பண்புத்தொகை. தயங்க—நிகழ்காலவினையெச்சம். உண்ட அன்ன என்பது ஈறுதொகுத்தலால் உண்டன்ன என்று ஆயிற்று. உண்டு என்பதை உண்டால் என்பதின் திரிபாகக்கொண்டும் உரைக்கலாம் [வினை-கு-உஎ.] இல்—விகுதிகெட்ட குறிப்புமுற்று. உடையாளர்—உடைமையை ஆள்பவர் என்பது பொருள், ஒருசொற்றன்மைப்பட்டது. (சு)

பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை - நனிபெரிதும்
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளும்
கோற்கண்ண ளாகுங் குனிந்து.

(இ - ள்.) இளமை - இளமைப்பருவமானது, பனி படு சோலை - குளிர்ச்சி பொருந்திய சோலையினிடத்து, பயன் மரம் எல்லாம் - பயனைத்தரும் மரங்களெல்லாம், கனி உதிர்ந்து வீழ்ந்தால் அற்று - பழங்கள் உதிர்ந்துபோய் வீழ்ந்தாற்போலும்; இவளை இப்பெண்ணை,

---

of the sacrificing priest, in the horrid place where he holds his revels, eats thereof as if its were fodder, is never felt by wise men.

7. The season of youth is like the fruit-bearing trees in cool groves after dropping all their fruits. Desire ye not greatly the damsel saying "she has lance-like eyes," for she will hereafter stoop in her gait and use the staff in lieu of her eyes.

Digitized by Google

வேல் கண்ணள் என்று - வேலைப்போன்ற கண்களையுடையவளென்று, நனி பெரிதும் - மிக விசேஷமாக, வெஃகன்மின் - ஆசைப்படாதிருங்கள்; மற்று - இன்னும் யாதெனில், இவளும் - இத்தன்மையான இப்பெண்ணும், குனிந்து - வளைந்து, கோல் கண்ணள் ஆகும் - கோலாகிய கண்ணை உடையவள் ஆவாள், எ-று.

ஒரு சோலையிலே யாவரும் விரும்பும்படி கனிகளோடுங் கூடியிருந்த மரம் அக்கனிகளுதிர்ந்துவிட்டால் விரும்பத்தகா தாவது போல், இளமை அழிந்தபின் அவ்வுடம்பு விரும்பத்தகாததாம்; ஆதலினால் பெண்கள்மேல் ஆசைவைக்கவேண்டாம் என்பதாம்.

மூப்பில் பார்வை குறைந்துபோவதினால் கோலைத்தட்டி வழி கண்டுகொண்டு செல்வாள் என மூப்பிற்குக்குறியாகக் கோல்கண்ணள் என்றார்.

படு—வினைத்தொகை, படுதல்—பொருந்துதல். பயன்மரம்—இரண்டனுருபும்பயனும் தொக்கதொடர். மரம்—பால்பகா அஃறிணைப் பெயர், இங்கு பன்மை. கனி உதிர்ந்து—சினைவினை முதலைக்கொண்டது. வீழ்ந்து என்பது வீழ்ந்தால் என்பதின் திரிபு. அற்று—அன் என்னும் உவமையிடைச்சொல்லடியாகப்பிறந்த குறிப்புமுற்று; அன் என்பதில் னகரம் சாரியை. நனி பெரிதும் — ஒருபொருட்பன்மொழி. வெஃகன்மின்—எதிர்மறை ஏவற்பன்மைமுற்று. மற்று—வினைமாற்றில்வந்த அசை. இவளும்—உம்மை - உயர்வுசிறப்பு. (எ)

பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
இருசிகையு முண்டீரோ வென்று - வரிசையால்
உண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்
எண்ணா ரறிவுடை யார்.

(இ - ள்.) பருவம் எனைத்து உள - வயது எவ்வளவு உண்டு? பல்லின் பால் ஏனை - பல்லின்தன்மை எவ்வளவு? இரு சிகையும் உண்டீரோ என்று - இரண்டு முனைகளிலும் மென்று தின்றீரோ என்று, வரிசையால் - முறையால், உள் நாட்டம் கொள்ளப்படுதலால் - உள்ளத்தில் ஆராய்தலைச் செய்யப்படுவதனால், யாக்கை கோள்-தேகத்தின் வலிமையை, [இளமையில் தேகக்கட்டை என்றபடி] அறிவுடையார் எண்ணார் - விவேகிகள் (சதமென்று) சிந்திக்கமாட்டார், எ-று.

---

8. How old are you? What is the state of your teeth? Do you chew at both ends of your jaw? Thus with one question after another do they inquire about the state of the body. The wise will not therefore consider the bodily vigour in youth to be everlasting.

Digitized by Google

இப்போது வயதென்ன? பல் தளர்ந்திருக்கிறதோ? பல் தளராமல் இருக்கிறதோ? வாயின் இருபுறங்களிலும் மென்று தின்னும்படி இருக்கிறதா? என்று, இப்படி காலந்தோறும் மாறுதலை விசாரிக்கக் கூடியதாய் இருப்பதினால், இளமையில் உடம்பிலுள்ள வலிமையைச் சதமென்று நினைப்பது புத்தியீனம் என்பது கருத்து.

எனைத்து—என் என்னும் வினாவிடைச்சொல்லின்மேல் ஐகாரச் சாரியையும், து - விகுதியும் வந்த குறிப்புவினையாலணையும்பெயர். உளது என்பது ஈறுதொகுத்தலாய் உள என்று ஆயிற்று. ஏனை— இதுவும் எனைத்து என்பதின் விகாரமென்னலாம், அல்லது ஏ என்னும் வினாவிடைச்சொல்லடியாகவந்த குறிப்புமுற்றாம்; னகர ஐகாரங்கள் சாரியை, து - விகுதி குன்றியது. (அ)

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

(இ-ள்.) நல் வினை - தருமகாரியத்தை, மற்று அறிவாம் - பின்னே அறிந்து செய்வோம், (இப்போது) யாம் இளையம் என்னாது - யாம் இளையவரா யிருக்கின்றோம் என்று நினையாமல், கைத்து உண்டாம் போழ்தே - பொருள் இருக்கும் பொழுதே, கரவாது அறம் செய்மின் - மறைக்காமல் தருமத்தைச் செய்யுங்கள்; தீ வளியால் - கடுங்காற்றினால், முற்றி இருந்த - முதிர்ந்த, கனி ஒழிய - பழங்கள் நீங்கிநிற்க [விழாமலிருக்க], நல் காய் - நல்ல காய்கள், உதிர்தலும் உண்டு—, எ-று.

பெருங்காற்றடிக்கையில் பழங்கள் உதிராமலிருக்க, காய் உதிர்வதுபோல் வயது சென்றவர் பிழைத்திருக்க வாலிபர் இறத்தலும் உண்டாதலால், நாம் இப்பொழுது போகங்களை அனுபவித்துக்கொண்டு வயது முதிர்ந்தபின் தருமகாரியங்களைச் செய்துகொள்வோம் என்று நினையாமல் பொருள் கிடைத்தபோதே தருமம் செய்யவேண்டும் என்பது கருத்து.

மற்று — வினைமாற்றில் வந்தது. இளையம் — குறிப்பு முற்று. கைத்து—கையிலிருக்கத்தக்கது என்னுங் காரணத்தால் பொருளுக்குப் பெயராயிற்று. உதிர்தலும்—எதிர்மறை உம்மை. (கூ)

---

9. Say not "we are young and will look to virtue bye and bye," but give alms while you have wealth without hiding it, for in a storm while fully ripe fruits remain (in trees) green fruits fall off.

Digitized by Google

ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையால்
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்மின் - பீட்பி
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்[துக்கிப்
கள்ளங் கடைப்பிடித்த னன்று.

(இ-ள்.) ஆள் பார்த்து உழலும் - (ஆயுள்முடிந்த) ஆளைத் தேடிக் கொண்டுதிரிகிற, அருள் இல் கூற்று - கிருபை யில்லாத எமன், உண்மையால் - இருப்பதனுல், தோள் கோப்பு - (பிரயாணத்துக்கு வேண்டுவதாய்) தோளில் சேர்க்கத்தக்க மூட்டையை [தருமத்தை], காலத்தால் கொண்டு - நேர்ந்தகாலத்தில் கைக்கொண்டு, உய்மின் - பிழையுங்கள்; பீள் பிதுக்கி - (வயிற்றில் இருக்கும்) கருவை வெளிப்படச் செய்து, தாய் அலற - தாயானவள் கூவி அழ, பிள்ளையை கோடலால் - பிள்ளையைக் கொண்டுபோவதினுல், அதன் கள்ளம் - அக்கூற்றினுடைய வஞ்சனையை, கடைப்பிடித்தல் நன்று - அறிந்துதேர்தல் நல்லதாம், எ-று.

எமன் கிருபையில்லாமல் சிறியவனோ பெரியவனோ ஆயுசு முடிந்தவனிடம் செல்லுகின்றான்; அன்றியும் தாய் வருந்திச் சுமந்த கருவை அகாலத்தில் வெளிப்படுத்தித் தாய் அழும்படி அந்தக் குழந்தையைக் கொண்டுபோகின்றான்; ஆதலால், எமன் எந்தக்காலத்தில் வந்து பிடிப்பானோ என்று நினைத்து இளமையை நிலையுள்ளதென்று நம்பாமல் நேர்ந்தபோதே அறஞ் செய்யவேண்டும் என்பது கருத்து.

"இயல்பின்விகாரமும் விகாரத்தியல்பும்" என்கிற உருபு புணரியல் (கஈ - வது) சூத்திரத்தினுல் ஆள் என்னும் உயர்திணைப்பெயரின் ஈறு திரிந்தது. அருளில்கூற்று—மெய்யீற்றுப்புணரியல் (நடO-வது) சூத்திர விதியால் இல் என்பது ஈறு இயல்பாய் முடிந்தது. தோளில் கோக்கத்தக்கதுதோட்கோப்பு—மூட்டை; அது இங்கே தருமத்திற்கு உவமை ஆகுபெயர். காலத்தால்—ஆல் உருபு இடப்பொருளில் வந்தது; "யாதனுருபிற் கூறிற்றாயினும்" [பெயரியல் - சூ - கூO.] பிதுக்கல்—பிறவினை; பிதுங்கல் — தன்வினை; மெல்லெழுத்து வல்லெழுத்தானது பிறவினைக்குறி. மற்று - அசை. (கO)

---

10. Truly relentless Death wanders about seeking after men. O! take ye the shoulder wallet [*i. e. practice virtue*] betimes and save thyself. He even thrusts forth the fœtus and takes away the child amidst the cries of its mother. So it is well always to know his subtlety.

Digitized by Google

## ங-வது அதிகாரம்.—Chapter III.

### யாக்கைநிலையாமை.—The Instability of the Body.

[அஃதாவது, உடம்பு நிலையற்றது என்பதைக்குறித்துச் சொல்லுவது.]

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையர் - நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
எஞ்சினா ரிவ்வுலகத் தில்.

(இ - ள்.) மலைமிசை தோன்றும் - மலையின்மேல் காணப்படுகிற, மதியம்போல் - சந்திரனைப்போல, யானை தலைமிசை கொண்ட குடையர் - யானையின் தலைமேல் வைத்த குடையையுடைய அரசரும், நிலமிசை - பூமியில், துஞ்சினார் என்று - இறந்தார்களென்று, எடுத்து தூற்றப்பட்டார் அல்லால் - பல ரறியக்காட்டி இகழப்பட்டவர்களே யல்லாமல், எஞ்சினார் - (அவ்விகழ்ச்சிக்கு உட்படாமல்) மிகுந்தவர்கள், இ உலகத்து இல் - இவ்வுலகத்தில் இல்லை, எ-று.

மகா ராஜாதிராஜாக்களும் இறந்தார்களென்று இகழப்படுதலால் யாக்கை நிலையற்றது என்பது கருத்து.

குடையர்—இங்கே உயர்வு சிறப்பும்மை, விகாரத்தால் தொக்கது. மதியம்—அம் - சாரியை. துஞ்சினார்—இது இடக்கரடக்கல்.()

வாழ்நாட் கலகாய் வயங்கொளி மண்டிலம்
வீழ்நாட் படாஅ தெழுதலால் - வாழ்நாள்
உலவாமு னொப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

(இ - ள்.) வாழ் நாட்கு - உயிரோ டிருக்குங்காலத்துக்கு, அலகு ஆய் - கணக்காய், வயங்கு ஒளி மண்டிலம் - விளங்குகிற சூரியன், வீழ் நாள் படாது - பிரயோசனமில்லாத காலம் உண்டாகாமல், எழுதலால் - உதயமாதலால், வாழ்நாள் உலவா முன் - ஆயுசு கெடாமுன்,

---

1. Even of the lords of the umbrella, held over the head of the elephant like the moon seen over the hills, none are left in this world without its being proclaimed that they have all died.

2. The shining sun rises as the measure of the day of life without one day's omission. Therefore perform your duty before your days expire. No person will abide in this earth beyond it.

Digitized by Google

ஒப்புரவு ஆற்றுமின் - கடமையான தர்மங்களைச் செய்யுங்கள்; யாரும்- எப்படிப்பட்டவரும், நிலமிசைமேல் - பூமியின்மேல், நிலவார் - நிலைபெறார், எ-று.

சூரியன் உதயமாவது ஒருநாள் கழிந்தது இரண்டுநாள் கழிந்தன என்று ஆயுசுக்கு அளவிடுவதா யிருத்தலால் ஆயுசு கழிந்துபோவதற்கு முன்னே தர்மத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

மண்டலம் = [வட்டம்], இவ்வடசொல் தமிழில் மண்டிலம் என விகாரப்பட்டு வழங்குகின்றது. படாஅது—இவ்வளபெடை சீர் நிரப்ப வந்தது. உலவா—உல - பகுதி, ஆகாரம் - எதிர்மறைவிகுதி. நிலவார் என்பதில் நில - பகுதி. ஒப்புரவு=பெரியோர் ஒப்பும்படியானபலம்; இது உபகாரத்திற்கு வழங்குகின்றது. மிசை மேல்—"ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" [பொது-கூ-சஎ.] (உ)

மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை
ஒலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

(இ-ள்.) மன்றம் கறங்க - சபையெல்லாம் முழங்க, மணம் பறை ஆயின - கலியாண வாத்தியமாய் நின்றவை, பின்றை அன்று - பின்பு அன்றைக்கே, ஆங்கே - அவ்விடத்திலேயே, அவற்கு - அந்த மனிதனுக்கு, பிணம் பறை ஆய் - பிணவாத்தியமாய், ஒலித்தலும் உண்டாம் என்று - ஓசைப்படுவதும் உண்டு என்று நினைத்து, மாண்டார் மனம் - மாட்சிமைப்பட்டவர்களுடைய மனமானது, உய்ந்து போம் ஆறே - (பிறவித்துயருக்குத்) தப்பிப்போம்படியான வழியை, வலிக்கும் - உறுதியாய்ப் பற்றியிருக்கும், எ-று.

ஒருவருக்குக் கல்லியாணத்துக்கு வைத்த வாத்தியமே உடனே அவர் சாவுக்கு அடிக்கும் வாத்தியம் ஆம்படியான நிலை யுள்ளது இவ்வுடம்பு; ஆனதால் இப்படிப்பட்ட வுடம்பைப் பராமரியாமல் தருமஞ்செய்ய முயலுவார் பெரியோர் என்பது கருத்து.

ஒலித்தலும்—உம்மை எதிர்மறையில் வந்தது. என்று—இவ்வினைச்சொல்லோடு நினைத்து என்னும் ஒருசொல் கூட்டிக்கொள்க. வலிக்குமாம்—ஆம் - அசை. மாண்டார்—மாண் - பண்படி, பகுதி,

---

3. The mind of the excellent will urge them along the path of safety by the suggestion that the marriage drum beaten at a house may, that very day, become the funeral drum of the bridegroom and sound as such.

Digitized by Google

ட் - இடைநிலை, ஆர் - விகுதி. இறந்தார் என்னும் பொருள்படும்போது மாள் - பகுதி. (ந)

சென்றே யெறிப வொருகால் சிறுவரை
நின்றே யெறிப பறையினை - நன்றேகாண்
முக்காலைக் கொட்டினுண் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

(இ - ள்.) சென்று - (செத்தவிடத்திற்குப்) போய், ஒரு கால் எறிப (பறையினை) - பிணவாத்தியத்தை ஒருதரம் கொட்டுவார்கள்; சிறுவரை நின்று - (பின்) சிறிதுகாலம் சும்மாவிருந்து, பறையினை எறிப - சாப்பறை யடிப்பார்கள்; முக்காலைக் கொட்டினுள் - மூன்றாங் காலம் வாத்தியத்தைக் கொட்டுவதற்குள்ளே, சாவார் - சாகப்போகிறவர்கள், செத்தாரை - செத்துப்போனவர்களை, மூடி சுமந்து - வஸ்திரத்தினால் மறைத்துத் தூக்கிக்கொண்டு, தீ கொண்டு எழுவர் - நெருப்பையெடுத்துக்கொண்டு போவார்கள்; நன்றே காண் - நன்றாய் யோசித்துப்பார், எ-று.

மூன்றாங் கொட்டுக்குள்ளே செத்தவரைச் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகிறார்க ளாதலால் யாக்கை நிலையற்றது என்பதாம்.

"சாவார்" என்பது, இன்றைக்கொருவரைச் சுடுகாட்டில் விட்டு வந்தவர் நாளைக்குச் செத்துப்போவார் என்பது தோன்றுதற்கு. சென்றே நின்றே — ஏகாரங்கள் - அசை. எறிப—"அர் ஆர் பவ்வூ ரகரமா ரீற்ற" என்றதனால் ப விகுதி பலர்பாலுக்கு வந்தது, [வினை-ரு-அ.] "பாந்தம் செலவொடு வரவும்" என்றதனால், [பத - ரு-கஅ.] இங்கே எதிர்காலங் காட்டியது. (ச)

கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப் [ண்டீண்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்-மணங்கொ
டுண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே
தொண்டொண்டொண் ணென்னும் பறை.

(இ-ள்.) கணம் கொண்டு - கூட்டங்கொண்டு, சுற்றத்தார் - உறவினர், கல் என்று அலற - கலீரென்று கூவி அழ, பிணம் கொண்டு - பிணத்தைத் தூக்கிக்கொண்டு, காட்டு உய்ப்பார் - சுடுகாட்டில் இடுப

---

4. Once they go and beat the drum; after pausing a little, they beat it again; and by the time they beat it the third time, they cover up the corpse and take it away with the funeral fire, the dying carrying the dead.

5. To him who, though he has seen the relations assemble and take away the corpse to the burning place in the midst of

Digitized by Google

வனை, கண்டும் - பார்த்தும், மணம் கொண்டு - கல்லியாணஞ் செய்து கொண்டு, ஈண்டு உண்டு உண்டு உண்டு என்னும் - இவ்வுலகத்தில் நிச்சயமாய்ச் சுகமுண்டு சுகமுண்டு சுகமுண்டு என்கிற, உணர்வினான் - அறிவுள்ளவனைக்குறித்து, தொண் தொண் தொண் என்னும் பறை - தொண் தொண் தொண் என்கிற வகையாய் ஒலிக்கிற பிணப்பறையானது, சாற்றும் - (இல்வாழ்க்கை இவ்வகையது என்று) சொல்லும், எ-று. ஏகாரம் - அசை, பிரசித்தத்தைக் காட்டியது என்றுஞ் சொல்லலாம்.

இறந்து சுடுகாடு சேர்பவரைப் பார்த்தும் கல்லியாணஞ் செய்து கொண்டு நான் சுகமே வாழ்வேன் என்று நினைக்கிற மூடனுக்குச் சரீரம் நிலையுள்ளதென்று நினையாதே எனப் பிணப்பறை தன் ஒலியால் தெரிவிக்கின்றது என்றால் நாளைக்கு நமக்கும் இதுதான் கதியென்று அறிவு மூட்டுகின்றது என்பது கருத்து.

'கல்' என்பது அழும் ஓசையின் குறிப்பு. உய்ப்பார்க்கண்டு— 'இயல்பின்விகாரமும்' என்கிற [உருபு - சூ - கசு.] விதியால் வலிமிகுந்தது. உண்டு உண்டு உண்டு என்னும் அடுக்கு நிச்சயமென்கிற பொருளில் வந்தது: [பொது - சூ - ௬௪.] தொண் தொண் தொண் என்பது ஒலிக்குறிப்பு. பறைசாற்றும் என்பது [பொது - ௬௯ - ம்] சூத்திரத்தின் விதியால் கருவியைக் கர்த்தாபோல் சொன்னது. (ரு)

நார்த்தொடுத் தீர்க்கிலெ னன்றாய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்.

(இ - ள.) தோல் பையுள் நின்று - தோலாற் செய்த பையாகிய உடம்பிலிருந்து, தொழில் அற செய்து - (தான் செய்யவிதித்த) தொழில்களைப் பூரணமாகச்செய்து, ஊட்டும் கூத்தன் - (அப்பயனைத் தன்னை) அனுபவிக்கச்செய்கிற கூத்தாடியாகிய ஆத்துமா, புறப்பட்டக்கால் - (அதைவிட்டு) அப்புறஞ் சென்றால், (அவ்வுடலை) நார் தொ

---

loud lamentations, does nevertheless marry and say to himself "there is surely happiness on this earth," the funeral drum will beat in warning tones.

6. When the soul has, after dwelling in it and doing perfectly all that it was ordained to do and enjoy, left the skin-bag *i. e.* the body, what does it matter whether it is dragged about with a rope, or be buried carefully, cleaned and washed, or be cast away any where, or eb left to be contemned by all?

Digitized by Google

டுத்து ஈர்க்கில் என் - கயிற்றாற் கட்டி யிழுத்தாலென்ன? நன்று ஆய்ந்து அடக்கில் என் - நன்றாகச் சுத்தஞ்செய்து அடக்கஞ்செய்தால் என்ன? பார்த்த உழி பெய்யில் என் - கண்டவிடத்தில் போட்டா லென்ன? பல்லோர் பழிக்கில் என் - பலரும் பழித்தாலென்ன? [யாதும் இழிவுமில்லை சிறப்புமில்லை என்றபடி,] எ-று.

இறந்தபின் உடலை மேன்மைப்படுத்தினும் உயர்வில்லை; தாழ்மைப்படுத்தினும் குறையில்லை; ஆதலின் இறவாதிருக்கும்பொழுதே நற்காரியம் செய்யவேண்டும் என்பது கருத்து.

இப்பாட்டு யாக்கை நிலையாமையைக் குறிப்பிப்பதனால் இவ்வதிகாரத்தில் சேர்க்கப்பட்டது என்றறிக. உயிரோடிருக்கும்போது ஒரு காலத்துக்கொருகால் வெவ்வேறான செய்கைகளைச் செய்வதனால் ஆத்துமாவைக் 'கூத்தன்' என்றது.

என் என்பது எவன் என்னும் குறிப்பு வினைமுற்று, இடைகுறைந்தது. பார்த்த உழி என்பது ஈறு தொக்கதாய்ப் பார்த்துழி என்று ஆயிற்று; உழி - இடம். பல்லோர் — ஈற்று அயல் ஆகாரம் ஓகாரமாயிற்று [பொது - சூ - உ.] (சு)

படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் - தடுமாற்றந்
தீர்ப்பேம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

(இ-ள்.) படு மழை மொக்குளில் - வீழ்கின்ற மழைநீரினது குமிழிபோல், பல் காலும் தோன்றி - பல காலங்களிலும் உண்டாகி, கெடும் இது - நாசமாகும்படியானது, ஓர் யாக்கை என்று எண்ணி - ஒருவகைப்பொருளாகிய தேகம் என்று நினைத்து, தடுமாற்றம் தீர்ப்பேம் யாம் - (இந்தச் சம்சாரத்தில்) தடுமாறுவதை நாம் போக்கக்கடவோம், என்று உணரும் - என்று அறிந்து நிற்கிற, திண் அறிவாளரை - உறுதியான ஞானமுள்ள பெரியோர்களை, நீள் நிலத்தின்மேல் - இந்தப் பெரியபூமியில், நேர்ப்பார் யார் - ஒத்திருப்பவர்கள் யார்? [ஒருவரு மில்லை என்றபடி], எ-று.

---

7. Who are there in this wide world who can be compared to those men of profound wisdom, who look upon the body as nothing more than a thing which like the bubbles caused in the falling rain many a time vanishes (then and there), and who in consequence determine to rid themselves of the evil of births?

Digitized by Google

மழை நீர்க்குமிழிகள்போல நிலையற்ற உடம்பெடுத்துத் தமோ றுவதை ஒழிக்க முயல்வார்கள் பெரியோர், நாமும் அப்படி முயல் வது நலம் என்பது கருத்து.

படுதல்—வீழ்தல். படுமழை—வினைத்தொகை. மொக்குளின்—ஐந்தனுருபு, ஒப்புப்பொருளில் வந்தது. (எ)

யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க - யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

(இ-ள்.) யாக்கையை - உடம்பை, யாப்பு உடைத்து ஆ - உறுதி யை யுடையதாக, பெற்றவர் - அடைந்தவர், தாம் பெற்ற யாக்கை யால் ஆய பயன் - தாம் அடைந்துள்ள தேகத்தினால் ஆகத்தக்க பிர யோஜனங்களை, கொள்க - கொள்ளக்கடவர், (ஏனெனில்) யாக்கை - தேகமானது, மலை ஆடு மஞ்சுபோல் தோன்றி - மலையினிடத்திலே ஆடுகின்ற மேகம்போலக் காணப்பட்டு, நிலையாது - நிலைபெறாமல், நீத்துவிடும் - (உயிரை) ஒழித்துவிடும், எ-று.

மலைமேல் அசைந்துகொண்டிருக்கிற மேகத்தைப்போல உடம்பு நிலையற்றதாகையால் அது உறுதியாயிருக்கும்போதே நற்காரியத் தைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

யாத்தல்—கட்டுதல், தோல் நரம்பு முதலியவைகளால் கட்டப் படுவதாகையால் யாக்கையெனச் சொல்லப்பட்டது; யா - பகுதி, கு - சாரியை, ஐ - விகுதி. ஆய—ஆகிய என்பதின் இடைக்குறை யென்பார்கள்; அல்லது ஆ - பகுதி, யகரம் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி. மற்று, ஆங்கு, ஏ,—இம்மூன்றும் அசை. (அ)

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை - இன்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான் றன்கேளலறச்
சென்றா னெனப்படுத லான்.

(இ - ள்.) இன் இனி ஏ - இப்பொழுதே, (ஒருவன்) நின்றான் இருந்தான் கிடந்தான் - நின்றுகொண்டிருந்தான் உட்கார்ந்தான் படுத்

---

8. Let those who have got a lasting body enjoy the benefits which are to be derived from it; for the body is like a cloud which quivers on the mountain only for a time and almost directly vanishes.

9. Practise virtue at this very moment [*immediately*], acknowledging the instability of the body which is like the

தான், தன் கேள் அலற சென்றான்-தன் பந்துக்கள் அலறி அழ இறந்தான், எனப்படுதலால் - என்று சொல்லப்படுவதனால், (உடம்பு) புல் நுனிமேல் - புல்லின் நுனியிலிருக்கிற, நீர் போல் - நீர்த்துளியைப் போல, நிலையாமை என்று எண்ணி - நிலைபெறாத தன்மையையுடையது என்று நினைத்து, இன் இனி ஏ - இப்பொழுதே, அறம் வினை செய்க - தர்மகாரியத்தைச் செய்யக்கடவர், எ-று,

ஒருவன் ஒரேகாலத்தில் நின்றுகொண்டிருக்கக் கண்டேனென்றும் மற்றொருவன் உட்கார்ந்திருக்கக் கண்டேனென்றும் இன்னம் ஒருவன் படுத்திருக்கப் பார்த்தேனென்றும் கடைசியிலொருவன் அவன் இறந்துபோனானென்றும் சொல்லும்படி மனிதனுடைய நிலையிருக்கிறதினால் தருமத்தைச் சீக்கிரத்தில் செய்யவேண்டும் என்பது கருத்து.

இன் இனி — இன் என்பது இக்காலம் என்பது தெரிவிக்கிற ஒருவகை இடைச்சொல். அது மிக என்னும் பொருளினால் அடுக்கி இன்னின் என்றாகி ஈற்றில் இகரச்சாரியை பெற்றது. அறம் வினை என்பதில் மகரங்கெட்டது [மெய்யீறு - சூ - கசு], இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (௯)

கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள் - வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

(இ - ள்.) மாந்தர்கள் - மனிதர்கள், கேளாதே வந்து - (வரட்டுமா என்று) கேளாமல் வந்து, கிளைகளாய் இல் தோன்றி - உறவினராய் தன் குடியிற் பிறந்து, வாளாதே - சொல்லாமலே, சேக்கை மரன் ஒழிய - தனக்கு வாசஸ்தானமா யிருந்த மரத்தை ஒழித்து, சேண் நீங்கு புள் போல - தூரத்தில் நீங்கிச் செல்லுகிற பட்சியைப்போல, தமர்க்கு - தம்மவர்களுக்கு, யாக்கை ஒழிய நீத்து - உடம்பை விட்டு விட்டு, வாளாதே போவர் - சொல்லாமல் போகின்றார்கள், எ-று.

பறவைகள் தமது இச்சையின்படி மரங்களில் வந்துசேர்வதும் விட்டுப்போவதும் போல மனிதர் கர்மவசத்தினால் ஒருகுடியிற் பிறப்

---

dew drop on the points of the grass; for it is daily said "This very moment he stood, he lived, he lay down, and he departed amidst the cries of his relations.

10. Men without previous intimation come into this world, appear in the Family as relations, and quietly depart, leaving their body to their relatives, just as the bird that goes far off forsaking its nest-tree.



Digitized by Google

பதும் நீங்குவதுமா யிருப்பதுபோல் வந்துபோகிறவனை உறவினனென்றெண்ணிப் பாடுபட்டு உழலாமல் தருமத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

கேளாது, வாளாது,—வினையெச்சங்கள். மரம் மரன் ஆனது போலி, [எழுத்து - கூ - கூஎ.] நீத்து—நீ - பகுதி, த் - இடைநிலை, உ - விகுதி, தகரம் - சந்தி. ஆல் - அசை. (க0)

---

## ச-வது அதிகாரம்.—Chapter IV.

### அறன்வலியுறுத்தல்.—The Source of Power of Virtue.

அதாவது: தருமம் பொருள் இன்பங்களிலும் உறுதியுடையதென்பதைக் குறிப்பது.

அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

(இ-ள்.) மேல் தவத்தால் - முன் ஜனனத்தில் செய்த நோன்புகளினால், தவம் செய்யாதார் - (பிற்பிறப்பில்) தவஞ்செய்யாதவர்கள், அகத்தாரே வாழ்வார் என்று - அகத்திலுள்ளவரே நன்மையடைவார் என்று நினைத்து, அண்ணாந்து நோக்கி—, தாம் புகப் பெறார் - தாங்கள் உள்ளே போகப் பெறாதவராகி, புறங்கடை பற்றி - தலைவாயிலைப் பிடித்துக்கொண்டு, மிக வருந்தி யிருப்பர் - மிகவும் வருத்தப்பட்டுக்கொண் டிருப்பார்கள், எ-று.

ஒரு தனவான் வீட்டில் சுபாசுபங்கள் நேர்ந்தபோது யாசகர் பலர் உட்புகுந்திருக்க மற்றொரு யாசகன் உள்ளே போயிருப்பவர்கள் நல்ல பயனைப் பெறுவார்கள் ஆதலின் நாமும் உள்ளே செல்லக்கடவோம் என்று உள்ளே புகப்பார்க்க, வாசற் காப்போரால் தடையுற்று வாசற்படியைப் பிடித்துக்கொண்டு அண்ணாந்து பார்த்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பான் என்பதாம்.

---

1. Those who have not through the result of their penance in former birth, practiced any austerities here below, will feel much distressed and remain at the threshold (of the wealthy), not being allowed to enter, and gaze about saying that those alone who have gone in are fortunate.

Digitized by Google

இது பூர்வஜனனத்தில் தருமஞ்செய்யாத கொடுமையால் வந்தது எனச் சொன்னதனால் தருமம் செய்வது இம்மை மறுமைகளுக்கு உறுதி என்றும், பொருள் இன்பங்கள் அப்படியல்லவென்றும் சொன்னதாயிற்று.

அகத்தாரே—இங்கு ஏகாரம் பிறர்வாழார் என்பதைக் குறித்ததனால் பிரிநிலை. அண்ணாந்து—அண்ணா - பகுதி. பெறூஉர்—அளபெடை இசைநிறைக்க வந்தது. மூன்றும் அடியில் தாம் ஏ இரண்டும் அசை. தவத்தால் தவஞ்செய்வதாவது முந்திய ஜனனத்தில் செய்த தவம் பிந்திய ஜனனத்தில் தவஞ் செய்வதற்குக் காரணமாய் சங்கிலி போல் தொடர்ந்திருக்குந் தன்மை. தவத்தால் என்பதை செய்யாதார் என்பதின் பகுதியில் முடித்துக்கொள்க. (க)

ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே - ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாட்கள்
சென்றன செய்வ துரை.

(இ-ள்.) ஆ ஆ - ஐயோ! நாம் ஆக்கம் நசைஇ - நாம் செல்வத்தை விரும்பி, அறம் மறந்து - தருமத்தை மறந்து, போவாம் நாம் என்னா - நாம் இறந்துபோவோம் என்று நினையாத, புலை நெஞ்சே - அற்பமான மனமே!, ஓவாது - ஒழியாமல், நின்று - நிலைபெற்று, உஞற்றி வாழ்தி எனினும் - முயற்சிசெய்து வாழ்வாயானாலும், நின் வாழ்நாட்கள் - உன்னுடைய ஆயுள் நாட்கள், சென்றன - ஒழிந்தன; செய்வது உரை - இனிச் செய்யவேண்டியதைச் சொல்லு, எ-று.

நாம் ஆக்கம் நசைஇ ஆவாம் - செல்வத்தை விரும்பி விர்த்தியாவோம் (என்று எண்ணி), அறம் மறந்து போவோம் நாம்-தருமத்தை மறந்துபோவோம் நாம், என்னா புலைநெஞ்சே - என்று எண்ணாத அற்ப மனமே !, எனவும் உரைக்கலாம்.

உள்ளகாலமும் செல்வம்பெற்று வாழ்வதற்கே முயன்று தருமத்தைச் செய்யாதுவிட்டால் உன்வாழ்நாள் சீக்கிரம் ஒழிந்தபின் செய்யத்தக்கது ஒன்றுமில்லை என்பது கருத்து.

ஆஆ—இரக்கக் குறிப்பிடைச்சொல். ஆவாம், போவாம் — தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று; உளப்பாட்டில் வராமல் தனித்து

O foolish heart that thinketh not that thou wouldst die but desireth only to acquire weath and forgetteth to exercise virtue! Though thou mayest incessantly exert thy best and live long and prosperous, say what wilt thou do when the days of thy life are passed away?

Digitized by Google

வந்தன. ஆக்கம் — விர்த்தியாக்குதற்குக் காரணமாதலின் செல்வத்திற்குக் காரணப்பெயர். ஆக்கு—பிறவினைப்பகுதி, இதில் கு - பிறவினைவிகுதி, அம் - விகுதி. நசைஇ — நசைந்து என்பதின் விகாரம். ஓவாது—ஓ - அல்லது ஓவு - பகுதி. (உ)

வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை - நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்
தெல்லை யிகந்தொருவு வார்.

(இ - ள்.) பேதை - புத்தியீனன், வினைப்பயன் வந்தக்கால் - தீவினைப்பயனாகிய ஆபத்து நேர்ந்தால், வெய்ய உயிரா - கடுமையாக மூச்சுவிட்டு, [பெருமூச்சுவிட்டு], மனத்தின் அழியும் - மனதிலே வருந்துவான்; அதனை நினைத்து - அத்தீவினைப்பயனை நினைத்து, தொல்லையது என்று - முற்பிறப்பின் பாவத்தால் நேர்ந்ததென்று, உணர்வாரே - அறிந்த விவேகிகளே, தடுமாற்றத்து எல்லை - சம்சார துக்கத்தின் எல்லையை, இகந்து ஒருவுவார் - விட்டு நீங்குவார்கள், எ-று.

விவேகமில்லாதவர் சங்கடம் வந்தபோது இது முற்பிறப்பின் வினையென்று எண்ணாமல் வருந்துவார்; அதையறிந்தவரோ வருந்தமாட்டார் என்பது கருத்து.

இதனால் விவேகமும் தருமத்தின் பயன் என்று சொல்லியதாயிற்று.

வெய்ய—வெம்மையின் அடியாகப் பிறந்த பலவின்பாற் பெயர்; வெய்யனவாகிய உயிர்ப்பு உயிர்த்து எனக்கொள்க. குறிப்புவினையெச்சமெனக்கொண்டு உயிரா என்னும் வினைக்கு உரி என்னவுமாம். உயிரா—செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அழியுமாம்—ஆம் - அசை. தொல்லையது—தொல்லை என்னும் பண்பின்மேல் வந்த குறிப்பு வினைமுற்று; அ-சாரியை, து - விகுதி. உணர்வாரே—ஏகாரம் பிரிநிலை. தடுமாறுதல்—வழிதெரியாமல் அங்கே இங்கே சுற்றுவது; பலபிறப்புப் பிறப்பதான சம்சாரத்துக்கு ஆகுபெயர். (ஙு)

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க - கரும்பூர்ந்த

---

3. When the ignorant suffers from the fruits of evil deed of former birth, he sighs bitterly and grieves at heart; but th wise reflecting that it is the result of their sins in former birt will escape from the troubles of family life and pass over i limits.

4. Having obtained a human body so difficult of attai ment, act so as to procure great merit by it; for in the ne

Digitized by Google

சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.

(இ-ள்.) அரு பெறல் யாக்கையை - அருமையான பெறுதலையு டைய உடம்பை, பெற்ற பயத்தால் - அடைந்த பலத்தினால், பெரு பயனும் - பெரிய பிரயோஜனமான (தர்மத்தையும்), ஆற்ற கொள்க - மிகவுந் தேடிக்கொள்ளவேண்டும்; கரும்பு ஊர்ந்த சாறு போல் - (கரும்பிலிருந்து உண்டான சாற்றைப்போல, சாலவும் பின் உதவி - அத்தருமம்) மிகவும் பின்னுக்கு உதவியாயிருக்கும்; உடம்பு - திரேக மானது, அதன் கோது போல் போகும் - அக்கரும்பின் சக்கைபோல் (உதவியில்லாமல்) போய்விடும், எ-று.

மக்களுடம்பைப் பெறுதல் அருமையானது; அதைப் புண்ணியத் தால் பெற்றபடியால் அதைக்கொண்டு தருமத்தைச் செய்யவேண்டும்; அத்தருமம் கருப்பஞ்சாற்றைப்போல் ஆத்துமாவின் அனுபவத்திற்கு உதவும், உடம்போ உதவாது என்பது கருத்து.

'அரும்பெறல்' என்பதை 'பெறல் அரு' என மாற்றியும் உரைக் கலாம். ஆற்ற—வினையெச்சம்; இங்கே வினையுரி. உதவி—உதவுவது, பெயர். ஏ - அசை. (ச)

கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

(இ-ள்.) கரும்பு ஆட்டி - கரும்பை (ஆலையில்) சிதைத்து, கட்டி - (அச்சாற்றினாலாகிய) வெல்லக்கட்டியை, சிறுகாலை கொண்டார் - முற் காலத்தில் கொண்டவர்கள், துரும்பு எழுந்து வேங்கால் - அதன் சக்கை கிளம்பி வேகும்போது, ஆண்டு - அவ்விடத்தில், துயர் உழவார் - துன் பத்தால் வருந்தார்கள்; (அதுபோல்), வருந்தி - வருத்தப்பட்டு, உடம் பின் பயன் கொண்டார் - தேகத்தின் பிரயோசனத்தைக் கொண்ட வர்கள் [தருமத்தைச்செய்து அதன்பயனைப்பெற்றவர்], கூற்றம் வருங்

---

birth charity will greatly help thee just as the juice of the sugar-cane while thy body will decay like the refuse of that cane.

5. Those who have pressed the sugar-cane and extracted the jaggery from it in time will not repent when the refuse rises in burning flames; so will those, who have with much exertion secured the benefits of this body, [*i. e. of human birth*] not grieve at the approach of death.

Digitized by Google

கால் - எமன் வரும்போது, பரிவது இலர் - துன்பப்படுவது இல்லை யாவார், எ-று.

கரும்பின் சாற்றினால் ஆகவேண்டிய பயனைப் பெற்றபின் அதன் துரும்பு வேகக்கண்டு துன்பம் அடையாததுபோல் தேகத்தின் பயனாகிய தருமத்தைச் சம்பாதித்த பின் மரணத்துக்குப் பயப்படார் விவேகிகள் என்பது கருத்து.

சிறுகாலை — இது அற்பகால மென்னும் பொருளை யுடைத்தாய் முற்காலத்தைக் குறிக்கின்றது: "சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து." இலர்—சிறப்புக்குறிப்பு வினைமுற்று, பரிவது அதற்குச் செயப்படு பொருள். இல்லை என்பது ஒரு பொருளின் சம்பந்தத்தை நீக்கும்போது செயப்படுபொருள் குன்றாவினையாகவும் பொருளையே நீக்கும்போது செயப்படுபொருள் குன்றிய வினையாகவும் வழங்கும். உதாரணம் 'குடம்நீரில்லது' — செயப்படு பொருள் குன்றாவினை; 'குடமில்லை'—செயப்படு பொருள் குன்றியவினை. (௫)

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.

(இ-ள்.) இன்று கொல் அன்று கொல் என்று கொல் - இன்றைக்கோ அன்றைக்கோ என்றைக்கோ, என்னாது - என்று நினையாமல், கூற்றம் - எமன், பின்றையே நின்றது என்று எண்ணி - பின் புறத்திலேயே நிற்கின்றது என்று நினைத்து, தீயவை ஒருவுமின் - தீமையான காரியங்களை விட்டு விடுங்கள்; ஒல்லும் வகையான் - கூடியவிதத்தில், மாண்டார் அறம் - மாட்சிமைப் பட்டவர்களுடைய் தர்மத்தை, மருவுமின் - சேருங்கள், எ-று.

நம்முடைய ஆயுள் சதமல்லவென்று நினைத்துப் பாவங்களைச் செய்யாமல் புண்ணியங்களைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

கொல்—ஐயத்தில் வந்தது, [இடை-சூ-கரு.] பின்றை—ஐ - சாரியை, [உயிரீற்று-சூ-௩௫.] மாண்டார்களுடைய அறமாவது அவர்கள் நூல்களில் சொல்லியதும் அவர் ஆசரித்ததுமாம். (௬)

---

6. Think not whether it will be this day or that day or what day, but reflect that death even now stands behind thee; eschew evil, and pursue as far as possible the good enjoined to thee by the excellent.

Digitized by Google

மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்
எத்துணையு மாற்றப் பலவானால் - தொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

(இ-ள்.) மக்களால் ஆய - மனிததேகங்களால் செய்யத்தக்க, பெரும் பயனும் - பெருமையாகிய பயன்களும், ஆயுங்கால் - ஆராயுமிடத்து, எத்துணையும் - எவ்வளவினும், ஆற்றபல ஆனால் - மிகவும் அநேகங்கள் ஆதலினாலே, தொக்க உடம்பிற்கே - (நரம்பு தசை முதலியவை) சேர்ந்த உடம்புக்காகவே, ஒப்புரவு செய்து ஒழுகாது - உபயோகமான காரியங்களைச் செய்து நடவாமல், உம்பர் கிடந்து - சுவர்க்கத்திலிருந்து, உண்ண பண்ணப்படும் - போகங்களை யனுபவிக்க (அறங்களைச்) செய்யவேண்டும், எ-று.

மனிதர் உடம்பினால் செய்யவேண்டிய நற்காரியங்கள் பலவாயிருக்க அசுத்தமான தேகத்துக்கே வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டிராமல் சொர்க்க அனுபவத்திற்கு ஏதுவான நற்காரியங்களைச் செய்யவேண்டும் என்பது கருத்து.

மக்கள் என்பது மனித உடம்பை. தொக்க—தொகு - பகுதி, அகரம் - பெயரெச்ச விகுதி, ககரம் இரட்டி இறந்தகாலம் காட்டியது.(எ)

உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங் - கறப்பயனும்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

(இ-ள்.) உறக்கும் துணையது - கிள்ளி எடுக்கும் அளவுள்ளதான, ஓர் ஆலம் வித்து - ஒரு ஆலமரத்தின் விதை, ஈண்டி - (கிளைகள்) நெருங்கி, இறப்ப நிழல் பயந்தாங்கு - மிகவும் நிழலைத் தருவதுபோல, அறம் பயனும் - தருமப்பிரயோஜனமும், சிறிது ஆயினும் - அற்ப

---

7. Since upon reflection it will be seen that the benefits arising from being born a man are great and various, it is proper to practise virtue in order to attain heavenly bliss without indulging in those desires which are conducive to the happiness of the body alone.

8. Just as a single seed of the Banyan, which is so small as can only be picked up by the nails, grows into a large tree and affords abundant shade, so the benefit of a virtuous act, however small, when done to the worthy, will be so great as to envolope the whole extent of the face of heaven.

Digitized by Google

மானாலும், தக்கார் கை பட்டக்கால் - யோக்கியர்கையில் சேர்ந்தால், வான் சிறிது ஆ - ஆகாயம் அற்பமாகும்படி, போர்த்துவிடும் - மூடிவிடும், எ-று.

தருமஞ் செய்வதையும் யோக்கியர்கள் திறத்திலே செய்தால் அது அற்பமானாலும் ஆலம் விதை பெருகிப் பெரியமரமாவதுபோல மிகவும் பெரிதாம் என்பது கருத்து.

வான் சிறிதா என்பதற்கு வானினும் பெரிதாக என்றபடி.

பயந்தாங்கு — பயந்த என்பது அகர ஈறு தொகுத்தலால் வந்ததென்றும், பயந்தால் என்னும் வினையெச்சம் பயந்து எனத் திரிந்ததென்றும் இருவகையில் கொள்ளலாம். அறப்பயனும்—உம்மை எச்சப்பொருளில் வந்தது. ஆயினும்—இழிவுசிறப்பும்மை. (அ)

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

(இ-ள்.) வைகலும் - தினந்தோறும், வைகல் - நாட்கழிவை, தம் வாழ் நாள்மேல் - தமது ஆயுசில், வைகுதல் வைத்து - செல்லுதலாக வைத்து, வைகலை உணராதார் - நாட்கழிவை யறியாதவர்கள், வைகலும் - தினந்தோறும், வைகல் வரக்கண்டும் - நாட்கழிவு வரப்பார்த்தும், அஃது உணரார் - அதின் உண்மையை அறியாதவராகி, வைகலும் - தினந்தோறும், வைகலை - ஆயுள் கழிதலை, வைகும் என்று - இருக்கிறதென நினைத்து, இன்பு உறுவர் - சந்தோஷப்படுவார்கள், எ-று.

தினம் நாள்கழிந்து வருவது தமது ஆயுள் கழிவதாக நினையாமல் அது நிற்பதாகவே நினைத்துச் சந்தோஷப்படுவது மூடத்தனம்; தனது மேல் கதிக்கு வேண்டிய நற்காரியங்களைச் செய்து சந்தோஷித்தல் புத்தி என்பது கருத்து.

இங்கே வைகல் என்றது நாள் கழிவுக்கு ஏதுவான சூரியவுதயாஸ்தமயங்கள் எனக்கொள்க. இதனால் தனது ஆயுள் கழிவதன் முன்னே தருமங்களைச் செய்வது அவசியமென அறனை வலியுறுத்தியதாயிற்று.

---

9. Although they daily see the passing away of days, yet they think not of it, and daily rejoice over the present day as if it would last for ever, for they do not consider the past day to be one day lost in their life time.

Digitized by Google

வைகலும்—முற்றும்மை. கண்டும்—சிறப்பும்மை. உணரார்—முற்றெச்சம். வாழ்நாள்மேல்—ஏழாம்வேற்றுமை. இது முன்வந்த சொல்லும்பொருளும் மறுத்தும் வருவதனால் "இருமைப்பின் வருநிலை" என்னும் அலங்காரமாம். சூத்திரம்—"முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயின், பின்வருமென்னிற் பின்வருநிலையே"—தண்டியலங்காரம். (௯)

மாந வருங்கல நீக்கி யிரவென்னும்
ஈந விளிவினால் வாழ்வேன்மன் - ஈநத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

(இ - ள்.) ஈநத்தால் - இழிவான காரியத்தால், ஊட்டியக் கண்ணும் - (சோறு முதலியவற்றை) அனுபவிக்கச் செய்தும், இவ்வுடம்பு - இந்தத்தேகம், உறுதிசேர்ந்து - உறுதிப்பட்டு, நீட்டித்து நிற்கும் எனின் - வெகுகாலம் நிலைத்திருக்குமானால், மாநம் அரு கலம் நீக்கி - மானமென்னும் அருமையாகிய ஆபரணத்தைத் தள்ளி, இரவு என்னும் - இரப்பது என்று சொல்லுகிற, ஈந இளிவினால் - தாழ்மையான அவமானத்தால், வாழ்வேன்மன் - பெரும்பாலும் வாழ்வேன், எ-று.

எவ்வளவு காப்பாற்றினாலும் உடம்பு நீடித்து நிற்பதில்லையாதலால், அதற்காக இழிவான காரியங்களைச் செய்தல் வீண். நிலையான ஆத்துமாவுக்காக வேண்டிய காரியங்களைச் செய்வது நலம் என்பது கருத்து.

மாநமாவது தன் பெருமையைக் காப்பாற்றல். ஈநவிளிவினால்=ஈநமாகிய சாவினால் எனவும் உரைக்கலாம்; ஈநகாரியஞ் செய்வது சாவுக்குச் சமான மென்பது கருத்து; சாவில் ஈநமாவது பலர் பழிக்கும்படியான நிலை. மன்—அசையும் ஆம். பெரும்பாலும் வாழ்வேனென்பதனால் அப்படி வாழ்தலும் கூடாத காரியம் என்றதாயிற்று. ஊட்டியக்கண்ணும் — இது எதிர்காலவினையெச்சம்; கண் - விகுதி, உம் - இழிவுசிறப்பு. நீட்டித்து—டகரம் - விரித்தல்விகாரம். (௧0)

---

10. I shall put away the precious jewel of honor and live by the ignoble practice of mendicancy, if this body can endure long though fed by meanness.

Digitized by Google

## ரு-வது அதிகாரம்—Chapter V.

### தூய்தன்மை.—The Impurity of the Body.

தூய்தன்மை—இது தூய்து அன்மை எனப்பிரித்து, சுத்தமில்லாதது எனப் பொருள் கொள்ளப்படும், ஆதலின் அதைக் குறித்துச்சொல்லிய அதிகாரமாம். தூயதன்மை என்றும் பாடமுண்டு. அதையும் தூயது அன்மை எனப்பிரித்து முன் போல் பொருள்கொள்க.]

மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொ னொய்யதோர் புக்கில்லை - யாக்கைக்
கீச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே[கோர்
காக்கை கடிவதோர் கோல்.

(இ-ள்.) மா கேழ் மடம் நல்லாய் - மாந்தளிரின் நிறம் போன்ற நிறமும் இளமையும் பொருந்திய பெண்ணே! என்று அரற்றும் - என்று கத்துகிற, சான்றவர் - வித்துவான்கள், நொய்யது - அற்பமான, ஓர் புக்கு இல்லை - ஒரு புகத்தக்க வீட்டை, நோக்கார் கொல் - சிந்தியார்களா; ஓர் யாக்கைக்கு - ஒரு உடம்பில், ஈ சிறகு அன்னது - ஈயின் சிறகு அளவான, ஓர் தோல் அறினும் - ஒரு தோல் அற்றாலும், காக்கை கடிவது - காக்கையை ஓட்டும்படியான, ஓர் கோல் - ஒரு கொம்பு, வேண்டும் - வேண்டியிருக்கிறது, எ-று. ஏ - அசை.

அசுத்தமான புண்ணுடம்பைக் கண்டு மாக்கேழ் மடநல்லாய் என்று துதித்துக் கத்திக்கொண்டிருப்பவர் அவ்வுடம்பின் அற்பத்தனத்தைக் கண்டதில்லையோ? ஏனென்றால் உடம்பில் கொஞ்சந் தோல் பேர்ந்தாலும் அப்புண்ணைக் குத்தவருகின்ற காக்கையை ஓட்ட ஒருகோல் தேட வேண்டுமே; இவ்வளவு அருவருப்பான உடம்பை மேன்மையாக நினைத்தல் அசுத்தமே யல்லது சுத்தமன்று என்பது கருத்து.

அப்படிப்பட்ட அறிவீனரை சான்றவரென்றது எதிர்மறை இலக்கணை; பரிகாசத்துக்குச் சொன்னது.

---

1. Do those wise men * not see the perishable nature of the body when they cry out "O young damsel, possessed of a body as soft and beautiful as the tender shoots of the mango?" If only a piece of skin as small as the wing of the fly be grazed on the body, a stick will be necessary to drive away the crows (from picking it.) * *Applied ironically for fools.*

Digitized by Google

நல்லாள் என்பதின் ஈறு விளியில் யகரமாய்த் திரிந்தது [பெயர்-கு-றிக.] சான்றவர்—வினையாலணையும் பெயர்; சால் - உரிச்சொல், பகுதி, றகரம் - இடைநிலை, அகரம் - சாரியை, அர் - விகுதி, சால்பு—நிறைவு, விவேகத்தால் நிறைந்தவர் என்பது பொருள். தொய்யது—தொய் - பண்படி, பகுதி, அ - சாரியை, து - ஒன்றன்பால் விகுதி. புக்கில்—புகு இல் என்பதில் ககரம் இரட்டி நின்றது, வினைத்தொகை. யாக்கைக்கு—கு உருபு இடப்பொருளில் வந்தது. கடிவது—வினையாலணையும் பெயர், கோல் என்பதோடு இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய்க் கொள்ளவேண்டும். (க)

தோற்போர்வை மேலுந் தொளைபலவாய்ப் பொய்ம்மறைக்கும்
மீப்போர்வை மாட்சித் துடம்பானல்-மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

(இ-ள்.) தோல் போர்வை - தோலாகிய போர்வையை, மேலும்-மேலேயும், தொளை பல ஆய்-பல துவாரங்களையுமுடைத்தாய், பொய் மறைக்கும் - அசுத்தங்களை மறைக்கின்ற, மீ போர்வை - மேல் போர்வையினால், மாட்சித்து - மாட்சிமையுடையது, உடம்பு—; ஆனால் - அப்படியாதலால், மீ போர்வை - மேற்போர்வையானது, பொய் மறை ஆ - பொய்யை மறைத்து நிற்க, காமம் புகலாது - காமத்தை விரும்பாமல், அதனை - அவ்வுடம்பை, பை மறி ஆ - பையை மறித்ததாக, பார்க்கப்படும் - பார்க்கவேண்டும், எ-று.

இந்த உடம்பு அருவருக்கும்படியான நீர் ஒழுகுகின்ற பல துவாரங்களோடுகூடி மேலே ஒருதோல் போர்த்து அதனாலே கண்ணுக்கினியதாகத் தோன்றுகின்றதே யன்றி, உண்மையாகப் பார்த்தால் மல மூத்திர முதலிய அசுத்தங்கள் பொதிந்த பைக்குச் சமானமாகும்; அதனை மேலே பார்த்துக் காமங் கொள்ளாமல், மேலே பளபளப்பாயும் மெத்தென்று மிருக்கிற ஓர் அசுத்தப்பையை உட்புறந் திருப்பிப் பார்த்தால் எப்படியோ அப்படிப் பார்த்தால் அதன் அசுத்த நிலை வெளிப்படும் என்பது கருத்து.

மாட்சித்து—குறிப்புவினைமுற்று. அசுத்த வஸ்துக்கள் உண்மையில் அழகில்லாதனவாய்ப் போர்வையினால் அழகுள்ளனபோலத் தோன்றுதலால் பொய்யென்றார். மறை—மறைப்பது; கர்த்தாப்

---

2. This body has only the celebrity of being a skin cover with many orifices, hiding filth within. Entertain not therefore sensual desires by simply looking on the outside of this cover of inward filth, but look at it on the inner side as if on a bag inside turned over.

Digitized by Google

பொருள்விகுதி குறைந்துநின்றது. மறி—முதனிலைத் தொழிற்பெயர், மறிதல்=திருப்புதல். ஆ — செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; ஈறு குறைந்து நின்றது. மற்று-அசை. பார்க்கப்படும்—பார்க்கவேண்டுமென்னும் பொருளுள்ள ஒருவகை வியங்கோள் வினைமுற்று; தேற்றப்பொருளுள்ள தொழிற்பெயர் என்று சொல்வாரும் உளர். (உ)

தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமே - எக்காலும்
உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

(இ - ள்.) பெரியோர் - மேலோர், எக்காலும் - எப்போதும், உண்டி வினையுள் - உண்ணுகிற தொழிலால், உறைக்கும் என - துர்க்கந்தப்படுமென்று, கண்டு கைவிட்ட - பார்த்துத் தள்ளிவிட்ட, மயல்-மயக்கமாகிய (தேகம்), தக்கோலந் தின்று-தக்கோலம் என்னும் (வாசனைத் திரவியத்தைத்) தின்று, தலை நிறைய பூ சூடி - தலை நிரம்பப் பூவைச்சூடி, பொய் கோலம் செய்ய - பொய்யான அலங்காரஞ் செய்வதனால், ஒழியுமே - (அந்தத் துக்கந்தம்) நீங்குமா? [நீங்காது], எ-று.

பல உணவுகள் சீர்ணிப்பதனால் துர்க்கந்தம் வீசுகிற உடம்பில் வாசனை வஸ்துக்களை மெல்வதும் பூச்சூட்டுவதும் ஆகிய இப்பொய் அலங்காரத்தினால் அந்தத் துர்க்கந்தம் நீங்குமா என்பது கருத்து.

பொய்க்கோலம் — இங்கே [மெய்யீறு - ௬ - உக] னால் வலிமிகுந்தது. ஒழியுமே—ஏகாரம் - வினாவிடைச்சொல். வினையுள்—விக்குள் என்பதுபோல உள் - தொழிற்பெயர்விகுதியாம், மூன்றும் வேற்றுமைத்தொகை: அல்லது உள் - ஏழனுருபாய் காரணப்பொருளில் வந்ததென்பது நேர். மயல் என்பது அதற்குக் காரணமாகிய உடம்பிற்கு ஆகுபெயர். (௩)

தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று
கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ

---

3. The wise, noticing that by the process of eating the body always emits stench, have rejected it. Can such a stench be removed by the mere chewing of aromatic stuffs, and by the false adornment of wearing flowers plentifully on the head?

4. Shall I, who act knowing the nature of the eye to be like the palmyra nut after the pulp and the water inside are scooped out, deviate from my ascetic path by hearing the unwise

Digitized by Google

வுண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

(இ - ள்.) உள் நீர் - உள்ளேயிருக்கிற நீரை, களைந்தக்கால்-நீக்கி விட்டால், நுங்கு சூன்றிட்ட அன்ன - நுங்கைத் தோண்டியெடுத்தாற் போலிருக்கிற, கண் நீர்மை - கண்ணின் குணத்தை, கண்டு ஒழுகு வேன் - கண்டு நடக்கிற நான், தெள் நீர் குவளை - தெளிவான நீரில் (முளைத்த) கருநெய்தற் பூ, பொரு கயல்-போர்செய்கின்ற கெண்டை மீன்கள், வேல் - வேலாயுதம், என்று - என்றுசொல்லி, கண் இல் புல் மாக்கள் - விவேகமில்லாத அற்பமனிதர்கள், கவற்ற - கவலைப்படுத்த, விடுவனோ - (என் ஒழுக்கத்தை) விடுவனோ, [விடேன்], எ-று.

உள் நீரைத் தோண்டிவிட்டால் நுங்கைத் தோண்டிவிட்டாற் போல வெறும்பள்ளமாய் காணப்படுகிற கண்ணை குவளை கயல் வேல் இவற்றோடு உபமானப்படுத்தி விவேகமற்றவர் வருணிப்பதனாலே மயங்கவேண்டாம் என்பது கருத்து.

பொருகயல் என்பது ஒன்றோடொன்று எதிர்முகமாய்நின்று பாய்வதுபோல கண் அசைந்து ஓடும்போது நிற்குநிலையைக் குறிக் கின்றது. இவை பெயர்ச்செவ்வெண், விகாரத்தால் தொகைபெறு தனவாம். என்று—வினையெச்சம். இல்புன்—இங்கே லகரம் [உருபு-சூ-௯0-னல்] இயல்பாயிற்று. கவற்ற — இது கவற்று என்னும் பிற வினையின் வினையெச்சம்; கவல் - தன்வினைப்பகுதி, று - பிறவினை விகுதி. சூன்றுதல்—தோண்டுதல், சூன்றிட்டு அன்ன, அல்லது சூன் றிட்ட அன்ன, என இருவகையாயும் பிரித்து முற்பாட்டுகளில் காட்டி யிருக்கிறபடி இலக்கணம் கூறலாம். விடுவன் — அன்-தன்மையொரு மை விகுதி, [வினை-சூ-கஉ]. ஒழுகுவேன் — தன்மை வினையாலணை யும்பெயர். (ச)

முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவனோ
வெல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

(இ-ள்.) எல்லாரும் காண - யாவருங் காணும்படி, புறம் காடு — சுடுகாட்டில், உதிர்ந்து உக்க - உதிர்ந்து சிந்தியிருக்கிற, பல் என்பு

---

fools say that woman's eye is like the Kuvalai flower in clear water, the kayal fish and the battle lance?

5. Shall I, who has seen the jawbone which lie fallen at the burning place exposed to the sight of all, forsake my ascetic life by the ravings of the ignorant low who compare the teeth to the jessamine buds and pearls?

Digitized by Google



RAJA MUTTHIAH

கண்டு - பல்லாகிய எலும்புகளைக் கண்டு, ஒழுகுவேன் - நடப்பவனாகி ய யான், முறுவல் - பற்களை, முல்லை முகை என்று - முல்லை யரும் புகள் என்றும், முத்து (என்று) - முத்தென்றும், இவை பிதற்றும் - இவற்றை உபமானமாகப் பிதற்றுகிற, கல்லா புல் மக்கள் - (மேலான நூல்களைக்) கற்காத அற்ப மனிதர், கவற்ற விடுவனோ - சொல்லும் படி சும்மாவிருப்பேனோ, [இரேன்,] எ-று.

சுடுகாட்டில் உதிர்ந்துகிடக்கிற பல் எலும்புகளை முல்லையரும்பு முத்து இவைகளோடு ஒப்பிட்டுக் கல்லாதவர் பிதற்றுவதனால் மன வுறுதியைவிட்டு மயங்கலாகாது என்பது கருத்து.

புறங்காடு—இது காட்டுப்புறம் என இலக்கணப்போலியாகவும், ஊர்க்குப் புறத்திலுள்ள காடு என்று இலக்கணம் உடையதாகவுங் கொள்ளலாம். உக்க—பெயரெச்சம், உகு - பகுதி. (௫)

குடரும் கொழுவுங் குருதியு மென்புந்
தொடரு நரம்பொடு தோலும் - இடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

(இ-ள்.) குடரும் - குடலும், கொழுவும் - கொழுப்பும், குருதி யும் - இரத்தமும், என்பும் - எலும்பும், தொடரும் நரம்பொடு - ஒன் றோடொன்று சேர்ந்திருக்கின்ற நரம்பும், தோலும் - சருமமும், இடை இடையே - இவற்றின் நடுவே நடுவே, வைத்த தடியும் - வைத்த தசைகளும், வழும்பும் - நிணமும், ஆம் இவற்றுள் - ஆகிய இவை களுக்குள், ஈர்ங் கோதையாள் - குளிர்ச்சியான மாலையை யணிந்த பெண் என்பவள், எத்திறத்தாள் - எந்தப்பகுதியை யுடையவள், எ-று.

குடல் முதல் வழும்பு ஈறாகச் சேர்ந்திருக்கிற உடம்பைக் கண்டு ஈர்ங்கோதையாளென்று மயங்குகின்றார்களே, உற்றுப் பார்த்தால் எல்லாம் அசுத்த வஸ்துக்களாகவே காணப்படுகின்றன, ஆதலின் இது அஞ்ஞானம் என்பது கருத்து.

உம்மைகள் — எண்ணும்மைகள். ஒடு — எண்ணிடைச்சொல். மற்று — அசை. ஈர்ங்கோதை — பண்புத்தொகை, நிலைமொழியில் அ - கெட்டது. [எழுத்தியல் - கூ - கூச ஞல்] ஙகரம் மிகுந்த ஈரொற்றாய் நின்றது. (௬)

---

6. Of these—intestines, fat, blood, bone, the binding sinews, skin, flesh and the marrow—tell me what nature does the damsel adorned with cool garlands inherit?

Digitized by Google

ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனும்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப் - பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

(இ-ள்.) ஊறி உவர்த்தக்க - (மலங்கள்) ஊறி வெறுக்கத்தக்க, ஒன்பது வாய் புலனும் - ஒன்பது துவாரமாகிய இந்திரியங்களும், கோதி குழம்பு அலைக்கும் - அசுத்தக் குழம்புகள் சிதறி மோதப் பெற்ற, கும்பத்தை - (உடம்பாகிய) பண்டத்தை, பேதை - அறிவில்லாதவன், மீ போர்த்த கருந் தோலால் - மேலே போர்த்திருக்கிற அழகான தோலினுல், கண் விளக்கப்பட்டு - கண்கள் ஒரு பிரகாசத்தை யடைந்து, பெருந்தோளி - பெருத்ததோளை யுடையவளே!, பெய்வளாய் - வளைகளை இடப்பெற்றவளே!, என்னும் - என்று சொல்வான், எ-று.

கருத்து வெளிப்படை. ஊறி என்னும் செய்தென் வினையெச்சம், உவர்த்தலுக்குக் காரணமாதலின் பிறகர்த்தா வினையோடு முடிந்தது. இது செயவென் வினையெச்சத்தின் திரிபென்னலுமாம். உவர்த்தலுக்குத் தக்க—உவர்த்தக்க. வாய்ப்புலனும் என்னும் எழுவாய் அலைக்கும் என்னும் உடம்பின் வினையைக்கொண்டது; [பொ-சூ-உக] ஞல் அமைந்தது. அதன் உரையைக்காண்க. வாய் என்பதை ஏழாம் வேற்றுமை தொக்கதாகவுங் கொள்ளலாம். (எ)

பண்ட மறியார் படுசாந்துங் கோதையும்
கொண்டுபோ ராட்டுவார் கண்டிலர்கொல் - மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச்சாகா டச்சிற் றுழி.

(இ-ள்.) பண்டம் அறியார் - வஸ்துவின் உண்மையை அறியாமல், படு சாந்தும் கோதையும் கொண்டு - பூசத்தக்க சந்தனத்தையும்

7. By the lovely appearance presented to the eye by the beautiful skin cover of the body which is only a recepticle for liquid excrement and the abominable seething filth which ooze out from its nine orifices, the foolish say "O thou damsel possessed of wide shoulders!" "O thou adorned with bracelets" &c. &c.

8. Have they not, who adorn themselves with sandal and garlands, seen the powerful vulture, the cock and the hen, close to the carcase, overturning and pecking at the stinking vehicle, [*i. e. the body*] when the axle is broken [*i. e. when life is gone.*]

Digitized by Google

பூமாலையையும் அணிந்துகொண்டு, பாராட்டுவார் - அவ்வுடம்பை ஆதரிப்பவர்கள், பெடை சேவல் வன் கழுகு - பெட்டையும் ஆணுமாகிய கடினமான கழுகுப்பறவைகள், மண்டி - நெருங்கி, பேர்த்திட்டு குத்தும் - பெயர்த்து குத்துகின்ற, முடை சாகாடு - துர்க்கந்தமுள்ள உடம்பாகிய பண்டியை, அச்சு இற்றுழி - (உயிராகிய) அச்சு முறிந்த போது, கண்டிலர் கொல் - பார்த்தார்கள் இல்லையோ, எ-று.

உயிர்போன உடம்பைக் கழுகுகள் குத்த அதின் அசுத்தம் வெளிப்படையா யிற்பதைக் கண்டறியாமல் சந்தனம் மாலை முதலியவற்றால் அதனைப் பராட்டுகிறார்கள் மூடர்கள் என்பது கருத்து.

அறியார் — முற்றெச்சம். [வினையியல் - ரு - ௩௨.] பெடைச் சேவல் — உம்மைத்தொகை. சாகாடு, அச்சு,—இரண்டும் உவமையாகுபெயர். (அ)

கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி - ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

(இ - ள்.) கழிந்தார் இடு தலை - இறந்தவர்களுடைய (சுடுகாட்டில்) கிடக்கிற தலை, கண்டார் - பார்த்தவர்களுடைய, நெஞ்சு உட்க - மனம் பயப்படும்படி, குழிந்து ஆழ்ந்த கண்ண ஆய் தோன்றி - பள்ளமாகி ஆழ்ந்திருக்கிற கண்களை யுடையனவாக காணப்பட்டு, ஒழிந்தாரை - மற்றவர்களை, போற்றி - மேன்மைப்படுத்தி, நெறிநின்மின் - நல்ல வழியிலே நில்லுங்கள்; இதன் பண்பு - இவ்வுடம்பின் குணம், இற்று என்று - இத்தன்மையானது என்று, சால சிரித்து - மிகவும் சிரித்து, சாற்றுங்கொல் - சொல்லுகின்றனவோ, எ-று.

சுடுகாட்டில் கிடக்கிற செத்தவர்களுடைய தலையெலும்புகள் கண்ணிருந்த விடத்து ஆழமான பள்ளமாய் இளித்த பற்களுமாய் கிடப்பதைப் பார்த்தால் இவ்வுடம்பு இப்படி அருவருக்கத்தக்கது; இதனை நம்பி வீண்காலம் போக்காமல் நல்லவழியிலே நடவுங்களென்று சிரித்துப் பிறருக்குப் போதிக்கின்றனபோ லிருக்கின்றன என்பது கருத்து.

கண்ண — சினையடியாகப்பிறந்த பெயர்ப்பகுபதம்; குறிப்பு வினைமுற்று என்னவுமாம். ஆய்—ஆக என்பதின் திரிபு. தலை—பால்

---

9. The skulls of the dead, appearing with deep and hollow eyes that alarm those who see them, seem to look at the living and say grinning "Stand in the way of virtue: this is the nature of the body."

Digitized by Google

பகா அஃறிணை யாதலின் இங்கு பன்மை. இற்று—இன் என்னும் இடைச்சொல்லின் அடியாகப்பிறந்த குறிப்புவினைமுற்று, று - விகுதி. சாற்றும்—"றவ்வொடுகரவும்மை" என்னும் [பதவியல் ௯அ-ம்] சூத்திரத்தில் செய்யுநிகழ்பெதிர்வும் என்றமையால் இங்கு நிகழ்காலத்தில் வந்தது. அல்லது 'இயற்கைப்பொருளை இற்றெனக்கிளத்தல்' என்கிற [பொது-சூ-ரு௩] விதியால் தன்மையைக் காட்டவந்ததுமாம். (௯)

உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச் - செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்துள் வைப்ப திலர்.

(இ - ள்.) உயிர் போயார் வெள் தலை - செத்தவர்களுடைய வெள்ளையான தலையெலும்புகள், உட்க சிரித்து - (பிறர்) பயப்படும்படி சிரித்து, செம்மாப்பவரை - (இல்வாழ்க்கைச்சுகத்தால்) இறுமாந்திருப்பவர்களுக்கு, செயிர் தீர்க்கும் - (இறுமாப்பாகிய) குற்றத்தை நீக்கும், (ஆதலால்) செயிர் தீர்ந்தார் - குற்றம் நீங்கியவர்கள், கண்டு - பார்த்து, இதன் வண்ணம் இற்று - இதன் குணம் இப்படிப்பட்டது, என்பதனால் - என்றுநினைப்பதனால், தம்மை - தங்களை, ஓர் பண்டத்துள் - ஒருபொருளில், வைப்பது இலர் - வையார்கள், எ-று.

இறந்தவர்களுடைய தலையெலும்புகள் பிறர் பயப்படும்படி சிரிப்பதுபோ லிருத்தலால் உடம்பின்மேல் ஆதாரம் வைத்திருப்பவர்கள் அவ்வபிமானத்தை விடுகிறார்கள்; அப்படிவிட்டால் தம்மை ஒரு பொருளாகப் பாராட்டார்கள் என்பது கருத்து.

போயார் — யகரம் இறந்தகால இடைநிலை யெனக்கொள்க. [பொது - சூ - உ௬-னல்] உயிர் என்பது போயார் என்பதின் பகுதியோடு முடிந்தது. வெள் தலை என்பதில் [மெய்-உ௪-வது சூத்திரத்தினல்] ளகரம் ணகரமும், [மெய் - ௩௪-வது சூத்திரத்தினல்] தகரம் டகரமும் ஆயின. செம்மாப்பவரை—ஐ உருபை கு உருபாகத் திரித்துக்கொள்க; வேற்றுமைமயக்கம். வைப்பது—தொழிற்பெயர்; இதனை எழுவாயாகவும் இரண்டாம்வேற்றுமையாகவும் கொள்ளலாம். இல் என்பது செயப்படுபொருள் குன்றியதும் குன்றாததுமாய் இருக்கு மென்பதை முன்னமே காட்டியிருக்கிறோம். (௧0)

---

10. The white skull of the dead which grins and instils fear in the spectators, will correct the faults of the proud. Those who are relieved of their faults knowing that such is the nature of this body, do not reckon themselves amongst existing things.

Digitized by Google

## ௬-வது. அதிகாரம்.—Chapter VI.

### துறவு—Asceticism.

*அதாவது செல்வமுதலியவற்றிற் பற்று நீங்குதல்வேண்டு மென்பதைக் குறித்துச் சொல்லியது.*

1. விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்மு னில்லாதாம் பாவம் - விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

(இ - ள்.) விளக்கு புக - தீபமானது (ஓரிடத்தில்) பிரவேசிக்க, இருள் மாய்ந்து ஆங்கு - இருட்டு அழிவது போல், ஒருவன் தவத்தின் முன் - ஒருவன் செய்த தவம் விளங்குமிடத்து, பாவம் நில்லாது - பாவச்செய்கைகள் நிற்கமாட்டா; விளக்கு நெய் தேய்விடத்து - விளக்கின் எண்ணெய் முதலியவை குறைந்து போகுமிடத்து, இருள் சென்று பாய்ந்து ஆங்கு - இருட்டுப் போய் பரவுவது போல, நல் வினை தீர் விடத்து - புண்ணிய காரியங்கள் நீங்குமிடத்திலே, தீது நிற்கும் - பாவச்செய்கை வந்து பிரவேசிக்கும், எ-று. ஆம் இரண்டும் - அசை.

விளக்கின்முன் இருள் கெடுவதுபோலவும் விளக்கினெய் குறையக் குறைய இருட்டு பரவுவதுபோலவும் புண்ணியகாரியஞ் செய்து வரப் பாவகாரியம் நாசப்படும், புண்ணியகாரியம் தேய்ந்துவரப் பாவ காரியம் வந்து சேரும் என்பதாம். எனவே ஒருவன் இடைவிடாது நற்காரியஞ் செய்துவந்தால் பாவகாரியம் புக இடம்பெறாது நீங்கும். இடைவிட்டுச் சும்மாவிருந்தால் பாவத்திற்கு இடமுண்டாகும் என்பது கருத்து.

இந்திரியங்கள் வியாபாரமின்றிச் சும்மாவிரா வாதலால் எதையாகிலும் செய்துகொண்டே யிருக்கும். செல்வம் யாக்கை முதலிய வற்றுட் பற்றிருக்கின் அவற்றைப் போற்றப் பல அக்கிரமங்களுக்கு மிடமுண்டா மென்பதைப்பற்றி அப்பற்றை விடவேண்டுமென்பது கருத்து. வடநூலார் இந்திரியங்களை "குர்வத்ரூபங்கள்" என்பர்.

புக—காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சம். மாய்ந்தாங்கு—மாய்ந்தது ஆங்கு, மாய்ந்து ஆங்கு என இருவகையிலும் கொள்

---

1. As darkness disappears when a light is brought in, so will sin pass away before the effects of good deeds of former life; and as darkness envelops a place when the oil in the lamp is exhausted, so when the effects of good deeds expire, the effects of evil deeds will prevail.

Digitized by Google

ளலாமென முன்பே தெரிவித்தனம். தேய்வு, தீர்வு,—இரண்டும் தொழிற்பெயர்; அவை யுண்டாம்போதில் எனக்கொள்க. (௯)

நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார் - தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

(இ-ள்.) தலை ஆயார் - மேலானவர்கள், நிலையாமை நோய் மூப்பு சாக்காடு என்று எண்ணி - (உடம்பு செல்வ முதலானவைகளில்) நிலையில்லாமை என்றும் வியாதிகளும் கிழத்தனமும் சாவும் ஆகிய குற்றங்களை யுடையனவென்றும் யோசித்து, தம் கருமம் செய்வார் - தமக்கு உறுதியானகாரியங்களைச் செய்து வருவார்கள்; தொலைவு இல்லா- நீங்குதலில்லாத, சத்தமும் சோதிடமும் - சொல்லைக்குறித்த சாஸ்திரங்களும் (கிரகவோட்டமும் அதனால் வரும் பயன் முதலியவற்றையுமுணர்த்தும்) சோதிட சாஸ்திரமும், என்று இவை - என்றுசொல்லப்பட்ட பல நூல்களையே, பிதற்றும் - (விடாமல்) சொல்லிக்கொண்டு திரிகிற, பித்தரில் - பைத்தியம் பிடித்தவரைக்காட்டிலும், பேதையார் இல் - புத்தியீனர் (உலகத்துள்) இல்லை எ-று.

செல்வமுதலியவற்றுள் பல குற்றங்க ளிருப்பதைக்கண்டு அவைகளில் அபிமானத்தை வைக்காமல் தமக்கு நற்கதிக்கேதுவான வேதாந்த சாஸ்திரமுதலியவை கற்றுக் காலத்தைக் கழிப்பர் பெரியோர்; இம்மைக்கே பெரும்பாலும் உபயோகப்படுகிற இலக்கண முதலிய நூல்களையே கற்றுக் காலத்தை வீண் போக்குவர் மூடர் என்பது கருத்து.

சத்தம் என்பது ஐந்திலக்கணங்களும் சங்கீதமும்; தொனிகளுக்குப் பொது. சோதிடம் என்பது கணிதத்துக்குமாம். இப்படிப்பட்ட நூல்கள் இம்மை மறுமைகளிற் சிறிது உபயோகமானாலும் வேதாந்த முதலிய நூல்களைப்போல் முக்கியமா யுதவியாகாமையின் அவற்றையே முக்கியமாகக் கொண்டவரை இப்பாட்டிற் பழித்தது என அறிக. நிலையாமை - ஒரு தன்மையதாயிராமை. என்று என்னும் எண்ணிடைச்சொல்லை நிலையாமை முதலிய நான்கிலும் கூட்டிக்கொள்க: [இடை - சூ - ௧௦.] மேற்படி இயல் ௬-ம் சூத்திரத்தினால் இது

2. Those who are pre-eminent in learning, knowing that wealth is unstable and that sickness, old age and death are certain, perform the duties enjoined to them. There are none so foolish as those who ever devote their time to the endless treatises on grammar and astrology (which are useful only to this world.)

Digitized by Google

தொகைபெறுதாயிற்று. ஆயுள் முழுதுமே போதாதாகையால் 'தொலைவில்லா' என்றார். ஆங்கு - அசை. பித்தரில்—ஐந்தனுருபு எல்லைப் பொருளில்வந்தது; நீக்கப்பொருளெனக் கொள்வாருமுளர். (உ)

இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலியென் றிவையெல்லாம் - மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

(இ - ள்.) இல்லம் - மனை, இளமை - வாலிபம், எழில் வனப்பு - மிகுந்த அழகு, மீக்கூற்றம் - செல்வாக்கு, செல்வம் - சம்பத்து, வலி - தேகபலம், என்று இவையெல்லாம் - என்று சொல்லப்பட்ட இவைகளெல்லாம், நிலையாமை - நிலைத்திராமையை, மெல்ல கண்டு - நிதானித்து யோசித்து, தலையாயார் - மேலோர், தாம் உய்யக்கொண்டு - தாங்கள் கடைத்தேறுவதற்கு, நெடியார் - நீடியாதவராகி, துறப்பர் - (இல்லமுதலியவற்றுட்) பற்றை விடுவார்கள், எ-று.

முதற்பாட்டின் கருத்தே இதிலுமென்றறிக.

எழில்வனப்பு என்பன ஒரு பொருட் கிளவியாயினும் "ஒரு பொருட் பன்மொழி சிறப்பி னின்வழா" என்கிற [பொது. ௬௭-வது சூ.] விதியால் அமைந்தன. மீக்கூற்றம்—மீ - மேலான, கூற்றம்-கூறுதல் [சொல்லுதல்], எல்லாவற்றின் மேலாகச் சொல்லுதலென்றபடி. என்று என்பதை எண்ணிடைச்சொல்லாக்கொண்டு முரைக்கலாம். மெல்ல—மென்மையடியாக வந்த குறிப்புவினையெச்சம். நெடியார்—எதிர்மறை வினையாலணையும்பெயர் ; நெடு - பகுதி, தாமதித்தல், ஆர் - எதிர்மறையையுங் குறிக்கும் பலர்பால் விகுதி. உய்யக்கொண்டு—ஒருசொல்லாக்கொள்ளுதல் நேர் ; தாம் உய்வதைக் கொண்டெனவும் உரைக்கலாம். (௩)

துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
இன்பமே காமுறுவ ரேழையார் - இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையா
றடைவொழிந்தா ரான்றமைந் தார்.

---

3. Those who are eminently wise, seeing that on careful examination all such things as house, youth, beauty, dignity, wealth and bodily strength are unstable, will without any delay endeavour to save themselves by renouncing this world.

4. The foolish, though they endure many days of affliction will only desire one day's pleasure, but those who are eminent in their wisdom, knowing that domestic happiness is greatly changeable and having regard to its attendant misery have renounced the domestic state.

Digitized by Google

(இ-ள்.) ஏழையார் - விவேகமற்றவர், பல நாள் துன்பம் உழந்தும் - பலதினம் துக்கத்தை யனுபவித்தும், ஒரு நாளை இன்பமே காமுறுவர் - ஒருதினத்தில் கிடைக்கும் சுகத்தையே விரும்புவார்கள்; ஆன்று அமைந்தார் - அறிவு அதிகமாகப் பொருந்தினவர், இன்பம் இடை தெரிந்து - சுகமானது மாறுபடுவதை அறிந்து, இன்னாமை நோக்கி - அதனால் வருந் துன்பத்தைக் கண்டு, மனை ஆறு அடைவு - இல்வாழ்க்கை வழியில் சேருதலினின்றும், ஒழிந்தார் - நீங்கினர், எ-று.

புத்தியீனர் இல்வாழ்க்கையிற் பலதுன்பத்தை அனுபவித்தும் ஒருகால் நேரிடுகிற சொற்ப இன்பத்தைப்பற்றி அதையொழித்தாரில்லை; விவேக மிருந்தவரோ அது மாறிப்போய் பலதுன்பங்கள் நேரிடுவதை யோசித்து அதையொழித்தார் என்பதாம்.

நாளை — ஐ - சாரியை. காமம் - விருப்பம், அதனை உறுவர் காமுறுவர்; மரூஉமொழி; காமம் இடைகுறைந்த தென்னவுமாம். இடை - இடைதல் அதாவது நீங்குதல்; முதனிலைத்தொழிற்பெயர். இன்னாமை—இனி என்பதின் எதிர்மறைப் பண்பு. ஆன்று—இது அகன்று என்பதின் விகார மென்பர்; ஆன்றல் என்பது தனித்த ஒருசொல் லெனவுஞ் சொல்லுகின்றனர். (௪)

கொன்னே கழிந்தன் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமால் - துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே போதியோ
நன்னெறி சேர நமக்கு.

(இ-ள்.) இளமையும்-இளமைப்பருவமும், கொன்னேகழிந்தன்று - வீணாய்ச்சென்றது; இன்னே - இப்பொழுதே, பிணியொடு மூப்பும் வரும் - நோயும் கிழத்தனமும் வந்து சேரும்; (ஆதலால்) துணிவு ஒன்றி - துணிவைப்பொருந்தி, என்னொடு சூழாது - என்னொடு ஆலோசியாமல், எழு நெஞ்சே - எழுகின்ற மனமே, நமக்கு நல் நெறி சேர - நமக்கு நல்லவழியானது கிடைப்பதற்கு, போதியோ - போகிறாயோ, எ-று.

ஒருவன் திடரென்று விஷய வாசனை தீர்ந்து நன்மார்க்கத்திற் செல்லத் துணிந்த தன் மனதை நோக்கி "நானு நீயு மொன்றியே எல்லாக்காரியமும் வெகுநாளாய் நடத்திவந்தோமே, இப்பொழுதென்ன என்னோடே ஆலோசியாம லெழுந்தாய்? கால இயல்பினால் வருந் துன்

5. Youth is gone in vain and old age will come at this very moment with its attendant sickness. Oh my soul, which boldly endeavours to depart without previously consulting me! Art thou going away to secure us a righteous path?

Digitized by Google

பங்களைக்கண்டு விஷயப்பற்றைவிட்டு நித்திய சுகமான மோக்ஷவழிக்குப் போகிருய்போலும்" என்று சொன்னது என்பது கருத்து.

நன்னெறி—மோக்ஷவழி. நமக்கு—உனக்கும் எனக்கும். நீ என்பது மனம்; நான் என்பது ஆத்துமா. மனதின் வழியாகவே சுகதுக்கங்களை யனுபவிப்பது என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. நமக்கு என்பது தனித் தன்மைப்பன்மை யென்னவுமாம். கழிந்தன்று—கழி பகுதி, த் - இடைநிலை, சந்தியால்வந்த தகரம் மெலிந்தது, அன் - சாரியை, று - விகுதி. உம்மைகள் எண்ணில் வந்தன. ஆல் - அசை, காரணங் குறித்த தெனவுமாம். துணிவு—நிச்சயமும் தீரமுமாம். போதி—இ - விகுதி, தகரம் - எழுத்துப்பேறு, தி என்பதே விகுதி யென்னலாம்; இவ்விகுதி ஏவலுக்கும் நிகழ்காலத்துக்கும் வருகின்றது; அல்லது தகரம் - இடைநிலை, இ - விகுதி, விரைவுபற்றி நிகழ்காலம் இறந்தகாலமான வழூவமைதி என்னலாம். (ரு)

மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையால் - பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்ருர் கற்றறிந் தார்.

(இ-ள்.) மாண்ட குணத்தொடு மக்கள் பேறு இல் எனினும் - மாட்சிமைப்பட்ட குணங்களும் பிள்ளையைப் பெறுதலும் (இல்லாளிடத்து) இல்லாவிட்டாலும், பூண்டான் - கலியாணஞ் செய்துகொண்டவன், கழித்தற்கு அருமையால் - (அம்மனைவியை) நீக்குதற்குக் கூடாமையாலே, பூண்ட மிடி என்னுங் காரணத்தின் - (தான்) அடைந்த வருத்தம் என்கிற காரணம்பற்றி, மேல் முறைக்கண்ணே - மேலாகிய ஒழுக்கத்திலே, [அல்லது பூர்வகாலத்திலேயே,] கற்றறிந்தார் - நூல்களைக்கற்று (அதன்படி அனுபவத்தை) அறிந்தவர்கள், கடி என்ருர் - (விவாகத்தை) விடு என்ருர்கள்.

நற்குணமும் பிள்ளைப்பேறு மில்லாதிருந்தாலுங் கொண்டபெண்டாட்டியை விடக்கூடாதாகையால், விவாகம் செய்தபின் இல்வாழ்க்கையில் பலதுன்பங்க ளுண்டாவதைப்பற்றி முன்னமே அதனை விடு என்று பெரியோர் சொன்ஞர்கள் என்பது கருத்து.

கடி என்னுஞ் சொல்லுக்குக் கலியாணமென்றும் ஒரு பொருளுண்டு. அது கடிய வேண்டுவது என்கிற காரணம்பற்றி வந்ததென்

---

6. Since it is a hard thing for a husband to reject his wife though she may neither have borne children nor have a good disposition, the wise have, on account of the misery entailed by matrimony, long ago called it *kuddy*, i. e. a thing to be eschewed.

Digitized by Google

பது அபிப்பிராயம். இதைச் செயப்படுபொருள்விகுதி குன்றியபெய ரென்றாகிலும் கடி என்று சொல்லப் படுவதினால் வந்த பெயரென்றா கிலும் கொள்க; நேர்பொருளில் ஏவலொருமை; உரியியல்; "கடியென் கிளவி காப்பே கூர்மை" என்கிற கரு - வது சூத்திரத்தைக் காண்க. குணத்தொடு—ஒடு - எண்ணிடைச்சொல், 'என்று மெனவுமொடுவும்' என்கிற [இடை-சூ-௪௦-னால்] பிரிந்து மக்கட்பேறு என்பதோடு சேர்ந் தது. அருமை இங்கே கூடாமை; மனையாளைக் கழித்தற்குக் கார ணம் தருமநூலிற் காட்டப்பட்டிருப்பதனால் இதைப் பெரும்பான் மையிற் கொள்க. மிடி—துன்பத்திற்கு ஆகு பெயர். காரணத்தின்— இன்னுருபு ஏதுப்பொருளில் வந்தது. கடி என்பதற்கு இங்ஙனம் பொருள் படுத்ததை 'நிருத்தி' அலங்காரமென்ப. (௬)

ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் திருவத் தவர்.

(இ-ள்.) ஊக்கி - முயற்சிப்பட்டு, தாம் கொண்ட விரதங்கள் - தாம் ஆரம்பித்த விரதங்கள் [தவங்கள்,] உள் உடைய - சொரூபங் கெடும்படி, தாக்கு அரு துன்பங்கள் - தாங்குதற்குக் கூடாத தீங்கு கள், தலைவந்தாக்கால் - அவற்றினிடம் வந்தால், நீக்கி நிறூஉம் உர வோரே - அவற்றைத்தள்ளி (விரதங்களை)ஸ்திரப்படுத்தும் மனோபல முள்ளவர்களே, நல் ஒழுக்கம் காக்கும் - மேலான துறவறவொழுக் கங்களைக் காக்கும்படியான, திருவத்தவர் - சிறப்பையுடையவர், எ-று.

உறுதியாகத் தாம் ஆரம்பித்த விரதங்களின் சொரூப மழியும் படியான இடையூறுகள் வந்தால் அவற்றை நீக்கி விரதங்களைக் காக் கத்தக்கவரே துறவிகளாவார் என்பது கருத்து.

விரதங்களாவன:—தியான தாரணாதிகள். உள் என்பது இங்கே உண்மை, அதாவது சொரூபம். துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிருதிவி முதலியவைபற்றி வருவனவும், தெய்வங்களால் வருவனவுமான மூன்று தாபங்கள். தாக்கரு—தாங்கு அரு, வலித் தல், முதனிலைத்தொழிற்பெயர், நான்காம் வேற்றுமைத் தொகை. நிறூஉம்—நிறுவும் என்பதின் விகாரம். திருவத்தவர்—திரு - பகுதி, அத்து, அ - இரண்டும் சாரியை, அர் - விகுதி. திரு - மேன்மைபொ ருந்திய, அத்தவர் - அப்படிப்பட்ட தவசிகள் எனவுமுரைக்கலாம்.(எ)

---

7. Those eminent men alone are ascetics who, when troubles hard to be borne come upon them and frustrate the austerities they earnestly pursue, overcome them with strength of mind and steadfastly adhere to the objects in their view.

Digitized by Google

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால் - உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

(இ - ள்.) தம்மை இகழ்ந்தமை - தங்களைத் தூஷித்ததை, தாம் பொறுப்பது அன்றி - தாங்கள் பொறுத்துக்கொள்வது மல்லாமல், மற்று - மேலும், எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால் - நம்மைத் தூஷித்த செய்கையின் பலனால், உம்மை - மறுமையில், எரிவாய் நிரயத்து - எரிகின்ற வாயையுடைய நரகத்திலே, வீழ்வர்கொல் என்று - வீழ்வார்களே என்று, பரிவதூஉம் - இரங்குவதும், சான்றோர் கடன் - (துறவறவியல்பு) மிகுந்தவர்களுடைய கடமை, எ-று.

தம்மை யிகழ்ந்ததைப் பொறுத்தலோடு இகழ்ந்ததைப் பற்றி அவருக்கு நரகம் நேரிடுமேயென்றிரங்கி அப்படி யில்லாம லிருக்கப் பிரார்த்திப்பதும் துறவிகள் கடமை என்பது கருத்து. இடையூறுகளுக்குப் பின்வாங்காமையும் பிறர்க்குத் துன்பநேரிடப் பொறாமையும் துறவிகளுக்கு வேண்டும் என்பதாம்.

இகழ்ந்தமை—மை - தொழிற்பெயர் விகுதி. உம்மை—மை - இடம். பரிவதுவும் என்பது பரிவதூஉம் என இன்னிசைக்கு அளபெடுத்தது. இப்பாட்டு பின் அதிகாரங்களிலிருப்பது நன்று. (அ)

மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக் - கைவாய்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

(இ-ள்.) மெய் வாய் கண் மூக்கு செவி—, என பெயர் பெற்ற - என்று பேர் கொண்ட, ஐ வாய - ஐந்தின்வழியாய் வருகின்ற, வேட்கை அவாவினை - மிகுந்த ஆசையை, கலங்காமல் காத்து - மனக் கலக்கமின்றி (தம்மிடஞ்சேராமற்) பாதுகாத்து, கைவாய் உய்க்கும் - நல்லொழுக்கத்திற் செலுத்துகிற, ஆற்றல் உடையான் - வல்லமையுடையவன், விலங்காது - தப்பாமல், வீடு பெறும் - மோக்ஷமடைவான், எ-று.

---

8. It is the duty of the excellent not only to forgive despite but also to pity those who as the fruit of their despite, will in the next birth fall into the burning hell.

9. He who has the power to guard himself undisturbed, against the potent desires of the five organs of sense—the body mouth, eyes, nose and ears—and to direct them in the path of virtue, shall unfailingly obtain beatitude.

Digitized by Google

ஐம்பொறிகளை அடக்கி ஞானவழியிற் செலுத்துகிறவனுக்கு மோக்ஷம் நிச்சயம் என்பது கருத்து.

மெய் என்பது பரிசேந்திரியம்; வாய் என்பது நாக்கு. இங்கும் 'என' என்னும் எண்ணிடைச்சொல் முன் குறித்த இடையியல் சூத்திரத்தினால் மெய்முதலிய ஐந்தோடும் கூடும். ஐவாய்—ஐந்து வாய்-பண்புத்தொகை, இதன்மேல் இவற்றால் வருபவை என்னும் பொருளில் அகரவிகுதி வந்தது; இது தத்திதம். இது வேட்கையவா என்பதோடு இருபெயரொட்டுப் பண்புத்தொகை; பெயரெச்சமெனவுங் கொள்ளலாம். வேட்கையவா — ஒருபொருட்பன்மொழி, சிறப்பைக் குறிக்கும். (௯)

துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்
இன்பமே காமுறுவ ரேழையார் - இன்பம்
இசைதோறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்.

(இ - ள்.) துன்பமே மீது ஊர கண்டும் - துக்கமே மேலிட்டு வரப் பார்த்தும், துறவு உள்ளார் - துறத்தலை நினையாதவராய், ஏழையார் - புத்தியீனர், இன்பமே காமுறுவர் - சுகத்தையே இச்சிப்பார்கள்; மேல் - மேலானவன், இன்பம் இசைதோறும் - இன்பத்தின் காரணம் கூடுந்தோறும், அதன் இன்னாமை நோக்கி - அதனிலுள்ள துக்கத்தைக் கண்டு, பசைதல் பரியாது - ஆசைப்படுவதை விரும்பான், எ-று. ஆம், மற்று,—அசைகள்.

இதற்கு நாலாம்பாட்டின் கருத்தே பெரும்பாலும் அமையும். பணமுதலிய இன்பத்தின் காரணத்திலும் அதனைக் காத்தல் வளர்த்தல் முதலான துன்பங்களைநோக்கி அதனையும் விரும்பார் என்பது விசேஷம்.

உள்ளார்—முற்றெச்சம்; "வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்கிற வினையியல் ௩௨-வது சூத்திரவிதியைக்காண்க. இசை—முதனிலைத் தொழிற்பெயர். மேல் என்பது ஆகுபெயர். (௧௦)

---

10. The mean, though they see afflictions come thronging upon them, never think of the ascetic state and long only for the gratification of worldly desires, but the excellent though pleasures heap upon, having regard to their attendant miseries cherish no desire for them.



Digitized by Google

## எ-வது. அதிகாரம்.—Chapter VII.

### சினமின்மை.—Placidity.

அதாவது கோபிக்கக் காரணமிருந்துங் கோபியாம லிருப்பது.

மதித்திறப் பாரு மிறக்க மதியா
மிதித்திறப் பாரு மிறக்க - மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

(இ - ள்.) மதித்து இறப்பாரும் இறக்க - தம்மை மேன்மைப் படுத்திச் செல்லுகிறவர்களும் செல்லுக; மதியாது மிதித்து இறப்பாரும் இறக்க - மதியாமல் தம்மைக் கீழ்ப்படுத்திச் செல்லுகிறவரும் செல்லுக; ஈயும் - (பறக்கும்) ஈயும், மிதித்து ஏறி - (நம்மை) மிதித்து (நம்) மேலேறி, தலைமேல் இருத்தலால் - தலையின்மேல் இருப்பதனால், அஃது அறிவார் - அதை அறிந்தவர், காயும் கதம் இன்மை - சுடும்படியான கோபம் இல்லாதிருப்பது, நன்று - நல்லது, எ-று.

அறிவுடையோன் மதிப்பான், அறிவிலான் அவமதிப்பான்; அதற்கு ஈயே திருஷ்டாந்தம், ஆதலால் அவமதித்தவனைக் கோபியா திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

உம்மைகள் எண்ணில் வந்தவை. ஈயும்—இவ்வும்மை இழிவு சிறப்பு. இறக்க—வியங்கோள். அறிவார் என்னும் எழுவாய் இன்மை யின் பகுதியாகிய இல் என்பதற்குக் கருத்தாவாய் நின்றது. (க)

தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது
கண்டுழி யெல்லாந் துறப்பவோ - மண்டி
அடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

(இ - ள்.) மண்டி - நெருங்கி, அடி பெயராது - வைத்த பாதத் தை வாங்காமல், ஆற்ற இளி வந்த போழ்தின் - மிகவும் அவமதிப்

---

1. Let the respectful honor and let the despising tramplers trample ; good is freedom from burning anger in those who know that all is as the treading of a fly on their heads.

2. Will those renounce their precious life of indestructible excellence, not being able to bear slight causes of offence, when they can with fortitude accomplish the objects in their view without retracing their steps, although great reproaches may come upon them.

Digitized by Google

No. 11430



பும் இழிவும் வந்தபோதிலும், முடிகிற்கும் உள்ளத்தவர் - (அதற்குக் கலங்காது எடுத்தகாரியத்தை) நிறைவேற்றும்படியான மனோபலமுள்ளவர்கள், தண்டா சிறப்பின் தம் இன் உயிரை - நீங்காத சிறப்பையுடைய தமது இனிமையாகிய பிராணனை, தாங்காது - தரியாமல், கண்டுழி எல்லாம் - கண்டவிஷயங்களிலும், துறப்பவோ - துறப்பார்களோ, எ-று.

பிறர்தம்மை யிகழ்ந்ததற்காகக் கோபங்கொண்டு அதற்காக உயிரைவிடும் அற்பரைக் குறித்துச்சொல்லியது. மகத்தான இகழ்ச்சியிலும் அதை லக்ஷியஞ்செய்யாமல் எடுத்த காரியத்தை முடிக்கும்படியானவர் கண்ட விஷயங்களில் தம் உயிரைத் துறவாமல் சாந்தமாயே யிருப்பார் என்பது கருத்து.

'தண்டாச் சிறப்பின்' என்பதை 'சிறப்பின் தண்டா' என மாற்றி "சிறப்பின் நீங்காத" எனவு முரைக்கலாம். சிறப்பின்—ஐந்தனுருபு, நீக்கத்தில் வந்தது; முன் உரைத்தபடியாகில் இன் - சாரியை. கண்டுழி—கண்ட உழி என்பதில் ஈறு தொகுத்தல் நியதி; ஏழாம் வேற்றுமைத்தொகை. எல்லாமும் அப்படியே. கண்டுழியெல்லாம் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. துறப்ப—பகரம் - பலர்பால்விகுதி [வினை - கு - அ]. ஓ — எதிர்மறையில் வந்தது. போழ்தின் என்பதோடு உயர்வுசிறப்பும்மை கூட்டிக்கொள்க. முடிகிற்கும்—முடி - பகுதி, கில் - ஆற்றலைக்காட்டும் விகுதி, கு - சாரியை, உம் - விகுதி.()

காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால் - ஓவாதே
ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையா ரெஞ்ஞான்றும்
காய்ந்தமைந்த சொல்லார் கறுத்து.

(இ-ள்.) காவாது - தன் வாயைக் காக்காமல், ஒருவன் தன் வாய் திறந்து சொல்லும் சொல் - ஒருவன் தன் வாயைத் திறந்து சொல்லுஞ் சொல்லானது, ஓவாதே - ஒழியாமல், தன்னைச் சுடுதலால் - தன்னை வருத்துவதனால், ஓவாதே ஆய்ந்து அமைந்த கேள்வி - ஒழியாமல் ஆராய்ந்து பொருந்திய கேள்வியைப்பெற்ற, அறிவுடையார் - விவேகிகள், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், கறுத்து - கோபித்து, காய்ந்து அமைந்த - உக்கிரமாகி யிருக்கிற சொற்களை, சொல்லார் - சொல்லமாட்டார்கள், எ-று.

---

3. As the words which a man speaks unguardedly continually stings him afterwards, the wise who possess that knowledge which arises from oral instruction and incessant search after truth, will never give vent to expressions of burning anger.

Digitized by Google

தம்மைப் பிறன் நிந்தித்தபோது தமக்கு உண்டாயிருக்கிற வருத்தத்தையே திஷ்டாந்தமாக்கொண்டு பிறர் விஷயத்தில் கடுமையான சொற்களைச் சொல்லார் விவேகிகள் என்பது கருத்து.

ஓவாது—எதிர்மறை வினையெச்சம், ஓ அல்லது ஓவு - பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, து - விகுதி. காய்ந்தமைந்த—பலவின்பால் வினையாலணையும்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை; இது அன் சாரியை பெற்ருல் 'அமைந்தன' என்றிருக்கும். (௩)

நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர் - ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

(இ-ள்.) நிகர் அல்லார் - தமக்குச் சமானமாகாதவர்கள், நேர்ந்து - எதிர்த்து, நீர் அல்ல சொல்லியக்கால் - அயோக்கியமான சொற்களைச் சொன்னுல், விழுமியோர் - மேலானவர்கள், வேர்த்து - வெகுளார் - (உடம்பு) புழுங்கி கோபிக்க மாட்டார்கள்; கீழ் - கீழோன், அதனை ஓர்ந்து - அந்த நிந்தனையை ஆராய்ந்து, உள்ளத்தான் உள்ளி - மனதினுல் நினைந்து, உரைத்து - (பலர்க்கும்) சொல்லி உராய் - உராய்ந்து, ஊர் கேட்ப - ஊராரெல்லாம் கேட்கும்படி, துள்ளி - அதிகமாய் குதித்து, தூண் முட்டும் - தூணில் முட்டிக் கொள்ளுவான், எ-று.

அற்பர் செய்யும் நிந்தனையைக் குறித்துக் கோபிக்கமாட்டார் பெரியோர். கீழ்மக்களோ தம்மை வெகுமேலாக நினைத்திருப்பதனுல் நிந்தனையைக் கேட்டமாத்திரத்தில் நம்மை இப்படி சொல்லலாமாவென்று மனம்பொருமல் பலருக்குஞ்சொல்லி நிமிஷத்துக்கு நிமிஷம் கோபம் மிஞ்சுவதனுல் துள்ளித் தூணில் முட்டிக்கொள்வார்கள் என்பது கருத்து.

நேர்த்து, ஓர்த்து,—இரண்டிடத்தும் வலித்தல் விகாரம். நீர்—சற்குணம், அதை யுடையதுக்கு ஆயிற்று. அல்ல—பலவின்பெயர். விழுமியோர்—விழுமு - பகுதி, சிறப்பு; விரும்புதலுமாம்; இன் - இடைநிலை ஈறுகெட்டது, ஆர் - விகுதி, ஓர் ஆயிற்று, [பொது - சூ - உ.] உராய்—முதனிலையே வினையெச்சமா நின்றது. "வினைமுற்

4. The excellent will not be hot and angry when their inferiors oppose them uttering unbecoming words, but the base taking such words to their heart will speak of it, chafe in the hearing of every body in the place, jump with rage and knock their heads against a post.

Digitized by Google

வினையெச்சமாகலும்'' என்கிற வினையியல் ௬௨ - வது சூத்திரத் ..ன் உரையைக்காண்க. 'ஊர்கேட்ப' என்றதற்கு தள்ளுதல் முட்டிக் கொள்ளுதலின் ஓசை யாவருக்கும் செவிப்படும்படி எனவும், ஊரார் ஓடிவந்து இதென்னவென்று வினவ எனவும் கருத்துக்கொள்ளலாம். கீழ்—ஆகுபெயர். (௪)

இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன் - எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

(இ-ள்.) இளையான் அடக்கம் - (வாலிபன் பொறிவழிச் செல்லாது) அடங்கி நிற்பதே, அடக்கம் - அடக்கமென்று சொல்லப்படும்; கிளை பொருள் இல்லான் - விர்த்தியாகும்படியான பணமில்லாதவன், கொடையே கொடைப்பயன் - (பிறர்க்குப் பண முதலியவற்றைக்) கொடுப்பதே பயனுள்ள கொடையாம்; எல்லாம் ஒறுக்கும் - எல்லாவற்றையும் வெல்லத்தக்க, மதுகை - தேகபலமும், உரன் - மனவுறுதியும், உடையாளன் - உடையவன், பொறுக்கும் பொறையே - பொறுத்துக்கொள்ளும் பொறுமையே, பொறை - பொறுமையென்று சொல்லத்தகும், எ-று.

பொறிகளை வெல்லுதற்குக் கூடாத வயதுள்ளவன் இந்திரியங்களை ஜயிப்பது எப்படி சிரேஷ்டமோ, பணமில்லாதவன் கொடுப்பது எப்படி கொண்டாடும்படியான கொடுத்தலோ, அப்படி தேகபல மனோபலங்களை யுடையவன் கோபத்தைப் பொறுத்தல் மேலானது என்பது கருத்து.

இது ஒப்புமைக்கூட்டம் என்னு மலங்காரம். இளையான்—இளமையுடையவன். அடக்கம்—தொழிற்பெயர், அடங்கு - பகுதி, வலித்தது, அம் - விகுதி. கொடை, பொறை,—இரண்டும் தொழிற்பெயர்கள், ஐ - விகுதி; கொடு, பொறு, - பகுதிகள், "முற்றுமற்றொரோவழி" என்றதனால் உகரம் கெட்டது. கிளைபொருள்—கிளைக்கின்ற பொருள், வினைத்தொகை. 'கொடைப் பயன்' என்பதை 'பயன் கொடை' என மாற்றிக்கொள்க. எல்லாக்கொடையும் பயன்படுவதானாலும் சிறப்பைப்பற்றி இங்ஙனம் சொல்லப்பட்டது. மதுகை யுரன்—உம்மைத்தொகை. உடையாளன் — உடையனுதலை ஆள்ப

---

5. The self-control exhibited by a youth is self-control; the liberality shewn by one who has not increasing riches is a fruitful liberality; and the patience shewn by one who has strength and power to overcome others is patience indeed.

Digitized by Google

வன். பொறுக்கும் பொறை — பெயரெச்சம், தொழிலைக்கொ
டது; பொறுத்தல் என்பதே திரண்டபொருள், [வினை - கூ - உ
இப்பாட்டில் விதியலங்காரமும் சேர்ந்திருக்கின்றது. (

கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர் - ஒல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தம்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

(இ-ள்.) ஒல்லை - சீக்கிரத்தில், இடு நீற்றால் - மந்திரித்திட்ட விபூதியினால், பை அவிந்த நாகம் போல் - படம் அடங்கின பாம்பைப்போல, தத்தம் குடிமையால் - தங்கள் தங்கள் குலப்பெருமையால், வாதிக்கப்பட்டு - வருத்தப்பட்டு, (யோக்கியர்) கல் எறிந்தது அன்ன - கல்லால் எறிந்ததுபோ லிருக்கிற, கயவர் வாய் இன்னா சொல் - மூடர் வாயிலுண்டாகிற கொடுஞ்சொற்களை, எல்லாரும் காண - யாவரும் காணும்படி, பொறுத்து—, உய்ப்பர் - செலுத்துவார்கள், எ-று.

விபூதி மந்திரித்துப் போட்டால் தலை யெடுக்கமாட்டாமல் அடங்கிக் கிடக்கிற பாம்பைப்போல பெரியோர்களும் தங்களைத் துஷ்டர் வைதால் தங்கள் குலப்பெருமைகளை நினைத்துப் பொறுத்துக்கொண்டு சும்மா விருப்பார்கள் என்பது கருத்து.

உய்ப்பர் என்பதற்கு அந்த இன்னாச்சொற்கள் தங்கள்மேல் பட்டனவாகப் பாவியாமல் புறத்திற் பட்டனவாக்குவார் என்று அபிப்பிராயம். வாதிக்க—இது பாதிக்க என்னும் வடமொழித் திரிபு. இதற்கே தர்க்கிக்கப்பட்டு எனப்பொருள்கொண்டு, நீர் இந்தப்படி செய்வது இன்னின்ன காரணத்தால் நம்பெருமைக்குத் தகாது என்று தர்க்கஞ்செய்யப்பட்டு எனவும் கருத்துரைக்கலாம்.

எறிந்தன்ன—'எறிந்தாலன்ன,' 'எறிந்தது அன்ன' என் றிருவகையுங் கொள்ளலாம். கல் எறிந்து - கல்லை எறிந்து என்வுமாம். உய்ப்பர்—பிறவினை, உய் - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவான பகுதி. தத்தம்—தம் தம் என்பது "மவ்வீறொற்றழிந்து" என்கிற விதியால் மகரங்கெட்டுத் தகர மிகுந்தது. குடிமை—மை - விகுதி, இயல்பைக்காட்டும். (சு)

---

6. Noble men will in consideration of their own high birth, bear with patience the hard words which the vulgar in the presence of all, fling at them like stones just like the cobra which quickly closes its hood when ashes are thrown upon it.

Digitized by Google

மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையோர் - ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

(இ-ள்.) மாற்றார் ஆய் நின்று - பகையுள்ளவர்களாகி நின்று, தம் மாறு - தம் பகைக்கு உரிய காரியங்களை, ஏற்பார்க்கு - மேற்கொண்டவர்க்கு, ஏலாமை - (தானும்) அதை மேற்கொள்ளாமலிருப்பதை, ஆற்றாமை என்னார் அறிவுடையோர் - சத்தியீனமென்று சொல்லமாட்டார் விவேகிகள்; (ஆதலால்) ஆற்றாமை - பொறாமல், அவர் நேர்ந்து - (அப்பகைவரை) எதிர்த்து, இன்னா செய்தக்கால் - கொடுமையானவைகளைச் செய்தால், தாம் அவரை - தாங்கள் அவர்களுக்கு, பேர்த்து இன்னா செய்யாமை - மீட்டும் கொடுமைகளைச் செய்யாதிருந்தால், நன்று - நல்லதாம், எ-று.

பகைகொண்டவர் அதற்குரிய கொடுமைகளைச்செய்தால் தாமும் அவர்களுக்கு அப்படி செய்யாமல் பொறுப்பது நலம். இவ்வாறு செய்ததனால் விவேகிகளால் சத்தியீனனென்கிற நிந்தை வரமாட்டாது என்பது கருத்து.

மாறுதலையுடையவர் மாற்றார். மாறு - முதனிலைத்தொழிற்பெயர். மற்று - அசை. இரண்டாம் ஆற்றாமை—எதிர்மறைவினையெச்சம், மை - விகுதி. இன்னா—எதிர்மறைப் பலவின்பாற் பெயர். (எ)

நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும் - அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

(இ-ள்.) நீசர் வெகுளி - கீழ்மக்களுடைய கோபம், நெடுங்காலம் ஓடினும் - அதிககாலஞ் சென்றாலும், கெடும் காலம் இன்றி - அழியுங்காலமில்லாமல், பரக்கும் - வியாபிக்கும்; சீர் கொண்ட சான்றோர் சினம் - கீர்த்திபெற்ற பெரியோர் கோபமானது, அடும் காலை - காய்ச்சும் பொழுது, நீர் கொண்ட வெப்பம் போல - ஜலமானது

---

7. To be unresisting to those who would oppose them as enemies, the wise call not imbecility. It is therefore good that when others have inpatiently opposed them and done them evil they do not return it.

8. The wrath of the vulgar will continue to spread though it runs a long time; but the anger of the truly wise will cool of itself like the heat of the boiling water.

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.
Digitized by Google

கொண்ட உஷ்ணத்தைப்போல, தானே தணியும் - பிறர் ஆற்றவேண்டாமல் ஆறும், எ-று.

நீசர் தம்மிடத்து மகிமையுளதாக எண்ணி அகங்காரங்கொண்டிருப்பவ ராதலால் அவர்க்கு வரும்கோபம் காலம் செல்லச் செல்ல வளர்ந்தேவரும், சான்றோர் சினமோ காய்ச்சும்போது நீர் வெப்பங்கொண்டாலும் பின் தானே ஆறுவதுபோல் தானே ஆறிவிடும் என்பது கருத்து.

இயல்பில் தண்மையும் பிறர் காயச்செய்தால் வெம்மையும் நீர்க்கு இருப்பதுபோல் பெரியோர் குணத்திற்கும் இருக்கிறது என்று அவ்வுவமை கூறப்பட்டது.

இன்று—எதிர்மறைக்குறிப்பு வினையெச்சம். பரக்கும்—பர - பகுதி. தானே—ஏகாரம் - பிரிநிலை. தணியுமே—ஏ - அசை. (அ)

உபகாரஞ் செய்ததனை யோராதே தங்கண்
அபகார மாற்றச் செயினும் - உபகாரம்
தாஞ்செய்வ தல்லாற் றவற்றினுற் றீங்கூக்கல்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்.

(இ-ள்.) உபகாரம் செய்ததனை - (ஒருவன்) தனக்குச்செய்த வுபகாரத்தை, ஓராதே - நினையாமல், தங்கண் - தம்மிடத்தில் [உபகாரஞ்செய்தவரிடத்தில்], அபகாரம் ஆற்ற செயினும் - அபகாரத்தை மிகச்செய்தாலும், தாம் உபகாரம் செய்வதல்லால் - தாங்கள் (அவனுக்கு) உபகாரம் செய்வதேயன்றி, தவற்றினுல் - பிசகியும், தீங்கு ஊக்கல் - தீமையைச்செய்ய ஆரம்பித்தல், வான் தோய் குடி பிறந்தார்க்கு - புகழால் வானத்தை எட்டிய குலத்திற் பிறந்தவர்க்கு, இல் - இல்லை, எ - று.

தாம் உபகாரஞ்செய்திருக்க, தமக்கே அபகாரஞ்செய்த நீசருக்கும் மறுபடி தாம் உபகாரஞ் செய்வாரேயல்லது அபகாரஞ்செய்யார் நற்குடிப்பிறந்தோர் என்பது கருத்து.

உபகாரம் - உதவி; அபகாரம் - அதற்கு எதிரானது. செய்ததனை—செய்தது - செய்யப்பட்டது, "செயப்படுபொருளைச் செய்தது போல" என்கிற [பொது - சூ - சகூ] விதி; உபகாரத்துக்கு விசேஷணமாகக் கொள்க. ஆற்ற—வினையெச்சம், ஆற்று - பகுதி. தவற்றி

9. Those who are born of renowned families, will not, even through inadvertence, attempt to do evil, but will only do good to those unbecoming men who not mindful of the good done to them, still do them more evil.

Digitized by Google

னால்—தவறு என்னும் பெயரின் மூன்றாம்வேற்றுமை. ஊக்கல் - விர்த்திசெய்தல். (கூ)

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை - நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்க டம்வாயான் மீட்டு.

(இ-ள்) நாய்—, கூர்த்து - கோபித்து, கௌவிக்கொளக்கண்டும்—(தம்மைக்) கவ்விக்கொள்வதைப் பார்த்தும், பேர்த்து தம் வாயால்—எதிராகி தமது வாயினால், நாய் கௌவினார் - அந்த நாயைக் கவ்வினவர்கள், ஈங்கு இல்லை - இவ்வுலகத்தி லில்லை; (ஆதலால்) கீழ்மக்கள் - அயோக்கியர், நீர்த்து அன்றி - குணமுடைய தல்லாமல், கீழாய சொல்லியக்கால் - ஈனமான பேச்சுகளைப் பேசினால், மேன்மக்கள் - யோக்கியர், மீட்டு - மறுபடியும், தம் வாயால்—, சொல்பவோ - (அப்பேச்சுகளைச்) சொல்வார்களோ, எ-று.

நாய் நம்மைக்கடித்தால் எதிரே நாமும் கடித்தல்போலக் கீழோர் வைதால் நாமும் அவரை வைதல் தகாது என்பது கருத்து.

வைதனுக்குக் காரணம் சினம். கௌவிக்கொள—இதனை வினைப் பெயர்போல் கொள்க. நீர்த்து — நீரையுடையது, நீர் - சற்குணம். கீழாய—பலவின்பெயர். சொல்ப—பலர்பால் வினைமுற்று; ப - விகுதி. ஓ—எதிர்மறை. (க0)

---

## அ-வது அதிகாரம்.— CHAPTER VIII.

### பொறையுடைமை.— Patience.

அதாவது எந்தக்காரணங்களாலாயினும் தம்மோடு கலந்தவர்செய்த பிழையைப் பொறுத்தல். இதுவும் சினமின்மையொடு சேர்ந்ததனாலும் அது சாதாரணமாக அயலார் விஷயமாகவும் இது கலந்தார் விஷயத்தில் விசேஷமாகவும் கூறப்பட்டன என்றறிக.

கோதை யருவிக் குளிர்வரை நன்னாட
பேதையோ டியாது முரையற்க - பேதை

---

10. There are none here who though they see a dog snap angrily at them, will in return snap at the dog with their mouth. So when the low mischievously utter base things, will the noble repeat such words in return?

1. O lord of the good country abounding in cool hills festooned with springs! Speak not at all with a fool, for if you

Digitized by Google

உரைப்பிற் சிதைந்துரைக்கு மொல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

(இ-ள்.) கோதை அருவி - மாலைபோன்ற அருவிகளாலே, குளிர் வரை - குளிர்ந்த மலைகளையுடைய, நல் நாட - நல்லநாட்டையுடைய அரசனே !, பேதையோடு யாதும் உரையற்க - புத்தியீனனோடு எதையும் சொல்லாதிருக்கக்கடவாய் ; பேதை - பேதையானவன், உரைப்பின் - சொன்னால், சிதைந்து உரைக்கும் - மாறுபட்டுச்சொல்வான், (ஆதலின்) ஒல்லும் வகையான் - கூடுமான விதத்திலே, வழுக்கி கழிதலே - தப்பித்து நீங்குதலே, நன்று - நல்லது, எ-று.

அரசனே உன்னிடத்துச் சேர்ந்திருக்கிற வேவலரில் புத்தியீனனாயிருப்பானொருவனோடு ஒரு சங்கதியும் சொல்லாதே, சொன்னால் அவன் அதைச் சொல்லவேண்டுமிடத்துச் சரியாய்ச் சொல்லாமல் மாறுதலாய்ச் சொல்வான், அது உனக்குக் கோபகாரணமாம். அப்படி கோபம்வந்தால் அதைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். இதைக்காட்டிலும் அந்தச்செய்தியை அவனிடம் சொல்லாமல் தப்பி நீங்குவதே நல்லதென்பது கருத்து.

பேதையோடியாதும்—"யவ்வரினிய்யாம்" என்கிறவிதியால் ஓடு ஓடி ஆயிற்று; இது குற்றியலிகரம். உரையற்க—எதிர்மறைவியங்கோள், உரை - பகுதி. அல் - எதிர்மறை விகுதி, க - விகுதி. உரைப்பின்—பகரம் - இடைநிலை ; ககரமும் வரும். அப்போது உரைக்கின் என்றாகும். கழிதலே—ஏகாரம் - தேற்றம். நன்று—குறிப்பு முற்று. ()

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்த றகுதிமற் - றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும்.

(இ - ள்) நேர் அல்லார் - செவ்வையாகாதவர், நீர் அல்ல - குணவீனமானசொற்களை, சொல்லியக்கால்—, அது தாரித்து இருத்தல் - அதைப் பொறுத்திருப்பது, தகுதி - யோக்கியமாம் ; மற்று - அதற்கு வேறாகிய பொறாமையை, பொங்கு நீர் ஞாலம் - மேலோங்குகிற சமுத்திரஞ் சூழ்ந்த பூமி, [பூமியிலுள்ளோர்], புகழ்மை ஆ கொள்ளாது -

---

do, he will only mistate (what you have spoken to him.) It is therefore good that you avoid him as much as possible.

2. When inferiors speak improper words, it is good to bear them patiently. The earth surrounded by the swelling waves will not regard impatient behaviour as praiseworthy but only as baseness.

Digitized by Google

புகழத்தக்கதாக் கொள்ளாமல், சமழ்மை ஆ கொண்டுவிடும் - அவமதிக் கத்தக்கதாகக் கொள்வார்கள், எ-று.

அரசனே காரியங்களை நேராகக் கண்டறியமாட்டாத இயல்புடையோர் குணவீனமாகப் பேசினுல் அதற்குக் கோபியாமல் பொறுக்க வேண்டும், அதுதான் உலகத்தார் புகழத்தக்கது, அப்படி பொறுக்காமற்போனுல் அது நிந்தனையாம் என்பது கருத்து.

நேர்—இது பகுதியே பெயரானது. அல்ல — பலவின் பெயர். முதலிலிருக்கும் மற்று - அசை, பிந்திய மற்று பெயராக்கொள்ளத்தக்கது. ஓரும் - அசை, [இடை - சூ - உக.] புகழ்மை சமழ்மை இவைகளில் மை - தன்மையைக்குறிக்கும் விகுதி. ஞாலம் — இடவாகு பெயர். (உ)

காதலார் சொல்லுங் கடுஞ்சொல் லுவந்துரைக்கும்
ஏதிலா ரின்சொலிற் றீதாமோ - போதெலாம்
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின்.

(இ-ள்) போது எல்லாம் - பூக்களிலெல்லாம், மாதர் வண்டு - அழகான வண்டுகள், ஆர்க்கும் - ஒலிக்கின்ற, மலி கடல் தண் சேர்ப்ப - நிறைந்தகடலினது குளிர்ச்சியான கரையையுடைய அரசனே!, ஆவது அறிவார் பெறின் - தமக்கு நன்மையாவதை அறிந்திருப்பவரைப் பெற்றால், காதலார் சொல்லும் கடு சொல் - தன்னிடத்து அன்புள்ளவர் சொல்லுகிற கடுமையான சொல்லானது, உவந்து உரைக்கும் - சந்தோஷப்பட்டுச் சொல்லுகிற, ஏதிலார் இன் சொலின் - அயலாருடைய இனிமையான சொல்லேக்காட்டிலும், தீது ஆமோ - தீமையைத் தருவதாகுமோ, எ-று.

தமக்கு நன்மைதருவது இது தீமைதருவது இது என்று அறிந்திருக்கிற விவேகிகளுக்கு அன்புள்ளவர்கள் கடிந்து சொல்லுகிற உறுதிச்சொல் எதிரிகள் சிரித்துக்கொண்டு பிரியமாய்ச் சொல்லுகிற சொல்லேவிடத் தீதாகாது என்றால் "அழஅழச்சொல்லுவார் தமர் சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்" என்கிற பழமொழிப்படி தற்காலத்தில் பிரியமாகாமல் வெறுக்கத்தக்கதாகச் சொன்னுலும் பிற்காலத்தில் நன்மையைத்தரு மாதலால் நண்பர் பேச்சையே யோசித்து

---

3. O lord of the cool shore of the mighty ocean where the beautiful bees hum over all the flowers! If there are men who are able to know what is good to them, will the hard words (of reproof) uttered by friends be more injurious to them than the pleasant flattering expressions of strangers?

Digitized by Google

எடுத்துக்கொண்டு பொறுக்கவேண்டுமல்லாமல், பிறர் தற்காலத்துக்கு இனிப்பாகச்சொல்லும் பேச்சை எடுத்துக்கொள்ளலாகாது என்பது கருத்து. குறள்—"நகுதற்பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற்பொருட்டு."

பெறின் என்பதனால் அது அருமை என அறிக. ஏதும் இலார்—தமக்கு நன்மை செய்யும்படியான யாதொரு சம்பந்தமும் இல்லாதவர் ஏதிலார். இன்சொல் — இனிமையில் மையோடு இகரமும் கெட்டது. சொலின்—ஐந்தனுருபு எல்லையில் வந்தது. போதெலா மாதர்வண் டார்க்கும் என்பது கடற்கரையைச் சிறப்பிக்கின்றது. அறிவார்ப்பெறின்—உருபு - கஅ - வது சூத்திர விதியால் பகரம் மிகுந்தது.

அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்
இன்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்த லரிது.

(இ - ள்.) அறிவது அறிந்து - அறியவேண்டிய நன்மைதீமைகளை அறிந்து, அடங்கி - கோபதாபங்களில்லாமல் சாந்தமாகி, அஞ்சுவது அஞ்சி - அஞ்சத்தக்க பழி பாவங்களுக்கு அஞ்சி, உறுவது - (தமக்கு) நேர்ந்த காரியத்தை, உலகு உவப்ப செய்து - உலகம் சந்தோஷிக்கும்படி செய்து, பெறுவதனால் - (நியாயத்தின்படி தாம்) பெற்ற பொருளால், இன்பு உற்று - சந்தோஷத்தை அடைந்து, வாழும் இயல்பு உடையார் - வாழும்படியான சுபாவத்தை யுடையவர்கள், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், துன்பு உற்று - துன்பத்தை அடைந்து, வாழ்தல் அரிது - வாழுவதில்லை, எ-று.

இதனால் நமக்கு நன்மையாகும் இதனால் தீமையாகுமென்று தெரிந்துகொண்டு கோபமில்லாமல் பொறுத்துப் பழிபாவங்களுக்கு அஞ்சித் தாம் செய்யவேண்டியதை உலகுக்கு இன்பமாச் செய்து பிறரிடத்துப் பொறாமையில்லாமல் தமக்குக் கிடைத்ததைக் கொண்டு சந்தோஷப் படுகிறவர்களுக்கு எப்போதும் துன்பமில்லை யென்பது கருத்து.

அறிவது முதலானவை செய்ததுபோல்வந்த செயப்பாட்டு வினையாலணையும்பெயர்கள். அரிது—இங்கு இன்மையில் வந்தது. (௪)

---

4. Those will never experience the evils of life who, knowing what ought to be known, become placid and submissive, and fearing what ought to be feared, perform every duty so as to satisfy the world and live in the enjoyment of pleasure according to their own means.

Digitized by Google

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ரு வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொருனுயின்
தூற்ருதே தூர விடல்.

(இ-ள்.) இருவர் - இரண்டுபேர், வேற்றுமை இன்றி கலந்து - பேதமில்லாமற் சேர்ந்து, நட்டக்கால் - சிநேகித்தால், தேற்ரு ஒழுக்கம் - அறிவிக்கக்கூடாத நடக்கை, ஒருவன்கண் உண்டாயின் - ஒருவனிடம் உண்டாயிருந்தால், ஆற்றும் துணையும் - பொறுக்கக் கூடிய அளவும், பொறுக்க - பொறுக்கக்கடவன்; பொருனுயின் - பொறுக்கக்கூடாமற்போனல், தூற்ருதே - (பிறர் அறிய) வெளிப் படுத்தாமல், தூர விடல் - (அவன் சிநேகத்தை) தூரத்தில் விடக்கடவன், எ-று.

சிநேகித்தவனிடத்தில் அயோக்கியமான நடக்கை உண்டாயிருந்தால் கூடிய அளவு பொறுத்திருக்கவேண்டும்; கூடாமற்போனல் சிநேகத்தை விடலாமே யல்லாமல் அதைத் தூற்றலாகாது என்பது கருத்து.

நட்டக்கால்—நள் - பகுதி, கால் - விகுதி; ளகரம் டகரமானது சந்தி, மற்ருெரு டகரம் எழுத்துப்பேறு, அகரம் சாரியை, ககர மிகுதியும் சந்தி. தேற்றல் - தெளியச்செய்தல், அறிவித்தல். தூர விடல் - அந்தச்சிநேகம் தூர்ந்துபோம்படியாக விடல்; அதாவது அழிந்துபோம்படி எனவும் உரைக்கலாம். விடல் — வியங்கோள் வினைமுற்று. (ரு)

இன்ன செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானேவி னல்லது - துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது.

(இ-ள்.) கானக நாட - காடு மிகுந்த நாடுடையவனே!, இன்ன செயினும் - (நண்பர்) இனிமையாகாதவை செய்தாலும், இனிய ஒழிக என்று - (அந்த இன்னதவை) இனியவாக நீங்கட்டும் என்று நினைத்து,

5. When two persons unite as friends without variance, one should as far as possible patiently bear the misconduct of the other, if there should be any; but if it should prove unbearable, he should then withdraw his friendship without exposing the other.

6. O lord of the country abounding in forests! If a friend does an evil to another, it is well that the latter should regard it as good and blame his own stars rather than give up his intimate associates, for such separation is rare even among brutes.



Digitized by Google

தன்னையே தான் நோவின் அல்லது - தன்னையே தான் வெறுப்ப தல்லாமல், துன்னி கலந்தாரை - சேர்ந்து சிநேகித்தவரை, கைவிடு தல் - விட்டுவிடாதே; விள்ளல் - (சிநேகத்திற்) பிரிதல், விலங்கிற் கும் அரிது - மிருகங்களுக்கும் கூடாத காரியம், எ-று.

சிநேகிதர் தீங்கு செய்தால் அதற்குக் கோபியாமல் அத்தீங்கு கள் நமக்கு நல்லவையா ஒழியட்டுமென்று எண்ணி இப்படியாவதற் குக் காரணம் நம்முடைய பாவந்தான் என்று தன்னைத்தான் வெறுக்க வேண்டுமே யன்றிப் பொறுமல் சிநேகிதனைத் துறப்பது தகுதியன்று. இப்படிச் செய்வது மிருகங்களிலும் இல்லை என்பதாம்.

இனி + அவ் + ஒழிக என்பது தொகுத்தலாய் இனிய வொழிக என் றுயிற்று எனக்கொண்டு இனி அவ் இன்னுதவை ஒழியட்டு மென்று எனவு முரைக்கலாம். அவ் — பலவின்பால் சுட்டுப்பெயர். செயினும் என்கிற இழிவு சிறப்பும்மையால் அப்படி செய்தல் பெரும் பாலுமில்லை யென்றுகிறது. நோவின்—இதில் இன் சாரியை, வேற்று மையுருபு முதலியவின்றித் தனித்துப் பெயரோடு வந்ததெனக் கொள் ளவேண்டும்; செயினென் வாய்பாட்டு வினையெச்சவிகுதி யென்றுகி லும் ஐந்தனுருபென்றுகிலும் கொண்டால் பொருள் பொருந்தாமை அறிக. நோவு — தொழிற்பெயர்; நோவதல்லது என வருவதைக் காண்க. விலங்கிற்கும் — இழிவு சிறப்பும்மை. விலங்கு - குறுக்கு, மனிதனைப்போல் நேரே நிற்பதின்றிக் குறுக்காய் நின்று உணவு முத லாயவற்றைக் கொள்ளுதலாலே விலங்கு என்னப் பட்டது. இதனை வடநூலார் 'திர்யக்' என்பர். (௬)

பெரியார் பெருநட்புக் கோடறுஞ் செய்த
அரிய பொறுப்பவென் றன்றே - அரியரோ
ஒல்லெ னருவி யுயர்வரை நன்னுட
நல்லசெய் வார்க்குத் தமர்.

(இ - ள்.) ஒல் என் அருவி - ஒல் என ஒலிக்கின்ற அருவிகளை யுடைய, உயர் வரை நல் நாட - உயர்வாகிய மலைகளையுடைய நல்ல நாட்டின் அரசனே!, பெரியார் பெரு நட்பு கோடல் - பெரியோர்க ளுடைய மேன்மையான சிநேகத்தைக் கொள்ளுதல், தாம் செய்த அரிய பொறுப்ப என்று அன்றே - தாங்கள் செய்த பொறுத்தற்குக்

---

7. O king of the good country containing high mountains abounding in hollow-sounding streams! Is not intimate friendship with the great contracted with a hope that they would forgive the grievous faults done by their friends? Will friends be wanting to those who (always) do what is good?

Digitized by Google

கூடாத குற்றங்களைப் பொறுத்துக் கொள்வார்கள் என்றல்லவா, நல்ல செய்வார்க்கு - நன்மைகளைச் செய்பவர்க்கு, தமர் - நேசராகிற வர்கள், அரியரோ - (கிடைக்க) அருமையானவர்களோ, எ-று.

தம்மைச் சேர்ந்தவர்கள் அரிய குற்றங்களைச் செய்தாலும் அவை பொறுப்பது பெரியோரியல்பு. நன்மை செய்பவர்களுக்கு எவரும் நட்பாவா ராதலால் அது விசேஷமல்ல வென்றபடி.

கோடல் — தொழிற்பெயர்; கொள், தல் - பகுதி விகுதிகள். பகுதி முதனீட்சி - விகாரம்; இதை எழுவாயாக வைத்து ஆகின்ற தெனப் பயனிலை வருவித்துக்கொள்க. பெரியார் பொறுப்ப என்பது இவ்வாக்கியத்தின் உள் வாக்கியம். பொறுப்ப — பலர்பால் வினை முற்று. அன்றே என்பது பிரசித்தத்தைக் காட்டுகின்றது. தமர் — தாம் என்னுங் கிளைப்பெயரடியாக வந்த பெயர். அரியரோ — ஓகா ரம் - எதிர்மறை. நல்ல — பலவின்பெயர். (எ)

வற்றிமற் றூற்றப் பசிப்பினும் பண்பிலார்க்
கற்ற மறிய வுரையற்க - அற்றம்
மறைக்குந் துணையார்க் குரைப்பவே தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

(இ-ள்.) வற்றி - (உடம்பில் மாமிச முதலிய)வற்றி, ஆற்ற பசிப் பினும் - மிகவும் பசித்தாலும், அற்றம் - (தமது) வறுமையை, பண்பு இலார்க்கு - சற்குண மில்லாதவருக்கு, அறிய உரையற்க - அறியும் படி சொல்லாதிருக்கக் கடவர்; தம்மை துறக்கும் துணிவு இலா தார் - விசேஷ சங்கடங்களில் தம்மை மாய்த்துவிடும்படியான மன வுறுதி யில்லாதவர், அற்றம் மறைக்கும் துணையார்க்கு - தமது வறு மையை நீக்க வல்ல சிநேகிதருக்கு, உரைப்ப - சொல்வார்கள், எ-று.

மிக்க வறுமை நேர்ந்தால் உயிர் போனாலும் போகட்டுமென்று பொறுத்துக்கொண் டிருப்பதே பொறுமை; அப்படியன்றிப் பிற ரோடு சொல்லத் துணிந்தாலும் அதை வெளியிடாமல் நீக்க வல்லவ ருக்குச் சொல்லலாமே யல்லாமல் அயோக்கியரிடத்துச் சொல்ல லாகா தென்பதாம்.

இப்பாடல் வேறு அதிகாரத்தில் சேர்க்கத் தக்கது ஆனாலும் பொறுக்கிறதென்கிற வொரு சம்பந்தத்தால் இங்கே சேர்க்கப் பட் டது.

---

8. Though withered and famished with hunger, bear it patiently and do not declare your misery to the unworthy. Only those who have not the fortitude to give up the ghost when great misfortunes oppress them, will declare it to such as would be able to relieve them.

Digitized by Google

வாய் திறந்துகொண்டு தூங்கினான் என்பதுபோல் பசித்து வற்றினாலும் என மாற்றிக் கொள்க. அற்றம்—அறு - பகுதி, அம் - கர்த்தாப்பொருள் விகுதி; செல்வம் அற்றிருப்பது என்பதுபொருள். ஏ—அசை. (௮)

இன்பம் பயந்தாங் கிழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்க மிருந்தைக்க - இன்பம்
ஒழியாமை கண்டாலு மோங்கருவி நாட
பழியாகா வாறே தலை.

(இ - ள்.) ஓங்கு அருவி நாட - மேலெழும்புகிற அருவிகளுள்ள நாடுடையவனே! இன்பம் பயந்து - இன்பத்தைத் தந்து, ஆங்கு இழிவு தலைவரினும் - அதிலே தாழ்மை நேர்ந்தாலும், இன்பத்தின் பக்கம் - இன்பம் வருகிற பக்ஷத்திலேயே, இருந்தைக்க - இருக்கின்ற உனக்கு, இன்பம் ஒழியாமை கண்டாலும் - சுகம் நீங்காதிருப்பதைப் பார்த்தாலும், பழி ஆகா ஆறே - பழிப்பு உண்டாகாத வழியே, தலை - முக்கியம், எ-று.

ஒருகாரியஞ் செய்தால் அதில் இன்ப முண்டாவதோடு பழியும் தாழ்மையு முண்டானால் அதை விடவேண்டும். தாழ்மையைப் பொறுத்து இன்பம் வருவதையே நோக்கி நிற்கிறவனுக்கு ஒழியாத இன்பங் கிடைத்தாலும் அது வரும்வழி பழிப்பில்லாததா யிருக்கவேண்டும் என்றபடி.

இருந்தைக்க—இருந்தை - முன்னிலை வினையாலணையும் பெயர், கு - நான்கனுருபு, அ - சாரியை பெற்றது. [பெயர் - சூ - சுக.]

இப்பாட்டும் பழிப்பைப் பொறுத்தல் தகுதியல்ல வென்பது மாத்திரத்தால் இங்கு சேர்க்கப்பட்டதென அறிக. ஏகாரம்—தேற்றம். கண்டாலும்—உம்மை உயர்வு சிறப்பு. (௯)

தான்கெடினுந் தக்கார்கே டெண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க - வான்கவிந்த

---

9. O lord of the country abounding in rising streams! If thou wouldst desire pleasure alone though it is accompanied by its attendant shame, it is preferable, even should such pleasure be continuous, to enjoy it in a way that no disgrace may befall thee i. e. only when it does not emanate from a disgraceful source.

10. Although he himself be ruined, let him not think of injuring the worthy; let him not eat with those with whom he should not eat, even though his flesh would waste away;

Digitized by Google

வையக மெல்லாம் பெறினு முரையற்க
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(இ - ள்.) தான் கெடினும் - தான் கெட்டாலும், தக்கார் கேடு எண்ணற்க - யோக்கியருக்குக் கெடுதி செய்ய நினையாதிருக்கக் கடவன்; தன் உடம்பின் ஊன் கெடினும் - தன்னுடம்பில் மாமிசம்வற்றி யழியும்படி யானாலும், உண்ணார் கைத்து - உண்ணத்தகாதவர் கையினால் வரும் உணவை, உண்ணற்க - உண்ணாதிருக்கக் கடவன்; வான் கவிந்த - ஆகாயம் மூடிய, வையகமெல்லாம் பெறினும் - உலகத்தையெல்லாம் பெறுவதா யிருந்தாலும், பொய்யோடு இடைமிடைந்த சொல் - இடையிலே அசத்தியத்தோடு சேர்ந்த சொல்லை, உரையற்க - சொல்லாதிருக்கக் கடவன், எ-று.

பொறுமையாலே தன்னைப்போல் பிறரும் கெட்டும் என்று யோக்கியருக்கு கேடு நினையாதிருக்க வேண்டும்; பசி பொறுமையாலே உண்ணாத விடத்தில் உண்ண வேண்டாம்; உலகமெல்லாம் கிடைப்பதா யிருந்தாலும் பொய்சொல்லாமல் தன் வளப்பமின்மையைப் பொறுக்க வேண்டும் என்பது கருத்து.

முந்திய உம்மை இரண்டும் இழிவு சிறப்பு, பிந்தியது உயர்வு சிறப்பு. கைத்து—கையினால் வருவது; அவரிடுஞ் சோறு; பொருள் எனவு முரைக்கலாம்; கை - பகுதி, து - விகுதி. பொய்யோடிடைமிடைந்த சொல் என்றதனாலே சில உண்மையானாலும் பொய் சிறிது கலந்ததும் சொல்லலாகா தென்பதாம். (௧0)

## ௯-வது. அதிகாரம்.—Chapter IX.

### பிறர்மனைநயவாமை.—Not coveting the wife of another.

அதாவது பிறருடைய மனையாளை விரும்பாதிருத்தல்.

அச்சம் பெரிதா லதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால் - நிச்சலும்
கும்பிக்கே கூர்த்த வினையாற் பிறன்றாரம்
நம்பற்க நாணுடை யார்.

---

and let him not speak words intermingled with falsehood although he may get as his reward the whole world canopied by the heavens.

1. Let not the modest man covet another's wife, since the fear attending that sin is great, the pleasure arising from it is of short duration, and if you reflect well, it renders the culprit liable to the punishment of death by the king and it is a deed that daily leads men to hell.

Digitized by Google

(இ - ள்.) அச்சம் பெரிது - பயம் அதிகமானது; அதற்கு இன்பம் - அக்காரியத்தில் இன்பமானது, சிறு அளவு - அற்ப பிரமாணமுள்ளது; நிச்சம் - தினமும், நினையுங்கால் - யோசித்தால், கோ - அரசனால், கொலை - கொல்லுதல் (நேரும்); நிச்சலும் - நித்தமும், கும்பிக்கே - நரகத்திற்கே, கூர்த்த வினை - மிகுந்த செய்கை; (ஆதலால்) நாண் உடையார் - வெட்கமுள்ளவர்கள், பிறன் தாரம் - பிறனுடைய மனையாளை, நம்பற்க - விரும்பாதிருக்கக்கடவர், எ-று.

பிறர் தாரத்தினிடத்தில் போக எத்தனப்பட்டால் அவளுக்குடையவர் அடிப்பது முதலான செய்கைகளுக்கு அஞ்சவேண்டுவதும், விஞ்சினால் அரசன் கொலைசெய்வானென்கிற பயமும், இத்தனைதான் பொறுத்தாலும் அதில் வரும் சுகமோ அற்பம், பின்பு நரகத்திற்குக் காரணம். இவ்வளவு சங்கடங்களிருப்பதனால் பிறர்தாரம் விரும்புதல் யோக்கியமன்று என்றதாம்.

அச்சம் — அஞ்சு - பகுதி, அம் - தொழிற்பெயர் விகுதி, வலித்தல் - விகாரம். அதற்கு—கு - இடப்பொருளில் வந்தது, வேற்றுமை மயக்கம். நிச்சம் நிச்சல் இரண்டும் 'நித்யம்' என்கிற வடமொழித் திரிபு. கொலை — தொழிற்பெயர்; கொல் ஐ - பகுதி விகுதிகள். கும்பிக்கு—கு - பொருட்டுப் பொருளில் வந்தது. [பெயர் - சூ-௪௯.] ஆல்—நான்கும் அசை. தாரம்—வடமொழி. நாணுடையார் என்பதனாலே அக்காரியத்தில் எல்லாக் குற்றங்களுக்குமுன் நாணமுண்டாவது பெரிதென்றதாயிற்று. (௧)

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா - பிறன்றாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்.

(இ-ள்.) அறம் புகழ் கேண்மை பெருமை இந்நான்கும் - தருமம் கீர்த்தி சிநேகம் மேம்பாடு ஆகிய இந்த நான்கு பொருளும், பிறன் தாரம் நச்சுவார் - பிறன்மனையாளை விரும்புகிறவர்களை, சேரா - சேரமாட்டா; பகை பழி பாவமென்று - பகையும் நிந்தையும் பாவமும், அச்சத்தோடு இ நால் பொருளும் - அச்சமும் ஆகிய இந்த நான்கு பொருளும், பிறன் தாரம் நச்சுவார் - பிறன் தாரத்தை விரும்புகிறவர்களை, சேரும்—, எ-று.

கருத்துவெளிப்படை.

---

2. To those who covet their neighbours' wives will accrue these four things, viz., hatred, reproach, sin and fear; and not these four, viz., virtue, praise, friendship and dignity.

Digitized by Google

அப்பெண்ணைச் சேர்ந்த பலரும் விரோதிகளாவார்க ளாதலால் கேண்மை யில்லை; ஈனகாரியமாதலால் பெருமையும் கீர்த்தியு மில்லை.

அறமுதலிய நான்கும் செவ்வெண் ஆதலின், [இடை-கூ-கூ]ன் படி தொகைபெற்றன. பகைமுதலிய நான்கு மிப்படியே. என்று என்கிற எண்ணிடைச்சொல், [இடை-கூ-க0] ன்படி பிரிந்து பகை முதலியவற்றோடும் சேர்ந்தன. "இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்" என்கிற [உரு-கூ-கசு] விதியால் 'நச்சுவார்ச்சேரா' என வலி மிகுந்தது. நான்குபோய் நான்கு வரும் என்று சொன்னதினால் இது 'பரிவர்த்தனை' என்னும் அலங்காரம்; "பொருள் பரிமாறுதல் பரிவர்த்தனையே". தண்டியலங்காரம். (உ)

புக்கவிடத் தச்சம் போதரும் போதச்சம்
துய்க்கு மிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலு மச்சந் தருமா லெவன்கொலோ
உட்கான் பிறனில் புகல்.

(இ-ள்.) புக்க இடத்து அச்சம் - (பிறன் தாரத்தினிடம்) போகும் பொழுது பயமுண்டாகின்றது; போதரும் போது அச்சம் - திரும்பி வரும்போதும் பயம்; துய்க்கும் இடத்து அச்சம் - அனுபவிக்கும்போதும் பயம்; தோன்றாமல் காப்பு அச்சம் - (பிறர்) அறியாமல் காப்பதில் பயம்; எக்காலும் அச்சம் தருமால் - எப்போதும் பயத்தைத் தருவதாகையால், பிறன் இல் புகல் - பிறனில்லாளிடம் போவதை, எவன் உட்கான் - எவன் பயப்படமாட்டான், எ-று. கொல்-ஓ-இரண்டும் அசை.

கருத்து வெளிப்படையாகின்றது.

புக்க — புகு-பகுதி, அ-விகுதி, ககர மிகுதி இறந்தகாலங் காட்டும், பெயரெச்சம். உட்கான்—உட்கு-பகுதி. அச்சப்பொருளுள்ளசொல் வந்தவிடத்து அஞ்சத்தக்கதின்மேல் இரண்டாம் வேற்றுமை வருவது தமிழ் வழக்கு. நான்காம் வேற்றுமையும் வரும். (ங)

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையும்
மாணின்மை செய்யுங்கா லச்சமாம் - நீணிரயத்

---

3. Who will not fear coveting a neighbour's wife, since it is ever productive of fear; fear at the time of going to her, fear on returning, fear when enjoying the pleasure, and fear when exerting to keep the deed a secret.

4. O wicked man! Say what is the extent of your pleasure, since if you are discovered your family will be dishonored, if you are caught your leg will be severed, if you

Digitized by Google

துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
இன்ப மெனக்கெனைத்தாற் கூறு.

(இ - ள்.) காணின் குடி பழி ஆம் - (பிறர்) கண்டால் தன்குலத்துக்கு நிந்தனையுண்டாம்; கை உறில் - அகப்பட்டால், கால் குறையும் - (தண்டனையால்) கால் குறைவுபடும்; மாண் இன்மை செய்யுங்கால் - அந்தத் துஷ்டகாரியஞ் செய்யும்போது, அச்சம் ஆம் - பயமுண்டாம்; நீள் நிரயத் துன்பம் பயக்கும் - (அந்தக் கெட்டகாரியம்) நெடுங்கால மனுபவிக்கும்படியான நரகவேதனையை உண்டாக்கும்; (ஆகவே) துச்சாரி - விபசாரமாகிய துஷ்டகாரியஞ் செய்பவனே!, நீ கண்ட இன்பம் எனைத்து - நீ அதில் கண்ட சுகம் எவ்வளவு, எனக்கு கூறு - எனக்குச் சொல், எ-று.

கருத்து வெளிப்படை. கையுறில் கால்குறையும் என்றால் அகப்பட்டபோது அரசனால் காலை வெட்டுதல் நேரிடும் என்பதாம். துச்சாரி—வடமொழி திரிந்தது; துஷ்டநடக்கை செய்பவன் என்பது பொருள். ஆல்—இரண்டும் அசை, முதலிலிருப்பதை ஏதுப்பொருள் குறிப்பதாகவுங் கூறலாம். (௪)

செம்மையொன் றின்றிச் சிறியா ரினத்தராய்க்
கொம்மை வரிமுலையா டோண்மரீஇ - உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை
அலியாகி யாடியுண் பார்.

(இ - ள்.) செம்மை ஒன்று இன்றி - ஒரு நன்னடக்கையு மில்லாமல், சிறியார் இனத்தர் ஆய் - அயோக்கியரோடு சேர்ந்தவராய், கொம்மை வரி முலையாள் - திரட்சியான ரேகைகள் எழுதப்பெற்ற முலையையுடையாளுடைய, தோள் மரீஇ - தோளைச் சேரவிரும்பி, உம்மை - முற்பிறப்பில், வலியால் - வலிமையால், பிறர் மனைமேல் சென்றாரே - பிறர் மனையாளிடஞ் சென்றவர்களே, இம்மை அலி ஆகி - இப்பிறப்பில் நபும்சகராய், ஆடி உண்பார் - கூத்தாடி (பிச்சைவாங்கி) உண்கிறார்கள், எ-று.

---

are committing the deed you are in dread and (after the committal of it) you are subject to an ever enduring anguish in hell.

5. Those who are born hermaphrodites in this birth and lead a life of actors in plays, are those who in a former birth, devoid of everything that was good, were companions of the vile and loving to enjoy damsels possessed of round beautiful breasts, forcibly violated the chastity of the wives of others.

Digitized by Google

முற்பிறப்பில் பிறர்மனையாளிடம் சென்றவர்தாம் இப்பிறப்பில் நபும்சகராகிக் கூத்தாடிப்பிழைக்கிறவர் என்பதாம். ஆதலால், பிறர் மனை நயக்கவேண்டாம் என்பது கருத்து.

செம்மை ஒன்று இன்றி என்றால் கிஞ்சித்தும் பழிபாவங்களுக்கு அஞ்சி நடவாமல் என்றபடி. அவளைச் சுவாதீனஞ் செய்யப் பலவித சாகசங்களைச்செய்து என்பதை வலியால் என்றார். உம்மை — உக ரச்சுட்டின்மேல் காலங்குறிக்க மை விகுதி வந்தது. இம்மையு மப் படியே. (ரு)

பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க - மெல்லியல்
காதன் மனையாளு மில்லாளா வென்னொருவன்
ஏதின் மனையாளை நோக்கு.

(இ-ள்.) நாள் கேட்டு - (தக்க) நாளை விசாரித்து, பல்லார் அறிய- பலரும் அறியும்படி, பறை அறைந்து - வாத்தியம் கொட்டி, கல்யா ணம் செய்து—, கடி புக்க - காவலைப்பொருந்தின, மெல் இயல் கா தல் மனையாளும் - மென்மையான தன்மையுள்ள (தன்னிடம்) ஆசையுள்ள பெண்டாட்டியும், இல்லாள் ஆ - வீட்டிலிருப்பவளா யிருக்க, ஒருவன்—, ஏதில் மனையாளை - அயலான் மனைவியை, நோக்கு- பார்ப்பது, என் - என்னகாரணமுள்ளது, எ-று.

தான் கிரமம்படி கலியாணஞ்செய்த மனையாட்டி வீட்டிலிருக்க அயல்மனையாளை விரும்புவது மிகவும் அயோக்கியம் என்றபடி.

ஆனால் கலியாணஞ்செய்தவள் வீட்டி லிராவிடின் அயலான் மனையாளிடஞ் செல்லலாமோ என்று ஆக்ஷேபிக்க வேண்டாம். மனை யாட்டி யிருக்க அயலில்செல்வது மிகவும் அயுக்தமென்றும் மகாபாத கமென்றும் அறிவித்தற்கு இப்படி சொல்லியதெனக் கொள்க.

"வம்புலாங்கூந்தன் மனைவியைத்துறந்து பிறன்பொரு டாரமே யெண்ணி, நம்பினாரிறந்தா னமன்றமர்பற்றி யெற்றிவைத் தெரியெ ழுகின்ற, செம்பினாலியன்ற பாவையைப்பாவி தழுவென மொழிவ தற்கஞ்சி, நம்பனேவந்துன் னடியிணைபணிந்தே னைமிசாரணியத்து ளெந்தாய்" என்று ஆழ்வார் அருளிச்செய்ததும் காண்க.

மெல்லியலென்றும் காதலென்றுஞ் சொன்னது, பெண்ணுக்கு இருக்கவேண்டிய குணமுள்ளவள் என்பதை அறிவிக்க. கடி — உரி

---

6. Why should one look upon his neighbour's wife with a covetous eye, when he himself has, after inquiring about a propitious day and having the drum beaten that all may know, married a tender and loving wife, who lives with him?

Digitized by Google

யடியாகப்பிறந்த பெயரெனக் கொள்க, விகுதி குன்றியது. என் — எவன் என்கிற குறிப்புமுற்று இடைக்குறையா வந்தது. நோக்கு - இதை முதனிலைத் தொழிற்பெய ரென்றாகிலும் விகுதிகெட்ட தொழிற்பெயர் என்றாகிலும் வைத்துக் கொள்க. (௬)

அம்ப லயலெடுப்ப வஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று - நம்பும்
நிலைமையி னெஞ்சத்தான் றுப்புரவு பாம்பின்
தலைநக்கி யன்ன துடைத்து.

(இ - ள்.) அயல் அம்பல் எடுப்ப - அயலார் நிந்தனை செய்ய, தமர் அஞ்சி பரீஇ - உறவினர் பயந்து விசனப்பட, மைந்து உற்று - மயக்கங்கொண்டு, வம்பலன் பெண் மரீஇ - அயலான் பெண்டாட்டியைச்சேர்ந்து, நம்பும் நிலைமையில் நெஞ்சத்தான் - (பிறர்) நம்பத்தக்க நிலைமையில்லாத இதயமுடையவனது, துப்புரவு - அனுபவமானது, பாம்பின் தலை நக்கி அன்னது - பாம்பினுடைய தலையை நக்கினாற்போன்ற தன்மையை, உடைத்து - உடையது, எ-று.

அயலான் மனையாளிடத்துச் செல்லும்போது பலர் தூஷித்தலும் பயமும் இவனாலே நமக்கெல்லாம் இழிவுவருகின்றதே யென்று பந்துக்கள் விசனப்படுவதும் நேரும்; இதனையும் லக்ஷியஞ்செய்யாமல் அனுபவித்தல் எப்படிப்பட்டதென்றால், பளபளப்பாயிருக்கிறதென்று பாம்பின் தலையை நக்கினால் விஷம்பட்டு மரணமடைவது போலக் கேட்டை அடையும்படி யிருக்கும் என்பது கருத்து.

அயல்—ஆகுபெயர். பரீஇ—பரிந்து என்பது விகுதி உகரம் இகரமாகி அளபெடுத்துக் காலங்காட்டியது; மரீஇ என்பது மிப்படியே. இவை சொல்லிசையளபெடை. பரீஇ என்பது செயவெ னெச்சத் திரிபு; "சொற்றிரியினும் பொருடிரியாவினைக்குறை" இது விதி. வம்பலன்—வம்பல் - திசை, அதாவது வேறிடம், அதிலுள்ளவன் வம்பலன்; தன்னோடுசேராமல் வேறிடத்திருப்பவன் என்பது திரண்ட பொருள். நக்கியன்னது—நக்கினாற்போலுந்தன்மை. (௭)

பரவா வெளிப்படா பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோ யோஓ - கொடிதே

---

7. The enjoyment of that man who, led away by lust and distrusted by others, loves and embraces the wife of another, while his neighbours reproach him and his relations fear and grieve, is like the pleasure caused by licking the head of a (poisonous) serpent.

8. The love that arises in the wise is extremely bad, for it never increases, nor shows itself outside, nor extends itself

Digitized by Google

விரவாரு ணாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ளாறி விடும்.

(இ-ள்.) உரவோர்கண் காமநோய் - ஞானமுடையவரிடத்துள்ள காமவியாதியானது, ஒஒ கொடிது - மிகவும் கொடுமையானது; (ஏனெனில்) பரவா - வளராமலும், வெளிப்படா - வெளியாகாமலும், பல்லோர்கண் தங்கா - பலரிடத்துச்சென்று நிற்காமலும், விரவாருள் - வேறானவர்களிடத்து, நாணுப்படல் வெட்கப்படுவதை, அஞ்சி - பயப்பட்டு, யாதும் உரையாது - ஒன்றுஞ் சொல்லாமல், உள் ஆறிவிடும் - உள்ளேயே தணிந்துவிடும், எ-று.

ஞானவான்களுக்கும் கருமவசத்தாற் காமமுண்டாகலாம்; ஆனால் அது விர்த்தியாகாமலும் வெளிப்படாமலும் பலவிஷயங்களிற் செல்லாமலும் உள்ளேயே ஆறிப்போம்; ஏனெனில் பலருக்கும் நாண வேண்டியிருப்பதால். ஆனபடியால் அது மிகவும் கொடியது என்றதாம். இங்கே கொடிதென்றது காமத்தின் தீமையைநோக்கி அதைச் சகிக்கிறார்களே என்று வியப்பினால் வந்ததாம்.

பரவா முதலிய வினையெச்சங்கள் வினைச்செவ்வெண் [இடை - ரு - கக.] ஓ—சிறப்பில் வந்தது; இது விசேஷ மிகுதி என்பதற்கு அடுக்கிவந்தது. ஏ - அசை, தேற்றமுமாம். விரவார் — விரவுதல் - கலத்தல். நாணு—உகரம் - சாரியை.

இப்பாட்டை இவ்வதிகாரத்திற் சொன்னது, காமமிகுதியிலும் உரவோர் பிறர்மனை நயவார் என்பதற்கு. (அ)

அம்பு மழலு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும்.

(இ - ள்.) அம்பும் அழலும் அவிர் கதிர் ஞாயிறும் - பாணமும் நெருப்பும் விரிந்த கிரணங்களை யுடைய சூரியனும், வெம்பி சுடினும் - தீக்ஷணியமாகி சுட்டாலும், புறம் சுடும் - புறத்திலே சுடும்; காமம் - காமமானது, வெம்பி - உக்கிரமாகி, மனத்தைக் கவற்றி - இதயத்

---

to others, but subsides within them lest they should be exposed by their foes.

9. The arrow, fire, and the sun with shining beams, though they turn hot and burn, only scorch on the outside; but love, since it grows hot, grieves the heart, and burns within, should be feared much more than those three things.

Digitized by Google

ROJA. MUTHIAH
ARTIST

தைக் கவலைப்படுத்தி, சுடுதலால் - சுடுவதினால், அவற்றினும் - அம்பு முதலியவற்றைக் காட்டிலும், அஞ்சப்படும் - அஞ்சத்தக்கது, எ-று.

அம்பு முதலானவை எவ்வளவு வெம்பினாலும் புறமேயன்றி அகஞ்சுடா; காமமோ உள்ளத்தை ஒன்றும் தோன்றாமலிருக்கும்படி கலக்கிச் சுடுமாதலால் அம்புமுதலியவற்றினும் கொடிதென்று பயப்பட வேண்டியதாம்.

சுடினும் — உம் - சிறப்பு, கவற்றி — பிறவினை வினையெச்சம், கவற்று - பகுதி. அஞ்சப்படும் — இது செயப்பாட்டு வினை; காமம் என்றதை இரண்டாம் வேற்றுமையாகக் கொண்டால் இது ஒருவகை வியங்கோள் வினைமுற்றும்; காமத்தை அஞ்சவேண்டும் என்று பொருளாகும். இவ் வினைமுற்றை நன்னூலுரைகாரர் தேற்றப்பொருள் பட்டு வந்த தொழிற்பெயரென்பர்; "வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன" என்கிற சூத்திர வுரையைக்காண்க. (௯)

ஊருளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகும் - நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்.

(இ - ள்.) ஊருள் எழுந்த - ஊரில் (பற்றிக்கொண்டு) ஓங்கிய, உரு கெழு செம் தீக்கு - உருவம் சிறந்த நல்ல நெருப்புக்கு, நீருள் குளித்தும் - தண்ணீருள் மூழ்கியாயினும், உயல் ஆகும் - தப்பலாம்; காமம்—, நீருள் குளிப்பினும் சுடுமே - நீரில் மூழ்கினாலும் சுடுமே, காமம்—, குன்று ஏறி ஒளிப்பினும் - மலைமேலேறி ஒளித்துக்கொண்டாலும், சுடும்—, எ-று.

ஊரிற்பற்றிச் செக்கச் செவேலென்று எழும்பிச் சொலிக்கிற நெருப்பு நீரில் முழுகியிருந்தாரை ஒன்றுஞ் செய்யாது; காமமோ குளித்திருந்தாலும் மலைமேலேறிப்போய் ஒளித்திருந்தாலும் சுடாமல் விடாதென்றபடி.

குளித்தும்—உம்மை விகற்பத்தோடுகூடிய சிறப்புப் பொருளில் வந்ததாக் கொள்க. உய்யல் என்பது தொகுத்தலால் உயல் என நின்றது. சுடுமே—ஏ நிச்சயத்தில் வந்தது. (க0)

---

10. A man may escape from the fearful red flames ravaging a village by plunging overhead in the water but lust will burn him even if he should plunge in the waters or hide himself on the mountain-top.

Digitized by Google

# க௦-வது அதிகாரம்.— Chapter X.

## ஈ கை.—Liberality.

அதாவது தரித்திரத்தினால் வருந்தித் தம்மிடம் வருகிறவருக்குச் சோறு முதலியவை கொடுத்தலாம்.

இல்லா விடத்து மியைந்த வளவினால்
உள்ள விடம்போற் பெரிதுவந்து - மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்
கடையாவா மாண்டைக் கதவு.

(இ - ள்.) இல்லாவிடத்தும் - (தமக்குச் செல்வம்) இல்லாமற் போன காலத்திலும், இயைந்த அளவினால் - தமக்கு இசைந்தமட்டிலே, உள்ள இடம்போல் - செல்வமிருக்குங் காலத்திற்போல், பெரிது உவந்து - (அவர் வந்ததற்கு) மிகவும் சந்தோஷப்பட்டு, மெல்ல— சாந்தமாக, கொடையொடு பட்ட - கொடுத்தலோடு சேர்ந்த, குணன் உடை மாந்தர்க்கு - குணமுள்ள மனிதருக்கு, ஆண்டை கதவு - அவ்வுலகத்துக் கதவுகள், அடையா ஆம் - அடைக்கப்படாதன ஆகும், எ-று.

செல்வ மில்லாதபோதும் சந்தோஷப்பட்டுச் சாந்தமாய்க் கொடுக்கும் குணமுள்ளவர்களது வரவை எதிர்நோக்கி மேலுலகத்தார் தமது உலகத்துக் கதவைத் திறந்து வைத்திருப்பார்கள் என்றபடி.

இங்கே இடம் என்பது காலத்தை. பெரிது — இந்தக் குறிப்பு முற்று இங்கே வினையெச்சமாகி உவத்தலுக்கு உரியாய் நின்றது; இதை வடநூலார், "க்ரியா விசேஷணம்" என்பர். கொடை — கொடு - பகுதி, ஐ - தொழிற்பெயர்விகுதி. குணன் — மகரத்துக்கு னகரம் போலி. உடை—ஈறுதொக்க குறிப்புப் பெயரெச்சம். ஆம்— அசை என்றும் கொள்ளத்தகும். ஆண்டை—ஆண்டு என்னும் சுட்டு குற்றியலுகரமாதலின் "ஐயீற் றுடைக்குற்றுகரமு முளவே" என்கிற [உயிர் - கு - ௬௫] விதியால் ஐகாரச்சாரியை பெற்றது. (க)

முன்னரோ சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள - கொன்னே

---

1. To those men the gates of heaven shall never be closed, who with a tender heart and with a mind in accordance with their alms, very gladly give what they can even in poverty, just as if they would do in the days of prosperity.

2. Before you are the disgusting old age and your dying day. There are besides pains which are destructive of greatness.

Digitized by Google

பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

(இ-ள்.) முன்னரோ - பூர்வத்திலேயே, சாம் நாள் - சாகுங் காலமும், முனி தக்க மூப்பு - வெறுக்கத் தக்க கிழத்தனமும், உள - ஏற்பட்டிருக்கின்றன; பின்னரும் - பின்னும், பீடு அழிக்கும் - பெருமையைக் குலைக்கும்படியான, நோய் உள - வியாதிகளும் உண்டாயிருக்கின்றன; கைத்து உண்டாம் போழ்து - திரவியம் உண்டாயிருக்கிற காலத்தில், கொன்னே - வீணாய், பரவன்மின் - நாற்புறமும் ஓடாதேயுங்கள், பற்றன்மின் - பிடித்திராதேயுங்கள், பாத்து உண்மின் - (சோறு முதலியவற்றை யாசகர்க்கு) பகுத்துக் கொடுத்து உண்ணுங்கள், யாதும் கரவன்மின் - எதையும் ஒளியாதிருங்கள், எ-று.

நாம் பிறக்கு முன்னமே சாநாள் மூப்பு நோய் இவை கடவுளால் அமைக்கப்பட்டிருக்கின்றன, ஆதலால் திரவிய மிருக்கும்போது அதைக் கெட்டியாப் பிடித்து யாசகர்க்கு இல்லையென்று சொல்லாமல் பகுத்துக் கொடுத்து அனுபவியுங்கள் என்பது கருத்து.

கைத்து உண்டாம் போழ்து என்பதை ஒவ்வொரு வாக்கியத்திலும் கூட்டிக்கொள்க. பின்னரும் என்பதற்கு இன்னமும் எனப் பொருள் கொள்க. முன் பின் என்பவை அர் சாரியை பெற்றன. சாம் நாள்—பெயரெச்சத் தொடர். முனிதக்க — முனிதற்குத்தக்க, முதனிலைத் தொழிற்பெயர், நான்காம் வேற்றுமைத்தொகை. உள— பலவின்பால் குறிப்புமுற்று. கொன் — இடைச்சொல். பரவன்மின் பற்றன்மின் முதலியவை எதிர்மறை யேவற்பன்மை வினைமுற்று. பாத்து—பா - பகுதி. கைத்து - கையிலுள்ளது. யாதும் கரவன்மின் என்றது எதையும் இல்லையென் றொளிக்கவேண்டாம் என்று முன் சொன்னதையே உறுதிப்படுத்தியது. (உ)

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்கா லீண்டும்
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

---

Do not therefore, when you have wealth, be very covetous and wander about with a desire to acquire more, but give alms to the needy and eat. Do not hide it when you have.

3. Wealth will still be increasing at the time of increase although one may give it away to the needy and enjoy it himself; but when the effects of one's good deeds are exhausted, that wealth will entirely leave him although he may hold it ever so firm. It is only those who are ignorant of this that do not relieve the distressed that come to them for protection.

Digitized by Google

(இ - ள்.) கொடுத்து தான் துய்ப்பினும் - பிறருக்குக் கொடுத்துத் தான் அனுபவித்தாலும், ஈண்டும் கால் ஈண்டும் - சேருங் காலத்திற் சேரும்; விடுக்கும் வினை உலந்தக்கால் - (நம்மிடத்தில் பொருளைச்) சேர்த்த நல்வினை அழிந்தால், செல்வம் - செல்வமானது, மிடுக்கு உற்றுப் பற்றினும் - வலிபொருந்திப் பிடித்தாலும், நில்லாது - நிலையாது; (இதை அறியாதவர்) நடுக்கு உற்று தன் சேர்ந்தார் துன்பம் - (தரித்திரத்தால்) நடுக்கலை அடைந்து தன்னைச் சேர்ந்தவர்களுடைய துக்கத்தை, துடையார் - போக்கமாட்டார்கள், எ-று.

செல்வமானது நல்வினை சேர்ந்த காலத்திற் சேர்ந்து அது அழியுங் காலத்தில் எவ்வளவு உறுதியாய்ப் பிடித்தாலும் நிற்காதாகையால் செல்வமிருக்கும்போதே வறுமையால் வருந்தித் தன்னிடம் வருபவருடைய சங்கடத்தைத் தீர்க்கவேண்டுமென்பது கருத்து.

இது ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியதாகிய அடிமறிமாற்றுப்பொருள்கோள், [பொது - ரு - சுஅ.] கொடுத்துத் தான் துய்ப்பினும் என்றதனால், கொடுத்தல் செல்வ நிலைமைக்குக் காரணமானாலும் அது மறுபிறப்புக்கே யன்றி இப்பிறப்புக்கு அன்று என்று காட்டியதாயிற்று. இப்பிறப்பில் செல்வம் சேர்வதும் நீங்குவதும் போன பிறப்பின் கருமவசம் என அறிக. நடுக்கு — முதனிலைத் தொழிற்பெயர். தற்சேர்ந்தார்—இதில் [மெய் - கரு-வது சூத்திரவிதியால்] தன் என்பதின் னகரம் திரிந்தது. துய்ப்பினும் — உம்மை உயர்வு சிறப்பு. விடுக்கும்—கு - சாரியை. (ங)

இம்மி யரிசித் துணையானும் வைகலும்
நும்மி லியைவ கொடுத்துண்மின் - உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்
தடாஅ வடுப்பி னவர்.

(இ-ள்.) இம்மி அரிசி துணை ஆனும் - இம்மியளவான அரிசியையாயினும், நும்மில் இயைவ - உங்களுக்கு இசைந்தவற்றை, வைகலும் - தினந்தோறும், கொடுத்து உண்மின் - யாசகருக்குக் கொடுத்து உண்ணுங்கள்; குண்டு நீர் வையத்து - ஆழமான கடல் சூழ்ந்த பூமியில், அடா அடுப்பினவர் - சமைக்காத அடுப்பையுடையவர் [சோற்றுப் பிச்சைக்கு வருகின்றவர்], உம்மை - முற்பிறப்பில்,

---

4. Give what you are able, even though it be a very small quantity of rice and then eat your meal. Those that wander as beggars on this earth surrounded by the deep ocean, without any means whatever to cook their own food are said to be those that gave no alms in a former birth.

Digitized by Google

கொடாதவர் என்பர் - (யாசகருக்குக்) கொடுக்காத லோபிகள் என்று சொல்வார்கள், எ-று.

கிஞ்சித்தாகிலும் இயைந்ததைக் கொடுக்க வேண்டும். முற்பிறப்பில் கொடாதவரோ இப்பிறப்பில் சோற்றுப் பிச்சைக்கு வருகிறவர்கள் என்பதாம்.

அடா அடுப்பினவர் - துறவிகள், உம்மை கொடாதவர் - (இவர்) முற்பிறப்பில் கொடுத்துவையாதவர், என்பர்—, என உரைத்தல் நன்று. சன்னியாசிகள் அடுப்புவைத்துச் சமைக்கலாகாதென்பது சாஸ்திரவிதி.

இம்மி—ஒரு சிறிய அளவு, அது (கூகூ0) ல் ஒரு பங்கு. ஏனும் என்பதுபோல ஆனும் என்பதும் இழிவு சிறப்போடு விகற்பத்தைக் காட்டுகிற ஓரிடைச்சொல். வைகலும்—முற்றும்மை. இயைவ—பலவின்பால் வினையாலணையும்பெயர். கொடாஅதவர், அடாஅ—இசையளபெடை. அடாஅ அடுப்பினவர் என்பது வறுமைக்குக் குறிப்பு. (ச)

மறுமையு மிம்மையு நோக்கி யொருவற்
குறுமா றியைவ கொடுத்தல் - வறுமையால்
ஈத லிசையா தெனினு மிரவாமை
ஈத லிரட்டி யுறும்.

(இ - ள்.) மறுமையும் இம்மையும் நோக்கி - மேலுலகப் பயனையும் இவ்வுலகப் பயனையும் பார்த்து, ஒருவற்கு—, உறும் ஆறு இயைவ - பொருந்தும் வழியில் இசைந்தவைகளை, கொடுத்தல் - கொடுக்கக் கடவன்; வறுமையால் தரித்திரத்தினால், ஈதல் இசையாதெனினும் - கொடுத்தல் இசையாமற்போனாலும், இரவாமை - பிறரிடம் யாசியாமலிருப்பது, ஈதல் - கொடுப்பதினும், இரட்டி உறும் - இரட்டித்துப் பயன் தரும், எ-று.

மறுமையில் சொர்க்கமும் இம்மையில் புகழும் வருவதைப் பார்த்து இயைந்தமட்டில் பிறருக்குக் கொடுக்கவேண்டும், அப்படிக் கொடுக்கக் கூடாமற் போனாலும் தான் பிறரை யாசியாமலிருப்பது மிகவும் நல்லதென்பதாம்.

கொடுத்தல் — வியங்கோள்வினைமுற்று; [வினை - ரு - கக.] இரட்டி—வினையெச்சம். இரட்டுவது இரட்டி எனக் கர்த்தாப் பொ

---

5. Let a man who regards both this world and the next, give what he possibly can, when he gets it; if this is impossible through poverty, to abstain from begging will be giving twice.

Digitized by Google

ருள்விகுதி பெற்ற பெயரெனக் கொண்டு இரட்டித்த பயனுனது பொருந்தும் எனவு முரைக்கலாம். (ரு)

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணு மாக்கள்
இடுகாட்டு ளேற்றுப் பனை.

(இ - ள்.) நடு ஊருள் - ஊர்நடுவிலே, வேதிகை - திண்ணையா னது, சுற்றுக்கோள் புக்க - சுற்றிக்கொள்ளுதலை யடைந்த, படு பனை அன்னர் - பயன்படும்படியான பனைமரத்தை யொத்தவர் (யாரெ னில்), பலர் நச்ச வாழ்வார் - பலரும் விரும்பும்படி வாழ்கிறவர்கள்; குடி கொழுத்தக்கண்ணும் - குடித்தனம் வளப்பமா யிருக்கும்போதும், கொடுத்து உண்ணு மாக்கள் - யாசகர்க்குக்கொடுத்து அனுபவியாத மனிதர், இடுகாட்டுள் ஏற்றுப்பனை - சுடுகாட்டிலுள்ள ஆண்பனைக்கு ஒப்பாவார்கள், எ-று.

ஊரினடுவிலே பழுந்தரும்படியான பனைமர மொன்றிருந்து அதைச் சுற்றிலும் திண்ணையுமிருந்தால் வேண்டியவர்வந்து பழம் பறித்துக்கொண்டு அத்திண்ணைமே லுட்கார்ந்து புசிப்பார்களே அது போல் செல்வமுள்ளவர் சோறு கூறை முதலியவற்றைத் தாராளமா ய்க் கொடுப்பவரா யிருந்தால் யாவரும் விரும்பி அவரிடம் வந்து இன்பமடைவா ராதலின் கொடுப்பவர் அப்படிப்பட்ட பனைக்கு ஒப் பிடப்பட்டார்; செல்வமல்கிக் குடிவாழ்ந் திருக்கையிலும் ஒன்றுங் கொடாமல் வாழ்கிறவர்கள் சுடுகாட்டிலுள்ள ஆண்பனைபோல் வீணு யும் வெறுக்கும்படியாயு மிருப்பவராம் என்பது கருத்து.

சுடுகாடு நினைத்தபோது போகக்கூடாத அசுத்தமான விடம். மரமும் பழந்தராதாயின் மிகவு நிந்தனைக்குப் பாத்திரமென்றபடி.

நடுவூர்—இலக்கணப்போலி. சுற்றுக்கோளுக்கு வேதிகை கர்த் தா. புக்க—இப்பெயரெச்சம் பனையொடு சேரும். வேதிகையைச் சுற்றுக்கோட்புக்க பனையெனவுங் கூட்டலாம். அப்போது நடுவில் திண்ணையும் சுற்றிலும் பனைமரங்களுமெனக் கருத்துக் கொளல்வேண் டும். படு—வினைத்தொகை. கொழுத்தக்கண்—வினையெச்சம், கண் — விகுதி. உம்மை—சிறப்பு. இடு—இதுவும் வினைத்தொகை. இடுகாடு — இறந்தவரை வைக்கிற காடென்பதாம். ஏறு - ஆண். (சு)

6. Those that live beloved by many are like the fruitful palm tree surrounded by platforms in the middle of the village and those that eat without giving others, even though their family be flourishing and affluent, are like the (useless) male palm tree in the burial ground.

Digitized by Google

பெயற்பான் மழைபெய்யாக் கண்ணு முலகஞ்
செயற்பால செய்யா விடினும் - கயற்புலால்
புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப
என்னை யுலகுய்யு மாறு.

(இ-ள்.) கயல் புலால் - மீன்களின் மாமிசநாற்றத்தை, புன்னை கடியும் - புன்னைமலர்கள் நீக்கப்பெற்ற, பொரு கடல் - அலைமோதுகின்ற கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியான கரையுள்ள அரசனே!, பெயல் பால் - பெய்யும்படியான காலத்தில், மழை பெய்யாக் கண்ணும் - மழை பெய்யாவிடினும், உலகம் - உலகமானது, செயல் பால - செய்யத்தக்க வுதவிகளை, செய்யாவிடினும் - செய்யாமல் விட்டாலும், உலகு உய்யும் ஆறு - உலகம் பிழைக்கும் வகை, என்னை - ஏதாம், எ-று.

காலத்தில் மழைபெய்யாமலும் மேலானவர் அன்ன முதலியவற்றை உதவாமலும் இருந்தால் உலகம் எப்படி பிழைக்கும் என்றதாம். ஆதலால் உள்ளவர் இல்லாதவர்க்குக் கொடுக்கவேண்டு மென்பது கருத்து.

பெயல்பால்—பெயலுக்கு உரிய பால் என விரிக்க; பால் - காலப்பகுதி. உலகம் என்பது இங்கே உயர்ந்தவர்கள். செயல்பால - செய்தற்குத்தக்க தன்மையை உடையன; அகரம் - பலவின்பால் விகுதி. செய்யா—எதிர்மறை வினையெச்சம், மல் - விகுதி குறைந்தது; செய்யாவிடின் என்று ஒருசொல்லாக் கொள்வதும் தகும். என்னை—எவன் என்கிற குறிப்புமுற்று இடைகுறைந்து ஐகாரச் சாரியை பெற்றது; அகரச்சாரியைபெற்று என்ன என்றும் வரும். (எ)

ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதா மாண்கடன் - ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

---

7. O lord of the cool shores beaten by the waves, where the Poonnai flowers repel the stink of fish! How would the world get on, if the rain does not fall when it should and people omit to do what they ought to do.

8. O lord of the cool shores of the sea abounding in luxuriance! It is the duty of man to give without distinction to the poor (i. e. those who are not able to bear their distresses) anything that is possible, and not turning away from their extended hands. Giving to those who will return it has the name of a good debt.

Digitized by Google

(இ - ள்.) மலி கடல் தண் சேர்ப்ப - வளப்பமிகுந்த கடலின் குளிர்ச்சியான கரையையுடைய அரசனே!, ஏற்ற கை மாற்றாமை - யாசகன் ஏந்தின கையை மறுக்காமல், என்னும் - எதையாகிலும், வரையாது - (இன்னான் இன்னானென்று) வரை ஏற்படுத்தாமல், ஆற்றாதார்க்கு - பிரதிசெய்யமாட்டாத தரித்திரருக்கு, ஆற்றின் ஈவது - முறையால் கொடுப்பது, ஆண் கடன் ஆம் - ஆண்மக்களுடைய கடமையாம்; மாறு ஈவார்க்கு ஈதல் - எதிருபகாரஞ் செய்யவல்லவருக்குக் கொடுப்பது, பொலி கடன் என்னும் பெயர்த்து - விசேஷமான கடன் என்கிற பெயரையுடையது, எ-று.

யாசித்தால் இல்லையென்று மறுக்காமலும், இவன் உறவினன் இவன் சிநேகிதன் இவன் அப்படியல்லாதவன் என்று வரையறை செய்யாமலும் வறுமைப்பட்டவர்க்குத் தனக் கியைந்ததைக் கொடுக்க வேண்டும்; அதுதான் கொடையெனப் பெயர்பெறும். பதிலுபகாரஞ் செய்பவனுக்குக் கொடுப்பது கொடையாகாது; விசேஷமான கடனென்றே சொல்லப்படும். பிறரிடம் கடன்வாங்கினால் சக்தியில்லாதபோது ஐயா எனக்கு நிர்வாகமில்லை அல்லது இவ்வளவு கொடுக்கிறேன் நீர் அங்கீகரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு சக்தியின்படி நடத்தலா மாதலால் பொலிகடன் என்றார்.

மாற்றாமை—எதிர்மறை வினையெச்சம், மை - விகுதி. ஆண் - கொடுக்கும் ஆண்மையுள்ளவன். பெயர்த்து—குறிப்புவினைமுற்று. ()

இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க - முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

(இ-ள்.) இறப்ப சிறிது என்னாது - (நாம் கொடுப்பது) மிகவும் அற்பமானதென்று நினையாமலும், இல் என்னாது - இல்லை என்று சொல்லாமலும், என்றும் - எப்போதும், யார்மாட்டும் - எப்படிப்பட்டவர் விஷயத்திலும், அறம் பயன் செய்க - தருமமாகிய பிரயோஜனத்தைச் செய்யக்கடவன்; (அது) முறை - கிரமமாக, புதவின் - வாசல்களிலே, ஐயம் புகும் தவசி - பிச்சைக்குச் செல்கிற தவசியினது, கடிஞை போல் - பிச்சைப்பாத்திரம் போல, பைய - மெல்ல, நிறைத்து விடும் - (அறப்பயனை) பூரணமாக்கும், எ-று.

---

9. Considering that what you have is too little, don't say you have nothing to give, but ever exercise fruitful charity to all. It will, in due course, like the pitcher of the mendicant who enters every house door for alms, gradually become full.

Digitized by Google

நாம் அற்பத்தைக் கொடுக்கலாமா என்று யோசியாமலும் இல்லை யென்று சொல்லாமலும் இசைந்தமட்டில் கொடையாகிய அறத்தைச் செய்தால் அதனால் வீடுதோறுஞ் சென்று சிறிது சிறிதாய் இரக்க, சன்னியாசியின் பாத்திரம் நிறைந்து போவதுபோல அறப்பயனும் நிறைந்துபோம் என்பதாம்.

இல்—ஈறுகெட்ட வினைமுற்று. பைய — வினையெச்சம், பை - பகுதி, மெதுவாதல், அ - விகுதி. நிறைத்துவிடும்—விடு - அசை, இக்காலத்தார் துணைவினை யென்பர். (கூ)

கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

(இ-ள்.) கடிப்பு இடு கண் முரசம் - வாத்தியம் அடிக்கும் கொம்பு இடப்பட்ட [அடிக்கப்பட்ட] இடத்தையுடைய பேரிகையோசையை, காதத்தோர் கேட்பர் - ஒருகாத தூரத்திலிருப்பவர் கேட்பார்கள்; இடித்து முழங்கியது - மேகம் இடித்துக் கர்ச்சித்ததை, ஓர் யோசனை யோர் கேட்பர் - ஒருயோசனை யளவி லுள்ளவர் கேட்பார்கள்; சான்றோர் கொடுத்தார் எனப்படும் சொல் - யோக்கியருக்குக் கொடுத்தார்கள் என்னுஞ் சொல், அடுக்கிய மூவுலகும் கேட்குமே - (ஒன்றின்மே லொன்றாய்) அடுக்கப்பட்டிருக்கிற மூன்று லோகங்களுக்கும் நிச்சயமாக் கேட்கும், எ-று.

பேரியோசை காததூரத்தி லிருப்பவர்க்குச் செவிப்படும், மேக கர்ச்சனை அதினும் கிஞ்சித்து அதிகமாகிய யோசனை தூரத்தி லிருப்பவர்க்குச் செவிப்படும், கொடுத்தார் என்கிற சொல்லோ எல்லா வுலகத்தார்க்கும் செவிப்படும் என்றால் யாவருக்கும் தெரிந்து கொண்டாடும்படி யிருக்கும் என்பது கருத்து.

கண் என்பது வாத்தியங்களின் நடுவிடம். காதத்திற்கும் யோசனைக்கும் கிஞ்சித்துப் பேதமுண்டென்பது சிலருடைய கொள்கை. அடுக்கிய—செயப்படுபொருள் செய்ததுபோல் வந்தது. உலகம் பதினன்கா யிருக்க மூவுலகு என்றது என்னையெனின் மேல் கீழ் நடு என்கிற நோக்கத்தா லென்க. அல்லது, கிருதகம் அகிருதகம் கிருதகா

---

10. Those who are ten miles off can hear the wide drum beaten with the stick; those a *yojanai* off can hear the roaring thunder, but the report of alms given to the worthy can be heard by all who live in the three worlds piled up (one above the other.)

Digitized by Google

இருதகம் என மூவகைப்பட்ட வுலகமாம். இருதகம் என்றால் செய்யப்பட்டது, பூமி பாதாள முதலானது; அகிருதகம் என்றால் செய்யப்படாதது, தபோலோக சத்தியலோகங்கள்; இருதகா இருதகம் என்றால் செய்யப்பட்டதும் செய்யப்படாததுமா யிருப்பது, சொர்க்க முதலியது. கேட்குமே—ஏகாரம் - தேற்றம். (கo)

## கக-வது. அதிகாரம்.—Chapter XI.

### பழவினை—The effects of actions done in a former birth.

அஃதாவது முற்பிறப்பிற்செய்த பாவபுண்ணியங்களைப் பற்றிச் சொல்லிய அதிகாரம். பழவினை — பண்புத்தொகை, பழமையான வினை யென விரியும்.

முந்திய அதிகாரங்களிலும் பிந்திய அதிகாரங்களிலும் நல்வினை செய்யத்தக்கதென்றும் தீவினை கடியத்தக்கதென்றும் சொல்லியதற்குப் பயன் அப்பிறப்பிலே காணுமற்போனாலும் பிற்பிறப்பிலே யது காணுமென்னும் முறைமைபற்றி மத்திமதீப ஞாயத்தால் அவற்றிற் கிடையில் வைக்கப்பட்டது.

பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலை - தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

(இ - ள்.) பல் ஆவுள் - பல பசுக்களில், உய்த்துவிடினும் - செலுத்திவிட்டாலும், குழ கன்று - இளமையான கன்று, தாய் நாடிக் கோடலை - (தன்) தாயைத் தேடி யடைதலில், வல்லது ஆம் - சாமர்த்திய முள்ளதாகும்; (அதுபோல) தொல்லை பழ வினையும் - முற்பிறப்பிற்செய்த கருமமும், தான் செய்த - தன்னைச்செய்த, கிழவனை - உரியவனை, நாடி கொளற்கு - தேடி அடைதலில், அன்ன தகைத்து - அப்படிப்பட்ட தன்மையை [சாமர்த்தியத்தை] யுடையதாம், எ-று.

பல பசுக்களி னடுவேவிட்ட கன்று தன் தாயைத் தேடிக் கண்டு எப்படி யடைகின்றதோ அப்படி யொருவன் செய்த பாவ புண்ணிய கருமம் பிற்பிறப்பில் அவனிடத்து வந்துசேரு மென்பதாம். இதனால் அக்கருமங்கள் அந்தந்தப் பிறப்பிலேயே யொழியுமென்று நினையாமல்

1. As a young calf, when let loose among a number of cows, naturally seeks out and joins its mother, so will the effects of deeds in a former birth seek out its owner and join him (in this world.)

Digitized by Google

பிற்பிறப்பில் தொடர்ந்து பயனை யநுபவிக்கச் செய்யுமாதலால், தீவினை யொழித்து நல்வினை செய்யவேண்டு மெனச் சொல்லிய தாயிற்று.

பல் ஆ—பண்புத்தொகை. விடினும்—உம் - சிறப்பும்மை. குழக் கன்று—பண்புத்தொகை, குழவாகிய கன்று எனவிரியும். வல்லது—குறிப்பு வினைமுற்று, வல் - பகுதி, அ - சாரியை, து - ஒன்றன்விகுதி, லகரம் இரட்டியது சந்தி. ஆம்—அசை ; ஆகும் எனப்பொருள்கொள்ளின், வல்லது—பண்படியாப்பிறந்த பெயர் ; குறிப்புமுற்றுல்லடைந்த பெயரொன்னவுமாம். கோடலை—ஐயுருபு இடப்பொருளில் வந்தது, வேற்றுமை மயக்கம். தொல்லைப்பழமை—ஒருபொருட் பன்மொழி, அல்லது பழவினை என்பதைத் தொடர்ந்துவரும் கருமத்துக்கு ஒரு பெயராக்கொண்டு தொல்லையென்பதை அதற்கு அடையாக் கொள்வது நேர். தொல்லை - துன்பம், அதனைச்செய்யும் பழவினையெனவு முரைக்கலாம் ; ஆயினும் அது நல்வினைக் கேலாமை காண்க. அன்ன—குறிப்புப்பெயரொச்சம், அன் - பகுதி, அல்லது அ - பகுதி, னகரம் - சாரியை. தகைத்து—குறிப்புமுற்று, தகை - பகுதி, (=குணம்), து - விகுதி ; தகையென்பது தகு என்னும் வினைப்பகுதிமேல் ஐ என்னும் தொழிற்பெயர்விகுதி வந்ததாம் ; ஆயினும் பொருளினால் அது பண்பு. ஏகாரம்—தேற்றம். தற்செய்த—தான் என்பது பொதுப்பெயராயினும் [மெய் - சூ - கறு விதியால்] னகரந் திரிந்தது ; [உருபு-சூ-அ விதியால்] முதல் குறுகியது. கிழவன்—பண்படியாகப் பிறந்தபெயர் ; கிழமை - பகுதி, அன் - விகுதி. கொளற்கு—வேற்றுமை மயக்கம். (க)

உருவு மிளமையு மொண்பொருளு முட்கு
மொருவழி நில்லாமை கண்டு - மொருவழி
ஒன்றேயு மில்லாதான் வாழ்க்கை யுடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

(இ - ள்.) உருவும் - அழகும், இளமையும் - வாலிபமும், ஒள் பொருளும் - மேன்மையான செல்வமும், உட்கும் - (பலர்) அஞ்சத்தக்க மதிப்பும், ஒருவழி நில்லாமை - ஒருவழிப்பட்டு நிலைபெற்றிராமையை, கண்டும் - பார்த்தும், ஒருவழி - ஒரு பிறப்பிலும், ஒன்றேயும் இல்லாதான் - யாதொரு நற்செய்கையும் இல்லாதவனுடைய,

---

2. The prosperity of him who, knowing that beauty, youth, the resplendant weath, and honor remain not stable in any one, does not do a single good deed in any birth, has the nature of a thing that takes a body, remains for a time and then perishes utterly.

Digitized by Google

வாழ்க்கை - வாழுதலானது, உடம்பு இட்டு நின்று - உடலைப்பெற்று நின்று, வீழ்ந்தக்கது - வீழுந்தன்மையை, உடைத்து - உடையது, எ-று.

உருவமுதலாகிய பொருள்கள் ஓரிடத்தில் நிலையாயிராம லழிந்துபோவது பிரத்தியக்ஷமா யிருக்கையால், அவற்றின் காரணமாகிய நல்வினையை ஒருபிறப்பிலும் செய்யாதவனுடைய வாழ்வானது பிறந்தான் இறந்தானென்னு மாத்திரையே யன்றி வேறு பயனில்லாதது என்பது கருத்து. இதனால் ஒரு பிறப்பிலாகிலும் நல்வினை செய்தால் அது பிற்பிறப்புகளில் தொடர்ச்சியாய் நன்மைகளை யுண்டாக்குமென்பதாம்.

உட்கு—கருவிப்பொருள் விகுதி புணர்ந்து கெட்டபெயர்; உட்குதல் - அஞ்சுதல். உம்மைகள்—எண்ணுப்பொருளன. கண்டும்—உம்மை உயர்வு சிறப்பு. ஒன்றேயும் — உம்மை இழிவு சிறப்பு அல்லது விகற்பப்பொருள். வீழ்ம்—வீழும் என்பதில் உகரம் தொகுத்தல் விகாரம். தக்கது—குணத்தை யுணர்த்திய தொழிற்பெயர். ஏ-அசை. (௨)

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.

(இ - ள்.) வளம்பட வேண்டாதார் - (செல்வ முதலியவற்றால்) வளப்பத்தையடைய விரும்பாதவர்கள், யார் யாரும் - எப்படிப்பட்டவர்களும், இல்லை - (உலகத்தில்) இல்லை; போகம் - சுகானுபவங்கள், அவர் அவர் ஆற்றான் - அவரவர்களுடைய புண்ணியவசத்தினாலே, அளந்தன - அளக்கப்பட்டிருக்கின்றன; விளங்காய் திரட்டினார் - விளங்காயைத் திரண்டவுருவாகச் செய்தவர்கள், இல்லை - யாருமில்லை; களம் கனியை - களாப்பழத்தை, கார் என செய்தாரும் - கறுப்பாகச் செய்தவர்களும், இல் - இல்லை, எ-று.

உலகத்தில் செல்வமுதலிய வளப்பத்தை யாவருமே விரும்புகிறார்கள்; ஆயினும் அவரவர் செய்த புண்ணியங்களுக் கேற்றபடி அப்போகம் கிடைக்குமே யல்லது அதிகமாயும் குறைவாயும் கிடைக்க மாட்டாது; எங்ஙனமெனில், விளங்காய் ஒருவரால் திரட்டப்படாமல் இயற்கையால் திரண்டிருப்பதுபோலவும் களங்கனி கறுப்பாக்கப்படாமல் தானே கறுப்பாய் இருப்பதுபோலவும் என வறிக. விளங்காய்

---

3. There are none at all who are not anxious to acquire wealth. Happiness or misery is meted out to all according to their deeds in a former birth. None can make the wood-apple round, and die the *kala* fruit black.

Digitized by Google

முதலியன தந்தம் இயற்கையா லமைந்திருப்பதுபோல அவரவர் சுகமும் அவரவர் புண்ணிய இயற்கையால் அமைந்த தென்பதாம். இதனால் பிற்பிறப்பில் விசேஷமாக வளம்பட்டவர் முற்பிறப்பில் மிகுதியான புண்ணியம் செய்திருக்கவேண்டும் என்பது கருத்து.

யாரும் என்பதில் உம்மை முற்றுப்பொருளது. அளந்தன—செயப்பாட்டுவினை செய்வினைபோல் வந்தது, [பொது - சூ - சஃ.] இல்—எதிர்மறைக்குறிப்பின் பகுதி முற்றுப்பொருளைத் தந்தது. இல்லைக் களங்கனி என்னுமிடத்தில் ஓசைபற்றி வல்லொற்று மிகுந்தது. (௩)

உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா
பெறற்பா லனையவு மன்னவா மாரி
வறப்பிற் றருவாரு மில்லை யதனைச்
சிறப்பிற் றணிப்பாரு மில்.

(இ-ள்.) உறல் பால - வந்துகூடும்படியான தீவினைகளை, நீக்கல் - தடுத்தல், உறுவர்க்கும் - முனிவர்களுக்கும், ஆகா - இசையாது; பெறல் பால் அனையவும் - பெறும்படியான தன்மையையுடைய நல்வினைகளும், அன்ன ஆம் - அத்தன்மையனவாம்; மாரி - மழையானது, வறப்பின் - வறண்டால், அதனை தருவாரும் இல்லை - அதைக் கொடுப்பாருமில்லை; சிறப்பின் - (அது) அதிகப்பட்டால், தணிப்பாரும் இல் - (அதனை) அடக்கவல்லவர்களு மில்லை, எ-று.

மழை வறண்டகாலத்தில் அதனைக் கொடுப்பதற்கும் அது அதிகப்பட்டால் அதனைத் தணிப்பதற்கும் எப்படி ஒருத்தருக்குஞ் சக்தி யில்லையோ அப்படியே ஒருவனுக்குத் தீவினைப்பயன் நேரிட்டபோதும் நல் வினைப்பயன் நேரிட்டபோதும் அவைகளைத் தடுக்க யாராலுமாகாது; அவரவர் அனுபவித்தே தீரவேண்டும் என்பதாம்.

உறற்பால—உறல் - வந்துசேர்தல், பால் - தன்மை, அதாவது சேரும்படியான தன்மை; அ - பலவின்பால் விகுதி, இது உடைமைப் பொருளைக் காட்டும்; தத்திதம். உறுவர் - சாமர்த்தியம் மிகுந்தவர். ஆகா—ஆகாது என்பதில் ஈறுதொக்கது; அல்லது நீக்கலென்பதைப் பன்மையாக் கொள்க. பெறற்பாலனைய—பெறுதலாகிய பான்மையையுடைய அப்படிப்பட்டவை எனப் பொருள் விரித்துக்கொள்க. அன்ன—குறிப்பு வினைமுற்று, அல்லது வினையாலணையும்பெயர். இவ்வாறு வருவதை வடநூலார் விதேயவிசேஷண மென்பர். வறப்பின்—

---

4. To avoid evils which are destined to happen is not possible even to saints; and so it is the case with the good things that are to occur. There are none here below who can give us rain when it has failed and stop it when it falls.

Digitized by Google

செயினென்னும் வாய்பாட் டெதிர்காலவினையெச்சம், பகரம் - இடைநிலை, இன் - விகுதி; அல்லது வறப்பு என்பதைத் தொழிற்பெயராகக் கொண்டு ஏழனுருபு புணர்ந்ததெனினும் பொருந்தும். சிறப்பின் என்பதை வறப்பின் என்பதைப்போற் கொள்க. (௪)

தினைத்துணைய ராகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வார்
நினைப்பக் கிடந்த தெவனுண்டா மேலை
வினைப்பய னல்லாற் பிற.

(இ - ள்.) பனை துணையார் - பனையளவாக விருந்தவர், [உயர்ந்தவர் என்றபடி], தினை துணையர் ஆகி - தினையளவினராகி, தம் தேசு உள் அடக்கி - தமது சாமர்த்தியத்தை உள்ளே அடங்கச்செய்து, வைகலும் - தினந்தோறும், பாடு அழிந்து - பெருமை கெட்டு, வாழ்வார் - இருப்பார்; நினைப்ப - யோசித்தால், மேலை வினை பயன் அல்லால் - முற்பிறப்பிற் செய்த வினையின் பயனேயல்லாமல், பிற கிடந்தது - வேறாக இருப்பதாகிய, எவன் உண்டு ஆம் - எது உண்டாகும், எ-று.

உயர்ந்த நிலையிலிருந்த ஒருவன் மிகவும் தாழ்ந்த நிலையில் வந்து தன் சாமர்த்தியமும் பெருமையும் கெட்டிருப்பது எதனுலென்று யோசித்தால், அவன் பூர்வஜனனத்திற் செய்த தீவினையினாலே யல்லாமல் வேறு காரணத்தா லல்ல என்பது கருத்து.

பனை தினை என்னும் உபமானங்களைப் பிரமாணத்திற்குக் கொள்ளாமல் மேன்மைக்கும் தாழ்மைக்கும் கொள்க. தினைத்துணையர்—தினையின தளவையுடையவர் என விரித்துக்கொள்க. வைகலும்—உம்மை - முற்றுப்பொருளது. நினைப்ப—எதிர்காலவினையெச்சம். எவன்—வினாவினைக் குறிப்புவினையாலணையும்பெயர்; எ - பகுதி, அ - சாரியை, னகரம் - விகுதி; இது சாரியையின்றி என் எனவும், அதன்மேல் ஐகாரச்சாரியை பெற்று என்னை எனவும், அகரச் சாரியைபெற்று என்ன எனவும் வரும். எவன் என்பதைப் பகாப்பதமாகக் கொள்ளின் என் என்பது இடைக்குறையாம். (௫)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்
கல்லாதார் வாழ்வ தறிதிரோல் - கல்லாதார்

---

5. Those who were once in dignity high as the palmyra fall to a position as insignificant as the millet grain and lead a miserable life losing all their former greatness and ability. On reflection, this is only due to the effect of their evil deeds in a former birth and to nothing else.

6. You see that those who know the benefits of the knowledge accruing from sound oral instruction die while the

Digitized by Google

சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

(இ-ள்.) பல் ஆன்ற கேள்வி - பல மேன்மைப்பட்ட கேள்விகளி னது, பயன் உணர்வார் - பயனை அறிந்தவர்கள், வீயவும் - அழிய வும், கல்லாதார் - படியாத மூடர்கள், வாழ்வது - நெடுங்காலம் சீவித் திருப்பதை, அறிதிர் - அறிந்திருக்கிறீர்கள்; கல்லாதார் - படியாத வர்கள், சேதனம் என்னும் - அறிவென்னப்பட்ட, அச்சேறு - அந்தச் சாரத்தை, அகத்து இன்மையால் - உள்ளத்திலே உடையரா யில்லா மையால், (அவரை), கூற்று - யமன், கோது என்று - திப்பியென்று நினைத்து, கொள்ளாது - கொள்ளமாட்டான், எ-று.

நூல்களின் சாரத்தை யறிந்த யோக்கியர்கள் சீக்கிரத்தில் மாண் டுவரப் படியாத மூடர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருப்பது உங்களுக் குப் பிரத்தியட்சமாக இருக்கின்றதே, அது ஏனெனில் கற்றவரிடத் தில் சேதனம் என்னும் சாரம் இருத்தல்பற்றி அவரை யமன் தீவிரத் தில் கொள்ளுகின்றான், மற்றவரை அச்சாரம் இல்லாமையால் கொள் ளுவதில்லை எனக் கவிசாதுரியத்தாற் றற்குறிப்பேற்றமாய்க் கூறினார். இப்படி விபரீதமாவதும் முன் வினைப்பயன் என்பது கருத்து.

அகன்ற என்பது ஆன்ற வென ஆயிற்று என்பர். வீய—செய வென் வாய்பாட்டு வினையெச்சம், வீ - பகுதி, அ - விகுதி, யகரம் - உடம்படுமெய். அறிதிர்—முன்னிலைப்பன்மை இறந்தகால வினைமுற்று; அறி - பகுதி, த் - இடைநிலை, இர் - விகுதி. கூற்று—சொல்லளவில் அஃறிணையாயினும் பொருள் அளவில் உயர்திணை. இங்ஙனமே அரசு, அமைச்சு முதலியவும் கொள்க. ஏல் - ஆம்—அசைகள். (சு)

இடும்பைகூர் நெஞ்சத்தா ரொல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம் - அடம்பம்பூ
அன்னங் கிழிக்கு மலைகடற் றண்சேர்ப்ப
முன்னை வினையாய் விடும்.

---

unlearned live prosperous; it is only because that death considers them as the refuse sugar-cane, their minds being destitute of the sap of knowledge, and so cares not to take them away.

7. O Lord of the cool shores of the billowy ocean where the swans tear to pieces the water flowers! The beggary of those who with distressed hearts wander forlorn in the long streets, exposed to the sight of all, is due to their acts in a former birth.

Digitized by Google

(இ - ள்.) அடம்பம் பூ - அடம்பக்கொடியின் பூக்களை, அன்னம் கிழிக்கும் - அன்னங்கள் (கோதிக்) கிழிக்கின்ற, அலை கடல் - அலைகளையுடைய கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியாகிய கரையையுடைய பாண்டியனே!, (சிலர்) இடும்பை கூர் நெஞ்சத்தார் - துன்பம் மிகுந்த மனமுடையவர்களாகி, எல்லாரும் காண - யாவருங் காணும்படி, நெடும் கடை நின்று - பெரிய வாயில்களிலே நின்று, [பலவீட்டு வாயில்களிற்சென்று என்றபடி], உழல்வது எல்லாம் - (பிச்சைக்காக) வருந்தும் செயல்களெல்லாம், முன்னை வினை ஆய் விடும் - முற்பிறப்பிற்செய்த தீவினையின் பயனாகி நிற்கும், எ-று.

சிலர் வறுமையால் மிகவும் மனநொந்து பிச்சைக்காக வீடுதோறுஞ் சென்று வருந்திநிற்பது முன்னை வினையின் பயன் என்றபடி. இதனால் இப்பிறப்பி லனுபவிக்கும் நன்மை துன்மைகளுக்குப் பழவினையே காரணமென்றதாயிற்று.

இடும்பைகூர் நெஞ்சத்தார் என்பதை காண்போருக்கு அடையாகக்கொண்டு, இரப்போர்படும் அல்லலுக்கு ஐயோவென்று இரக்கமுற்றனரெனப் பொருள்கூறுவது அமையும். இடும்பைகூர் — எழுவாய்த்தொடர்; கூர்நெஞ்சம்—வினைத்தொகை நிலைத்தொடர். நெடுமை - பன்மை. நெடுங்கடை—பலவாயிலென்றுயிற்று. உழல்வது — சாதியொருமை. உழல்வதெல்லாம் - பலவகைப்பட்ட வுழலுதல். ஆய்விடு—ஒரோபகுதி. (எ)

அறியாரு மல்ல ரறிவ தறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல் - வளியோடி
நெய்த னறவுயிர்க்கு நீள்கடற் றண்சேர்ப்ப
செய்த வினையான் வரும்.

(இ - ள்.) வளி ஓடி - காற்று வீசி, நெய்தல் - நெய்த னிலங்களிலே, நறவு உயிர்க்கும் - தேனைச் சிந்துகின்ற, நீள் கடல் தண் சேர்ப்ப - நீண்ட கடலினது குளிர்ச்சியான துறையையுடைய பாண்டியனே, அறியாரும் அல்லர் - (ஒருவர்) அறியாதவர்களு மல்லராகி, அறிவது - வேண்டியதை, அறிந்தும் - தெரிந்திருந்தும், பழியோடுபட்டவை - நிந்தனையோடு கூடிய காரியங்களை, செய்தல் - செய்வது, செய்த வினையான் - (முற்பிறப்பிற்) செய்த தீவினையால், வரும் - உண்டாகும், எ-று.

---

8. When those, who besides being not ignorant, have learned what they ought to know, do things that are blameable, O king of the cool shores of the broad ocean where the water flowers impart their odour to the winds! this certainly proceeds from the acts they have done in a former birth.

Digitized by Google

இப்பிறப்பில் பாவகாரியங்களைச் செய்வதும் முற்பிறப்பின் தீவினைப்பயனும் என்றபடி. பாவகாரியம் செய்வது அறியாமையால் நேர்ந்தாலும் ஒருவகை கூடலாம்; அறிந்தும் செய்வது அவ்வினையின் வசத்தினாலேயே யென்பது கருத்து.

அறியாரும், அறிந்தும்,—உம்மை - சிறப்பு. பழியோடு — பழிக்கப்படுவது பழி, செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர். உயிர்க்கும் என்னும் பெயரொச்சம் சேர்ப்ப என்னும் இடப்பெயரைக் கொண்டது. நீள்கடல்—வினைத்தொகையாதலால் ஈறு இயல்பாயிற்று, [நன்-மெய்-௬-௨௪.] (அ)

ஈண்டுநீர் வையத்து ளெல்லாரு மெத்துணையும்
வேண்டார்மற் றீய விழைபய னல்லவை
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது.

(இ-ள்.) நீர் ஈண்டு வையத்துள் - சமுத்திரம் சூழ்ந்த பூமியுள், எல்லாரும் - எவர்களும், எத்துணையும் - எவ்வளவாயினும், தீய வேண்டார் - தீயவைகளை விரும்பமாட்டார்; நல்லவை - நன்மைகளே, விழை பயன் - அவர்கள் விரும்பும் பயனாகும்; வேண்டினும் - விரும்பினும், வேண்டாவிடினும் - விரும்பாதிருந்தாலும், உறல் பால - வரத்தக்கவை, தீண்டா விடுதல் அரிது - (ஒருவனை) சேராமற் போவது இல்லை, எ-று.

உலகத்திலே எவரும் தீமையை வேண்டார்; நன்மையையே வேண்டுவார்கள்; ஆயினும் வரவேண்டியது வந்துசேருமே யன்றி இவர்கள் விருப்பத்திற்கும் விரும்பாமைக்கும் ஏற்க வில்லா என்பதாம். ஒருவனுக்குச் சம்பவிக்கும் நன்மை துன்மைகள் பழவினையினாலேயே என்பது கருத்து.

இங்ஙனங் கூறியது முற்பாட்டுகளின் கருத்தை உறுதிப்படுத்தற்கென்க. மன்—அசை; மன் என்பதற்குப் பெரும்பான்மை யெனப் பொருள்கொண்டு, தற்கொலை முதலிய தீமைகளையும் விரும்புகிறார்களெனவும் பொருள் கொள்ளலாம்.

தீய — தீமையடியாகப்பிறந்த பலவின்பெயர். தீண்டா — ஈறுதொக்க எதிர்மறைவினையெச்சம். அரிது—இங்கே இல்லையென்னும்

---

9. All who live on this earth surrounded by the ocean desire to be exempt from the afflictive effects of former evil deeds and to experience the pleasant effects of former good deeds; but whether they wish or not, it is impossible to prevent what is ordained to happen.

Digitized by Google

பொருளைத் தந்தது; அருமையடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று. ஈறுபோதலும் இடை உகரம் இ ஆதலும் ஆகிய விகாரங்கள் இங்கே வந்தன; [நன்-பத-சூ. கூ.] (கூ)

சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்ருகா வாமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியு மதனுல்
இறுகாலத் தென்னை பரிவு.

(இ - ள்.) சிறு காலை - அற்பகாலத்தில், [கருப்பட்டகாலத்தில் என்றபடி), பட்ட - உண்டாகிய, பொறியும் - எழுத்துகளும், [அதாவது கடவுளமைத்த விதிகளும்], சிறுகா - குறையமாட்டா; பெருகா - வளரமாட்டா; முறை பிறழ்ந்து வாரா - கிரமம் தப்பி வரமாட்டா; உறு காலத்து - துன்பம் வந்த காலத்திலே, ஊற்று ஆகா - ஊன்றுகோலாகமாட்டா; ஆம் இடத்தே ஆகும் - வரவேண்டிய காலத்திலேயே, வந்துசேரும்; அதனுல் - அப்படியிருப்பதால், இறு காலத்து - மரணகாலத்தில், பரிவு என்னை - துன்பப்படுவது ஏன், எ-று.

கருவுற்றபோதே ஒருவனுக்கு நடக்கவேண்டியது இன்னின்னவெனச் சங்கற்பித்தவை குறைந்தும் வளர்ந்தும் பிறழ்ந்தும் ஆவனவில்லை; வந்தகாலத்து ஸ்திரமாயிராமல் ஆகுங்காலத்திலேயே ஆகும்; ஆதலால் நேரும் துன்பங்களைக் குறித்துத் துக்கிப்பது வீண் என்பது கருத்து.

பொறி—பொறிக்கப்பட்டவை; பொறித்தல் - எழுதுதல். சிறுகா, பெருகா, வாரா, ஆகா,—இவை எதிர்மறைப் பன்மைவினைமுற்று. இவைகளை ஈறுதொக்க வினையெச்சமாகக் கொண்டு ஆகும் என்பதனேடு முடிக்கலாம். சிறுகாலை—சிறுமையாகிய காலம், அதாவது உருவம் கருப்பட்டகாலம். இறுகாலத்து என்பது மற்றதுன்பங்கள் வரும் காலத்துக்கும் உபலக்ஷணம். (கo)

---

10. The effect of the acts of former births does not fall below nor exceed its due proportion, nor does it fail to come in its due turn, nor does it assist out of season, but when it ought to be, there it is. Of what use therefore is sorrow when it afflicts you ?

Digitized by Google

## கஉ-வது. அதிகாரம்.—Chapter XII.

### மெய்ம்மை.—Truth.

*அதாவது உண்மை என்றால் அந்தந்தப் பொருள்களி னியற்கையான தன்மை.*

இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க
நின்றோடிப் பொய்த்த னிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

(இ - ள்.) இசையா ஒரு பொருள் - தமக்குக் கைகூடாத ஒரு பொருளை, இல் என்றல் - (ஆதுலர்க்கு) இல்லையென்று சொல்லுதல், யார்க்கும் வசை அன்று - எப்படிப்பட்டவர்களுக்கும் குற்றமாகாது; வையத்து இயற்கை - (இது) உலகத்தின் சுபாவமாகும்; நிரை தொடீஇ - வரிசையான வளைய லணிந்தவளே!, நசை அழுங்க - ஆசை கெடும்படி, நின்று ஓடி - நெடுங்காலம் கழித்து, பொய்த்தல் - பொய் சொல்லுதல், செய் நன்றி - (ஒருவன் செய்த) உபகாரத்தை, கொன்றாரில் - மறந்தவர்களைக் காட்டிலும், குற்றம் உடைத்து - குற்றமுடையதாகும், எ-று.

இசையாதபொருளை யில்லையென்று சொல்லுதல் குற்றமன்று, ஒருவனுக்குக் கொடுப்பதாக நெடுங்காலம் ஆசைகாட்டிக் கடைசியில் இல்லை யென்பது நன்றிமறப்பதினும் குற்றமாம்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு" என்று கூறியதனால் செய்ந்நன்றி கொன்றாரில் என்றார். இதனால் அயோக்கியனுடையதன்மை சொல்லப்பட்டது.

அன்று—எதிர்மறைக் குறிப்புவினைமுற்று. நிரைதொடீஇ—பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, அளபெடை விளியுருபு. செய்ந்நன்றி — [நன் - உயி. புண. அ - சூ] விதியால் நகரம் மிகுந்தது. (க)

தக்காருந் தக்கவ ரல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்ற விலராவர் - அக்காரம்

---

1. O thou who hast rows of bracelets! To say that one has not what he really does not possess is no harm, and it is only the usage of the world. But to fail after continually promising so that the desire in the promisee may of itself die away is worse than the ingratitude of one who forgets a good done to him.

2. Who ever should eat sugar, it will not taste bitter, and though the celestials themselves should eat the Margosa fruit,

யாவரோ தின்னினுங் கையாதாங் கைக்குமாம்
தேவரோ தின்னினும் வேம்பு.

(இ-ள்.) தக்காரும் - யோக்கியரும், தக்கவர் அல்லாரும் - யோக்கியரல்லாதவர்களும், [அயோக்கியர்களும்], எக்காலும் - எப்போதும், தம் நீர்மை - தம்முடைய குணமானது, குன்றல் இலராவர் - குறைதல் இல்லாதவராவர்; அக்காரம் - வெல்லமானது, யாவர் தின்னினும் - யார் தின்றாலும், கையாது - கசக்கமாட்டாது; வேம்பு - வேப்பங்காய், தேவரோ தின்னினும் - தேவர் தின்றாலும், கைக்கும் - கசப்பைத்தரும், எ-று.

யோக்கியர் மெய்சொல்லும் குணத்திலும் அயோக்கியர்கள் பொய்சொல்லுங் குணத்திலும் குறையார்கள். ஒருவேளை விதிவசத்தால் யோக்கியர் பொய்சொன்னாலும் அயோக்கியர் மெய்சொன்னாலும் அவரவருக்குத் தங்களுக்குரிய குணத்திலேயே பிரியமிருக்கும்; இதை அக்காரமும் வேம்புமாகிய உபமானங்களால் அறிந்துகொள்க.

தக்கார் — தகு என்னும் பகுதியடியாகப் பிறந்த வினையாலணையும்பெயர்; இதில் ககரம் மிகுந்து தன்மையைக் காட்டியதே யன்றிக் காலம் காட்டவில்லை. குன்றல் இலராவார்—குன்றுதல் இலர் என்றும், குன்றுதலை இலர் என்றும் இருவகையினும் கூறலாம்; இல்லையென்னும் குறிப்புவினை செயப்படுபொருள் குன்றியதும் குன்றாததுமாய் வருதலினாலெனவறிக. எழுவாயாக் கொண்டபக்ஷத்தில் "உயர்திணை தொடர்ந்த பொருண்முதலாறும் அதனொடு சார்த்தி னத்திணை முடிபின" என்னும் [பொது - ௬ - ௨௧.] விதியா லமைத்துக்கொள்க. ஏ-ஆம்—அசை. (௨)

காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
இடரொருவ ருற்றக்கா லீர்ங்குன்ற நாட
தொடர்புடையே மென்பார் சிலர்.

(இ-ள்.) ஈரம் குன்ற நாட - குளிர்ச்சியான மலைகளுள்ள நாட்டையுடையவனே!, கால் ஆடு போழ்தில் - (ஒருவனுக்கு) செல்வாக்கு உண்டான காலத்தில், வானத்துமேல் ஆடு - ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற,

---

it will still taste bitter; so the excellent and the vile never change their respective nature.

3. O Lord of the country abounding in cool mountains! In times of prosperity a man's near relations will be as numerous as the stars that traverse the sky, but when he is afflicted by intolerable sorrow, there will indeed be very few among them who will say "We are related to him."

Digitized by Google

மீனில் - நக்ஷத்திரங்களைக் காட்டிலும், கழி கிளைஞர் - கழிக்கத்தக்க சுற்றத்தார்கள், பலர் ஆவர் - அநேகரா யிருப்பார்கள்; ஏலா இடர் - தகாத துன்பங்களில், ஒருவர் உற்றக்கால் - ஒருவர் பொருந்தினால், தொடர்பு உடையேம் - சம்பந்தமுடையரா யிருக்கிறோம், என்பார் - என்று சொல்லுகிறவர்கள், சிலர் - சிலரேயாவர், எ-று.

செல்வமுள்ள காலத்திலே பொய்யான உறவுபாராட்டி நடிப்பவர் பலர்; துன்பமுற்ற காலத்திலே மெய்யாகச் சம்பந்தமுடையவ ரென்று வந்து உதவுவோர் சிலராம். இஃது உலக இயற்கை.

காலாடு—கால் - பாதம், ஆடுதல் - நினைத்தவிடம்போதல், இது இலக்கணையால் செல்வம் பெற்றதற்கு வந்தது. கழி—உரிச்சொல். கிளைஞர்—முறைப்பெயர், கிளையாய் நிற்பவர்கள்; யகரத்துக்கு ஞகரம் போலி. (௩)

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த விருதலையு மெய்தும்
நடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர்.

(இ - ள்.) வடு இலா வையத்து - குற்றமற்ற உலகத்தில், மன்னிய மூன்றில் - நிலைபெற்றிருக்கின்ற (அறம் பொருள் இன்பம் என்னும்) மூன்றிலும், நடுவணது - நடுவிலிருக்கின்ற பொருளை, எய்த - (ஒருவன்) அடைந்ததனால், இருதலையும் - முதலிலுள்ள அறத்தையும் கடையிலுள்ள இன்பத்தையும், எய்தும் - அடைவான்; நடுவணது - பொருளை, எய்தாதான் - அடையாதவன், உலை பெய்து அடுவது போலும் - (கொல்லன்) உலையிலிட்டு காய்ச்சுவது போன்ற, துயர் எய்தும் - துன்பத்தை அடைவான், எ-று.

பொருளைப்பெற்றால் அறம் இன்பம் இரண்டையும் பெறலாம்; அதைப்பெறாவிடி னிவற்றைப் பெறுதலில்லை யென்றதனால், பொரு ளில்லாவிடில் பொய், குறளை, வஞ்ச முதலியவற்றைச் செய்யவேண்டி வருதலால் அறமுதலியவற்றை அடைவது கூடாது.

உலைப்பெய்து அடுவதுபோலுந் துயர்—ஒரு செந்துவை உலையி லிட்டு அட்டால் அதற்கு உலைநீர் காயக்காயத் துன்பம் அதிகரிப்பது போல், பொருள் எய்தாதானுக்கும் பொய் வஞ்சனை முதலியவை மிகு தலால், நாளுக்குநாள் துன்பம் அதிகரிக்கு மென்பது கருத்து.

---

4. He who secures the middle one of these three things which appertain to this world, *viz.*, virtue, wealth and happiness, shall also obtain the other two; but he who secures not that middle one shall suffer affliction as painful as that of being boiled to death.

Digitized by Google

நடுவணது—நடு - பகுதி, அண் - இடத்தைக்காட்டும் விகுதி, நடுவண் என்பதன்மேல் அ - சாரியையும், து - விகுதியும் வந்து நடுவணது என்றாயிற்று. எய்தும்—செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது; (நன்-வினை-உகூ.) (ச)

நல்லாவின் கன்றாயி னாகும் விலைபெறூஉம்
கல்லாரே யாயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும்
புல்லீரப் போழ்தி னுழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

(இ - ள்.) நல் ஆவின் கன்று ஆயின் - நல்லபசுவின் கன்றானல், நாகும் - இளம் பெட்டைக்கன்றும், விலை பெறூஉம் - (நல்ல) விலையை யடையும்; கல்லாரே ஆயினும் - படியாதவர்களா யிருந்தாலும், செல்வர் வாய் சொல் - செல்வர் வாக்கிலிருந்துவரும் சொற்கள், செல்லும் - ஏற்றுக்கொள்ளப்படும்; புல் ஈர போழ்தின் - அற்ப ஈரமுள்ள காலத்தில், உழவே போல் - உழுதலைப்போல, மீது ஆடி - மேலேமாத்திரம் தோன்றி, நல்கூர்ந்தார் சொல் - தரித்திரன் வாய்ச்சொற்கள், செல்லா - ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, எ-று.

நல்லபசுவின் பெண்கன்று விசேஷமான பால் கொடுக்குமென்பதனல் கன்றாயிருந்தாலும் அதிக விலைகொடுத்து வாங்குவார்கள், அதுபோல் செல்வர் மூடர்களாயிருந்தாலும் அவர்கள் வாய்ச்சொல்லினல் பயனுண் டென்பதைப்பற்றி அதனை யேற்றுக்கொள்வார்கள். புல்லீரத்தி லுழுதால் கொழு மேலே நிற்குமேயன்றி உள்ளே செல்லாததுபோலத் தரித்திரனுடைய சொற்கள் மேலுக்குத் தலையசைத்துக் கேட்கப்பட்டாலும் பயனின்மையால் அங்கீகரிக்கப்படமாட்டா என்பது கருத்து.

பெறூஉம்—இன்னேசைக்கு வந்த அளபெடை. நாகும், ஆயினும்,—இவற்றுள் உம்மை - இழிவுசிறப்பு. (ரு)

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார் - தடங்கண்ணாய்

---

5. If it be the calf of a good cow, the heifer too will fetch a good price, so will the words of the rich, though they be unlearned will pass current. Like the ploughing which, when there is little moisture, only scrapes the ground, the words of the poor will be of no avail.

6. O large eyed beauty! though the wild gourd be dressed with salt, ghee, milk, curd and various condiments, its natural bitterness will not be removed; so, although deeply instructed in

உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

(இ-ள்.) இடம் பட - அதிகமாக, மெய் ஞானம் - மெய்யான நூல்களை, என்றும் கற்பினும் - எக்காலமும் கற்றாலும், அடங்காதார் - அடக்கமில்லாதவர்கள், என்றும் அடங்கார் - எப்போதும் அடங்காமலே யிருப்பார்; தடம் கண்ணாய் - விசாலமான கண்களை யுடையவளே! பேய்ச்சுரையின் காய் - பேய்ச்சுரைக்காய்கள், உப்பொடு நெய் பால் தயிர் காயம் பெய்து - உப்பும் நெய்யும் பாலும் தயிரும் காயமும் போட்டு, அடினும் - சமைத்தாலும், கைப்பு அறா - கசப்பு நீங்காதனவாம், எ-று.

ஞானநூல்களை யெவ்வளவு கற்றாலும் அதனால் அடங்காதாருக்கு நன்மையுள்ளகுணம் வருவதில்லை; பேய்ச்சுரைக்காய்க்கு எவ்வளவு சம்பாரங்கள் சேர்த்தாலும் அதன் கைப்பு நீங்காததுபோ லென்றபடி,

இடம்பட - இடமானதுண்டாக, அதாவது புத்தி விசாலமாக, நன்றாக என்றபடி. சுரைக்காய் கைப்பறா என்பதை "உயர்திணைதொடர்ந்த பொருண்முதலாறும்" என்ற விதியினா லமைத்துக்கொள்க. உப்பொடு—ஒடு - எண்ணிடைச்சொல்; இதனை நெய் முதலியவற்றோடுங் கூட்டிக்கொள்க. [நன்-இடை-கூ-கo.] (சு)

தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை யவரோடு பட்டது - புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கு முறும்.

(இ-ள்.) புன்னை - புன்னை மரங்களினது, விறல் - வெற்றிபெற்ற, பூ கமழ் - புஷ்பங்கள் பரிமளிக்கின்ற, கானல் - சோலையையுடைய, வீங்கு - ஓங்குகின்ற, நீர் - கடலினது, சேர்ப்ப - கரையையுடையவனே!, தம்மை இகழ்வாரை - தம்மை நிந்திப்பவர்களை, அவரின் முன் - அவர் நிந்திப்பதற்கு முன்னமே, தாம் இகழ்க - தாம் நிந்திக்கக்கடவர்; அவரோடு பட்டது - அவரோடு தமக்குண்டாகியது, என்னை - என்ன?, உறல் பால - வரவேண்டியவை, யார்க்கும் உறும் - எவர்க்கும் வந்தே தீரும், எ-று.

---

the knowledge of truth, those who have not acustomed themselves to restraint can never be restrained.

7. O Lord of the shores of the swelling ocean covered with groves perfumed with the odour of *Punnai* flowers! Since what is destined will surely happen, reproach those who revile you before they begin to disparage you, for you do not care for them.

Digitized by Google

தம்மை நிந்திப்பவர்களைத் தாட்சணியமில்லாமல் முந்தி நிந்திப் பதே பலம்; அதனால் நன்மையோ தீமையோ வரவேண்டியது வந்தே தீரும். இது புத்திசாலிக்கு ஏற்கையான காரியம், இதனால் நிந்திக்க எத்தனப்படுபவனுடைய நிந்தை குறைவுபடும் என்பது கருத்து.

அவரின்—ஐந்தாம் வேற்றுமை, எல்லைப்பொருள், முன் என்னுங் காலத்திற்கு எல்லையானதுபற்றி யென்றறிக. விறலாவது துற்கந்தத் தை நீக்கும் சாமர்த்தியம். (எ)

ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் - பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு.

(இ-ள்.) ஆ வேறு உருவின ஆயினும் - பசுக்கள் வெவ்வே றுருக் களை யுடையனவா யிருந்தாலும், ஆ பயந்த பால் - அப்பசுக்கள் கொடுத்த பால்கள், வேறு உருவின அல்ல ஆம் - வேறுபட்ட உருவமுள் ளவை யாகமாட்டா; அறம் - தருமம், பால் போல் ஒருதன்மைத்து ஆகும் - பாலைப்போல ஒரேகுணத்தை யுடையதாகும்; நெறி - (அத் தருமத்தைத் தரும்) மார்க்கங்கள், ஆ போல் - பசுக்களைப் போல், ஈங்கு - இவ்வுலகத்தில், உருவு பல கொளல் - பல உருவுகளைக் கொண் டிருத்தலை (உடையனவா யிருக்கும்,) எ-று.

தானம் தவம் விரதம் அவரவர்க்கு இஷ்டமான தெய்வத்தைத் தொழல் முதலிய தர்மகாரண மார்க்கங்கள் பலவாக இருந்தாலும் அவைகளா லுண்டாகும் நற்கதிக்கு ஏதுவான தருமம் ஒன்றே யாம். அஃது, பசுக்கள் வெவ்வே றுருவங்க ளுள்ளனவாயினும் அவைகளா லுண்டான பால் ஒருதன்மையா யிருப்பதுபோ லென்றபடி. இப்படி யிருப்ப தவற்றி னுண்மையென்பது கருத்து.

ஆ—பால்பகா வஃறிணைப் பெயர். உருவின—உரு - பகுதி, இன்— சாரியை, அ - பலவின்பால் விகுதி. தன்மைத்து — குறிப்புவினையா லணையும்பெயர். கொளல்—தொழிற்பெயர். (அ)

யாஅ ருலகத்தோர் சொல்லில்லார் தேருங்கால்
யாஅ ருபாயத்தின் வாழாதார் - யாஅர்

---

8. Though cows be of different colors, the milk they yield is not different in color. Like milk, the fruit of virtue is of one nature, though the ways of virtue itself are diverse as the color of the cows.

9. If weighed well, who is there on this world to whom no blame can be attached ? Who is there that does not try to live by some (cunning) means or other ? Who is there that

Digitized by Google

இடையாக வின்னாத தெய்தாதார் யாஅர்
கடைபோகச் செல்வமுய்த் தார்.

(இ-ள்.) தேருங்கால் - ஆராயுமிடத்து, யார் - எவர், உலகத்து - பூமியில், ஓர் சொல் இல்லார் - ஒரு (நிந்தைச்) சொல்லை உடையரா யிராதவர்கள்?, யார் - எவர், உபாயத்தின் - ஒரு ஏதுவினாலே, வாழா தார் - வாழாதிருப்பவர்கள்?, யார் - எவர், இடை ஆக - (வாழ்நாளின்) மத்தியில், இன்னாதது - துன்பத்தை, எய்தாதார் - அடையாதவர்கள்?, யார் - எவர், கடைபோக - (வாழ்நாள்) கடைசிவரையிலும், செல்வம் உய்த்தார் - சம்பத்தைப் பொருந்தினவர்கள்? [ஒருவருமிலர்], எ-று.

இவ்வுலகத்தில் எல்லாரும் நிந்தைப்படுபவர்களும், ஒரு ஏதுவி னால் வாழ்பவர்களும், நடுவில் துன்பமுடையவர்களும், கடைசிவரை யிலு மில்லாமல் சிலகாலம் வரைக்குமே செல்வ முடையவர்களுமா யிருக்கிறார்கள். இவையெல்லாம் உலகத்தின் உண்மையென்பது கருத்து.

யாஅர்—அசை நிறைக்கவந்த அளபெடை. உபாயத்தின்—இன்-ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. உபாயங்களாவன—உழவு, வாணி பம், சேவகம் பிச்சை முதலியனவாம். (௯)

தாஞ்செய் வினையல்லாற் றம்மொடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை - ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த வுடம்பும் பயமின்றே
கூற்றங்கொண் டோடும் பொழுது.

(இ-ள்.) தேரில் - (நன்றாய்) யோசித்தால், தம்மொடு செல்வது - (இறந்துபோகும்போது) தம்மோடுகூட வருவது, தாம் செய் வினை அல்லால் - அவரவர் செய்த நல்வினை தீவினைகளே யல்லாமல், யாங் கணும் - எவ்வுலகத்தினும், பிறிது இல்லை - வேறு இல்லை ; கூற்றம் - யமன், கொண்டு ஓடும் பொழுது - கொண்டு போகும்போது, ஆங்கு - அப்படி, தாம் போற்றி - தாம் பாதுகாத்து, புனைந்த - (ஆடையாபர ணாதிகளால்) அலங்கரித்த, உடம்பும் - சரீரமும், பயம் இன்று - பிர யோசன மில்லை, எ-று.

---

does not suffer from affliction in the course of his life? And who is there that continued prosperous during the whole course of his life?

10. If considered well on all sides, there is nothing else that goes with men but the actions they have done here below; when death carries them away, even the body which they cherished and adorned is of no use.

Digitized by Google

தான் போற்றிப்புனைந்த வுடம்பும் சாம்போது பயனில்லாமற் போக, பொருண்முதலியவை கூட வரா; தான்செய்த வினையொன்றே தன்னைப் பின்பற்றும் என்பது கருத்து.

இதுவும் பொருள்களி னுண்மை. யாங்கண்—யா - வினு விடைச் சொல், கண்—இடப்பெயர், பண்புத்தொகை, ஙகரம் - தோன்றல் விகாரம். கூற்றம்—அம் - சாரியை. (கo)

---

## கங - வது அதிகாரம்.—Chapter XIII.

---

### தீவினையச்சம்.—Fear of misconduct.

அதாவது தீவினை செய்வதற்கு அஞ்சி நடக்கவேண்டு மெனப் பதைப்பற்றிச் சொல்லியது. பொருள்களின் மெய்ம்மையை யுணர்தலினுலே தீமை பயக்குமவை இன்னின்னவையென்று தெரியும், ஆனதைப்பற்றி மெய்மையின் பின்னர் இது வைக்கப்பட்டது.

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு - தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன் கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

(இ-ள்.) சுடு காடு - சுடுகாடுகள், துக்கத்துள்-துக்கத்தைத்தரும் பாபகாரியங்களில், தூங்கி - சுகித்திருந்து, துறவின்கண் - (அவற்றைத்) துறக்கும் வழியில், சேர்கலா - சேரமாட்டாத, மக்கள் - மனிதர்களுடைய, பிணத்த - உயிர்போன உடல்களை யுடையனவாம்; புலன் கெட்ட - அறியுந்திறங் கெட்ட, புல் அறிவு ஆளர் - அற்ப அறிவை யுடையவர்களது, வயிறு - வயிறுகள், தொக்க - சேர்ந்த, விலங்கிற்கும் - மிருகங்களுக்கும், புள்ளிற்கும் - பட்சிகளுக்கும், காடே - இடுகாடேயாம், எ-று.

மனிதப் பிணங்களை யிடுகிற சுடுகாட்டைப் போல புத்தியில்லாதவர்களுடைய வயிறுகள் மிருகங்களையும் பட்சிகளையும் கொன்றிடும்படியான சுடுகாடு என்று நிந்தித்ததனுல் விவேகமுள்ளவன் மிருக

---

1. As a burning ground is the home of the dead bodies of those who enjoying as it were the miseries of domestic life betake not themselves to asceticism, so the stomachs of the unwise who are incapable of any discernment, is the recepticle for the many beasts and birds which they daily eat.

Digitized by Google

பட்சிகளைக் கொன்று தின்பது தீவினைகளுள் தலையானது என்பது கருத்தாம்.

"துக்கத்துட்டூங்கித் துறவின்கட்சேர்கலா மக்கள்" என்றதனால் உடம்பைப் போற்றுதலே யன்றி உயிர்க் குறுதியானவற்றைச் செய்யாதவர்கள் என்பதாம். சேர்கலா—ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; சேர் - பகுதி, கல் - ஆற்றலைக்காட்டும் விகுதி, ஆ - எதிர்மறை விகுதி. பிணத்த—பலவின் படர்க்கைக் குறிப்பு வினைமுற்று. காடே—ஏ - தேற்றம். புன்மையான அறிவை யாள்பவர் புல்லறிவாளர்; புல்லறிவு - உண்ணுதல் உறங்குதல் முதலிய சாதாரண அறிவு. (க)

இரும்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்க்
கரும்பார் கழனியுட் சேர்வர் - சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டு வைப்பார்.

(இ - ள்.) சுரும்பு ஆர்க்கும் - வண்டுகள் சப்திக்கின்ற, காட்டுள் ஆய் வாழும் - காட்டினிடத்து இருந்து வசிக்கின்ற, சிவலும் - கவுதாரியையும், குறும்பூழும் - காடையையும், கூட்டுள் ஆய் - கூடுகளில் இருக்கும்படி, கொண்டு வைப்பார் - பிடித்து வந்து அடைத்து வைப்பவர்கள், இரும்பு ஆர்க்கும் - இருப்பு விலங்குகள் சப்திக்கின்ற, காலர் ஆய் - கால்களை யுடையவர்களாய், ஏதிலார்க்கு - பகைவர்களுக்கு, ஆளாய் - (அடிமை) ஆள்களாய், கரும் பார் - வட்டைநிலத்திலும், [அல்லது, கரும்பு ஆர் - கரும்புகள் விளைந்த,] கழனியுள் - கழனியிலும் [கருப்பந் தோட்டங்களில் என்றபடி], சேர்வர் - (வேலைசெய்யும்படி) சேர்வார்கள், எ-று.

காடை கவுதாரி முதலியவற்றைப் பிடித்துக் கூட்டிலடைத்து வைப்பவர்கள் மறுமையில் பகைவர்க்கு அடிமைகளாய் காலில் விலங்கு பூண்டு கழனிகளில் வேலை செய்விக்கப்படுவார்க ளென்பதாம்.

கரும் பார்—கருமையான பார், இங்கே கருமையாவது வலிமை, அதாவது வட்டையாயிருத்தல், பயனில்லாத நிலம். கரும்பாருள்ளும் கழனியுள்ளும் என முதல்பட்சத்தில் உம்மைத்தொகையாகவும், கரும்பார்ந்த கழனியுள் என இரண்டாவதுபட்சத்தில் வினைத்தொகையாகவுங் கொள்க. வைப்பார்—வினையாலணையும் பெயர். (உ)

2. Those who confine in cages partridges and quails which live free in the woods resounding with the hum of bees, will with their legs fettered, become the slaves of their enemies and work in arid fields of hard soil.

Digitized by Google

அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித்
துக்கத் தொழுநோ யெழுபவே - அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.

(இ - ள்.) அக்கால் - அந்தக்காலத்தில், [முற்சனனத்தில்], அலவனை - நண்டை, காதலித்து - விரும்பி, கால் முரித்து - காலையொடித்து, தின்ற - (அதனைத்) தின்ற, பழவினை - (அதனாலுண்டாகிய) கருமம், வந்து அடைந்தக்கால் - (பயன்பெறும்படி) வந்து சேர்ந்த போது, அங்கை - உள்ளங்கையானது, அக்கு போல் - சங்குமணியைப்போல, ஒழிய - நீங்க, விரல் அழுகி - விரல்கள் அழுகிப்போய், துக்கம் - துக்கத்தைத்தருகின்ற, தொழு நோய் - பலவகைக் குட்ட நோய்கள், எழுப - உண்டாகப்பெறுவார் (பாவிகள்), எ-று.

நண்டை முரித்துத் தின்றவர்க்குக் குட்டநோ யுண்டா மாதலால் அதுவும் தீவினை யென்பதாம்.

"அகமுனர்ச்செவிகை வரினிடை யனகெடும்" என்பதனால் அகங்கை அங்கை யென்றாயிற்று; [மெய் - சூ - ௧௧.] பாவிகள் நோயெழுப என்பது "உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்" என்கிற [பொது - சூ - ௨௬] விதியால் பொருந்தியது. சங்குசுட்ட சுண்ணாம்பு என்பதுபோல தின்ற என்பது பழவினையென்னுங் காரியப்பெயரோடு முடிந்தது. (௩)

நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும் - பரப்பக்
கொடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

(இ-ள்.) நெய் போல்வதும் - நெய்யைப்போல் இதமாகிய பொருளும், நெருப்பு அழல் - நெருப்பினது உக்கிரத்தை, சேர்ந்தக்கால்- சேர்ந்தால், எரிப்ப சுட்டு - (உடலை) யெரிக்கும்படி காய்ந்து, எவ்வம் நோய் - துன்பப்படுத்தும்படியான நோயை, ஆக்கும் - உண்டாக்கும்;

3. Those who in a former birth desiring crabs, broke off their limbs and ate them, shall, when the evil effects of that befall them, wander afflicted with leprosy, and their fingers will rot away leaving their palms white as chank.

4. Even such a cool thing as ghee, when approached by the heat of fire, will cause intolerable pain by fierce burning; so will they become guilty of many evil actions, who though not wicked in themselves, will become so by associating with those who are wicked.

Digitized by Google

(அதுபோல) கோடாரும் - (நல்லொழுக்கத்திற்) கோணி நடவாதவரும், கடு வினையார் ஆகியார் - கடுமையான தீவினைசெய்பவர்களை, சார்ந்து - சேர்ந்து, கோடி - (தம் ஒழுக்கத்தில்) கோணி, பரப்ப - மிகவும், கொடு வினையர் ஆகுவர் - கொடுமையான வினைகளைச் செய்பவராவார்கள், எ-று.

நெய் உடம்பிற்பட இதமானதா யிருந்தாலும் காய்ந்துவிடின் உடம்பைச்சுட்டு நோயுண்டாக்குவதுபோல, யோக்கியரும் தீவினை செய்பவரோடு சேர்ந்தால் தீவினையே அதிகமாகச் செய்பவ ராவார்கள்.

போல்வதூஉம் — இசைநிறை. கோடார்—கோடு - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி புணர்ந்து கெட்டது, ஆர் - விகுதி; வினைப்பகுதி இடைநிலையின்றி ஆர் விகுதியோடு சேர்ந்தால் எதிர்மறையைக் காட்டுமென்றே சொல்லலாம். உடன்பாட்டில் கோடினார், கோடுகின்றார், கோடுவார் என்று வரும். ஆகியார்ச்சார்ந்து—இரண்டாம்வேற்றுமைத் தொகையாகலின் உயர்திணைப் பெயர்முன் வலி மிகுந்தது. "இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்" என்பது விதி. (௪)

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

(இ - ள்.) பெரியவர் கேண்மை - பெரியோர்களுடைய சிநேகமானது, பிறை போல - இளஞ் சந்திரனைப்போல, வரிசை வரிசை ஆ - கிரமக் கிரமமாக, நாளும் நந்தும் - தினந்தோறும் வளரும்; சிறியார் தொடர்பு - சிற்றறிவுடையாரது சிநேகம், வான் ஊர் - ஆகாயத்தில் தவழ்கின்ற, மதியம் போல் - பூர்ணசந்திரனைப்போல, வைகலும் - தினந்தோறும், வரிசையால் - கிரமமாக, தானே தேயும் - தானே குறைந்துவிடும், எ-று.

அயோக்கியரோடு உறவாடுவதைவிட்டு யோக்கியரோடு உறவாட வேண்டு மென்பதாயிற்று.

நாளும், வைகலும்,—இரண்டிடத்திலும் உம் - முற்றும்மைகள். பெரியவர் சிறியார் என்பவற்றிற்கு அரிது என்பதற்கு எழுதியுள்ளதுபோலக் கொள்க. (௫)

---

5. Friendship with the wise will daily increase in regular gradation like the crescent moon and the friendship with the base will daily decrease like the full moon which rides through the sky.

Digitized by Google

சான்றோ ரெனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்க ணில்லாயின்-சார்ந்தோய்கே
சாந்தகத் துண்டென்று செப்புத் திறந்தொருவன் [ள்
பாம்பகத்துக் கண்ட துடைத்து.

(இ - ள்.) சான்றோர் என மதித்து - சற்குணம் நிறைந்தவர்க ளென்று நினைத்து, மன் சார்ந்தாய் - (சிலரை) மிகவும் நேசித்தாய்; சார்ந்தாய்க்கு - (அப்படி) நேசித்த உனக்கு, சார்ந்தார்கண் - (நீ) சேர்ந்தவரிடத்து, சான்றாண்மை - (அந்த) சற்குணநிறைவு, இல் ஆயின் - இல்லையானால், சார்ந்தோய் - (அவர்களை) அடுத்தவனே!, கேள் - (அதற்கு நான் சொல்லும் உவமையை) கேள்; (அது) ஒருவன் - ஒருவன், அகத்து சாந்து உண்டு என்று - உள்ளே வாசனை வஸ்து இருக்கிறதென்று நினைத்து, செப்பு திறந்து - பரணியைத் திறந்து, அகத்து - உள்ளே, பாம்பு கண்டது உடைத்து - பாம்பைப் பார்த்த உவமானத்தையுடையது, எ-று.

நீ சிலரை ஆராயாமல் மஹாகுணவான்களென்று நினைத்து நட்புக்கொண்டு பின்பு அவர்களிடத்து அந்த நட்புக்குணம் இல்லையென்றுனக்குத் தெரிந்தால் சாந்துச்செப்பு என்று ஒருபரணியை நீ திறந்து அச்சாந்தில்லாமல் பாம்பிருக்கக் கண்டதுபோல் உன்குற்றத்தால் வந்ததென நினைத்துக்கொள். இதனால் ஒருவனை நன்காராய்ந்து நேசிக்க வேண்டும்; அப்படி நேசியாமற்போனால் அதனால் செப்புக்குள்ளிருந்த பாம்பினால் தீமை வருவதுபோலத் தீமை யுண்டாகும் ஆகையா லதற்கஞ்சவேண்டு மென்பதாயிற்று.

சான்றோர்—சால் - பகுதி, (=நிறைவு), ஆர் - விகுதி, றகரம் இடைநிலை, லகரம் னகரமானது சந்தியும் விகாரமும், விகுதி ஆகாரம் ஓகாரமானது [பொது-நன்-சூ-உ, விதியால்.] மன்—உரிச்சொல். சார்ந்தாய்க்கு— முன்னிலை வினையாலணையும் பெயர். சார்ந்தோய்—விளி, ஈற்று னகரம் யகரமானது விளியுருபு. கண்டது — வினையாலணையும் பெயர், இங்கே காணப்பட்ட உபமானத்தை யுணர்த்திற்று. (௬)

யாஅ ரொருவ ரொருவர்தம் முள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர் சாரல்

---

6. Thou hast closely associated with people, thinking them to possess good qualities; but if you should find such associates to be wanting in those qualities, listen, O thou who associated with them! it is like a man opening a box expecting to find some unguent within but seeing a snake instead.

7. Listen, O lord of the country whose mountain slopes glitter with brilliant gems! Since the actions of men differ so

Digitized by Google

கனமணி நின்றிமைக்கு நாடகேண் மக்கண்
மனம்வேறு செய்கையும் வேறு.

(இ-ள்.) சாரல் - மலைச்சாரல்களிலே, கன மணி நின்று இமைக்கும் - காந்திமிகுந்த இரத்தினங்கள் இருந்து பிரகாசிக்கின்ற, நாட - நாட்டை யுடைய அரசனே!, கேள் - கேட்கக்கடவாய்; ஒருவர்தம் உள்ளத்தை - ஒருவருடைய மனத்தை, தேரும் துணைமை யுடையவர் ஒருவர் - ஆராய்ந்தறியும் வல்லமை யுடையவராகிய ஒருவர், யார் - எவர் இருக்கிறார்கள்?, [ஒருவருமில்லை]; (ஏனெனில்) மக்கள் மனம் வேறு - மனிதர்கள் இதயமானது வேறு தன்மையையுடையது; செய்கையும் வேறு - (அவர்கள்) செய்யுங் காரியமும் வேறாயிருக்கின்றது, எ-று.

உலகத்தில் மனிதர் மனத்தில் நினைத்தபடி செய்யாமல் மேலுக்கு வஞ்சனையாய் வேறுவிதம் நடத்துகிறார்க ளாகையால், செய்கையினாலே உள்ளத்தை யின்னபடி யென்று அறியக்கூடாது; ஆகவே செய்கையைக்கொண்டே நல்லவரொன்று எண்ணவேண்டாம்; அப்படித் தேராதபோது அவர் கூட்டுறவுக்கு அஞ்சவேண்டும் என்பதாயிற்று.

துணைமை — மை - பண்புப்பெயர் விகுதி. வேறு — ஐம்பான் மூவிடங்கட்கும் பொதுவான குறிப்பு வினைமுற்று. சாரல்—தொழிற்பெயர், இடப்பெயர்க்கு ஆகுபெயர். (எ)

உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகேண்மை—தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்.

(இ-ள்.) புனல் - அருவிநீர், தெள்ளி - தெளிந்து, செதும்பு - சேற்றை, நின்று அலைக்கும் - (தான்) இருந்து போகும்படி செய்கிற, பூ குன்ற நாட - அழகிய மலையுள்ள நாட்டையுடையவனே!, உள்ளத்தான் நள்ளாது - மனதினால் விரும்பாமல், உறுதி தொழிலர் ஆய் - உறுதியான தொழிலைச் செய்பவராய், கள்ளத்தால் நட்டார் - வஞ்சனையால் சிநேகித்தவர்களுடைய, கழி கேண்மை - மிகுதியான சிநே

---

much from their mind, who is there that can truly understand what is passing in another's mind?

8. O lord of the beautiful mountain country where the clear streams wash away the mud! The great friendship of those who without loving at heart pretend to have a close attachment to one, will only break his heart eventually.

Digitized by Google

கம், மனத்துக்கண் - மனதில், மாசு ஆய்விடும் - குற்றமுள்ள தாய் நிற்கும், எ-று.

மனமொப்பி நேசியாமல் இவர் உண்மையாக நேசித்தவரென்று நம்பத்தக்க உறுதியான செய்கைகளைச் செய்து கபடமாக நேசிப்பவர்களுடைய சிநேகம் மனதிற் குற்றமாயிருக்கும், அதாவது பின்னிட்டுத் தீமையை விளைக்கு மென்பதாம். இதனால் அதற்கு அஞ்சவேண்டு மென்பதாயிற்று.

நள்ளாது—நள் - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, து - வினையெச்ச விகுதி. நட்டார்—நள் - பகுதி, ட் - இடைநிலை, ளகரம் டகரமானது சந்தி, ஆர் - விகுதி; வினையாலணையும் பெயர். கழி — உரிச்சொல். கேண்மை—கேள்-[=உறவினன், க்ஷேமத்தை விசாரிப்பவனுனதால்] பகுதி, மை - பண்புப் பெயர்விகுதி. தெள்ளிப்புலற் செதும்பு நின்றலைக்கும் — அருவிநீர் சேற்றைப் போக்கித் தெளிவாய் நிற்கின்றதென்பதாம். தெள்ளி — வினையெச்சம், தெள்ளு - பகுதி. அலைக்கும்—(அலையச்செய்கிற), பிறவினைப்பெயரொச்சம். (அ)

ஒக்கிய வொள்வாடன் ஞென்னார்கைப் பட்டக்கால்
ஊக்க மழிப்பதூஉ மெய்யாகும்—ஆக்கம்
இருமையுஞ் சென்று சுடுதலா னல்ல
கருமமே கல்லார்கட் டீர்வு.

(இ-ள்.) ஒக்கிய - (தான் பிறன்மேல்)வீசிய, ஒள் வாள் - பிரகாசமான கத்தி, தன் ஒன்னார் கை பட்டக்கால் - தன் சத்துருவின் கையிற் சேர்ந்தால், ஊக்கம் அழிப்பது மெய் ஆகும் - (தன்) தைரியத்தைப் போக்கடிப்பது உண்மையாகும்; ஆக்கம் - (தான் மூடருக்குச்செய்த) உபகாரம், இருமையும் சென்று சுடுதலால் - (இம்மை மறுமை என்கிற) ஈரிடத்திலும் தொடர்ந்து வருத்துவதால், கல்லார்கண் தீர்வு - படிப்பில்லாத அயோக்கியரிடத்தினின்றும் நீங்கி யிருப்பது, நல்ல கருமமே - நல்ல காரியந்தான், எ-று.

தான் ஒருவனைக் கொல்லுதற்கு மேலெடுத்த வாள் தவறிக் கொல்லுவினைக்கப்பட்டவன் கையிற் சேர்ந்தால், கத்தியைத் தூக்கினவனுக்குத் தைரியம் அழிந்து போகின்றது; ஆதலால் அவ்வாளாயுதத்துக்கு அஞ்சிப் பகைவரிடத்தினின்றும் நீங்கவேண்டும். அப்படியே தான்

---

9. Should the sword raised by one against his enemy fall (by chance) into the hands of that enemy, then his courage would surely fail. Since the good done to the ignorant will by the use applied to by him affect the doer both in this world and the next, it is better to ignore them altogether.

Digitized by Google

ROJA. MUTHIAH
ARTIST

அயோக்கியனுக்கு ஓர் உபகாரம் செய்தால் அவன் அதைக் கொண்டு பல அக்கிரமங்கள் செய்வானாதலால் உபகாரம் செய்தவனுக்கு இம்மையில் நன்மையும் கீர்த்தியும் கெடுவதுமன்றி மறுமையில் நரகத்துக்கு மேதுவாகும். ஆகவே வாளாயுதத்துக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அயோக்கியனுக்கு உபகாரம் செய்வதில் மிகவும் அஞ்சவேண்டுமென்பது கருத்து.

அழிப்பதூஉம் — உலகத்தில் பல காரியங்களைப்போல இதுவும் மெய்யாயிருக்குமெனப் பொருளைத் தருதலால் எதிரது போற்றிய எச்சவும்மை; இன்னிசை யளபெடை. ஓக்கிய—பிறவினைப்பெயரெச்சம், ஓக்கு - பிறவினைப் பகுதி, ஓங்கு - தன்வினைப்பகுதி, மெல்லொற்று வல்லொற்றானது பிறவினைக்குறி, இன் - இடைநிலை ஈறுதொக்கது, அ - பெயரெச்சவிகுதி, யகரம் - உடம்படுமெய். ஆக்கம்—பொருட்பெயர்; அம் - செயப்படுபொருள் விகுதி ; இங்கு பொருளெனக் கொள்ளினும் குற்றமில்லை. கல்லார்கண் — ஏழாம் வேற்றுமை, கண் - இங்கு நீக்கப் பொருளில் வந்தது. கல்லாதார் — கல்லாமை என்பது அயோக்கியதைவளையிற் கொள்ளப்பட்டது.

மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென் றேங்கி
எனைத்தூழி வாழ்தியோ நெஞ்சே—எனைத்தும்
சிறுவரையே யாயினுஞ் செய்தநன் றல்லால்
உறுபயனோ வில்லை யுயிர்க்கு.

(இ - ள்.) நெஞ்சே - மனமே !, (நீ) மனை பாசம் கைவிடாய் - மனையாளிடத்துள்ள ஆசையை விடமாட்டாய்; மக்கட்கு என்று - மக்களுக்கு (பொருள்முதலியன சேர்த்துவைக்க வேண்டும்) என்று, ஏங்கி - ஏக்கமுற்று, எனைத்து ஊழி - எவ்வளவு காலம், வாழ்தியோ - வாழ்வாயோ ?, சிறுவரையே ஆயினும் - அற்பகாலமானாலும், எனைத்தும் - எவ்வளவாவது, செய்த நன்று அல்லால் - செய்த நற்காரியமேயல்லாமல், உயிர்க்கு - ஆத்துமாவுக்கு, உறு பயனோ - அடையும்படியான நற்பயனோ, இல்லை - (வேறு) இல்லை, எ-று.

மனமே ! மனையாளிடத்தும் மக்களிடத்தும் ஆசாபாசம் நீங்காமல் அவர்களுக்கே வேண்டுங் காரியங்களைச் செய்யவேண்டுமென்று பெரிய ஏக்கங்கொண்டு எத்தனைகாலம் நிற்கப்போகிறாய்? இவ் வேக்

---

10. O my heart! Thou wilt not give up thy love for thy wife. How long wilt thou live longing to save every thing for the sake of thy children? There is no advantage that accrues to the soul except the good thou doest even though it be but for a short time.

Digitized by Google

கத்தோடேயே மாள்வாயல்லது வேறொரு நற்பயனைப் பெற்றாயில்லை; நீ இருக்கும் சொற்பகாலத்தி லாகிலும் தான தரும முதலிய நற்காரியங்கள் செய்தால் அதுதான் ஆத்துமாவுக்கு நற்பயனுரும். இதனால் உயிருக்கு உறுதிசெய்யாமல் வீண்காலம் கழிப்பதற்கு அஞ்சவேண்டுமென்பது கருத்து.

மனை—மனையாளுக்கு ஆகுபெயர். எனைத்து — என் என்பதன் மேல் அளவைக்காட்டுகிற ஐ விகுதி பெற்ற எனை என்பது பகுதி, து - விகுதி. முந்தி யெழுதியதுபோல் எ என்னும் வினாவின்மேல் னகரச்சாரியை வந்ததென்றும் கொள்ளலாம். வாழ்தி—இ-முன்னிலை விகுதி, த் - எழுத்துப்பேறு; தி - விகுதியென்பது நேர்; இங்கே எதிர் காலத்துக்கு வந்தது. வாழ்தியோ—ஓ - வினாப்பொருளில் வந்தது, இகழ்ச்சியைக் குறிக்கின்றது. உறுபயனோ—இதில் ஓகாரம் முந்திச் சொன்ன பொருளினின்றும் வேறுந்தன்மையைக் குறிக்கின்றது.(௧0)

அறத்துப்பால் முற்றிற்று.

---

உ - வது.

# பொருட்பால்.

# ON PROPERTY.

அவற்றுள் எல்லாப்பொருள் நுட்பத்தையு மறிவதற்குக் காரணமாகிய கல்வி முதலில் கூறப்பட்டது.

---

## ௧௪ - வது. அதிகாரம்.—Chapter XIV.

---

### கல்வி.—Learning.

அதாவது கற்கவேண்டிய நூல்களைக் கற்பது.

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு.

---

1. The beauty of the hair, the beauty of the border of the encircling garment and the beauty of the fragrant sandal paste are no beauties but the beauty of learning is the only real beauty, for it endues one with the mental excellence by which he walks in a righteous path.

Digitized by Google

(இ-ள்.) குஞ்சி அழகும் - மயிர்முடியி னழகும், கொடு தானை கோடு அழகும் - வளையும்படியான ஆடையினது கரை யழகும், மஞ்சள் அழகும் - பூச்சினது அழகும், அழகு அல்ல - அழகாக மாட்டா; நெஞ்சத்து - மனதில், நல்லம் யாம் என்னும் - யாம் நல்லவர்களாயிருக்கக்கடவோ மென்கிற, நடுவு நிலைமையால் - நடுவு நிலைமையைத் தருதலால், கல்வி அழகே - கல்வியினு லுண்டாகின்ற அழகே, அழகு - அழகாகும், எ-று.

மயிர்களைச் சீர்ப்படுத்தி முடிப்பதனாலும், ஓரங்களில் பட்டுக்கரைபோட்ட வஸ்திரங்களைத் தரிப்பதனாலும், நல்ல பரிமளத்திரவியங்களை மெய்யிற் பூசுவதனாலும் உண்டாகின்ற அழகு அழகாக மாட்டா; நாம் மறுமைக்கு அஞ்சிப் பக்ஷபாதமில்லாமல் நடக்கவேண்டுமென்கிற நடுவுநிலைமையைக் கல்வி யுண்டாக்குவதால் அதனால் வரும் அழகே விசேஷ மென்பதாம்.

மஞ்சள் என்பது பூசத்தக்க வாசனைத் திரவியங்களுக்கெல்லாம் உப லக்ஷணமாகக் கொள்ளப்பட்டது, [நன் - பொது - சூ - எ.] கொடுமை என்பது இங்கே மடியுந்தன்மைக்குக் கொள்ளப்பட்டது. நல்லம்—தன்மைப்பன்மைக் குறிப்பு வினை முற்று. அழகே — இதில் ஏகாரம் - பிரிநிலை. (௧)

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.

(இ-ள்) இம்மை பயக்கும் - இவ்வுலக சௌக்கியத்தைக் கொடுக்கும்; ஈய - (பிறருக்குக்) கொடுப்பதனால், குறைவு இன்று - குறையுந் தன்மையை யுடையதன்று; தம்மை - (கற்றவராகிய) தம்மை, விளக்கும் - விளங்கச்செய்யும், [அதாவது எங்கும் புகழ்பெறச் செய்யுமென்றபடி]; தாம் உளரா - தாம் உயிரோடிருக்க, கேடு இன்று - கெடுதலை யுடையதன்று; (ஆதலால்) எம்மை உலகத்தும் - எத்தன்மையான உலகத்திலும், கல்வி போல் - கல்வியைப்போல, மம்மர் அறுக்கும் மருந்து - மயக்கத்தை அறுக்கும்படியான மருந்தை, யாம் காணேம் - யாம் கண்டோ மில்லை, எ-று.

---

2. We see no medicine on this earth which can so completely destroy delusion as learning, for it gives its possessor the benefits of this world, it renders him very illustrious, it does not diminish when imparted to others, and it does not perish as long as he lives.

Digitized by Google

இம்மையிற் சுகத்தையுண்டாக்கி, பிறருக்குக் கொடுக்கவும் குறைபடாமலிருந்து தமக்குப் புகழை யுண்டாக்கி, தாமிருக்கவும் அழிதலில்லாம லிருப்பதால் எல்லாப்பொருளிலும் கல்வியே மேலானதென்பது கருத்து.

இதனை மருந்தென்றது மயக்கத்தைத் தீர்த்தலும் சுகத்தை யுண்டாக்குதலு மாகிய காரணங்களா லென்க. மற்றமருந்து சுகத்தைக் கொடுத்தாலும் பிறருக்குக் கொடுப்பதனால் குறையும், தாம் இருக்கும்போதே கெடவும் கெடும், ஆதலால் இம்மருந்து எல்லாமருந்திலும் மேலென்றார்.

ஆல்—அசைகள். இம்மை—சுகத்திற்கு ஆகுபெயர். எம்மை — அம்மை இம்மை என்பதைப்போல் மை விகுதி இடப்பொருளில் வந்தது. (௨)

களர்நிலத்துப் பிறந்த வுப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோ ராயினுங் கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

(இ-ள்.) களர் நிலத்து பிறந்த உப்பினை - உவர் நிலத்தில் உண்டான உப்பை, சான்றோர் - யோக்கியர்கள், விளை நிலத்து நெல்லின் - கழனியில் விளையும் நெல்லைக்கொள்வதுபோல, விழுமிது ஆ கொள்வர் - மேன்மையான பொருளாகக் கொள்வார்; (அதுபோல்) கடைநிலத்தோர் ஆயினும் - கீழ்ச்சாதியிற் பிறந்தவர்களானாலும், கற்று அறிந்தோரை - (நூல்களை) கற்று (அவற்றின் சாரத்தை) அறிந்தவர்களை, தலை நிலத்து - மேலான ஜாதியில், வைக்கப்படும் - வைக்க வேண்டும், எ-று.

பிறப்பைப்பற்றி உயர்வு தாழ்வு யோசியாமல் அவர்களிடத் துண்டான கல்விச் சிறப்பினால் அவரை உயர்பிறப்பாளராக்கொண்டு அவர்களிடத்தில் கற்க முயலவேண்டு மென்பது கருத்து.

நெல்லின்—இன் உருபு ஒப்புப்பொருளில் வந்தது. விழுமிது—வினையாலணையும் பெயர், விழுமு - பகுதி, இன் - இடைநிலை, ஈறு தொக்கது, து - ஒன்றன் விகுதி. படும் — இது ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான வியங்கோள் வினைமுற்று; அல்லது விதிப்

---

3. Wise people take the salt produced in a barren soil to be more valuable than the rice of a fertile soil; in like manner, though the learned be of the lowest birth, they will still be put in the highest place.

Digitized by Google

பொருளையுடைய வினைமுற்று. இதை நன்னூல் உரையாசிரியர் தேற்றப் பொருளில் வந்த தொழிற்பெய ரென்கிறார். (ங)

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வார்
எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

(இ - ள்.) வைப்புழி - வைத்த இடத்தில், கோள் படா - (பிறரால்) அபகரிக்கப்படமாட்டாது; வாய்த்து - (தமக்கு) கிடைத்து, ஈயில் - (பிறருக்கு) கொடுத்தால், கேடு இல்லை - அழிவதில்லை; மிக்க சிறப்பின் - மேலான (படைச்) சிறப்பையுடைய, அரசர் செறின் - அரசர் கோபிப்பாராயின், வவ்வார் - பிடுங்கிக்கொள்ளமாட்டார்கள்; (ஆதலால்)ஒருவன்—, மக்கட்கு - (தன்) பிள்ளைகளுக்கு, எச்சம் என - (தன் சம்பாத்தியத்தின்) மிஞ்சின ஆஸ்தியென்று, செய்வன - செய்யத்தக்கவை, விச்சை - கல்வியாம்; பிற அல்ல - மற்றவைகள் அல்ல, எ-று. மற்று - அசை.

செல்வப்பொருள் திருடப்படும்; பிறருக்குக்கொடுத்தா லழிந்துபோம்; சேனுபலமுள்ள அரசரும் கைக்கொள்வார்கள்; கல்விப்பொருளுக்கு இத்தன்மையான ஈனங்களில்லை யாதலால் செல்வப்பொருளிலும் கல்விப்பொருளே சிறந்ததென்பதாம்.

கோள்—கொள் என்னும் முதனிலைத்தொழிற்பெயர் முதனீட்சிவிகாரம்பெற்றது, இரண்டாம் வேற்றுமைத்தொகை. சிறப்பின்— இன் - சாரியை. எச்சம்—எஞ்சியது எச்சம்; எஞ்சு - பகுதி, அம் - கர்த்தாப்பொருள் விகுதி, ஞகரம் சகரமானது வலித்தல். செய்வன—செய்வதுபோல் வந்த செயப்பாட்டு வினையாலணையும் பெயர். விச்சை—வித்யா என்னும் வடசொல்லின் விகாரம். பிற — பலவின்பாற் பெயர், வேற்றுமைப்படும்போது அற்றுச்சாரியை பெறும். (ச)

கல்வி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல தெள்ளிதின்

---

4. Learning cannot be stolen from the place where it is stored up; nor can it suffer any loss when given out after acquisition; nor can powerful kings, when enraged, deprive its possessor of it. Learning and nothing else is therefore what one who intends to lay up an inheritance should secure to his children.

5. Learning has no bounds; the learners' days are few and if they would calmly reflect, diseases are also many. Let them

Digitized by Google

ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து.

(இ-ள்.) கல்வி கரை இல - கல்விகள் முடிவில்லாதன; கற்பவர் நாள் சில - கற்பவர்களுடைய வாழ்நாள்கள் சில; மெல்ல நினைக்கில் - பொறுத்து யோசித்தால், பிணி பல - கற்பவர்க்கு அநேகம் வியாதிகளுளவாம்; (ஆதலால்) நீர் ஒழிய பால் உண் குருகின் - நீரை நீக்கிப் பாலையே உண்ணுகின்ற அன்னப்பறவையைப்போல், தெரிந்து - (நூல் திறங்களை) அறிந்து, தெள்ளிதின் - விவேகத்தினால், ஆராய்ந்து—, அமைவுடைய - (தமக்குப்) பொருந்தினவைகளை, கற்ப - கற்பார்கள், எ-று. ஏ - அசை.

ஒருவன் முற்றும் கற்கவேண்டுமானால் கல்விகள் அபாரமா யிருத்தலினாலும் ஆயுள் அற்பமானதா யிருப்பதாலும், பலவியாதிகள் சம்பவிப்பதனாலும் அது இசையாது; ஆகவே நன்றாய் ஆராய்ந்து தமக்கு வேண்டியவைகளைப் புத்திசாலிகள் கற்கின்றார்கள்; எங்ஙனமெனில் நீரைப்பிரித்துப் பாலையுண்ணும் அன்னத்தைப்போல்.

நீரையும் பாலையும் கலந்துவைக்கில் நீரைப்பிரித்துப் பாலை யன்னம் உண்கிறதென்று கூறுகிறார்கள். கல்வி—கல் - பகுதி, வி - செயப்படுபொருள்விகுதி, கற்கத்தக்கவை யென்பது திரண்டபொருள். கல்வி கரையில என்பது முந்தி யெழுதியுள்ள இலக்கணத்திற் கண்டு கொள்க. மெல்ல — அவசரப்படாமல், மென்மை யடியாகப்பிறந்த குறிப்பு வினையெச்சம். தெள்ளிது — தொழிற்பெயராய்ப் பண்பை யுணர்த்துகின்றது. தெளி - பகுதி, இ - விகுதி, ளகரம் - விரித்தல். கற்ப—பலர்பால் வினைமுற்று. (௫)

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் - காணாய்
அவன்றுணையா வாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல்.

(இ-ள்.) தோணி இயக்குவான் - மரக்கலத்தை நடத்துவோன், காணில் - ஆராய்ந்தால், தொல்லை வருணத்து - பழமையான சாதி

therefore carefully investigate and learn what is essential, making a good choice like the swan which drinks the milk separating it from the water.

6. They will not despise the boatman because he is sprung from a family low in the scale of old castes but will pass the river with his assistance. Like this is the acqusition of knowledge of good things through the aid of the learned though they be of low origin.

Digitized by Google

களில், கடை பட்டான் என்று - கடைசியான சூத்திரசாதியிற் சேர்ந்தவன் என்று, இகழார் - (பெரியோர்) நிந்திக்கமாட்டார்; காணாய் - நீ பார்; நூல் கற்ற - சாஸ்திரங்களைப்படித்த, மகன் துணையா - மனிதன் சகாயமாக விருக்க, நல்ல கொளல் - நல்ல நூற்பொருள்களைக் கற்றல், அவன் துணையா ஆறு போய் அற்று - அந்தத்தோணி இயக்குவான் துணையாநிற்ப ஆற்றைக் கடந்ததுபோ லாகும், எ-று.

படவு ஓட்டுவோன் ஈனசாதியா னாலும் இன்றியமையாது அவனைக்கொண்டே ஆற்றைக் கடப்பதுபோலக் கற்றவன் ஈனசாதிப் பிறப்பின னாலும் அவசியமானபோது அவனைக்கொண்டே கற்க வேண்டு நூல்களைக் கற்கவேண்டுமென்பது கருத்து.

இயக்குவான்—பிறவினை வினையாலணையும்பெயர், இயக்கு - பிற வினைப்பகுதி, இயங்கு - தன்வினைப் பகுதி. தொல்லை—தொல் - பகுதி பண்படி, ஐ - விகுதி. தொல்லைவருணம்—பண்புத்தொகை. காணாய்— அசையுமாம். போயற்று—போய் - செய்தெனெச்சத்திரிபு, அற்று - உவமையைக்காட்டும் குறிப்பு வினைமுற்று; இரண்டும் சேர்ந்து, போனால் எத்தன்மைத்தோ அத்தன்மைத்து என்னும் பொருளைத் தரும்; இது முன்னோர் கொள்கை. செய்தெனெச்சத்தைத் தொழிற் பெயர்போலக்கொண்டு போனதுபோலாம் எனப் பொருள் கொள்ளுதல் இக்காலத்துவழக்கு. நல்ல — பலவின்பாற்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை. (௬)

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

(இ - ள்.) தவல் அரு - குற்றமில்லாத, தொல் கேள்வி தன்மை உடையார் - பழமையான நூற்கேள்விகளைக் கேட்குந் தன்மையை உடையவர்கள், எஃகு உடையார் தம்முள் - ஆயுதம்போற் கூர்மையான புத்தியை யுடையவர்களுக்குள்ளே, குழீஇ - கூடி, இகல் இலர்- மாறுபடுத லில்லாதவர்களாகி, நகலின் - மகிழ்வதைக்காட்டினும், இனிது ஆயின் - இன்பமுள்ளதாயின், அகல் வானத்தும்பர் - விசாலமாகிய வானத்தின்மேல், உறைவார் - வாசஞ்செய்கின்ற தேவர்களு

---

7. Let one see whether the enjoyment without discord of the society of the acute minded men by those who are desirous of acquiring the spotless oral instruction of old learning will not be more pleasant than dwelling in the capital of the gods in the wide expanse of heaven.

Digitized by Google

டைய, பதி - ஸ்தானமாகிய சொர்க்கத்தை, காண்பாம் - பார்ப்போம், எ-று.

நன்றாய்க் கற்றவர்களோடுகூடி நேசமாயிருந்து அனுபவிக்கும் மகிழ்ச்சியைக்காட்டிலும் சொர்க்கத்தி லுண்டாகிய அனுபவம் சிறந்ததல்ல என்பதாம்.

எஃகு - ஆயுதம், இங்கு கூர்மைபற்றி புத்திக்கு ஆகுபெயராக் கொள்ளப்பட்டது. தவலரு—அருமையாவது இன்மை. குழீஇ — குழு - பகுதி, இ - விகுதி, அளபெடை இன்னேசைக்குவந்தது, செய்தெனெச்சம். நகலின்—ஐந்தாம் வேற்றுமை, எல்லைப்பொருள், இதனை நீக்கப்பொருளென்பாரும் உளர். (எ)

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) கனை கடல் - ஒலிக்கின்ற கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியாகிய துறையை யுடையானே!, கற்று அறிந்தார் கேண்மை - நூல்களைக் கற்று (அவற்றின்) சாரத்தை யறிந்தவரது சிநேகமானது, நுனியில் கரும்பு தின்றற்று - நுனியிலிருந்து கரும்பைத் தின்றது போலாம்; பண்பு இலா - குணமில்லாத, ஈரம் இலாளர் - சாரமற்றவர்களுடைய, தொடர்பு - சிநேகமானது, நுனி நீக்கி - நுனியைத் தள்ளி, தூரில் தின்றன்ன தகைத்து - வேரிலிருந்து தின்றதையொத்த தன்மையையுடையது, எ-று. அரோ - ஏ - அசைகள்.

யோக்கியருடன் சிநேகிப்பது கரும்பை நுனியிலிருந்து தின்றது போல வரவர ருசியாயிருக்கும்; சற்குணமென்னும் சாரமில்லாதாருடைய சிநேகம் வேரிலிருந்து கரும்பைத் தின்பதுபோல வரவர ருசியில்லாமல் வெறுக்கத்தக்கதென்றபடி. ஆதலால் கற்றவரையே சேரவேண்டு மென்பதாயிற்று.

கனைகடல் — வினைத்தொகை நிலைத் தொடர். தின்றற்று — போயற்று என்பதைப்போற் கொள்க. நுனியில், தூரில்,—ஐந்தாம் வேற்றுமை, எல்லைப்பொருளன. இலாளர்—இன்மையை யாள்பவர்.()

---

8. O lord of the cool shores of the roaring ocean! The friendship of the learned is like eating the sugar-cane from the top (downwards) and the attachment of those who are devoid of any grace or good qualities is like eating it from the root (upwards.)

Digitized by Google
ROJA MUTHIAH
ARTIST
KOTTAIYUR P.O.

கல்லாரே யாயினுங் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர் - தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

(இ - ள்.) தொல் சிறப்பின் - பழமையான சிறப்பையுடைய ஒள் நிறம் பாதிரி பூ சேர்தலால் - ஒண்மையான நிறத்தையுடைய பாதிரிப்பூவைச் சேர்ந்திருப்பதினாலே, புது ஓடு - புதிய பானையோடானது, தண்ணீர்க்கு - (தன்னில் தங்கிய) ஜலத்துக்கு, தான் பயந்த ஆங்கு - தான் (வாசனையைக்) கொடுத்ததுபோல, கல்லாரே ஆயினும் - (தாம்) கல்வி கற்காதவராயினும், கற்றாரை சேர்ந்து ஒழுகின் - கற்றாரைச் சேர்ந்து (அவர்போல) நடந்தால், நல் அறிவு - நல்ல விவேகமானது, நாளும் - தினந்தோறும், தலைப்படுவர் - உண்டாகப்பெறுவர், எ-று.

கல்லாதாருக்குங் கற்றாரோடு சேர்க்கையால் விவேகமுண்டாம், எங்ஙனமெனில் பானையோடானது பாதிரிப்பூவைச் சேர்ந்து தன்னிலுள்ள நீருக்கு வாசனையைத் தந்ததுபோல என்பதாம்.

அறிவு தலைப்படுவர் — "உயர்திணை தொடர்ந்த" என்பது விதி. புத்தோடு — புது ஓடு என்பதில் தகரம் இரட்டித்தது [நன் - உயிரீறு - சூ - ௩௩ன் உரையைக்காண்க.] (௯)

அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லா
துலகநூ லோதுவ தெல்லாம் - கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

(இ - ள்.) அலகு சால் - கணக்குமிகுந்த, கற்பின் - சாஸ்திரங்களுக்குள்ளே, அறிவு நூல் கல்லாது - ஞான சாஸ்திரங்களைக் கற்காமல் விட்டு, உலக நூல் ஓதுவது எல்லாம் - இவ்வுலகத்திற்குப் பயன்படும்படியான நூல்களைப் படிப்பதெல்லாம், கல கல கூஉந் துணை

---

9. Though they be unlearned, if they move in the society of the learned, the former will gradually grow wise and learned just as the new earthen pot by its contact with the bright colored *Padhiri* flower, imparts its fragrance to the water deposited in it.

10. From the extensive books on science, if a man should only read the books treating on worldly matters instead of studying those which inculcate true wisdom, the knowledge so attained has the nature of mere noise and will not assist him in escaping from the troubles of the domestic life.

Digitized by Google

அல்லால் - கலகலவென்று சும்மாக் கூவுமளவையுடையதே யல்லது, கொண்டு - (அவற்றைக்)கொண்டு, தடுமாற்றம் - (சம்சாரத்தில்) தடு மாறுவது, போந் துணை - நீங்குமளவாகிய மேன்மையை, அறிவார் இல் - அறிபவர்கள் இல்லை, எ-று.

பலநூல்க ளிருந்தாலும் ஞானநூலையே முக்கியமாய்க் கற்க வேண்டும், அதனைக் கல்லாதுவிட்டு உலக இன்பத்துக்கு வேண்டிய நூலையே கற்பது யாதொரு பொருளு மில்லாமல் கலகலவென்று சும்மாக் கூவுவதுபோல் வீணே யல்லாமல் சம்சார பந்தத்தை நீக்கும் மேன்மையதல்ல என்பதாம். இதனால் ஞானநூலை முக்கியமாய்க் கற்கவேண்டு மென்பதாயிற்று.

சால்—வினைத்தொகை, அல்லது உரிச்சொல். கற்பு — கற்கப்படு நூலுக்கு ஆகுபெயர். அறிவுநூல்—இரண்டாம் வேற்றுமையுருபும் பயனு முடன்றொக்கதொகை. கல்லாது—எதிர்மறை வினையெச்சம். ஓதுவதெல்லாம்—ஒருமையிற் பன்மைமயக்கம். கலகல—அநுகரணம் பொருளில்லாமையைக் குறிக்கின்றது. கூஉம் — கூ - பகுதி, உம் - பெயரெச்ச விகுதி, அளபெடை இன்னிசை. கூஉந்துணை — பெயரெச் சத்தொடர்ப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இங்ஙனம் வரு தற்கு விதியில்லையாயினும் அநுபவத்தாற் கொள்ளவேண்டும். வினைத் தொகையாக்கொள்ளின் நகரம் மிகுவதற்கு வழி இல்லையாம். அல் லது துணையென்பதற்குத் துணையையுடைய தெனப் பொருள்கொள் ளலாம். போஒந்துணையும்—இப்படியே. (௧0)

---

## கரு-வது. அதிகாரம்.—Chapter XV.

---

### குடிப்பிறப்பு.—High Birth.

இஃது நல்ல குலத்திற் பிறப்பதன் மேன்மையைக் கூறியது. நற் குடியிற் பிறந்தார்க்கே பெரும்பாலும் கல்வி கேள்விப் பயன்கள் அமையுமாதலால், இது கல்வியின்பின் வைக்கப்பட்டது.

உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் டலைவந்தக் கண்ணு மரிமா
கொடிப்புற் கறிக்குமோ மற்று.

---

1. Though their clothes turn into rags, and their body be wasted through hunger, those who are born of noble families, will never fail in their natural qualities and conduct. Will the lion eat the long grass even when it suffers greatly from hunger and thirst?

Digitized by Google

(இ-ள்.) உடுக்கை உலறி - உடுக்கும் வஸ்திரமும் கெட்டு, உடம்பு அழிந்த கண்ணும்-தேகம் மெலிந்து நாசப்பட்டபோதும், குடி பிறப்பு ஆளர் - நற்குடியிற் பிறந்தவர்கள், தம் கொள்கையில் குன்றார் - தமக்குரிய ஒழுக்கங்களில் குறையமாட்டார்; இடுக்கண் தலை வந்தக் கண்ணும் - (பசி தாகங்களால்) துன்பம் நேர்ந்தபோதும், அரிமா - சிங்கம், கொடி புல் - கொடியாயிருக்கும் புல்லை, கறிக்குமோ - தின்னாது, எ-று. மற்று - அசை.

எவ்வளவு பசிவருத்த முண்டானாலும் சிங்கம் புல்லைத் தின்னாததுபோல் நற்குடியிற் பிறந்தவர் எத்தனை வறுமையுண்டானாலும் தமக்குரிய நல்லொழுக்கங்களில் குறையமாட்டார்க ளென்பதாம்.

உடுக்கை யுலறி என்பது வறுமையின் மிகுதியைக் காட்டுகின்றது. தம் கொள்கையாவன — மெய்கூறல், பரோபகாரம் செய்தல், அன்புடைமை, ஆசாரத்திலொழியாமை முதலியன. தலைவருதல்— தன்னிடத்தில் வர என்பது பொருள். அரிமா — அரி - சிங்கம், மா - மிருகம், இருபெயரொட்டுப்பண்புத்தொகை. கொடிப்புல்—மாடு முதலியவையும் வந்து தின்னுதலால் கொடிப்புல் என்று கூறினர். உலறி— உலறு-பகுதி, இ-விகுதி. அழிந்தக்கண், வந்தக்கண்,—செயின் என்னும் வாய்பாட்டுவினையெச்சம். உம் — இழிவு சிறப்பு. கறிக்குமோ என்பதனால் உட்கொள்ளாவிடினும் கறிப்பதுமில்லை யென்றபடி. ஓ— எதிர்மறை. (க)

சான்றாண்மை சாய லொழுக்க மிவைமூன்றும்
வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது - வான்றோயும்
மைதவழ் வெற்ப படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

(இ-ள்.) வான் தோயும் - வானம் அளாவிய, மை தவழ் வெற்ப - மேகங்கள் தவழ்கின்ற மலையையுடைய அரசனே!, சான்றாண்மை- சற்குணநிறைவும், சாயல் - தேஜஸும், [அல்லது மேன்மையும்,] ஒழுக்கம் - நல்லொழுக்கமும், இவை மூன்றும் - ஆகிய இம்மூன்றும், வான் தோய் - கீர்த்தியால் சுவர்க்கத்திற் சேர்ந்திருக்கிற, குடிப் பிறந்தார்க்கு அல்லது - உயர்குலத்திற் பிறந்தவர்களுக் கல்லாமல், பெரு செல்வம் - பெரிய செல்வமானது, எய்தியக்கண்ணும் - வந்தடைந்த

2. O lord of the cloud-topped mountains towering in the skies! Good nature, excellence, righteous conduct, all these three belong to those born of noble families but they fall not to the share of others though they may have acquired great riches.

Digitized by Google

போதிலும், பிறர்க்கு - நல்லகுடியிற் பிறவாதவர்களுக்கு, படா - உண்டாகாவாம், எ-று.

சான்றாண்மை முதலிய நற்குணங்கள் உயர்குலத்தார்க்கே இயல்பா யமைவனவேயன்றி இழிகுலத்தார்க்கு அமையாவென உயர்குலச் சிறப்புக் கூறப்பட்டது.

படாஅ—எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று; அளபெடை அசையை நிறைக்க வந்தது. (உ)

இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன - குடிப்பிறந்தார்
குன்றா வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்றா வுணரற்பாற் றன்று.

(இ - ள்.) இருக்கை எழலும் - (பெரியோரைக் கண்டால்) தம் இருப்பிடத்தைவிட் டெழுந்திருப்பதும், எதிர் செலவும் - எதிர்கொண்டு செல்லுதலும், ஏனை - இன்னமும், விடுப்ப - (அவர்கள்) விடைகொடுக்க, ஒழிதலோடு - ஒழிதலுடனே பிரிதலும், இன்ன - இப்படிப் பட்டவைகளை, குடிப்பிறந்தார் - நல்ல குடியிற் பிறந்தவர்கள், குன்றா ஒழுக்கமாக் கொண்டார் - குறையாத நல்ல நடக்கைகளாக ஏற்றுக் கொண்டார்கள்; (ஆதலால் அவர்களை) கயவரோடு - மூடர்களோடு, ஒன்றா - சேர்த்து, உணரல் பாற்று அன்று - மதிப்பது பான்மையை யுடையதல்ல, எ-று.

பெரியோர் தம்மிடம் வந்தால் தாம் இருந்தவிடத்தைவிட் டெழுந்திருந்து எதிர்சென்று உபசரித்து அவர்கள் விடைகொடுத்தபின் திரும்பிவருதல் முதலாகிய காரியங்களை இன்றியமையா ஒழுக்கங்களாகக் குடிப்பிறந்தார் கொண்டிருப்பதனால் அங்ஙனம் கொள்ளாத மூடர்களோடு அவர்களைச் சேர்த்துப் பார்ப்பது நன்றன்று என்பதாம்.

எழல்—எழு - பகுதி, அல் - விகுதி; "முற்றுமற்றொரோவழி" என்றதனால் உகரம் கெட்டது. செலவு—செல் - பகுதி, அ - சாரியை, உ - விகுதி. ஒழிதலோடு—ஓடு - எண்ணிடைச்சொல். இன்ன—சுட்டு அடியாகப்பிறந்த பலவின்பாற்பெயர்; இ (அல்லது) இன் - பகுதி, அ - விகுதி. கயவர்—கயமை என்னும் பண்படியாகப் பிறந்தபெயர்.

---

3. Rising from their seat (when they see strangers coming to them), advancing towards them (in order to receive them,) and leaving them with their formal permission are acts which the noble observe as an inflinching rule of conduct. They should not therefore be compared with the mean.

Digitized by Google

ஒன்று—செய்யாதென்னும் வாய்பாட்டு வினையெச்சம்; ஒன்ற என்பது பொருள். உணரற்பாற்று - உணரலாகிய பான்மையை யுடையது; உணரல் + பால் + று எனப் பிரித்துக்கொள்க. (ந)

நல்லவை செய்யி னியல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும் - எல்லாம்
உணருங் குடிப்பிறப்பி னூதிய மென்னோ
புணரு மொருவர்க் கெனின்.

(இ - ள்.) நல்லவை செய்யின் - நல்ல காரியங்களைச் செய்தால், இயல்பு ஆகும் - செய்யவேண்டிய முறைமை யென்னலாகும்; தீயவை - தீயகாரியங்களைச் (செய்தால்), பல்லவர் தூற்றும் - பலரும் பரவச்செய்கிற, பழி ஆகும்-நிந்தையாகும்; ஒருவர்க்கு புணரும் எனின்-(நற்குடிப்பிறப்பு) ஒருவர்க்குச் சேர்ந்தால், எல்லாம் உணரும் - எல்லாவற்றையு முணர்ந்த, குடி பிறப்பின் ஊதியம் - குடிப்பிறப்பினுடைய பயன், என் - என்ன ? எ-று. ஓ - அசை.

உலகத்தில் ஒருவர் நல்லொழுக்கமாக நடந்தால் அதனை உலகத்தார் விசேஷமாகக் கொள்ளாது நடக்கவேண்டிய இயல்புதானென்று சாமானியமாகக் கொள்ளுகின்றார்கள்; தீயொழுக்கம் ஒழுகினாலோ தூஷிக்கின்றார்கள். ஆகவே நற்குடிப் பிறப்பினர்க்கு நல்லொழுக்கத்தால் யாதொரு பிரயோஜனமு மில்லை. பிறர் விசேஷமாகக் கொண்டாடாமைபற்றி நற்குடிப் பிறந்தார் தமக்கியல்பான நல்லொழுக்கத்தினின்றுந் தவறார் என்பது கருத்து.

எல்லாமுணரும் என்றதனால் சகலகலா ஞானங்களை யுணர்வதற்கு நற்குடிப் பிறப்பு எளிதாயிருக்கின்ற தென்பதாம். எல்லாம் உணரும் என்பதற்கு எல்லாமறிந்திருக்கிற எனவும் பொருள் கொள்ளலாம். அப்போது பிரசித்தமான நற்குடிப்பிறப்பு என்றதாயிற்று. பல்லவர்—பல் - பகுதி, அ - சாரியை, அர் - பலர்பால் விகுதி, வகரம் உடம்படுமெய்; 'பல்' தனிக்குறின் முன்னொற் றுதலால் லகரம் இரட்டிற்று. ()

கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம் - எல்லாம்

---

4. If one does good things, it is only conformable to nature; if bad, it will be a fault despicable in the eyes of many. So, what is the profit of being born in a high family capable of acquiring every knowledge.

5. Fear of being ignorant, fear of doing the deeds of the base, fear lest anything which ought not to be spoken, should excape from them, fear of not giving anything to those who

Digitized by Google

இரப்பார்க்கொன் றீயாமை யச்ச மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

(இ - ள்.) கல்லாமை அச்சம் - (தாம்) கல்லாமைக்கு அஞ்சுதலும், கயவர் தொழில் அச்சம் - மூடர்களுடைய தொழிலுக்கு அஞ்சுதலும், சொல்லாமை உள்ளும் - (பொய் குறளை முதலியவற்றைச்) சொல்லாமலிருப்பதிலும், ஓர் சோர்வு - (எந்தவிடத்தில் தவறிப்போனேமோ வென்கிற) தளர்ச்சிக்கு, அச்சம் - அஞ்சுதலும், இரப்பார்க்கு - யாசகர்களுக்கு, ஒன்று ஈயாமை - (அவர்விரும்பிய) ஒரு பொருளைத் தாராமைக்கு, அச்சம் - அஞ்சுதலும், எல்லாம் - (இப்பேர்ப்பட்ட) பல அச்சங்களும் (நற்குடிபிறந்தார்க்கு உண்டாகின்றனவாம்); (அங்ஙனம் யாதொரு அச்சமுமில்லாத) இ மாணா குடி பிறந்தார் - இப்படிப்பட்ட மேன்மையில்லாத குலத்திற் பிறந்தவர்கள், மரத்தார் - மரத்தன்மையை யுடையோர், (அதாவது மரத்தினாற் செய்த பிரதிமைகளைப் போன்றவர்கள்), எ-று.

நல்ல குடியிற் பிறந்தார்க்கு கல்லாமை முதலிய பலவற்றிலும் அச்சம் உண்டாகின்றது, ஆதலால் நற்குடிப்பிறபென்ன வென்று புகழாப் புகழ்ச்சியாக் கூறியதனால் அது மேன்மையதென்பது கருத்து.

கல்லாமை முதலியவற்றிற்கு அஞ்சாத கீழ் குடிப்பிறந்தோர் மனிதர்களாக இருந்தும் பயனின்மையால் மரத்தார் என்றார். கல்லாமை—நான்காம் வேற்றுமைத்தொகை. மாணா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரொச்சம்; மாண் - பகுதி, ஆ - எதிர்மறையைக் காட்டும் விகுதி. (ரு)

இனநன்மை யின்சொலொன் றீதன்மற் றேனை
மனநன்மை யென்றிவை யெல்லாம் - கனமணி
முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப
இற்பிறந்தார் கண்ணே யுள.

(இ-ள்.) கன மணி - காந்திமிகுந்த இரத்தினங்கள், முத்தோடு - முத்துக்களோடு சேர்ந்து, இமைக்கும் - பிரகாசிக்கின்ற, முழங்கு உவரி - சத்திக்கின்ற சமுத்திரத்தினுடைய, தண் சேர்ப்ப - குளிர்ச்சி

---

beg, all these are to be found in those born in a noble family, Those who are born in a family destitute of these graces resemble wooden dolls.

6. O lord of the cool shores of the roaring sea where large gems and pearls shed their lustre! Good association, kind words, liberality, and good mental qualities only meet those who are born in a noble family.

Digitized by Google

யான கனையையுடைய அரசனே!, இனம் நன்மை - சேர்கின்றவர்களுடைய நன்மையும், இன் சொல் - இனிமையான சொல்லும், ஒன்று ஈதல் - (யாசித்தவர்க்கு ஏதேனும்) ஒருபொருளைத் தருதலும், ஏனை - மற்றும், மனம் நன்மை - மனம் சுத்தமாயிருத்தலும், என்று இவை எல்லாம் - ஆகிய இவைகளெல்லாம், இல் பிறந்தார்கண்ணே உள - நற்குடியிற் பிறந்தவர்க ளிடத்திலேயே யுண்டு, எ-று.

குற்றமில்லாத நல்லினத்தைச் சேர்ந்திருத்தலும், யாவரிடத்தும் தக்கபடி இனிமையாகப் பேசுதலும், கேட்பவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்தலும், மனதில் வஞ்சமுதலிய வில்லாமல் தயாதாக்ஷிணியங்க ளுள்ளவரா யிருத்தலும், இப்படிப்பட்ட நற்குணங்களெல்லாம் குடிப்பிறந்தா ரிடத்தே யுண்டு.

இன்சொல் — பண்புத்தொகை. என்று—எண்ணிடைச்சொல்; இது இனநன்மை முதலியவற்றோடும் கூடும், [இடை - சூ - ௬0.] முத்தோடு — உடனிகழ்ச்சியில்வந்த மூன்றும் வேற்றுமை. முழங்கு உவரி—வினைத்தொகை. உவர்த்தலையுடையது உவரி. உள—பலவின் பாற் குறிப்பு வினைமுற்று. (௬)

செய்கை யழிந்து சிதன்மண் டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகும்
எவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

(இ - ள்.) செய்கை அழிந்து - வேலைப்பாடுகள் கெட்டு, சிதல் மண்டிற்று ஆயினும் - கறையான்கள் நெருங்கிப் பிடித்திருந்தாலும், பேர் இல் - பெரியவீடானது, பெய்யா ஒரு சிறை - (மழை) பெய்யாத ஒரு பக்கத்தை, உடைத்து ஆகும் - உடையதாயிருக்கும்; (அதுபோல்) எவ்வம் உழந்தக்கடைத்தும் - துன்பத்துள் மிகுதியாக அலைச்சறப்பட்டிருந்தாலும், குடிப்பிறந்தார் - நல்லகுடியிற் பிறந்தவர்கள், செயற்பாலவை - செய்யத்தக்க காரியங்களை, செய்வர் - செய்வார்கள், எ-று.

ஒரு பெரியவீடு கட்டடங்க ளழிந்து செற்பிடித்திருந்தாலும் மழை பெய்தற்கு உள்ளாகாத ஒருபக்கம் அந்த வீட்டில் இருக்கவே இருக்கும். குடிப்பிறந்தார் வறுமை முதலியவற்றால் வருத்தப்பட்டாலும், செய்யத்தக்க காரியங்களைச் செய்வார்களேயன்றி செய்யத்தகாத காரியங்களைச் செய்யார் என்பதாம்.

---

7. Though a large building is decayed and white ants collect together, it may nevertheless have a portion which can protect it against rain. In like manner, those who are born in a noble family, though suffering much from affliction will still do what they ought to do.

Digitized by Google

அழிந்து என்னும் வினையெச்சமும், மண்டிற்று என்னும் ஒன்றன்பால் முற்றும், மாடு கோடு கூறிய தென்பதுபோல் இல் என்பதைக் கொண்டன. உழந்தக்கடைத்து—கடைத்து-செயினென் வாய்பாட்டு வினையெச்சவிகுதி. வலி மிகுந்திருப்பதனால் இது பெயரொச்சத் தொடராகாது. (எ)

ஒருபுடை பாம்பு கொளினு மொருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் - திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினு மொப்புரவிற்
கொல்கார் குடிப்பிறந் தார்.

(இ-ள்.) ஒரு புடை - ஒருபக்கத்தை, பாம்பு கொளினும்-பாம்பு பிடித்துக்கொண்டாலும், ஒரு புடை - ஒரு பக்கத்தால், அம் கண் மா ஞாலம் - அழகிய இடமுள்ள பெரியபூமியை, விளக்குறூஉம் - விளக்குகின்ற, திங்கள் போல்-- சந்திரனைப்போல, செல்லாமை - (தங்கள் காரியங்கள்) ஈடேறாமை, செவ்வன் நேர் நிற்பினும் - நன்றாக நேரே இருந்தாலும், குடிப் பிறந்தார்—, ஒப்புரவிற்கு - உபகாரச் செய்கைக்கு, ஒல்கார் - பின்வாங்கமாட்டார்கள், எ-று.

கிரஹணகாலத்தில் ஒருபக்கத்தை இராகு கேதுக்களென்கிற பாம்பு பிடித்துக்கொண்டாலும் மற்றொரு பக்கத்தினால் சந்திரன் உலகத்தை விளக்குவதுபோல, குடிப்பிறந்தார் தாங்கள் எடுத்த காரியங்கள் நிறைவேறாமற் போனபோதிலும் கூடியமட்டில் உபகாரம் செய்வார்களென்பது கருத்து.

விளக்குறூஉம்—உறு - துணைவினை, அல்லது அசை, இன்னிசையளபெடை. ஒல்கார்—ஒல்கு - பகுதி. (அ)

செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர் - புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோல்
பொருமுரண் ணாற்றுத லின்று.

---

8. Just like the moon which though caught by the serpent i. e. eclipsed on one side, still gives light on the other to the beautiful wide earth. Those who are born in a noble family, will not shrink from doing good to others although poverty many stand adverse to them.

9. What the high born will do even in times of adversity will not be done by the vulgur in prosperous times. The deer though it should bear harness is not strong enough to stand the brunt of war.

Digitized by Google

(இ-ள்.) செல்லா இடத்தும் - (தங்களுக்குக்) கூடாதபோதும், குடிப்பிறந்தார்—, செய்வன - செய்யுங் காரியங்களை, செல் இடத்தும் - கூடிய விடத்தும், செய்யார் சிறியவர் - இழிகுலத்திற் பிறந்தவர்கள் செய்யமாட்டார்கள் ; புல்வாய் - மானனது, பருமம் - பருத்திருத்தலை, பொறுப்பினும் - சுமந்திருந்தாலும், பாய் - ஓடுகின்ற, பரிமாபோல் - குதிரையைப்போல், பொரு முரண் - போர்செய்யவல்ல பலத்தை, ஆற்றுதல் இன்று - பொறுப்பதில்லை, எ-று.

தமக்குக் கூடாதவிடத்தும் குடிப்பிறந்தார் செய்யும் காரியங்களைத் தமக்குக் கூடிய இடத்திலும் அற்பர் செய்யமாட்டார்கள் ; எப்படியெனில் மான் பருத்திருந்தபோதிலும் குதிரையைப்போலப் போரிட வல்ல தல்லாததுபோல்.

செய்வன—வினையாலணையும் பெயர் ; செய்-வ்-அன்-அ—பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி ; இங்கு இடைநிலை காலங்காட்டாது தன்மையைக்காட்டும். ஒருவகை மான் குதிரையைப்போல் பருத்திருக்கின்றது. (கூ)

எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் - தூற்றாவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தண்ணீர் படும்.

(இ-ள்.) எற்று ஒன்றும் இல்லா இடத்தும் - யாதொருபொருளும் இல்லாத போதும், குடிப்பிறந்தார்—, அற்று - (தம்மைக் காப்பார்) இல்லாமல், தன் சேர்ந்தார்க்கு - தம்மைச் சேர்ந்தவர்களுக்கு, அசைவு இடத்து - சங்கடமான காலத்தில், ஊற்று ஆவர் - ஊன்றுகோலாயிருப்பர் ; அற்றக்கடைத்தும் - நீர் வறண்டபோதும், அகல் யாறு - விசாலமான நதியானது, அகழ்ந்தக்கால் - தோண்டினால், தெற்றென - தெளிவாக, தண் நீர் படும் - குளிர்ந்தநீரை உடைத்தாயிருக்கும், எ-று.

கோடைக்காலத்திலும் ஆற்றைத் தோண்டினால் நீர் சுரப்பது போல ஒன்றுமில்லாத வறுமைக் காலத்திலும் குடிப்பிறந்தார் தம்மையடைந்தவர்களுக்கு எப்படியாயினும் ஆதரவு செய்வர்.

எற்று—என் - பகுதி, று - விகுதி, னகரம் றகரமானது வலித்தல். ஊன்று என்னும் பகுதியில் னகரம் வலிந்தது ; தொழிலாகு

---

10. The high-born even when they have not any thing for them, will be a prop to the helpless people who approach them in want, just as the wide river, when dug up yields a clear water, though its bed be dry at the time.

Digitized by Google

பெயர். தெற்றெண - சீக்கிரத்தி லெனப் பொருள்கொள்ளின் "தெண்ணீர்படும்" எனப் பாடங்கொண்டு, தெள் - தெளிந்த எனப் பொருள்கொள்க. தண்ணீர் படும் என்பதை ஒரு சொல்போ லெடுத்துக் கொள்ளவேண்டும். (௧௦)

---

## ௧௬ - வது. அதிகாரம்—Chapter XVI.

### மேன்மக்கள்.—The good.

இஃது மேலாகிய மனிதருடைய இயல்பு கூறியதாம்.

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோ ரஃதாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.

(இ-ள்.) அம் கண் விசும்பின் - அழகான இடமுள்ள வானத்தில், அகல் நிலா பாரிக்கும் - விரிவான நிலாவை நிரப்புகின்ற, திங்களும் சான்றோரும் - சந்திரனும் பெரியோர்களும், ஒப்பர் மன் - பெரும்பாலும் சமானமாவார்கள்; திங்கள் மறு ஆற்றும் - சந்திரன் களங்கத்தைப் பொறுக்கும், சான்றோர் அஃது ஆற்றார் - பெரியோர் அதனைப் பொறார்; ஒரு மாசு உறின் - ஒரு குற்றம் நேர்ந்தால், தெருமந்து தேய்வர் - வருந்தி மெலிந்துபோவர், எ-று.

நிலா என்பதைக் கீர்த்திக்கு ஆகுபெயராக்கி "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்" என்பதைச் சான்றோருக்குங் கூட்டிக்கொள்க. சந்திரன் தேய்ந்தாலு மறுபடி வளர்கின்றான்; சான்றோரோ தேய்ந்தே போவார் என்பதும் சிறப்பு. இப்படிப்பட்ட சிறப்புகளைப்பற்றித் தான் மன் என்றது, [நன் - இடை - சூத் - ௧௩; பொது - சூத் - ௨௭] விதியால் திங்கள் என்கிற அஃறிணையும் சான்றோர் என்கிற உயர்திணையும் ஒப்பர் என்று ஒரு முடிபு ஏற்றது; திங்களைத் தேவனென்று குறித்தால் இது வழாநிலையே யாம். (௧)

இசையு மெனினு மிசையா தெனினும்
வசைதீர வெண்ணுவர் சான்றோர் - விசையின்

---

1. The moon which sheds its broad beams over the beautiful expanse of the sky and the good greatly resemble each other. The moon bears the spots in it, but the good bear them not. They would be confused and waste away should any blemish befall them.

2. Whether they be successful or not, the good will only contemplate doing blameless things. Is the dart which

Digitized by Google

நரிமா வுளங்கிழித்த வம்பினிற் றீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்.

(இ - ள்.) இசையும் எனினும் - கூடுமானாலும், இசையாது எனினும் - கூடாதானாலும், சான்றோர் - பெரியோர், வசை தீர எண்ணுவர் - பழிப்பு நீங்கும்படியே (காரியத்தை) சிந்திப்பர்; விசையின் - வேகத்தினால், நரி மா உளம் கிழித்த - நரியென்னு மிருகத்தினது மார்பைப் பிளந்த, அம்பினில் - அம்பைக்காட்டிலும், அரிமா - சிங்கமானது, பிழைப்பு எய்த - தப்பிப்போம்படி (பிரயோகித்த), கோல் - அம்பானது, தீதோ - பொல்லாதோ,[தாழ்ந்ததோ என்கிறபடி,] எ-று.

செய்யக்கூடினாலும் கூடாமற்போனாலும் பழிப்பில்லாத காரியத்தைப் பெரியோர் நினைப்பார்களேயன்றி இழிவான காரியத்தை நினையார்கள்; ஏனென்றால், சிங்கத்தின்மேல் அம்பை எய்து அது தவறிப்போனாலும் பெருமையுண்டு; நரிமேல் எய்து அதின் மார்பைப் பிளந்தாலும் பெருமையில்லை; ஆகையால் மேலானகாரியமே யோசிப்பார்கள் என்பது கருத்து.

பிழைப்ப என்னும் வினையெச்சம் ஈறுகுறைந்தது. அம்பினில்—ஐந்தனுருபு எல்லைப்பொருளில் வந்ததெனக் கொள்க. (உ)

நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார் - உரங்கவறா
உள்ளமெனு நாரினாற் கட்டி யுளவரையால்
செய்வர் செயற்பா லவை.

(இ - ள்.) நரம்பு எழுந்து - நரம்புகள் மேலே தோன்றும்படி (மெலிந்து), நல்கூர்ந்தார் ஆயினும் - தரித்திரரானாலும், சான்றோர் - மேலோர், குரம்பு எழுந்து - எல்லைகடந்து, குற்றம் கொண்டு - (யாசிப்பதாகிய) குற்றத்தைக் கைக்கொண்டு, ஏறார் - (ஒருவரிடம்) போகார்; உரம் கவறு ஆ - அறிவைக் கவறுகவைத்து, உள்ளம் எனும் நாரினால் - முயற்சியென்கிற நாரினாலே, கட்டி - (மனதைக்) கட்டி, உளவரையால் - (பொருளானது) தமக்கு இருக்கின்ற அளவினால், செயற்பாலவை - செய்யத்தக்க காரியங்களை, செய்வர் - செய்வார்கள், எ-று.

---

missed the lion inferior to the arrow that split the breast of the jackal?

3. The good though they be poor and emaciated, will not exceed their bounds and go about begging, to the detriment of their honor. Binding their courage by the cords of the mind, they will, as much as it lies in their power, do what they ought to do.

Digitized by Google

மனதை விவேகத்தினாலும் முயற்சியாலும் உறுதிப்படுத்திக் கொண்டு இரக்காமல் தமக்குள்ளளவு பிறர்க்கு இட்டு நன்மையே செய்து வருவர் பெரியோர் என்பது கருத்து.

கவறு என்பது பிளப்புள்ள பனமட்டை. எழூந்தென்பது சினை வினையாதலால் நல்கூர்ந்தார் என்னு முதல்வினை கொண்டது. [நன் - வினை - சூத் - உகூ.] குரம்பினின்றும் எழுந்தெனக் கொள்வதனால் எல்லைகடந் தென்றாயிற்று. (ங)

செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர்
தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்
நல்வரை நாட சிலநா ளடிப்படின்
கல்வரையு முண்டா நெறி.

(இ - ள்.) நல் வரை நாட - நல்ல மலைகளுள்ள நாட்டையுடைய வனே!, சான்றவர் - பெரியோர், செல்வுழிக்கண் - தாம்போகும் வழியில், ஒரு நாள் காணினும் - (ஒருவரை) ஒருநாள் கண்டாலும், தொல் வழி கேண்மையின் - பழையமுறையில் வந்த சிநேகிதனைப்போல [அல்லது உறவினனைப்போல] (கொண்டு), தோன்ற - விளங்கும்படி, புரிந்து - (உபசாரங்களைச்) செய்து, யாப்பர் - (தம்மவராக) பிணித்துக் கொள்வர்; சில நாள் அடிப்படின் - சிலகாலம் காலடிப்பட்டால், கல் வரையும் - கல்மிகுந்த மலையிலும், நெறி உண்டாம் - வழி உண்டாகும், எ-று.

கல்லிலும் காலடிப்பட்டால் வழியுண்டாவதுபோல கடினசித்தருக்கும் பழகினால் சிநேக முண்டாகு மல்லவோ, அப்படியிருக்க மெழுகுபோன்ற சித்தமுள்ளவர் கண்டவுடனே சிநேகிப்பாரென்பது இயல்புதான் என்றபடி. (ச)

புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவ னுரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு ணாணல் பரிந்து.

---

4. Though they should meet a person only once on the way, the good will cling to them with affection as if they were old friends. O lord of the good mountain country! a path will be made even upon a rock, if one walk upon it for a few days.

5. If an unlearned person belonging to an assembly of ignorant men give utterance to incoherent expressions devoid of any sense, the good will through condescension patiently listen, though with reluctance lest he should be put to shame before the public.

Digitized by Google

(இ-ள்.) பொருள் இல் - பொருளின் அறிவு இல்லாத, வறு கோட்டி - பயனற்ற சபையைச்சேர்ந்த, கல்லா ஒருவன் - (நூல்களைக்) கற்காத ஒருவன், புல்லா எழுத்தின் - (இலக்கணத்தோடு) பொருந்தாதசொற்களால், உரைப்பவும் - சொல்லு மவைகளையும், நல்லார் - பெரியோர், கண் ஓடி - தாக்ஷிணியப்பட்டு, வருந்தியும் - வருத்த மடைந்தும், அவன் - அந்த மூடன், பல்லாருள் - பலபேருக்கு முன்பு, நாணல் - வெட்கப்படுவதற்கு, பரிந்து - இரங்கி, கேட்பர் - (காதிலூற்) கேட்பர், எ-று.

பெரியோர் மூடர் பேசும் பேச்சுகளையும் கேட்பார்கள், ஏனென்றால் தாங்கள் உபேக்ஷைசெய்தால் அவர்கள் பலரில் அவமானப்படுவார்களே என்கிற இரக்கத்தால் தங்கள் மனதுக்கு வருத்தமா யிருந்தாலும் கேட்பர் என்பது கருத்து.

எழுத்து சொல்லுக்கும், பொருள் அதன் அறிவுக்கும் ஆகுபெயர். மற்று - ஏ - அசைகள். ஏ—தேற்றத்தில் வந்ததெனவுமாம்.(ரு)

கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
இடித்துநீர் கொள்ளினு மின்சுவைத்தே யாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணுங் குடிப்பிறந்தார்
கூறூர்தம் வாயிற் சிதைந்து.

(இ-ள்.) கரும்பினை - கரும்பை, கடித்து—, கண் தகர நூறி - கணுக்கள் உடையும்படி நெரித்து, இடித்து - (ஆலையில்) துவைத்து, நீர் கொள்ளினும் - சாற்றைக்கொண்டாலும், இன் சுவைத்தே ஆகும் - (அது) இனிய ருசியுள்ளதே ஆம்; குடி பிறந்தார் - நற்குலத்திற் பிறந்தவர், வடு பட வைது இறந்தக்கண்ணும் - (தம்மைப் பிறர்) குற்றந்தாக்கும்படி திட்டிப்போனாலும், தம் வாயில் - தமது வாயினால், சிதைந்து - (தம்மை வைதவர்) கெடும்படி, கூறூர் - வசைகளைச் சொல்லமாட்டார், எ-று.

இறந்தக்கண்—ஒருவகை வினையெச்சம்; இற - பகுதி, கண் - விகுதி, தகரம் எழுத்துப்பேறு யிரட்டி மெலிந்தது; நகர தகரங்கள் எழுத்துப்பேறு எனல் நேர். சிதைந்து—சிதைய என்பதின் திரிபு; நிலைதிரிந்து எனவும் பொருள்கொள்ளலாம். (சு)

---

6. Though you bite the sugar-cane or otherwise extract its juice by beating and pressing it so as to break its joints, it will still be sweet to the taste. In like manner though people should abuse harmfully, the high-born will never speak anything that will affect the guilty person.

Digitized by Google

கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரீஇ
எள்ளிப் பிறரை யிகழ்ந்துரையார் - தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

(இ - ள்.) வடு அறு காட்சியார் - குற்றமற்ற அறிவுள்ளவர்கள், கள்ளார் - திருடார்; கள் உண்ணார் - கள்ளைக் குடியார்; கடிவ கடிந்து ஒரீஇ - தள்ளத்தக்கவைகளைத் தள்ளி நீங்கி, பிறரை - அன்னியரை, எள்ளி இகழ்ந்து உரையார் - அவமதித்து நிந்தித்துப் பேசமாட்டார்; தள்ளியும் - தவறியாகிலும், வாயில் பொய் கூறார் - வாயினால் பொய்யைச் சொல்லார்; சாயில் - (வறுமையுற்றுத்) தளர்ந்தாலும், பரிவது இலர் - விசனப்படுந் தன்மை இல்லாதவராவர், எ-று.

கடிந்து ஒரீஇ என்பதையும் எள்ளி இகழ்ந்து என்பதையும் [நன்-பொது - கூ - சஎ] விதியால் ஒருபொருட்பன்மொழியாக அமைத்துக்கொளல் வேண்டும். ஒரீஇ—ஒருவு என்னு முதனிலை இகர விகுதி புணர்ந்துகெட்டு ஈற்றுயிர் மெய்யும்போய் உகரம் இகரமாகி அளபெடுத்ததெனக் கொள்க; இது சொல்லிசை யளபெடை. (எ)

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனாய்த் தீய
புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா வவற்கு.

(இ-ள்.) பிறர் மறையின்கண் - அன்னியருடைய ரகசியச்சொல்லில், செவிடு ஆய் - செவிடனாய், திறன் அறிந்து - நற்காரியங்களின் தன்மையை யறிந்து, ஏதிலார் இல் கண் - பிறருடைய இல்லாளிடத்து, குருடன் ஆய் - கண்ணில்லாதவனாய், தீய - அயோக்கியமான, புறங்கூற்றின் - (காணுவிடத்துத்) தூஷிப்பதில், மூகை ஆய் - ஊமையாய், நிற்பானேல் - (ஒருவன்) இருப்பானானால், அவற்கு - அப்படிப் பட்டவனுக்கு, யாதும் அறம் கூற வேண்டா - வேறெந்தத் தருமமும் சொல்லவேண்டுவ தில்லை, எ-று.

---

7. Those who are faultlessly wise, steal not, indulge not in spirituous liquors, and reproach not others, themselves rejecting what ought to be avoided. They will not lie even unconsciously, nor will they grieve when afflicted by misfortune.

8. If one knowing what is right, be deaf to the secrets of others, blind to the wives of his neighbours, and dumb in calumniating others, it is not necessary to inculcate any virtue to him.

Digitized by Google

புறங் கூற்றின் என்பதற்கு தான் ஒருவனைத் தூஷிப்பதில் எனவும் ஒருவன் தன்னைத் தூஷிப்பதில் எனவும் கருத்துக்கொள்ளலாம். பின்னதாயின் தன்னைத் தூஷிக்குமிடத்து ஒன்றும் பேசாதவனாய் என்பதாம். ஏதிலார்—ஏதில் - அயலா யிருத்தல், அதனை யுடையார் ஏதிலார். வேண்டா என்பது வேண்டும் என்பதின் எதிர்மறை ஆதலின் ஒருவகை வியங்கோள் என்றாகிலும் உறுதிப்பாட்டைக்காட்டும் தொழிற்பெயர் என்றாகிலுங் கொள்க. (அ)

பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டுப வென்றிகழ்ப - என்னானும்
வேண்டினு நன்றுமற் றென்று விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

(இ-ள்.) பண்பு இலார் - சற்குணமில்லாதவர், தம்முழை - தம்மிடத்து, பல் நாளும் சென்றக்கால் - (ஒருவர்) பலதினங்கள் வந்து கொண்டிருந்தால், என்னானும் வேண்டுப என்று - எதையாகிலும் விரும்புவார்களென்று, இகழ்ப - (அவரை) இகழ்வார்கள்; விழுமியோர் - பெரியோர், என்னானும் வேண்டினும் - (தம்மிடம் வருபவர்) எதையாகிலும் அபேக்ஷித்தாலும், நன்று என்று - நல்லதென்று சொல்லி, காண்தொறும் - காணும்போதெல்லாம், சிறப்பு செய்வர் - (அவருக்குச்) சிறப்பானவைகளைச் செய்வார்கள், எ-று.

கீழ்மக்கள் பலநாளாய்த் தம்மிடம் வந்துகொண் டிருக்கிறவர்களையும் இவர் ஏதாவது நம்மிடத்திற் பெற விரும்புவா ரென்று வரவொட்டாமற் றள்ளி விடுவார்கள்; மேன்மக்களோ தம்மிடம் வருபவர் எதை அபேக்ஷித்தாலும் அதைக் கொடுக்க வுடன்பட்டுக் கண்ட போதெல்லாம் அவர்களுக்கு நன்மையே செய்து வருவார்கள் என்பது கருத்து.

என் — இடைகுறைந்த எவனென்னுங் குறிப்பு முற்றாலாகிய பெயர். காண்தொறும்—வினைத்தொகைநிலைத்தொடர். தொறு என்பது இடைச்சொல்லாயினும் பெயர்ப்பொருளைத் தருதலால் பெயரெச்சத்திரிபாகிய வினைத்தொகை அதனோடு சேர்ந்தது. (கூ)

உடையா ரிவரொன் றுருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர் - உடைய

---

9. When people go frequently to those who are destitute of good qualities, they will despise them lest they should ask anything of them, the excellent, when such people beg for favors, not only grant them but will also honor them as often as they come.

10. Some live in obsequious attendance on the base on account of their riches. When such fall in the way of the

Digitized by Google

பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

(இ-ள்.) உடையார் இவர் என்று - பொருள் உடையவர் இவர் என்று நினைத்து, ஒரு தலையா பற்றி - உறுதியாப் பற்றிக்கொண்டு, கடை ஆயார் பின் சென்று வாழ்வர் - கீழ்மக்களுடைய பின்னே போய்ப் பிழைப்பர் சிலர்; நல்ல குலம் - நற்குலத்தாரை, தலைப்பட்ட இடத்து - சேர்ந்தவிடத்தில் [சேர்ந்தால் என்கிறபடி], உடைய பிலம், (வேண்டும்பொருளை) உடைத்தாயிருக்கிற குகையை, தலைப்பட்டது போலாதே - சேர்ந்ததுபோலிராதா [இருக்கும் என்றபடி], எ-று.

திரவியவான்களென்று நினைத்து அயோக்கியரையும் பின்பற்றி வாழ்கிறார்கள் உலகத்திற் சிலர்; அப்படிப்பட்டவர்க்கு யோக்கியரைச் சேர்தல் திரவியம் நிறைந்த குகை யகப்பட்டதுபோலே சந்தோஷமா யிருக்குமல்லவோ என்பது கருத்து.

தலைப்பட்டவிடத்து என்பதும் ஒருவகை வினையெச்சமெனக் கொள்ளலாம். குலம்—ஆகுபெயர். (௧0)

---

## ௧எ - வது. அதிகாரம்.—Chapter XVII.

### பெரியாரைப் பிழையாமை—Against reproaching the great.

அதாவது பெரியோர்திறத்தில் பிழை செய்யாமையாம்.

பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும் - வெறுத்தபின்
ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
பேர்க்குதல் யார்க்கு மரிது.

(இ-ள்.) ஆர்க்கும் அருவி அணி மலை நல் நாட - ஒலிக்கின்ற அருவிகளை அணிந்த மலைகள்சூழ்ந்த நல்ல நாட்டையுடையவனே!, பொறுப்பர் என்று எண்ணி - (நாம் செய்யுங் குற்றங்களைப்) பொறுத்துக் கொள்வார் என்று நினைத்து, புரை தீர்ந்தார் மாட்டும் - குற்றமில்லாதவரிடத்தும், [பெரியோரிடத்தும் என்றபடி], வெறுப்பன —

---

high-born, will they not find in them a mine full of what they require.

1. O lord of the good country abounding in mountains adorned with sounding streams! We should not, thinking that they will forgive us, do what is hateful to the guiltless, [i. e. great men], for none can avert the effects of their anger when they are once provoked.

Digitized by Google

வெறுக்கும்படியான காரியங்களை, செய்யாமைவேண்டும் - செய்யா திருத்தல் அவசியமானது; வெறுத்த பின் - (அவர்கள்) கோபித்த பின்பு, பேர்க்குதல் - (அக்கோபத்தின் பயனை) மாற்றுதல், யார்க்கும் அரிது - எப்படிப்பட்டவர்க்கும் கூடாதது, எ-று.

இழிந்தாரிடத்துப் பிழைசெய்வதனால் யாதொரு கேடுமில்லை யென்று நினைப்பதுபோல் பெரியாரிடத்துப் பிழைசெய்வதினாலும் அவர்கள் பொறுமையுள்ளா ரானதுபற்றி யாதொருகேடும் வாரா தென் றெண்ணிக்கொண்டு அபசாரப்படவேண்டாம். அவர் பொறு மையுள்ளவராயினும் "சிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரி யோ ரப்பிழை பொறுத்தலு மரிதே" என்கிறபடி பிழையின் கொடு மையால் அவர்களுடைய மனங் கலங்கியபோது அதனால்வருந் தீங்கை நிவர்த்திசெய்ய யாராலு மாகாதென்பது கருத்து. "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது."

தீர்ந்தார் மாட்டும் — உம்மை எச்சப்பொருட்டாய் வந்தது; மாடு - ஏழனுருபு. செய்யவேண்டும் என்பதுபோற் செய்யாமை வேண் டும் என்பதிலும் வேண்டும் என்பது தேற்றப் பொருட்டாய்வந்த தொழிற்பெயர்; இதனை ஒருவகை வியங்கோளாகக் கொள்ளவுந் தகும். யார்க்கும்—குவ்வுருபு கர்த்தாப்பொருளில் வந்தது. (க)

பொன்னே கொடுத்தும் புணர்தற் கரியாரைக்
கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும் - அன்னோ
பயனில் பொழுதாக் கழிப்பாரோ நல்ல
நயமி லறிவி னவர்.

(இ - ள்.) நல்ல நயம் இல் அறிவினவர் - மேன்மையான பயன் இல்லாத புத்தியுள்ளவர், [மூடர்], பொன் கொடுத்தும் - (விசேஷமாக) பொருளைக் கொடுத்தாலும், புணர்தற்கு அரியாரை - சேரக்கூடாத பெரியோர்களை, கொன்னே - சும்மா, தலைக்கூட பெற்றிருந்தும் - சேரத்தக்க நிலையை அடைந்திருந்தாலும், அன்னோ - ஐயோ, பயன் இல் பொழுது ஆ - வீண்காலமாக, கழிப்பாரோ - கழிப்பார்களே, எ-று.

அருமையான பெரியோர் வலியத் தம்மிடம் வந்தபோது அவர் களைக்கொண்டு நன்மைபெறுமற் காலங்கழிப்பதும் பெரியாரைப் பிழைத்தலாம் என்பது கருத்து.

---

2. What though those ignorant men who know not what is good and right, obtain an opportunity of associating without any expense, with those who cannot be approached though gold be offered to them. Lo! they do but vainly waste their time.

Digitized by Google

கொன்னேமுதலான விடத்து ஏ - அசை. தலைக்கூட என்பது வினையெச்சமாகத் தோன்றினும் பொருணோக்கத்தில் தொழிற்பெயராய்ச் செயப்படுபொருளா அமையுமென அறிக. அன்றே — இரக்க இடைச்சொல். உம்மைகள்—சிறப்பு. (உ)

அவமதிப்பு மான்ற மதிப்பு மிரண்டும்
மிகைமக்க ளான்மதிக்கற் பால - நயமுணராக்
கையறியா மாக்க ளிழிப்பு மெடுத்தேத்தும்
வையார் வடித்தநூ லார்.

(இ-ள்.) அவமதிப்பும் - தாழ்வாக நினைப்பதும், ஆன்ற மதிப்பும் - மேலாக நினைப்பதும், இரண்டும் - ஆகிய இரண்டும், மிகைமக்களால்- பெரியோர்களால், மதிக்கல் பால - மதிக்கத்தக்கவை ; நயம் உணரா - குணமறியாத, கை அறியா - நல்லொழுக்கமறியாத, மாக்கள் - மனிதர்கள், இழிப்பும் - தாழ்த்துவதையும், எடுத்து ஏத்தும் - தூக்கிப் புகழ்வதையும், வடித்த நூலார் - ஆராய்ந்த நூலையறிந்த பெரியோர், வையார் - (ஒருபொருளாக) வைக்கமாட்டார், எ-று.

"நாயின்மேலேறி வையாளி விட்டாலென்ன வீழ்ந்தாலென்ன" என்கிற பழமொழிப்படி அற்பர் புகழ்ந்தாலும் பழித்தாலு மொன்றுமில்லை யென்பதாம்.

அகன்ற என்பது ஆன்ற எனத் திரிந்ததென்பர்; ஆன்றல் - மாட்சிமை எனத் தனியே கொள்வது முண்டு. "உம்மையென்றெனவோடுநான்கெண்ணு மஃதின்றியுமியலும்" என்றமையால் இங்கு உம்மை தொகைபெற்றது [நன்-இடை-கு-கூ.] மிகை—மிகுதல் [மேன்மை], அதனையுடைய மக்கள், என உருபும் பயனும் தொக்கதொடர். மக்கள், மாக்கள்,—இவை இரண்டுக்கும் ஒருமை யில்லை. ஏத்து—முதனிலைத் தொழிற்பெயர். நயமுணரா, கையறியா,—பெயரெச்சங்கள் அடுக்கி மாக்களென்னு மொருமுடிபு கொண்டன [நன் - பொது - கு - ச.](ங)

விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்

---

3. Esteem and disesteem, these two are things to be obtained only from the excellent. Learned men value not the contempt or praise of those who are devoid of good qualities and righteous conduct.

4. The bright colored serpent though living in a mountain crevice will tremble when it hears the fierce and angry sound

Digitized by Google

அருமை யுடைய வரண்சேர்ந்து முய்யார்
பெருமை யுடையார் செறின்.

(இ - ள்.) விரி நிறம் நாகம் - மிகுந்த காந்தியுள்ள பாம்பு, விடர் உளதேனும் - மலைப்பிளப்பில் இருப்பதானாலும், உருமின் கடுசினம் - இடியின் மிகுந்த உக்கிரமானது, சேண் நின்றும் - வானத்தில் இருக்கவும், உட்கும் - பயப்படும்; பெருமை உடையார்—, செறின் - கோபித்தால், (பிழைசெய்தவர்) அருமை உடைய அரண் சேர்ந்தும் - (பிறர்) புகுதற்குக்கூடாத கோட்டையைச் சேர்ந்திருந்தாலும், உய்யார் - பிழையார், எ-று.

இது எடுத்துக் காட்டுவமை யணி. நிற்க என்பது நின்று எனத் திரிந்தது. [நன்-வினை - சூ - உஎ.] சாரியை விகற்பமாதலின் உருமின் என்பதில் அத்துச்சாரியை வரவில்லை. விரிநிறம் என்பது அதின் பளபளப்பினால் அதின் சத்தியைக் குறிப்பித்தது. பாம்பு இடியோசைக்கு அஞ்சி இறக்குமென்பர். (ச)

எம்மை யறிந்திலி ரெம்போல்வா ரில்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று - தம்மை
அரியரா நோக்கி யறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

(இ - ள்.) எம்மை அறிந்திலிர் - எங்களை அறியமாட்டீர்கள், எம் போல்வார் இல் - எம்மை ஒத்தவர்கள் இல்லை, என்று—, தம்மை தாம் கொள்வது - தங்களைத் தாங்களே மதித்துக்கொள்வது, கோள் அன்று - குணம் ஆகாது; அறன் அறியும் சான்றோர் - தருமத்தை அறிந்த பெரியோர்கள், தம்மை—, அரியர் ஆ நோக்கி - அருமையானவராக நினைத்து, பெரியர் ஆ கொள்வது - பெரியவர்கள் என்று ஏற்றுக்கொள்வது, கோள் - குணமாம், எ-று.

பெரியரா—ஆக என்பது ஈறு தொக்கது. அறிந்திலிர் — முன்னிலைப்பன்மை யெதிர்மறை வினைமுற்று, அறி - பகுதி, இல் - எதிர்மறைப்பண்படி, ஈண்டு விகுதி, த் - இடைநிலை, தகரம் இரட்டித்து

---

of the thunder in the heavens. In like manner, though shut up in a fort difficult of access, one cannot escape from the anger of the great.

5. The estimation which persons form of themselves, saying 'you know us not and there are none like us' is no true estimation. But to be considered by the excellent who know what virtue is, to be great and rare personages, is correct estimation.

Digitized by Google

மெலிந்தது; எல்லாம் ஒருபகுதியானது, இர் - முன்னிலைப் பன்மை விகுதி. இல்—விகுதிகுன்றிய குறிப்புமுற்று. (ரு)

நளிகடற் றண்சேர்ப்ப நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை - விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

(இ-ள்.) நளி கடல் தண் சேர்ப்ப - விசாலமான கடலின் குளிர்ச்சியான கரையை யுடையவனே!, சிறியவர் கேண்மை - அற்பருடைய சிநேகமானது, நாள் நிழல் போல - முற்பகலின் நிழலைப்போலே, விளியும் - குறைந்துபோம்; தொல் புகழ் ஆளர் தொடர்பு - பழைமையான கீர்த்தியுள்ளவர்களுடைய சிநேகம், அல்கு நிழல் போல் - பிற்பகலின் நிழலைப்போல், அகன்று அகன்று ஓடும் - மிகவும் வளர்ந்து செல்லும், எ-று. ஏ - அசை.

தொல்புகழாளர் - பெரியோர்; புகழுக்குத் தொன்மையாவது முன்னோர்களது நிலைமையாயிருத்தல்; அல்லது தொன்மை புகழாளர்க்குமாம். விளிவு — குறைவுக்குக் கொள்ளப்பட்டது. அகன்றகன்று — மிகுதியென்னும் பொருணிலையால் வந்த அடுக்கு. [நன் - பொது - கூ - சச.] (சூ)

மன்னர் திருவு மகளி ரெழினலமும்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா - துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க் கொருங்கு.

(இ-ள்.) மன்னர் திருவும் - அரசருடைய செல்வத்தையும், மகளிர் எழில் நலமும் - பெண்களுடைய அழகின் நன்மையையும், துன்னியார் - நெருங்கினவர், துய்ப்பர் - அனுபவிப்பார்கள்; தகல் வேண்டா - யோக்கியதை வேண்டுவதில்லை; (எதுபோலெனில்) துன்னி - நெருங்கி, குழை கொண்டு - தளிர்களையுடைத்தாய், தாழ்ந்த - கவிந்திருக்கிற, குளிர் மரம் எல்லாம் - குளிர்ச்சியான மரங்களெல்லாம்,

---

6. O lord of the cool shore of the broad ocean! The friendship of the mean will like the shadow of the morning continually decrease, while the friendship of those of long standing reputation will increase like the shadow in the afternoon.

7. Just as cool umbrageous trees give shelter to all who approach them, so will the wealth of kings and the excellent beauty of women be enjoyed by those who move closely with them, no worthiness being neccessary.

Digitized by Google

தங்கண் சென்றார்க்கு - தங்களிடத்தில் வந்தவர்களுக்கு, ஒருங்கு - ஒருமிக்க, உறை - இடம் ஆம் (அதுபோல்), எ-று.

மகளிர் என்பதை இங்கு வேசியர்க்குக் கொள்ளல் தகுதி; தாழ்ந்தோ ருயர்ந்தோர் என்று தாரதம்மியமின்றி வந்தவர்களை யெல்லாந் தம்மிடஞ் சேர்க்கின்ற அறிவில்லாத மரங்கள்போலவும் வேசிமார் போலவும் அரசர் பெரியாரைச் சிறியாரோடு ஒருமிக்கச் சேர்த்தலும் பெரியாரைப் பிழைத்தல் என்பதுகருத்து.

துன்னியார் — துன் - பகுதி, ஆர் - விகுதி, இன் - இடைநிலை ஈறு குறைந்தது, யகரம் - உடம்படுமெய், னகரம் இரட்டியது. தகல் — (தகு + அல்) தொழிற்பெயர். ஒருங்கு — பகுதியே வினையெச்சமானது [நன் - வினை - சூ - ௩உ - ன் உரையைப்பார்க்க.] (எ)

தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர் நோய்செய்யும் - பெரிய
உலவா விருங்கழிச் சேர்ப்பயார் மாட்டும்
கலவாமை கோடி யுறும்.

(இ - ள்.) தெரிய தெரியும் - விளங்க அறியும்படியான, தெரிவு இலார் கண்ணும் - அறிவு இல்லாதவரிடத்திலும், பிரிய - பிரியும்போது, பெரும் படர் நோய் - பெரியதுக்கமாகிய வியாதியை, செய்யும் - (சிநேகமானது) உண்டாக்கும்; (ஆதலால்) பெரிய—, உலவா - வற்றாத, இரு கழி சேர்ப்ப - பெருமையான கழிக்கரை யுடையவனே!, யார் மாட்டும் - எவரிடத்திலும், கலவாமை - சிநேகியாமையானது, கோடி உறும் - (சிநேகத்தினும்) கோடிபங்கு நன்மையாகும், எ-று.

புத்தியீனரிடத்தில் சிநேகித்துப் பிரிந்தாலும் துக்கமுண்டாகு மானால் நல்ல விவேகிகளைச் சிநேகித்துப் பிரிதலில் எவ்வளவு துக்க முண்டாகலாம் ஆகையால் யாரையும் சிநேகியாமையே நலமென்ற படி. இதனால் பெரியாரைச் சேர்தலி லிருக்கு நன்மையைக்காட்டி அப்படிப்பட்டவ ரிடத்துப் பிழைத்தல் நல்லதன்றெனக் குறிப்பித்த தாம்.

கண்ணும்—உம்மை - இழிவு சிறப்பு. யார்மாட்டும் — முற்றும்மை. பிரிய — நிகழ்கால வினையெச்சம். (அ)

---

8. Since separation even from those who possess not the power of clear understanding, causes great and unceasing pain, O lord of the wide-spread backwater that will never dry! it is by far the best, not to contract friendship with any one.

Digitized by Google

கல்லாது போகிய நாளும் பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும் - ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலு முரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண்.

(இ-ள்.) கல்லாது போகிய நாளும் - நூல்களைக் கற்காமற் கழிந்த காலமும், பெரியவர்கண் செல்லாது - பெரியவரிடத்திற் போகாமல், வைகிய வைகலும் - சென்ற காலமும், ஒல்வ - இசைந்தவைகளை, கொடாது ஒழிந்த பகலும் - (தக்கவர்க்கு) கொடாமற்போன காலமும், உரைப்பின் - சொல்லப்புகுந்தால், பண்பு உடையார்கண் - சற்குணமுள்ளவரிடத்தில், படா ஆம் - சேராதவைகளாம், எ-று.

இதிலும் பெரியோரிடத்திற் சேரு நன்மையைக்காட்டி அவரிடம் பிழையாமை நன்றெனக் குறிப்பிக்கப்பட்டது.

போகிய—போ - பகுதி, கு - சாரியை, இன் - இடைநிலை, ஈறு போனது, அ - பெயரெச்சவிகுதி. ஒல்வ—வினையாலணையும்பெயர், ஒல் - பகுதி, வ் - இடைநிலை, அ - பலவின்பால்விகுதி. படா—எதிர் மறைவினையாலணையும் பெயர், காலங்களுக்கு விசேஷணமாதலால் ஆமென்கிற அதன் வினையால் முடிந்தது [பொது - சூத் - சக.] எதிர் மறை முற்றாகக்கொண்டு, ஆம் - அசை, என்னவுமாம். கொடாஅ, படாஅ,—அளபெடைகள் செய்யுளோசைக்காக வந்தன. (௯)

பெரியார் பெருமை சிறுதகைமை யொன்றிற்
குரியா ருரிமை யடக்கம் - தெரியுங்கால்
செல்வ முடையாருஞ் செல்வரோ தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்.

(இ - ள்.) பெரியார் பெருமை - பெரியோர்க்குப் பெருமையாவது, சிறு தகைமை - எளிமையைக்காட்டும் பணிவேயாம்; ஒன்றிற்கு உரியார் - ஒருபெரிய கல்விமுதலியவற்றிற்குச் சுதந்திர முள்ளவர்களுக்கு, உரிமை - அவ்வுரிமையாலாகிய பெருமையாவது, அடக்கம் - (தானே எடுத்துக்காட்டாமல்) அடங்கியிருத்தல்; தெரியுங்கால் -

9. The days which have not been spent in study, days on which the great have not been visited, and the days on which alms have not been given according to their means are not to be found with the worthy.

10. The glory of the great consists in their humility and the acquirements of the learned appear in their self-control. On mature consideration, the rich are rich indeed, if they remove the sufferings of those who come to them for protection or relief.

Digitized by Google

ஆராய்ந்து பார்த்தால், தன் சேர்ந்தார் அல்லல் - தன்னைச் சேர்ந்தவர்களுடைய துன்பத்தை, களைப எனின் - நீக்குவார்களே யானால், செல்வமுடையாரும் செல்வரோ - பொருளுள்ளவர்களும் உள்ளவர்களேயாவர், எ-று.

பெரியோர்க்குப் பணிவும், கற்றோர்க்கு அடக்கமும், செல்வர்க்கு ஈகையும் தக்கதுணங்கள் என்பது கருத்து. இதிலும் முற்பாடல்களிற் காட்டியவழியே கருத்து அமைத்துக்கொள்ளவேண்டும். இவ்வதிகாரமும் முன்னதிகாரத்தைப்போல மேன்மக்க ளியல்பைத் தெரிவித்ததென்பது தகுதி.

தகைமை—தகு - பகுதி, ஐ - விகுதி, மை - விகுதிமேல் விகுதி, ஐ - சாரியை என்னவுமாம்; சிறுமையாகிய தகை என விரியும். தற்சேர்ந்தார் என்பது காரணத்தால் வந்த ஒரு பெயராதலால் தன் என்னு மொருமை பிழையன்று. களைப—பலர்பால் முற்று. (கo)

## கஅ-வது அதிகாரம்.—Chapter XVIII.

### நல்லினஞ் சேர்தல்.—Good Society.

அதாவது நல்ல கூட்டத்தைச் சேர்தல்; நற்குண முடையவர்களது சமூகத்தை நேசிப்பது என்பதாம்.

அறியாப் பருவத் தடங்காரோ டொன்றி
நெறியல்ல செய்தொழுகி யவ்வும் - நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

(இ - ள்.) அறியா பருவத்து - புத்தியில்லாத வயதில், அடங்காரோடு - அடக்கமில்லாதவரோடு [அயோக்கியரோடு], ஒன்றி - சேர்ந்து, நெறியல்ல - வழியல்லாதவைகளை [பாவகாரியங்களை], செய்து ஒழுகியவும் - செய்து நடந்த அக்கிரமங்களும், நெறி அறிந்த - சன்மார்க்கத்தை அறிந்த, நல் சார்வு - நல்ல இடத்தை [பெரியோரை], சார - சேர்தலாலே, வெயில் முறுக - வெய்யில் விர்த்தியாக, புல் - புல்லை, பனி பற்று - பனி பிடித்திருப்பது, விட்டாங்கு - விடுவது போல, கெடும் - நாசமாகும், எ-று.

---

1. The sins which persons are habituated to commit by associating with the wicked during the time of their ignorance, will gradually vanish by keeping company with those who know the ways of virtue just as the dew on the grass disappears as the sun grows hot.

Digitized by Google

நெறியாவது சாஸ்திர ஏற்பாடு. ஒழுகியவ்வும் என்பதில் வகர வொற்று விரித்தல். செய்தொழுகிய நெறியல்லவும் எனக் கூட்டவு மாம். உம்மை—இழிவு சிறப்பு. சார—காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சம். விட்டாங்கு — விட்டால் என்பது விட்டு எனத் திரிந்து ஆங்கு என்னு முவமை இடைச்சொல்லோடு சேர்ந்தது. விட்டது என்பது ஈறுகுறைந்து சேர்ந்தது என்னவுமாம். (க)

அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மை யெஞ்ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

(இ-ள்.) எஞ்ஞான்றும் - எப்போதும், அறம் நெறி - தருமத்தின் வழிகளை, அறிமின் - அறியுங்கள்; கூற்றம் அஞ்சுமின் - யமனை அஞ்சுங்கள்; பிறர் - அன்னியர்களுடைய, கடு சொல் - கடூரமான சொற்களை, பொறுமின் - பொறுத்துக்கொள்ளுங்கள்; வஞ்சம் போற்றுமின் - வஞ்சனையை (உங்களிடஞ்சேராதபடி) பாதுகாவுங்கள்; வினை தீயார் கேண்மை - தீவினை செய்பவருடைய சிநேகத்தை, வெறுமின் - விரும்பாதுவிடுங்கள்; பெரியார் வாய் சொல் - பெரியோர்களுடைய வாயிலுண்டாகுஞ் சொற்களை, பெறுமின் - பெற்றுக்கொள்ளுங்கள், எ-று.

"வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்றவிதியால் அறிமின் முதலிய ஏவற்பன்மை முற்றுக்களை வினையெச்சமாகக்கொண்டு பெறுமின் என்பதோடு முடித்து உரைப்பாருமுளர். வினைதீயார் - வினையில் தீமையுள்ளார். கூற்றம் அஞ்சுமின் என அச்சத்தின் ஏதுவை இரண்டாம் வேற்றுமையாக்கூறல் செய்யுள் வழக்கு. (உ)

அடைந்தார்ப் பிரிவு மரும்பிணியுங் கேடும்
உடங்குடம்பு கொண்டார்க் குறலால் - தொடங்கிப்
பிறப்பின்னு தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க வம்மாவென் னெஞ்சு.

---

2. Know the ways of virtue, fear death, bear with the harsh words of others, guard against deceitfulness, hate the friendship of the wicked and ever seek and obtain the instructions of the great.

3. Since separation from friends, grievous disease and death will surely come together upon all who possess a body, let my heart be strongly attached to the truly wise who are ever convinced that birth is a great evil.

Digitized by Google

(இ-ள்.) அடைந்தார் பிரிவும் - சேர்ந்தவர்களைப் பிரிவதும், அரும் பிணியும் - அருமையான வியாதியும், கேடும் - மரணமும், உடம்பு கொண்டார்க்கு - தேகத்தைப் பெற்றிருக்கிறவர்களுக்கு, உடங்கு - ஒருமிக்க, உறலால் - வருவதனால், தொடங்கி - ஆதிகாலந் தொட்டு (வருகின்ற), பிறப்பு—, இன்னாது என்று - தீயது என்று, உணரும் - அறிந்திருக்கிற, பேர் அறிவினாரை - மிக்க விவேகமுள்ளவர்களை, என் நெஞ்சு - என் மனமானது, உற புணர்க - உறுதியாகச் சேரக் கடவது, எ-று.

பிறப்பில் துன்பங்களைக்கண்டு அதை வெறுத்திருக்கின்ற ஞானிகளைச் சேர்தல் நன்மைக்கு ஏதுவாம் என்பது கருத்து.

உடங்கு என்பது ஒருங்கு என்பதுபோல் வினைப்பகுதி வினையெச்சப் பொருட்டாய் வந்தது; "வினைமுற்றே" என்கிற சூத்திரத்தின் உரையைக் காண்க. இவ் வினையெச்சங்கள் பொருளோக்கால் வினையுரியாகின்றன. "இயல்பின்" என்கிற [நன்-உருபு-௬-௧௬] விதியில் அடைந்தார்ப்பிரிவு என வலி மிகுந்தது. (௩)

இறப்ப நினையுங்கா லின்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார் - பிறப்பினுள்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ டெஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

(இ-ள்.) நினையுங்கால் - யோசிக்குமளவில், இறப்ப இன்னாது எனினும் - மிகவும் தீயது ஆனாலும், பிறப்பினுள் - சம்சாரத்தில், பண்பு ஆற்றும் நெஞ்சத்தவர்களோடு - நற்குணந்தரித்த மனமுடைய பெரியவர்களோடு, எஞ்ஞான்றும் - எக்காலமும், நண்பு ஆற்றி - சிநேக குணம் பாராட்டி, நட்கப்பெறின் - சிநேகிக்கப் பெற்றால், பிறப்பினை - பிறப்பை, யாரும் முனியார் - எவர்களும் வெறுக்க மாட்டார்கள், எ-று.

பல தீமைகட்கு இடமாகிய இப்பிறப்பில் நல்லோரை நேசித்திருப்பதே குணமென்றபடி.

பிறப்பு—சம்சாரத்துக்கு ஆகுபெயர்; சம்சாரமாவது பிறந்து இறக்கும்படியான இயல்பு; தேக சம்பந்தமுமாம். நண்பு — நள் - பகுதி, பு - விகுதி, ளகரம் டகரமாகி மெலிந்தது. (௪)

---

4. Although birth should on mature thought be considered a very great evil, yet if one could be so happy as ever to be friendly with those who are possessed of good qualities and to enjoy their friendship, then there could be none who would dislike birth.

Digitized by Google

ஊரங் கணநீ ருரவுநீர்ச் சேர்ந்தக்கால்
பேரும் பிறிதாகித் தீர்த்தமாம் - ஓரும்
குலமாட்சி யில்லாருங் குன்றுபோ னிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

(இ - ள்.) ஊர் அங்கணம் நீர் - ஊரிலுள்ள சலதாரை நீரானது, உரவு நீர் - சிறப்புப் பொருந்திய நீரை, சேர்ந்தக்கால் - சேர்ந்தால், பேரும் பிறிது ஆகி - வேறுபேரும் உண்டாகி, தீர்த்தம் ஆம் - பரிசுத்தமான ஜலமாம்; (அப்படியே) ஓரும் - அறியத்தக்க, குலம் மாட்சி இல்லாரும் - குலப்பெருமை இல்லாதவர்களும், நலம் மாட்சி - குணப்பெருமையுள்ள, நல்லாரை சார்ந்து - நல்லவர்களைச்சேர்ந்து, குன்று போல் நிற்பர் - மலைபோல் (பெருமை யுடையவராய்) இருப்பார்கள், எ-று.

உரவு - வலி, இங்கே சிறப்புக்காயிற்று. "பேரும்பெரிதாகி" எனப் பாடங்கொண்டு, சிறப்பான ஓர் பேரையடைந்து எனப்பொருள் கொள்வது தகுதி. நலம்—குணத்துக்கு ஆகுபெயர். ஆகி, சார்ந்து என்பவை செயவெனெச்சத்திரிபுகள், செய்தெனெச்சமே காரணப் பொருட்டாய்வரின் பிறவினைக் கருத்தாவைக்கொண்டு முடிவது அனுபவத்தி லிருக்கின்றது. (ரு)

ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலா லோங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

(இ-ள்.) ஒள் கதிர் - அழகான கிரணங்களுள்ள, வாள் மதியம் — பிரகாசமான சந்திரனை, சேர்தலால்—, ஓங்கிய - உயர்ந்த, அம் கண் விசும்பின் - அழகான இடமுள்ள வானத்திலுள்ள, முயலும் — முசலும், தொழப்படும் - கும்பிடப்படுகின்றது; (அதுபோல்) குன்றிய சீர்மையர் ஆயினும் - குறைந்த சிறப்புள்ளவர்க ளானாலும்,

5. The water from the sink, will on joining a great water [i. e. a celebrated river] become a *Theertham* [holy water], and even have its name changed. So will those who have not family greatness stand high as a rock by associating with the good who have virtue and greatness.

6. Even the hare in the wide beauteous sublime heavens will, by being in the moon with refulgent beams, be adored (by men). In like manner even those who are without any dignity of their own will by acquiring the friendship of those who are great as the mountain in their natural excellence, attain a dignity.

Digitized by Google

குன்று அன்னார் கேண்மை - மலைபோன்ற மேன்மையுள்ளவர்களுடைய சிநேகத்தை, கொளின் - பெற்றுக்கொண்டால், சீர் பெறுவர் - மேன்மை அடைவர், எ-று.

ஒண்கதிர்—ஒள்கதிர் என்பதில் ளகரம், முன் டகரமாகிப் பின்பு ணகரமாக மெலிந்ததெனக் கொள்க. (சு)

பாலோ டளாயநீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் - தேரின்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

(இ - ள்.) பாலோடு அளாய நீர் - பாலிற் கலந்த ஜலம், பால் ஆகும் அல்லது - பாலாக எண்ணப்படுமே யல்லாமல், நிறம் தெரிந்து-நிறத்தின் வேற்றுமை அறியப்பட்டு, நீர் ஆய் தோன்றாது - ஜலம் ஆகக் காணப்படாது; தேரின் - ஆராய்ந்துபார்த்தால், நல்ல—, பெரியார் - பெரியவர்களுடைய, பெருமையை சார்ந்து - பெருந்தன்மையைச் சார்தலால், சிறியார் சிறுமையும் - அற்பருடைய அற்பத்தனமும், தோன்றாது—, எ-று. ஆம் இரண்டும் - அசை.

அளாவிய என்பது அளாய என மருவியது; அளாவு என்னு முதனிலையில் ஈற்றுயிர்மெய் குறைந்து இறந்தகாலங்காட்டும் யகர இடைநிலையும் அகரவிகுதியும் சேர்ந்து உண்டானதென்றும் சொல்வார்கள்.

கொல்லை யிரும்புனத்துக் குற்றி யடைந்தபுல்
ஒல்காவே யாகு முழுவ ருழுபடைக்கு
மெல்லியரோ யாயினு நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாஞ் செற்றார் சினம்.

(இ-ள்.) கொல்லை - கொல்லையைச்சேர்ந்த, இரு புனத்து - பெரிய வயலிலே, குற்றி அடைந்த புல் - மரக்கட்டையை பற்றிநிற்கிற புல்லானது, உழவர் - உழுகின்றவர்களுடைய, உழுபடைக்கு - கலப்பைக்கு, ஒல்கா ஆகும் - அசையாதவைகளாயிருக்கும்; (அப்படியே) மெல்லியரோ ஆயினும் - பலஹீனர்களா யிருந்தாலும், நல் சார்வு சார்ந்தார்மேல் - நல்ல ஆசிரயத்தைப் பற்றினவர்களிடத்தில், செற்றார்

---

7. Water when mixed with milk will appear as milk and not as water. So will the meanness of the low disappear in the dignity of the great with whom they associate.

8. The grass around the stump of a tree in a field will not yeild to the plough of the cultivator. In like manner, though they be feeble in themselves, they will not in the least be affected by the anger of their enemies, if they should only acquire the friendship of the great.

Digitized by Google

சினம் - பகைவருடைய வலி, செல்லா ஆம் - செல்லமாட்டாதவைக ளாய்விடும்.

கொல்லையாவது பலவயல்கள் சேர்ந்ததொரு நிலம் எனக் கொள்க. குற்றி பெயர்க்கப்படாமையால் புல்லும் பெயர்க்கப்படா தென்பது கருத்து.

ஒல்கா—எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்று; ஒல்கு - பகுதி, ஆ - விகுதி, மறைப்பொருளையும் காட்டும். "ஆவேயெதிர்மறைக் கண்ணதாகும்" என்பது விதி. உழுபடை — வினைத்தொகைநிலைத்தொடராய்க் கலப்பைக்குக் காரணப்பெயர்; குவ்வுருபு கருவிப்பொருளில் வந்தது. (அ)

[இதுவரையிலும் நல்லினஞ் சேர்தலினலாகும் பயன்களைக் காட்டி மற்றிரண்டு பாட்டால் தீயினஞ் சேர்வதனலாகுங் கேட்டை விளக்குகின்றார்.]

நிலநலத்தா னந்திய நெல்லேபோற் றத்தம்
குலநலத்தா லாகுவர் சான்றோர் - கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

(இ - ள்.) நெல் - நெல்லானது, நிலம் நலத்தால் - நிலத்தினது வளப்பத்தால், நந்திய போல் - வளர்வதுபோலே, தத்தம் குலம் நலத்தால் - தாங்கள் தாங்கள் சேர்ந்திருக்கிற கூட்டங்களின் யோக்கியதையால், சான்றோர் ஆகுவர் - (மனிதர்) மேலானவராவர்; கலம் நலத்தை - கப்பலின்பெருமையை, தீ வளி - சுழல்காற்று, சென்று - போய், சிதைத்து ஆங்கு - கெடுத்தாற் (கெடுவது) போல, சான்றாண்மை - (ஒருவருடைய) மேன்மையானது, தீ இனம் சேர - துர்க்குணமுள்ள கூட்டத்தைச் சேர்வதனல், கெடும் - கெட்டுப்போம், எ-று.

நந்திய—ஈறுகுறைந்த தொழிற்பெயராக் கொள்க; பெயரெச்சமாகக்கொள்ளின் கருதியதுள்ளிட்டது என்கிற குற்றம் வரும். சிதைத்து என்பது சிதைத்தால் என்பதின் திரிபு. ஆங்கு—உவமையிடைச்சொல். தந்தம் [தம்தம்] என்பது வலித்தலால் தத்தம் என்றாயிற்று.

மனத்தான் மறுவில ரேனுந்தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர் - புனத்து

---

9. Like paddy multiplied by the goodness of the soil, persons will become great through the goodness of their respective families. Just as a good ship is destroyed by a strong gale, so will greatness be destroyed by bad society.

10. Though innocent in intention, persons will be despised on account of their bad company. In the forest both the

Digitized by Google

வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

(இ-ள்.) மனத்தான் - மனநிலைமையினால், மறு இலர் எனும் - குற்றம் இல்லாதவர்களானாலும், தாம் சேர்ந்த இனத்தால் - தாங்கள் கூடின தீயகூட்டத்தால், இகழப்படுவார் - நிந்திக்கப்படுவார்கள் (மனிதர்) ; எறி புனம் - வெட்டியகாடு, தீ பட்டக்கால் - நெருப்புப் பற்றினால், புனத்து - அக்காட்டிலுள்ள, வெறி கமழ் - வாசனை வீசுகின்ற, சந்தனமும் வேங்கையும் - சந்தனமரமும் வேங்கைமரமும், வேம் - வெந்துபோம், எ-று. ஏ - அசை.

இயற்கையிற் குற்றமிலராயினும் சேர்க்கைக் குற்றத்தால் கெடுவர் என்பது கருத்து.

மனத்தான்—மனத்தில் எனவு முரைக்கலாம், வேற்றுமை மயக்கம், [பெயர் - சூ - சுo.] (கo)

## ககூ-வது. அதிகாரம்.—Chapter XIX.

### பெருமை.—Greatness.

அதாவது, எவ்வழியு மனக்கலக்கமின்றித் தாம் செய்யவேண்டியவைகளைக் கூடியவளவு செய்யு முறுதிப்பாட்டானாய வுயர்வு.

ஈத லிசையா திளமைசே ணீங்குதலால்
காத லவருங் கருத்தல்லர் - காதலித்
தாதுநா மென்னு மவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

(இ-ள்.) ஈதல் இசையாது - (பொருள் இன்மையால்) பிறர்க்கு ஒன்றைக்கொடுப்பது அமையாது; இளமை - யௌவனம், சேண் நீங்குதலால் - தூரமாக நீங்கிப்போதலால், காதலவரும் - (தம்மிடத்து முன்) ஆசைகொண்டிருந்த பெண்டிரும், கருத்து அல்லர் - (இப்போது) மனப்பற்றுடையவர்கள் அல்லர் ; (ஆதலால்) காதலித்து -

---

fragrant sandal and the *Vengai* tree will be burned when the brush wood which has been cut, takes fire.

1. It is no longer in our power to give alms. As youth has for ever fled away, those damsels who loved us before care no more for us. It is therefore necessary to give up all desire of continuing in the domestic state entertaining (vain) hopes of living prosperously.

Digitized by Google

(இல்வாழ்க்கையில்) ஆசைவைத்து, நாம் ஆதும் என்னும் - நாம் வாழ்வோம் என்கிற, அவாவினை கைவிட்டு - ஆசையைவிட்டு, போவதே பொருள் - துறந்துபோவதே நல்லகாரியமாகும், எ - று. போலும்—அசை.

ஒருவர்க்கு ஒன்றுகொடுத்து உபகாரஞ் செய்யக்கூடாமலும் போகங்களை அனுபவிக்கக்கூடாமலும் போனபின்னும் இல்வாழ்க்கையில் ஆசைவைத்துத் தடுமாறுதலைவிட்டு ஆத்துமானுபவ சுகத்தைப் பெற மனந் துணிவது பெருமை என்பது கருத்து.

ஆதும்—தன்மைப்பன்மை யெதிர்கால வினைமுற்று; ஆ - பகுதி, தும் - விகுதி, விகுதியே காலங்காட்டும். [வினை - சூ - கரு - ம், பத - சூ-கஅ-ம் காண்க.] (க)

இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணி
பொச்சாந் தொழுகுவர் பேதையார் - அச்சார்வு [ப்
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தார்
என்றும் பரிவ திலர்.

(இ-ள்.) இல் சார்வின் - இல்வாழ்க்கையைச் சார்ந்ததனால், ஏமாந்தேம் - களிப்படைந்தோம், ஈங்கு - இந்த இல்வாழ்க்கையில், அமைந்தேம் - (எல்லாம்) நிறைந்தவர் ஆனோம், என்று எண்ணி—, பொச்சாந்து - (பின்வருவதை) மறந்து, ஒழுகுவர் - நடப்பார்கள், பேதையார் - புத்தியினர்; அச்சார்வு - (இல்வாழ்க்கையாகிய) அந்த ஆதரவுகள், நின்றன போன்று - நிலையானவைகள்போலிருந்து, நிலையா - நிலைநிற்கமாட்டா, என உணர்ந்தார் - என்றறிந்தவர், என்றும் - எப்போதும், பரிவது இலர் - விசனப்படமாட்டார், எ-று.

பல இடையூறுகளால் இல்வாழ்க்கை நிலைகுலைந்து வருந்தும்படி நேரிடுவதுதான் பின்வருவது; இது இத்தன்மையதென முன்பே உணர்ந்து அதிற் பற்றற்று நிற்குநிலை சுகத்திற்கு ஏதுவாதலால் பெருமை என்பது கருத்து.

ஏமாந்தேம் — ஏமா - பகுதி. பொச்சாந்து—பொச்சா - பகுதி. மனைவி மக்கள் மாளிகை விளைநிலம் முதலியவைதாம் அச்சார்வு என்னப்பட்டன. (உ)

---

2. Fools, forgetting what is to come, say that they have enjoyed pleasure in the domestic state and have grown prosperous; but those who know that the domestic state, though seemingly lasting, is not really so, will never feel sorry at any time.

Digitized by Google

மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மின் - அறிஞராய்
நின்றுழி நின்றே நிறம்வேறாங் காரணம்
இன்றிப் பலவு முள.

(இ - ள்.) மயல் இன்றி - மயக்கமில்லாமல், மறுமைக்கு வித்து - மறுமைச்சுகத்திற்குக் காரணமாயுள்ள நற்காரியத்தை, செய்து—, சிறுமைபடாதே - துன்பத்தை யடையாமல், நீர் - நீங்கள், அறிஞர் ஆய் - விவேகமுள்ளவர்களாய், வாழ்மின் - வாழுங்கள்; நின்றுழி நின்றே - இருந்த இடத்தில் இருந்தே, நிறம் - பருவம், [அல்லது குணம்,] வேறு ஆம் - மாறிப்போம்; காரணம் இன்றி - காரணமில்லாமலே, பலவும் உள - இன்னும் பலவேறுபாடுகளும் உண்டாம்; [அல்லது குணம் மாறும்படியான காரணமில்லாமலே பலமாறுதல்களும் உண்டாம் என உரைத்துக்கொள்க,] எ-று.

நாம் இருக்கிறபடி இருக்கையிலேயே நமக்குத்தெரியாமலே நம்முடைய பருவமுதலானவை மாறிப்போகின்றன, ஆதலால் மறுமைக்குரியவற்றை மயக்கமுறுமுன்னமே செய்து, விவேகிகள் என்று சொல்லும்படி வாழ்ந்துகொண்டு, பருவமுதலிய மாறிப்போன காலத்தில் மனக்குறையின்றி யிருப்பது பெருமை என்பதாம்.

நிறம் ஒளியாதலால் பருவத்துக்கு ஆகுபெயராக் கொள்ளப்பட்டது. காரணமில்லாமல் என்பதற்கு நம்மால் அறியப்பட்ட காரணங்களில்லாமல் என்பது கருத்து. அறிஞராய் நின்றுழி நின்று எனக்கூட்டி "நாம் இன்னதைச்செய்யவேண்டும் இன்னதைத் தவிரவேண்டும் என்றிருக்கையிலேயே எல்லாம் மாறுகின்றன" எனவும் கருத்துக்கொள்ளலாம். நின்ற உழி என்பது நின்றுழி என விகாரப்பட்டது; உழி - இடம்.

இம் மூன்று பாட்டினாலும் இல்வாழ்க்கைச் சிதைவினால் மனங் கலங்காது நிற்றலாகிய பெருமை கூறப்பட்டது. இனிச் செய்கடன்களைப் பற்றிய வுயர்வு கூறப்படும். (ங)

உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி [ஞ்
இறைத்துணினு மூராற்று மென்பர்-கொடைக்கடனு

---

3. Laying up the seed for heaven without any delusion of mind, become wise and enjoy life undisturbed by affliction, for as we are, our qualities may change, and there are other circumstances which may also change our nature without an efficient cause.

4. They say that in the time of drought, the tank containing springs will preserve the people of a whole village, though they should draw up the water as it collects in it. So

Digitized by Google

சாஅஅயக் கண்ணும் பெரியோர்போன் மற்றையார்
ஆஅஅயக் கண்ணு மரிது.

(இ-ள்.) உறைப்பு அரு காலத்தும் - மழை பெய்தல் அருமையாகிய காலத்திலும், ஊற்று நீர் கேணி - ஊற்றினால் நீரையுடைய குளம், இறைத்து உணினும் - இறைத்துக் குடித்தாலும், ஊர் ஆற்றும் - ஊரைக் காப்பாற்றும், என்பர்—; கொடை கடன் - கொடுத்தலாகிய கடமை, சாயக்கண்ணும் - தளர்ந்தபோதும், பெரியார் போல் - பெரியோர்களைப்போல, மற்றையார் - சிறியவர், ஆயக்கண்ணும் - (செல்வம்) பெருகிவருங்காலத்திலும், அரிது - (பிறர்க்கு உபகரித்தல்) இல்லையாம், எ-று.

ஒரு குளம் மழையில்லாதபோதும் ஊற்றுநீரால் பலரைக் காப்பாற்றுவதுபோல் பெருமையுடையோர் கொடுக்கும் வளம் தங்களுக்கில்லாதபோதும் யாதோ ஒருவகையால் பிறர்க்கு உதவிசெய்வர், சிறியாரோ செல்வ மிகுதியிலும் அப்படிச் செய்யார் என்பது கருத்து.

அருங்காலத்து என்பதில் ஙகரம் இனமிகல். கொடைக்கடனும் என்பதில் உம்மை அசையெனக்கொள்வதே தகுதி. ஆயக்கண், சாயக்கண்,— வினையெச்சங்கள்; அளபெடைகள் பாட்டிசையும் இன்னிசையு நிறைக்க வந்தன. (௪)

உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்தும்
கல்லூற் றுழியூறு மாறேபோற் செல்வம் [ச்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றி
செய்வர் செயற்பா லவை.

(இ-ள்.) உறு புனல் தந்து - (செழித்தகாலத்தில்) மிகுந்த நீரைக் கொடுத்து, உலகு ஊட்டி - உலகத்தாரை உண்ணச்செய்து, அறும் இடத்தும்-(நீர்) அற்ற காலத்தினும், கல் ஊற்றுழி - தோண்டின ஊற்றிலே, ஊறும் - (நீர்) ஊறப்பெற்ற, ஆறேபோல் - நதியைப்போல், செல்வம் பலர்க்கு ஆற்றி - (உள்ளபோது) தஞ்செல்வத்தைப் பலபெயர்க்குங் கொடுத்து, கெட்டு உலந்தக்கண்ணும் - (அச்செல்வம்) கெட்டழிந்தபோதும், சிலர்க்கு ஆற்றி - சிலர்க்காயினுங் கொடுத்து,

---

the duty of liberality is found with the great even when in declining circumstances but with others it is rare even when they are affluent.

5. The river that in good season, fed the country by its abundant flow of water, will, even when it is dry, yeild water in the springs dug up on its bed. In like manner will the great, even when reduced in circumstances by giving off their riches to many, do what they ought to do, though only to a few.

Digitized by Google

செயல் பாலவை - செய்யும்படியானவைகளை, செய்வர் - (பெரியோர்) செய்வார்கள், எ-று.

*கல்*—வினைத்தொகை. செயல்பாலவை—செயலுக்குத்தக்க பான்மையுடையவை; பான்மை - குணம் அல்லது இயல்பு. (௫)

பெருவரை நாட பெரியார்கட் டீமை
கருநரைமேற் சூடேபோற் றோன்றும் - கருநரையைக்
கொன்றன்ன வின்னா செயினுஞ் சிறியார்மேல்
ஒன்றானுந் தோன்றா கெடும்.

(இ - ள்.) பெருவரை நாட - பெரியமலைகளுள்ள நாட்டின் அரசனே!, பெரியார்கண் - பெரியவர்களிடத்தில், தீமை - குற்றமானது, கரு நரைமேல் - சிறந்த வெள்ளை ரிஷபத்தின்மேல், சூடே போல் - சூடிய சூடுபோலே, தோன்றும் - விளங்கிக்காணும்; கரு நரையை கொன்றன்ன - சிறந்த வெள்ளை ரிஷபத்தைக் கொன்றாற்போன்ற, இன்னா செயினும் - தீச்செயல்களைச் செய்தாலும், சிறியார் மேல் - சிறியோரிடத்து, ஒன்றானும் - ஒரு குற்றமாயினும், தோன்றா கெடும்- விளங்கிக்காணாமல் அழிந்து விடும், எ-று.

பெரியோர் ஒரு குற்றஞ்செய்தால் அது நன்றாய் விளங்கித்தோன்றும், சிறியோர் எத்தனை செய்தாலும் ஒன்றாவது விளங்கித் தோன்றாததுமன்றிச் செய்ததாகவே காணப்படாமற்போம் என்றதனால் பெருமையுடையோர் சிறிதுங் குற்றஞ் செய்யாது தம்மைக் காக்க வேண்டும் என்பது கருத்து.

ரிஷபங்களில் வெள்ளைரிஷபம் மிகச் சிறந்ததென்பர், ஆகையால் அதைக் கொல்வது அதிக பாவமான செய்கை. தோன்றாகெடும் என்னுமிடத்து ஒற்றுமிகுவதே தகுதி. ஒன்றானும்—ஆன், ஏன் என்பவை ஐயம் அல்லது விகற்பத்தைக்காட்டு மிடைச்சொல். உம்—இழிவு சிறப்பு. (௬)

இசைந்த சிறுமை யியல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம் - அசைந்த

6. O lord of the country abounding in large mountains! A crime committed by the great will appear as clearly as a brand-mark on an excellent white ox. But if the base commit sins as heinous as the killing of an excellent white ox, their guilt will be wholly invisible.

7. Connection with the base who are devoid of all good disposition will, as far as it extends produce sorrow, while even

Digitized by Google

நகையேயும் வேண்டாத நல்லறிவி னோர்கண்
பகையேயும் பாடு பெறும்.

(இ-ள்.) சிறுமை இசைந்த - அற்பத்தன்மை பொருந்திய, இயல்பு இலாதார்கண் - குணமில்லாதவர்களிடத்தில், பசைந்த துணையும் - சிநேகித்த அளவும், பரிவு ஆம் - துன்பமே ஆம்; அசைந்த - தளர்ந்த, [நல்வழியிற் சேராத], நகையேயும் - பரிகாசத்தையும், வேண்டாத - விரும்பாத, நல் அறிவினோர்கண் - நல்ல விவேகிகளிடத்து, பகையேயும் - விரோதமும், பாடு பெறும் - பெருமையை அடையும், எ-று.

அயோக்கியரிடத்தில் நேசங் கொள்ளக் கொள்ளத் துன்பமே வரும், ஆதலால் அதனினும் யோக்கியரிடத்துப் பகை நல்லது; ஏனெனில் இப்பகை யாதொரு துன்பமுஞ் செய்யாதென்பது கருத்து.

நகை—பரிகாசத்துக்கு ஆகுபெயர். பரிகாசத்திலுந் தகாததைக் கொள்ளாமை பெரியோ ரியல்பாதலின் அங்ஙன முரைக்கப்பட்டது. அசைந்த - தகாதவைகளை, நகையேயும் - மகிழ்ச்சியிலும், என உரைப்பாருமுண்டு. (எ)

மெல்லிய னல்லாருண் மென்மை யதுவிறந்
தொன்னருட் கூற்றுட்கு முட்குடைமை யெல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவருள்
நன்மை வரம்பாய் விடல்.

(இ-ள்.) மெல் இயல் - மென்மையான குணமுள்ள, நல்லாருள் - பெண்டிர்களிடத்தில், மென்மை - மெதுவாந்தன்மைக்கும், ஒன்னருள் - சத்துருக்களிடத்து, அது இறந்து - அதைவிட்டு, கூற்று உட்கும் - யமன் பயப்படும்படியான, உட்கு உடைமை - பயப்படுத்துந் தன்மைக்கும், எல்லாம் - எல்லாவிடத்திலும், சலவருள் - வஞ்சகம் பேசுவோரிடத்து, சால - மிகவும், சலமே - வஞ்சகம் பேசுவதற்கும், நலவருள் - நற்குணமுடையவரிடத்து, நன்மை - நலமா நடப்பதற்கும், வரம்பு ஆய்விடல் - எல்லையாயிருக்கவேண்டும், எ-று.

அயோக்கியரிடத்து அயோக்கியமாயும் யோக்கியரிடத்து யோக்கியமாயு நடப்பது பெருமை என்பது கருத்து.

---

the enmity with the excellent wise, who will not do what is wrong even in sport, will bring on its due greatness.

8, The wise will deal with the soft sex as smoothly as their nature deserves; with their enemies they will on the contrary behave so terribly as to alarm even Yama himself. In dealing with those who are habitually deceitful, they will be more deceitful; and with the good they will ever be good.


Digitized by Google

வேண்டுக என்றும் செலுத்துக என்றும் வினை வருவித்துத் தனித் தனி வாக்கியமா முடிப்பாருமுளர். வரம்பாய் - எல்லையாகின்று, விடல் - செலுத்தவேண்டும் எனவு முரைக்கலாம். சலம் உடையோர் சலவர், நலம் உடையோர் நலவர். 'மெல்லிய நல்லாருண் மேன்மை' எனவும் பாடம். விடல்—வியங்கோள் வினைமுற்று, [நன்-வினை-சூ-கஅ-ன் உரையைக்காண்க.] (அ)

கடுக்கி யொருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினு மனப்பிரிப்பொன் றின்றித்
துளக்க மிலாதவர் தூய மனத்தார்
விளக்கினு ளொண்சுடரே போன்று.

(இ-ள்.) ஒருவன்—, கடுக்கி - (முகத்தைக்) கடுமையாக்கி, கடுகுறளை பேசி - மிகுந்த கொடுஞ் சொற்களைப் பேசி, மயக்கி விடினும் - மயங்கச் செய்தாலும், மனப்பிரிப்பு ஒன்று இன்றி - மனம் வேறுபடுதல் கிஞ்சித்து மில்லாமல், விளக்கினுள் - தீபத்தில், ஒள் சுடரே போன்று - பிரகாசமான சுவாலையை ஒத்து, துளக்கம் இலாதவர் - அசைவு இல்லாதவர், தூய மனத்தார் - சுத்தமான மனமுள்ளவர், எ-று.

ஒன்று என்பது இங்கே அற்பம் என்பதைக் காட்டுகின்றது. (கூ)

முற்றுத்துந் துத்தினை நாளு மறஞ்செய்து
பிற்றுத்துத் துத்துவர் சான்றவர் - அத்துத்து
முக்குற்ற நீக்கி முடியு மளவெல்லாம்
துக்கத்து ணீக்கி விடும்.

(இ - ள்.) முன் துத்தும் - முந்தி உண்ணும்படியான, துத்தினை - உணவை, நாளும் - தினந்தோறும், அறம் செய்து - (பிறர்க்குக் கொடுத்தலாகிய) தருமமாச் செய்துவிட்டு, பின் துத்து - பின் உண்ணும்படியான (உணவை), துத்துவர் சான்றவர் - புசிப்பர் பெரியோர்; அ துத்து - அப்படிச்செய்யு முணவு, முக்குற்றம் நீக்கி - காமம் வெகுளி மயக்கம் என்கிற மூன்று குற்றங்களையும் போக்கி, முடியும் அளவும் - (அவர்) முடியுங்காலம் வரையும், துக்கத்துள் நீக்கிவிடும் - துக்கத்தினின்றும் (அவர்களை) பிரித்துவிடும், எ-று.

---

9. They are only the pure-minded who, when confused by the harsh speech and the evil calumny of a person, remain steady as the bright flame of a lamp, being neither agitated nor changed in mind.

10. The excellent expend the first portion of their food in charity and then eat what is left. That food will deliver them from the three great (human) faults—lust, anger and delusion—and relieve them of all afflictions to the end of their life.

Digitized by Google

முதலில் உண்ணும்படிகொண்ட சோற்றைப் பரதேசிகட்குக் கொடுத்துப் பிற்படநின்றதை உண்டு வாழுமவர்க்குச் சாமளவும் துக்க மில்லாதிருக்கும்படியான நிலையைத் தரும்; புண்ணிய முண்டா மென்பதாம்.

துத்தும்—து - பகுதி, உம் - பெயரொச்ச விகுதி, து - சாரியை, தகரமும் உகரக்கேடும் சந்தி. துத்து—வினையாலணையும்பெயர், உண்ணத்தக்கதென்பது பொருள், து - பகுதி, து - ஒன்றன்பால் விகுதி, இடைநிலையின்றி வந்தது. துக்கத்துள்—எ-ம் வேற்றுமையுருபு ரு-ம் வேற்றுமையில் வந்தது. (௧௦)

## உ0 - வது அதிகாரம்.—Chapter XX.

### தாளாண்மை:—Perseverance.

அதாவது முயற்சியை ஆளுந்தன்மை.

கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுவ [போல்
வாளாடு கூத்தியர் கண்போற் றடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு.

(இ - ள்.) கோள் - (நீரின்) கொள்கையை, ஆற்ற - பூர்ணமாக, கொள்ளா - கொள்ளமாட்டாத, குளத்தின் கீழ் - ஏரியின் கீழுள்ள, பைங்கூழ் போல் - பயிரைப் போலே, கேள் ஈவது உண்டு - பந்துக்கள் கொடுப்பதைப் புசித்துக்கொண்டு, கிளைகள் - (கொடுப்பவர்க்கு) உறவின்முறையார், துஞ்சுவ - சாவர்; வாள் ஆடு - வாளின்மேல் ஆடுகின்ற, கூத்தியர் - கூத்தாடும் பெண்களுடைய, கண் போல் - கண்ணைப்போல், தடுமாறும் - (அவ்வாட்டத்தின்மேல் கவனமாய்) புடைபெயர்ந்து நிற்கிற, தாள் ஆளர்க்கு - முயற்சியைக் கையாள்பவர்க்கு, தவறு உண்டோ - காரியம் கைகூடாமற் போவது உண்டாகுமோ, [உண்டாகாது], எ-று.

மிகுந்த நீரைக் கொள்ளமாட்டாத ஏரியின்கீழ்ப் பயிர் அவ்வேரி செழித்திருக்கு மளவும் செழித்திருந்து அது வரண்டால் தானும் சாவதுபோல், யாதொரு முயற்சியுஞ் செய்யாமல் உறவினர் கொடுக்கத் தின்றுகொண்டு காலங் கழிக்குஞ் சோம்பர் அவர் செல்வம் வரளும்

1. Those relations who ever subsist on what is given by their kinsmen will perish with them like the paddy nourished by the tank which holds but little water. Will the exertions of those result in a failure who ever persevere like the watchful eye of the juggler playing on swords?

ROJA MUTHIAH
ARTIST
KOTTAIYUR P O
Digitized by Google

போது சாவர். கத்திமேல் ஆடுகிறவள் அவ் வாட்டம் தவறாமலும் அபாயம் வராமலும் ஜாக்கிரதையாய்க் கண்ணை அதன்மேலேயே செலுத்துவதுபோல் காரியத்தில் ஜாக்கிரதையாய் முயற்சி செய்கிறவர்களுக்குக் காரியம் தவறிப்போகமாட்டாது என்பது கருத்து.

துஞ்சுக எனவும் பாடமுண்டு. தடு - தம்பித்திருத்தல், அது மாறுதல் தடுமாற்றம். ஆற்ற—வினையெச்சம், ஆற்று - பகுதி. பசுமையான கூழ் பைங்கூழ்; அடி அகரம் ஐ ஆய், மற்றவை கெட்டன. கிளைகளோ—ஓ - இரக்கத்தின்கண் வந்தது. (க)

ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉம்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

(இ - ள்.) ஆடு கோடு ஆகி - ஆடுகின்ற கொம்பு ஆகி, அதரிடை- வழியில், நின்றதும் - நின்ற செடியும், காழ் கொண்ட கண்ணே - வயிரங்கொண்ட போதே, களிறு அணைக்கும் கந்து ஆகும் - யானையைக் கட்டும்படியான தறியாகும்; ஒருவன்—, தான் தன்னை—, தாழ்வு இன்றி செயின் - தாழ்ச்சியில்லா திருக்கும்படி (முயற்சி) செய்தால், வாழ்தலும் - (அவனுடைய) வாழ்வும், அன்ன தகைத்தே - அப்படிப் பட்ட தன்மையுடையதே ஆகும், எ-று.

அளபெடை இன்னிசைக்கு வந்தது. ஏகாரம் இரண்டும் தேற்றம்.

உறுபுலி யூனிரை யின்றி யொருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னும் - அறிவினால்
காற்றொழி லென்று கருதற்க கையினால்
மேற்றொழிலு மாங்கே மிகும்.

(இ-ள்.) உறு புலி - பெரியபுலி, ஊன் இரை இன்றி - மாமிசமாகிய உணவு இல்லாமல், ஒருநாள்—, சிறு தேரை - சிறிய தவளையை, பற்றியும் தின்னும் - பிடித்தும் புசிக்கும்; (ஆனதுபற்றி) அறிவினால்—, கால் தொழில் என்று - அற்பச் செய்கையென்று, கருதற்க - நினைக்க

2. Even the slender stem of trees which stood trembling on the way-side, may when grown sufficiently strong, become fit to serve as a post for tying an elephant. Life is also of a like nature, if a man would only make himself free from lowness.

3. The strong tiger, will if it be without prey for a single, day even catch a small frog and eat it. Do not therefore despise small things; even great matters will by exertion be gradually achieved.

Digitized by Google

வேண்டாம்; கையினுல் - முயற்சியால், மேல் தொழிலும் - மேலான செய்கையும், ஆங்கே மிகும் - அப்படியே மேம்படும், எ-று.

புலியும் ஒரு சமயத்தில் தேரையைத் தின்னும்படி நேரிடும் ஆதலால் நாமும் சமயத்துக்கு ஏற்றபடி ஒரு அற்பகாரியஞ் செய்யவந்தால் அதை அற்பம் என்று நினையாமல் முயன்றால் மேலானகாரியம் அப்படியே கைகூடு மென்பதாம்.

பற்றியும் என்கிற உம்மை எச்சப்பொருளோடு இழிவுசிறப்புமாம்; பற்றித்தின்பது முண்டு என்றபடி. (ங)

இசையா தெனினு மியற்றியோ ராற்றால்
அசையாது நிற்பதா மாண்மை - இசையுங்கால்
கண்ட றிரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப
பெண்டிரும் வாழாரோ மற்று.

(இ-ள்.) கண்டல் - முள்ளிச் செடியை, [அல்லது தாழஞ் செடிகளை], திரை - அலைகள், அலைக்கும் - அலையச்செய்கின்ற, கானல் - உப்பளமுள்ள, தண் சேர்ப்ப-குளிர்ச்சியான கடற்றுறையுடைய பாண்டியனே!, இசையாது எனினும் - கூடாமற்போனலும், ஓர் ஆற்றான் இயற்றி - ஒரு வழியினுல் செய்து, அசையாது நிற்பது - மனம் சலியாமலிருப்பது, ஆண்மை ஆம் - ஆண்தன்மையாம்; இசையுங்கால் - கூடினுல், பெண்டிரும் வாழாரோ - பெண்பிள்ளைகளும் மேன்மை அடைய மாட்டார்களா?, எ-று. மற்று - அசை.

சுலபமாய் ஒருகாரியம் கைகூடினுல் பெண்பிள்ளைகளும் அதைச் செய்து மேன்மை பெறலாம். இசையாத காரியத்தை எப்படியாகிலும் செய்து அந்த வருத்தத்துக்காக மனஞ் சலியாம லிருப்பதுதான் ஆண்குணம் என்பது கருத்து.

கானல் - கடற்கரைச் சோலையுமாம். அம் - சாரியை, அழகைக் குறிக்கு முரிச்சொல்லுமாம். (ச)

நல்ல குலமென்றுந் தீய குலமென்றும் [ன்
சொல்லள வல்லாற் பொருளில்லைத் - தொல்சிறப்பி

---

4. O lord of the cool shore where in the salt pans the waves dash against *thazhai* trees! Though a person may think within himself that a certain matter may not succeed, if he still pursues it with unswerving labour, it is perseverance. When things are easily attainable will not even women succeed in their undertakings ?

5. To say "He is of good or low caste" has no meaning in itself except in words. Good caste is constituted only by

Digitized by Google

ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்றா னாகுங் குலம்.

(இ-ள்.) நல்ல குலம் என்றும் தீய குலம் என்றும்—,(சொல்வது) சொல் அளவு அல்லால் - சொல்மாத்திரையா யிருக்கின்ற தல்லாமல், பொருள் இல்லை - ஒருபொருளையும் உடைத்தாயிருக்கவில்லை; தொல் சிறப்பின் - பழமையான சிறப்பையுடைய, ஒள் பொருள் ஒன்றோ - சுத்தமான பொருளும், தவம் - விரதமும், கல்வி - நூலறிவும், ஆள் வினை - முயற்சியும், என்ற இவற்றால் - என்று சொல்லப்படுகிற இக் குணங்களால், குலம் ஆகும் - நற்குலமென்பது உண்டாகும், எ-று.

இயற்கையாய் நற்குலமென்றும் தீக்குலமென்று மில்லை; நற் குண நற்செய்கைகளால் நல்லகுல மென்பதும் அவையின்மையால் தீயகுல மென்பதுமாம் என்றதாயிற்று.

ஒன்றோ என்பது எண்ணிடைச்சொல், அல்லது அது ஒன்றோ, பின் சொல்லப்படும் பிறவும் என வுரைக்கினு மமையும். (ரு)

ஆற்றுந் துணையு மறிவினை யுள்ளடக்கி
ஊக்க முரையா ருணர்வுடையார் - ஊக்க
முறுப்பினா லாராயு மொண்மை யுடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

(இ - ள்.) ஆற்றும் துணையும் - (தாம் ஒருகாரியத்தை) செய்து முடிக்குமளவும், அறிவினை உள் அடக்கி - (தமது) அறிவின் திறத்தை வெளிப்படாமல் வைத்து, ஊக்கம் உரையார் - (தமது) மனவலியை (பிறருக்கு) சொல்லமாட்டார், உணர்வு உடையார் - விவேகமுள்ள வர்; ஊக்கம் - (பிறர்) மனவலியை, உறுப்பினால் - அவயவங்களி னிலைமையினால், ஆராயும் ஒண்மை உடையார் - ஆராய்ந்து அறியும் படியான புத்தியுள்ளவர்களது, குறிப்பின்கீழ் - அறிவின் நுட்பத் தில், பட்டது உலகு - இருக்கின்றது உலகு, எ-று.

புத்திமான்கள் எடுத்தகாரிய முடியுமளவும் முயற்சி செலுத்தும் படியான தமது மனோபலத்தைப் பிறருக்கு வெளியிடார், பிறரு டைய மனோபலத்தையோ அவருறுப்புக ளிருக்குந் தன்மையாலேயே

---

the possession of a hereditory unstained wealth, penance, learning and perseverance.

6. The wise will not till their undertakings are accomplished, speak of their own abilities but will keep them to themselves. The world is accordingly in the command of those wise men who are able to ascertain the capabilities of others by their very demeanour or deportment.

Digitized by Google

அறிந்துகொள்ளுவர். ஆதலால் உலகமெல்லாம் அப்படிப்பட்டவருடைய குறிப்பி லடங்கி யிருக்கின்றதென்பது கருத்து.

ஒண்மை - விளக்கம், புத்திக்கு ஆகுபெயர். ஊக்கமுடையாரும் உணர்வுடையாரும் ஒண்மையுடையாரு மானவர்களுடைய என ஒரே வாக்கியமாகவு முரைக்கலாம். குறிப்பின்கீழ்—கீழ் - ஏழனுருபு. (சு)

சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் மறைப்பக் கெடும்.

(இ-ள்.) சிதலை தின்னப்பட்ட - கறையானாலே தின்னப்பட்ட, ஆல மரத்தை—, மதலை ஆய் - தாங்குந் தூணாய், அதன் வீழ் - அந்த ஆலின்வீழ், ஊன்றி ஆங்கு - தாங்கினாற்போல, தந்தைகண் குதலைமை தோன்றின் - பிதாவினிடத்தில் தளர்ச்சி உண்டானால், தான் பெற்ற புதல்வன் - அவன் பெற்ற மகன், மறைப்ப - மறைப்பதனால், கெடும் - போய்விடும், எ-று.

செல்லெரித்து வீழ்ந்துபோகத்தக்க ஆலமரத்தை அதன் வீழ் தாங்கிக் கொண்டதுபோல் பிதாசெய்யுங் காரியத்துக்கு நேரிடும் தளர்ச்சியை மகன் முயற்சியால் போக்கவேண்டு மென்றபடி.

ஆல் மரம்—இடையில் அம் சாரியை வந்தது. மதலை — மகனுக்கும் தூணுக்கும் சிலேடை. ஊன்றினால் என்பது ஊன்றி எனத் திரிந்தது. (எ)

ஈனமா யில்லிருந் தின்றி விளியினும்
மானந் தலைவருவ செய்பவோ - யானை
வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்
அரிமா மதுகை யவர்.

(இ - ள்.) யானை வரி முகம் - யானையினது புள்ளியுள்ள முகத்தை, புண் படுக்கும் - புண்படச் செய்யும்படியான, வள் உகிர் - கூர்மையான நகங்களும், நோன் தாள் - வலிமையுள்ள பாதங்களும்

---

7. The falling root of the banian tree supports it as a strong post, when it is eaten up by white ants; so will the imbecility of the father be concealed by the ability of the son he begot.

8. Though they should die meanly not having anything in their house, will they do things fitted to bring down disgrace upon their own heads, who have the strength of the lion possessed of powerful paws and strong claws which make sore the lined face of the elephant. ?

Digitized by Google

(உள்ள), அரிமா - சிங்கத்தைப்போன்ற, மதுகையவர் - வீரமுள்ளவர்கள், ஈனம் ஆய் - தாழ்ச்சியுண்டாகி, இல் இருந்து - வீட்டிலிருந்து, இன்றி - ஒரு பொருளுமில்லாமல், விளியினும் - சாம்படி நேரிட்டாலும், மானம் தலைவருவ - குற்றம் தம்மிடத்து வரும்படியான காரியங்களை, செய்பவோ - செய்வார்களோ, [செய்யார்கள்,] எ-று.

நல்ல சாமர்த்திய முள்ளவர்கள் ஒருகால் தங்கள் முயற்சி இடையூறுற்றுக் காரிய முடியாமல் சாம்படி நேர்ந்தாலும் பொறுத்திருந்து அம்முயற்சியை மறுபடியும் கைகூடப் பார்ப்பார்களேயன்றித் தாழ்வான காரியங்களைச் செய்யமாட்டார் என்பது கருத்து.

செய்ப—பலர்பால் வினைமுற்று, எதிர்காலம்; [வினை - சூ - அ, பத - சூ - கஅ.] ஓகாரம்—எதிர்மறை. (அ)

தீங்கரும் பீன்ற திரள்கா லுளையலரி
தேங்கமழ் நாற்ற மிழந்தாஅங் - கோங்கும்
உயர்குடி யுட்பிறப்பி னென்னும் பெயர்பொறிக்கும்
பேராண்மை யில்லாக் கடை.

(இ - ள்.) தீம் கரும்பு ஈன்ற - மதுரமான கரும்பு பெற்ற, திரள் கால் - திரண்ட தாளையுடைய, உளை - குதிரை முதலியவற்றின் பிடர் மயிர்போல் (கற்றையாகிய), அலரி - பூவானது, தேம் கமழ் நாற்றம் - இனிமையாய்ப் பரிமளிக்கும் சுகந்தத்தை, இகழ்ந்தது ஆங்கு - இகழ்ந்ததுபோல், ஓங்கும் உயர் குடியுள் - பேர்பெற்ற மேலானகுலத்தில், பிறப்பின் - பிறந்ததனால், பேர் பொறிக்கும் - பேர் எழுதும்படியான, பேர் ஆண்மை - மிகுந்த சாமர்த்தியம் [அதாவது முயற்சி], இல்லாக் கடை - இல்லாமற்போனால், என் ஆம் - என்ன (சிறப்பு) உண்டாம், எ-று.

கரும்பிற் பிறந்தும் அதன் நுனியிலுள்ள பூங்கொழுந்துக்குச் சிறப்பில்லை போல மேற்குலத்திற் பிறந்தாலும் முயற்சி யில்லையாயின் சிறப்பில்லை என்பதாம்.

மெதுவாய்ச்செறிந்து குஞ்சம்போலிருக்குந் தன்மையால் உளை உவமானமாயிற்று. அலரி—அலர் - பகுதி, இ - கர்த்தாவைக்காட்டும் விகுதி. பிறப்பின்—தொழிற்பெயர், ஐந்தனுருபு, ஏதுப்பொருள். (௯)

---

9. The hair-like round-shaped flower of the sugar cane is devoid of a fragrant odour; even so, what will be the good of being born in a high and lofty family, if there be not that perseverance which can carve out a name for its possessor.

Digitized by Google

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர் - கருனையைப்
பேரு மறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரு மமிழ்தாய் விடும்.

(இ - ள்.) பெரு - பெரிய, முத்தரையர் - முத்தரையரென்பவர், பெரிது உவந்து - மிகவும் சந்தோஷித்து, ஈயும் - கொடுக்கிற, கருனை சோறு - பொரிக்கறியோடு கூடிய சோற்றை, கயவர் - மூடர், [யாதொரு முயற்சியுஞ் செய்யுந் திறனில்லாதவர்], ஆர்வர் - உண்பார்கள்; கருனையை பேரும் அறியார் - பொரிக்கறியின் பேரையும் அறியாதவருடைய, நனி விரும்பு தாளாண்மை - மிகவும் விரும்பத்தக்க முயற்சியாலுண்டாகிற, நீரும்—, அமிழ்து ஆய்விடும் - (அவர்க்கு) அமிர்தம் போலாகும், எ-று.

முத்தரையர் என்பவர் ஒருவர் பூர்வத்தில் பலருக்கும் நல்ல சோறிட்டுக்கொண் டிருந்தார்போலும், யாதொருமுயற்சியும் செய்யமாட்டாத சோம்பேறிகள் அதனையுண்டு மகிழ்ந்தார்கள். அது தகுதியன்று. உயர்ந்த ஊணின்பேரையும் அறியாத சிலர் தமது முயற்சியால் கூழ்நீரைக் கொண்டாலும் அதுவே தகுதி. அவர்களுக்குத் திருத்தியையும் பெருமையையும் தருவதனால் அமிருதத்தோடு ஒப்பிடப்பட்டது.

பெருமுத்தரையர்—பெரு முத்து அரையர் - பெரியமுத்துக்களையுடைய பாண்டியராசாக்கள் எனவும் உரைக்கலாம்; அந்நாட்டிலே முத்து மிகுதியுமுண்டாவது பிரசித்தம். கயவர்—கயம் - பகுதி, உரிச்சொல், அர் - விகுதி. கருனை—வேற்றுமைமயக்கம் அல்லது கருனையைப் பேரினும் மறியாதவர் எனவுங் கொள்ளலாம். தாளாண்மை—மூன்றனுருபு தொக்கது.

இவ்வளவால் முன்கூறிய பெருமைக்கும் மேன்மைக்கும் தாளாண்மை முக்கிய காரணமெனெ அதன் சொரூபமும் பயனும் அஃதில்லாமையா லிழிவும் விளக்கப்பட்டன. (கo)

---

10. The base will eat the curry and boiled rice given with much pleasure by the rich Moothariar. Even water procured by the earnest perseverance of those who do not know even the name of curry will be ambrosia to them.

Digitized by Google

## உக-வது. அதிகாரம்.—Chapter XXI.

### சுற்றந்தழால்.—The union of relations.

அதாவது:—சுற்றத்தாரைத் தழுவிக்கொண்டிருத்தல், அதனால் மிருந்த பயனுண்மையின் அது பெருமையுடையோர் கடனெனக் கூறப்பட்டது.

வயாவும் வருத்தமு மீன்றக்கா ணோவும்
கவாஅன் மகற்கண்டு தாய்மறந் தாஅங்
கசாஅத்தா னுற்ற வருத்த முசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்.

(இ-ள்.) வயாவும் - கர்ப்பந் தரித்திருப்பதினா லுண்டான நோவையும், வருத்தமும் - (அதுபற்றிவரும் பல) துன்பங்களையும், ஈன்றக்கால் நோவும் - கருவுயிர்க்குங்கால் உண்டாகும் நோவையும், கவான் மகன் கண்டு - தொடைமேல் மகனைக்கண்டு, தாய்—, மறந்து ஆங்கு - மறந்துபோனாற் போல், அசா - தளர்ச்சியால், தான் உற்ற வருத்தம் - தான் அடைந்த துன்பம், உசா - (க்ஷேம) விசாரணைசெய்யுந் தன்மையுள்ள, தன் கேளிரை காண - தன் சுற்றத்தாரைப் பார்க்கையில், கெடும் - நீங்கும், எ-று.

ஈன்றக்கால் என்கிற வினையெச்சம் நிகழ்காலத்திற்குக் கொள்ளப்பட்டது. அசா—முதனிலைத்தொழிற்பெயர். அளபெடைகள் பாட்டினோசை நிறைக்க வந்தன. (க)

அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்லாம்
நிழன்மரம்போ னேரொப்பத் தாங்கி - பழுமரம்போல்
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

(இ-ள்.) அழல் மண்டு போழ்தின் - வெப்பம் நெருங்கினகாலத்தில், [கோடைகாலத்தில்], அடைந்தவர்கட்கு எல்லாம் - (தன்னிடம்) சேர்ந்தவர்களுக் கெல்லாம், நிழல் மரம் போல் - நிழலைத்தருகிற மரத்

---

1. As a mother forgets the pains and troubles she suffered during pregnancy and child-birth when she sees her infant in her lap, so the distress a man suffers from poverty and other misfortune disappears on seeing his inquiring relatives.

2. Supporting relatives like the tree that gives shade to those who approach it during the heat of the sun, and living though with discomfort to himself, allowing them to eat out of his labor, like the fruit tree which supports many by its ripe fruits, are the duties of a good man.

Digitized by Google

தைப்போலே, நேர் ஒப்ப - ஒருசமமாக, தாங்கி - காத்து, பழு மரம் போல் - பழுத்த மரத்தைப்போலே, பல்லார் பயன் துய்ப்ப - பலரும் பிரயோசனம் அநுபவிக்கும்படி, தான் வருந்தி வாழ்வதே - தான் வருத்தப்பட்டுக்கொண்டாயினும் சீவித்திருப்பதே, நல் ஆண் மகற்கு - நற்குணமுள்ள ஆண்பிள்ளைகளுக்கு, கடன் - முறைமையாகும், எ-று.

போழ்து—பொழுதின் விகாரம். வருந்தி என்பதோடு இழிவு சிறப்பும்மை வருவிக்கப்பட்டது. ஏகாரம்—தேற்றம். (உ)

அடுக்கன் மலைநாட தற்சேர்ந் தவரை
எடுக்கல மென்னுர் பெரியோர் - அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினு மில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

(இ-ள்.) அடுக்கல் மலை நாட - அடுக்கடுக்கான மலைகள் பொருந்தின நாட்டை யுடையவனே!, பெரியோர்—, தற்சேர்ந்தவரை - தம்மைச் சேர்ந்தவர்களை, எடுக்கலம் - தாங்கமாட்டோம், என்னுர் - என்று சொல்லமாட்டார்; வன் காய் பல பல - வன்மையான அநேகங் காய்கள், அடுத்து அடுத்து காய்ப்பினும் - சேர்ந்து சேர்ந்து அல்லது கிட்டக் கிட்டக் காய்த்தாலும், (ஒருமரத்தில்) தன் காய் பொறுக்கலா கொம்பு - தன் காய்களைப் பொறுக்கமாட்டாத கிளை, இல்லை - இல்லையே, எ-று.

எத்தனை கனமான காய்கள் காய்த்தாலும் மரத்துக்கிளை பொறுப்பதுபோல் தம்மை யடுத்தவரைப் பெரியோர் காப்பர் என்றபடி.

எடுக்கலம்—தன்மைப் பன்மை யெதிர்மறை வினைமுற்று, எடு - பகுதி, கு-சாரியை, அல் - எதிர்மறை விகுதி, அம் - தன்மைப் பன்மை விகுதி. பொறுக்கலா என்னும் பெயரெச்சத்தையும் இவ்வாறே பகுத்துக்கொள்க. தற்சேர்ந்தவர் என்பதை ஒருசொல்லாக் கொள்ள வேண்டும். (ங)

உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை - நிலைதிரியா

---

3. O lord of the piled-up hills! The great will not say of their relatives "we cannot support them." Though unripe fruits be produced in large numbers and very closely upon a tree, there is not a single branch which cannot bear them.

4. Though they contract a very close friendship in the sight of the world, yet the friendship of the base will be of very short duration, while the amity of those of spotless disposi-

Digitized by Google

நிற்கும் பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்
ஒற்க மிலாளர் தொடர்பு.

(இ-ள்.) உலகு அறிய - உலகத்தார் அறியும்படி, தீர கலப்பினும் - திடமாகச் சேர்ந்தாலும், சிறு இனத்தார் கேண்மை - அற்பருடைய உறவு, நில்லா - நிலைபெறாமல், சில பகல் ஆம் - சொற்பகால மிருப்பதேயாம்; ஒற்கம் இலாளர் தொடர்பு - குணக்குறைவு இல்லாதவருடைய உறவு, நிலை திரியா நிற்கும் - தமது நிலையினின்று மாறாமலிருக்கின்ற, பெரியோர்—, நெறி அடைய - நன்னெறி [மோக்ஷம்] அடையும்படி, நின்ற அனைத்து - யோகநிலையிலே நின்றாற்போலாம், [தவறிப்போகாமல் நீடித்து நின்று பயன்படுமென்பது கருத்து.] எ-று. ஆல் - அசை. (ச)

இன்ன ரினைய ரெமர்பிற ரென்னுஞ்சொல்
என்னு மிலரா மியல்பினல் - துன்னித்
தொலைமக்க டுன்பந்தீர்ப் பாரோயார் மாட்டும்
தலைமக்க ளாகற்பா லார்.

(இ-ள்.) இன்னர் - இவர், இனையர் - இப்படிப்பட்டவர், எமர் - எம்மவர், [உறவினர்], பிறர் - உறவில்லாதவர், என்னும் சொல் - என்றுசொல்லுகிறபேச்சு, என்னும் - ஏதாகிலும், இலர் ஆம் - இல்லாதவராகிய, இயல்பினல் - தன்மையால், துன்னி - சேர்ந்து, தொலை மக்கள் - தளர்ந்த மனிதருடைய, துன்பம் தீர்ப்பார் - சங்கடத்தை நீக்குவார்கள், யார்மாட்டும் - எவரிடத்தும், தலை மக்கள் ஆகல் பாலார் - மேன்மக்களாகும் தன்மையுடையவர்கள், எ-று.

எங்கும் மேன்மக்களென்று சொல்லத்தக்கவர் நன்மை தீமைகளையும் உறவு உறவின்மைகளையும் நாடாமலே சேர்ந்து துன்புற்றவர்களுடைய துன்பங்களைத் தீர்ப்பர் என்பது கருத்து.

ஆகற்பாலார்—எழுவாய்; தீர்ப்பாரோ — பயனிலை. ஏகாரம் - தேற்றம். துன்பம் தீர்ப்பார்—எழுவாய், தலைமக்களாகற் பாலார்— பயனிலை என்னவுமாம்; அப்போது ஏகாரம் பிரிநிலை. தொலை மக்கள் —தொலை - வினைத்தொகை, செல்வம் தொலைந்த மக்கள் என்பதாம்.

---

tion will be as enduring as the perseverance of the unswerving great which is enduring until they have realized their hopes of heaven.

5. Those who making no distinction of persons, relations and strangers, and being actuated by their own natural feelings, seek out and relieve all those who are afflicted by misfortune will be regarded by every one as pre-eminently worthy.

Digitized by Google

இன்னர் — இன் - இடைச்சொல், பகுதி, அர் - விகுதி. இனையரில் ஐ - சாரியை. பிறர்—ரகரவொற்று விகுதி. என் என்பது இடைக் குறையான எவனென்னும் குறிப்பு முற்றாகிய பெயர். (ரு)

பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோ டமரார்கைத் துண்டலின்
உப்பிலிப் புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத் தானு மினிது.

(இ - ள்.) பொன் கலத்தில் பெய்த - பொற்பாத்திரத்திலே இட்ட, புலி உகிர் வான் புழுக்கல் - புலி நகம்போலே வெண்மையான சோற்றை, அக்காரம் பாலோடு - சக்கரை பால்களோடு, அமரார் கைத்து - அன்பில்லாருடைய கையிலிருந்து, உண்டலின் - உண்பதைப்பார்க்கிலும், உப்பு இலி - உப்பு இல்லாத, புற்கை - புல்லரிசிக்கூழை உயிர் போல் கிளைஞர்மாட்டு - உயிரையொத்த பந்துக்களிடத்தில், எக்கலத்தானும் - எந்தப்பாத்திரத்திலாகிலும் (உண்பது), இனிது - இனிப்பாகும், எ-று.

அக்காரம் பால்—உம்மைத்தொகை. கைத்து—ஐந்தாம் வேற்றுமைத்தொகை, து - சாரியை, அல்லது கைத்து - கையினிடத்துள்ளதாகிய, புழுக்கல் எனவுங் கூட்டலாம். போல்—வினைத்தொகை. காலத்தான்—ஆன் - இடப்பொருள். (சா)

நாள்வாய்ப் பெறினுந்தம் நள்ளாதா ரில்லத்து
வேளாண்மை வெங்கருனை வேம்பாகும் - கேளாய்
அபரானப் போழ்தி னடகிடுவ ரேனும்
தமராயார் மாட்டே யினிது.

(இ - ள்.) நாள்வாய் பெறினும் - காலத்திலே பெற்றாலும், தம் - தம்மை, நள்ளாதார் இல்லத்து - நேசியாதவருடைய வீட்டில், வேளாண்மை - உபகாரமாகக் கொடுக்கப்பட்ட, வெம் கருனை - விரும்பத்தக்க பொரிக்கறியுணவும், வேம்பு ஆகும் - வேம்புபோல் கைப்பு ஆகும்; கேளாய் - கேள், அபரானப்போழ்தின் - பிற்பகற்காலத்து, அடகு இடுவர் ஏனும் - இலைக்கறியை இட்டாராயினும், தமர் ஆயார் -

6. It is sweeter to take the pap of grass-seed meal without salt, offered in any kind of vessel by relatives who are as dear as life, than to eat on a golden dish rice white as the tiger's claws, mixed with sugar and milk and given by the unkindly.

7. The desirable fried curry, though had at the due time in the house of those who are not friends, will be as unpalatable as the margosa seed. Hear, a curry of greens, though given in the evening, will be delicious only when served up by relatives.

Digitized by Google

மாட்டே - தம்மவரா யிருப்பவரிடத்திலேயே, இனிது - (உண்ணும் உணவு) இனிப்பாகும், எ-று.

இங்கே தமர் என்பது நேசிக்கு முறவினர்க்கு ஆம். நாள்வாய்—வாய் - ஏழனுருபு. நள்ளாதார்—நள் பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, ள் - சந்தி, ஆர் - பலர்பால் விகுதி, தகரம் - எழுத்துப்பேறு. அபரானம்—அபராஹ்ந என்னும் ஆரியமொழித்திரிபு; அபர - பிற்பட்டது, அஹந் - பகல், பகலின் பிற்பட்ட பாகம் என மாறி யியைந்தது. (எ)

முட்டிகை போல முனியாது வைகலும்
கொட்டியுண் பாருங் குறடுபோற் கைவிடுவர்
சுட்டுக்கோல் போல வெரியும் புகுவரோ
நட்டா ரெனப்படு வார்.

(இ - ள்.) முட்டிகை போல - சம்மட்டியைப்போலே, முனியாது - வெறுக்காம லிருக்கும்படி, வைகலும் - நாள்தோறும், கொட்டி - பதப்படுத்தி, உண்பாரும் - (ஒருவர் சோற்றை) உண்கிறவர்களும், (காலம் வாய்த்தால்) குறடுபோல் - பற்றுக் குறட்டைப்போல், கைவிடுவர் - விட்டு நீங்குவர்; நட்டார் எனப்படுவார் - அன்புள்ள உறவின ரென்னப்பட்டவர்கள், சுட்டு கோல் போல - உலையாணிக் கோலைப்போலே, எரியும் புகுவர் - (உறவினர்க்குத் துன்பநேர்ந்த போது அவரோடு) நெருப்பிலேயும் விழுவர், எ-று.

சம்மட்டி இரும்பைக்கொட்டிப் பதமாக்குவதுபோல் ஒருவனைத் தனக்கு இதஞ்செய்யும்படி வசப்படுத்தி யுண்பர் என்பதாம்.

கொட்டுதல் - அடித்தல், பதமாக்குதலுக்கு ஆயிற்று. குறடு - கொல்லனுடைய ஓராயுதம். (அ)

நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ - இறுமளவும்
இன்புறுவ வின்புற் றெழீஇ யவரோடு
துன்புறுவ துன்புறாக் கால்.

---

8. Even those who have in consequence of their kindly attention been daily entertained by another, without reluctance will forsake him just as the tongs leave the iron on entering the fire; but those who are truly worthy of being called friends will adhere to him in distress as the rod by which it is turned enters with it even the forge.

9. O thou who art adorned with cool fragrant garlands! If friends enjoying the prosperity of those to whom they are attached until their death, do not also partake of their sufferings during adversity, is there any good which they can do to them in the next world?

Digitized by Google

(இ - ள்.) நறு மலர் தண் கோதாய் - சுகந்தமான பூச்சூட்டிய குளிர்ந்த கூந்தலுடையவளே!, நட்டார் - நேசித்தவர், நட்டார்க்கு - நேசித்தவர்க்கு, இறும் அளவும் - சாகும்வரையும், அவரோடு - அந்த நட்டாரோடு, இன்பு உறுவ இன்பு உற்று - இன்பப்படுமவைகளை இன்பப்பட்டு, எழீஇ - நடந்து, துன்பு உறுவ துன்பு உறுக்கால் - துன்பப்படுமவைகளைத் துன்பப்படாமற்போனால், மறுமையும் - மறுபிறப்பிலாகிலும், செய்வது ஒன்று உண்டோ - செய்யத்தக்க நற்காரியம் வேறொன்று இருக்கிறதோ, [இல்லை], எ-று.

நட்டார் — சுற்றத்தார் எனக்கொள்க. மறுமையும் என்பதில் உம்மை விகற்பப்பொருளும் எச்சப்பொருளு முடையது. இம்மையிலொன்று மில்லையே மறுமையிலாகிலு முண்டோவென்றால் அதுவுமில்லை என்பது கருத்து.

நட்டார் தம்மை நட்டாரோடு சமமாக இன்பதுன்பங்களை அனுபவிக்கவேண்டுமென அவர்களிருக்கவேண்டிய முறைமை கூறப்பட்டது.

இன்பு உறுவ, துன்பு உறுவ, — பலவின்பால் வினையாலணையும் பெயர், இரண்டனுருபு தொக்கது. எழீஇ—எழு - பகுதி. (கூ)

> விருப்பிலா ரில்லத்து வேறிருந் துண்ணும்
> வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்-விருப்புடை
> தன்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை [த்
> என்போ டியைந்த வமிழ்து.

(இ - ள்.) விருப்பு இலார் இல்லத்து - (தன்மேல்) அன்பில்லாதவர்களுடைய வீட்டில், வேறு இருந்து - வேறு யிருந்து, உண்ணும்—, வெருகு கண் - பூனைக்கண்ணைப்போன்ற, வெம் கருனை - விரும்பத்தக்க பொரிக்கறியுணவு, வேம்பு ஆம்—; விருப்பு உடை தன்போல்வார் இல்லுள் - (தன்மேல்) விருப்பமுள்ள தன்னோடொத்தவருடைய வீட்டில், (உண்ணப்படும்) தயங்கு நீர் - தெளிந்த நீரிலேயுள்ள, தண் புற்கை - குளிர்ச்சியான புல்லரிசிக்கூழானது, என்போடு இயைந்த - உடம்பிற்குப் பொருந்தின, அமிழ்து - அமிர்தமாகும், எ-று.

---

10. Delicious fried curry bright as the cat's eye, eaten alone in the house of those who love us not, will be as distasteful as the margosa; but the cold water and the pap of grass-seed meal in the house of those who love us and who are like us will be as the nector best suited to our body.

Digitized by Google

வேறிருத்தலாவது—அன்பிற்குத்தக்க வுபசாரம் பெறுமலிருத்தல். ஒருவித பளபளப்பினல் பூனைக்கண் கருனைக்கு உவமை யாயிற்று. வெருகு என்பதில் ககரம் வேற்றுமைச்சந்தியில் மிக்கது; "நெடிலோடுயிர்த்தொடர்" என்கிற [நன் - உயிர். புணர் - சூ - ௬௩] ன் உரையைக்காண்க. விருப்பு—விரும்பு என்னு முதனிலைத்தொழிற்பெயர் வலிந்தது. வேம்பு, அமிழ்து,—உவமையாகு பெயர்கள். தனக்கு அவர்கள்மே லுள்ளதுபோல் தன்மேல் அவர்களும் அன்பு கூர்ந்தவரா யிருக்கவேண்டுமென்பது "விருப்புடைத் தன்போல்வர்" என்று சொல்லப்பட்டது. என்பு—உடம்புக்கு ஆகுபெயர்; "என்பு முரியர் பிறர்க்கு". (௰)

## உ௨-வது. அதிகாரம்.—Chapter XXII.

### நட்பாராய்தல்.— The choice of friends.

அதாவது சிநேகிக்கத்தக்க குணமிருப்பதைத் தெரிந்துகொள்வது.

கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றும்
குருத்திற் கரும்புதின் றற்றே - குருத்திற்
கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்றும்
மதுர மிலாளர் தொடர்பு.

(இ - ள்.) கருத்து உணர்ந்து - (நூல்களின்) உட்பொருளை அறிந்து, கற்று அறிந்தார் கேண்மை - படித்தெடுத்தவரோடு கொண்ட சிநேகம், எஞ்ஞான்றும் - எப்போதும், குருத்தின் கரும்பு தின்றது அற்று - குருத்திலிருந்து கரும்பைத்தின்றாற்போலும்; என்றும் - எக்காலத்தும், மதுரம் இலாளர் தொடர்பு - (கல்வியறிவாகிய) இனிப்பில்லாதவரோடு கொண்ட சிநேகம், குருத்திற்கு—, எதிர் செல - எதிரேசெல்லும்படியாக, [அடியிலிருந்து என்கிறபடி], தின்று அன்ன தகைத்து - தின்றாற்போலிருக்கிற குணமுள்ளது, எ-று. அரோ - அசை.

கரும்பைக் குருத்திலிருந்து தின்றால் வரவர இனிமை யதிகமாவதுபோலே கற்றோர் கேண்மையு நாளுக்குநா ளினிப்பாகும்; அதற்கு

---

1. Friendship with the wise whose intelligence devines our thoughts, is like eating the sugar-cane from the top; but connection with people devoid of good disposition is like eating it from the opposite end, the root.

Digitized by Google

எதிர்செலத்தின்றுல் வரவர இனிமை குறைவதுபோல் கல்லாதார் நட்பு நாளுக்குநாள் உருசி குறைந்து வெறுக்கப்படும் என்பதாம். இக்கருத்தே கல்வியில் எட்டாம் பாட்டிலும் சொல்லப்பட்டது.

அற்றே என்பதில் ஏகாரம் தேற்றத்தில் வந்ததென்னலாம். உணர்ந்து என்னும் எச்சம் கற்று என்பதைக் கொண்டது. அறிந்தார் என்பதற்கு காரியாகாரியங்களை அறிந்தவர்கள் என்பது பொருள். இதுதான் படித்தெடுத்தவர் என்று கூறப்பட்டது. உட்பொருள் தெரிய நூல்களைக் கற்று நன்மை தீமைகளைப் பகுத்தெடுக்குந்தன்மை யுள்ளவர்கள் என்பது திரண்டகருத்து.

தகைத்து—குறிப்புமுற்று, தகை - பகுதி, து - ஒன்றன்பால் விகுதி. (க)

இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது - பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

(இ-ள்.) பொன் கேழ் - பொன்னிறமுள்ள, புனல் ஒழுக - அருவிநீர் பெருக, புள் இரியும் - பறவைகள் ஓடுகின்ற, பூ குன்ற நாட - அழகான மலைசூழ்ந்த நாடுடையவனே!, இல் பிறப்பு எண்ணி - (அவருடைய) நற்குடிப்பிறப்பை எண்ணி, இடை திரியார் - நடுவில் மாறுர்கள், என்பது ஓர் நல்புடை - என்று சொல்லப்பட்ட ஒருநல்ல பக்ஷத்தை, கொண்டமை அல்லது - (சிநேகிப்பதற்கு ஏதுவாகக்) கொண்டதேயல்லாமல், மனம் அறியப்பட்டது ஒன்று அன்று - அவருடைய மனநிலை யறியப்பட்டதென்கிற ஒருபக்ஷம் அல்ல, எ-று.

முற் பாட்டில் கூறியபடி சிநேகிப்பதற்கு கல்வி யறிவு காரணமானதுபோல் நற்குலப்பிறப்பும் காரண மாதலால் நற்குடிப் பிறந்தவர் மாறமாட்டாரென்ற உறுதியினுல் சிநேகிக்கலாம்; மனம் அறிவது அசாத்தியம் என்கிறபடி. பொன் மிகுதி பற்றி அந்நிறமுள்ள நீர் ஓடிவரக்கண்டு இது யாதோ என அஞ்சிப் பறவைகள் ஓடுகின்றன என மலையைச் சிறப்பித்தது. (உயிர் புணர் - சூ - ருO) விதியால் பூங் குன்ற என மெலிமிகுந்தது. கொண்டமை—தொழிற்பெயர். (உ)

---

2. O lord of the beautiful hills from which the birds flee on the approach of the gold-colored torrent! Some accept the high-born as friends on the ground that they, remembering their high birth, will not act inconsistently and not because their minds are known.

Digitized by Google

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேன்
மெய்யதா வால்குழைக்கு நாய்.

(இ-ள்.) யானை அனையவர் நண்பு - யானைபோன்றவர்களுடைய நேசத்தை, ஒரீஇ - விட்டு, நாய் அனையார் கேண்மை - நாய் போன்றவர்களுடைய சிநேகத்தை, கெழீஇ கொளல்வேண்டும் - சேர்த்துக் கொள்வது ஆவசியகம்; (ஏனெனில்) யானை—, அறிந்து அறிந்தும் - பலதரம் அறிந்திருந்தும், பாகனையே கொல்லும் - (தனக்கு உணவு கொடுத்துக் காக்கிற)பாகனையே கொல்கின்றது; எறிந்த வேல் - (தன்னையுடையவன்) பிரயோகித்த ஆயுதமானது, மெய்யது ஆ - தன் உடலில் பொத்ததாயிருக்கவும், நாய்—, வால் குழைக்கும் - வாலை யாட்டும், எ-று.

பாகனையே — இங்கு ஏகாரம் சிறப்புப்பொருளில் வந்ததாக் கொளல்வேண்டும். மெய்யது — குறிப்பு வினையாலணையும்பெயர், சினையடியாப்பிறந்த பெயர் என்பது நேர். (ங)

பலநாளும் பக்கத்தா ராயினு நெஞ்சில்
சிலநாளு மொட்டாரோ டொட்டார் - பலநாளும்
நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்
தியாத்தாரோ டியாத்த தொடர்பு.

(இ-ள்.) பல நாளும் - எந்நாளும், பக்கத்தார் ஆயினும் - அருகிலிருப்பவரானாலும், நெஞ்சில் - மனதில், சில நாளும் - சொற்ப தினங்களாகிலும், ஒட்டாரோடு - பொருந்தாதவர்களோடு, ஒட்டார் - சேரமாட்டார்கள் (புத்திசாலிகள்); தம் நெஞ்சத்து - தமது மனசிலே, யாத்தாரோடு - சேர்க்கப்பட்டவர்களோடு, [பொருந்தினவர்களோடு என்றபடி], யாத்த தொடர்பு - சேர்த்த சிநேகத்தை, பல நாளும் நீத்தார் என - பலகாலமும் (தம்மை) விட்டிருப்பவரென்று, கை விடல் உண்டோ - விட்டுவிடுவது இருக்குமா, [இல்லை], எ-று.

---

3. Avoiding the friendship of those who resemble elephants, seek the friendship of those who resemble dogs, for an elephant will kill his driver whom he has known for a long time but a dog will wag his tail while the spear threwn at him is still in his body.

4. Men cleave not to those whose hearts cleave not even for a short time, though familiar with them for a long time as neighbours. Will the friendship contracted with those who are intertwined with one's heart be abandoned, though they be absent for a long time?

Digitized by Google

மனம் பொருந்ாதவர் எத்தனை காலம் கிட்ட விருந்தாலும் அவரை யோக்கியர் நேசிக்கமாட்டார்; மனம் பொருந்தினவர் எவ்வளவுகாலம் விட்டிருந்தாலும் அவர் சிநேகத்தைக் கைவிடமாட்டார்கள் என்பது கருத்து.

நீத்தார்—நீ - பகுதி, ஆர் - விகுதி, தகரங்கள் சந்தியும் இடைநிலையும். யாத்தார்—யா - பகுதி, மற்றவை முன்போல். (ச)

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி - தோட்ட
கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரு நட்பாரு மில்.

(இ-ள்.) கோட்டு பூ போல - கொம்பிலிருக்கிற பூவைப் போலே, மலர்ந்து - (முன்னே) முகமலர்ந்து, பின் கூம்பாது - பின்பு குவியாமல், வேட்டதே வேட்டது - விரும்பினதே விரும்பினதா யிருப்பது, நட்பு ஆட்சி ஆம் - சிநேக பரிபாலனஞ் செய்வதாம்; தோட்ட - தோண்டப்பட்ட, கயம் பூ போல் - குளத்திலிருக்கும் பூவைப்போலே, முன் மலர்ந்து பின் கூம்புவாரை - முதலில் முகமலர்ச்சியைக் காட்டிப் பின்பு முகம் சுருங்கிப்போகின்றவர்களை, நயப்பாரும் நட்பாரும் இல் - விரும்புகின்றவர்களும் சிநேகிக்கின்றவர்களும் இல்லை, எ-று.

ஒருவரைக் கண்டவுடனே முகமலர்ச்சியோடு விரும்பியது மாறாமலிருந்தால் அதுதான் சிநேககுணம், அப்படியின்றி முன் சந்தோஷங்காட்டிப் பின் வெறுப்படைவது சிநேககுணமல்ல என்பது கருத்து.

வேட்டது—வேள் - பகுதி, ட் - இடைநிலை, அ - சாரியை, து - விகுதி, ள் ட் ஆனது சந்தி; தொழிற்பெயர்; விருப்பம் என்கிறபடி. தோட்ட—தொடு என்னு முதனிலை முதனீண்டு டகரமிரட்டிக் காலங்காட்டியது; பெயரொச்சம். (ரு)

கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை
இடையாயார் தெங்கி னனையர் - தலையாயார்

---

5. The exercise of friendship consists in the steady continuance of affection (without retraction) just like the flowers on branches which when once full-blown close not again. There are none who will either love or contract friendship with those who resemble the water-flowers which, having once blown, close again their petals.

6. As regards friendship, those who are at the bottom of the scale resemble the areca-palm, and those in the middle the cocoanut tree. The friendship of those at the top of the

Digitized by Google

எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

(இ-ள்.) கடை ஆயார் - கீழ்த்தரமானவர்கள், நட்பில் - சிநேகத்தில், கமுகு அனையர் - பாக்குமரத்தை ஒத்தவர்; இடை ஆயார் - மற்ற நடுத்தரமானவர், தெங்கின் அனையர் - தென்னைமரத்தையொத்தவர்; தலை ஆயார் - முதற்றரமானவர்கள், எண் அரு பெண்ணை போன்று - எண்ணுதற்கு அருமையான பனைமரத்தை ஒத்து (இருப்பவர்); தொன்மை உடையார் தொடர்பு - பழமை யுடையவருடைய சிநேகம், இட்ட ஞான்று - செய்தகாலத்தில், இட்டதே - செய்ததே, [பின்பு ஒருகாலும் உபசரணையை வேண்டுவதன்று என்கிறபடி], எ-று.

இப்படிச் சொன்னதனால் ஒரு நாள் உபசரணை தவிர்ந்தாலும் பாக்குமரம் பயன் கெடுவதுபோல் கீழோர் சிநேகம் கெடுமெனவும், இடையிடையே உபசரணை யில்லாமற்போனால் தெங்கு பழுது படுவதுபோல் மத்திமர் சிநேகம் பழுதாமெனவும் குறிப்பிக்கப்பட்டது. தலையாயாராகிய தொன்மையுடையார் தொடர்பு எனக் கூட்டியுரைக்கலாமாயினும் "எடுப்பழிவுளது" என்னுங் குற்றம் வரும் என அறிக. வேறுவகை யுரைப்பாரு முளர், அதுவுங் குற்றத்திற்கே யிடமாம். இருப்பவர் என ஒருசொல் வருவிக்கப்பட்டது. பழமையாவது ஒருகால் செய்த நட்பைப் பாராட்டுந் தன்மை. இட்டநா ளிட்டதே யன்றிப் பின் யாதோ ருபசரணையை வேண்டாதென்னுஞ் சிறப்பு நோக்கித்தான் எண்ணரும் பெண்ணை என்னப்பட்டது. (சு)

கழுநீருட் காரட கேனு மொருவன்
விழுமிதாக் கொள்ளி னமிழ்தாம் - விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினு மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.

(இ - ள்.) கழு நீருள் கார் அடகு ஏனும் - அரிசிகழுவிய நீரில் சமைத்த கறுத்த இலைக்கறியானாலும், ஒருவன்—, விழுமிது ஆ - சிறப்

---

scale resemble the palmyra-tree whose uses are manifold, and the friendship of those possessed of family greatness will continue constant as at the time when it was first contracted.

7. Even black leaf curry prepared in the water in which rice has been washed will be as nector if a man accept it kindly. To eat of the unfriendly even the white boiled rice with abundant and richly seasoned curry will be like eating the (bitter) nux vomica.

Digitized by Google

பாக, [பிரியமாக], கொள்ளின் - ஏற்றுக்கொண்டால், அமிழ்து ஆம் - அமிருதம்போலாம்; விழுமிய - சிறந்த, குய் - தாளிப்புள்ள, துவை - கறிகள், ஆர் - நிறைந்த, வெண் சோறே ஆயினும் - வெண்மையான நல்லரிசிச் சோறே யானாலும், மேவாதார் - நேசியாதவருடைய, கைத்து - பொருளாகிய உணவை, உண்டல் - புசித்தல், காஞ்சிரங்காய் - எட்டிக்காயைத் தின்பது போலாம், எ-று.

உணவிலுள்ள வருசியும் சிநேக குணம் பற்றியே சிறக்கும் என்பது கருத்து.

விழுமிது—விழுமு - பகுதி, இன் - இடைநிலை, ஈறுதொக்கது, து - விகுதி. (எ)

நாய்க்காற் சிறுவிரல்போ னன்கணிய ராயினும்
ஈக்காற் றுணையு முதவாதார் நட்பென்னும்
சேய்த்தானுஞ் சென்று கொளல்வேண்டுஞ் செய்வி
வாய்க்கா லனையார் தொடர்பு. [ளைக்கும்

(இ - ள்.) நாய் கால் சிறு விரல் போல் - நாயின்கால்களிலுள்ள சிறிய விரல்களைப்போலே, நன்கு அணியர் ஆயினும் - மிகவும் நெருக்கமுள்ளவரா யிருந்தாலும், ஈ கால் துணையும் - ஈயின்காலளவாகிலும், உதவாதார் நட்பு - உதவிசெய்யாதவர்களுடைய சிநேகம், என் ஆம் - என்னபயனும்; செய் விளைக்கும் - கழனியை விளையும்படி செய்கின்ற, வாய்க்கால் அனையார் தொடர்பு - நீர்க்காலை யொத்தவர்களுடைய சிநேகத்தை, சேய்த்து ஆனும் - தூரத்திலிருப்பதானாலும், சென்று கொளல்வேண்டும் - போய்க் கொண்டுவரவேண்டும், எ-று.

சேய்த்து—குறிப்பு முற்று, சேய் - பண்படி, பகுதி. (அ)

தெளிவிலார் நட்பிற் பகைநன்று சாதல்
விளியா வருநோயி னன்றால் - அளிய
இகழ்தலிற் கோற லினிதேமற் றில்ல
புகழ்தலின் வைதலே நன்று.

---

8. Though they adhere to one in friendship as closely as the small toes of the dog to one another, yet of what use is their love if they do not help even so little as the leg of a fly? Though they, who like the water channel which fruitifies the rice-field, be ever so far away, we must nevertheless go to them and obtain their friendship.

9. The enmity of the unwise is preferable to their friendship; death is preferable to an incurable disease; killing a person is more desirable than wounding his feelings by reproach; and abuse is better than false praise.

Digitized by Google

(இ - ள்.) தெளிவு இலார் நட்பின் - விவேக மில்லாதவருடைய நேசத்தைக்காட்டிலும், பகை நன்று - அவருடைய விரோதம் நல்லது; விளியா - தீராத, அரு நோயின் - அருமையான வியாதியைக் காட்டிலும், சாதல் நன்று - செத்துப்போவது நல்லது ; அளிய - (மனம்) வெந்துபோம்படி, இகழ்தலின் - நிந்திப்பதைக்காட்டிலும், கோறல்-கொல்லுதல், இனிது - நல்லது; இல்ல புகழ்தலின் - இல்லாத குணங்களைச் சொல்லிப் புகழ்வதைப்பார்க்கிலும், வைதலே - திட்டுவதே, நன்று - நல்லது, எ-று. மற்று - அசை.

மூடனுடைய சிநேகத்தினால் ஏதாகிலும் துன்பம் அனுபவிக்க வேண்டிவரும்; பகையினால் ஒன்று மில்லையாம் ; ஆனதனால் தெளிவிலார் நட்பின் பகை நன்று என்றார். கோறலை—கொல் - பகுதி, தல் - விகுதி, பகுதி முதனீட்சி விகாரம். (க)

மரீஇப் பலரோடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருட்டக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ யுயிர்செகுக்கும் பாம்பொடு மின்னா
மரீஇப் பின்னைப் பிரிவு.

(இ-ள்.) பலரோடு - அநேகரோடு, மரீஇ - சேர்ந்து, பல் நாள் - அநேகநாள், முயங்கி - கலந்து, பொரீஇ - (மனநிலையில்) ஒப்பாகி, பொருள் தக்கார் - பிரயோஜனமாகத் தக்கவர்களை, கோடலே வேண்டும் - கொள்வதே ஆவசியகம் ; பரீஇ - கடித்து, உயிர் செகுக்கும் - உயிரை நாசப்படுத்துகின்ற, பாம்பொடும் - பாம்போடு கூடவும், மரீஇ- சேர்ந்து, பின்னை பிரிவு - பின்பு பிரிந்து போவது, இன்னா - பிரியமாகமாட்டாது, எ-று.

பலரோடும் பழகிப்பார்த்து உபயோகமானவர்களைச் சிநேகித்துக்கொள்ளவேண்டும். கெட்டகுணமுள்ள பாம்போடாயினும் நேசித்துப் பிரிவது துக்கமா யிருக்குமானால் மேலானவர்களைப் பிரிவது மகா துக்கமல்லவா என்கிறபடி.

பொரீஇ—பொருவு - பகுதி, மற்றவை செய்யு ணிலையில் வந்த விகாரம். மற்ற வினை யெச்சங்களு மிப்படியே. இன்னா — இன்னாத என்பதில் ஈறு தொகுத்தல். (கய)

---

10. It is necessary to move with many for many a day and then by associating with them, to take for friends those who are worthy. It is painful to separate even from a deadly serpent, after once associating with it.

Digitized by Google

## உங-வது. அதிகாரம்.—Chapter XXIII.

---

### நட்பிற்பிழை பொறுத்தல்.—Bearing with the faults of friends.

அதாவது சிநேகித்தவர் தமக்குச் செய்யுங் குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளுதல்.

நல்லா ரெனத்தா நனிவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டும்
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு.

(இ - ள்.) நல்லார் என - நல்லவர்களென்று, தாம் நனி விரும்பி கொண்டாரை - தாங்களே மிகவும் இச்சித்துச் சிநேகங் கொண்டவர்களை, அல்லார் எனினும் - நல்லவரல்லாதவரா யிருந்தாலும், அடக்கி கொளல்வேண்டும் - அக்குற்றங்களைத் (தம்மனதில்) அடக்கி நட்பாகவே கொள்ளவேண்டும்; நெல்லுக்கு உமி உண்டு—, நீர்க்கு நுரை உண்டு—, பூவிற்கும் - புஷ்பத்திற்கும், புல் இதழ் உண்டு - (ஈனமான) புற இதழ் இருக்கின்றது, எ-று.

யாரும் விரும்பிக்கொள்ளத்தக்க நெல் நீர் பூ இவைகளிலும் உபயோகமற்ற தாழ்மையான பொருள்க ளிருக்கின்றமையால் சில குணங்களைக்கொண்டு நாம் சிநேகித்தவரிடத்தில் உள்ள குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டும் என்றபடி, "குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை." அவர்களுக்கு ரகசியத்தில் புத்திசொல்லி அடங்கச் செய்துகொள்ள வேண்டுமெனவு முரைக்கலாம். (க)

செறுத்தோ றுடைப்பினுஞ் செம்புனலோ டோர்
மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்
வெறுப்ப வெறுப்பச் செயினும் பொறுப்பரோ
தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.

---

1. When those whom we greatly love and esteem as virtuous prove otherwise, we must bear up with their faults, for the paddy has its husk, water its foam, and flower some unseemly leaves.

2. Those who live desiring to have good and sufficient water, will not be angry with it but will dam it up as often as it bursts its bank. In like manner will men bear up with the acts of their friends whose friendship they themselves have courted, although they may constantly do what is hateful.

Digitized by Google

(இ - ள்.) செறுத்தோறு உடைப்பினும் - (தாங்கள்) கட்டுந்தோறும் உடைத்துக்கொண்டு போனாலும், நீர் நசை வாழ்நர் - ஜலத்தை விரும்பி வாழ்கின்றவர்கள், செம்புனலோடு - நல்ல நீரோடு, ஊடார் - பிணங்காதவராய், மறுத்தும் சிறை செய்வர் - மறுபடியும் கட்டிக் கொள்வார்கள்; (அப்படியே) வெறுப்ப வெறுப்ப செயினும் - வெறுக்கும்படியான காரியங்களை அடிக்கடி செய்தாலும், தாம் வேண்டி - தாங்கள் விரும்பி, தொடர்பு கொண்டார் - சிநேகங்கொண்டவர்கள், பொறுப்பர் - பொறுத்துக்கொள்ளுவார்கள், எ-று.

வெறுப்ப என்பது பலவின்பால் வினையாலணையும்பெயர்; அடுக்கு பலமுறை செய்தலாகிய பொருணிலையால் வந்தது; அதனை வினையெச்சமா வைத்து துன்பங்களை எனச் செயப்படுபொருள் வருவித்து உரைப்பதும் அமையும். அந்தப் பக்ஷத்தில் அடுக்கு மிகுதிப்பொருளில் வந்ததாம். (உ)

இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்த றகுவதொன் றன்றோ - நிறக்கோங்
குருவவண் டார்க்கு முயர்வரை நாட
ஒருவர் பொறையிருவர் நட்பு.

(இ - ள்.) தன் நட்டார் - தன்னுடைய சிநேகிதர், இறப்ப தீய செயினும் - மிகவுந் தீங்குகளைச் செய்தாலும், பொறுத்தல் - பொறுத்துக்கொள்ளுதல், தகுவது ஒன்று அன்றோ - தகுதியான ஒரு காரியமல்லவா; நிறம் கோங்கு - நல்லநிறமுள்ள கோங்கம் பூவிலே, உருவம் வண்டு ஆர்க்கும் - அழகுள்ள வண்டுகள் சப்திக்கப்பெற்ற, உயர் வரை நாட - உயர்வான மலைகளுள்ள நல்லநாட்டை யுடையவனே!, ஒருவர் பொறை - ஒருவர் பொறுப்பது, இருவர் நட்பு - இருவருடைய சிநேகம் ஆகின்றது, எ-று. ஏ-அசை.

பொறை—தொழிற்பெயர், பொறு - பகு, ஐ - விகுதி. (ங)

மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்குஞ் சேர்ப்ப

---

3. Though they do evil exceedingly, is it not a fitting thing to bear up with the faults of their friends? O lord of the country abounding in lofty mountains where the bees hum over the bright colored *Kongu* flowers! The forbearance of one is the friendship of both.

4. O lord of the shores where the bright-rayed pearls collected by the rebounding waves are cast ashore by the swift sailing vessels! if friends from whom it is difficult to separate

Digitized by Google

விடுதற் கரியா ரியல்பிலரோ னெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

(இ-ள்.) மடி திரை தந்திட்ட - மடிந்து வீழ்கின்ற அலைகள் கொடுத்த, வான் கதிர் முத்தம் - பிரகாசமான கிரணங்களையுடைய முத்துக்களை, கடு விசை நாவாய் - மிகுந்த வேகமுள்ள கப்பல்கள், கரை அலைக்கும் சேர்ப்ப - கரைகளிலே அலையச்செய்கின்ற கடற்கரையரசனே!, விடுதற்கு அரியார் - (சிநேகம்) விடக்கூடாதவர்கள், இயல்பு இலரோல் - சற்குணம் இல்லாதவரானால், (அவர்) நெஞ்சம் சுடுதற்கு - மனதைச் சுடுவதற்கு, மூட்டிய தீ - மூட்டப்பட்ட நெருப்புப்போலாவர், எ-று.

அலைகளிலே இருந்த முத்துக்கள் கப்பலின் விசையால் கரையில் தள்ளப்பட்டு அலைந்துகொண் டிருக்கும்படியான நாடு என்று சிறப்புக்கூறியது. நேசித்தவரை விடக்கூடாதென்று முன் சொன்னோம் ஆனாலும் அவர்கள் சற்குணமிலராயின் மனதிற்கு மிகத் துயரமாயிருக்கும் எனவே சிநேகித்தவர் தவறின்றி நடக்கவேண்டும் என்றதாயிற்று. தந்திட்ட—இதில் இடு - துணைவினை. (ச)

இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல்வேண்டும் - பொன்
நல்லிற் சிதைத்ததீ நாடொறு நாடித்தம் [னொடு
இல்லத்தி லாக்கு தலால்.

(இ-ள்.) பொன்னொடு நல் இல் சிதைத்த - பொன்னோடுகூட நல்ல வீட்டைக் கட்டழித்த, தீ - நெருப்பை, நாள்தோறும் - ஒவ்வொரு நாளும், நாடி - விரும்பி, தம் இல்லத்தில் - தமது மாளிகையில், ஆக்குதலால் - (யாவரும்) உண்டாக்குவதனால், இன்னா செயினும் - துன்பங்களைச் செய்தாலும், விடற்பாலர் அல்லாரை - விடக்கூடாதவர்களை, பொன்னாக போற்றி கொளல் வேண்டும் - பொன்போல் நினைத்து மேலாகக் கொள்ளவேண்டும், எ-று.

வீட்டையும் பொன்னையும் அழித்ததென்று கைவிடாமல் நெருப்பைச் சனங்கள் தினம் வீடுகளில் உண்டாக்காமற் போனால் எந்தச் சுகமும் வாய்க்காது, அதுபோல் துன்பஞ்செய்தாலும் உதவியான சிநேகிதரை கைவிடக் கூடாதென்பது கருத்து.

---

possess not virtuous dispositions, they are as a fire kindled to burn our hearts.

5. Even though they do what is disagreeable, one should preserve as gold those who ought not to be forsaken. Daily do men seek for fire and keep it in their house, though it has consumed their good house and gold [i. e. other property.]

Digitized by Google

விடலாகிய பான்மையுடையவர் விடற்பாலர்; பான்மை - இயல்பு. முற்பாட்டிற் கூறியபடி நெஞ்சஞ் சுடுதற்கு மூட்டிய தீயானும் பொறுத்தல் கடமை என்றார். (௫)

இன்னா செயினும் விடுதற் கரியாரைத்
துன்னாத் துறத்த றகுவதோ - துன்னருஞ்சீர்
விண்குத்து நீள்வரை வெற்ப களைபவோ
கண்குத்திற் றென்றுதங் கை.

(இ - ள்.) துன் அரு சீர் - சேருதற்கரிய சிறப்புள்ள, விண் குத்து - வானத்தைக் குத்துகின்ற, நீள் வரை - நீண்ட மூங்கிலையுடைத்தான, வெற்ப - மலைக்கு உரியவனே!, இன்னா செயினும் - துன்பங்களைச் செய்தாலும், விடுதற்கு அரியாரை - விடக்கூடாதவர்களை, துன்னா - சேராமல், துறத்தல் - விட்டுவிடல், தகுவதோ - தகுந்ததோ, [அன்று]; கண் குத்திற்று என்று - கண்ணைக் குத்தினது என்று, தம் கை - தமது கையை, களைபவோ - நீக்கிப் போடுவார்களோ (உலகத்தார்), எ-று.

"னலமுன்றனவும்" என்கிற [மெய்-புணரியல் ௩௪-வது சூத்திரத்தினால்] த ற ஆகி "குறில் செறியாலள" என்கிற [மெய் - புணரியல் ௬ - உ௬ - னால்] ல் கெட்டு, துறத்தறகுவதோ என்றாயிற்று. (௬)

இலங்குநீர்த் தண்சேர்ப்ப வின்னா செயினும்
கலந்து பழிகாணார் சான்றோர் - கலந்தபின்
தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை.

(இ - ள்.) இலங்கு நீர் தண் சேர்ப்ப - விளங்குகின்ற ஜலத்தினால் குளிர்ச்சியான கடற்கரை யுடையவனே!, இன்னா செயினும்—, சான்றோர் - பெரியோர், கலந்து - சிநேகித்து, பழி காணார் - குற்றத்தைப் பார்க்கமாட்டார்; கலந்த பின் - நேசித்தபின்பு, தீமை எடுத்து உரைக்கும் - (சிநேகிக்கப்பட்டவருடைய) குற்றங்களை எடுத்துச்சொல்லுகின்ற, திண் அறிவு இல்லாதார் தாமும் - திடமான அறிவில்லாத

---

*6. Is it right utterly to abandon those friends who ought not to be forsaken though guilty of evil deeds? O lord of the renowned mountains abounding in lofty bamboos piercing the sky! Will men cut off their hand because it has struck the eye?

7. O lord of the shores which are cool with bright water! The great will not take notice of the faults of their friends after once associating with them. Those unwise men who take notice of the evil deeds of their friends after once associating with them and speak of them, are themselves inferior to those of whom they speak.

Digitized by Google

வர்களும், அவரில் கடை - தீமைசெய்யு நேசனைக் காட்டிலுந் தாழ்மையானவர், எ-று. தாம் - அசை.

பழி—முதனிலைத் தொழிற்பெயர், பழிக்கப்படுவதற்கு ஆகுபெயர்; செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயரென்றுஞ் சொல்லலாம். (எ)

ஏதிலார் செய்த திறப்பவே தீதெனினும்
நோதக்க தென்னுண்டாம் நோக்குங்கால் - காதல்
கழுமியார் செய்த கறங்கருவி நாட
விழுமிதா நெஞ்சத்து ணின்று.

(இ - ள்.) கறங்கு அருவி நாட - ஒலிக்கின்ற மலையருவிகளுள்ள நாட்டுக் குடையவனே!, ஏதிலார் செய்தது - அயலார்செய்தது, இறப்பவே தீது எனினும் - மிகவுங் கொடியதானாலும், நோக்குங்கால் - (விதியை) யோசித்தால், நோ தக்கது - வெறுக்கத்தக்கது, என் உண்டாம் - என்ன உண்டு; காதல் கழுமியார் - அன்பு மிகுந்தவர், செய்த - செய்த (தீமை,) நெஞ்சத்துள் நின்று - மனதில் நின்றால், [சிந்தித்தால்,] விழுமிது ஆம் - சிறந்த தாய்விடும், எ-று.

அயலார் செய்ததே யோசிக்குங்கால் வெறுக்கத் தகாததானால் அன்பர் செய்தது பிரியமாகும் என்பது கருத்து.

செய்தது என்பது ஈறுகுறைந்தது; அல்லது விழுமிது என்பது சிறந்தபொருளுக்கு ஒருபெயராகக் கொள்ளத்தக்கது. நோதற்குத் தக்கது நோதக்கது; நோ - முதனிலைத்தொழிற் பெயர், நான்கனுருபு தொக்கு; தக்கதோடு ஒருமொழித்தன்மைப் பட்டதெனக் கொள்க. கழுமியார்—கழுமு - பகுதி, இன் - ஈறுகுறைந்தது, ஆர் - விகுதி. (அ)

தமரொன்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்
தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்.

---

8. Although what is done by strangers be in themselves exceedingly bad, what is there to blame if matters are rightly considered. If this be so, O lord of the country traversed by roaring torrents! evils done by those who are affectionately attached will on mature thought be all good.

9. If persons become aware that those whom they have taken into friendship supposing them to be friendly are not really so, they should then nevertheless esteem them better than their (true) friends and conceal the discovery in their own breasts.

Digitized by Google

(இ-ள்.) தமர் என்று - தம் உறவினர் என்று, தாம் கொள்ளப் பட்டவர் - தாமே உறவுகொள்ளப் பட்டவர், தம்மை - தம்மிடத்தில், தமர் அன்மை - தம்முறவிற்கு ஏலாமை செய்ததை, தாம் அறிந்தார் ஆயின் - தாம் அறிந்துகொண்டாரானால், அவனை - அப்படிச்செய்தவனை, தமரினும் நன்கு மதித்து - தம்மவரினு மேலாகக்கொண்டு, தமர் அன்மை - (அவரிடம் காணப்பட்ட) தமரன்மையை, தம்முள் - தம்மனதில், அடக்கி கொளல் - அடக்கிக்கொள்க, எ-று.

தமரன்மை அதன் காரியத்திற்கு ஆயிற்று. தம்மை—வேற்றுமை மயக்கம். அடக்கிக்கொளல்—வியங்கோள் வினைமுற்று, [வினை-சூ - கக - உரையைக்காண்க.] (கூ)

குற்றமு மேனைக் குணமு மொருவனை
நட்டபி னாடித் திரிவேனேல் - நட்டான்
மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க
அறைகடல்சூழ் வைய நக.

(இ - ள்.) ஒருவனை நட்டபின் - ஒருவனை நேசித்தபிறகு, குற்றமும் - (அவனிடம்) குற்றத்தையும், ஏனை குணமும் - மற்ற குணத்தையும், நாடி திரிவேனேல் - ஆராய்ந்துகொண்டு திரிவேனேயானால், நட்டான் - நேசித்தவனுடைய, மறை - ரகசியத்தை, காவா விட்டவன் - காக்காமல் வெளிவிட்ட பாவி, செல் உழி - போம் கதியில், அறை கடல் சூழ் வையம் நக - ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த பூமி (இகழ்ந்து) சிரிக்கும்படி, செல்க - போகக்கடவேன், எ-று.

எவ்வித ரகசியத்தை வெளியிடுவதினாலே நேசித்தவனுக்குத் துன்பமுண்டாகுமோ அவ்வித ரகசியத்தை வெளியிட்டபாவி போகத் தக்க நரகந்தான் சிநேகித்தபின் அவனுடைய குணதோஷங்களைச் சொல்லிக்கொண்டு திரிகிறவனுக்கும் என்றபடி.

மறை — செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர் ; மறைக்கப்படுவது. நக—செயவெனெச்சம், நகு - பகுதி, அ - விகுதி, குற்றுகர விதி பெற்றது. செல்வுழி—இங்கே வகரம் தோன்றியதற்கு விதி, [உயிர் புணர் - கரு - சூத்திர வுரையிற்] காண்க. (கo)

---

10. If after contracting friendship with any one I set myself to note his good and bad qualities, may I be scoffed at by the whole world and cast into the hell where traitors who disclose the secrets of friends are punished.

Digitized by Google

## உச - வது அதிகாரம்.—Chapter XXIV.

### கூடாநட்பு.—False friendship.

அதாவது பொருந்தாத சிநேகம் இப்படிப்பட்டதெனத் தெரிந்து கொள்ளுதல்.

செறிப்பில் பழங்கூரை சேறணை யாக
இறைத்துநீ ரேற்றுங் கிடப்பர் - கறைக்குன்றம்
பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட
தங்கரும முற்றுந் துணை.

(இ - ள்.) கறை குன்றம் - கறுப்பான மலைகளிலே, பொங்கு அருவி - மிகுந்த அருவிகள், தாழும் - இழியாநின்ற, புனல் - நீரோடு கூடிய, வரை - மலைகளுள்ள, நல் நாட - நல்லதேசத்தரசனே!, செறிப்பு இல் - கட்டு இல்லாத, பழங் கூரை - பழைய கூரைவீட்டிலே, சேறு அணை ஆக - சேற்றினால் அணை உண்டாக்கி, நீர் இறைத்தும் - (அதில் வீழ்ந்த) நீரைப் புறத்தில் இறைத்தும், (நீர்) ஏற்றும் - மேல் விழு) நீரை உள்ளே விழவொட்டாமல் ஏற்றும், தம் கருமம் - தமது காரியம், முற்றும் துணை - நிறைவேறுமளவும், கிடப்பர் - இருப்பார்கள் (அதற்குடையவர்கள்), எ-று.

பழுதுபட்ட கூரைவீட்டி லுள்ளவர் மழைபெய்கையில் அதற்குப் பழுது வராமற் காத்துநிற்பதுபோல் நட்டாருடைய காரியத்தை முற்றுமளவுங் காப்பவர் சிநேகிக்கத் தக்கவரோயன்றி அதற்கிசையாதவர் அல்லர் என்பது கருத்து. அல்லது மழைவருமுன்னமே பழுதுபட்ட வீட்டைச் செம்மை செய்துகொள்ளாமல் வந்தபோது வருந்துகின்றவரைப்போன்ற மூடர் நேசிக்கத்தகாதவர் என்னவுமாம்.

ஆக என்பதற்கு ஆகச்செய்து என்று பொருள் கொள்ளப்பட்டது. (க)

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்ததாம் - மாரி

---

1. O lord of the good mountainous country where abundance of cascades fall down from black hills! Men who live in an old thatched house with little or no security, will (when it rains) throw a dam of mud and keep out water by baling it out and also prevent that which falls in and so remain in the house until their work is completed. (Thus will false friends remain attached to one until their own business is finished).

2. The friendship of the illustrious is eminently valuable and is productive of great benefit as the timely rain. O lord

Digitized by Google

வறந்தக்காற் போலுமே வாலருவி நாட
சிறந்தக்காற் சீரிலார் நட்பு.

(இ - ள்.) சீரியார் கேண்மை - சிறந்தவர்களுடைய சிநேகம், சிறந்த சிறப்பிற்று ஆய் - மேம்பட்ட சிறப்புள்ளதாய், மாரி போல் - மழைபோலே, மாண்ட - மாட்சிமைப்பட்ட, பயத்தது ஆம் - பிரயோசனமுள்ளதாகும்; வால் அருவி நாட - வெண்மையான அருவியுள்ள நாடுடையவனே!, சீர் இலார் நட்பு - சற்குணமில்லாதவருடைய சிநேகம், சிறந்தக்கால் - மிகுந்தால், மாரி - மழை, வறந்தக்கால் போலும் - இல்லாமற்போனல் (இருக்கு நிலைமை) போல அப்பிரயோசனமாம், எ-று.

சிறப்பிற்று—சிறப்பு - பகுதி, இன் - சாரியை, று - விகுதி, ன் ற் ஆனது சந்தி; குறிப்பு முற்று, அல்லது குறிப்புமுற்று லணையும் பெயர். மாண்ட—மாண் - பகுதி. (உ)

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்-நுண்ணூல்
உணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்த லிரயத்து ளொன்று.

(இ-ள்.) நுண் உணர்விஞரொடு கூடி - நுட்பமான அறிவுடையவர்களோடு சேர்ந்து, நுகர்வு உடைமை - புசிப்பதைக்கொண்டிருத்தல், விண் உலகே ஒக்கும் விழைவிற்று - தேவலோகத்தையே ஒத்திருக்கும்படியான மேன்மையுள்ளது ஆம்; நுண் நூல் உணர்வு - நுட்பமான சாஸ்திரஞானம், இலர் ஆகிய - இல்லாதவர்களாகிய, ஊதியம் இல்லார் - பயனற்றவர்களை, புணர்தல் - சேர்தல், நிரயத்துள் ஒன்று - நரகங்களுள் ஒன்றும், எ-று. ஆல் - அசை.

உணர்விற்கு நுட்பமாவது உள்ளுறையைக் கிரகித்தல். நூலுக்கு நுட்பம் பொறிக்கும் மனதிற்கும் சாதாரணமா யெட்டாதவைகளை அறிவிப்பது. விண்ணுலகே—ஏகாரம் - பிரிநிலை. (௩)

பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும் - அருகெல்லாம்

---

of the country watered by clear floods! the friendship of the mean even in its highest state resembles the failure of rain (in the due season.)

3. The enjoyment of the friendship of men of acute understanding is as desirable as heaven and the connexion with useless men who are not instructed in science or literature is a very hell.

4. O lord of the country whose mountain sides are covered with groves of tall sandal trees! The friendship of those who

Digitized by Google

சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட
பந்த மிலாளர் தொடர்பு.

(இ-ள்.) அருகு எல்லாம் - பக்கங்களிலெல்லாம், சந்தனம் நீள் சோலை - சந்தன மரங்களுடைய பெரிய தோப்புக்களோடு கூடிய, சாரல் மலை நாட - சாரல்களையுடைய மலைகளுள்ள நாட்டரசனே!, பந்தம் இலாளர் தொடர்பு - மனப்பற் றில்லாதவருடைய சிநேகம், வை தீ போல் - வைக்கோலிற் பற்றிய நெருப்பைப்போலே, பெருகுவது போல தோன்றி - வளர்வதுபோலே காணப்பட்டு, ஒருபொழுதும்—, செல்லாதே - (காரியத்தில்) உபயோகப்படாமல், நந்தும் - கெடும், எ-று. (௪)

செய்யாத செய்துநா மென்றலுஞ் செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண் டோட்டலும்-மெய்யா
இன்புறூஉம் பெற்றி யிகழ்ந்தார்க்கு மந்நிலையே [க
துன்புறூஉம் பெற்றி தரும்.

(இ - ள்.) செய்யாத - செய்யக்கூடாதவைகளை, நாம்—, செய்தும் என்றலும் - செய்வோம் என்று சொல்வதும், செய்வதனை - செய்யவேண்டியதை, செய்யாது - செய்யாமல், தாழ்த்துக்கொண்டு ஓட்டலும் - நீடிக்கச்செய்து வைப்பதும், மெய்யாக - சத்தியமாகவே, இன்பு உறும் பெற்றி - (ஐம்புலன்களின்) இன்பமுறுந் தன்மையை, இகழ்ந்தார்க்கும் - நீக்கினவர்களாகிய துறவிகளுக்கும், அந்நிலையே - அப்போதே, துன்பு உறும் பெற்றி - துன்பத்தை அடையும்படியான தன்மையை, தரும் - கொடுக்கும், எ-று.

செய்யக்கூடாதவைகளைச் செய்வோமென்று வீண்முயற்சி செய்வதும், செய்யத்தக்கவைகளைச் செய்யாமல் சாவகாசப் படுத்திப்போடுவதும் துறந்தவர்களுக்கும் துன்பமுண்டாக்கும் என்றபடி.

செய்தும்—தனித்தன்மைப் பன்மைவினைமுற்று, தும் - விகுதியே எதிர்காலங் காட்டும். (ரு)

ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்
விரிநீர்க் குவளையை யாம்பலொக் கல்லா

---

are not really bound by affection will, like the fire caught in the straw, though seeming to increase, soon die away.

5. To say that we would do things which we are really unable to accomplish and deferring to do what ought to be done are acts which will instantaneously afflict even the ascetics who renounced the pleasures of the five senses.

6. Though born in the same pool and grown up together, the *ambal* flower will never resemble the *kuvalai*. The actions of

Digitized by Google

பெருநீரார் கேண்மை கொளினுநீ ரல்லார்
கருமங்கள் வேறு படும்.

(இ-ள்.) ஒரு நீர் பிறந்து - ஒரே ஜலத்திலே உண்டாகி, ஒருங்கு - ஒரேவிதமாக, நீண்டக்கடைத்தும் - வளர்ந்தாலும், விரி நீர் குவளையை - விஸ்தரித்த நற்குணமுள்ள நீலோற்பலத்தை, ஆம்பல் - ஆம்பற்பூ, ஒக்க அல்லா - ஒக்கமாட்டா; பெரு நீரார் கேண்மை கொளினும் - மிகுந்த சற்குணமுள்ளவருடைய சிநேகத்தைப் பெற்றாலும், நீர் அல்லார் - குணவான்க ளாகாதவருடைய, கருமங்கள் - காரியங்கள், வேறுபடும் - வேறுப்பபோம், எ-று.

குணவான்களோடு கூடியிருக்கிறுரொன்று குணமில்லாதவரைத் தக்க காரியங்களில் நட்புக்கொள்ள லாகாதென்பது கருத்து.

ஒருங்கு—முதனிலை வினையெச்சப்பொருட்டாய் வந்தது. நீண்டக்கடைத்தும்—இதுவும் ஒருவகை வினையெச்சம்; கடை - விகுதி, து - சாரியை. (சு)

முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கு மலைநாட வின்னுதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

(இ-ள்.) முற்று அல் சிறு மந்தி - முதிராத சிறிய குரங்கு, முன்பட்ட தந்தையை - எதிரேநேர்ந்த தன் தந்தையாகிய பெருங்குரங்கை, நெற்று கண்டன்ன விரலால் - பயற்ற நெற்றைக் கண்டாற்போன்ற கைவிரல்களால், ஞெமிர்த்திட்டு - மடங்கச்செய்து, குற்றி பறிக்கும் - குத்தி (அதின் கையிலுள்ளவற்றை) பறித்துக்கொண்டு போகின்ற, மலை நாட - மலையுள்ள நாட்டரசனே!, ஒற்றுமை கொள்ளாதார் நட்பு - தன்னுேடு ஒன்றுபடமாட்டாதவருடைய சிநேகம், இன்னுது - இன்பமாயிராது, எ-று. ஏ - அசை.

சிறுகுரங்குகள் பெருங்குரங்குகளை யடித்துப் பறிக்கும்படியான பலத்தோடு வளராநின்ற மலையெனச் சிறப்பித்தது. தான் வருவதற்குமுன்னமே வந்து அங்குள்ள குற்றியைப் பெயர்த்தெடுக்கமாட்டாத கிழக்குரங்கை விரலால் தள்ளித் தான் அக்குற்றியைப்பெயர்த்து

---

those devoid of good qualities, though they associate with people of high excellence, will ever be inconsistent.

7. O lord of the mountainous country where the little monkeys with their fingers strike their fathers and seize what is in their hands! The friendship of those who are not united in heart, is unpleasant.

Digitized by Google

எடுக்கும்படியான சிறுகுரங்குள்ள மலையெனவும் பொருள் கொள்ள லாம். முற்று—வினைமுதற்பொருள்விகுதி புணர்ந்து கெட்டபெயர். கண்டு என்பதற்கு கட்டியாயிருப்பது பொருளானதைக்கொண்டு நேற்றாகிய கண்டை ஒத்த எனவு முரைக்கலாம். (எ).

முட்டுற்ற போழ்தின் முடுகியென் னாருயிரை
நட்டா னொருவன்கை நீட்டேனேல் - நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க
நெடுமொழி வைய நக.

(இ - ள்.) முட்டு உற்ற போழ்தின் - (என்னுடைய நண்பன்) சங்கடத்தை அடைந்தபோது, முடுகி - துரிதப்பட்டு, என் ஆர் உயிரை - என்னுடைய அருமையான பிராணனை, நட்டான் ஒருவன் கை நீட்டேனேல் - சிநேகிதனாகிய ஒருவன்கையிற் கொடாமற் போவேனேயானால், நட்டான் - சிநேகிதனுடைய, கடி மனை - காவலுள்ள அல்லது கலியாணஞ்செய்த மனையாளை, கட்டு அழித்தான் - கற்பழித்தபாவி, செல்வுழி - போமிடத்தில், நெடு மொழி வையம் - மிகுந்த பேர்பெற்ற பூமியிலுள்ளோர், நக - சிரிக்கும்படி, செல்க - (நான்) போகக்கடவேன், எ-று.

நண்பனுக்குச் சங்கடநேர்ந்தபோது தன் உயிரைக்கொடுத்தாகிலுங் காப்பாற்றாதவன் நட்டான் மனையாளைக் கற்பழித்தவன் செல்லு நரகத்திற் செல்வான் என்றபடி.

முட்டு — முதனிலைத் தொழிற்பெயர். அரு உயிர்—நிலைமொழி முதனீண்டு குற்றுகரவிதி பெற்றது; "ஆதிநீடல்" என்பதும், "முற்று மற்றொரோவழி" என்பதும் விதிகள். கடி என்பது பல குணந் தழுவிய ஓருரிச்சொல் [உரி - சூ - கசு.] (அ)

ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ - தேம்படு

---

8. If I do not hasten to deliver up my soul into the hands of my friend in distress, let me be despised by the world and cast into the hell where the wretch who violated the chastity of a friend's wife is punished.

9. O lord of the country of goodly mountains which abound in honeycombs! The acquisition of the friendship of the unwise after renouncing that contracted with those who

Digitized by Google

நல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு.

(இ-ள்.) தேம்படு நல்வரை நாட - தேன் கூடுகள் சேர்ந்த நல்ல மலைநாடனே!, நயம் உணர்வார் - சிநேகமறியும்படியானவர்களுடைய, நண்பு—, ஒரீஇ - நீக்கி, புல் அறிவினாரொடு நட்பு - அற்பஞான முடையவர்களோடு கொண்ட சிநேகம், ஆன் படு நெய் பெய் கலனுள் - பசுவினிடமுண்டாகு நெய்யை ஊற்றியிருந்த பாத்திரத்தில், அது களைந்து - அந்நெய்யை எடுத்துவிட்டு, வேம்பு அடு நெய் பெய்தது அனைத்து - வேம்பைச்சேர்ந்த நெய்யை யூற்றினாற்போலாகும், எ-று. அரோ - அசை.

[மெய் - புணரியல் ௫ - ௧௧ - ன் விதியினால்] தேன்படு தேம்படு ஆயிற்று. (௯)

உருவிற் கமைந்தான்க ணூராண்மை யின்மை
பருகற் கமைந்த பானீ ரளாயற்றே
தெரிவுடையார் தீயினத்தா ராகுத னாகம்
விரிபெடையோ டாடிவிட் டற்று.

(இ - ள்.) உருவிற்கு அமைந்தான்கண் - அழகுக்கு ஏற்றவனிடத்து, ஊர் ஆண்மை இன்மை - ஒப்புரவில்லாமையானது, பருகற்கு அமைந்த பால் - குடிப்பதற்கு ஏற்ற பாலானது, நீர் அளாயற்றே - நீர் கலந்தாற்போலாம்; தெரிவு உடையார் - விவேகமுடையவர்கள், தீ இனத்தார் ஆகுதல் - தீமையான இனத்தைச் சேர்ந்தவராயிருப்பது, நாகம் - சர்ப்பமானது, விரி பெடையோடு - பெட்டை விரியன் பாம்பொடு, ஆடி விட்டற்று - புணர்ந்து நீங்கினது போலாம், எ-று.

நாகம் விரிபெடையோடு புணர்ந்தால் சாகுமென்பார்கள். ஒப்புரவாவது உபகாரஞ் செய்யுங்குணம். சிநேகிப்பதற்கு ரூபமும் ஒரு காரணமாயிருக்க அவனிடத்தில் உபகாரகுண மில்லாமையால் ருசி கெடுதலினால் பால் நீரளாயற்றே யென்றார். அளாய்—வினையெச்சம், யகரமெய் - விகுதி. (௧௦)

---

are able to understand what is true friendship, is like pouring margosa oil into a vessel after emptying the ghee it contained.

10. The absence of a benevolent disposition in one who is handsome is like mixing water with milk fit for drink. For those who are wise to become the companions of the wicked is like the *Naga* serpent joining with the female *Virian* serpent.

Digitized by Google

## உரு-ம். அதிகாரம்.—Chapter XXV.

### அறிவுடைமை.—Wisdom.

அதாவது காரியா காரியங்களைத் தெரிந்துகொள்ளும் படியான புத்தியுள்ளவனுதல்.

பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணுய்
இளம்பிறை யாயக்காற் றிங்களைச் சேரா
தணங்கருந் துப்பி னரா.

(இ-ள்.) பகைவர் பணிவு இடம் நோக்கி - சத்துருக்கள் தளர்ந்திருக்குமிடம் பார்த்து, தகவு உடையார் - தகுதியுள்ளோர், தாமேயும் நாணி - தாங்களே வெட்கப்பட்டு, தலை செல்லார் - (வெல்வதற்கு) அவ்விடம் போகமாட்டார், காணுய் - பார்; அணங்கு அரும் துப்பின் - வருந்துதலில்லாத சாமர்த்தியமுள்ள, அரா - பாம்பு, [இராகு], திங்களை - சந்திரனை, இளம் பிறை ஆயக்கால் - இளம்பிறையாயிருந்தால், சேராது - (அதனைவருத்தும்படி) போகாது, எ-று.

பகைவனுலும் அவன் இளைத்திருக்குங் காலத்திலே அவனை வெல்ல நினையாமல் இரங்குவது விவேகம் என்பது கருத்து.

அணங்கரும் என்பதில் அருமை இன்மைக்குக் கொள்ளப்பட்டது.

நளிகடற் றண்சேர்ப்ப நல்கூர்ந்த மக்கட்
கணிகல மாவ தடக்கம் பணிவில்சீர்
மாத்திரை யின்றி நடக்குமேல் வாழுமூர்
கோத்திரங் கூறப் படும்.

(இ-ள்.) நளி கடல் தண் சேர்ப்ப - அகலமான கடலின் குளிர்ச்சியான கரைக்கரசனே!, நல்கூர்ந்த மக்கட்கு - தரித்திரப்பட்ட மனிதருக்கு, அணிகலமாவது - ஆபரணமாவது, அடக்கம் - அடங்கியிருத்தல்; பணிவு இல் சீர் - அடக்கமில்லாத சிறப்பையுடைய, மாத்திரை இன்றி - அளவில்லாமல், [அளவைக்கடந்து], நடக்குமேல் - நடப்பா

---

1. When the excellent behold their enemies in adverse circumstances, they, feeling ashamed, will not take up the opportunity to overpower them. The invinsible mighty serpent Raghu will not afflict the moon in her first quarter.

2. O lord of the cool shores of the broad ocean! Self-control is the ornament of the poor; should they overstep their limit and behave without any measure of propriety, their lineage will be published by the inhabitants of the village they live in.

Digitized by Google

ளுயின், வாழும் ஊர் - (அவன்) வாழ்கின்ற ஊரில், கோத்திரம் - (அவன்) குலம், கூறப்படும் - (இழித்து) சொல்லப்படும், எ-று.

தரித்திரனு யிருப்பவன் வீண் பிரசங்கங்களுக்குப் போகாமல் அடங்கியிருப்பது புத்தி; இல்லாமற்போனுல் அவனைப்பற்றி அவன் குலமும் இகழப்படு மென்பது கருத்து. (உ)

எந்நிலத்து வித்திடினுங் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவருஞ் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகு மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

(இ-ள்.) எந்நிலத்து வித்து இடினும் - எந்தநிலத்திலே விதைத்தாலும், காஞ்சிரம் காழ் - எட்டிவிதை, தெங்கு ஆகா - தென்னமரமாகமாட்டா; தென் நாட்டவரும் - தென் தேசத்தாரும், சுவர்க்கம் புகுதலால் - சொர்க்கலோகம் சேர்வதனுலே, தன்னால்தான் - தன்னுலேயே, மறுமை ஆகும் - மறுபிறப்பின்கதியுண்டாகும்; வடதிசை பலரும் - வடதிசையிலுள்ள அநேகரும், சால கொன் ஆளர் - மிகவும் (மறுமைக்கு உதவியின்றி) வீண்காலங் கழிப்பவர், எ-று.

வித்தினியற்கையேயன்றி மரத்திற்கு நிலத்தினியற்கை யில்லாததுபோல மறுமைப்பயனடைய அவரவர் செய்கையே காரணமாவதன்றித் திசையினு லொன்றுமில்லை யென்பதாம். வடநாட்டார்க்கே யன்றித் தென்னுட்டாருக்கு நற்கதி யில்லையென யாரோ அக்காலத்திற் சொன்னதைக்குறித்து இப்பாட்டு பாடப்பட்டது போலும்.

தான் என்பது ஏகாரத்தைப்போலே பிரிநிலையில் வந்தது; தன் + ஆற்றான் எனப் பிரித்து தான் நடக்கும் வழியால் என்று பொருள் கொள்வதும் பொருந்தும். கொன் - பயனின்மை, அதை யாள்பவர் கொன்னாளர். (ஙு)

வேம்பி னிலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம் ஆங்கே

3. Let the seed *nux vomica* be sown in the best of soils, it will never produce a cocoanut tree. Even the southerns [those who live in Yama's regions] have by their exertions attained heaven while many of the northerns vainly spend their time without the necessary exertion for the next world. So the acquisition of a happy next world depends upon one's own virtuous conduct.

4. Though the fruit of the plantain be ripened under cover of the (bitter) leaves of the margosa, it will not at

Digitized by Google

இனந்தீ தெனினு மியல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்க மரிது.

(இ-ள்.) வேம்பின் இலையுள் கனியினும் - வேப்பிலைமேலே பழுத்தாலும், வாழை - வாழைப்பழமானது, தன் தீம் சுவை யாதும் - தன்னுடைய மதுரமான உருசி சிறிதும், திரியாது - மாறாது; ஆங்கே - அப்படியே, இனம் தீது எனினும் - சேர்ந்த கூட்டம் தீயதானாலும், இயல்பு உடையார் கேண்மை - நல்ல சுபாவமுடையவர்களுடைய நட்பு (திரியாது), மனம் தீது ஆம் பக்கம் - (அவருக்கு) மனது தீமையாகும் பக்ஷம், அரிது - இல்லை, எ-று.

சுபாவத்தில் யோக்கியருக்கு அயோக்கிய சகவாசம் செய்ய வேண்டி வந்தபோதும், மனதில் கொடுமையின்றி அன்பு பாராட்டுவது விவேகத்தின் பயனென்றபடி.

வாழையின் பயனிலையாகிய திரியாது என்பதில் சுவை என்னும் எழுவாய் பகுதிப்பொருளில் முடிந்தது [பொது - சூ - உசு] ன் உரையைக் காண்க. (ச)

கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலாற் றத்தம்
இனத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

(இ-ள்.) கடல் சார்ந்தும் - சமுத்திரத்தை யடுத்தும், இன் நீர் - இனிப்பான நீரானது, பிறக்கும் - உண்டாகும்; மலை சார்ந்தும் - மலையை அடுத்தும், உப்பு ஈண்டு உவரி - உப்பு நிறைந்த உவர்நீர், பிறத்தலால் - உண்டாவதனால், எறி கடல் தண் சேர்ப்ப - அலைமோதாநின்ற சமுத்திரத்தின் குளிர்ச்சியான கரையுடையவனே!, மக்கள் என்பார் - மனிதரென்று சொல்லப்படுகிறவர், தத்தம் இனத்து அனையர் அல்லர் - தங்கள் தங்களுடைய இனத்தை ஒத்தவரல்லர்; (மற்றென்னெனின்), மனத்து அனையர் - தம்தம் மனத்தை ஒத்தவர், எ-று.

உவர்க்கடலருகே நன்னீரும், நல்லருவிபாயு மலையருகே யுவர்நீரும் பிறப்பதனால் அவரவ ரியற்கையே பிரதானமன்றிச் செயற்கை

---

all lose its sweetness. Thus, although those who are naturally good associate with the wicked, their minds will never be corrupted.

5. O lord of the shores of the billowy ocean, sweet water is found on the brink of the sea-shore, and salt water on the sides of mountains. It is therefore truly said that wise men will not imitate their bad companions but will retain their natural goodness of mind.

Digitized by Google

பிரதான மன்றென முற்பாட்டிற்கூறியதே இங்குங்கூறி உறுதிப்படுத்தப்பட்டது. நல்லினஞ்சேர்தலிலே தீயாரைச்சேர்வதனாற் றீமையும் நல்லாரைச்சேர்வதனா னன்மையும் உண்டாமெனக்கூறிற்று. ஈண்டு எப்போதுந் தன்னியல்பு மாறாதிருப்பது விவேகமெனச் சொல்லிற்று; ஆதலின் அவ்வதிகாரத்தோடு இதற்கு மாறுபாடில்லை யென உணர்க.

பராஅரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப
ஓராஅலு மொட்டலுஞ் செய்பவோ நல்ல
மருஉச்செய் தியார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅய்ச் செய்யாமை நன்று.

(இ - ள்.) பரு அரை புன்னை - பருத்த அரையையுடைய புன்னை மரங்கள், படு - சேர்ந்திருக்கின்ற, கடல் தண் சேர்ப்ப - குளிர்ச்சியான கடற்கரையையுடைய அரசனே, தங்கும் மனத்தார் - நிலைநிற்கிற மனமுடையவர்கள், நல்ல மருஉ - நன்மைகள் சேர்ந்திருக்கின்ற, செய்தியார் மாட்டும் - செய்கையையுடைய யாரிடத்திலும், ஓராலும் ஒட்டலும் - நீங்குவதும் சேர்வதும், செய்பவோ - செய்வார்களா, (இப்படிச் செய்வதினும்) விராய் செய்யாமை - கலந்து சிநேகஞ் செய்யாமை, நன்று—.

யோக்கியரோடு சிலகாலஞ் சேர்ந்திருப்பதும் சிலகாலம் நீங்கியிருப்பதும் விவேகச்செய்கை யன்று; அதினும் அவர்களைச் சேராமலிருப்பதே நலமென்றபடி.

மரங்களுக்கு அடியிலிருந்து கிளைபிரியுமளவுமுள்ள கட்டையை அரையென்பார்கள். பரு அரை—பராரை என்பதும், ஒருவல்—ஓரால் என்பதும் மருஉ வழக்கென அறிக. மருவு என்பது மருஉ எனவும், விரவி என்பது விராய் எனவும் செய்யுணோக்கத்தால் விகாரப்பட்டன; அல்லது விரவு என்னு முதனிலை விரா என்றாகி, யகர விகுதிபெற்றதெனவுமாம். (௬)

உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம் - புணரின்
தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய்.

---

6. O lord of the cool shores of the ocean where the rough stemmed *Punnai* trees grow, will the steady minded [i. e. wise] men first contract and then renounce the friendship of those who are good? It is better that such friendship is never contracted.

7. To be united in friendship with the wise who understand our dispositions is productive of happiness; and affliction will be avoided by renouncing the friendship of fools who are not capable of knowing those dispositions.

Digitized by Google

(இ-ள்.) உணர - (நம்முடைய குணங்களை) அறிந்துகொள்ள, உணரும் - அறிந்திருக்கின்ற, உணர்வு உடையாரை - விவேகமுள்ளவர்களை, புணர - சேர, இன்பம் புணரும் - சந்தோஷமுண்டாகும்; தெரிய - அறிந்துகொள்ள, தெரியும் தெரிவு இலாதாரை - தெளிவான புத்தியில்லாதவர்களை, புணரின் - சேர்ந்தால், பிரிய - (அவரை) விட்டு நீங்க, நோய் பிரியும் - துன்பம் நீங்கும், எ-று. ஆம் - இரண்டும் அசை.

நம்முடைய சிநேககுணங்களை அறிந்துகொள்ளும்படியான விவேகிகளைச் சிநேகிப்பதில் இன்பமும் அத்தன்மையில்லாதவரைச் சிநேகிப்பதில் துன்பமும் உண்டாமென்பது கருத்து.

தெரியும் என்பதை தெரிவோடு கூட்டுக. (எ)

நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானு நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்.

(இ-ள்.) நல் நிலைக்கண் தன்னை நிறுப்பானும் - நல்ல நிலையிலே தன்னை வைப்பவனும், தன்னை—, நிலை கலக்கி - (நல்ல) நிலையினின்றுங் கலங்கச்செய்து, கீழ் இடுவானும் - தாழ்ந்தநிலையிலே சேர்க்கிறவனும், நிலையினும் - (இருக்கின்ற) நிலையைக்காட்டிலும், மேல் மேல் உயர்த்து நிறுப்பானும் - மிகவுமேலான நிலையிலே தன்னை உயர்த்தி வைப்பவனும், தன்னை—, தலை ஆக செய்வானும் - முக்கியமானவனுயாக்குகின்றவனும், தான் - அவனே ஆவான், எ-று.

ஒருவனுக்கு உயர்வு தாழ்வு முதலியவை அவனுடைய அறிவினாலேயே உண்டாகு மென்பது கருத்து.

நிறுப்பான் முதலிய நான்கும் - எழுவாய், தான் - பயனிலை. (அ)

கரும வரிசையாற் கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாருஞ் சேறல் - அருமரபின்
ஓத மரற்று மொலிகடற் றண்சேர்ப்ப
பேதைமை யன்ற தறிவு.

---

8. To establish oneself in a good position, to debase himself by spoiling that position, to exalt himself to a much higher condition, and to raise himself to a chief and prominent place in life are all done by one's own exertions.

9. O lord of the cool shores resounding with the ocean waves! For the great to go after the ignorant in the way of business is not folly but wisdom.

Digitized by Google

(இ-ள்.) அரு மரபின் - அருமையான கிரமத்தையுடைய, ஓதம்- அலைகள், அரற்றும் - சப்திக்கின்ற, ஒலி கடல் தண் சேர்ப்ப—, கரும வரிசையால் - காரியத்தின் முறைமையால், கல்லாதார் பின்னும் - மூடர்பின்னே, பெருமை உடையாரும் - (கல்வியறிவாகிய) பெருமை யுடையவர்களும், சேறல் - செல்லுதல், பேதைமை அன்று- புத்தியில்லாமை அன்று ; அது அறிவு - அது விவேகமேயாம், எ-று.

நாலாவது ஐந்தாவது பாடல்களில் கூறியபடி யோக்கியருக்கு அயோக்கியரோடு சேர்வதே புத்திக்குறைவல்லவோ என்றால் அல்ல, காரியவசத்தால் சேர்வது புத்திதான் என்றார்.

அலைகளுக்கு அருமையான கிரமமாவது மற்றொன்றுக்கு இல்லாமல் ஓரேவிதமா யோங்கி யெழுந்து மடியுந்தன்மை எனக்கொள்க. ()

கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா - ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே லஃதென்ப
பட்டினம் பெற்ற கலம்.

(இ - ள்.) கருமமும் உள் படா - (அறம்பொருள்களைச் சேர்ந்த) காரியங்களுக்கும் உட்பட்டு, [அவற்றைச் செய்தென்றபடி], போகமும் துவ்வா - போகத்தையும் அனுபவித்து, தருமமும் - (கொடையாகிய) தருமத்தையும், தக்கார்க்கே செய்யா - தகுந்தவர்களுக்கே செய்து (நிற்கும்படி), ஒரு நிலையே - ஒரு பிறப்பிலேயே, மூன்றும் - இம்மூன்று காரியங்களும், முட்டு இன்றி - தடையில்லாமல், முடியுமேல் - (ஒருவனுக்கு) நிறைவேறுமானால், அஃது - அந்நிலையானது, பட்டினம் பெற்ற கலம் - (தானிருக்கும்) கடற்கரையூரைச் சேர்ந்த கப்பல், என்ப - என்றுசொல்வர் (பெரியோர்), எ-று.

ஒருகப்பல் பலதேசஞ் சென்று வியாபாரமுடித்துத் தன்னிலை சேர்ந்ததுபோலே ஒருவன் பல ஜன்மங்களெடுத்துக் கடைசியில் ஒரு ஜன்மத்தில் அறம் பொருள் தேடி போகமனுபவித்துச் சற்பாத்திரத்தில் தானஞ்செய்து கடைத்தேறுதலால் அந்தச் சனனம் பயன்பட்டுத் தேறினது என்கிறது கருத்து.

உள்படா முதலிய செய்யாவென்னும் வாய்பாட் டெச்சங்கள் நிற்கும்படி என்கிற வருவித்த வினையோடு முடிந்தன. (க0)

---

10. If all these things,—doing what one ought to do, enjoying the pleasures of this world, and performing acts of charity to the worthy—can be successfully practised by one in a single birth, it is just like a merchant - ship safely arriving at its final destination.

Digitized by Google

## உசுசு-ம். அதிகாரம்.—Chapter XXVI.

### அறிவின்மை.—Want of wisdom.

அதாவது முன்கூறிய பகுத்தறிவில்லாமை.

நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம் - எண்ணுங்கால்
பெண்ணவா யாணிழந்த பேடி யணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

(இ - ள்.) நுண் உணர்வு இன்மை - நுட்பமான அறிவில்லாமையானது, வறுமை - தரித்திரமாம்; அஃது உடைமை - அப்படிப்பட்ட அறிவை யுடையவனுதல், பண்ணப் பணைத்த - மிகவும் வளர்ந்த, பெரு செல்வம் - பெரிய சம்பத்து ஆம்; எண்ணுங்கால் - யோசித்தால், பெண் அவாய் - பெண்தன்மையை விரும்பி, ஆண் இழந்த - ஆண்தன்மை இழந்த, பேடி - அலியானவள், கண் அவா தக்க - கண்கள் விரும்பும்படியான, கலம் - ஆபரணங்களை, அணியாளோ - தரிக்கமாட்டாளோ, [தரிப்பாள்], எ-று.

மனிதருக்குச் செல்வமென்பதும் தரித்திரமென்பதும் அறிவும் அறிவில்லாமையுமே யன்றிப் பொருளும் பொருளின்மையு மன்று. பேடியும் நல்ல அணிகளை அணிவாளே, அதனால் வரும்சிறப்பு சிறப்பன்று என்பது கருத்து.

விசேஷமாய் ஆபரணங்களைத் தரித்தல் பெண்களுக்கே யியல்பாதலால் ஆணிலக்கணங் குறைந்து பெண்ணிலக்கண மிகுந்த பேடி என்முர். பண்ணப்பணைத்த என்பது கன்னங்கறுத்த சின்னஞ்சிறுத்த பன்னப்பருத்த என்பவைபோல் மிகுதிப்பொருள் பற்றிவந்த பணை என்பதின் அடுக்கெனக்கொள்க. ஐ அகரமானது விகாரம், பண்ண - செய்ய, (பணைக்கும்படி செய்ய) பணைத்த எனப்பொருள் கூறின் சிறப்பில்லையாம். வடமொழிகள் இங்ஙனம் அடுக்கி விகாரப்பட்டு வருவன பலவுள் இதனை "க்ரியா ஸமஹிகாரம்" என்பர். அவாவு தற்குத்தக்க என்பது அவாத்தக்க என்முயிற்று. (க)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல் - தொல்சிறப்பின்

---

1. Want of acute understanding is poverty while the possession of it is a great wealth much increased by accumilation. Will not even the hermorphodite who is destitute of manliness adorn herself with jewels which captivate the sight?

2. Why affliction and loss of dignity befall those who have acquired the benefits of knowledge derived from books

Digitized by Google

நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

(இ-ள்.) பல் - அநேகமான, ஆன்ற - நிறைந்த, கேள்வி - கேள்விகளின், பயன் உணர்வார் - பிரயோசனத்தை அறிந்தவர்கள், பாடு அழிந்து - பெருமைகெட்டு, அல்லல் உழப்பது - துன்பங்களால் வருந்துவதை, அறிதிரேல் - அறியவிரும்புவீர்களே யானால், (சொல்லுகிறேன்), தொல் சிறப்பின் - பழமையான சிறப்பையுடைய, நாவின் கிழத்தி - சரசுவதிதேவி, உறைதலால் - வாசஞ்செய்வதனால், பூவின் கிழத்தி - திருமகள், புலந்து - பிணங்கி, சேராளே - (அவரிடம்) சேரமாட்டாளே. எ-று.

அறிவைப் பெருமைப்படுத்துகிறீரோ கற்றறிந்த புலவர் வெகு சங்கடப்படுவதேன் என்று ஒருவர் வினவினதாகப் பாவித்து, பெண்களியல்பு தெரியாதா ஒருத்தி சேர்ந்தவிடத்து மற்றொருத்தி சேர்வதில்லையே ஆதலின் சரசுவதி சேர்ந்தவிடத்தில் இலக்குமி சேர்வதில்லையெனச் சாதுரியமாவுத்தரஞ் சொல்லினர். உண்மையோ கல்விச்சுவை தோய்ந்தவர்க்குச் செல்வத்தில் மிகுந்த விருப்பஞ் செல்லாமையே காரணமென்க. கிழமை - உரிமை, அதனை யுடையாள் கிழத்தி. அறிவுடைமையிற் குற்றங் கூறுதல் தவறு என்றபடி. (௨)

கல்லென்று தந்தை கழற வதனையோர்
சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன் - மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் னீட்ட விளியா
வழுக்கோலைக் கொண்டு விடும்.

(இ-ள்.) தந்தை - பிதா, கல் என்று கழற - கல்வியைக் கற்றுக்கொள் என்றுசொல்ல, அதனை ஓர் சொல் என்று கொள்ளாது - அதை ஒரு சொல்லாக ஏற்றுக்கொள்ளாமல், இகழ்ந்தவன் - தள்ளிவிட்டவன், மெல்ல - மெதுவாக, எழுத்து ஓலை - எழுத்தைக்கொண்டிருக்கிற ஓலையை, பல்லார்முன் - பலருக்கு எதிரில், நீட்ட - (படி என்று) கொடுக்க, விளியா - செத்தாற்போலாகி, வழுக்கு ஓலை - அங்கிருந்து தப்பிப்போய்விடும்படியான தொனியை, கொண்டுவிடும் - கொண்டு விடுவான், எ-று.

---

is this. When Sarasvathi, the goddess of knowledge of old repute, takes abode with them, Lakshmi, being coy, will flee away from them.

3. He that receives not but despises as mere talk the injunction of his father to study, will, on a letter being gently held out to him in the presence of many to be read, turn deadly pale and assume a tone expressive of his desire to slip away.

Digitized by Google

விளியா - கோபித்து, வழு-(அடித்தலாகிய) தப்பிதத்தைச் செய் யத்தக்க, கோலை - தடிக்கொம்பை, கொண்டுவிடும், எனவுமுரைப் பர். (௩)

கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறி வாள ரிடைப்புக்கு - மெல்ல
இருப்பினு நாயிருந் தற்றே யிராஅ
துரைப்பினு நாய்குரைத் தற்று.

(இ - ள்.) கல்லாது நீண்ட ஒருவன் - கல்விகற்காமல் வளர்ந்த ஒருவன், உலகத்து—, நல் அறிவாளரிடை - நல்ல விவேகமுள்ளவர் நடுவில், புக்கு - பிரவேசித்து, மெல்ல இருப்பினும் - சும்மா இருந்தா லும், நாய் இருந்தது அற்றே - நாய் இருந்தாற் போலாம்; இராது உரைப்பினும் - சும்மாயிராமற் பேசினாலும், நாய்—, குரைத்தது அற்று - குரைத்தாற்போலும், எ-று.

புக்கு—புகு என்பதில் ககரம் இரட்டிக் காலங்காட்டி உகரவிகுதி பெற்றது. (௪)

புல்லாப்புன் கோட்டிப் புலவ ரிடைப்புக்குக்
கல்லாத சொல்லுங் கடையெல்லாங் கற்ற
கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார் பொருண்மேற்
படாஅ விடுபாக் கறிந்து.

(இ-ள்.) புல்லா - (கோட்டி இலக்கணம்)சேராத, புல் கோட்டி— அற்பக்கூட்டத்தையுடைய, புலவரிடை - (புன்) புலவர் நடுவில், புக்கு— பிரவேசித்து, கடை எல்லாம் - அற்பரெல்லாம், கல்லாத - தாம் கல் லாத விஷயங்களையும், சொல்லும் - சொல்வார்கள்; சான்றவர் - பெ ரியோர், கற்ற - (தாம்)கற்றவிஷயங்களை, கடாயினும் - (பிறர்)வினவி னாலும், பொருள் மேல் - (வினவுவோர் புத்தி தாம் சொல்லும்) பொ ருளின்மேல், படா - செல்லாமல், விடுபாக்கு அறிந்து - விடுபட்டுப் போவதைத் தெரிந்து, சொல்லார் - சொல்லமாட்டார்கள், எ-று.

---

4. If one who has grown up in ignorance enter the assembly of the men of great learning and remain silent, it will be like the sitting down of a dog; and if instead of remaining quiet, he says anything, it is like the barking of it.

5. The vulgar will repair to an insignificant assembly of men of little learning and speak of even what they know nothing of; but the great though asked to speak about what they have studied, will not display it, as they know that it will only be thrown away unheeded.

Digitized by Google

அற்பர் அற்பகோட்டியிற் சென்று தாம் கல்லாதவற்றையும் சும்மாச்சொல்வர், பெரியோர்களோ வினவினும் தாம் கற்றறிந்தவைகளையும் சொல்வதில்லை, ஏனெனில் கேட்போர் புத்தி தாம் சொல்வதின்மேற் படாமற்போ மென்பதை யறிந்து என்றபடி.

கடை என்பது பொருளில் உயர்திணையானாலும் சொல்லில் பால்பகா அஃறிணையானதால் எல்லாமென்பதும் சொல்லும் என்பதும் அதனொடு பொருந்தின என அறிக. கடாயினும் என்பதில் யகரம் வந்தது போலிவழக்கு, கோயில் என்பதுபோல; [உயிர் புணர், கஅ-வது] சூத்திரத்தில் நெறி என்றமிகையினால் வந்ததெனவுங் கொள்ளலாம். விடுபாக்கு—தொழிற்பெயர், பாக்கு - விகுதி. (ரு)

கற்றறிந்த நாவினர் சொல்லார்தஞ் சோர்வஞ்சி
மற்றைய ராவார் பகர்வர் பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி.

(இ-ள்.) கற்று அறிந்த - நூல்களைப்படித்து அவற்றின் உட்பொருள் அறிந்த, நாவினர் - புலவர், தம் சோர்வு அஞ்சி - தமக்குப் பிழை நேரிடுவதற்குப் பயப்பட்டு, சொல்லார் - (விஷயங்களைக் கண்டபடி எடுத்து) சொல்லார்; மற்றையர் ஆவார் - கற்றறியாதவர்கள், பகர்வர் - (தோன்றியபடி) சொல்வர்; பனையின்மேல் - பனைமரத்தில், வற்றிய ஓலை - உலர்ந்த ஓலை, கலகலக்கும் - கலகல என்று சத்திக்கும்; எஞ்ஞான்றும் - எப்போதும், பச்சோலைக்கு - பச்சையாயிருக்கிற ஓலைக்கு, ஒலி இல்லை - ஓசை இல்லை, எ-று.

படித்தவர் சொல்வதில் பிழைநேரிடுமோ என்று பயந்து ஆலோசித்துச் சொல்வார்கள். கல்லாதாரோ வாய்க்குவந்தபடி சொல்வார்கள். இவர்களுக்கு உலர்ந்தவோலையும் பச்சையோலையும் உபமானம்.

பசுமை பச்சு என்றாயிற்று. நாவினர்—புலவர்க்குக் காரணப் பெயர். (சு)

பன்றிக்கூழ்ப் பத்தரிற் றேமா வடித்தற்றால்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்

---

6. The learned speak not at randam fearing their own failure but the illiterate will indulge in such speaking. The dry leaves on the palm produce a rattling noise while the green leaves have no noise whatever.

7. Preaching the ways of virtue to those who comprehend not what is good is like pressing the sweet mango juice into

Digitized by Google

குன்றின்மேற் கொட்டுந் தறிபோற் றலைதகர்ந்து
சென்றிசையா வாகுஞ் செவிக்கு.

(இ-ள்.) நன்று அறியா மாந்தர்க்கு - நன்மை தெரிந்துகொள்ள மாட்டாத மனிதருக்கு, அறத்து ஆறு - தருமத்தின் வழியானது, உரைக்குங்கால் - சொல்லுமளவில், பன்றி கூழ் பத்தரில் - பன்றிக்குக் கூழ்வார்க்குந் தொட்டியில், தேமா - மதுரமான மாங்கனியை, வடித்தற்று - பிழிந்தாற்போலும்; குன்றின்மேல் கொட்டும் தறி போல் - மலைமேல் அடிக்கிற கட்டுத்தறிபோல், தலை தகர்ந்து - (அத்தருமவழிகள்) தலைசிதறி, செவிக்கு - காதுக்கு, சென்று இசையா ஆகும் - போய்க் கேளாதவைகளாய்விடும், எ-று.

பன்றிக்குக் கூழுருசி தெரியுமல்லது தேமாவி னுருசி தெரியாது அதுபோல் கீழ்மக்களுக்குத் தருமவுபதேசம் இனியாது ஆதலின் அவ்வுபதேசம் மலைமேல் அடிக்குந்தறி உள்ளிறங்காமல் தலைபிளந்துபோவதுபோல் சிதறிப்போய் காதிலேறுது; அதனால் அது வீண் என்றபடி. (எ)

பாலாற் கழீஇப் பலநா ளுணக்கினும்
வாலிதாம் பக்க மிருந்தைக் கிருந்தன்று
கோலாற் கடாஅய்க் குறினும் புகலொல்லா
நோலா வுடம்பிற் கறிவு.

(இ-ள்.) பாலால் கழீஇ - பாலினாலே கழுவி, பல நாள் உணக்கினும் - அநேககாலம் உலர்த்திவைத்தாலும், இருந்தைக்கு - கரிக்கு, வாலிது ஆம் பக்கம் - வெண்மையான பக்கமானது, இருந்தன்று - இருந்ததில்லை; கோலால் கடாய் - கோல்கொண்டு அடித்து, கூறினும் - சொன்னாலும், நோலா உடம்பிற்கு - புண்ணியஞ் செய்யாத உடம்புக்கு, [மனிதனுக்கு என்றபடி], அறிவு - ஞானமானது, புகல் ஒல்லா - புகமாட்டாது, எ-று.

கரியைப் பாலால் கழுவினாலும் வெண்மை யுண்டாகாததுபோல் ஜன்மாந்தர புண்ணியமில்லாத மனிதனுக்கு எத்தனைசொன்னாலும் அறிவு வருவதில்லை என்பதாம்.

கடாய்—கடா - பகுதி, யகரம் - வினையெச்சவிகுதி. கூறினும் என்பது குறினும் எனக் குறிகிற்று. (அ)

---

a bowl of hog-wash. It will not enter into their ears just like the post driven against a rock has its point broken.

8. Though they wash it with milk and dry it many a day charcoal has not the property of becoming white. In like manner knowledge will not enter into those devoid of former good deeds, though taught with the beat of the stick.

Digitized by Google

பொழிந்தினிது நாறினும் பூமிசைதல் செல்லா
திழிந்தவை காமுறூஉ மீப்போல் - இழிந்தவை
தாங்கலந்த நெஞ்சினார்க் கென்னாகுந் தக்கார்வாய்த்
தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு.

(இ - ள்.) பொழிந்து இனிது நாறினும் - (தேனைப்) பொழிந்து இனிப்பாகப் (பரிமளம்) வீசினாலும், பூ மிசைதல் செல்லாது - பூத் தேனை உண்ணுதற்குப் போகாமல், இழிந்தவை காமுறும் - ஈனமான வஸ்துக்களை விரும்புகின்ற, ஈ போல் - ஈயைப்போலே, இழிந்தவை கலந்த நெஞ்சினார்க்கு - இழிவான விஷயங்கள் பொருந்தின மன துள்ளவர்க்கு, தக்கார் வாய் - யோக்கியருடைய வாயிலுண்டாகிற, தேன் கலந்த - மதுரஞ் சேர்ந்த, தேற்ற சொல் - தெளிவான சொற்க ளுடைய, தேர்வு - உண்மை, என் ஆகும் - என்னபயனைத்தரும், எ-று. தாம் - அசை.

இனிது—குறிப்பு முற்று, இங்கே வினையுரியா நின்றது. ஆக என் னும் வருவிக்குஞ் சொல்லுக்கு எழுவாயெனக் கொள்ளவுமாம். நாறி னும் என்ற வினையின் தொடர்ச்சியால் இனிய கந்தத்தை எனச் செயப் படு பொருளாக்கினும் அமையும். (௯)

கற்றா ருரைக்குங் கசடறு நுண்கேள்வி
பற்றாது தன்னெஞ்சு தைத்தலான் - மற்றுமோர்
தன்போ லொருவன் முகநோக்கித் தானுமோர்
புன்கோட்டி கொள்ளுமாங் கீழ்.

(இ-ள்.) கற்றார் உரைக்கும் - கற்றவர் சொல்லுகின்ற, கசடு அறு நுண் கேள்வி - குற்றமற்ற நுட்பமான பிரசங்கத்தை, தன் நெஞ்சு - தன் மனமானது, பற்றாது - பிடியாமல், உதைத்தலால் - தள்ளிப்போடுவதினால், மற்றும் - பின்னும், தன் போல் ஒருவன் - தன்னைப்போன்ற ஒருவனுடைய, முகம் நோக்கி - முகத்தைப்பார்த்து, கீழ் - கீழ் மகன், தானும்—, ஓர் புன் கோட்டி கொள்ளும் - ஒரு அற்ப பிரசங்கத்தைச்செய்வான், எ-று. ஓர், ஆம்,—அசைகள்.

---

9. Like the fly which battens on filth instead of feeding on the sweet smelling honey of flowers, to those who are inherently base, what pleasure is there in words that come from the mouth of the worthy, clean and sweet as honey.

10. As the acute and faultless instruction uttered by the [learned] has no impression on the minds of the mean, they will look on the face of persons like themselves and hold conversation with them.

Digitized by Google

கீழ்மக்கள் கற்றோர்சொல்வது தன்மனதுக்குப் பிடியாதபோது அதனை அலக்ஷியஞ்செய்து தான் மிகத்தெரிந்தவன்போல் மற்றொரு மூடனைநோக்கிப் பிரசங்கிப்பான் என்பது கருத்து.

இவ்வளவால் இத்தன்மையானது அறிவின்மை யென அதன் சொரூபகுணங்களை யறிவித்து அங்ஙனமிராது விவேகத்தோ டிருக்க வேண்டு மென்றதாயிற்று. போல்—இங்கு வினைத்தொகை.

## உஎ-ம். அதிகாரம்.—Chapter XXVII.

### நன்றியில்செல்வம்.—Unprofitable Wealth.

அதாவது நன்மையில்லாத சம்பத்து; பயனில்லாமலும் கேடு தருவதுமான செல்வ மென்றபடி.

அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வங்
கருதுங் கடப்பாட்ட தன்று.

(இ - ள்.) அருகலது ஆகி - கிட்டினதாகி, பல பழுத்தக் கண்ணும் - அநேகமாய்ப் பழுத்திருந்தாலும், பொரி தாள் விளவினை - பொரிந்த அரையையுடைய விளாமரத்தை, வாவல் - வௌவால்கள், குறுகா - சேரமாட்டா; பெரிது அணியராயினும் - மிகவும் சமீபித்த வரா யிருந்தாலும், பீடு இலார் செல்வம் - பெருமையில்லாதவர்களுடைய செல்வமானது, கருதும் கடப்பாட்டது அன்று - நினைக்கும் படியான முறைமையுள்ள தன்று, எ-று.

விளாமரத்திற்குப் பெருமையில்லை யென்பதன்று; வௌவாலுக்கு அதனு லுபயோகமில்லை யென்பது கருத்து.

பாடு என்பது சாதாரணமான ஜனங்களுக்கு உபயோகமா யிருத்தலெனக் கொள்க. அருகலது — குறிப்பு வினையாலணையும்பெயர். பழுத்தக்கண்—வினையெச்சம். (க)

அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினும்
கள்ளிமேற் கைநீட்டார் சூடும்பூ வன்மையால்

1. The bat will not go to the rough-stemmed wood-apple tree, though near and fruitful. So the riches of those who have no greatness of soul, though they be very near to one, are not fit to be desired by him.

2. Though there be handfuls of small buds on the milk-hedge, men will not put out their hands to gather them for its

Digitized by Google

செல்வம் பெரிதுடைய ராயினுங் கீழ்களை
நள்ளா ரறிவுடை யார்.

(இ-ள்.) அள்ளிகொள்வ அன்ன - அள்ளி எடுக்கலாம் படியான, குறு முகிழ ஆயினும் - சிறிய முகிழ்களை உடைய்வையானாலும், சூடும் பூ அன்மையால் - முடிக்கத்தக்க பூ அல்லாமையால், கள்ளிமேல்கை நீட்டார் - கள்ளிமரத்தின்மேல் கைபோட மாட்டார்கள் (மனிதர்); பெரிது செல்வம் உடையராயினும் - மிகுந்த செல்வமுள்ளவர்களானாலும், கீழ்களை - கீழ்மக்களை, நள்ளார் - (அறிவுடையார்) விரும்ப மாட்டார்கள், எ-று.

அதிக அழகான பொருள்மேல் அள்ளி எடுத்துக் கொள்ளும்படியான ஆசையுண்டா யிருக்கும் ஆதலால் அள்ளிக்கொள் வன்ன என்றது. அள்ளிக்கொள்வ என்பதில் ஈற்றகரம் தொகுத்தல். அன்ன—அத்தன்மையுடையன. (உ)

மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
வற்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
செல்வம் பெரிதுடைய ராயினுஞ் சேட்சென்று
நல்குவார் கட்டே நசை.

(இ-ள்.) மல்கு திரைய - மிகுந்த அலைகளையுடைய, கடல் கோடு இருப்பினும் - சமுத்திரக்கரையில் இருந்தாலும், வல் ஊற்று - வலிமையான ஊறுதலையுடைத்தான, உவர் இல் கிணற்றின்கண் - உப்பில்லாத கிணற்றிலே, சென்று உண்பர் - போய் (நீரை) உண்பார்கள்; பெரிது செல்வம் உடையராயினும் - மிகுந்த செல்வமுள்ளவர்களானாலும், (ஈயாதாரைவிட்டு) சேண் சென்று - தூரத்தில்போய், நல்குவார் கட்டே - கொடுப்பவரிடத்துள்ளதே, நசை-ஆசை, எ-று.

ஆசை - எழுவாய், நல்குவார்கட்டே - பயனிலை. ஊற்றுக்கு வலிமையாவது சிறிது சிறிதாயூறுவது; உவரில் கிணறு என்பதில், [மெய்புணர் சூ - ௩௦ - விதியால்] லகரம் றகரமாய்த் திரியவில்லை. நல்குவார்கட்டு—குறிப்புமுற்று, நல்குவார்கண் - பகுதி, டு - ஒன்றன் விகுதி, ணகரம் டகரமானது விகாரம். திரைய — குறிப்புப் பெயரெச்சம்.

---

flowers are not fit for wearing. In like manner will the wise not contract friendship with the mean, though they may have immense wealth.

3. Though people live on the shores of the billowy ocean, they repair to a saltless well of spring water and drink therefrom. Though wealthy men be nigh, they will go afar and fix their love upon the liberal.

Digitized by Google

புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே
உணர்வ துடையா ரிருப்ப - உணர்விலா
வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரோ
பட்டுந் துகிலு முடுத்து.

(இ - ள்.) புணர் கடல் சூழ் வையத்து - சேர்ந்த சமுத்திரஞ் சூழ்ந்த பூமியில், புண்ணியம் வேறே - புண்ணியமானது (யோக்கியதை யிருக்குமிடத்தைக் காட்டிலும்) வேறாகவே இருக்கிறது; உணர்வு உடையார் இருப்ப - கல்வி யறிவுள்ளவர்கள் (ஒன்றுமில்லாது) இருக்க, உணர்வு இலா - அறிவில்லாத, வட்டும் வழுதுணையும் போல்வாரும் - பனவட்டையும் வழுதுணங்காயையும் ஒத்த அற்பரும், பட்டும் துகிலும் - பட்டுவஸ்திரத்தையும் வேறு நல்ல வஸ்திரத்தையும், உடுத்து வாழ்வரோ - உடுத்திக்கொண்டு வாழ்ந்திருக்கிறார்களே, எ-று.

வட்டும் வழுதுணையும் எளிதில் கிடைக்கத்தக்க சாதாரணப்பொருள்கள்; இவை போன்ற அற்பர் செல்வராயிருக்க அறிவுள்ளவரோ தரித்திரராயிருப்பர் என்பது கருத்து.

வாழ்வரோ—இந்த ஏகாரம் பிரசித்தத்தைக் காட்டுகிறது. முந்திய ஏகாரம் தேற்றத்தில் வந்தது. ஓ—அதிசய இரக்கச்சொல். உணர்வது—அது - அசை. (ச)

நல்லார் நயவ ரிருப்ப நயமிலாக்
கல்லார்க்கொன் றாகிய காரணம் - தொல்லை
வினைப்பய னல்லது வேனெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்.

(இ - ள்.) வேல் நெடு கண்ணாய் - வேல்போல் நீண்ட கண்களையுடையவளே!, நயவர் நல்லார் - நீதிமான்களான நல்லவர், இருப்ப-(தரித்திரரா)யிருக்க, நயம் இலா கல்லார்க்கு - நீதியில்லாத மூடருக்கு, ஒன்று ஆகிய காரணம் - ஒரு செல்வப்பொருளுண்டாகிய காரணமானது, தொல்லை வினைப்பயன் அல்லது - பழமையான வினையின் பய

4. In the sea-girt earth, the result of the merit of virtuous deeds in a former birth is diverse. While the sensible are suffering from poverty, those who are foolish and ordinary as the palmyra cake and thorny brinjal flourish in silk and gay apparel.

5. O thou who hast long lance-like eyes! While the just and the good suffer from poverty, the unjust and the unlearned are wealthy. On investigation this is due to nothing else but the effect of deeds in a former birth.

Digitized by Google

னே யல்லாமல், நினைப்ப - யோசிக்க, வருவது ஒன்று - தோன்றத் தக்க வேறொன்றும், இல் - இல்லை, எ-று. [நயம் - பெருமையுமாம்.]

முற்பாட்டில் கூறியபடி மூடர் செல்வம்பெற்று வாழ்தற்கு அவருடைய பூர்வ ஜனன புண்ணியமே யல்லது வேறில்லையென நியாய முறுதிப் படுத்தியது. (ரு)

நாறுத் தகட்டேபோ னன்மலர்மேற் பொற்பாவாய்
நீறாய் நிலத்து விளியரோ - வேறாய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து.

(இ - ள்.) நாறு தகடே போல் - பரிமளிக்காத புறவிதழைப் போலே, நல் மலர்மேல் பொன் பாவாய் - நல்ல தாமரைமலரின்மேலிருக்கிற பொன்னின் பதுமைபோன்ற திருமகளே!, நீ—, பொன் போலும் நல் மக்கள் பக்கம் துறந்து - பொன்னைப்போன்ற யோக்கியரான மனிதரிடத்தைவிட்டு, வேறு ஆய - (நன்மக்களில்) வேறாயிருக்கிற, புல் மக்கள் பக்கம் - கீழான ஜனங்களிடம், புகுவாய் - சேருகிறாய், (ஆதலால்) நிலத்து - பூமியில், நீறு ஆய் விளி - சாம்பலாம்படி சாகக்கடவை, எ-று.

சுகந்தமில்லாமலே பூவிலிருக்கும் புறவிதழ்போலே நீயும் சற்குணமின்றிப் பூவிலிருக்கிறாய் என இகழ்ந்தபடி. இதுவே பொற்பாவாய் என்பதனால் திடப்படுத்தப்பட்டது. நாறு தகடு - பரிமளியாத பொற்றகடு என்னவுமாம். அரோ - அசை. (சு)

நயவார்க ணல்குரவு நாணின்று கொல்லோ
பயவார்கட் செல்வம் பரம்பப் - பயின்கொல்
வியவாய்காண் வேற்கண்ணா யிவ்விரண்டு மாங்கே
நயவாது நிற்கு நிலை.

(இ-ள்.) நயவார்கண் நல்குரவு - நயமுடையவரிடத்துள்ள தரித்திரமானது, நாண் இன்றுகொல் - வெட்கமில்லாததோ, பயவார்கண் செல்வம் - உபயோகியாதவரிடத்துள்ள சம்பத்தானது, பரம்ப - பரவுதற்கு (ஆன), பயின்கொல் - பிசினோ, வேல் கண்ணாய் - வேல்

6. O thou who like a golden image livest vainly on a beautiful flower like its scentless outer leaves! As thou desertest the good who are as worthy as gold and joinest those who are mean, may thou die and be reduced to ashes.

7. O thou possessed of lance-like eyes! Is not the poverty of the good a shameful thing, and the wealth of the miser a spreading sticky gum? The undesirable state of these two things is indeed astonishing.

Digitized by Google

போன்ற கண்ணுள்ளவளே!, இவ்விரண்டும் - (யோக்கியரிடத்து வறுமையும் அயோக்கியரிடத்துச் செல்வமுமாகிய) இரண்டும், ஆங்கே - அவ்வவ்விடத்திலே, நயவாது நிற்கும் நிலை - மேன்மைப்படாமல் நிற்கின்ற நிலையை, வியவாய் காண் - ஆச்சரியப்படுப்பார், எ-று.

பரம்புதலாவது நாற்புறமு மொட்டும்படி வியாபித்தல். நீங்காது நிற்பதுபற்றி பயின்கொல் என்னப்பட்டது. 'பறம்ப' எனப் பாடங்கொண்டு உறைகாரர் எனப் பொருள் கொண்டனர் சிலர்; அதற்குச் சந்தி யிசையாதென அறிக. (எ)

வலவைக ளல்லாதார் காலாறு சென்று
கலவைக ளுண்டு கழிப்பர் - வலவைகள்
காலாறுஞ் செல்லார் கருனையாற் றுய்ப்பவே
மேலாறு பாய விருந்து.

(இ - ள்.) வலவைகள் அல்லாதார் - பேய்த்தனமுடைய ராகாதவர், [யோக்கியர்], கால் ஆறு சென்று - தூரவழிபோய், கலவைகள் உண்டு - பலகலப்பான உணவைப் புசித்து, கழிப்பர் - காலங் கழிப்பார்கள்; வலவைகள் - பேய்த்தனமுள்ளவர்களோ, கால் ஆறுஞ் செல்லார் - தூரதேசமும் போகாதவர்களாய், மேல் ஆறு பாய - தம் மேல் பாலாறு நெய்யாறு பாயும்படி, இருந்து - தம்மிடத்திலேயே இருந்து, கருனையால் - பொரிக்கறியோடு கூட, துய்ப்ப - (உணவுகளை) உண்பார்கள், எ-று.

இவ்வாறு இப்பாட்டிலு முற்பாட்டுகளிலும் தக்கவர் வருந்த அவர்க்குப் பயன்படாமல் தகாதவரிடத் திருக்கின்ற செல்வம் நன்றியில் செல்வமென்று கூறியதாயிற்று. வலவைகள் இடாகினி காளிகளுக்கு ஊழியஞ் செய்பவராதலால் பேயெனக்கொண்டு அத்திறமுடையாரொன உரைக்கப்பட்டது அத்திறமாவது இழிதொழில் செய்தலும் பிறரை வருத்துதலுமாம். கால் ஆறு - காலாற் செல்லத்தக்க ஆறு. கலவையாவது - பலரிடம்பெற்ற சோறுதலின் ஒருவகைப்படாதிருப்பது. (அ)

பொன்னிறச் செந்நெற் பொதியொடு பீள்வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்

---

8. Those who are honest, when distressed, go afar and eat various kinds of mixed food, and spend their days, while those who are wicked without going to any distance, live in plenty eating rich curry and rice.

9. While the ear of the golden paddy is scorched, the clouds with bright lightning pour forth the rain into the sea.

Digitized by Google

வெண்மை யுடையார் விழுச்செல்வ மெய்தியக்கால்
வண்மையு மன்ன தகைத்து.

(இ-ள்.) பொன் நிறம் செம் நெல் - பொன்போன்ற வர்ணமுள்ள நல்லநெற்கள், பொதியொடு - பொதிந்திருக்குங் கதிர்களோடு, பீள் - பயிரின்கருவானது, வாட - வாடிக்கொண்டிருக்க, மின் ஒளிர் வானம் - மின்னல் விளங்காநின்ற மேகமானது, கடலுள்ளும் - சமுத்திரத்திலேயும், கான்று உகுக்கும் - (தண்ணீரை) கக்கி உதிர்க்கும்; வெண்மை உடையார் - அறிவின்மை யுள்ளவர்கள், விழு செல்வம் எய்தியக்கால் - மேன்மையான செல்வத்தைப் பொருந்தினால், வண்மையும்-(அவர்) கொடையும், அன்ன தகைத்து - அப்படிப்பட்ட தன்மையுள்ளது, எ-று.

நல்ல நெற்பயிர் வாடிக்கொண்டிருக்க அங்கே பெய்யாமல் உபயோகமற்ற கடலிலே மேகம் மழை பொழிவதுபோல் புத்தியீனர் செல்வத்தைச் சற்பாத்திரத்தி லுபயோகப்படுத்தாமல் அபாத்திரத்தில் உபயோகப்படுத்துவர் என்பது கருத்து.

கடலுள்ளு மென்பதில் உம்மை இழிவு சிறப்பு; அசையெனக் கொள்ளல் நலம். (௯)

ஓதியு மோதா ருணர்விலா ரோதாதும்
ஓதியனையா ருணர்வுடையார் - தூய்தாக
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரும்
நல்கூர்ந்தா ரீயா ரெனின்.

(இ-ள்.) உணர்வு இலார் - பகுத்தறிவில்லாதவர்கள், ஓதியும் ஓதார் - படித்தும் படியாதவர்களே; உணர்வு உடையார்—, ஓதாதும் - ஓதாமலும், ஓதி அனையர் - படித்தவர்க்குச் சமானமானவர்களாவர்; (அதுபோல்) தூய்து ஆக - சுத்தமாக, [மிகவும்], நல்கூர்ந்தும் - வறுமையுற்றும், இரவாதார் - யாசியாதவர்கள், செல்வர் - சம்பத்துள்ளவராவர்; செல்வரும் - செல்வமுடையோரும், ஈயார் எனின் - (யோக்கியருக்கு) கொடாமற்போனால், நல்கூர்ந்தார் - தரித்திரப்பட்டவர்களே, எ-று.

---

The liberality of the unwise, when possessed of immense riches, will be of a like character.

10. The unwise, though learned, are still unlearned, and the wise, though unlearned, still resemble the learned. In like manner, those who beg not, though utterly poor, are truly rich; and those who give not, even though they be rich, are indeed poor.

Digitized by Google

ஓதி - ஓதுகிறவன், இகர விகுதி கர்த்தாப்பொருளில் வந்தது; கூத்தாடி, கடலோடி என்பவைபோல். தூய்து—தூய்மையை உடையது, குறிப்புமுற்று; ஈண்டு ஆக என்பதோடு ஒன்றி வினையெச்சமாய் "மிக" என்னும் பொருளாய் வினையுரியாயிற்றென அறிக. பிறர் நல்குதலை ஊர்தல் [கொண்டுசெல்லல்]=நல்கூர்தல். நல்குதல் - கொடுத்தல். (௧௦)

## உ௲-வது. அதிகாரம்.—Chapter XXVIII.

### ஈ யா மை.—Illiberality.

அஃதாவது பிறர்க்குக் கொடாமையால் வரு மிழுக்கு.

நட்டார்க்கு நள்ளா தவர்க்கு முளவளவாயால்
அட்டது பாத்துண்ட லட்டுண்டல் - அட்ட
தடைத்திருந் துண்டொழுகு மாவதின் மாக்கட்
கடைக்குமா மாண்டைக் கதவு.

(இ - ள்.) நட்டார்க்கும் - நேசித்தவர்க்கும், நள்ளாதவர்க்கும் - நேசியாதவர்களுக்கும், உள வளவாயால் - தமக்கு உள்ள அளவினால், அட்டது பாத்து உண்டல் - சமைத்ததைப் பகுத்துக் கொடுத்துத் தான் உண்பது, அட்டு உண்டல் - சமைத்துண்பதாம்; அடைத்து இருந்து - (வருகிறவர்க்குக் கதவை) மூடியிருந்து, அட்டது. உண்டு ஒழுகும் - சமைத்ததைத் (தாம்) புசித்து நடக்கிற, ஆவது இல் மாக்களுக்கு - குணமில்லாத மனிதருக்கு, ஆண்டை கதவு - மேலுலகத்தின் கதவானது, அடைக்கும் - மூடப்படும், எ-று. ஆம் - அசை.

[பொது - ௬ - ௪௯] விதியால் அடைக்கும் என்னும் செய்வினை செயப்பாட்டு வினையாக் கொள்ளப்பட்டது. (௧)

எத்துணை யானு மியைந்த வளவினால்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர் - மற்றைப்

---

1. To give a part of their meal to the extent of their ability both to the friendly and unfriendly and then to eat it, is truly eating their meal. To those who shut their gates against the needy and live eating their meals, the doors of heaven will be closed.

2. Those who have to the best of their ability practised even trifling acts of charity will (in another birth) become great; while those who, when they have become wealthy, say

Digitized by Google

பெருஞ்செல்வ மெய்தியக்காற் பின்னறிது மென்பார்
அழிந்தார் பழிகடலத் துள்.

(இ - ள்.) எத்துணை ஆனும் - எவ்வளவாயினும், இயைந்த அளவி ஞல் - தமக்கு இசைந்த பிரமாணத்தால், சிறு அறம் செய்தார் - சிறிய தருமத்தையாகிலும் செய்தவர், தலைப்படுவர் - மேன்மைப்படு வர்; மற்றை - வேருன, பெரு செல்வம் எய்தியக்கால் - மிகுந்தசெல் வம் பொருந்தினபோது, பின் அறிதும் என்பார் - (தருமத்தை) பின்பு பார்த்துக்கொள்வோ மென்கிறவர்கள், கடலத்துள் - கடல்சூழ்ந்த பூமியில், பழி - பழிக்கப்பட்டு, அழிந்தார் - கெட்டுப்போவார், எ-று.

கடலையுடையது—கடலத்து—கடல் - பகுதி, அ - சாரியை, து - விகுதி. பழி என்னு முதனிலை "வரிப்புனைபந்து" என்பதுபோல் வினை யெச்சப் பொருட்டாய் வந்ததெனக் கொள்க; [வினை - சு - நஉ] ன் உரையைக்காண்க. மற்றை என்பதை என்பார் என்பதோடு கூட்டுக. [பொது - நந - சூத்திரத்திஞல்] தெளிவுபற்றி அழிந்தாரென இறந்த காலத்துக் கூறப்பட்டது. (உ)

துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை - வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

(இ-ள்.) துய்த்து கழியான் - அனுபவித்துக் கழியாமல், துறவோ ர்க்கு - (ஆதரிப்பவரால்) துறக்கப்பட்டவர்களுக்கு, ஒன்று ஈகலான் - ஒருபொருள் கொடாமல், வைத்து கழியும் - (பொருளை) வீணுவைத்து இருக்கிற, மடவோனை - மூடனுகிய, அவனை - (உபயோகமற்ற) அவனை, வைத்த பொருளும் நகும் - சேர்த்துவைத்த திரவியமும் சிரிக்கும்; அவனை - அப்படிப்பட்டவனை, உலகத்து அருளும் - உலகத்திலே விளங்குகிற கிருபையும், நகும் - சிரிக்கும், எ-று. ஏ-இரண்டும் அசை.

துறவோர் - துறவிகளும் ஆம், ஆயினும் சிறப்பில்லாமையின் "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" என்னுந் திருக்குறளுக் குரைத் ததுபோல் ஈண்டும் ஆதரிக்கத்தக்கவரால் கைவிடப்பட்டவர் என்று உரைக்கப்பட்டது. வீணுக்கினதைப்பற்றி பொருளும் நகுமென உப

---

"we will give alms sometime or other" shall in this sea-girt earth perish despised by all.

3. The ignorant brute who neither enjoys his wealth nor gives it in charity to the needy but hoards it up, shall be derided by the very wealth he lays up and the kindness that exists in this world.

Digitized by Google

ஈாரவழக்காகக் கூறப்பட்டது. "அருளில்லார்க் கவ்வுலகமில்லைபொரு ளில்லார்க் கிவ்வுலக மில்லாகியாங்கு" என்கிறபடி. நற்கதியற்றானே யென அருட்கடவுள் நகும் என்பது கருத்து.

கழியான், ஈகலான்,—முற்றெச்சங்கள். ஈகலான்—ஈ - பகுதி, கு - சாரியை, அல் - எதிர்மறை விகுதி, ஆன் - ஆண்பால் விகுதி. (௩)

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா விடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வ மில்லத்
துருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் றுய்க்கப் படும்.

(இ-ள்.) கொடுத்தலும் துய்த்தலும் - (பிறர்க்கு) கொடுப்பதை யும் (தான்) அனுபவிப்பதையும், தேற்றா - தெளியாத, இடுக்கு உடை உள்ளத்தான் - லோபகுணமுள்ள மனமுடையவன், பெற்ற பெரு செல்வம் - அடைந்த மிகுந்த சம்பத்து, இல்லத்து உரு உடை கன்னி யரை போல் - வீட்டிற்பிறந்த ரூபமுள்ள பெண்களைப்போலே, பரு வத்தால் - (அனுபவிக்கும்) காலத்தில், ஏதிலான் துய்க்கப்படும் - அய லானாலே அனுபவிக்கப்படும், எ-று.

வீட்டிற் பிறந்தபெண் அயலா னனுபவத்திற்கே உரியளாவது போல் லோபியின் செல்வமும் அயலானுக்கே உரியதாகும் என்றபடி.

பருவத்தால்—வேற்றுமை மயக்கம். (௪)

எறிநீர்ப் பெருங்கட லெய்தி யிருந்தும்
அறுநீர்ச் சிறுகிணற் றூறல்பார்த் துண்பர்
மறுமை யறியாதா ராக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

(இ-ள்.) எறி நீர் பெருங் கடல் - மோதுகின்ற நீரையுடைய பெரிய சமுத்திரத்தை, எய்தி இருந்தும் - அடைந்திருந்தும், அறு நீர் சிறு கிணறு - அற்றுப்போம்படியான நீரையுடைய சிறிய கிணற்றி னது, ஊறல் பார்த்து உண்பர் - ஊற்றைக்கண்டு குடிப்பார்கள் (சனங் கள்); மறுமை அறியாதார் ஆக்கத்தின் - மறுமைப்பயனை அறியாத

---

4. The great wealth of the miserly-minded men who know not how to give it (to the needy) or to enjoy it themselves shall, like the beautiful damsels of a family, be enjoyed at the proper season only by strangers.

5. Though they live near the mighty ocean of rolling waves, men will seek out and drink from a spring of a small well whose water is almost dried up. So the poverty of the great is better than the riches of those who know nothing of the next birth.

Digitized by Google

வர்களுடைய செல்வத்தைக்காட்டிலும், சான்றோர் கழி நல்குரவே - யோக்கியர்களுடைய மிகுந்த தரித்திரமே, தலை - மேலானது, எ-று.

மிகுந்த தண்ணீருள்ளதா யிருந்தும் உபயோகப்படாத கடலைப் போலே பயனற்றது அயோக்கியருடைய பணம் ஆதலின், கிணற்று ஊற்றைப்போல் சற்றுச்சற்றாகிலும் உபயோகமான யோக்கியருடைய அற்பசம்பத்தே மேலான தென்பது கருத்து.

அற்று அற்றுச் சுரப்பதனால் அறுநீர்கிணறு என்றார். கழி—உரிச்சொல். (ரு)

எனதென தென்றிருக்கு மேழை பொருளை
எனதென தென்றிருப்பன் யானும் - தனதாயின்
தானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

(இ-ள்.) ஏழை - மூடன், பொருளை - பணத்தை, எனது எனது என்று இருக்கும் - என்னுடையது என்னுடையது என்று சொல்லிக் கொண்டிருப்பான்; யானும் - நானும், (அப்பொருளை) எனது எனது என்று—, இருப்பன் - இருப்பேன்; தனது ஆயின் - அவனதானால், தானும் அதனை வழங்கான் - அவனும் அப்பொருளை (ஒருவர்க்கு) கொடான்; பயன் துவ்வான் - (அதின்) பிரயோஜனத்தை அனுபவிக்கமாட்டான்; யானும் அதனை அது - நானும் அந்தத் திரவியத்தை அதுவாக, [அப்படியே செய்வேன் என்றபடி,] எ-று.

செய்வேனென்று ஒருசொல் வருவித்து அது என்பதை முடித்துக் கொள்க.

உபயோக மில்லாமல் சம்பாதித்தவன் தனது என்று சொல்வதற்கும், சம்பாதியாதவன் அப்படிச் சொல்வதற்கும் வித்தியாச மில்லை யென்றபடி. (சு)

வழங்காத செல்வரி னல்கூர்ந்தா ருய்ந்தார்
இழந்தா ரெனப்படுத லுய்ந்தார் - உழந்ததனைக்
காப்புய்ந்தார் கல்லுதலு முய்ந்தார்தங் கைகோவ
யாப்புய்ந்தா ருய்ந்த பல.

---

6. The fool will say of his wealth "It is mine, it is mine" and I will also consider it as mine; for if it were his, he neither gives it to others nor enjoys it himself. It is alike to me.

7. The poor are exempt from the troubles to which the niggardly are subject, for they are relieved of the following troubles, viz. the blame of having lost one's wealth, the difficulty of guarding it, the trouble of securing it underground, the trouble of holding it fast, and various other troubles.

Digitized by Google

(இ-ள்.) வழங்காத செல்வரின் - கொடாத தனவான்களைக்காட்டிலும், நல்கூர்ந்தார் உய்ந்தார் - தரித்திரர் (துன்பங்களில்) தப்பினவர்கள்; (எப்படியெனில்) இழந்தார் எனப்படுதல் - பொருளை இழந்து போனார்கள் என்கிற அபவாதத்தினின்றும், உய்ந்தார் - தப்பினார்கள்; உழந்து - வருந்தி, அதனை காப்பு - அப்பொருளைக் காப்பாற்றுவதினின்றும், உய்ந்தார்—; கல்லுதலும் - (அதைப் புதைத்துவைக்கும் பொருட்டு) நிலத்தைத் தோண்டுவதினின்றும், உய்ந்தார்—; தம் கை நோவ - தமது கைகள் நோவும்படி, யாப்பு - கெட்டியாய்ப் பிடித்திருப்பதினும், உய்ந்தார்—; உய்ந்த பல - (இப்படி அவர்) தப்பினவை பல (வுண்டு), எ-று.

எனப்படுதல், காப்பு, கல்லுதல், யாப்பு,—இவை நான்கும் ஐந்தாம்வேற்றுமைத் தொகை. கொடாமல் பணம் வைத்திருப்பவனுக்குக் கஷ்டமேயன்றி வேறு பயனில்லையென்பது கருத்து. (எ)

தனதாகத் தான்கொடான் றாயத் தவரும்
தமதாய போழ்தே கொடாஅர் தனதாக
முன்னே கொடுப்பி னவர்கடியார் தான்கடியான்
பின்னை யவர்கொடுக்கும் போழ்து.

(இ-ள்.) தனது ஆக - (பொருள்) தனதா யிருக்கையிலே, தான் கொடான் - (லோபி) தான் (ஒருவர்க்கும்) கொடுக்கமாட்டான்; தாயத்தவரும் - தாயாதர்களும், தமது ஆய போழ்து - (அப்பொருள்) தமதான காலத்தில், கொடார் - (அவர்களும்) கொடுக்கமாட்டார்; முன்னே - பூர்வத்திலே, தனது ஆக கொடுப்பின் - தனதாயிருக்கையிலே கொடுத்தால், அவர் கடியார் - தாயாதர் விலக்கார்கள்; பின்னை - பிற்காலத்தில், அவர் கொடுக்கும் பொழுது - அந்தத் தாயாதர் கொடுக்குங்காலையில், தான் கடியான் - தான் (அதை) விலக்கமாட்டான், எ-று.

தாயமாவது தகப்பன் பாட்டன் முதலானார் மூலமாய் வந்த பொருள்; அதனை எடுத்துக்கொள்ளத் தக்கவர்கள் தாயாதர். ஒருவன் தான் சம்பாதித்த பொருள் தன்சுவாதீனமா யிருக்கையிலே வறியோர்க்குக் கொடாமல் வைக்க, அதைப் பெற்றுக்கொண்ட தாயாதிகளும் கொடுக்க மன மிசையார்கள்; தானுயிரோ டிருக்கையிற் கொடுத்தால் தாயாதர் தடுப்பதில்லை; தானிறந்த பின் அவர் கொடுத்தால்

---

8. While the property is his own, he gives it not away in alms; neither his paternal kinsmen give it away when it becomes their own. If he gave it away when it was his own his kinsmen would not have found fault with him. Neither could he find fault with them, if they gave it away after his death.

Digitized by Google
ROJA. MUTHIAH
ARTIST

தான் தடுப்பதில்லை. இப்படி இரு திறத்தாரும் பொருளைச் சம்பாத்தியத்தில் உபயோகியாமல் வீணாக்குகின்றவர் என்றபடி. இது அக்காலத்து யாரையோ நோக்கிச் சொன்னதுபோலும். (அ)

இரவலர் கன்றாக வீவாரா வாக
விரகிற் சுரப்பதாம் வண்மை - விரகின்றி
வல்லவ ரூன்ற வடியாபோல் வாய்வைத்துக்
கொல்லச் சுரப்பதாங் கீழ்.

(இ - ள்.) இரவலர் கன்று ஆக - யாசகர் கன்றுபோ லிருக்க, ஈவார் ஆ ஆக - கொடுப்பவர் பசுப்போ லிருக்க, விரகில் - உச்சாகத்தினால், சுரப்பது - பயனைத்தருவது, வண்மை ஆம் - கொடுக்குங் குணமாம்; விரகு இன்றி - உச்சாக மில்லாமல், வல்லவர் ஊன்ற - வலிமையுடையவர்கள் அழுத்தி வருத்த, வடி ஆ போல் - பால்கொடுக்கின்ற பசுவைப்போல, வாய் வைத்து கொல்ல - அவ்வவ் விடங்களிலே நிறுத்தித் துன்பப்படுத்த, சுரப்பது ஆம் - பயனைத்தரும், கீழ் - கீழ்மகன், எ-று.

கன்று வாய்வைக்கச் சந்தோஷமாய்ப் பாலைச்சுரக்கும் பசுவைப்போலே யாசகனைக் கண்டவுடனே சந்தோஷத்தோடு கொடுப்பது தான் கொடை; வல்லவர் பலவகையில் வருத்த, மனமின்றிப் பால் சுரக்கும் பசுவைப்போல வலியோர் சேர்ந்தவிடங்களிலே தூஷிக்கவும் இடுக்கண் செய்யவும் நிர்ப்பந்தமாய்க் கீழ்மக்கள் கொடுக்குங் கொடை கொடை என்று சொல்லத்தகா தென்பதாம்.

வல்லவர் ஊன்ற அடிக்கின்ற ஆ போலே உறுப்புக்களில் கருவிகளை வைத்துக் கொல்ல எனப்பொருள் உரைப்பாரு முளர். வடித்தல் - ஊற்றல், இங்கு பால் சுரத்தலாம். வாய் - இடம். கீழ் - எழுவாய், சுரக்கும் - பயனிலை. (க)

ஈட்டலுந் துன்பமற் றீட்டிய வொண்பொருளைக்
காத்தலு மாங்கே கடுந்துன்பங் காத்தல்

---

9. Comparing the beggars to a calf and the benefactors to a cow, such spontaneous benevolence as the natural yield of milk is true benevolence, Just like those cows which give their milk only when coerced by strong men by various appliances, the base will exercise their benevolence (under a strong extraneous pressure.)

10. The acquisition of wealth is a cause of vexation; the guarding of this glittering wealth so acquired causes a great vexation; if the guarding is a little relaxed there is vexation,

Digitized by Google

குறைபடிற் றுன்பங் கெடிற்றுன்பந் துன்பக்
குறைபதி மற்றைப் பொருள்.

(இ-ள்.) ஈட்டலும் துன்பம் - பொருளைச் சம்பாதிப்பதும் வருத்தம்; மற்று - மேலும், ஈட்டிய ஒள் பொருளை - சம்பாதித்த நல்ல பொருளை, காத்தலும் - காப்பாற்றுவதும், ஆங்கே கடு துன்பம் - அப்படியே மிகுந்த துன்பம்; காத்தல் குறைபடில் - காப்பது குறைந்தால், துன்பம்—; கெடில் - நாசப்பட்டால், துன்பம்—; (ஆதலின்) பொருள் - திரவியமானது, துன்பக்கு உறை பதி - துன்பத்திற்கு வாசஸ்தானம், எ-று. மற்றை - அசை.

காத்தலிருக்கவும் பொருள் குறைபட்டால் எனவு முரைக்கலாம். சாரியை விகற்பமாதலின் "துன்பக்கு" என்பதில் அத்துச்சாரியை வரவில்லை யென்றறிக. [உருபுபுணர் - சூ - ௪.] (௧0)

## உ௯ - வது அதிகாரம்.—Chapter XXIX.

### இன்மை.—Poverty.

அஃதாவது பண மில்லாமை.

அத்திட்ட கூறை யரைச்சுற்றி வாழினும்
பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்
செத்த பிணத்திற் கடை.

(இ-ள்.) அத்து இட்ட கூறை - காவி தோய்த்த வஸ்திரத்தை, அரை சுற்றி வாழினும் - அரையிலுடுத்து வாழ்ந்தாலும், பத்து எட்டு உடைமை - பத்தாயினு மெட்டாயினு முள்ளவனுயிருத்தல், பலர் உள்ளும் பாடு எய்தும் - பலஜனங்களுக்குள்ளே பெருமைபெறும்; ஒத்த குடி பிறந்தக்கண்ணும் - உலகத்துக்குச் சம்மதியான வமிசத்திற் பிறந்தாலும், ஒன்று இல்லாதார் - ஒரு பொருளில்லாதவர்கள், செத்த பிணத்தின் - உயிர்போன உடலைப்பார்க்கிலும், கடை - கீழ் (ஆவர்,) எ-று.

அத்து - தையலுமாம். பத்தெட்டு என்பதில் ஐயவும்மை தொக்கது. (௧)

---

if it is lost it is also a vexation; so the said wealth is truly the very abode of vexation.

1. Although a man lives wearing a red-dyed or patched clothes round his loins, yet the possession of ten or eight pieces of money will secure him honor among the many. Those who have nothing at all, though born of a respectable family, are more despicable than a dead body.

Digitized by Google

நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்
யாரு மறிவர் புகைநுட்பந் தேரின்
இரப்பிடும்பை யாளன் புகுமே புகையும்
புகற்கரிய பூழை நுழைந்து.

(இ - ள்.) நெய் - நெய்யானது, நீரினும் நுண்ணிது என்பர் - தண்ணீரைக்காட்டிலும் சூக்ஷமம் என்று சொல்லுவர்; நெய்யினும் புகை நுட்பம் - நெய்யைக் காட்டிலும் புகை நுட்பமாயிருப்பதை, யாரும் அறிவர்—; தேரின் - ஆலோசித் தறிந்தால், இரப்பு இடும்பை யாளன் - யாசகத்தாலாகிய துன்பமுள்ளவன், புகையும் புகற்கு அரிய பூழை - புகையும் பிரவேசிப்பதற்குக் கூடாத துவாரத்தில், நுழைந்து புகும் - நுழைந்துபோவான், எ-று. ஏ - அசை.

யாசகன் கண்டவிடத்திலு நுழைந்து பிச்சையெடுப்பதனால் இகழப்படுவான் என்பது கருத்து.

புகையும் புகுதற்கரிய பூழைநுழைந்து புகும் எனக் கவி அதிசயோத்தியாக் கூறியது. நெய் என்பது எண்ணெய் முதலிய நீர்த்த பொருள்களுக்கெல்லாம் பொதுப்பெயர். (உ)

கல்லோங் குயர்வரைமேற் காந்தண் மலராக்கால்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினம் - கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட
இலாஅஅர்க் கில்லைத் தமர்.

(இ - ள்.) கொல்லை - கொல்லைகளில், கல்லால் - கல்கொண்டு, கிளி கடியும் - கிளிகளை ஓட்டுகின்ற, கானக நாட - காடு சிறந்த நாட்டரசனே!, கல் ஓங்கு உயர் வரைமேல் - கற்கள் வளர்ந்திருக்கிற உயரமான மலையில், காந்தள் மலராக்கால் - காந்தள் பூக்காமற்போனால், செம் பொறி வண்டு இனம் - சிவந்த புள்ளிகளையுடைய வண்டுக் கூட்டங்கள், செல்லா - அங்கே போகமாட்டா; (அப்படியே) இல்லார்க்கு - (பொருள்) இல்லாதவர்களுக்கு, தமர் இல்லை - உறவினர் இல்லை, எ - று.

---

2. It is said that ghee is more subtle than water; and all know that smoke is more subtle than ghee. On due reflection, you will find that afflicted mendicants enter places through which even smoke cannot pass.

3. O king of the woodlands where the birds are driven away from the cultivated fields by the sling! If the *Kanthal* plant (November flower plant) which grows upon the rocky lofty mountains, do not put forth its blossoms, the swarms of red-spotted bees will not repair thither. In the same manner the destitute have no relatives.

Digitized by Google

காந்தள் பூக்காதபோது வண்டுகள் மலையண்டை போகாதது போல் தரித்திரனிடத்துக்கு உறவினர் வாரார்கள் என்பது கருத்து. ஆம் - அசை. (௩)

உண்டாய போழ்தி னுடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே - வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பார்
ஒருவரு மிவ்வுலகத் தில்.

(இ - ள்.) உண்டாய போழ்தின் - (பொருள்) உண்டாயிருக்குங் காலத்தில், உடைந்துழி - (தேகம்) அழிந்தவிடத்தில், காகம் போல் - காக்கைகளைப்போலே, ஆயிரவர் - ஆயிரம்பேர்கள், தொண்டு - அடிமையாக, தொகுப - சேருவார்கள்; வண்டு ஆய் - வண்டுகள்போலாய், திரிதரும் காலத்து - திரியுங்காலத்தில், தீது இலிரோ என்பார் ஒருவரும் - நீர் துன்பமில்லா திருக்கிறீரா என்று க்ஷேமம் வினவுமொருவரும், இவ்வுலகத்து இல் - இவ்வுலகத்தி லில்லை, எ-று.

வண்டாய்—வண்டு ஊணுக்காக ஓரிடமில்லாமல் பலவிடந் தேடித் திரிவதுபோல எனக் கொள்க. இலிர் — முன்னிலைப்பன்மைக் குறிப்பு முற்று. (௪)

பிறந்த குலமாயும் பேராண்மை மாயும்
சிறந்ததங் கல்வியு மாயும் - கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட
இன்மை தழுவப்பட் டார்க்கு.

(இ - ள்.) கறங்கு அருவி - ஒலியாநின்ற அருவிகள், கல் மேல் கழூஉம் - கற்களின்மேல் விழுந்து சுத்திசெய்கின்ற, கணம் மலை நல் நாட - கூட்டமான மலைகளுள்ள நல்ல நாடுடையவனே!, இன்மை தழுவப்பட்டார்க்கு - வறுமையால் கட்டிக்கொள்ளப்பட்டவர்களுக்கு, பிறந்த குலம் மாயும் - (அவர்) பிறந்த நல்லவமிசமும் கெடும்; பேர் ஆண்மை - கீர்த்தியுடைமை, [அல்லது பெரியவல்லமை], மாயும்—; சிறந்த - மேன்மைப்பட்ட, தம் கல்வியும் - தம்முடைய கல்வித்திறனும், மாயும்—, எ-று.

---

4. In the days of prosperity, thousands throng together to serve a person just as the crows that collect round a dead body; but when he wanders about like the bee, there is not a single person in this world who will ask him "Are you well?"

5. O king of the good country with crowded hills where the sounding streams wash the rocks! To those who are environed by poverty, their high birth, their high dignity and their illustrious learning will all disappear.

Digitized by Google

தரித்திரருக்குக் குலமுதலிய மேன்மைகளும் சிறக்கா என்பது கருத்து. (ரு)

உள்கூர் பசியா லுழைநசைஇச் சென்றார்கட்
குள்ளூ ரிருந்துமொன் றாற்றாதான் - உள்ளூர்
இருந்துயிர் கொன்னே கழியாது தான்போய்
விருந்தின னாதலே நன்று.

(இ-ள்.) உள் கூர் பசியால் - வயிற்றினுள்ளே நிறைந்த பசியினாலே, உழை - தன்னிடத்தில், நசைஇ சென்றார்கட்கு - விரும்பி வந்தவர்களுக்கு, உள் ஊர் இருந்தும் - ஊர்க்குளிருந்தும், ஒன்று ஆற்றாதான் - ஒருதவியுஞ் செய்யமாட்டாதவன், உள் ஊர் இருந்து - உள்ளூரிலிருந்து, உயிர் கொன்னே கழியாது - உயிரை வீணாய்க்கழியாமல், தான் போய் - தான் (பிறதேசம்) போய், விருந்தினன் ஆதலே நன்று - (ஒருவர்க்கு) விருந்தாளி யாவதே நல்லது, எ-று.

தன்னிடம் பசித்துவந்தவர்களுக்கு உதவிசெய்யமாட்டாத தரித்திரன் ஊருருக்குள்ளே குடித்தனஞ் செய்வதைக்காட்டிலும் எங்கேயாகிலும் போய்ப் பிச்சை எடுப்பது நல்லதென்கிறபடி.

ஊருள் எனற்பாலது உள்ளூர் என்றனது போலிவழக்கு. (சு)

நீர்மையே யன்றி நிரம்ப வெழுந்ததம்
கூர்மையு மெல்லா மொருங்கிழப்பர் - கூர்மையின்
முல்லை யலைக்கு மெயிற்றாய் நிரப்பென்னும்
அல்ல லடையப்பட் டார்.

(இ-ள்.) கூர்மையின் - கூர்மையினாலே, முல்லை அலைக்கும் எயிற்றாய் - முல்லையரும்புகளை வருத்துகின்ற பற்களையுடைய பெண்ணே!, நிரப்பு என்னும் அல்லல் அடையப்பட்டார் - வறுமை யென்கிற துன்பத்தால் சேரப்பட்டவர்கள், நீர்மையே அன்றி - சற்குணங்களுமல்லாமல், நிரம்ப எழுந்த - பூர்ணமா யோங்கி நிற்கிற, தம் கூர்மையும் -

---

6. For those poor men who are not able to assist those who come to them troubled in mind and pinched by hunger, it is better that they go away to a foreign country and there live as guests in the houses of others than spend their days in vain in their own country.

7. O thou whose teeth surpass in their pointedness the jassamine flowers! Those who are afflicted by poverty will lose not only their good disposition and the sharpness of intellect, but also all other good qualities.

Digitized by Google

தம்முடைய புத்திக்கூர்மையையும், எல்லாம் - மற்றுமுள்ள எல்லாவற்றையும், ஒருங்கு இழப்பர் - ஒருசேர இழப்பார்கள், எ-று.

தரித்திரருடைய சற்குண முதலியவை விளங்கா என்பதாம்.

முல்லையரும்புகளினு மேலான அழகுண்மையால் அவற்றைக் கீழ்ப்படுத்தின பற்களையுடையவளே என்றது. கூர்மை என்பது மற்றுமுள்ள வெண்மை முதலான குணங்களுக்கும் உபலக்ஷணம். உபலக்ஷணமாவது தன்னினத்தையுந் தழுவல் [பொது-சூ-எ] காண்க. ()

இட்டாற்றுப் பட்டொன் றிரந்தவர்க் காற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்
நெட்டாற்றுச் சென்று நிரைமனையிற் கைநீட்டும்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

(இ-ள்.) இட்டு ஆறு - தாழ்மையான வழியில், [தரித்திரத்தில் என்கிறபடி], பட்டு - விழுந்து, ஒன்று இரந்தவர்க்கு - ஏதாகிலுமொருபொருளை யாசித்தவர்களுக்கு, ஆற்றாது - உதவாமல், முட்டு ஆறு பட்டு - முட்டுப்பாடான வழியிலே பட்டு, [சங்கடப்பட்டு என்றபடி], முயன்று - (கொடுப்பதற்கு) முயற்சிசெய்து, வாழ்தலின் - வாழ்வதைக்காட்டிலும், நெடு ஆறு சென்று - தூரதேசத்திற்போய், நிரை மனையில் - வரிசையாயுள்ள வீடுகளில், கை நீட்டும் - கைநீட்டி யாசிக்கிற, கெடு ஆறு வாழ்க்கையே - கெட்டவழியில் வாழ்வதே, நன்று - நலமாம், எ-று.

இதில் அமைந்தது ஆரும்பாட்டின் கருத்தேயாலும் ஒருவர் பாடியதாகாமையின் கூறியது கூறலாகாதென வுணர்க. இட்டு - அற்பம், ஆதலின் இட்டாறு - வறுமையெனக் கொள்ளப்பட்டது. ஆறு என்பது வேற்றுமை தொகவும் [உயி-புண-ருரு-ம்] சூத்திரத்தினால் றகர மிரட்டி நின்றது. வருந்தி முயல்வதேயன்றிக் காரியம் கைகூடவில்லையென்பது, முட்டாற்றுப்பட்டு முயன்று என்பதனால் விளக்கப்பட்டது. "நிறைமனை" எனவும் பாடங்கொண்டு, நிறை - பொருள் நிறைந்த, வீடு - வீட்டில் சென்று, என்றும் பொருள்கொள்ளலாம். ()

கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
அடகு பறித்துக்கொண் டட்டுக் - குடைகலனு

---

8. It is better for one to go to a distant land and there to lead on a wretched life of beggary in the long row of houses than to become reduced to poverty in his own native land and there to lead with great exertion a miserable life, without being able to give aught to the beggars who come to him for help.

9. When wealth is gone, the poor will with those hands which were once adorned with bracelets, remove the

Digitized by Google

உப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

(இ-ள்.) துப்புரவு சென்று உலந்தக்கால் - அநுபவிக்கப்படும் பொருள்கள் போய் நாசமானால், கடகம் செறிந்த தம் கைகளால் - (முன்பு) கடகம் சேர்ந்திருந்த தங்கைகளாலே, வாங்கி - (பக்கத்துள்ள தூறுகளைத்) தள்ளி, அடகு பறித்துக்கொண்டு - கீரைகளைப் பறித்துக் கொண்டுபோய், அட்டு - சமைத்து, குடை - (நுங்கெடுத்த பனங் காய் முதலான) உள்ளே துளையுள்ள பொருள்களை, கலன் ஆ - பாத் திரமாக (வைத்துக்கொண்டு), உப்பு இலி வெந்தை - உப்பில்லாத அந்த வெந்த கீரையை, தின்று - புசித்து, உள் அற்று - மனவூக்கங் கெட்டு, வாழ்ப - வாழ்வார்கள் (மனிதர்,) எ-று.

செல்வம் மாறினால் இலைக்கறி பறித்துண்ணும்படி நேரிடும் வறுமை மனதிற்கு மிகத் துன்பந்தரும் என்பது கருத்து.

இப்பாட்டைச் செல்வ நிலையாமையிற் சேர்த்தலுந் தகும். குடை—குடையப்படுவது குடை எனச் செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர். வெந்தை—வெந்தது, ஐ - விகுதி, வினை முதற்பொருளில் வந்தது. (க)

ஆர்த்த பொறிய வணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்-நீர்த்தருவி
தாழா வுயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட
வாழாதார்க் கில்லைத் தமர்.

(இ-ள்.) ஆர்த்த பொறிய - நிறைந்த புள்ளிகளையுடைய, அணி கிளர் - அழகு விளங்காநின்ற, வண்டு இனம் - வண்டின்கூட்டம், பூத்து ஒழி கொம்பின்மேல் - புட்பித்து நீங்கின கிளையின்மேலே, செல்லா - போகமாட்டா; நீர்த்து அருவி - நல்லதன்மையுள்ள அருவி கள், தாழா - குறையாத, உயர் சிறப்பின் - மேலான சிறப்பையுடைய, தண் குன்றம் நல் நாட - குளிர்ச்சியான மலைகளுள்ள நல்ல நாட்டரச னே!, வாழாதார்க்கு - பொருள்பெற்று வாழாதவர்களுக்கு, தமர் இல்லை - உறவின ரில்லை, எ-று.

---

bushes and brambles aside and pluck off the greens and eat them cooked without salt in any hollow vessel they can get, losing all their energy.

10. O lord of the excellent and beautiful cool hilly country which abounds in rich streams! The swarms of shining beautiful beetles with spotted wings will not repair to the branches which has ceased to blossom; in like manner the unfortunate have neither relatives nor friends.

Digitized by Google

இப்பாட்டில் மூன்றும் பாட்டின் கருத்தேயானாலும் முன்கூறிய நியாயத்தாற் குற்றமன்று. நீர்த்து—குறிப்புமுற்று, பெயரொச்சமா யிற்று. பொறிய—குறிப்புப் பெயரொச்சமாம். (௯0)

## ௩0-வது. அதிகாரம்.—Chapter XXX.

### மானம்.—Honor.

அதாவது ஒருவர்க்குள்ள கவுரவம்; எப்படிப்பட்ட சங்கடத்தி லும் அதனை விடாமற் காக்குந்தன்மை.

திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதங் கண்டக் கடைத்தும் - எரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மான முடையார் மனம்.

(இ - ள்.) திரு மதுகை ஆக - செல்வம் பலமா யிருப்பதனால், திறன் இலார் செய்யும் - யோக்கியதை யில்லாதவர்கள் செய்கின்ற, பெரு மிதம் - மிகுதியை, [அவமதிப்பை], கண்டக்கடைத்து - கண் டபோது, எரி மண்டி - நெருப்புப்பற்றி, கானம் தலைபட்ட தீ போல் - காட்டிலுண்டான அக்கினிச்சுவாலைபோல், மானம் உடையார் மனம் - மானமுள்ளவர்க ளுடைய இதயமானது, கனலும் - சொலிக்கும், எ-று.

செல்வச் செருக்கினால் அயோக்கியர் எல்லைகடந்து நடக்கையில் மானிகளுக்கு மனவருத்தமுண்டா மென்றபடி.

பெருமிதம் - மிதத்துக்கு விஞ்சியது. கண்டக்கடைத்து—ஒரு வகை வினையெச்சம், அதனோடிருக்கும் உம்மையை அசையெனக் கொள்ள வேண்டும். (௧)

என்பா யுகினு மியல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ தம்முடையார் - தம்பா
டுரையாமை முன்னுணரு மொண்மை யுடையார்க்
குரையாரோ தாமுற்ற நோய்.

---

1. The minds of the honorable, when they see the excesses of the ignorant committed through the pride of their own wealth, will burn like the flame which burns the jungle it has seized upon.

2. Will the honorable, though they become mere bone and skin, through destitution follow those who are devoid of good disposition and declare their affliction to them? Will they not disclose them to the great who intuitively know them before being told?

Digitized by Google

(இ-ள்.) தம் உடையார் - தம்மை யுடையவர்கள், [தம்மானத்தைக் காக்குமவர்], என்பு ஆய் உகினும் - எலும்பாய்ப்போ யுதிர்ந்தாலும், இயல்பு இலார் பின் சென்று - சற்குண மில்லாதவர்களுடைய பின்னே போய், தம் பாடு உரைப்பரோ - தமது வருத்தத்தைச் சொல்வார்களோ; தம் பாடு - தமது சங்கடத்தை, உரையாமை - சொல்லாமலே, முன் உணரும் - முன்னிட்டு அறிந்து கொள்ளத்தக்க, ஒண்மை உடையார்க்கு - யோக்கியதை யுள்ளவர்களுக்கு, தாம் உற்ற நோய் - தாம் அடைந்திருக்கிற துன்பத்தை, உரையாரோ- சொல்லாம லிருப்பார்களோ, எ-று.

மானிகள் எவ்வளவு ஈன ஸ்திதியிலும் தம்வருத்தத்தை அயோக்கியருக்குச் சொல்லார்கள், ஏனெனில் அவமானமே யன்றிப் பயனின்மையால்; யோக்கியரோடே சொல்வார்கள் உபயோக முண்மையால் என்றபடி.

உரையாமை—எதிர்மறை வினையெச்சம், மை - விகுதி. (உ)

யாமாயி னெம்மில்லங் காட்டுதுந் தாமாயின்
காணவே கற்பழியு மென்பார்போ னாணிப்
புறங்கடை வைத்தீவர் சோறு மதனால்
மறந்திடுக செல்வர் தொடர்பு.

(இ-ள்.) யாம் ஆயின் எம் இல்லம் காட்டுதும் - நாமானால் எமது மனையாளைக் காட்டுவோம்; தாம் ஆயின் - அவரானால், காணவே கற்பு அழியும் - பார்க்கவே கற்பு அழிந்துபோம், என்பார் போல் - என்று நினைக்கிறவர்களைப் போலே, நாணி - வெட்கி, புறங்கடை வைத்து - வாசலின் புறத்திலே வைத்து, சோறும் ஈவர் - சோறும் போடுவார்கள்; (அதனால்) செல்வர் தொடர்பு - தனவான்களுடைய கூட்டுறவை, மறந்திடுக - மறந்துபோகக் கடவீர், எ-று.

செல்வர் நம்மிடம் வந்தால் நாம் கூசாமல் நம் இல்லாள் இதோ என்று காட்டுவோம், பார்த்தால் கற்பழியுமென்று நினைத்தோ நம்மை உள்ளே வரவொட்டாமல் வாசலுக்குப் புறத்திலேயே வைத்துச் சோறிடுகிறார். இப்படி அவமதிப்புச் செய்கிறதினால் அவர் சிநேகத்தை மறக்கவேண்டும் என்பது கருத்து.

இல்லம் என்பதற்கு வீடு எனப் பொருள்கொண்டு உரைக்கலாம். இங்கு போல் என்பது உவமப்பொருளில் வந்ததன்று, சம்பாவனை

3. When the rich come to us (who are poor), we let them see our wives; but they blush to shew theirs, lest their chastity should be endangered, and even serve us meals in the outer yard. The association with the rich should accordingly be avoided.

Digitized by Google

பொருளில் வந்தது; சம்பாவனையாவது இப்படியிருக்கலாம் என்று ஊகித்தல்; ஆகவே இது "தற்குறிப்பேற்றவணி" ஆம். சோறும் என்கிற உம்மை உயர்வு சிறப்பில் வந்தது. சோறிடுவது உள்ளேயே தகும் அதனையு மிவர் புறத்திலிடுகிறார்கள் என்றபடி. (௩)

இம்மையு நன்று மியனெறியுங் கைவிடா
தும்மையு நல்ல பயத்தலால் - செம்மையின்
நானங் கமழுங் கதுப்பினாய் நன்றேகாண்
மான முடையார் மதிப்பு.

(இ - ள்.) செம்மையின் நானம் கமழும் - நன்றாக கஸ்தூரி பரிமளிக்கின்ற, கதுப்பினாய் - கூந்தலுடையவளே!, இம்மையும் நன்று ஆம் - இப்பிறப்பிலும் நல்லதாம்; இயல் நெறியும் கைவிடாது - கூடிய நல்லவழியையும் விட்டுநீங்காது, உம்மையும் - மறுபிறப்பிலும், நல்ல பயத்தலால் - நல்லவற்றைச் செய்வதனால், மானம் உடையார் மதிப்பு - மானிகனிடத்துள்ள மதிப்பானது, நன்றே - நல்லதே, எ-று. காண் - அசையுமாம்.

மதிப்பாவது மேன்மையாக நினைத்தல். கதுப்பு—கவுளுமாம்; அங்கும் கஸ்தூரி பூசுவதுண்டு. (௪)

பாவமு மேனைப் பழியும் படவருவ
சாயினுஞ் சான்றவர் செய்கலார் சாதல்
ஒருநா ளொருபொழுதைத் துன்ப மவைபோல்
அருநவை யாற்றுத லின்று.

(இ - ள்.) பாவமும்—, ஏனை பழியும் - மற்றப்பழிப்பும், படவருவ - உண்டாகும்படி வருகின்ற காரியங்களை, சாயினும் - சாம்படி நேரிட்டாலும், சான்றவர் - பெரியோர், செய்கலார் - செய்யமாட்டார்கள்; (ஏனெனில்) சாதல் - சாவு, ஒரு நாள் ஒரு பொழுதை துன்பம் - ஒருநாளில் சொற்பகால மனுபவிக்கத்தக்க துன்பமாயிருக்கின்றது; அவை போல் - அந்த இழிசெய்கைகளைப் போலே, அரு நவை ஆற்றுதல் இன்று - (ஆத்துமாவுள்ளளவும்) மிகுந்த குற்றங்களைச் செய்வதன்று, எ-று.

---

4. O thou who sheddest a delicious odour from thy hair! The estimation of the excellent will bestow on us good in this life. It will stand unswervingly in the way of goodness and afford the benefits to be enjoyed in the next world. This estimation is therefore good indeed.

5. The excellent will not do things which will bring on sin and disgrace, though it should cost them their lives, for death will cause trouble for only a moment in a single day and not like them cause a grievous and lifelong misery.

Digitized by Google

பழி—பழிக்கப்படுவது. பொழுதை—ஐ - சாரியை [உயிர் புணர் - ௬ - ௩௫.] (௫)

மல்லன்மா ஞாலத்து வாழ்பவரு ளெல்லாம்
செல்வ ரெனினுங் கொடாதவர் - நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்.

(இ-ள்.) மல்லல் மா ஞாலத்து - வளப்பமுடைய பெரிய பூமியில், வாழ்பவருள் எல்லாம் - வாழ்கின்றவர்களுக்குள்ளே யெல்லாம், செல்வர் எனினும் - தனவான்களானாலும், கொடாதவர்—, நல்கூர்ந்தார் - தரித்திரரே; நல்கூர்ந்தக்கண்ணும் - தரித்திரப்பட்டிருந்தாலும், செல்வரை சென்று இரவாதார் - தனவான்களிடம் போய் யாசிக்காதவர், பெருமுத்தரையரே - இப்பேர் கொண்ட தனவானோடொத்தவரே, [பெருஞ்செல்வர் என்றபடி,] எ-று.

இப்பாட்டு முந்திய இரண்டதிகாரத்துட் சேர்க்கத்தக்க தாயினும் வறுமையிலும் பிறரிடம் போயிரவாமல் மானத்தைக் காத்தல் நலமென இங்கு சேர்க்கப்பட்டது. நல்கூர்ந்தக்கண்—வினையெச்சம். (௬)

கடையெலாங் காய்பசி யஞ்சுமற் றேனை
இடையெலா மின்னாமை யஞ்சும் - புடைபரந்த
விற்புருவ வேனெடுங் கண்ணாய் தலையெல்லாம்
சொற்பழி யஞ்சி விடும்.

(இ - ள்.) புடை பரந்த - பக்கம் விசாலப்பட்ட, வில் - வில் போன்ற, புருவம் - புருவத்தையும், வேல் நெடு கண்ணாய் - வேல் போல் நீண்ட கண்களையுமுடையவளே!, கடை எல்லாம் - கடைத்திறமானவர்களெல்லாம், காய் பசி அஞ்சும் - காய்கின்ற பசிக்குப் பயப்படுவார்கள்; ஏனை - அவரொழிந்த, இடை எல்லாம் - நடுத்தரமானவர்களெல்லாம், இன்னாமை அஞ்சும் - துன்பத்திற்குப் பயப்படுவார்கள்; தலை எல்லாம் - மேலானவர்களெல்லாம், சொல் பழி

---

6. Among all those who live on this wide fertile world, those who, though exceedingly rich, give not alms, are poor indeed; while those poor who, though much reduced, go not to beg of the rich, are really wealthy as the illustrious mootha-riar.

7. O thou possessed of broad bow-like eye-brows and long lance-like eyes! All those who are in the lowest grade of virtue dread the pinching hunger; those in the middle of the scale fear affliction; and those on the top of it fear the reproach of the world.

Digitized by Google

அஞ்சிவிடும் - உலகத்தாருடைய சொல்லால் வரும் பழிப்புக்கு அஞ்சுவார்கள், எ-று. மற்று - அசை.

பழிப்பினால் மானக்குறைவு வருமென்று அஞ்சுவார்கள் என்பது கருத்து.

கடை இடை தலை என அஃறிணையாக எடுத்ததனால் அஞ்சும் என்பதோடு முடிந்தன. கடைமுதலியன இங்கே பன்மை. (எ)

நல்லர் பெரிதளியர் நல்கூர்ந்தா ரென்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால் - கொல்லன்
உலையூதுந் தீயேபோ லுள்கனலுங் கொல்லோ
தலையாய சான்றோர் மனம்.

(இ - ள்.) நல்லர் - நல்லவர்கள், (இவர்) பெரிது அளியர் - மிகவும் கிருபை செய்யத்தக்கவர்கள், நல்கூர்ந்தார் - வறுமையுள்ளவர்கள், என்று—, எள்ளி - அவமதித்து, செல்வர்—, சிறு நோக்கு நோக்குங்கால் - அற்பப் பார்வையாகப் பார்க்கும்போது, தலை ஆய சான்றோர் மனம் - தலைமையான பெரியவர்களுடைய மனமானது, கொல்லன் உலை ஊதும் தீயே போல் - கருமான் உலைக்கடத்தில் ஊதியெழுப்புகிற நெருப்பைப்போலே, உள் கனலும் - உள்ளே சொலிக்கும், எ-று. கொல், ஓ,—இரண்டும் அசை.

சிறுநோக்காவது அலக்ஷியமாப் பார்த்தல். நல்லர் அளியர் என்பவை இரக்கத்தாற் சொல்லுஞ் சொற்களன்று இகழ்ச்சியாற் சொல்லுஞ் சொற்களென் றறிக. தீயே—இதில் ஏ - அசை. (அ)

நச்சியார்க் கீயாமை நாணன்று நாளும்
அச்சத்தா னாத னன்றாம் - எச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

(இ - ள்.) நச்சியார்க்கு - விரும்பி வந்தவர்களுக்கு, ஈயாமை - கொடாமலிருப்பது, நாண் அன்று - வெட்கமன்று; நாள் நாளும் -

8. When the rich cast upon them a contemptuous look taunting them by such ironies as 'These are very good, very liberal and very poor' the minds of the eminently excellent will burn like the fire in the black-smith's forge blown by the bellows.

9. It is no dishonor for one to refrain from giving alms to those who earnestly beg for them; neither is the fear which one daily feels for going to battle &c, a dishonor to him. True honor consists only in not revealing the wrongs done to a person by those who are inferior to him in every way.

Digitized by Google

தினந்தோறும், அச்சத்தால் - (போர்முதலியவற்றிற் செல்ல) பயத்தினால், நாணுதல் - வெட்கப்படுதல், நாண் அன்று—; எச்சத்தின் - (தம்மிலும்) குறைபாடுடைய, மெல்லியர் ஆகி - அற்பராய் இருந்து, ஆயார் - ஆராய்ச்சி யில்லாதவர், தம்மேல் - தம் விஷயத்தில், செய்தது - செய்த எளிமையை, சொல்லாது இருப்பது - (பிறர்க்கு) சொல்லாம லிருக்கு முறுதியே, நாண் - நாணம் ஆகும், எ-று.

புத்தியீனர் தம்மிடத்துச்செய்த அவமதிப்பைப் பிறர் அறியா திருக்கும்படி காத்தலே மானத்திற்குரிய நாணம் என்பது கருத்து.

ஆயார்—பகைவருமாம். நச்சியார்—நச்சு - பகுதி, ஈறுகுறைந்த இன் - இடைநிலை, ஆர் - விகுதி, யகரம் உடம்படுமெய்; நச்சினர் எனவும் வரும். எச்சம்—குலம் கல்வி முதலியவற்றி னுள்ளது. (௯)

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணா திறக்கும் - இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மான மழுங்க வரின்.

(இ-ள்.) கடமா - காட்டுப்பசுவை, தொலைச்சிய - கொன்ற, கான் உறை வேங்கை - காட்டில் இருக்கின்ற புலியானது, இடம் வீழ்ந்தது - இடப்பக்கம் வீழ்ந்த அந்தப்பசுவை, உண்ணாது இறக்கும் - தின்னாம லிருந்து சாகும்; இடம் உடைய - விசாலமான இடமுள்ளதாகிய, வானகம் கை உறினும் - சொர்க்கம் கைக்குவந்தாலும், விழுமியோர் - பெரியோர், [மானமுள்ளவர்], மானம் அழுங்க வரின் - மானம் கெட்டுப்போக நேரிட்டால், வேண்டார் - (அந்தச் சுவர்க்கத்தையும்) விரும்பமாட்டார், எ-று.

மானத்தாழ்வு வருவதாயிருந்தால் எப்படிப்பட்டதையும் விரும்பமாட்டார் மானிகள் என்றதாம்.

தொலைச்சிய—தொலைச்சு - பகுதி எனக்கொள்ளவேண்டும். (௧0)

---

10. The tiger of the forest having slain an elk, will not eat it if it had fallen on the left side, but will even die of hunger. In like manner the excellent will not, even though the vast expanse of heaven be achieved, desire it, should such acquisition be at the cost of their honor.

Digitized by Google

## ௩க - வது. அதிகாரம்.—Chapter XXXI.

### இ ர வ ச் ச ம்.—Fear of mendicity.

அதாவது மானங் கெடுவதற் கேதுவாகிய இரப்பதை அஞ்ச வேண்டுமென அதன் இயல்பைத் தெரிவிப்பது. இரவுக்கு அச்சம் என விரியும்.

நம்மாலே யாவரிங் நல்கூர்ந்தா ரெஞ்ஞான்றும்
தம்மாலா மாக்க மிலரென்று - தம்மை
மருண்ட மனத்தார்பின் செல்பவோ தாமுந்
தெருண்ட வறிவி னவர்.

(இ - ள்.) இ நல்கூர்ந்தார் - இந்தத் தரித்திரர், நம்மாலே—, ஆவர் - (ஆக்கமுள்ளவ) ராவார்கள், எஞ்ஞான்றும் - எப்போதும், தம்மால் ஆம் - தங்களால் சம்பாதித்த, ஆக்கம் இலர் - பொருளில்லாதவர், என்று—, தம்மை - தங்களை, மருண்ட மனத்தார் பின் - (மேலானவராகமதித்து) மயங்கின மனமுள்ளவர் பின்னே, தெருண்ட அறிவினவர் தாமும் - தெளிந்த அறிவை யுடையவர்களும், செல்ப வோ - செல்வார்களோ, எ-று.

நாம் கொடுத்துத்தான் தரித்திரர்க்குப் பணமுண்டே யன்றி அவர்களுடைய சொந்த முயற்சியால் ஒருகாசும் கிடையாது என்று தம்மிடத்திற் பெருமை பாராட்டுகிற அற்பரிடத்து இரக்கும் பொருட்டு விவேகிகள் செல்லார்கள் என்பதாம்.

பிறர் நல்குதலை மேற்கொண்டு செல்பவர் நல்கூர்ந்தார்; நல்கு—முதனிலைத் தொழிற்பெயர். இல் என்பது ஒருபொருளின் சம்பந்தத்தை மறுக்கும்போது செயப்படுபொருள் குன்றுததாகவும் பொருளையே மறுக்கும்போது செயப்படுபொருள் குன்றியதாகவு மிருக்குமாதலால் ஆக்கம் இலர் என்பதை ஆக்கத்தை இல்லாதவர் எனவும் ஆக்கமானது இல்லாதவர் எனவும் இருவகையிலும் உரைக்கலாம். இரண்டாம் பக்ஷத்தில் "உயர்திணைதொடர்ந்த" என்கிற சூத்திர விதியை அமைத்துக்கொள்க. தம்மை மருண்ட என்பதை வேற்றுமை மயக்கமாக்கொண்டு தம்மிடத்தில் மருட்சிகொண்ட எனவு முரைக்கலாம். கடவுள் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு முகமாய்ச் சீவனம் கற்பித்

1. Will those who possess a clear understanding follow such men as esteem themselves highly and revile at others saying these poor men will become rich by our means and they have no acquirements of their own.

Digitized by Google

திருத்தலால் நாம் கொடுக்கிறோமென்று நினைப்பது அறிவின்மை. தாழும்—உயர்வு சிறப்பும்மை. தாம் - அசை. (க)

இழித்தக்க செய்தொருவ னார வுணலின்
பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ
விழித்திமைக்கு மாத்திரை யன்றோ வொருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு.

(இ - ள்.) ஒருவன்—, இழி தக்க செய்து - தாழ்வதற் கேதுவான காரியங்களைச்செய்து, ஆர உணலின் - நிறையப் புசிப்பதினும், பழி தக்க - பழிக்கும்படியான காரியங்களை, செய்யான் - செய்யாதவனாகி, பசித்தல் - பசியோடிருத்தல், தவறோ - குற்றமோ ; ஒருவன் அழிந்து பிறக்கும் பிறப்பு - ஒரு மனிதன் அழிந்து மறுபடி பிறக்கும்படியான பிறப்பு, விழித்து இமைக்கும் மாத்திரை அன்றோ - கண்ணைத் திறந்து இமைக்கோட்டுதலாகிய அளவை உடையதல்லவா, எ-று.

இவ் வுடம்புபோனால் வேறுடம்பு கிடைப்பது அரிதென நினைக்க வேண்டாம்; சீக்கிரத்தில் கிடைக்கும், ஆதலால் தாழ்வானவை செய்து பிழைப்பதினும் இறப்பது நலம் என்பது கருத்து.

இழித்தக்க காரியங்களாவன — யாசிப்பதற்குச் செய்யுமுயற்சிகள். இழி பழி என்பவை முதனிலைத்தொழிற்பெயர்கள். இழித்தற்குத்தக்க பழித்தற்குத்தக்க என விரித்துக்கொள்க. ஆர என்னும் வினையெச்சம் இங்கு உணலின் என்பதற்கு உரியாநின்றது, அழித்து—வலித்தல் விகாரம். பிறக்கும் பிறப்பு - பிறக்கிற தொழில். (உ)

இல்லாமை கந்தா விரவு துணிந்தொருவர்
செல்லாரு மல்லர் சிறுநெறி - புல்லா
அகம்புகுமி னுண்ணுமி னென்பவர்மாட் டல்லால்
முகம்புகுத லாற்றுமோ மேல்.

(இ - ள்.) இல்லாமை - பொருளில்லாமையானது, [வறுமை], கந்து ஆ - ஏதுவாக, [அதுபற்றி என்கிறபடி], இரவு - இரப்பதை, துணிந்து - தெளிந்து, ஒருவர் - (எவராகிலும்) ஒருவர், சிறு நெறி -

---

2. Does not a man's death and re-birth take place in the twinkling of the eye ? Is it a reproach to a man if he starve and keep away from acts blameable by the world rather than fill his stomach by the disgraceful practice of mendicity?

3. There are none who, using poverty as a pretext, venture not to adopt the mean habit of mendicity. Will the excellent go (for alms) to any others but those who will embrace them and say " please come and eat in our house."

Digitized by Google

(யாசிப்பதாகிய) அற்பவழியில், செல்லாரும் அல்லர் - நடவாமலு மிரார்; புல்லா - தழுவிக்கொண்டு, அகம் புகுமின் - எமது வீட்டிற்கு வாருங்கள், உண்ணுமின் - சாப்பிடுங்கள், என்பவர் மாட்டு அல்லால்- என்கிறவரிடத்து அல்லாமல், மேல் - மேலானவர், முகம் - மற்றவ ரிடத்தில், புகுதல் - செல்வதை, ஆற்றுமோ - பொறுப்பார்களோ; [முகம்புகுதல் - முகங்காட்டுதலுமாம்,] எ-று.

வறுமையால் யாசிக்கும்படி நேரிட்டாலும் கண்டவிடத்துச் செல்லாமல் ஆதரிப்பவரிடமே செல்லுவர் மேலானவர்.

இல்லாமை—எதிர்மறைத்தொழிற்பெயர்; இல் - பண்படி, பகுதி. ஆகாரம் - சாரியை, மை - விகுதி. இரவு—தொழிற்பெயர், உ-விகுதி. செல்லாரும் — இழிவு சிறப்பும்மை. மேல்—ஆகுபெயர்; சொல்லள வில் அஃறிணையாதலால் ஆற்றும் என்கிறவினை சேர்க்கப்பட்டது. (ந)

திருத்தன்னை நீப்பினுந் தெய்வஞ் செறினும்
உருத்த மனத்தோ டுயர்வுள்ளி னல்லால்
அருத்தஞ் செறிக்கு மறிவிலார் பின்சென்
றெருத் திறைஞ்சி நில்லாதா மேல்.

(இ - ள்.) திரு - லக்ஷ்மியானவள், தன்னை நீப்பினும் - தன்னைக் கைவிட்டாலும், தெய்வம் செறினும் - தெய்வமானது கோபித்தாலும், உருத்த - (சோர்வின்றி) எழுந்த, மனத்தோடு - மனதினால், உயர்வு உள்ளின் அல்லால் - தன் மேன்மையை நினைப்பதேயல்லாமல், அருத் தம் செறிக்கும் - பணத்தை வீணாச் சேர்த்துவைக்கிற, அறிவு இலார் பின் சென்று - விவேகமில்லாதவ ரிடத்திற் போய், எருத்து இறை ஞ்சி - தலை குனிந்து, நில்லாது - நிற்கமாட்டார், மேல் - மேலானவர், எ-று.

பெரியோர் தமக்குத் தரித்திரமும் பல சங்கடங்களும் சேர்ந்தா லும் அதைரியப்படாமல் தமது மேன்மையை எண்ணி இரவாதிருப் பார்களே யல்லாமல் யாசகர்க்கு உபயோகப்படுத்தாமற் பணஞ் சேர்த்துவைக்கிற அவிவேகிகளிடத்திற்போய் தலைவணங்கி நிற்கமாட் டார் என்பதாம்.

உருத்த—உரு - பகுதி, த் - இறந்தகால இடைநிலை, மற்றொன்று சந்தி, அ - பெயரெச்சவிகுதி. உள்ளின் என்பது வினையெச்சமாத் தோன்றினும் 'நீ வரவேண்டும்' முதலானவிடத்திற் கொள்வதுபோல் தொழிற்பெயராக் கொள்க; வினையெச்ச மாகவே கொண்டால்

---

4. Though Lukshmi withdraws and Gods frown on them, the excellent, ever mindful of their dignity, will not stand with bended necks before those ignorant men who heap up their wealth in vain.

Digitized by Google

பொருள் பொருந்தாமை காண்க. பின்—ஏழனுருபு. எருத்து—ஆகு பெயர், பிடர்வணங்க என உரைக்கினும் பொருந்தும். (ச)

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை - இரவினை
உள்ளுங்கா லுள்ள முருகுமா லென்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

(இ-ள்.) கரவாத - (தனக்கு உள்ளதை) மறைக்காத, திண் அன்பின் - உறுதியான அன்பினாலே, கண் அன்னார் கண்ணும் - (தமக்குக்) கண்போன்றவரிடத்தும், இரவாது வாழ்வது - யாசிக்காம லிருந்து வாழ்வது, வாழ்க்கை ஆம் - நல்ல வாழ்வாகும்; இரவினை - இரத்தலை, உள்ளுங்கால் - நினைத்தால், உள்ளம் உருகும் - மனம் உருகிப்போகின்றது; கொள்ளும் கால் - (ஒருவர் கைப்பொருளைக்) கொள்ளும்போது, கொள்வார் குறிப்பு - பெற்றுக் கொள்ளுகிறவருடைய மனம், என் கொலோ - எப்படிப்பட்டதா யிருக்குமோ, எ-று.

மனமொத்தவரிடத்தும் இரப்பதாகாது, ஏனெனில் இரத்தலை நினைக்கும்போதே மன முருகுமானால் பொருளை ஒருவர் கொடுக்கப் பெற்றுக்கொள்ளும்போது எப்பாடு படுமோ என்பதாம். என்ன எண்ணிப் பிறர்பொருளைக் கொள்ளுகிறார்களோ எனவும் கருத்துக் கூறலாம்.

குறிப்பு—அதன் கருவிக்கு ஆகுபெயர். ஆல் - அசை. உள்ளுங் கால், கொள்ளுங்கால்,—இரண்டும் பெயரொச்சத்தொடர். இரவினை—இரவு - தொழிற்பெயர், இன் - சாரியை, ஐ - உருபு. (ரு)

இன்னா வியைக இனிய வொழிகென்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற் - கென்னைகொல்
காதல் கவற்று மனத்தினாற் கண்பாழ்பட்
டேதி லவரை யிரவு.

(இ-ள்.) இன்னா - துன்பங்கள், இயைக - (நமக்கு) சேரட்டும், இனிய - இன்பங்கள், ஒழிக - நீங்கட்டும், என்று—, தன்னையே - தன்

---

5. To live without begging even from those who are strong in affection and dear as the eye is life indeed. Since one's heart melts with anguish at the mere thought of mendicity, what must be their feelings when they actually receive alms?

6. Why should one be so blinded by his covetous desire as to go and beg of others, when he could overcome the afflictions of poverty by comforting himself saying let all that is productive of pleasure depart and all that is afflictive come upon me.

Digitized by Google

மனதையே, தான்—, நிரப்ப-நிரம்பச் செய்வதனால், [திர்ப்த்திப் படுத்துவதனால்], தீர்வதற்கு - தீர்ந்துபோம்படியான வறுமைக்காக, காதல் கவற்றும் - பணத்தாசை கவலைப்படுத்துகிற, மனத்தினால்—, கண்பாழ்பட்டு - அறிவு அழிந்து, ஏதிலவரை - சம்பந்த மில்லாதவர்களை, இரவு - இரப்பது, என்னைகொல் - என்னபிரயோசனம், எ-று.

இன்பத்தைத் துன்பம்போலவும் துன்பத்தை இன்பம்போலவு மெண்ணி மனதிற் திர்ப்தியடைந்தால் தரித்திரத் துன்பம் நீங்குவதாயிருக்க அயலாரிடம் சென்று இரப்பதேன்; அது செய்யவேண்டாம் என்கிறபடி.

இன்னா — இனிமையடியாகப் பிறந்த எதிர்மறைப் பலவின்பால் குறிப்பு வினையாலணையும் பெயர். "இனையவும் பண்பிற் கியல்பே" என்றதனால் பகுதி இகரமுங் கெட ஆகாரவிகுதி புணர்ந்தது; "ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்." இனிய—அந்தப்பண்பில் உடன்பாட்டு வினையாலணையும் பெயர். இயைக, ஒழிக,—பிரார்த்தனையின்கண்வந்த வியங்கோள். தான் இரப்ப எனப்பிரித்து தன்மனதைத் தான் வேண்டிக்கொள்வதனால் என்றுரைப்பாரு முண்டு. தீர்வதற்கு— வினையாலணையும் பெயர். கொல் - அசை. கண்—ஆகுபெயர். ஏதும் [யாதொரு தொடர்ச்சியும்] இல்லாதவர் ஏதிலவர், அகரம் - சாரியை. (௬)

என்றும் புதியார் பிறப்பினு மிவ்வுலகத்
தென்று மவனே பிறக்கலான் - குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட
விரப்பாரை யெள்ளா மகன்.

(இ - ள்.) குன்றின் பரப்பு எல்லாம் - மலையினுடைய இடங்களிலெல்லாம், பொன் ஒழுகும் - பொன்னானது ஓடும்படியான, பாய் - பாய்கின்ற, அருவி நாட - மலைவெள்ளத்தை யுடைத்தான நாட்டையுடையவனே!, இ உலகத்து - இவ்வுலகத்தில், என்றும் - எக்காலத்திலும், புதியார் - புதுமனிதர், பிறப்பினும் - பிறந்துகொண்டிருந்தாலும், என்றும்—, பிறக்கலான் - பிறவாதவன், அவனே—, (எவனென்றால்), இரப்பாரை - யாசிப்பாரை, எள்ளா மகன் - இகழாத மனிதன்.

யாசகரை அவமதியாமல் ஆதரிப்பவனே புதிது புதிதாய் மனிதர் பிறந்துகொண்டிருக்கு மிவ்வுலகத்தில் பிறவாத நற்கதி யடைவான் என்பதாம்.

---

7. O lord of the country of mountains from whose sides fall streams which throw up gold! Although new persons may be born every day in this world, he alone will not be born again who does not disregard the beggars that come to him.

Digitized by Google

பொன்னின் தொழிலைத் தெரிவிக்கிற ஒழுகும் என்னும் பெயரெச்சம் அருவியாகிய இடப்பெயரோடு முடிந்தது. புதியார்—புதுமையில் மை கெட்டு உகரம் இகரமாய் நிற்க, ஆர் விகுதி புணர்ந்தது. உம் - இழிவு சிறப்பு. பிறக்கலான்—பிற - பகுதி, கு - சாரியை, அல்- எதிர்மறை விகுதி, ஆன் - ஆண்பால் விகுதி; எதிர்கால உடன்பாட்டெதிர்மறை வினைமுற்று. இப்பாட்டு இரத்தலிலுள்ள துன்பத்துக்கிரங்கிக் கொடுப்போரைப் புகழ்ந்தது. இச்சங்கதித் தொடர்ச்சியால் சொல்லப்பட்டது. (எ)

புறத்துத்தன் னின்மை நலிய வகத்துத்தன்
நன்ஞான நீக்கி நிறீஇ யொருவனை
ஈயா யெனக்கென் றிரப்பானே லந்நிலையே
மாயானோ மாற்றி விடின்.

(இ - ள்.) புறத்து - வெளியிலே, [உடம்பில்], தன் இன்மை - தனது வறுமையானது, நலிய - வருத்த, அகத்து - மனதில், தன் நல் ஞானம் - தனது நல்ல விவேகத்தை, நீக்கி - தள்ளி, நிறீஇ - (அவிவேகத்தை) நிலைப்படுத்தி, ஒருவனை - ஒரு தனவானை, எனக்கு—, ஈயாய் என்று - (எதாகிலும்) கொடு என்று, இரப்பானேல் - யாசிப்பானாகில், மாற்றிவிடின் - (அந்தத் தனவான் இல்லையென்று) மறுத்துவிட்டால், அ நிலையே - அவ்விடத்திலேயே, மாயானோ - இறந்துபோக மாட்டானோ, எ-று.

தரித்திரம்பற்றி உடம்பு வருந்துவதனால் விவேகங்கெட்டு ஒருவனிடம்போய் இரக்க, அவன் இல்லையென்று சொன்னால் அந்த யாசகன் உடனே சாவான் என அவனுக்கு இரங்கிச் சொன்னபடி. அவன் அங்கேயே இறந்தால் நல்லதென வெறுத்துச் சொன்னதெனவுமாம்.

நலிய என்னுந் தன்வினை இங்கு பிறவினையாக் கொள்ளப்பட்டது. நிறீஇ—நிறுவு என்னும் வினைப்பகுதியில் ஈறுகெட்டு உகரம் இகரமாகி அளபெடுத்து வினையெச்சமாயிற்று. ஓ—இரக்கத்தின்கண் வந்தது. ()

ஒருவ ரொருவரைச் சார்ந்தொழுக லாற்றி
வழிபடுதல் வல்லுத லல்லால் பரிசழிந்து

---

8. If a person afflicted with poverty, rejecting his own true wisdom, allows his ignorance to govern him and goes to another for alms, will he not on refusal die from shame at that very moment?

9. It is but natural to one to become attached to another and to follow him obediently doing sundry services. Will not that state of poverty which is rather painful, be more plea-

Digitized by Google

செய்யீரோ வென்னு மென்னுஞ்சொற் கின்னுதே
பையத்தான் செல்லு நெறி.

(இ-ள்.) ஒருவர்—, ஒருவனை - மற்றொருவனை, சார்ந்து - சேர்ந்து, ஒழுகல் ஆற்றி - நடத்தலைச்செய்து, வழிபடுதல் - வணக்கமாயிருப்பது, வல்லுதல் அல்லால் - முறைமையல்லாமல், பரிசு அழிந்து - யோக்கியதை கெட்டு, என்னும் செய்யீரோ - ஏதாகிலு முதவி செய்யமாட்டீர்களா, என்னும் சொற்கு - என்று சொல்லுகிற சொல்லைக்காட்டிலும், தான்—, பைய - துன்பமுண்டாக, செல்லும் நெறி - செல்லத்தக்க வழியானது, இன்னுதே - இனிமையா யிராதா, எ-று.

ஒருவன் ஒரு பணக்காரனைச்சேர்ந்து தக்கபடி நடந்து வணக்கத் தோடிருத்தல் உலகத்தின் முறை யல்லாமல் அவனை யாசித்தல் கூடாது. அதனினும் தான் எங்கேயாகிலும் வருத்தப்பட்டுப் போக லாம் என்றபடி.

நெறி என்பதற்குத் தவஞ்செய்யப் போகும்வழி எனப்பொருள் கூறின் தவநெறியை இழித்துக் கூறியதாம். ஒருவனைச்சார்ந்து வணங்கி யிருக்க அவனே ஏதாகிலும் உதவிசெய்தாற் கொள்ளலாமல்லது வாய்திறந்து யாசித்தல் இழிவென்றபடி. இதுவும் அதமபக்ஷமாச் சொன்னது.

ஆனும், ஏனும், ஆகிலும், இப்படிப்பட்ட சொற்கள் உம்மையோடு கூடி விகற்பப்பொருளில் வரும்; ஐயப்பொருளென்பது மிதுவே. சொற்கு—குவ்வுருபு எல்லைப்பொருளில் வந்தது. இன்னுதே—ஏகாரம் - வினு; எதிர்மறையாகி இனியதென்னும் பொருள் பயக்கும். பைய—துன்பப்பொருளதாகிய பை என்னும் வினைப்பகுதியிற் பிறந்த வினையெச்சம், அல்லது பசுமையின் விகாரமாகிய பை என்பதின்மேல் பிறந்த குறிப்பு வினையெச்சமுமாம்; எளிமையாக என்பது பொருள்.()

பழமைகந் தாகப் பசைந்த வழியே
கிழமைதான் யாதானுஞ் செய்க - கிழமை
பொறுஅ ரவரொன்னிற் பொத்தித்தந் நெஞ்சத்
தறுஅச் சுடுவதோர் தீ.

(இ - ள்.) பழமை - ஆதிகால சிநேகத்தை, கந்து ஆக - ஆதாரமாக, பசைந்த வழியே - சிநேகித்த விடத்தில், தான்—, யாதானும்

---

sant to one than begging another for anything to the detriment of his own honor.

10. Let a person on the ground of old friendship do that benevolence which is befitting the affection borne by him to others. If they do not accept it through dissatisfaction, it will then prove to be an unquenchable fire in his mind.

Digitized by Google

கிழமை - ஏதாகிலும் ஒரு தகுந்ததை, செய்க - செய்யவேண்டும்; அவர் - கிழமை செய்யப்பெற்றவர், கிழமை பொறூர் எனில் - அந்த வுரியதை ஏற்றுக்கொள்ளாமற் போனால், (அது) தன் நெஞ்சத்து - தன் மனதில், பொத்தி - பதிந்து, அறு சுடுவது - நீங்காமல் சுடும்படியான, ஓர் தீ - ஒரு அக்கினியாகும், எ-று.

ஒருவர் பழமைபற்றிவந்தால் அவருக்குத் தக்க தேதாகிலும் செய்யவேண்டும். அதை அவர் அதிர்ப்த்தியால் ஏற்றுக்கொள்ளாமற் போனால் செய்தவருக்கு எப்போதும் மனவருத்தமா யிருக்கும் என்றபடி.

பொறுத்தல் - சுமத்தல் எனக்கொண்டு, ஏற்றுக்கொள்ளாமற் போனல் என உரைக்கப்பட்டது.

பசை - பகுதி, ஒட்டுதல். பொறுஅர், அறுஅ, — இரண்டிடத்தும் அளபெடை பாட்டினோசையை நிறைக்க வந்தவை. (கo)

## ௩௨-வது. அதிகாரம்.—Chapter XXXII.

### அவையறிதல்.—Knowing the Assembly.

அதாவது தன்னுடையதும் பிறருடையது மான கல்வி வல்லமைகளை அறிந்து பேசவேண்டு மென்பதைச் சொல்லுகின்றது.

மெய்ஞ்ஞானக் கோட்டி யுறழ்வழி விட்டாங்கோர்
அஞ்ஞானந் தந்திட் டதுவாங் கறத்துழாய்க்
கைஞ்ஞானங் கொண்டொழுகுங் காரறி வாளர்முன்
சொன்ஞானஞ் சோர விடல்.

(இ - ள்.) மெய் ஞானம் கோட்டி - மெய்யான நூலறிவினையுடைய சபையின்கண், உறழ் வழி விட்டு - சேருகிற முறைமையை நீக்கி, ஆங்கு - அவ்விடத்தே, ஓர் அஞ்ஞானம் தந்திட்டு - அறியாமைக்கு உரிய ஒரு பேச்சைச்சொல்லி, அது - அந்தப்பேச்சையே, ஆங்கு - அவ்விடத்தில், அற துழாய் - மிகவும் பரப்பி, கை ஞானம் கொண்டு ஒழுகும் - கசந்த [அருவருத்த] ஞானத்தைக் கைக்கொண்டு நடக்கிற, கார் அறிவாளர்முன் - அயோக்கியமான அறிவுள்ளவரிடத்தில், சொல் ஞானம் - சொல்லத்தக்க ஞானத்தை, சோர விடல் - தளரவிடவேண்டும், எ-று.

---

1. The utterance of words of wisdom should be avoided in the presence of those illiterate people who, rejecting the proper way of joining the assembly of men of true knowledge, conduct themselves there according to their own so called wisdom and reiterate their foolish observations.

Digitized by Google

விவேகிகள் சபையிற்சென்று தெரிந்துகொள்வதைவிட்டு அங்கே மூடப்பேச்சைப் பேசி அதையே ஸ்தாபிக்கிற மூடர்களுக்கு நல்ல விவேகமொழிகளை உறுதிப்படுத்திச் சொல்லாமல் விடவேண்டுமென்பதாம்.

இது தன் மூடப்பேச்சையே ஸ்தாபிக்கிற தீப்புலவனைக்குறித்துச் சொல்லியது. தழாய்—வினையெச்சம், தழாவு - பகுதி, உகரம் கெட்டு யகரவிகுதி புணர்ந்தது. கைஞ்ஞானம் — வினைத்தொகைத் தொடரானாலும் ஞகரம் விரித்தல் விகாரமாய் வந்தது. முன்—ஏழனுருபு, கோடற்பொருளில் வந்தது. இரண்டாம் ஆங்கு அசையுமாம்.

நாப்பாடஞ் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்
தீப்புலவற் சேரார் செறிவுடையார் - தீப்புலவன்
கோட்டியுட் குன்றக் குடிப்பழிக்கு மல்லாக்காற்
றோட்புடைக் கொள்ளா வெழும்.

(இ-ள்.) நா பாடம் சொல்லி - வாய்க்குவந்த பாடத்தைச்சொல்லி, நயம் உணர்வார் போல் - சாரம் அறிந்தவர்களைப் போலே, செறிக்கும் - (பிறனைச்) சேர்க்கிற, தீ புலவன் - அயோக்கியமான புலவனை, செறிவு உடையார் - அடக்கமுடைய நற்புலவர், சேரார் - சேரமாட்டார்கள்; தீ புலவன்—, கோட்டியுள் குன்ற - சபையில் இளைத்துப் போக, குடி - (நற்புலவன்) வமிசத்தை, பழிக்கும் - தூஷிப்பான்; அல்லாக்கால் - அல்லாவிட்டால், தோள் - புஜங்களை, புடைக் கொள்ளா - தட்டிக்கொண்டு, எழும் - (சண்டைக்கு) எழுந்திருப்பான், எ-று.

தன் வாய்க்கு வந்த எதையோ சொல்லி உட்கருத்தறிந்தவன் போலே பாவித்துச் சனங்களைக் கூட்டுகிற டம்பக்காரனை புலவனிடத்து அடக்கமுடையோர் பேசலாகாது, ஏனெனில் அவன் தன் பேச்சுக்குத் தாழ்மை வந்தால் நியாயஞ்சொன்னவனை வமிசத்தோடு பழிப்பான் அல்லது சண்டைக்கு எழுவான் என்றபடி.

செறிக்கும்—பிறவினைப் பெயரெச்சம். தீப்புலவற் சேரார்—"இயல்பின் விகாரமும்" என்கிற விதியால் உயர்திணைப்பெயரின் ஈறுதிரிந்தது. குன்ற—நிகழ்காலம். புடை — முதனிலைத் தொழிற்பெயர். கொள்ளா—செய்யா என்னும் வாய்ப்பாட்டெச்சம். (உ)

2. The eminently wise will not consort those petty poets who recite what they have learned by heart and pretend to understand it. If the latter are vanquished in an assembly, they will either reproach their opponents, finding fault with their family or smite their own shoulders and rise up to commence a strife.

Digitized by Google

சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்
கற்றாற்றல் வன்மையுந் தாந்தேறார் - கற்ற
செலவுரைக்கு மாறறியார் தோற்ப தறியார்
பலவுரைக்கு மாந்தர் பலர்.

(இ-ள்.) சொற்று - பேசுவதில், ஆற்று - சக்தியை, கொண்டு - ஆதாரமாக்கொண்டு, சுனைத்து - தினவினால், எழுதல் காமுறுவர் - (வாதுசெய்ய) எழுந்திருப்பதை விரும்புகிறவர்களுமாய், கற்று ஆற்றல் - (பிறர்) கற்றிருக்கும் சாமர்த்தியத்தையும், வன்மையும் - (பிரசங்கித்தல் முதலியவற்றுள்) வல்லமையையும், தாம் தேறார் - தாம் அறிந்து தெளியாதவருமாய், கற்ற - (தாம்) கற்றவற்றை, செல - (பிறர் மனதில்) புகும்படி, உரைக்கும் ஆறு - சொல்லும் விதத்தை, அறியார் - அறியாதவர்களுமாய், தோற்பது அறியார் - தோற்கும்படியானதையும் தெரிந்துகொள்ளாதவர்களுமாய், பல உரைக்கும் - பலவற்றை (வீணாய்ச்) சொல்லுகிற, மாந்தர் - மனிதர், பலர் - அநேகர் (இருக்கிறார்கள்,) எ-று:

தமக்கு மூச்சுவிடாமல் பேசும் வல்லமை யிருப்பதைப்பற்றி வாய்பதைத்தலால் பிறர் நன்றாய்க் கற்றுப் பேசுந் திறத்தையும் அறியாமல் தெரிந்ததைப் பிறருணரச் சொல்லவும் தெரியாமல் எதனாலே தாம் தோல்வி யடைவார்களோ அதுவுந் தெரியாமல் வீணாய்ப் பல பேச்சுப் பேசுகிற மூடரிடமும் சேரலாகாது என்றபடி.

பலவுரைக்கு மாந்தர் பலர் என்பதை எழுவாயாவைத்து காமுறுவர் தேறார் அறியார் எனவு முடிக்கலாம்.

சொற்று—தொழிற்பெயர், று - விகுதி. ஆற்று — முதனிலைத் தொழிற்பெயர். சுனைத்து—து - விகுதி, தொழிற்பெயர் ; சொறிதல் பொருள்; அதன் காரணமாகிய தினவுக்கு வந்தது. தோற்பது—இதுவும் அப்படியே. (ந)

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திர - மற்றதனை

---

3. There are many who, esteeming their own power of speech love to commence a strife with others, knowing not how learned and able are their opponents, how defective they are themselves in expressing what they have learned convincingly to others, and when they are beaten in the strife.

4. The simpleton not having learned anything himself will get by heart a poem taught to another, and expose his

Digitized by Google

நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்.

(இ-ள்.) கற்றதும் இன்றி - கற்குந் தொழிலில்லாமல், [கற்காமல்], கணக்காயர் பாடத்தால் - பண்டிதராகிய உபாத்தியாயர் (பிறருக்குச் சொல்லிக்கொடுத்த) பாடத்தினுல், ஓர் சூத்திரம் - ஒரு சூத்திரத்தை, பேதை - அறிவில்லாதவன், பெற்றது - பெற்றுக் கொண்டவனுகி, அதனை - அச்சூத்திரத்தை, நல்லாரிடை - நல்ல வித்துவான்கள் நடுவே, புக்கு - புகுந்து, நாணுது சொல்லி - வெட்கப் படாமல் சொல்லி, தன் புல் அறிவு - தன்னுடைய ஈனமான அறிவை, காட்டி விடும் - வெளிப்படுத்துவான், எ-று.

பேதையானவன் தான் உபாத்தியாயருக்கு வழிபட்டுக் கற்காமல் பள்ளியில் உபாத்தியாயர் பிறருக்குச் சொல்லுங்கால் தற்செயலாய்த் தெரிந்த தொரு சூத்திரத்தைக் கற்றோர் சபையில் நாணுமல் சொல்ல இவனை யாவரும் மூடனென்று இகழ்வார்க ளென்பதாம்.

இதற்குப் பள்ளியில் சொன்னபாடத்தால் எனப் பொருள் கூறிப் பள்ளியை இழிவாகக் காட்டுவாரு முண்டு. கற்றதூஉம்—அளபெடை இன்னிசைக்கு வந்தது. கணக்கை ஆய்ந்தவர்=கணக்காயர்; கணக்கு—எண்ணும் எழுத்துமாம். பெற்றது—முற்றெச்சம்; இழிவினுல் பேதைக்குக் கூறப்பட்டது; "உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும் இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே." ஆம், மற்று,—இரண்டும் அசை. புக்கு—புகு என்னும் பகுதி ககரமிரட்டிக் காலங் காட்டி உகர விகுதிபெற்ற வினையெச்சம். (ச)

வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
ளார், கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ-டொன்றி,
யுரைவித் தகமெழுவார் காண்பவே கையுட்
சுரைவித்துப் போலுந் தம்பல்.

(இ - ள்.) வென்றி பொருட்டால் - பிறனை வெல்வதாகிய காரணத்தால், விலங்கு ஒத்து - மிருகங்களோடு சமானமாக, மெய் கொள்ளார் - உண்மைப் பொருள் கொள்ளாதவராகி, கன்றி கறுத்து - மிகக் கோபித்து, எழுந்து - (போருக்கு) ஆயத்தமாகி, காய்வாரோடு - ஆக்

---

ignorance in the assembly of the learned by reciting it as his own.

5. Those who attempt to convince by their own learning those angry persons who like wild beasts contend only for victory and who with wrathful minds receive not what is truth, will see their own teeth in their hands like the seeds of the gourd.

Digitized by Google

இரகப் படுவாரோடு, ஒன்றி - சேர்ந்து, வித்தகம் உரை - கல்வியைச் சொல்வதற்கு, எழுவார் - எத்தனப் படுபவர், சுரை வித்து போலும் - சுரையின் விரைபோன்ற, தம் பல் - தம்முடைய பற்களை, கையுள் - தமது கையிலே, காண்ப - காண்பார்கள், எ-று.

எதையாகிலும் சொல்லி எதிரியை ஜயிக்கப்பார்க்கிறவர்களுக்கு நற்கல்வியைச் சொல்லப்போனால் பல்லை உதிர்த்துக் கையிற் கொடுப்பார்கள். பல் உதிரும்படி அடிப்பார்கள் என்பதாம்.

உரை — முதனிலையே வினையெச்சப் பொருட்டாய் வந்தது. "வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்கிற சூத்திரத்தின் உரையைக் காண்க. வென்றிப்பொருட்டு—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கொள்ளார்—முற்றெச்சம். கன்றிக்கறுத்து—"ஒருபொருட்பன்மொழி சிறப்பினின்வழா" என்பதனால் அமைந்தது. ஏ-அசை. (ரு)

பாடமே யோதிப் பயன்றெரித றேற்றாத
மூடர் முனிதக்க சொல்லுங்கால் - கேடருஞ்சீர்ச்
சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே மற்றவரை
யீன்றாட் கிறப்பப் பரிந்து.

(இ-ள்.) பாடமே ஓதி - (ஒருபாட்டை) வாய்பாடமா மாத்திரஞ் சொல்லி, பயன் தெரிதல் - அதன்பொருளை அறிவதிலே, தேற்றாத - தேறாத, [தெளிவில்லாத], மூடர்—, முனி தக்க - கோபிக்கும்படியான சொற்களை, சொல்லுங்கால் - சொல்லும்போது, கேடு அரு சீர் - கேடில்லாத மேன்மையையுடைய, சான்றோர் - பெரியோர், அவரை ஈன்றாட்கு - அந்த வைதவரைப் பெற்ற தாய்க்கு, இறப்ப பரிந்து - மிகவும் இரங்கி, சமழ்த்தனர் நிற்ப - வெட்கினவராகி நிற்பார்கள், எ-று.

பாடல்களின் பொருள்நுட்ப மறியாத மூடர் திட்டினால் பெரியோர் வெட்கி நிற்பார்கள், ஏனென்றால் இந்த மூடப்பிள்ளையைப் பெற்றவள் என்ன பயனடைவாளென்று என்பதாம். அன்றியும், நாம் இவனைச் சபிப்பதனால் இவன் கேடுற இவன் தாய் வருந்துவாளே என்று சும்மா நிற்கிறார்களெனவுமாம்.

பாடமே—ஏகாரம் - பிரிநிலை. முனிதக்க—முனிதலுக்குத்தக்க; முனி—முதனிலைத் தொழிற்பெயர். நிற்பவே—ஏ - அசை. (சு)

6. When the ignorant who does not know the meaning of the poem they recite, speak anger-exciting words, the excellent whose renown is imperishable, being greatly ashamed of them, will stand grieving much for the mothers who gave birth to them.

Digitized by Google

பெறுவது கொள்பவர் தோள்போ னெறிபட்டு
கற்பவர்க் கெல்லா மெளியநூன் மற்றம்
முறிபுனை மேனிய ருள்ளம்போன் றியார்க்கு
மறிதற் கரிய பொருள்.

(இ - ள்.) எல்லா நூல் - சாஸ்திரங்களெல்லாம், பெறுவது கொள்பவர் - பெறத்தக்க பொருளைக் கொள்கிற வேசிமாருடைய, தோள் போல் - புஜங்களைப்போல, நெறி பட்டு - (ஆசிரியன்) வழிப் பட்டு, கற்பவர்க்கு - கற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு, எளிய - சுலபத்தில் கிரகிக்கத் தக்கன ஆம்; அ முறி புனை மேனியர் - தளிரை ஒத்த மேனியை யுடைய அந்த வேசிமாருடைய, உள்ளம் போன்று - மனதை ஒத்து, மற்று யார்க்கும் - (அப்படி கல்லாத) எவர்களுக்கும், அறிதற்கு அரிய பொருள் - அறிய சுலபமாகாத பொருளுடையன ஆம்; எ-று.

கிரமப்படி கற்பவர்க்கு எந்தநூலும் சுலபமாம்; அப்படி கற்கா தவர்களுக்கு எதுவும் கடினமாம் என்றபடி.

எளிய — எளிமைப்பண்படியாகப் பிறந்த பலவின்பாற் குறிப்பு வினை முற்று. அரிய—அருமையடியாப் பிறந்த பெயரொச்சம். (எ)

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

(இ-ள்.) புத்தகமே சால தொகுத்தும் - புத்தகங்களை மாத்திரம் மிகுதியாகச் சேர்த்தும், பொருள் தெரியார் - (அவற்றின்) பொருளை அறியாதவராகி, உய்த்து - கொண்டுவந்து, அகமெல்லாம் நிறைப்பி னும் - வீடெல்லாம் நிறைத்தாலும், அவற்றை போற்றும் புலவரும் வேறே - அப்புத்தகங்களைப் பாதுகாக்கும் புலவரும் வேறு யிருப்பார் கள்; பொருள் தெரிந்து - அவற்றின் அர்த்தங்களை அறிந்து, தேற்றும்

---

7. Science can be easily acquired by all students who obediently follow their preceptors in seek of knowledge, just like the shoulders of courtesans who receive all they can get. But to others it is as difficult to be understood as the minds of those courtesans whose body is soft and beautiful, and tender as flower buds.

8. Those men who store up in their houses a large collection of various books without knowing their meaning are learned men of one kind, and those who are able both to understand them themselves and to explain them to others are of another kind.

Digitized by Google

புலவரும் வேறு - (பிறரை) தேறச்செய்யும் வித்துவான்களும் வேறு யிருப்பார்கள், எ-று.

புத்தகங்களை மிகுதியாச் சேர்த்ததனாலே புத்தக பரிபாலகரா வார்களே யன்றி வித்துவான்க ளாகமாட்டார்கள். அவற்றின் பொருளைத் தாமறிந்து பிறர்க்குப் போதித்துத் தெளியச்செய்பவரோ வித்துவான்களாவார் என்பதாம்.

புத்தகமே—ஏகாரம் - பிரிநிலை. அவர்களைப் புலவர் என்றது பரிகாசம். தொகுத்தும்—உம் - உயர்வு சிறப்பு; இழிவு சிறப்பெனக் கொள்ளுவாரு முண்டு. வேறு—இடம் பால்களுக்குப் பொதுவான குறிப்பு முற்று. "வேறில்லை யுண்டைம்பான் மூவிடத்தன". (அ)

பொழிப்பகல நுட்பநூ லெச்சமுந் நான்கிற்
கொழித்தகலங் காட்டாதார் சொற்கள் - பழிப்பி
னிரையாமா சேர்க்கு நெடுங்குன்ற நாட
வுரையாமோ நூலிற்கு நன்கு.

(இ - ள். பழிப்பு இல் - குற்ற மில்லாத, நிரை ஆ மா - கூட்டமாகிய காட்டுப்பசுக்களை, சேர்க்கும் - தம்மிடத்திலே சேரச்செய்கிற, நெடு குன்ற நாட - உன்னதமான மலைகளுள்ள நாட்டையுடைய அரசனே!, பொழிப்பு - (கருத்து விள்ளும்படி தொகுத்துச்சொல்லுகிற) பொழிப்புரையும், அகலம் - (பதப்பொருள் முதலியவற்றை நியாயங் காட்டி விரித்துச்சொல்லுகிற) அகலவுரையும், நுட்பம் - (அதின் சாரங்களைக்காட்டுகிற) நுட்பவுரையும், நூல் எச்சம் - (நூலில் சொல்லப்படாமற் குறைந்த விஷயங்களை எடுத்துச்சொல்லும்) விசேஷவுரையும், நான்கின் - ஆகிய நான்குவகையிலும், கொழித்து அகலம் காட்டாதார் சொற்கள் - நன்றாய் ஆராய்ந்து பொருள் விரிவைக்காட்ட மாட்டாதவர் செய்த நூல்கள், நூலிற்கு - நூல்களுக்கு, நன்கு உரை ஆமோ - நல்லதான உரையாகுமோ, [ஆகாது], எ-று.

பல வகையிலும் பொருளை விரித்துக் காட்டமாட்டாதவர்கள் உரை சிறப்பில்லை என்பதாம். மலைகள் தாமிருக்கும் செழிப்பினால் பசுக்களை வந்து சேரும்படி செய்கின்றன என மலைகளைச் சிறப்பித்தபடி.

நன்கு—பண்புப்பெயர், உரைக்கு விசேஷணம். (க)

9. O lord of the lofty mountains where the wild oxen resort in herds! Can the commentaries of those persons be characterized as excellent and faultless, if they do not set forth clearly the scope and substance of the text and give full explanation thereof with illustrations and special remarks.

Digitized by Google

இற்பிறப் பில்லா ரெனைத்துநூல் கற்பினுஞ்
சொற்பிறரைக் காக்குங் கருவியரோ - இற்பிறந்த
நல்லறி வாளர் நவின்றநூ றேற்றுதார்
புல்லறிவு தாமறிவ தில்.

(இ-ள்.) இல் பிறப்பு இல்லார் - நற்குடிப்பிறப்பு இல்லாதவர், எனைத்து நூல் கற்பினும் - எவ்வளவு சாஸ்திரங்களை வாசித்தாலும், பிறர் சொல்லை காக்கும் - (கல்லாத) பிறருடைய சொற்களை (இகழா மல்) காக்கும்படியான, கருவியரோ - (அடக்க முதலான) சாதனங் களை உடையவரோ, [அல்லர்]; இல் பிறந்த நல் அறிவாளர் - நற்குடி யிற்பிறந்த விவேகிகள், நவின்ற நூல் தேற்றுதார் - (பெரியோர்) செய்த நூல்களில் தெளியாதவருடைய, புல் அறிவு - ஈனமான அறி வை, தாம் அறிவது இல் - (உன்னித்து) தாம் அறிந்துகொள்வது மில்லை, [உபேக்ஷையாயிருப்பார்கள் என்றபடி], எ-று.

குல சம்பிரதாயத்திற் பிறவாதவர்கள் எவ்வளவு கற்றும் பிறர் சொல்வதில் நேர்ந்த வழுக்களைத் தூற்றுவாரேயல்லது வெளிப்படுத் தாமல் விடார். குலப்பிறப் புள்ளவர்களோ குல சம்பிரதாயத்தால் அவ்வழுக்களைக் கவனிப்பது மில்லை; ஆனபோது வெளியிட்டுத் தூற் றுவ தேது என்றபடி.

எனைத்து—எனை என்பதோ ரிடைச்சொன்மேல் து - விகுதி வந் தது; ஐ - சாரியை எனவுமாம். பிறரை என்பதிலுள்ள ஐ யுருபைப் பிரித்துச் சொல் என்பதோடு கூட்டிக்கொள்ளவேண்டும். தேற்று தார்—இது பிறவினையாதலின் தம்மை என ஓர் செயப்படுபொருளை வருவித்து உரைத்துக்கொள்க. இல்—இல்லை யென்பதில் ஐ விகுதி குன்றியது. இல்லை என்பது செயப்படுபொருள் குன்றியதும் குன்றா ததுமா யிருப்பதனுல் அறிவதில் என்றதை எழுவாய்த் தொடராக வேனும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவேனும் கொள்க. இதனுல் கல்விமாத்திரமல்ல இற்பிறப்பு முடையவர் கோட்டியிற் சென்றுல்தான் இகழ்ச்சி நேராது என்று அறிவுறுத்தியதாம். முந்தி ஆறுபாட்டால் அயோக்கிய சபையின் திறத்தைக்காட்டிப் பின் மூன்று பாட்டால் குருவினிடத்தில் நன்றாய்க் கற்றுலல்லது கல்வித்திற முண் டாகாதென்று முந்திச் சொன்னதின் தொடர்ச்சியாற் காட்டி அயோக்

10. Those who are not born of a good family, though they be ever so learned, possess not qualities necessary to pass over without censure the faults that occur in the speeches of others; while the truly wise, born of a good family, mind not the despicable learning of those who do not understand the works of the great.

Digitized by Google

இய சபையையும் யோக்கிய சபையையும் விவரித்தார் என அதிகாரத்துக்கு இசையக் கூட்டிக்கொள்க. (௧0)

## ௩௩ - வது. அதிகாரம்.—XXXIII.

### புல்லறிவாண்மை.—The Fool's self-conceit.

அதாவது புல் - அற்பமான, அறிவாண்மை - அறிவை ஆளுந் தன்மை. அதாவது, சாரத்தையும், அசாரத்தையும் அறிந்து கொள்ளாமையோடு கர்வப்படுவதுமாம்.

அருளி னறமுரைக்கு மன்புடையார் வாய்ச்சொற்
பொருளாகக் கொள்வர் புலவர் - பொருளல்லா
வேழை யதனை யிகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு.

(இ-ள்.) அருளின் - கிருபையினால், அறம் உரைக்கும் - தருமங்களைச் சொல்லுகிற, அன்பு உடையார் - (யாவரிடத்தும் இயற்கையில்) அன்புள்ளவர்களுடைய, வாய் சொல் - வாக்கிலிருந்து வருஞ் சொற்களை, புலவர் - விவேகிகள், பொருளாக கொள்வர் - (தமக்கு) ஒரு பிரயோசனமாக ஏற்றுக்கொள்வார்கள்; பொருள் அல்லா - ஒரு வஸ்துவே யாகாத, ஏழை - மூடன், அதனை - அப்பெரியோர் சொல்லை, மூழை - துடுப்பு, பால் கூழை - பாற்சோற்றினது, சுவை உணராது ஆங்கு - உருசி யறியாதது போல (அறியாமல்), இகழ்ந்து உரைக்கும் - தூஷித்துப் பேசுவான், எ-று.

பெரியோர் நற்புத்தி போதித்தால் யோக்கியர் அதைத் தமக்கொரு பேறாகக் கொள்வர், மூடரோ அதைத் தூஷிப்பார் என்றதாம்.

கூழை—வேற்றுமை மயக்கம். உணராது - உணராத, மூழை ஆங்கு எனவு முரைக்கலாம். உணராது — வினையாலணையும்பெயர்; மூழை கருத்தாவானபோது தொழிற்பெயர். (௧)

அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்
செவ்விய ரல்லார் செவிகொடுத்துங் கேட்கலார்

---

1. The learned will esteem as precious the speeches of those who through benevolence declare what is virtuous, while fools who are worthless, despise them, just as the ladle that appreciates not the flavour of the milk-porridge.

2. Men destitute of rectitude will not even listen to the ways of virtue taught by those who are free from envy and other evils, just as the chuckler's dog that gnaws and devours

Digitized by Google

கவ்வித்தோ றின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளறேற்ரு தாங்கு.

(இ - ள்.) தோல் கவ்வி தின்னும் - தோலைக் கவ்வித் தின்று கொண்டிருக்கிற, குணுங்கர் நாய் - புலையருடைய நாயானது, பால் சோற்றின்—, செவ்வி கொளல் - ருசியைக் கொள்ளுதலிலே, தேற்ரு து ஆங்கு - தெளிவில்லாததுபோலே, அவ்வியம் இல்லார் - பொருமை முதலிய மனக்கோட்ட மில்லாதவர், அறத்து ஆறு உரைக்கும் கால் - தருமமார்க்கங்களைச் சொல்லும்போது, செவ்வியர் அல்லார் - நற்குண மில்லாதவர்கள், செவி கொடுத்தும்—, கேட்கலார் - கேளார்கள், எ-று.

இதிலும் முந்தியபாட்டின் கருத்தே அமைந்தது கவிகள் வெவ்வேருகையால். ஒரு விஷயத்தையே பலவிதத்திற் கூறுதல் கவித்திற மெனினுமாம். செல்வருடைய நாயாகில் நல்லுணவு தின்றிருக்கும், குணுங்கர் நாயாதலின் அஃதில்லை; தோலைத் தின்கின்றது என்றபடி. செவிகொடுத்தும் — செவிகொடுப்பதுபோல் பாவனையே யல்லது அஃதில்லை என்பது கருத்து.

உம்மை—இழிவு சிறப்பு. கேட்கலார்—கேள் - பகுதி, கு - சாரியை, அல் - எதிர்மறை விகுதி, ஆர் - பலர்பால் விகுதி. (உ)

இமைக்கு மளவிற்றம் மின்னுயிர்போ மார்க்கம்
எனைத்தானுந் தாங்கண் டிருந்துந் - தினைத்துணையும்
நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்
பொன்றிலென் பொன்ருக்கா லென்.

(இ-ள்.) இமைக்கும் அளவில்—, தம் இன் உயிர் - தமது இனிய பிராணம், போம் மார்க்கம் - போகும் வழியை, எனைத்தானும் - எல்லாப் பிரமாணங்களாலும், தாம் கண்டு இருந்தும் - தாங்கள் பார்த்திருந்தும், தினை துணையும் - தினையளவாயினும், நன்றி - (தருமங்களைக் கேட்பதும் அங்ஙனம் நடப்பதுமாகிய) நற்காரியங்களை, புரிகல்லா - செய்யாத, நாண் இல் மட மாக்கள் - வெட்க மில்லாத மூட ஜனங்கள், பொன்றில் என் - இறந்தாலென்ன, பொன்ருக்கால் என் - இறவாம லிருந்தாலென்ன, எ-று.

---

leather, is incapable of relishing the taste of the milk porridge.

3. Although they see by numerous examples how their precious life may depart in the twinkling of the eye, yet fools do no good even to the extent of a grain of millet. What does it matter whether such shameless stupid people live or die?

Digitized by Google

பிரத்தியக்ஷம் முதலானவைகளால் உயிர்போவது தெரிந்திருக்கவும் தருமங் கேட்டு ஆசரியாதவர் இறந்தும் நஷ்டமில்லை இறவாதிருந்தும் லாபமில்லை என்றதாம்.

எனைத்தானும்—முற்றும்மை ஆகலின் எல்லாவற்றானும் என்று உரைக்கப்பட்டது. எனைத்தானும் போம் மார்க்கம்—எவ்வகையிலாயினும் போம் வழியை எனவு முரைக்கலாம். நன்றி—பண்படியாப் பிறந்த பெயர். நாணில்—தர்மாசரணை செய்கிற பலனைக் கண்டும் நாணாத. (ங)

உளநாள் சிலவா லுயிர்க்கேம மின்றாற்
பலர்மன்னுந் தூற்றும் பழியாற் - பலருள்ளுங்
கண்டாரோ டெல்லா நகாஅ தெவனொருவன்
தண்டித் தனிப்பகை கோள்.

(இ-ள்.) உள நாள் சில - வாழ்தற்கிருக்கிற நாள்கள் அற்பம்; உயிர்க்கு - பிராணனுக்கு, ஏமம் இன்று - (உடம்பை விட்டுப் போக வொட்டாத) காவலில்லை; பலர் - அநேகர், தூற்றும் - வியாபிக்கச்செய்கிற, பழி - நிந்தைகள், மன்னும் - அதிகமா யிருக்கின்றன; பலருள்ளும் - உலகத்திலுள்ள பலபேருக்குள்ளும், கண்டாரோடு எல்லாம் - காணப்படுகிற யாவரோடும், நகாது - (இன்பமாய்ப் பேசிச்) சிரியாமல், ஒருவன்—, தண்டி - கெட்டு, தனி - தனியாயிருந்து, பகை கோள் - பகைகொள்ளுதல், எவன் - என்னபயன் ? எ-று.

வாழ்நாளோ சிறிது ; உயிரைப் போகவொட்டாமல் தடுக்கவோ வழியில்லை ; உலகத்தார் தூஷணையோ அநேகம் ; இப்படி யிருக்க, நமக்குக்கிட்டின நல்லோரோடு சிநேகமா யிருப்பதை விட்டு மூடன் பகை கொள்வதிற் பயனென்ன, கேடுதான் பயன் என்பதாம்.

ஆல் - மூன்றும் அசை. ஏமம் இன்று என்பதற்கு சந்தோஷம் இல்லை எனவும் பொருள் கூறலாம். கோள்—முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர். ஒருவன் அங்கேபோய் அடிபட்டதை, அங்கே அடிபடப்போனான் என்பதுபோல் பகை கொள்வதினால் வருங் கேட்டை, கெட்டுப் பகைகொளல் என்றார் ; நிச்சயத்தினால் கெட்டு என இறந்தகாலம் கூறப்பட்டது [பொது - சூ - ௩௩.] (ச)

---

4. Since the days of life are few and as there is nothing to guard against death, and as the reproach of the world is great, what will one gain by cherishing hatred in his heart and keeping aloof without being friendly with the (good) people with whom he comes across ?

Digitized by Google

எய்தி யிருந்த வவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை - வைய
வயப்பட்டான் வாளா விருப்பானேல் வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்.

(இ-ள்.) எய்தி இருந்த அவை முன்னர் - பலர் கூடியிருந்த சபைக்கு முன்னே, ஒருவன்—, சென்று - போய், ஒருவனை - (அங்கிருக்கும்) ஒருவனை, எள்ளி - இகழ்ந்து, வைதான் - திட்டினவனாயிருக்க, வைய வயப்பட்டான் - திட்ட உட்பட்டவன், வாளா இருப்பானேல் - (பொறுத்து) சும்மா இருப்பானானால், வைதான் - திட்டினவன், வாழுமெனின் - வாழ்ந்துகொண்டிருந்தால், வியத்தக்கான் - ஆச்சரியப்படத் தக்கவன் (ஆவன்), எ-று.

புத்தியீனனாகிய ஒருவன் ஒரு சபையிற் சென்று காரணமின்றி யொருவனைத் திட்ட, அப்படி திட்டப்பட்டவன் அதைப் பொறுத்துக் கொண்டு சும்மா இருக்க, அந்தத் திட்டினவன் வாழமாட்டானென்பது கருத்து.

முன்னர்—ஏழனுருபுமாம். முதல் வைதான் என்பதோடு ஆக என்றொரு சொற்கூட்டி வினையெச்சமா முடித்துக்கொள்க. வயப்பட்டான்—வசப்பட்டான். விய என்னு முதனிலை வியக்க என்னும் வினையெச்சமா நின்றது. (௫)

மூப்புமேல் வாராமை முன்னே யறவினையை
ஊக்கி யதன்கண் முயலாதா - னூக்கிப்
புறத்திரு போகென்னு மின்னாச்சொ லில்லாட்
டொழுத்தையாற் கூறப் படும்.

(இ-ள்.) மேல் - (தன்) மேல், மூப்பு வாராமை முன்னே - கிழத்தனம் வாராமைக்கு முன்னேயே, அறவினையை - தரும காரியத்தை, ஊக்கி - மேற்கொண்டு, அதன்கண் முயலாதான் - அந்த விஷயத்தில் முயற்சி செய்யாதவன், இல்லுள் - (தன்) வீட்டில், தூக்கி - தள்ளி, புறத்து இரு - வெளியிலே இரு, போக என்னும் - (இவ்விடம் விட்டு) போகக்கடவாய் என்கிற, இன்னா சொல் - இனிமையில்லாத சொல்லை,

---

5. If a person goes to a public assembly and there reproaches another in a despicable language, and should the reproached bear it with patience, then it is indeed an object of wonder if the reviler should afterwards live and prosper.

6. To him who perseveres not in practising virtue before old age comes upon him, even his own servant-girl will, after pushing him out of doors, say the harsh words, "stay out" and "go away."

Digitized by Google

தொழுத்தையால் - வேலைக்காரியாலும், கூறப்படும் - சொல்லப்படு வான், எ-று.

மூப்புவராமுன்னமே தருமகாரியங்களில் முயன்று நடவாதவனை வெள்ளாட்டியும் இகழ்ந்து பேசுவாள் என்பதால், நற்காரியஞ்செய் யாத புத்தியீனனிடத்து அற்பருக்கும் அலக்ஷியமுண் டென்றபடி. மூப்பு வந்தபின் எதுவும் செய்ய இயலாமைபற்றி வாராமை முன்னே என்றார்.

வாராமை—எதிர்மறைத் தொழிற்பெயர். அறமாகிய வினை அற வினை. ஊக்கி—ஊக்கு - பகுதி. மூப்பு—மூத்தல், மூ-பகுதி. தொழுத் தை—தொழு - பகுதி, ஐ - கர்த்தாப்பொருள் விகுதி, தகரம் எழுத் துப்பேறு, மற்றொருதகரம் விரித்தல்விகாரம், வணங்கி யிருப்பவள் என்பது பொருள். கர்த்தாப்பெயர் மூன்றும் வேற்றுமையில் வந்த விடத்து இரண்டுசெயப்படுபொருள் வருமாயின் ஒன்று இரண்டாம் வேற்றுமையிலும் மற்றொன்று முதல் வேற்றுமையிலும் வரும். (சு)

> தாமேயு மின்புறார் தக்கார்க்கு நன்றாற்றார்
> ஏமஞ்சார் நன்னெறியுஞ் சேர்கலார் - தாமயங்கி
> ஆக்கத்துட் டூங்கி யவத்தமே வாழ்நாளைப்
> போக்குவார் புல்லறிவி னார்.

(இ - ள்.) புல் அறிவினார்—, தாமேயும் இன்பு உறார் - தாமா கிலும் இன்ப மடையார்; தக்கார்க்கும் - யோக்கியருக்கும், நன்று ஆற் றார் - நன்மை செய்யமாட்டார்; ஏமம் சார் - (உயிருக்கு) காவலாயிருக் கும்படியான, நல் நெறியும் - நல்ல தருமவழியையும், சேர்கலார் - சேரமாட்டார்; தாம் மயங்கி - தாங்கள் மயக்கங்கொண்டு, ஆக்கத் துள் தூங்கி - செல்வத்திலேயே ஒன்றும் தோன்றாம லிருந்து, வாழ் நாளை - (தமது) ஆயுசை, அவத்தமே போக்குவார் - வீணாகவே கழிப் பார்கள், எ-று.

புத்தியீனர் செல்வத்தையே சதமாகக்கொண்டு யாதொரு நற் காரியமுஞ் செய்யாமல் தமது வாணாளை வீணாக்குவர் என்பதாம்.

தாமே—ஏகாரம் பிரிநிலை, விகற்பமுமாம். இன்பு — இன்பம் என்பதின் ஈறு தொகுத்தல். சேர்கலார்—சேர் கு அல் ஆர் - பகுதி சாரியை எதிர்மறை விகுதி, பலர்பால் விகுதிகள். வாழ்நாள்—வினைத் தொகை. (எ)

---

7. Fools enjoy not their wealth themselves, they do no good to the worthy, nor will they pursue a virtuous path which will benefit their souls. They will only whirl confused in the mire of their wealth and pass off their life in vain.

Digitized by Google

சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி
இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்-இறுகிறுகிப்
பின்னறிவா மென்றிருக்கும் பேதையார் கைகாட்டும்
பொன்னும் புளிவிளங்கா யாம்.

(இ - ள்.) சிறு காலையே - இளமையிலேயே, தமக்கு செல்வுழி - தாம் (மரணமடைந்தபின்) போமிடத்துக்கு, வல்சி - (தருமமாகிய) சோற்றை, இறுக இறுக - மிகவும் அழுத்தமாக, தோள் கோப்பு - தோள் மூட்டையாக, கொள்ளார் - எடுத்துக் கொள்ளாதவர்கள், இறுகி இறுகி - (பணத்தைச்) சிக்கெனவாக்கொண்டு, பின் அறிவாம் - (தருமத்தைப்) பின்னே யோசிப்போம், என்று இருக்கும்—, பேதையார் - புத்தியீனர், கை காட்டும் - (மரணகாலத்தில்) கையால் உருவம் காட்டுகிற, பொன்னும் - பொன் உருண்டையும், புளி விளங்காய் - புளிப்பாகிய விளாங்காய் (ஆகும்,) எ-று.

நல்ல பருவத்தில் தருமஞ் செய்யாது விட்டுப் பின்பு பார்த்துக் கொள்வோமென்று பணத்தைச் சேர்த்துவைக்கும் பேதையர் மரணகாலத்தில் வாய் அடைத்துப்போனபோது தாம் வைத்திருந்த பொன்னுருண்டையைத் தம்மவர் எடுத்துக்கொள்ளும்படி கையினால் திரட்சியைக்காட்ட, அங்கிருந்த வஞ்சகர் புளிப்பான விளாங்காய் வேண்டுமென்கிறார் என்று பாவித்து அப்பொன்னைத் தாம் அபகரித்துக்கொண்டு போனாற்போல் சேர்த்துவைத்த பொருள் தம்மவருக்கும் உதவாமற்போம் என்பது கருத்து. இக்காலத்தில் அப்படி நடந்ததுமுண்டு.

தமக்கு — நான்கனுருபு கர்த்தாப்பொருளில் வந்தது. தோள்கோப்பு—தோளில் கோக்கத்தக்க மூட்டை, தொழிற்பெயர் செயப்படுபொருளுக்கு ஆயிற்று. இறுகி இறுகி என்பது இறுகிறுகி என ஈறுதொகுத்த லாயிற்று. மிகுதிப்பொருளைக் காட்டவந்த அடுக்கு. 'பொரிவிளங்காய்' என்று பாடங் கூறுவதுமுண்டு. (அ)

வெறுமை யிடத்தும் விழுப்பிணிப் போழ்தும்
மறுமை மனத்தாரே யாகி - மறுமையை

8. When (at the approach of death) those foolish men who have not in their youth bound up the shoulder-vallet of charity necessary for their journey to the next world but tied up fast their money saying "we will do acts of charity afterwards," make signs for their bundle of money to be brought, they will be understood to say that they want sour wood-apple fruit (to eat).

9. Foolish ignorant men will anxiously contemplate about the next world only when they are afflicted by poverty and

Digitized by Google

ஐந்தை யனைத்தானு மாற்றிய காலத்துச்
சிந்தியார் சிற்றறிவி னார்.

(இ - ள்.) வெறுமை இடத்தும் - பணமில்லாத போதும், விழு பிணி போழ்தும் - விசேஷமான வியாதிவந்த காலத்திலும், சிறு அறிவினார் - அற்பபுத்தி யுடையார், மறுமை மனத்தாரே ஆகி - மறுமைக் குரியதைச் செய்யும் மனதுள்ளவரே யாகி, ஆற்றிய காலத்து - செய்யக் கூடிய காலத்தில், மறுமையை - மறுமைக்கு உரிய தருமத்தை, ஐந்தை அனைத்தானும் - சிறுகடுகின் அளவாகிலும், சிந்தியார் - நினைக்க மாட்டார், எ-று.

புத்தியீனர் தாம் தரித்திரப்படும் போதும் வியாதி யனுபவிக்கும் போதுமே தருமசிந்தை யுடையரல்லது பொருள் கைகூடி செய்யத் தகுந்த காலத்தில் அச்சிந்தை யில்லாதவர் என்பதாம்.

விழுப்பிணி—பண்புத்தொகை. பிணிப்போழ்து — ஆறும் வேற்றுமைத் தொகையாம். மறுமை மனத்தர் - மறுமையி னிடத்து மனதை யுடையவர். ஏலும் என்பதுபோல் ஆனும் என்பதும் வினையெச்சக்குறி; ஆயினும் என்பதின் இடைக்குறையுமாம். மூன்றனுருபெனக்கொண்டு சிந்தனைக் கருவிக்குக் கூட்டினு மமையும். (க)

என்னேமற் றிவ்வுடம்பு பெற்று மறநினையார்
கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை - யன்னோ
அளவிறந்த காதற்றம் மாருயி ரன்னார்க்
கொளவிழைக்குங் கூற்றமுங் கண்டு.

(இ - ள்.) அளவு இறந்த காதல் - அதிக ஆசைக்குப் பாத்திரமான, தம் ஆர் உயிர் அன்னார் - தம்முடைய அருமையான உயிர் போன்றவரை, கொள இழைக்கும் - கொண்டுபோக முயற்சிசெய்கிற, கூற்றம் கண்டும் - எமனைப் பார்த்தும், அன்னோ - ஐயோ, (புல்லறிவாளர்) இவ்வுடம்பு பெற்றும் - இந்த மனிதவுடலைப் பெற்றும், அறம் நினையார் - தருமசிந்தை யில்லாதவராகி, தம் வாழ் நாளை - தமது ஆயுளை, கொன்னே கழிப்பர் - வீணாகக் கழிக்கிறார்கள், என்னே - இது என்ன ?, எ-று.

---

dangerous sickness, but they will not think of it at the time of prosperity, even to the extent of a mustard seed.

10. Alas! Though foolish ignorant men see Yama take away the lives of persons who are as precious as their own life and immeasurably beloved by them, why do they not, when they have acquired this human body, practise virtue instead of spending their days in vain.

Digitized by Google

தருமங்களைச் செய்வதற்கு ஏற்ற மனுஷ்யதேகத்தை அடைந்தும் தருமஞ் செய்யாமை என்ன காரணமோ தெரியாது. தம் உறவினருக்கு வைத்தபொருளைச் செலவழிக்கக் கூடாதன்றோ எனின் அப்படிப்பட்டவர்களை எமன் தம் கண்ணுக்கு எதிரேயே கொண்டுபோக முயல்கின்றானே என்பது கருத்து. நாம் யாருக்காகப் பொருளைச் சேர்த்து வைக்கிறோமோ அவர்களும் அதை அனுபவிப்பது சதமன்று என்கிறபடி.

என்னே—ஏ - இரக்கத்தில் வந்தது. மற்று—அசை. ஆருயிர்—அரு என்னும் பண்படி முதல்நீண்டது.

இவ் வதிகாரத்துக்குப் பாடல்களை ஒருவாறு பொருத்தினும் இவ்வதிகாரமே பொருட்பாலுக்கு இயைந்த தன்று. அறத்துப்பாலிலிருக்கத்தக்கது. பின்னது மப்படியே. (க0)

---

## ௩௪-வது. அதிகாரம்.—XXXIV.

---

### பேதைமை.—Ignorance.

அதாவது முழுமூடத்தனம்.

கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

(இ-ள்.) கொலை வல் - கொலைத்தொழிலில் சாமர்த்தியமுள்ள—பெரு கூற்றம் - பெரிய எமன், கோள் பார்ப்ப - எடுத்துக்கொண்டு போகுங்காலத்தைப் பார்த்துக்கொண்டிருக்க, ஈண்டை வலை அகத்து-இவ்வுலக வாழ்க்கையாகிய வலையினிடத்து, செம்மாப்பார் மாண்பு, இறுமாந்திருப்பவருடைய பெருமை, கொலைஞர் - கொலைசெய்பவர், உலை ஏற்றி - உலையிலே போட்டு, தீ மடுப்ப - நெருப்பை மூட்ட, ஆமை - ஆமையானது, நிலை அறியாது - (தனக்கு வந்திருக்கிற) கதியை அறியாமல், அந் நீர் படிந்து - அந்தத் தண்ணீரில் மூழ்கி, ஆடியற்று - விளையாடுவது போலாம், எ-று.

---

1. The quality of those (ignorant men) who greatly rejoice in the snares of this worldly joy, while the great Yama, mighty in killing, is watching the opportunity to take away their lives, is like the nature of the tortoise which, without knowing its real position, plays about in the pot of water set on fire to boil it (for meals).

Digitized by Google

இவ் வுலகவாழ்க்கையைச் சதமென நம்பிச் சந்தோஷிப்பது ஆமையைச் சமைக்கத் தீ மூட்டிய விடத்து அது உலைநீரில் விளையாடு வதுபோலாம்; ஏனெனில் உடனே கேடுவர இருப்பதால் என்கிறபடி.

கொலைஞர்—ஞகரம் பெயர்ப்பகுபத விடைநிலை. மடுப்ப—நிகழ் காலம். ஆடி என்பது ஆடினால் என்பதின் திரிபு; ஆடினால் அதுபோ லாம் என்பது பொருள்; ஈறுகெட்ட தொழிற்பெய ரென்னவுமாம். அற்று—அன் - பகுதி, று - விகுதி. வல்பெருங்கூற்றம்—பண்புத் தொகை. கோட் பார்ப்ப—கோட்பு ஆர்ப்ப எனப்பிரித்து, கொள்ளு தற்கு இரைந்துகொண்டிருக்க எனவு முரைக்கலாம். செம்மாப்பார்— செம்மா - பகுதி. (க)

பெருங்கட லாடிய சென்றா ரொருங்குடன்
ஓசை யவிந்தபின் னாடுது மென்றற்றால்
இற்செய் குறைவினை நீக்கி யறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மாண்பு.

(இ-ள்.) இல் செய் - குடும்பத்துக்குச் செய்யவேண்டிய, குறை வினை நீக்கி - காரியக் குறைகளைப்போக்கி, அற வினை மற்று அறிவாம்— தரும காரியத்தைப் பின்னாலே யோசிப்போம், என்று இருப்பார் மாண்பு - என்று அலக்ஷியமாயிருக்கு மனிதருடைய பெருமையை, பெரு கடல் ஆடிய சென்றார் - பெரிய கடலிலே மூழ்கப்போனவர் கள், ஓசை - கடலோசையானது, ஒருங்கு - ஒருமிக்க, உடன் - கூட, அவிந்த பின் - அடங்கின பின்பு, ஆடுதும் - ஸ்நானஞ் செய்வோம், என்றற்று - என்றிருந்தாற் போலாம், எ-று.

சமுசார காரியங்களை நன்றாத் தீர்த்துத் தருமகாரியங்களைப் பார்ப்போமென் றிருப்பவர் கடலோசை அடங்கியபின் முழுகலா மென் றிருப்பார்போலே என்றபடி. கடலில் தொனி ஓயாததுபோல் சமுசார காரியமும் ஓயாதென்றதாம்.

ஆடிய — செய்திய என்னும் வாய்பாட்டெச்சம். ஒருங்கு, உடன்—இரண்டுக்கும் பொருளில் அதிக பேதமில்லை, ஆதலால் ஒரு பொருட் பன்மொழி என்னலாம். ஆடுதும்—தும் - விகுதி எதிர்காலத் தன்மைப் பன்மையில் வந்தது. ஆல்—அசை. குறைவினை—இன் - சாரியை. மற்று—வினைமாற்றில் வந்தது "வினைமாற்றசைநிலை பிறி தெனுமற்றே" என்பது சூத்திரம். மாண்பு என்பது அவர் நினைப் பின்படி கூறிப் பரிகாசஞ் செய்தபடி. (உ)

---

2. The quality of those (ignorant men) who have resolved to practise virtue, after satisfying the wants of the domestic life is like the speech of those who after going to bathe in the sea say "we will bathe in it as soon as its noise ceases."

Digitized by Google

குலந்தவங் கல்வி குடிமைமூப் பைந்தும்
விலங்காம லெய்தியக் கண்ணும் - நலஞ்சான்ற
மையறு தொல்சீ ருலக மறியாமை
நெய்யிலாப் பாற்சோற்றி னேர்.

(இ-ள்.) குலம் - நற்குலமும், தவம் - நல்ல விரதமும், கல்வி - படிப்பும், குடிமை - குடித்தன இயல்பும், மூப்பு - (ஒழுக்கத்தில்) முதிர்ந்திருப்பதும், ஐந்தும் - (ஆகிய இவ்) வைந்தும், விலங்காமல் எய்தியக் கண்ணும் - (ஒருவனுக்கு) தப்பாமல் பொருந்தினபோதும், நலம் சான்ற - நன்மை மிகுந்த, மை அறு தொல் சீர் - குற்றமற்ற பழமையான சிறப்பையுடைய, உலகம் அறியாமை - உலகத்துக்கு ஏற்றதை அறியாமலிருப்பது, நெய் இலா பால் சோற்றின் - நெய் இல்லாத பால்சோற்றுக்கு, நேர் - சமானமாகும், எ-று.

குலமுதலியவை ஒருவனுக்கு அமைந்தும் உலகத்துக்கு ஏற்ற நற்காரியம் அறியாமல் அவன் நடப்பது நெய்யில்லாத பால்சோறு போல் இனிப்பாயிராது என்பதாம். நெய் இலாமையைப் பாலிற்குக் கூட்டுக; சாரமற்றபால் என்பதாம்.

இது இவ்வதிகாரத்துக்குப் பொருந்தாதே ஆயினும் ஒரு சங்கதியின் தொடர்ச்சிமேல் தொடர்ச்சியாய் வந்ததெனக் கொள்க. குலமுதலியவை பெயர்ச்செவ்வெண், தொகைபெற்றது. [இடை-சூ-கூ.] எய்தியக்கண் — வினையெச்சம். உம்மை — உயர்வு சிறப்பு. சோற்றின்—நான்காம் வேற்றுமைத் தொகை; சோற்றினொடு என மூன்றும் வேற்றுமைத் தொகையுமாம். நேர்—பகுதியே நேரும் என்னும் வினைமுற்றுப் பொருட்டாய் வந்தது. (ங)

கன்னனி நல்ல கடையாய மாக்களின்
சொன்னனி தாமுணரா வாயினும் - இன்னினியே
நிற்ற லிருத்தல் கிடத்த லியங்குதலென்
றுற்றவர்க்குத் தாமுதவ லான்.

3. Ignorance of the excellent old customs of the world which are faultless and well-known, in one who has obtained without let or hindrance these five things, viz., good family, penance, learning, good descent and righteous conduct, is like the rice mixed with milk which is destitute of its real essence (butter).

4. Though stones do not understand the speech of men, yet since they help those who resort to them by allowing them to stand, sit, lie down or walk upon them, they are far better than the lowest grade of men (fools).

Digitized by Google

(இ - ள்.) சொல் - (பிறர்) சொல்லுஞ் சொல்லை, நனி - நெருக்கமாக, தாம்—, உணரா ஆயினும் - அறிந்துகொள்ளாதவை யாளுலும், உற்றவர்க்கு - தம்மை அடைந்தவர்களுக்கு, இன் இனியே - அப்போதே, நிற்றல் - நிற்பதும், இருத்தல் - உட்கார்வதும், கிடத்தல் - படுப்பதும், இயங்குதல் - நடப்பதும், என்று - என்று சொல்லுகிற (இவைகளுக்கு), உதவலால் - உதவியாவதனாலே, கல் - கல்லுகள், கடை ஆய மாக்களின் - ஈனமான மனிதனைக் காட்டிலும், நனி நல்ல - மிகவு நல்லவைகள், எ-று.

ஒருவன் கற்களினிடம் சென்று நிற்க உட்காரப் படுக்க அதன் மேல் நடக்க இப்படி எதைச்செய்ய விரும்பினாலும் அதற்கு அக்கற்கள் உபயோகப் படுவதினால் பிறர்க்கு உதவாத மனிதனைக்காட்டிலும் மேலானவை என்பதாம்.

நனி என்னு முரிச்சொல் நெருக்கத்துக்கு வந்தது. நெருங்கிக் கேட்க மாட்டாதவை எனக்கொள்க. இது உலக இயல்பைக்குறித்தது. ஆய—யகரம் இறந்தகால இடைநிலை என்பர்; ஆகிய என்பதின் விகாரமென்னவுமாம். இனி என்பது அடுக்கி இன்னினி என்று விகாரப்பட்டது. நிற்றல் முதலிய பெயர்ச்செவ்வெண் விகாரத்தால் தொகை பெறு வாயின. (ச)

பெறுவதொன் றின்றியும் பெற்றானே போலக்
கறுவுகொண் டேலாதார் மாட்டுங் - கறுவினால்
கோத்தின்னா கூறி யுரையாக்காற் பேதைக்கு
நாத்தின்னு நல்ல சுனைத்து.

(இ-ள்.) பெறுவது ஒன்று இன்றியும் - தாம் பெறத்தக்க பயன் ஒன்று இல்லாதே யிருந்தும், பெற்றானே போல - ஒரு பயனை அடைந்தவன்போல், ஏலாதார் மாட்டும் - (தன்கோபத்தை) ஏற்கத் தகாதவரிடத்திலும், கறுவு கொண்டு - பகைகொண்டு, கறுவினால் - கோபத்தினால், இன்னா கோத்து - பிரியமல்லாத சொற்களைக் கூட்டி, கூறி உரையாக்கால் - சொல்லாமற்போனால், பேதைக்கு - புத்தியீனனுக்கு, நல்ல சுனைத்து - நல்லதான தினவானது, நா தின்னும் - நாக்கைத் தின்றுவிடும், எ-று.

பயனில்லாமலே எப்படிப்பட்டவர் மேலும் தூஷணைகளைக் கற்பித்துச் சொல்லாவிடின் மூடனுக்குத் திர்ப்த்தியில்லை என்பதாம்.

5. The tongue of the ignorant fool will tingle all over if he does not break out in a passion with a series of abusive words on those who are not worthy of them, as if he had made an acquisition, although he in reality had nothing to gain thereby.

Digitized by Google

இன்று—இனி என்னும் பண்படி வினைப்பகுதியிற் பிறந்த எதிர்மறை வினையாலணையும் பெயர். கூறி யுரைத்தல்—ஒருபொருட் பன்மொழி. சுனைத்தல்—சொறிதல் காரணமாகிய தினவுக்கு ஆகுபெயர்.()

தங்கண் மரபில்லார் பின்சென்று தாமவரை
எங்கண் வணக்குது மென்பவர் - புன்கேண்மை
நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப
கற்கிள்ளிக் கையிழந் தற்று.

(இ - ள்.) தங்கண் மரபு இல்லார் பின் சென்று - தம்மிடத்து (ஒரு நன்மை செய்யும்) முறை யில்லாதவரிடம்போய், அவரை—, தாம்—, எங்கண் வணக்குதும் - எங்களிடத்து வணங்கி நிற்கச்செய்வோம், என்பவர் புல் கேண்மை - என்று சொல்லுகிறவர்களுடைய அற்பமான உறவு, நல் தளிர் புன்னை - நல்ல தளிர்களோடு கூடிய புன்னைமரங்கள், மலரும் கடல் சேர்ப்ப - மலரும்படியான கடற்கரை யரசனே!, கல் கிள்ளி - கல்லைக்கிள்ளி, கை இழந்தற்று - கையைப் போக்கிக்கொண்டது போலாம், எ-று.

தமக்கு யாதொரு நன்மையுஞ் செய்யும்படியான முறையில்லாதவரைச் சுவாதீனஞ்செய்ய முயல்வது கல்லைக்கிள்ளிக் கைபோவதற்கொப்பாம் என்றால், பயன்படாமற் போவதுமன்றித் தனக்கொரு நஷ்டமுமாம் என்றபடி, இதெல்லாம் பேதைமை.

வணக்குதும்—தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று. கேண்மைக்குப் புன்மையாவது இவர் நினைப்பினுல்மாத்திர முண்டாயிருத்தல். (சு)

ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகின்
போகா தெறும்பு புறஞ்சுற்றும் யாதும்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர்.

---

6. O lord of the sea-shore where the punnai trees with beautiful tender foliage blossom! The foolish friendship of those who follow people who bear not the least benevolent feeling towards them, saying "we will gain them over as our own" is like losing the use of one's own hands in attempting to tear off a piece of stone.

7. If there is ghee in a vessel, the ants will unceasingly crawl round the outside of it, though it be impossible for them to get at the ghee, so will the people of the world will cleave to the rich and never leave them though they give not any pittance whatever to them.

Digitized by Google

(இ - ள்.) ஆகாது எனினும் - கிட்டாதானாலும், அகத்து - உள்ளே, நெய் உண்டாகில் - நெய் இருக்குமானால், எறும்பு—, போகாது - (அந்தப்பாத்திரத்தை) விட்டு நீங்காமல், புறம் சுற்றும் - வெளிப்பக்கத்திலே சுற்றிக்கொண்டிருக்கும்; யாதும் கொடார் எனினும் - எதையும் கொடாதவரானாலும், உடையாரை - பொருளுள்ளவர்களை, பற்றி - சேர்ந்து, உலகத்தவர் - உலகத்திலுள்ள ஜனங்கள், விடார் - விடமாட்டார்கள், எ-று.

உள்ளேபுகுந்து நெய்குடிக்கக் கூடாமலிருந்தாலும் அந்தக் கலசத்தை எறும்பு சுற்றிக்கொண்டிருப்பதுபோல் ஒரு காசும் கொடாராயினும் தனவான்களிடத்தில் பேதைகள் சுற்றிக்கொண் டிருப்பார்கள் என்பதாம்.

உலகத்தவர்—உலகம் - பகுதி, அர் - பலர்பால்விகுதி, அத்தும் அகரமும் - சாரியைகள். (எ)

நல்லவை நாடொறு மெய்தா ரறஞ்செய்யார்
இல்லாதார்க் கியாதொன்று மீகலார் - எல்லாம்
இனியார்தோள் சேரா ரிசைபட வாழார்
முனியார்கொ லும்வாழு நாள்.

(இ-ள்.) நாள் தொறும் - ஒவ்வொருநாளும், நல்லவை - (பெறத்தக்க) நன்மைகளை, எய்தார் - அடையார்கள்; அறம் செய்யார் - தருமத்தைச் செய்யமாட்டார்கள்; இல்லாதார்க்கு - தரித்திரருக்கு, யாதும் ஒன்றும் ஈகலார் - எதையாகிலும் கொடுக்கமாட்டார்கள்; இனி யார் தோள் - இனிமையான தம் பெண்டிர்களது புஜங்களை, சேரார் - அடையார்கள்; இசை பட - கீர்த்தி யுண்டாகும்படி, வாழார் - வாழமாட்டார்கள்; (ஆதலின் மூடர்) தாம் வாழும் நாள் எல்லாம் - தாங்கள் பிழைத்திருக்குங் காலங்களையெல்லாம், முனியார்கொல் - வெறுக்கமாட்டார்களா, எ-று.

நாள்தோறும் எய்தத்தக்க நன்மைகளாவன—பின்னே தங்களுக்கு க்ஷேமலாபங்களை யுண்டாக்கத்தக்க கல்வி கேள்விகளும் பொருளுமாம். ஆகவே, அறம் பொரு ளின்பங்களைத் தாங்கள் அடையாமலும் பிறர்க்கு உபகாரஞ்செய்து கீர்த்தி பெறுமலும் வீணாய்க் கழிக்கிற தங்கள் வாழ்நாள்மேல் தங்களுக்கே வெறுப்பில்லாம லிருப்பது அதிசயந்தான் என்கிறபடி.

---

8. Will they not abhor the days of their life who daily enjoy not good, who practise not virtue, who give not to the destitute, who enjoy not their own wives and who lead not a commendable life?

Digitized by Google

இல்லாதார்க் கியாதொன்றும்—"யவ்வரினிய்யாம்" என்பதனால் குற்றியலுகரம் இகரமாகி "யகரம்வரக்குறளுத்திரியிகரமும்" என்பதனால் குற்றியலிகரமாயிற்று. அவ்விகரம் "சீருந் தளையுஞ் சிதையின் சிறிய இ உவ்வளபோ டாருமறிவரலகுபெறுமை" என்கிற காரிகைச் சூத்திரத்தினால் அலகுபெறாது வாளாநின்றது. (அ)

விழைந்தொருவர் தம்மை வியப்ப வொருவர்
விழைந்திலே மென்றிருக்குங் கேண்மை-தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினு மின்னாதே
ஆய்நல மில்லாதார் மாட்டு.

(இ-ள்.) ஆய் நலம் இல்லாதார்மாட்டு - ஆராயப்பட்ட சற்குணமில்லாத மூடரிடத்தில், ஒருவர் - (எவராகிலும்) ஒருவர், விழைந்து - விரும்பி, தம்மை வியப்ப - தம்மைக்கொண்டாட, ஒருவர் - (கொண்டாடப்பட்ட) மற்றொருவர், விழைந்திலேம் - நாங்கள் விரும்பினோமில்லை, என்று இருக்கும் கேண்மை - என்று ஏற்பட்டிருக்கிற சிநேகமானது, தழங்கு குரல் - கோஷிக்கிற தொனியையுடைய, பாய் திரை சூழ் வையம் - பாய்ந்துவருகிற அலைகளுள்ள கடல்சூழ்ந்த பூமியை, பயப்பினும் - தருவதாயிருந்தாலும், இன்னாது - பிரியமாயிராது, எ-று.

தம்மை விரும்பிச் சிநேகித்தவரைச் சிநேகியாத மூடருடைய கூட்டுறவு எவ்வளவு பிரயோசனந் தருவதானாலும் யோக்கியருக்கு இஷ்டமாயிராது என்பது கருத்து.

வியப்ப—நிகழ்காலத்தில் வந்தது. விழைந்திலேம் — உடன்பாட்டெதிர்மறை வினைமுற்று; விழை - பகுதி, த் - இடைநிலை, சந்தியால் வந்த தகரம் நகரமானது விகாரம், இல் - எதிர்மறைப்பண்படி, இடைநிலை, அல்லது விகுதி, ஏம் - தன்மைப்பன்மை விகுதி. பாய் திரை—அன்மொழித்தொகை. திரை - கடல், எனக்கொள்ளின் வினைத்தொகையாம். (௯)

கற்றனவுங் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்துந் தானுரைப்பின்

---

9. The friendship of those fools who being devoid of all good feelings heed not the commendations of men who seek them lovingly. is not agreeable although they should thereby gain the whole earth surrounded by the roaring sea with rolling waves.

10. The learning, dignity and high birth which one possesses become illustrious only when they are commended by his neighbours; but should he commend them himself, his

Digitized by Google

மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும்.

(இ - ள்.) கற்றனவும் - தாம் கற்ற கல்விகளும், கண் அகன்ற - அதிகமான, சாயலும் - மேன்மையும், இல் பிறப்பும் - நற்குடிப்பிறப்பும், பக்கத்தார் - அயலார், பாராட்ட - கொண்டாட, பாடு எய்தும் - பெருமையை அடையும்; தான் உரைப்பின் - (அவைகளை உடையவன்) தானே சொன்னால், மைத்துனர் - மைத்துனர்கள், பல்கி - அதிகப்பட்டு, மருந்தில் - மருந்தினாலும், தணியாத - தீராத, பித்தன் என்று - பைத்தியக்காரனென்று, எள்ளப்படும் - இகழப்படுவான், எ-று.

ஒருவனுடைய கல்வி பெருமை முதலியவற்றைப் பிறர்கூறின் நன்றாயிருக்கும் ; தானே கூறினால் பரிகாசஞ் செய்யப்படுவான் என்பது கருத்து.

பரிகாசஞ்செய்ய உரியவராதலின் மைத்துனர் என்றது. பாரில் ஆடச்செய்தல் - பாராட்டல். எள்ள — இதைத் தொழிற்பெயராக் கொள்ளவேண்டும். தணியாத என்பது பித்தன் என்பதின் பகுதியான பித்து என்பதோடு முடிந்தது. (௪0)

---

## ௩௫-வது அதிகாரம்.—Chapter XXXV.

### கீ ழ் மை ம.—Meanness.

அதாவது கீழ்மக்களது தன்மை, அல்லது கீழ்ச் சாதியாரது தன்மை.

கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப்பெயினும்
குப்பை கிளைப்போவாக் கோழிபோன் மிக்க
கனம்பொதிந்த நூல்விரித்துக் காட்டினுங் கீழ்தன்
மனம்புரிந்த வாறே மிகும்.

(இ-ள்.) காலை - காலத்தில், கப்பி - தானியத்தை, கடவது ஆ - கடமையாக, தன் வாய் பெய்யினும் - தன் வாயிலே போட்டாலும், குப்பை கிளைப்பு - குப்பையைக் கிளறுதலை, ஓவா - விட்டொழியாத,

---

brothers-in-law (i. e., mocking relations) will increase in number, and he will be despised as a lunatic beyond all cure.

1. Though one should as a daily duty feed the fowl with grain in time, it will not desist from scratching up the dung hill. So though one explain books of science of great excellence, yet the mean will follow the path most agreeable to their mind.

Digitized by Google

கோழி போல் - கோழியைப்போல், மிக்க கனம் பொதிந்த - மிகுந்த மேன்மை நிறைந்திருக்கிற, நூல் விரித்துக் காட்டினும் - சாஸ்திரங்களை விரித்துத் தெரிவித்தாலும், கீழ் - கீழானவன், தன் மனம் புரிந்த ஆறே - தன் மனது விரும்பியவழியே, மிகும் - மிகுந்து செல்வான், எ-று.

கோழிக்குக் காலத்தில் தானியம் போட்டாலும் குப்பை கிளறப் போவதுபோல் கீழ்மகன் எத்தனை நல்ல நூல்களையெடுத்துச் சொன்னாலும் அதைவிட்டுத் தன் மனதுக்கு இசைந்தபடியே செல்வான் என்பதாம்.

கடவது—கடமையில் கட - பகுதி, அ - சாரியை, து - விகுதி. மிக்க—மிகு - பகுதி, அ - பெயரெச்சவிகுதி, பகுதியில் ககரம் இரட்டிக் காலங்காட்டியது. கீழ்—ஆகுபெயர். (க)

காழாய கொண்டு கசடற்றார் தஞ்சாரல்
தாழாது போவா மெனவுரைப்பின் - கீழ்தான்
உறங்குவா மென்றெழுந்து போமாமஃ தன்றி
மறங்குமா மற்றொன் றுரைத்து.

(இ-ள்.) காழ் ஆய - உறுதியான நூற்பொருள்களை, கொண்டு - கற்றுக்கொள்ள, கசடு அற்றார் தம் சாரல் - குற்றமில்லாத பண்டிதரிடத்தில், தாழாது - தாமதப்படாமல், போவாம் என உரைப்பின் - போவோம் என்று ஒருவர் சொன்னால், கீழ்—, உறங்குவாம் என்று எழுந்துபோம் - தூங்குவோம் என்று எழுந்துபோவான்; அஃது அன்றி - அதல்லாமல், மற்றொன்று உரைத்து - வேறொரு சாக்கைச் சொல்லி, மறங்கும் - மறுத்துச்செல்வான், எ-று. தான், ஆம் - அசைகள்.

படிக்கப் போவோ மென்றால் எதையாகிலும் சொல்லி அதை மறுத்துத் தூங்கப்போவான் கீழ்மகன் என்பதாம்.

கொண்டு—கொள்ள என்பதின் திரிபு, "சொற்றிரியினும் பொருடிரியா வினைக்குறை" என்பது சூத்திரம். போவாம்—உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று; நீயும் நானும்; "அம் ஆம் என்பன முன்னிலையாரையும்." உறங்குவாம்—இதுவு மப்படியே. போம்; போகும், அல்லது போவும் என்பதில் ஈற்றுயிர்மெய் கெட்டது. "செய்யுமெனெச்சவீற் றுயிர்மெய்சேறலும்" [வினை-சூத்-உஉ.] (உ)

---

2. When one proposes to go to the spotless great men of learning to obtain the benefits of their excellent teaching, the mean will at once rise up and go away saying "Let us go and sleep" or plead something else and refrain altogether from going.

Digitized by Google

பெருநடை தாம்பெறினும் பெற்றி பிழையா
தொருநடைய ராகுவர் சான்றோர் - பெருநடை
பெற்றக் கடைத்தும் பிறங்கருவி நன்னாட
வற்றா மொருநடை கீழ்.

(இ - ள்.) சான்றோர் - பெரியோர், பெரு நடை - பெரிய சிறப்பை, தாம் பெறினும் - தாம் அடைந்தாலும், பெற்றி - (தமது) தன்மை, பிழையாது - தப்பாமல், ஒரு நடையர் ஆகுவர் - (முன்னும் பின்னும்) ஒரேவிதமான நடக்கையுள்ளவர் ஆவார்கள்; பிறங்கு அருவி நல் நாட - விளங்குகின்ற மலை யருவிகளையுடைய நல்ல நாட்டையுடையவனே!, கீழ்—, பெரு நடை - பெருஞ் சிறப்பை, பெற்றக்கடைத்தும் - பெற்றவிடத்தும், ஒரு நடை - (முந்தியநடைக்கு வேறான) நடையிலே, வற்று ஆம் - வல்லமை யுடையனாவான், எ-று.

பெரியோர் அரசரால் எவ்வளவு மேன்மைப்படுத்தப் பட்டாலும் தாங்கள் முன்னிருந்தபடி அடக்கமொடுக்கங்களோ டிருப்பாரே யல்லது மாறார்; கீழ்மகனோ மாறிவிடுவான் என்றபடி.

பெற்றக்கடைத்து—ஒருவகை வினையெச்சம்; இதனோடுசேர்ந்த உம் இழிவு சிறப்பு; பெறுவது அருமை என்றபடி. பெற்றி—தொழிற்பெயர்; பெற்றிருக்கும் சற்குணத்துக்கு ஆகுபெயர்; பெறு - பகுதி, இ - விகுதி. ஆகுவர்—கு - சாரியை. வற்று—வல் என்கிற பண்படிமேல் று - ஒன்றன்பால் விகுதி வந்தது. இழிவினால் கீழ்மகனை அஃறிணையாகவே முடித்தார். (௩)

தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர் - பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

(இ-ள்.) இலங்கு அருவி நல் நாட - விளங்குகின்ற அருவிகளுள்ள நல்ல நாட்டையுடையவனே!, தினை அனைத்தே ஆயினும் - தினையள

3. O lord of the good country watered by glittering streams! Though the excellent obtain great honor they swerve not from their original good disposition, but follow one line of conduct (without any change). When the mean rise to greatness, they also change their course of conduct.

4. O lord of the good country of sparkling streams! If one confer a benefit even so small as the millet grain, the excellent will esteem it as great as the palmyra fruit. Though benefits as large as the Palmyra be daily done to ignorant mean people, they will all be useless and they will not at all be appreciated by them.

Digitized by Google

வாயினும், செய்த நன்று - (ஒருவன்) செய்த உபகாரத்தை, உண்டால் - அனுபவித்தால், சான்றோர் - நற்குண மிகுந்தவர், பனை அனைத்து ஆ - பனையளவாக, உள்ளுவர் - நினைப்பார்கள்; என்றும் - எக்காலமும், பனை அனைத்து செயினும் - பனையளவான நன்றி செய்தாலும், நன்று அறியார் மாட்டு - (உபகாரத்தின் மகிமை) அறியாதவர்களிடத்து, நன்று இல - (அவை) உபகாரமா நினைக்கப்படமாட்டா, எ-று.

அற்பவுபகாரத்தையும் பெரிதா நினைப்பது சான்றோரியல்பு; பெரிய வுபகாரத்தையும் உபகாரமா நினையாமலிருப்பது கீழோர் இயல்பு என்பதாம்.

தினை—ஒருவகைச் சிறுதானியம். அனைத்து — அன் - இடைச்சொல், பகுதி, ஐகாரம் - சாரியை, து - ஒன்றன்விகுதி. நன்றில— குறிப்புமுற்று, ஒருமொழியாக் கொள்க. (ச)

பொற்கலத் தூட்டிப் புறந்தரினு நாய்பிறர்
எச்சிற் கிமையாது பார்த்திருக்கும் - அச்சீர்
பெருமை யுடைத்தாக் கொளினுங்கீழ் செய்யும்
கருமங்கள் வேறு படும்.

(இ - ள்.) பொன் கலத்து ஊட்டி - பொன் பாத்திரத்தில் (நல்லவுணவை) உண்பித்து, புறம் தரினும் - ரக்ஷித்து வந்தாலும், நாய்—, பிறர் எச்சிற்கு - பிறருண்ட எச்சிற் சோற்றுக்கு, இமையாது - கண் கொட்டாமல், பார்த்திருக்கும் - (கொள்ளத்தகுந்த சமயத்தை) எதிர் பார்த்திருக்கும்; அ சீர் - அத்தன்மையாக, பெருமை உடைத்து ஆ கொளினும் - சிறப்புள்ளவனாக ஏற்றுக்கொண்டாலும், கீழ்—, செய்யும் கருமங்கள் - செய்கிற காரியங்கள், வேறுபடும் - (கனவான்கள் செய்யுங் காரியங்களுக்கு) வேறாகவே யிருக்கும், எ-று.

நல்லுணவுகளைக் கொடுத்து மேன்மைப் படுத்தினாலும் இழிவான உணவுக்குக் காத்திருக்கும் நாய்போலவே மேன்மையாக் கொண்டாலும் இழிந்த காரியங்களைக் கீழோர் செய்வார்கள் என்பதாம்.

ஊட்டி—உண் என்பதின் பிறவினையெச்சம், டு - பிறவினை விகுதி, முதல் நீண்டது விகாரம். (ரு)

சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோ
ரொக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ - லெக்காலு

5. Though the dog be properly nourished and fed from a golden dish, yet it will ever be earnestly looking out for the leavings of others. In like manner though the mean be esteemed to be honorable men, their acts will differ from their position in life.

6. The worthy, though they obtain the wealth (and position) of a king, will at no time indulge in haughty speech; but

முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை
யிந்திரனா வெண்ணி விடும்.

(இ-ள்.) விழுமியோர் - மேலானவர், சக்கரம் செல்வம் பெறினும் - பூமண்டல அரசாட்சியாகிய சம்பத்தை யடைந்தாலும், எ கா லும் - எந்தத் தருண த்திலாயினும், மிகுதி சொல் - அதிகமான சொல்லை, [வரம்புகடந்த பேச்சை], சொல்லார் - சொல்லமாட்டார்; எ காலும் எப்பொழுதாயினும், முந்திரி மேல் - முந்திரி என்கிற சிறுதொகையின் மேல், காணி மிகுவதேல் - காணி என்னும் அற்பத்தொகை அதிகப்பட்டால், கீழ்—, தன்னை—, இந்திரன் ஆ - தேவேந்திரனாக, எண்ணி விடும் - எண்ணிக்கொள்வான், எ-று.

மேலோர் எவ்வளவு செல்வத்திலும் வரம்பு கடந்து நடப்பதில்லை; கீழோரோ இருக்கிற தாழ்ந்த நிலைக்குமேல் கிஞ்சித்துச் செல்வம் வந்தால் தம்மை மறந்து துர்மார்க்கஞ் செய்வார்கள் என்பது கருத்து.

சக்கரம்—மண்டலமாகையால் பூமண்டலத்துக்குக் கொள்ளப்பட்டது. விழுமியோர்—விழுமுதல் - விரும்புதல், பிறர் விரும்பும்படியான நல்ல இயல்பையுடையவர்; விழுமு - பகுதி, இன் - இடைநிலை, ஈறுதொக்கது, ஆர் விகுதியின் ஆ ஓ ஆயிற்று. ["பெயர் வினையிடத்து னளரயவிற்றயல்" பொது - சூத் - உ.] முதல் எக்காலும் என்பதில் உம்மை முற்றுப்பொருளது, இரண்டாவதில் ஐயப்பொருளது, விகற்பப்பொரு ளென்க; எப்போழுதாயினு மென்றபடி. அவர்களுக்குச் செல்வம் வருதல் அருமை யென்றதாயிற்று. இங்கே காணி என்பது கீழ்க்காணியை; இக்கால வழக்கத்தின்படி முந்திரியில் அறுபத்து நான்கிலொருபங்கு. முந்திரியென்பது முந்நூற்றிருபதி லொருபங்கு. காணிமேல் முந்திரி மிகுவதேல் எனச் சொற்களை மாற்றிப் பொருள் கொள்வது நேர். (சு)

மைதீர் பசும்பொன்மேன் மாண்ட மணியழுத்திச்
செய்த தெனினுஞ் செருப்புத்தன் காற்கேயா
மெய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

---

if the mean should acquire a very little increase to their low fortune, they will esteem themselves as supreme as the (great) Indra.

7. Though the slippers are made of the purest gold and set with valuable precious gems, they are only fit to be worn on the feet. So, though the mean be very rich, their real nature will be found out by their deeds.

Digitized by Google

(இ - ள்.) மை தீர் - குற்றமற்ற, பசு பொன் மேல் - நல்ல பொன்னின்மேலே, மாண்ட மணி - மாட்சிமையான ரத்தினங்களை, அழுத்தி - இழைத்து, செய்தது எனினும் - செய்யப்பட்டதானாலும், செருப்பு—, தன் காற்கே ஆம் - தன்காலில் அணிவதற்கே உபயோகமாம்; எய்திய செல்வத்தர் ஆயினும் - செல்வத்தைப் பொருந்தினவர்களானாலும், கீழ்களை—, தொழிலால் - அவர்கள் செய்யுங் காரியங்களால், காணப்படும் - (இவர்கள் கீழ்கள் என்று) அறிதல் கூடும், [அறியலா மென்றபடி.]

இரத்தினமிழைத்த செருப்பானாலும் காலில் அணியத்தக்கதே, அதுபோல் கீழ்மக்கள் எவ்வளவு செல்வம்பெற்றாலும் கீழ்ப்படியில் வைக்கத்தக்கவரோ யன்றி மேற்படியில் வைக்கத்தகார் என்பதாம்.

மாண்ட—மாண் என்கிற பண்படிமேற் பிறந்த தெரிநிலை யிறந்த காலப் பெயரெச்சம். செய்தது—இது செயப்பாட்டு வினையின் திரிபு; படு - விகுதி குன்றியது. காண—தொழிற்பெயராக்கொண்டு படு என்பதோடு முடிக்க. காணப்படும் என ஒருமொழியாகவே கொண்டாலும் பொருந்தும். (எ)

கடுக்கெனச் சொல்வற்றாங் கண்ணோட்ட மின்றா
மிடுக்கண் பிறர்மாட் டுவக்கு மடுத்தடுத்து
வேக முடைத்தாம் விறன்மலை நன்னாட
வேகுமா மெள்ளுமாங் கீழ்.

(இ-ள்.) விறல் மலை நல் நாட - பெருமையான மலைகளுள்ள நல்ல நாட்டையுடையவனே!, கீழ்—, கடுக்கென - கடினமாக, சொல்வற்று - சொல்லுதலிலே சாமர்த்திய முடையவன்; கண்ணோட்டம் - தாக்ஷிணியம், இன்று - இல்லாதவன்; பிறர்மாட்டு - பிறரிடம் (உண்டான), இடுக்கண் - சங்கடத்தை, உவக்கும் - சந்தோஷிப்பான்; அடுத்து அடுத்து - அடிக்கடி, வேகம் உடைத்து ஆம் - கோபாவேசத்தையுடையவனுவான்; ஏகும் - (பலவிடத்தும்) திரிவான்; எள்ளும் - (பிறரைத்) தூஷிப்பான், எ-று.

கடினமாய்ப் பேசுவதும் யாரிடத்தும் தாக்ஷிணியம் பாராமையும் பிறருக்கு நேரிடுகிற ஆபத்துக்குச் சந்தோஷிப்பதும் அடிக்கடி சும்மாக் கோபிப்பதும் கண்டவிடத்துச் சும்மாத்திரிவதும் பிறரைத் தூஷிப்பதும் கீழ்மக்களியல்பு என்றபடி. ஆம் எல்லாம் அசைகள்.(அ)

---

8. O lord of the good country abounding in mighty mountains! The mean pay no regard to persons, but indulge in haughty language, laugh at the misery of others, often break out in furious anger, wander about in all places and continually revile others.

Digitized by Google

பழைய ரிவரென்று பன்னாட்பின் னிற்பின்
உழையினிய ராகுவர் சான்றோர் - விழையாதே
கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப
எள்ளுவர் கீழா யவர்.

(இ-ள்.) கள் உயிர்க்கும் - தேனை ஒழுக்குகிற, நெய்தல் - நெய்தற் பூக்களையுடைய, கனை கடல் - ஒலிக்கிற கடலினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியான கரையையுடைய அரசனே !, பின் நிற்பின் - (ஒருவர்) தமது பின்னே நின்றால், இவர் - இவர்கள், பல் நாள் பழையர் என்று - பல நாள் (சிநேகித்த) பழமையானவர்கள் என்று, சான்றோர்—, உழை - அவரிடத்திலே, இனியர் ஆகுவர் - இஷ்டமுள்ளவராவார்கள்; கீழாயவர் - கீழ்மக்கள், விழையாதே - (அவர்களை) விரும்பாமலே, எள்ளுவர் - நிந்திப்பார்கள், எ-று.

சிலநாள் தம்மிடம் வந்தவர்களையும் பழைய சிநேகிதர்போல் கொள்வார்கள் பெரியோர்; எத்தனைநாள் பழகினாலும் சிநேகியாமல் நிந்திப்பார்கள் கீழோர் என்பதாம்.

'பன்னாள் பின்னிற்பின்' என உரைப்பது இழிவு. அங்கே சிநேகித்த என்கிறசொல் வருவிக்கப்பட்டது. (௯)

கொய்புற் கொடுத்துக் குறைத்தென்றுந் தீற்றினும்
வையம்பூண் கல்லா சிறுகுண்டை - ஐயகேள்
எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்.

(இ-ள்.) ஐய கேள் - அரசனே கேட்கக்கடவாய், என்றும் - நாள் தோறும், கொய் புல் குறைத்து - அறுக்கத்தக்க புல்லை அறுத்து, கொடுத்து - (தின்பதற்கு) கொடுத்து, தீற்றினும் - (கழுவுதல் முதலிய வைகளால்) சுத்தப்படுத்தினாலும், சிறு குண்டை - சிறிய எருதுகள், வையம் - பண்டியை, பூண்கல்லா - பூண்டு இழுக்கமாட்டா; எய்திய செல்வத்தர் ஆயினும் - செல்வத்தைப் பொருந்தினவர்களானாலும், கீழ்களை—, செய் தொழிலால் - (அவர்கள்) செய்யுங் காரியங்க

---

9. O lord of the cool shores of the roaring sea where the water-flowers pour forth their honey! If persons attend on them (for sometime in seek of help) the excellent will say "these are old friends" and do them kindness; but the mean will hate and revile them.

10. Hear, O King! Though the heifer be daily fed with cut grass and nourished well, it will not be strong enough to be yoked to a cart. The mean, though they be very rich, will be found out by their deeds.

Digitized by Google

னால், காணப்படும் - (இவர்கள் கீழ்கள் என்று) அறிதல் கூடும், [அறியலாம் என்றபடி], எ-று.

எவ்வளவு மேன்மைப் படுத்தினாலும் கன்றுகள் பண்டி யிழுக்க மாட்டாமைபோல் கீழ்மக்களும் தக்க காரியங்களுக்கு உதவார்கள் என்றபடி.

கொய்புல்லாவது பக்குவமானபுல். குண்டை—பால்பகா அஃறிணைப்பெயராதலின் ஈண்டு பன்மை. (கO)

## ௩௬-வது. அதிகாரம்.—Chapter XXXVI.

### கயமை.—Baseness.

அதாவது மூடத்தனம். இதுவும் முந்திய அதிகாரத்தைச் சேர்ந்தது.

ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை யடக்குப மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோல்
போத்தரூர் புல்லறிவி னார்.

(இ-ள்.) ஆர்த்த அறிவினர் - நிறைந்த அறிவுள்ளவர்கள், ஆண்டு—வருஷங்களிலே, [வயதிலே], இளையர் ஆயினும் - இளையவர்களானாலும், தம்மை—, காத்து ஓம்பி - நன்றாகக்காத்து, அடக்குப - (அயோக்கியகாரியங்களிற் புகவொட்டாமல்) அடக்குவார்கள்; புல் அறிவினார் - அற்பபுத்தி யுள்ளவர்கள், மூத்தொறும் - வயது முதிருந்தோறும், தீ தொழிலே - கெட்ட காரியங்களிலேயே, கன்றி - உழன்று வருந்தி, திரிதந்து - திரிந்து, எருவை போல் - கொறுக்கையைப் போலே, போத்து அரூர் - உள்ளே தொளையாயிருப்பது நீங்கமாட்டார், எ-று.

அறிவுள்ளவர் சிறியரானாலும் தாம் இந்திரியங்களுக்கு வசப்பட்டுத் தீமைசெய்யாமல் அடங்குவார்கள்; புத்தியீனர் வயது முதிர முதிரத் தீத்தொழிலே செய்வார்கள் என்பது கருத்து.

எருவைபோல் - கழுகுபோல், போத்து அரூர் - குற்ற நீங்கார், என்றும் உரைக்கலாம். கழுகு குரூரகுணமுள்ள பக்ஷி என்பது பிரசித்தம். போத்து—பொத்து - குற்றம், அது முதல் நீண்டது. கொறுக்

1. Those who are eminent in wisdom, though young in years, will guard and restrain themselves, but the fool though old in years will still whirl on in his evil career, and like the reed ever retain his hollowness.

Digitized by Google

கைபோல் உள்ளே தொளையாயிருப்பது நீங்கார் என்றால் மேற்பார் வைக்குத் தடித்த ரூபமுள்ளவராகி உள்ளே ஒன்றுமில்லாதவர் என் பதாம். இது சிறப்பன்று என அறிக.

ஆர்ந்த என்பது ஆர்த்த என வலிந்தது. காத்தோம்பி—ஒரு பொருட் பன்மொழி. அடக்குப—இது இங்கே காலங்குறியாது தன்மை குறித்து நிற்கும். மூத்தொறும்—மூ - முதனிலைத் தொழிற்பெயர். கன்றல் - வருந்தல். (க)

செழும்பெரும் பொய்கையுள் வாழினு மென்றும்
வழும்பறுக்க கில்லாவாந் தேரை - வழும்பில்சீர்
நூல்கற்றக் கண்ணு நுணுக்கமொன் றில்லாதார்
தேர்கிற்கும் பெற்றி யரிது.

(இ-ள்.) செழு பெரு பொய்கையுள் - செழிப்பான பெரியகுளத்தில், என்றும் வாழினும் - எந்நாளும் வாழ்ந்துகொண்டிருந்தாலும், தேரை - தவளைகள், வழும்பு அறுக்ககில்லா - (தம்மேலுள்ள) வழு வழுப்பான அழுக்கை நீக்கிக்கொள்ள மாட்டா; வழும்பு இல் சீர் - குற்றமில்லாத சிறப்பையுடைய, நூல் - சாத்திரங்களை, கற்றக்கண்ணும் - கற்றாலும், நுணுக்கம் ஒன்று இல்லாதார் - நுட்பபுத்தியாகிய ஒருபொருள் இல்லாதவர், தேர்கிற்கும் பெற்றி - நூற்பொருளைத் துணியுந் தன்மையானது, அரிது - இல்லை, எ-று.

பெரியகுளத்தில் வெகுநா ளிருந்தும் தவளை தன்மே லழுக்கைக் கழுவிக்கொள்ள மாட்டாமைபோல் மூடன் எப்படிப்பட்ட நூலைப் படித்தாலும் அதின் தாற்பரியத்தை யறியும்படியான புத்திசூக்ஷ்மமில்லாதவனும்.

அறுக்ககில்லா—அறு - பகுதி, கு - அ - இரண்டும் சாரியைகள், கில் - ஆற்றலைக்காட்டும் விகுதி, ஆ - எதிர்மறைப் பலவின்பால் விகுதி. ஆம் - அசை. இல்சீர்—"இல்லெனின்மைச் சொற்கையடைய" என்கிற சூத்திரத்தால் இயல்பாயிற்று, [மெய்யீ-சூ-ருய]. கற்றக்கண்—எதிர்கால வினையெச்சம். நுணுக்கம்—பண்புப்பெயர்; நுண் - பண்படி, பகுதி, அம் - விகுதி, உகர ககரங்கள் பண்பின் விகாரம்; இது அத்தன்மையான அறிவுக்கு ஆகுபெயர். (உ)

---

2. Though the frog dwells in a large wide pool, it never divests itself of the slime on its body. So, those who are devoid of sharp intellect, though they should study faultless and illustrious books of science, have not the ability to understand them.

Digitized by Google

கணமலை நன்னாட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதால் - குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா.

(இ - ள்.) கண மலை நல் நாட - கூட்டமாகிய மலைகளுள்ள நல்ல நாட்டின் அரசனே !, கண் நின்று - எதிரில் இருந்து, ஒருவர் குணனேயும் - ஒருவர் குணத்தையும், கூறற்கு அரிது - சொல்லு தற்கு (நா எழல்) அருமையாயிருக்கும் ; (அப்படியிருக்க) உழை நின்று - அவரிடத்தி லிருந்து, குணன் அழுங்க - குணம் அழியும்படி, குற்றம் கூறும் - குற்றங்களை எடுத்துச்சொல்லுகிற, சிறியவர்கட்கு - கயவருக்கு, நா - நாக்கு, எற்றால் இயன்றதோ - எப்படிப்பட்ட பொருளினால் செய்யப்பட்டதோ, எ-று.

குணங்கூறுவது சாதாரணமானாலும் அவர் என்ன நினைப்பாரோ என்று பயந்து அதைக் கூறுவதும் கூடாமலிருக்க, ஒருவரிடஞ் சென்று அவர் குணங்களெல்லா மறையும்படி கயவர் குற்றங் கூறுகி றார்களே அவர்களுக்குக் கொடியபொருளால் நாக்கு செயப்பட் டிருக்கவேண்டும் என்று கவி வியந்து கூறினார்.

ஆல்—அசை, எற்றால்—என் - வினாவிடைச்சொல், பகுதி, று ஒன்றன்பால் விகுதி. (௩)

கோடேந் தகலல்குற் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயறேற்றார் - கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர் மற்றை யவர்.

(இ-ள்.) கோடு ஏந்து அகல் அல்குல் பெண்டிர் - பக்கங்களுயர்ந் தகன்ற வல்குலையுடைய குலமக்கள், தம் பெண் நீர்மை - தமது பெண்தன்மையை, சேடியர் போல செயல் தேற்றார் - (தமக்குப் பணிசெய்யும்) பாங்கியர்போல அலங்கரித்துக் கொள்ளுதலை அறி யார் ; மற்றையவர்-வேசிமார், புது பெருக்கம் போல் - புதிய வெள்

3. O lord of the good country covered by clusters of hills! It is difficult for one to extol the good qualities of persons before their faces; while so, of what are the tongues of those wretches made who standing in the presence of persons declare their faults so that their reputation may suffer.

4. Beautiful women of good birth know not how to set off themselves by ornaments, &c , as their servant-girls do. Courte- sans will freely mix with men and setting off their beauty (by ornaments, dress, &c.,) will pass their life to the best advantage.

ளம்போல், கூடி - (ஆடவரோடு) கலந்து, தம் பெண்ணீர்மை மதித்து காட்டி - தமது பெண்தன்மை மேம்பட யலங்கரித்துக்காட்டி, இறப்பர் - (அவர்களிடத் துள்ளவற்றை யபகரித்து) கடப்பர், எ-று.

குலப்பெண்கள் அலங்காரங்களாலே தம்மை வியக்கச்செய்து பிறரிடத்துப் பொருள்பறிப்ப தில்லை, வேசிமாரோ அப்படிச்செய்வார்கள்; அதுபோல், யோக்கியர் தமகுணங்களைக்காட்டி வியக்கச்செய்யாமல் அடங்கியிருப்பார்கள், அயோக்கியர் வெகு மேன்மை யுள்ளவர்போல நடித்துக்காட்டி வஞ்சித்துப் பொருள் பறித்துக்கொண்டு போவார்கள் என்பதாம். (௪)

ரு

தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா
உளிநீரர் மாதோ கயவர் - அளிநீரார்க்
கென்னானுஞ் செய்யா ரெனைத்தானுஞ் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்.

(இ-ள்.) தளிர் மேலே நிற்பினும் - துளிரின்மேலே நின்றாலும், தட்டாமல் - (ஒருவர்) தட்டித்தள்ளாமல், செல்லா - போகமாட்டாத, உளி நீரர் - உளியின் தன்மையுடையவர்கள், கயவர்—; அளி நீரார்க்கு - மெத்தென்ற தன்மையுள்ளவர்க்கு, என்னானும் செய்யார் - எந்தவுதவியுஞ் செய்யமாட்டார்கள்; இன்னாங்கு செய்வார் பெறின் - துன்பஞ் செய்பவர்களை அடைந்தால், எனைத்தானும் - எவ்வளவையாகிலும், செய்ப - செய்வார்கள், எ - று. மாது, ஓ,—இரண்டும் அசை.

உளியானது மெதுவான வஸ்துவின்மேலும் தானே வியாபியாமல் ஒருவர் தட்டித் தள்ளினால் செல்வதுபோல் கீழ்மக்கள் எவ்வளவு அற்ப காரியத்திலும் பிறர் ஏவாமல் பிரவேசிக்கமாட்டார்; நல்லவருக்கு ஒன்றுங் கொடார்; அடித்துக் குத்திப் பலவிதத்தில் துன்பப்படுத்துவோர்க்கு எதையுங் கொடுப்பார்கள் என்பதாம்.

"இரணங் கொடுத்தாற் கொடுப்பீர் கொடாரே, சரணங் கொடுத்தாலுந் தாம்." இயற்கையாப் பொல்லாங்கு செய்யும் அயோக்கியருக்கேயன்றி யோக்கியருக்குக் கொடார் எனினும் பொருந்தும்.

அளிநீரார்—அளிந்த நீர்மையை உடையவர்கள், அல்லது அளிக்கும்படியான [இரங்கும்படியான] நீர்மையை உடையவர்கள். ஆனும்—

---

5. Fools are of the nature of the chisel which, without being struck, will not penitrate even a tender leaf, though resting upon it. They will not give anything whatever to the worthy meek people but they will do every thing to those who employ entraneous force upon them.

Digitized by Google

ஆயினும் என்பதின் இடைக்குறை; இங்கு உம்மை - ஐயம். எனைத்தா னும்—இங்கு உம்மை சிறப்பு. (ரு)

மலைநல முள்ளுங் குறவன் பயந்த
விளைநில முள்ளு முழவன் சிறந்தொருவர்
செய்தநன் றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்.

(இ-ள்.) குறவன்—, மலை நலம் - மலையின் வளத்தை, உள்ளும்- நினைப்பான்; பயந்த - பயனைத்தந்த, விளை நிலம் - விளைகின்ற நிலத்தை, உழவன் - பயிர்செய்பவன், உள்ளும்—; சான்றோர் - பெரியோர், ஒருவர் செய்த நன்று - (தமக்கு) பிறரொருவர் செய்த நன்மையை, சிறந்து உள்ளுவர் - சிறந்ததா நினைப்பார்கள்; கயம் - கயவன், [கீழ் மகன்], தன்னை—, வைததை - (ஒருவன்) திட்டினதை, உள்ளிவிடும்- (தீர) நினைப்பான், எ-று.

குறவனுக்கு மலையிற் பழக்கமாதலால் மலைநல முள்ளுவான்; அப் படியே உழவனும். சான்றோர் பிறரைச் சிறப்பித்தலை மேற்கொண்டவ ராதலால் செய்த நன்று உள்ளுவர். கயவனுக்கு வேறொரு நினைப்பு மின்றித் தன்னைமேலாக எண்ணுவது இயற்கை யாதலால் அதற்குத் தாழ்மை வரும்படி வைததையே நினைப்பானென்பது கருத்து.

குறம்—சாதிப்பெயர், அதனையுடையவன் குறவன். உழவன்— உழு, அ, அன்,—பகுதி, சாரியை, விகுதிகள். சிறந்து—சிறக்க என்ப தின் திரிபு. கயவனைக் கயம் என்றது இழிவினால். (சா)

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர் - கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும்.

(இ - ள்.) ஒரு நன்றி செய்தவர்க்கு - ஒரு உபகாரஞ் செய்தவர் திறத்தில், ஒன்றி எழுந்த - சேர்ந்து உண்டான, பிழை நூறும் - நூறு குற்றங்களையானும், சான்றோர்—, பொறுப்பர் - பொறுத்துக் கொள்ளுவர்; கயவர்க்கு—, எழு நூறு நன்றி செய்து - எழுநூறு

6. The mountaineer thinks of the richness of his mountains, the husbandman thinks of the productiveness of his fields, the great think highly of the benefits done to them by others, and the fool thinks only of the abuse he has received.

7. For a single good done to them the great will endure a hundred evils afterwards inflicted. But if seven hundred benefits be confered on the fool and a single evil be done afterwards, he will consider the whole good done as evil.

Digitized by Google

நன்மைகளைச்செய்து, ஒன்று தீது ஆயின் - ஒரு தீமை செய்தானாயின், எழுநூறும் தீது ஆய்விடும் - எழுநூறு நன்மைகளும் தீதுபோலவே முடியும், எ-று.

மேலோர் அற்ப நன்மையைச் செய்தவனும் பல தீங்குசெய்தால் நன்மையாகவே எண்ணிப் பொறுத்துக் கொள்வார்கள், கீழோரோ இதற்கு மாறாயிருப்பார்கள் என்றால் அவரவரியற்கை அப்படித்தோன் றுமென்பது கருத்து.

செய்தவர்க்கு—குவ்வுருபு இடப்பொருளில் வந்தது. கயவர்க்கு—கோடற்பொருளில் வந்தது. ஆயின் என்பதோடு செய்தான் என ஒரு சொல் கூட்டிக்கொள்க. அல்லது செய்து என்பதைச் செயவெனெச் சத்திரிபாவைத்து அவற்றுள் ஒன்று தீதாயின் என்று உரைக்க. தீதாய் விடும்—விடு உறுதியைக்காட்டும். (எ)

ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள் - கோட்டை
வைரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய் பன்றி
செயிர்வேழ மாகுத லின்று.

(இ - ள்.) வாள் கண்ணாய் - வாள்போன்ற கண்ணுடையவளே!, இல் பிறந்தார் - நற்குடிப்பிறந்தவர், ஏட்டை பருவத்தும் - தளர்ச்சி யான காலத்திலும், [தரித்திரத்திலும்], செய்வன - செய்கிற நற்காரி யங்களை, முழு மக்கள் - மூடர்கள், மோட்டிடத்தும் - உயர்வான காலத்திலும், [செல்வப்பெருக்கிலும்], செய்யார் - செய்யமாட்டார் கள்; கோட்டை - கொம்பில், வயிரம் செறிப்பினும் - பூணைப் பூட்டி னாலும், பன்றி - பன்றியானது, செயிர் வேழம் ஆகுதல் - வீரங் காட் டும்படியான யானை ஆகுதல், இன்று - இல்லை, எ-று.

பன்றிக்கொம்புக்கு யானைக்கொம்புக்குப் போடுவதுபோலப் பூண் கட்டினாலும் அது யானையாகாததுபோல், மூடர் மிகுந்த செல்வம் பெற்றாலும் நற்குடிப் பிறப்பாளர் தரித்திரத்திற் செய்யுமளவும் விருந் து பாராட்டல் முதலாகிய நற்காரியஞ் செய்யமாட்டார்கள், என்றால் மேலோரியற்கையும் கீழோரியற்கையு மாறா என்பது கருத்து.

பிறந்ததற்பின் படிப்பு முதலியவைகளாலே கிஞ்சித்தும் தளரா திருப்பதுபற்றி மூடரை முழுமக்கள் என்றது. கோட்டை—வேற் றுமை மயக்கம். (அ)

---

8. O thou who hast lance-like eyes! The fool in prosperity will not do such kindly services which men of high birth do even in adversity. Though one should bind the tusks of a hog with rings, it will never become a warlike elephant.

Digitized by Google

இன்றாது மிந்நிலையே யாது மினிச்சிறிது
நின்றாது மென்று நினைத்திருந் - தொன்றி
உரையின் மகிழ்ந்துதம் முள்ளம்வே றாகி
மரையிலையின் மாய்ந்தார் பலர்.

(இ - ள்.) இன்று ஆதும் - இன்றைக்குச் (செல்வமுடையர்) ஆவோம்; இந்நிலையே - இப்பொழுதே, ஆதும் - (செல்வமுடையர்) ஆவோம்; இனி - மேல், சிறிது நின்று - சொற்பகாலமிருந்து, ஆதும்—, என்று நினைத்து இருந்து - இப்படி சிந்தித்துக்கொண் டிருந்து, ஒன்றி உரையின் மகிழ்ந்து - சேர்ந்து சொல்வதனாலே சந்தோஷித்து, தம் உள்ளம் வேறு ஆகி - தமது நினைப்பு மாறி, மரை இலையின் - தாமரை யிலைபோலே, பலர் - அநேகர், மாய்ந்தார் - அழிந்தார்கள், எ-று.

எமக்கு இன்று செல்வம் வரும் நாளைவரும் என்று பிறரிடம் சொல்லி மகிழ்ந்திருந்து, அது அப்படி வராமையாலே மனம் வருந்தி அழிந்தவர் பலர் என்றால், வீணெண்ணத்தினால் ஜம்பம் பேசுதல் கயவ ரியற்கை என்பது கருத்து.

தாமரையிலை செழிப்பா யிருந்து நாள்வட்டத்தில் அங்கேயே அழிவதுபோல் அழிந்தார் என்பதாம்.

மரை - மான்கள்; அவை தின்ன இலைபோல் எனப் பொருளு ரைப்பாரு முண்டு. அப்பக்ஷத்தில் தின்பதற்கு முன் செழிப்பாய்க் காணப்பட்டுப் பின் சொரூபமே தெரியாமல் அழிந்ததுபோல் என வலிந்து கருத்துக்கொள்ள வேண்டும்.

ஆதும் — தன்மைப்பன்மை வினை முற்று, எதிர்காலம், தும் — விகுதி. "தவ்வொடிறப்புமெதிர்வும்" என்பதை நினைக்க. உரையின்— ஐந்தனுருபு, ஏதுப்பொருளில் வந்தது. உள்ளம் வேறாகி—சினைவினை யாதலின் செய்தெனெச்சம், முதல் வினையொடு முடிந்தது. (௯)

நீருட் பிறந்து நிறம்பசிய தாயினு
மீரங் கிடையகத் தில்லாகு - மோரு
நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்து
மறைப்பெருங்க லன்னா ருடைத்து.

---

9. Contemplating that they will become rich this day, this moment or some time shortly, some fools have changed their dispositions and faded away just like the lotus leaves.

10. The Indian cork plant [Sadai] though growing in water and green, has no moisture within. So this world has men who though possessed of abundant riches, are as hard-hearted as the great stony rocks.

Digitized by Google

(இ - ள்.) நீருள் பிறந்து - தண்ணீரிலுண்டாகி, நிறம் பசியது ஆயினும் - நிறத்தில் பசுமையானதா யிருந்தாலும், கிடையகத்து - சடையினுள்ளே, ஈரம் இல் ஆகும் - ஈரமானது இல்லாதாகும்; நிறை பெரு செல்வத்து - நிறைவான பெரியசெல்வத்திலே, நின்றக்கடைத்தும் - இருந்தாலும், அறை பெரு கல் அன்னார் - பாறையாகிய பெரிய கல்லைப்போன்றவர்களை, [மனதில் பசையில்லாதவரை], உடைத்து - (இவ்வுலகம்) உடையதா யிருக்கின்றது, எ-று.

தண்ணீலிருந்தும் உள்ளீரமில்லாத சடையைப்போலே கன்னெஞ்சுடைய மூடர் இவ்வுலகத்திற் பலருண்டென்பதாம்.

மனதிற் பசையாவது தயாதாக்ஷிணியங்கள். ஓரும்—அசை; நீர் அறியும் என்னவுமாம். நிறை—முதனிலைத் தொழிற் பெயர்; வினைத்தொகை என்றால் தொடைபற்றி ஒற்று மிகுந்ததெனக் கொள்க. (௧0)

---

## ௩௭-வது அதிகாரம்.—Chapter XXXVII.

---

### பன்னெறி.—Miscellaneous.

அதாவது பலவிஷயங்களையும் கலந்து சொல்லியது.

மழைதிளைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பா
யிழைவிளக்கு நின்றிமைப்பி னென்னும்-விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதா னில்லகங்
காண்டற் கரியதோர் காடு.

(இ - ள்) மழை திளைக்கும் - மேகம் தவழும்படியான, மாடம் ஆய் - மாடியுள்ளதாய், மாண்பு அமைந்த காப்பு ஆய் - சிறப்புப் பொருந்திய காவலுள்ளதாய், இழை விளக்கு - ஆபரணங்களாகிய விளக்குகள், நின்று இமைப்பின் - நிலைபெற்று விளங்கப்பெற்றாலும், விழை தக்க - விரும்பும்படியான, மாண்ட - மாட்சிமைப்பட்ட, மனையாளை - இல்லாளை, இல்லாதான் - பெற்றில்லாதவனுடைய, இல்லகம் - மனை, என் ஆம் - என்னபயனுடையதாம்; (அது) காண்டற்கு அரியது - பார்ப்பதற்குக்கூடாத, ஓர் காடு - ஒருகாடேயாம், எ-று.

எவ்வளவு செல்வமிருந்தாலும் நல்ல மனையாளில்லாத வீடு பயனில்லதென்பதாம்.

---

1. Of what use is a lofty building towering to the clouds, guarded by excellent sentries and lit by resplendent ornaments, if it should be without a lovely wife of amiable qualities? Such a building will only be a dreadful forest.

Digitized by Google

மழைதிளைக்கு மாடமென்றது உயரத்தைக் குறிக்கின்றது. இது அன்மொழித்தொகை. பண்புத்தொகையா வுரைத்தாலும் பொருந்தும். மாண்பமைந்த காப்பும் இப்படியே. (க)

வழுக்கெனைத்து மில்லாத வாள்வாய்க் கிடந்து
மிழுக்கினைத் தாம்பெறு ராயி - னிழுக்கெனைத்துஞ்
செய்குறுப் பாணி சிறிதேயச் சின்மொழியார்
கையுறுப் பாணி பெரிது.

(இ-ள்.) (பெண்கள்) வழுக்கு எனைத்தும் இல்லாத - கொஞ்சமும் குற்றமு மில்லாத, வாள் வாய் கிடந்தும் - வாளின் காவலி லிருந்தும், இழுக்கினை - குற்றத்தை, தாம்—, பெறுர் ஆயின் - அடையாமலிருந்தாலும், அ சின்மொழியார் - அந்தப்பெண்கள், இழுக்கு எனைத்தும் - குற்றங்களை யெல்லாம், செய்குறு பாணி - செய்யாதகாலம், சிறிதே - சொற்பமேயாம்; கை உறு பாணி - ஒழுக்கத்தைப் பெறுதகாலம், பெரிது - அதிகமாம், எ-று.

இயற்கையிற் கல்பில்லாத பெண்களுக்குக் காவல் வைத்தாலும் அவர்கள் இழிவானகாரியம் பெரும்பாலும் செய்வார்கள் என்பது கருத்து.

வாள் காவலாவது வாள் வைத்துக்கொண் டிருப்பவர்களுடைய காவல்; வாள்போன்ற கொடிய காவல் எனினுமாம். பெறுராயின் என்பதோடு சிறப்பும்மை கூட்டிக்கொள்க. இங்கே இழுக்கென்றது முக்கியமாய்க் கற்பின் அழிவை. பெரும்பான்மையாய்ப் பெண்களின் இயல்பைச் சொன்னபடி. செய்குறு—உறு - துணைவினை, கு - சாரியை.

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
யட்டில் புகாதா ளரும்பிணி - யட்டதனை
யுண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

---

2. Though they, being guarded with drawn swords and unrelenting vigilence, refrain from improper conduct, the period in which females (naturally wanting in morality) so refrain themselves is indeed very short, and the period they do not pursue a virtuous course of life is truly great.

3. The wife that bold in opposition says "strike on" is death itself. She who does not resort to kitchen duties early in the morning is an incurable disease. She who does not serve her husband with the food she has cooked is a house-hold devil. These three kinds of wretches are weapons intended to kill their husbands.

Digitized by Google

(இ-ள்.) எறி என்று எதிர் நிற்பாள் - அடி என்று சொல்லி எதிரில் நிற்கிற பெண், கூற்றம் - எமன்; சிறு காலை - காலையில், அட்டு இல் புகாதாள் - சமையல் வீட்டிலே போகாதவள், அரு பிணி - அருமையான வியாதி; அட்டதனை - சமைத்ததை, உண்டி உதவாதாள் - உணவாகக் கொடாதவள், இல் வாழ் பேய் - வீட்டிலிருக்கிற பிசாசு; இம்மூவர் - இந்தப்பெண்கள் மூவரும், கொண்டானை - கொண்ட கணவனை, கொல்லும் படை - கொல்லும்படியான ஆயுதம், எ-று.

கணவன் ஏதாகிலும் கோபித்துச் சொன்னால் எதிர்த்து நிற்பதும், காலத்தில் சமைக்கமுயலாமையும், கணவன் விரும்பியபோது சோறிடாமையும், புருடனைக் கொல்லுவதற்கு ஒப்பாகும் என்றபடி.

கூற்றம், பிணி, பேய், படை, இவை உவமையாகு பெயர்கள். உண்டி என்பதனை ஏவலொருமையாக வைத்து "நீ உண்ணென்று கொடாதவள்" என உரைப்பாரும் உண்டு. (ங)

கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
வார்ப்பது கேட்டு மதுதெளியான் பேர்த்துமோ
ரிற்கொண் டினிதிரூஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு.

(இ-ள்.) கடி எனக் கேட்டும் - (இல்வாழ்க்கையை) நீக்கி விடு என்று (பெரியோர்) சொல்லக் கேட்டும், கடியான் - நீக்கான்; வெடி பட - (தலை) வெடித்துப் போம்படி, ஆர்ப்பது கேட்டும் - தம்பட்ட முதலியவை ஒலிப்பதைக் கேட்டும், அது தெளியான் - இல்வாழ்க்கை இத்தன்மையதெனத் தெரிந்துகொள்ள மாட்டான்; பேர்த்தும் ஓர் இல் கொண்டு - மறுபடியும் ஒரு இல்லாளைக் கட்டிக்கொண்டு, இனிது இரூஉம் ஏமுறுதல் - சந்தோஷமா யிருக்கின்ற மயக்கம், கல் கொண்டு எறியும் - கல்லால் எறியும்படியான, தவறு என்ப - குற்றம் என்று சொல்வர் (பெரியோர்,) எ-று.

ஒருவன் கலியாண முயற்சியை விடு என்று பெரியோர் சொல்லவும் விடாமல் அவள் இறந்துபோனதைக் கண்டும் தெரியாமல் மற்றொருத்தியைக் கலியாணஞ்செய்துகொண்டு மகிழ்ந்திருத்தல் பெருங்குற்ற மென்பது கருத்து.

---

4. Though one is advised to eschew marriage, he eschews it not; though the sound of the death-drum pierces his ear, he heeds it not. He moreover takes in another wife and indulges in the delusion of matrimonial pleasures. These the wise say are crimes worthy to be punished by stoning.

Digitized by Google

கடி என்பது கலியாணத்துக்கும் பேர். கடியத்தக்கது கடி என்று அதற்கு அவயவப்பொருள் கொண்டு உரைப்பாருமுளர். ஆர்ப்பது—இங்கு சாப்பறையின் ஓசை. இருஉம்—குச் சாரியை இன்றி அளபெடுத்துப் பெயரொச்சமானது; இது சொல்லிசை யளபெடை. ஏகாரம் - அசை. (ச)

தலையே தவமுயன்று வாழ்த லொருவர்க்
கிடையே யினியார்கட் டங்கல் - கடையே
புணராதென் றெண்ணிப் பொருணசையாற் றம்மை
யுணரார்பின் சென்று நிலை.

(இ-ள்) ஒருவர்க்கு—, தவம் முயன்று வாழ்தல் - தவத்துக்குரிய காரியங்களில் முயற்சிசெய்து வாழ்வது, தலையே - தலைமையான நிலை; இனியார்கண் தங்கல் - இனிமையான மனைவிகளிடத்துச் சேர்தல், இடையே - நடுத்திறமானது; புணராது என்று எண்ணி - கிடைக்க மாட்டாதென்று நினைத்தும், பொருள் நசையால் - பணத்தின் ஆசையினாலே, தம்மை உணரார் பின் - தமது யோக்கியதையை அறியாதவர்கள் பின்னே, சென்று நிலை - போய்நிற்பது, கடையே - கடை சித்திறமேயாம், எ-று.

மனிதன் தவஞ்செய்து வாழ்வது முக்கியமானது; இல்லாவிட்டால் இல்லறத்தில் வாழுவாவது வேண்டும், இது மத்திமம். இரண்டுமில்லாமல் இவர்களால் பணவுதவி யாகமாட்டாதென்று தெரிந்தும் தம் யோக்கியதையைத் தெரிந்துகொள்ள மாட்டாதவனைப் பின்செல்வது அதமம் என்றபடி.

எண்ணி என்பதோடு உம்மை கூட்டிக்கொள்க. நிலை—தொழிற்பெயர். (ரு)

கல்லாக் கழிப்பர் தலையாயார் நல்லவை
துவ்வாக் கழிப்ப ரிடைகள் கடைக
ளினிதுண்ணே மாரப் பெறேம்யா மென்னு
முனிவினாற் கண்பா டிலர்.

---

5. The highest stage in life is to practice austerities, the middle stage is to live in matrimony with beloved wives, and the lowest stage is to follow obsequiously those who know us not with desire for wealth, though knowing that it cannot be acquired.

6. Those who rank the highest among men spend their time in study; those that are middle in the scale spend their days in enjoying what they have acquired and those that are the lowest in the scale spend their life sleeplessly, feeling dissatisfied that they have not fared luxuriously nor obtained sufficient wealth.

Digitized by Google

(இ-ள்.) தலை ஆயார் - தலைமையான அறிவினவர், கல்லா - நூல்களைக்கற்று, கழிப்பர் - (பொழுது) போக்குவர் ; இடைகள் - மத்திமர், கல்லவை - கிடைத்தபோகங்களை, துவ்வா - அனுபவித்து, கழிப்பர்—; கடைகள் - அதமர், இனிது உண்ணேம் - இனிமையான வுணவை உண்ணப்பெற்றிலோமே, ஆர பெறேம் - (செல்வத்தை) நிரம்பப் பெறவுமாட்டோமே, யாம் - நாம், என்னும் - என்றுசொல்லத்தக்க, முனிவினால் - வெறுப்பினால், கண்பாடு - தூக்கம், இலர் - இல்லாதவராவர், எ-று.

நூல்களைக் கற்றுப் பொழுது போக்குவது மேலானவர்கள் தொழில்; கிடைத்தமட்டிலே திர்ப்த்தியாய்ச் சுகத்தை அனுபவித்தல் மத்திமர் தொழில்; அதமரோ கிடைத்ததில் திர்ப்த்தியில்லாமல் செல்வத்திற்காக ஏக்கம் பிடித்துத் தூக்கமுமில்லாமல் அலைந்து கெடுவார்கள் என்பது கருத்து.

கல்லா, துவ்வா,—இரண்டும் செய்யா என்னும் இறந்தகால வினையெச்சம். துவ்வா—து - பகுதி, ஆ - விகுதி, வகரம் எழுத்துப் பேறு. உண்ணேம், பெறேம் என்பன நமக்குக் கிட்டாதென்று வெறுப்பின் விதத்தைக் காட்டும். கண்பாடு — தொழிற்பெயர், முதல் நீண்டது; கண்படுதல் - செய்கையின்றி யழிதல், இதன் காரணமான தூக்கத்திற் காயிற்று. கண்பாட்டை இலர் எனவு முரைக்கலாம்.

செங்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
செங்நெல்லே யாகி விளைதலா - லங்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு.

(இ-ன்.) செம் நெல்லால் ஆய செழு முளை - நல்ல நெற்களாலுண்டாகிய செழிப்பான முளைகள், மற்றும் - பின்னும், அ செம் நெல்லே ஆகி - அந்த செவ்விய நெல்லாகவே தாம் ஆய், விளைதலால் - (மேன்மேல்) விளைகிறபடியினாலே, அ நெல் - அப்படிப்பட்ட நல்ல நெற்கள், வயல் நிறைய காய்க்கும் - வயல்கள் நிரம்பும்படி விளைகிற, வளம் வயல் ஊர - வளப்பமான வயல்கள் சூழ்ந்த ஊர்களையுடைய அரசனே!, தந்தை அறிவு மகன் அறிவு - தகப்பனுடைய புத்தியே மகனுடைய புத்தியாகின்றது, எ-று.

---

7. O lord of the country surrounded by rich fields yielding abundance of good paddy crops! The shoots of good paddy grow and yield afterwards (a crop of) the same grain; in like manner will the son be as wise as the father.

Digitized by Google

நல்ல நெல்முளையினால் நல்ல நெல் விளைவதுபோல் தந்தையின் நற்புத்தியால் மகனுக்கும் நற்புத்தி யுண்டாமென்பதாம். இது காரணம் பற்றிப் பெரும்பான்மையான சம்பவத்தைச் சொல்லியது.

விளைதலால்—ஆல் உருபு ஞாபக ஹேதுப்பொருளில் வந்தது. தந்தையறிவு மகனறிவென் றறியப்படுமென்பதாம். (எ)

உடைப்பெருஞ் செல்வருஞ் சான்றோருங் கெட்டுப்
புடைப்பெண்டிர் மக்களுங் கீழும் பெருகிக்
கடைக்கா றலைக்கண்ண தாகிக் குடைக்கால்போற்
கீழ்மேலாய் நிற்கு முலகு.

(இ - ள்.) உடை பெரு செல்வரும் - பெருஞ்செல்வ முடையோர்களும், சான்றோரும் - கல்வியறிவு நிறைந்தவர்களும், கெட்டு - (தம் நிலைகளிலிருந்து) மாறி, புடை பெண்டிர் மக்களும் - வைப்பாட்டி மக்களும், கீழும் - கீழ்மக்களும், பெருகி - விர்த்தியாகி, கடைக்கால் தலைக்கண்ணது ஆகி - காற்புறத்தி லிருக்கவேண்டியது தலைப்புறத்திருப்பதாகி, குடை கால் போல் - குடையினது காம்பு போல், உலகு - உலகமானது, கீழ் மேல் ஆய் நிற்கும் - கீழோன் மேலோனு நிற்கப்பெறும், எ-று.

செல்வரும் கற்றவரும் நிலைமாறி அயோக்கியர் விர்த்தியாகிக் கீழ்மேலா யிருக்கும் உலக இயற்கை என்றபடி. குடைக்காம்பு அப்படி யிருப்பது முற்காலத்தில்.

கெட்டு, பெருகி, ஆகி,—இவை காரணப்பொருட்டாய் வந்த எச்சங்கள்; கெட்டதனால், பெருகினதனால், ஆனதனால் என்றது பொருள். உலகம் கீழ்மேலாவதற்கு இவை காரணம்; ஆதலின் பிற கர்த்தாவின் வினையில் முடிந்தன. செயவெனெச்சத் திரிபென்னவுமாம். இப்படியும் உலகம் மாறிவிடும் என்பது கருத்து. "வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரோ". (அ)

இனியார்தம் நெஞ்சத்து நோயுனைப்ப வந்நோய்
தணியாத வுள்ள முடையார் - மணிவரன்றி

---

8. The wealthy and the wise have a fall in their position while the sons of concubines and the base wax great. Thus every thing in this world is topsy-turvy like the umbrella and its handle.

9. O lord of the good country covered with mighty mountains where the falling streams sweep down precious gems! It is better for such men as have not a mind to alleviate the afflic-

Digitized by Google

வீழு மருவி விறன்மலை நன்னாட
வாழ்வின் வரைபாய்த லன்று.

(இ-ள்.) மணி வரன்றி - ரத்தினங்களை வாரிக்கொண்டு, வீழும் அருவி - வீழ்கிற அருவிகளோடு கூடிய, விறல் மலை நல் நாட - மேன்மையான மலைகளுள்ள நல்ல நாட்டின் அரசனே!, இனியார் - சிநேகிதர், தம் நெஞ்சத்து நோய் உரைப்ப - தம் மனதிலிருக்குந் துன்பத்தைச் சொல்ல, அ நோய் தணியாத - அந்தத் துன்பங்களைப் போக்காத, உள்ளம் உடையார் - மனமுடையவர்கள், வாழ்வின் - வாழ்வதைக்காட்டிலும், வரை பாய்தல் - மலையிலிருந்து குதித்து உயிர்விடுதல், நன்று - மேலானதாம், எ-று.

சிநேகிதர் துன்பத்தை நீக்கமனமில்லாதவர் வலுவில் உயிர்விடுதல் மேல் என்பது கருத்து.

தம்மாலே அத்துன்பத்தை நீக்கக்கூடினும் கூடாவிடினும் அதில் மனஞ்செல்லாதபாவிகள் என்பதற்கு "தணியாத வுள்ளமுடையார்" என்றது. (கூ)

புதுப்புனலும் பூங்குழையார் நட்பு மிரண்டும்
விதுப்பற நாடின்வே றல்ல - புதுப்புனலு
மாரி யறவே யறுமே யவரன்பும்
வாரி யறவே யறும்.

(இ - ள்.) புது புனலும் - (வெள்ளம் வந்த) புதிய நீரும், பூ குழையார் நட்பும் - அழகிய காதணியணிந்த வேசைமாதர்களுடைய சிநேகமும், இரண்டும்—, விதுப்பு அற நாடின்-துரிதமில்லாமல் யோசித்தால், வேறு அல்ல - (ஒருதன்மை யுடையனவே யல்லாமல்) வேறு தன்மை யுடையன அல்ல; புது புனல் - புதுநீர், மாரி அறவே அறும் - மழை நீங்கினால் நீங்கும்; அவர் அன்பும் - அவ்வேசையருடைய சிநேகமும், வாரி அற - பொருளின் வரவு நீங்க, அறும் - நீங்கும், எ-று.

மழை நின்றால் புதுவெள்ளம் நிற்பதுபோல் பணவரவு நின்றால் வேசையர் சிநேகமும் நிற்குமாதலால் அவ்வஞ்சகரோடு சேரவேண்டாம் என்பது கருத்து.

---

tion of their friends when they declare it to them, to cast themselves down from a mountain top and end their days, rather than live (in this world.)

10. If we patiently consider, the freshes (of a river) and the love of beautiful courtesans are alike; the former will cease when the rain ceases and the latter will end when the resources of their lovers fail.

Digitized by Google

புனலும், நட்பும்,— எண்ணும்மைகள். அறவே, அறுமே,—ஏ இரண்டும் அசை. அல்லது அறவே ஏகாரம் உடனே என்னும் பொருளைக் குறிப்பிக்கும். அறுமே—ஏ பிரசித்தத்தைக் குறிக்கும். அன்பும்—உம்மை எச்சப்பொருளில் வந்தது. (௧௦)

## ௩௮-வது அதிகாரம்.—Chapter XXXVIII.

### பொதுமகளிர்.—Courtesans.

அதாவது வேசையர்தன்மையைக் குறித்துச் சொல்லியது. அவர்கள் ஒருவர்க்கே வாழ்க்கைப்படாமல் பணங்கொடுத்தவர்க்கெல்லாம் வாழ்க்கைப்படுதலால் பொதுமகளிர் என்னப்பட்டார்.

விளக்கொளியும் வேசையர் நட்பு மிரண்டுந்
துளக்கற நாடின்வே றல்ல - விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங்
கையற்ற கண்ணே யறும்.

(இ-ள்.) விளக்கு ஒளியும் - விளக்கினது பிரகாசமும், வேசையர் நட்பும் - பொதுமகளிரது அன்பும், இரண்டும் - (ஆகிய) இரண்டும், துளக்கு அற நாடின் - சஞ்சலமில்லாமல் யோசித்தால், வேறு அல்ல - வேறுவகைப்பட்டன அல்ல; விளக்கு ஒளியும் - விளக்கினது பிரகாசமும், நெய் அற்ற கண்ணே - நெய் வற்றிய அப்போதே, அறும் - நீங்கும்; அவர் அன்பும் - அவ்வேசையர் நட்பும், கை அற்ற கண்ணே - கைப்பொருள் நீங்கிய பொழுதே, அறும் - நீங்கும், எ-று.

விளக்கின் பிரகாசமானது நெய் வற்றியபொழுது நீங்குதல் போல வேசிமார் நட்பும் பொருள் வறளுமளவே யன்றிப் பின்பு இஞ்சித்தும் இராதென்பதாம். இதனால் அன்பில்லாதாருடைய போகம் இனியதன்று என்பது கருத்து.

வேசையர்—வேஸ்யா என்னும் வடசொல்லின் திரிபு. நட்பு—பண்பையுணர்த்தும் தொழிற்பெயர்; நள் - பகுதி, பு - விகுதி. வேறல்ல என்பது வெவ்வேறு தன்மைகளுள்ளன வல்ல என்பதாம்; அவ்வொரு தன்மையாவது காரணமுள்ள அளவே காரிய மிருத்தல். அற்றகண்—பெயரொச்சத் தொடர். அறும்—நீங்குந் தன்மையுள்ளதெனத் தன்மையைக் காட்டினதேயன்றிக் காலங் காட்டினதல்ல; இதற்கு விதி "இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்" என்பது. (௧)

---

1. If you properly investigate, the light of the lamp and the love of courtesans are alike, for the light will vanish when the oil is exhausted and her love will disappear when the money of the lover is gone.

Digitized by Google

அங்கோட் டகலல்கு லாயிழையா ணம்மொடு [டின்
செங்கோடு பாய்துமே யென்றாண்மன் - செங்கோட்
மேற்காண மின்மையான் மேவா தொழிந்தாளே
காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து.

(இ - ள்.) அம் கோடு அகல் அல்குல் - அழகிய பக்கங்களுள்ள அகன்ற அல்குலை யுடையவளான, ஆய் இழையாள் - ஆய்ந்தெடுத்த ஆபரணத்தை யுடையவள், [வேசைப்பெண்], நம்மொடு - நம்மோடு கூட, செம் கோடு - செம்மையான மலையினுச்சியி லிருந்தும், பாய்துமே மன் என்றாள் - (உன்னுடன் ஏறி) கீழே விழுவோம் என்று உறுதியாகச் சொன்னாள்; காணம் இன்மையால் - (நம்மிடத்தில்) பணமில்லாமையால், செம் கோட்டின் மேல் - செம்மையான மலையுச்சியின்மேல், மேவாது - (நம்முடனே) சேராமல், கால் - (தன்) காலில், கால் நோய் - வாதநோயை, காட்டி - காண்பித்து, கலுழ்ந்து - கலங்கி அழுது, ஒழிந்தாள் - நீங்கினாள், எ-று.

ஒருவன் உயிர்க்குயிராய் வைத்திருந்த ஒரு வேசையின் நடக்கையைச் சொல்லியது. நீ மலைமேலே யேறி வீழ்ந்தாலும் நான் கூட விழுவேனே யல்லது உயிர் பிழைத்திரேன் என்று நான் பணம் கொடுத்தபோதெல்லாஞ் சொல்லி, நானோர் ஆபத்தால் மலைக்கோடேறி விழும்படி நேரிட, அப்போதும் அவளைப் பிரிய மனமில்லாமல் கூட வாவென்று அழைக்க, அதற்குத் தன் காலில் நோயுண்டென்று காட்டிப் பொய்யழுகை யழுது என்னைவிட்டு நீங்கிப்போனாள் என்றான் என்பதாம். இதனால் வேசையர் வஞ்சித்தும் பணம் பறிப்பா ரென்பதாயிற்று.

பாய்தும்—தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று; தும் - விகுதியே காலம் காட்டும், [பதவியல்-சூ-கஅ.] (உ)

அங்கண் விசும்பி னமரர் தொழப்படுஞ்
செங்கண்மா லாயினு மாகமற் - றங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார்
விடுப்பர்தங் கையாற் றொழுது.

---

2. The fair beautiful damsel with choice jewels [courtesan] said "I will surely go up even to the mountain-top and cast myself with you from it". But now when our wealth is enhausted, she came weeping, pleading pain in the leg and left us altogether without following us to the mountain-top.

3. Though the lover be the red-eyed Vishnu worshipped by the celestials living in the beautiful enpansive heavens, if he has no money to give, he will be politely dismissed by the courtesan whose body is as soft and beautiful as tender (mango) leaves.

Digitized by Google

(இ-ள்.) அம் கண் விசும்பின் - அழகிய இடமுள்ள தேவலோகத்திலுள்ள, அமரர் தொழப்படும் - தேவர்களால் வணங்கப்படுகிற, செம் கண் மால் ஆயினும் ஆக - சிவந்த கண்களையுடைய மகாவிஷ்ணுவே யானாலும் ஆகட்டும், தம் கை கொடுப்பது ஒன்று - தமது கையில் கொடுக்கும்படியான ஒரு பொருள், இல்லாரை - இல்லாதவர்களை, கொய் தளிர் அன்னார் - கொய்யத்தக்க தளிர்போன்ற மேனியையுடைய வேசிகள், தம் கையால் - தமது கையால், தொழுது - கும்பிட்டு, விடுப்பர் - அனுப்புவார்கள், எ-று. மன் - அசை.

எவ்வளவு ரூபலாவணியம் முதலிய குணங்கள் வாய்ந்தவரானாலும் பணம் இல்லாதவர்களை இப்போது நீங்கள் வருவதற்கு சமயமில்லையென்று போக்குச்சொல்லித் தடுத்து அனுப்பிவிடுவார்களேயன்றி அவரைச் சேரார்க ளென்பது கருத்து. இதனால் பணம் ஒன்றையே யன்றி மற்றெந்தக் குணத்தையும் விரும்பார்களென்று அவர்களுடைய ரசமறியாக் குணத்தை யுணர்த்தினர்.

அமரர் தொழப்படுவதனால் மேன்மையும், செங்கண் என்றதனால் ரூபமும், குறிக்கப்பட்டன. ஆக—வியங்கோள் வினைமுற்று. மன்—அசை. (௩)

ஆணமி னெஞ்சத் தணிநீலக் கண்ணார்க்குக்
காண மிலாதார் கடுவனையர் - காணவே
செக்கூர்ந்து கொண்டாருஞ் செய்த பொருளுடையா
ரக்கார மன்னா ரவர்க்கு.

(இ - ள்.) ஆணம் இல் நெஞ்சத்து - அன்பில்லாத மனத்தையுடைய, அணி நீல கண்ணார்க்கு - அழகுள்ள நீலோற்பலம்போன்ற கண்களையுடைய வேசையர்க்கு, காணம் இல்லாதார் - தனம் இல்லாதவர்கள், கடு அனையர் - விஷம்போலப் பிரியமில்லாதவராவர்; காண - யோசிக்குமளவில், செக்கு ஊர்ந்து கொண்டாரும் - செக்காட்டுவோராயினும், செய்த - தேடிய, பொருள் உடையார் - திரவியத்தையுடையவர், அவர்க்கு - அவ்வேசையர்க்கு, அக்காரம் அன்னார் - சர்க்கரைபோ லினியராவர், எ-று.

பணமொன்றிலே யல்லாமல் மற்றெதிலும் அன்பில்லாதவ ராதலால் வேசையர்கள் பணமில்லாதாரை விஷத்துக் கொப்பாகவும் பண

4. Those who have no wealth to give are as poison to the dark-blue-eyed beautiful courtesan who is destitute of all good disposition; while even the worker in oil-mills will be as acceptable to her as sugar if he has only acquired wealth.

Digitized by Google

முள்ளோரை அக்காரத்துக் கொப்பாகவும் கொள்கின்றார்கள் என்றத ளுல் அவர்போகம் மிகவும் இனிப்பில்லாத தென்பது கருத்து.

காண—செயவெனெச்சம், நிகழ்காலத்தில் வந்தது; இதை மத் திமதீப நியாயத்தாலே இருபுறமும் கொள்க. (ச)

பாம்பிற் கொருதலை காட்டி யொருதலை
தேம்படு தெண்கயத்து மீன்காட்டு மாங்கு
மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வார்
விலங்கன்ன வெள்ளறிவி னார்.

(இ-ள்.) பாம்பிற்கு - பாம்பினுக்கு, ஒரு தலை காட்டி - ஒரு புறத் தைக்காட்டி, ஒரு தலை - மற்றொரு புறத்தை, தேன் படு - மதுரத் தைப் பெற்றிருக்கிற, தெள் கயத்து மீன் - தெளிந்த தடாகத்தி லுள்ள மீனுக்கு, காட்டும் - காண்பிக்கும், மலங்கு அன்ன - விலாங்கு மீனை யொத்த, செய்கை - செய்கையையுடைய, மகளிர் தோள் - வேசையரது தோள்களை, விலங்கு அன்ன - மிருகத்தை யொத்த, வெள் அறிவினர் - அறிவில்லாத மூடர்கள், சேர்வார் - அணைவார் கள், எ-று.

தன்னைப் பிடிக்கவரும் பாம்புக்கும் மீனுக்கும் இது பிடிபடும் என்னும் ஆசையைக் காட்டி ஒன்றினுக்கும் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளும் விலாங்கு மீனைப்போல் ஆசைகாட்டி மயக்கும் வேசை யரை விவேகமற்றவர்களே சேர்வார்கள் என்பது கருத்து.

அவர்கள் வஞ்சனை தெரிந்தால் மலம்பட்ட அமுதம்போல் அவ ளுருவமும் போகமும் யார்க்கும் இனிக்கமாட்டா. அதனைத் தெரிந்து கொள்ள மாட்டாமையால் வெள்ளறிவினரென்றார். மீன் காட்டும்— நான்காம் வேற்றுமைத்தொகை. ஆங்கு — அசை. வெண்மையான அறிவு=வெள்ளறிவு; வெண்மையாவது கல்வி கேள்விகளாற் கலப் புறுமை. (ரு)

பொத்தநூற் கல்லும் புணர்பிரியா வன்றிலும்போ
னித்தலு நம்மைப் பிரியல மென்றுரைத்த

---

5. Only ignorant fools will, like wild beasts, associate with courtesans who act dubiously as the vilangu fish which shows its one end to the snake and its other end to the fish in the clear sweet pool.

6. The damsel with the golden bracelet who assured me that she would, like the string and the perforated beads strung in it and the andril bird that never separated from its mate,

Digitized by Google

பொற்றொடியும் போர்த்தகர்க்கோ டாயினா ளென்னெ
நிற்றியோ போதியோ நீ. [ஞ்சே

(இ - ள்.) நூல் - நூலிற் (கோத்த), பொத்த - தொளைத்த, கல்லும் - மணியும், புணர் பிரியா - கூடி யிருத்தல் பிரியாத, அன்றிலும் போல் - அன்றிற் பறவைகளைப்போலவும், நித்தலும் - தினமும், நம்மை பிரியலம் என்று உரைத்த - நம்மை விட்டுப் பிரியமாட்டோமென்று சொல்லிய, பொன் தொடியும் - பொன்னாலாகிய வளையலையுடையவளும், [வேசையும்], போர் தகர் கோடு ஆயினாள் - போர் செய்கின்ற ஆட்டினுடையகொம்புபோல்(திரும்பிய குணமுடையவள்) ஆயினாள்; நல் நெஞ்சே - நல்ல மனமே!, நீ நிற்றியோ - நீ (அவளிடத்தில்) நிற்கின்றாயா?, (அல்லது) போதியோ - (என்னுடன்) வருகின்றாயா? (சொல்), எ-று.

நூலும் மணியும் போலவும் அன்றிலைப் போலவும் உம்மைக் கூடியிருப்பேனேயல்லது பிரிந்திருக்கமாட்டேனென்று சொல்லி, என் கையில் பணம் வறண்ட இக்காலத்தில் சண்டை யாட்டுக்கடாவின் கொம்பு பின்னிட்டு வளைந்திருப்பதுபோல முன்சொன்னதற்கு விரோதமாகப் பின்னிட்டாள். அவள் குணந் திரிந்த இக்காலத்தும் நீ அவளிடத்தில் இருப்பையா, அல்லது பிரிந் தென்னோடு வருவையா, மனமே? என்றதனால், வேசையர் குணந்தெரிந்தும் அவளைப்பற்றி யலையாமல் மனதைச் சுவாதீனப் படுத்திக்கொள்ளவேண்டு மென்பதுகருத்து.

பொத்த—பொத்து - பகுதி, அ - பெயரெச்ச விகுதி. நூற்கல்—உம்மைத் தொகை. கல்லும், அன்றிலும்,— எண்ணும்மைகள். பிரியலம்—உடன்பாட்டு எதிர்மறைச் சிறப்பு வினைமுற்று; பிரி - பகுதி, அல் - எதிர்மறை விகுதி, அனைத்தும் ஓர்பகுதியாகி, அதன்மேல் அம்—தன்மைப்பன்மை விகுதி. நிற்றி, போதி,—நிகழ்கால வினைமுற்றுகள். நிற்றி—நில் - பகுதி, இ - விகுதி, லகரம் றகரமானது சந்தியும் விகார [illegible]யென்பது நேர். றி என்பதில் றகரம் இடைநிலை யென் [illegible]ந்தகாலத்தைக்காட்டும், ஆகையால் பொருந்தாது. போ [illegible]தற்கு அவளை விட்டுப்போகிறாயா? எனவும் பொருள் கூறலாம். இப்பகுதிக்கு வருதலும் அர்த்தமாகிறது. ஓ—இரண்டும் வினா. (௬)

---

never separate from me, has now turned away from me like the horns of the fighting ram. O my good heart! Will you still remain with her or come away with me?

Digitized by Google

ஆமாபோ னக்கி யவர்கைப் பொருள்கொண்டு
சேமாபோற் குப்புறூஉஞ் சில்லைக்க ணன்பினை
யேமாந் தெமதென் றிருந்தார் பெறுபவே
தாமாம் பலரா னகை.

(இ-ள்.) ஆ மா போல் - காட்டுப் பசுவைப்போல், நக்கி - (இன்பமுண்டாக) பரிசித்து, அவர் - தம்மைச் சேர்ந்தவர்களுடைய, கை பொருள் கொண்டு - கையிலிருக்கும் பொருளைக் கவர்ந்துகொண்டு, சே மா போல் - எருதைப்போல, குப்புறும் - கவிழ்ந்து படுத்துக் கொள்ளுகிற, சில்லைக்கண் - பரத்தையினிடத்துள்ள, அன்பினை - அன்பை, ஏமாந்து - மயங்கி, எமது என்று இருந்தார் - எமக்கே யுரியதென்றிருந்தவர், பலரால் - பலர்களாலும், நகை பெறுப - நகைத்தலைப் பெறுவார்கள், எ-று. தாம், ஆம், ஏ,—மூன்றும் அசைகள்.

ஆமா இன்புற நக்கும், அதுபோல் இவர்களும் இன்புற ஆலிங்கன முதலியவற்றைச்செய்து அவர் கைப்பணம் பறித்துக்கொண்டு, அவர் அதிக மோகங்கொண்ட சமயத்தில் எருதைப்போல கவிழ்ந்துகொண்டு மோசஞ்செய்கிற வேசையினது அன்பைத் தமக்குரியதென்று நம்புகிறவனைப் பலர் நகைப்பார்கள் என்பது கருத்து.

சேமா—இருபெயரொட்டுப் பண்புத் தொகை. சில்லைக்கண்—உவமைத்தொகை; சில்லை - சிள்வண்டு, அதைப்போன்ற கண்ணுடையாள். வண்டு தேனிருக்கு மிடமெல்லாஞ் சென்று அதைக் கவர்ந்துகொண்டு நீங்குதல்போலப் பணமுடையாரிடத் தெல்லாம் நாடுங்கண்ணளாகையால் சில்லைக்கண் என்றார். கண் என்பது இங்கே உள்நாட்டத்தை. ஏமாந்து—ஏமா - பகுதி. பெறுப—பலர்பால் வினைமுற்று, ப - விகுதி, காலத்தையும் பாலையும் காட்டும். (எ)

ஏமாந்த போழ்தி னினியார்போன் றின்னாராய்த்
தாமார்ந்த போதே தகர்க்கோடா மானேக்கிற்
றங்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே
செந்நெறிச் சேர்துமென் பார்.

---

7. They will be derided by many in this [illegible] thinking them as their own, are delighted with the [illegible] love of courtesans, who like the wild cow, while or[illegible] sure, extract all their wealth and then like the buff[illegible] on their face and obstinately refuse to serve them.

8. Those who seek to obtain the true way to heaven will not associate with the full-breasted courtesans whose eyes roll as those of the deer, who pretend to love when their lovers are sunk in delusion, and who like the horns of the ram turn inimical when they, through love, approach them pennyless.

Digitized by Google

(இ - ள்.) செம் நெறி - நல்லவழியை, [வீட்டுநெறியை], சேர்தும் என்பார் - அடையக் கருதுவோர், ஏமாந்த போழ்தின் - மயங்கிய போது, இனியார் போன்று - பிரியமுள்ளவர்களைப் போலிருந்து, தாம் ஆர்ந்த போது - தாம் (வறியராய்) இச்சித்த காலத்து, இன்னார் ஆய் - பிரியமில்லாதவர்களாய், தகர் கோடு ஆம் - ஆட்டுக்கடாவின் கொம்பைப்போலாகும்படியான, மான் நோக்கின் - மான் போலும் பார்வையையுடைய, தம் நெறி பெண்டிர் - சுதந்திரப் பெண்களாகிய வேசிகளுடைய, தடம் முலை சேரார் - பெரிய முலைகளைச் சேரமாட்டார்கள், எ-று.

காமுகர் மயங்கியபோது பணத்தைப் பறிக்கும் பொருட்டுப் பிரியமானவர்களாக விருந்து பின்பு அவர் பணம்வறண்டு விரும்பியபோது உடன்படாது மாறுபடுகின்ற வேசிகள் போகத்தை நல்வழியில் நடக்க விரும்புவோர் விரும்பமாட்டார்கள் என்றபடி.

ஆர்தல் - விரும்புதல். மானோக்கின்—இன்-சாரியை. தம் நெறிப் பெண்டிர் - ஒருவர்க்கும் உட்படாமல் தம் மனம்போன போக்கிலே செல்கின்றவர்கள். செந்நெறி - செம்மையான நெறி; பண்புத் தொகை. சேர்தும்—தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று. (அ)

ஊறுசெய் நெஞ்சந்தம் முள்ளடக்கி யொண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத் - தேறி [ர்
யெமரொன்று கொள்வாருங் கொள்பவே யார்க்குந்
தமரல்லர் தம்முடம்பி னார்.

(இ - ள்.) ஒள் நுதலார் - பிரகாசமான நெற்றியை யுடையவர்கள், ஊறு செய் நெஞ்சம் - துன்பஞ் செய்யும்படியான எண்ணத்தை, தம் உள் அடக்கி - (பிறர் அறியவொட்டாமல்) தம்முள்ளே மறைத்து வைத்து, தேற - (காமுகர்கள்) நிச்சயமாக் கொள்ளும்படியாக, மொழிந்த மொழி - சொன்ன சொற்களை, கேட்டு - (காதினால்) கேட்டு, தேறி - (இவர்கள் நல்லவர் என்று) தேறி, எமர் என்று - எமக்குரியவரென்று, கொள்வாரும் - நினைக்கிறவர்களும், கொள்ப - (அப்படி) நினைக்கக்கடவர்கள்; (வேசையர்) யார்க்கும் - எவ்வகைப் பட்டவர்க்கும், தமர் அல்லர் - உரியரல்லர்; தம் உடம்பினர் - தம்க்கே உரிய உடம்பினராவர், எ-று.

---

9. Let those who believe in the hollow speech of those damsels with bright foreheads uttered with such an assurance as to instil credance in their lovers while they hide their evil thoughts within, and who thereby consider them as entirely devoted to them, do so; but they never belong to any particular individual (however great he may be). They are (on the contrary) their own masters.

Digitized by Google

தமது வஞ்சகத்தை வெளிக்காட்டாமல் நல்லவர்களைப்போல நம்பும்படி பேசும் வேசிமாரை நல்லவர்களென் றெண்ணுகிறவர்கள் எண்ணட்டும்; அவர்கள் உடம்பை யாருக்கும் வசப்படுத்தாமல் தமக்கே வசப்படுத்தி வைத்திருக்கின்றவர்களென் றறிக.

ஊறு—உறு என்னும் பகுதி முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர். எமர், தமர்,—கிளைப்பெயர்; யாம், தாம், - பகுதிகள். (௯)

உள்ள மொருவ னுழையதா வொண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யுங் கருத்தெல்லாந் - தெள்ளி
யறிந்த விடத்து மறியாராம் பாவஞ்
செறிந்த வுடம்பி னவர்.

(இ-ள்.) உள்ளம் ஒருவன் உழையது ஆ - மனமானது ஒருவனிடத்தில் இருக்க, ஒள் நுதலார் - விளக்கமான நெற்றியையுடைய வேசிமார், கள்ளத்தால் செய்யும் - கள்ளத்தினாற் செய்கின்ற, கருத்து எல்லாம் - நினைவுகளெல்லாம், தெள்ளி அறிந்த இடத்தும் - தெளிவாக ஆராய்ந்து அறிந்தபோதும், பாவம் செறிந்த உடம்பினவர் - பாவம் நிறைந்த உடம்பை யுடையோர், [அதாவது பாவிகள்], அறியார் ஆம் - அறியமாட்டார்களாம், எ-று.

மனம் ஒருவர்மேல் நிற்க மற்றொருவர் மேல் காம முற்றது போல் நடித்துக் காட்டும் வேசியர் கள்ளக்கருத்தை நன்கு யறிந்த போதும் அறியாத மூடரா யிருப்பவர் யாரெனில் பாவிக ளென்பதே யாம். (௧0)

---

## ௩௯-வது அதிகாரம்.—Chapter XXXIX.

---

### கற்புடைமகளிர்.—Chaste woman.

அதாவது பதிவிரதைகளின் தன்மை. பொதுமகளிர் போகம் விரும்பத்தக்க தன்றென்றபோது குலமகளிர் போகம் அறத்துக்குப் பொருந்தியதனால் விரும்பத்தக்கதென இவ்வதிகாரம் முன்னதின் பின்னர் வைக்கப்பட்டது.

அரும்பெறற் கற்பி னயிராணி யன்ன
பெரும்பெயர்ப் பெண்டி ரெனினும் - விரும்பிப்

---

10. Though they are clearly convinced of the crafty desires of the bright browed courtesans whose mind is ever on others, only sinful wretches will act as if they do not know them.

1. She alone is the true and good support of the husband who, though high in repute as the (great) Indrani in conjugal

Digitized by Google

பெறுநசையாற் பின்னிற்பா ரின்மையே பேணு
நறுநுதலா ணன்மைத் துணை.

(இ-ள்.) அரு பெறல் கற்பின் - பெறுதற்கரிதான - கற்பினை யுடைய, அயிராணி அன்ன - அயிராணியைப் போன்ற, பெரு பெயர் - பெரிய கீர்த்தியையுடைய, பெண்டிர் எனினும் - பெண்களானாலும், பெறும் நசையால் - தன்னை அநுபவிக்கும்படியான ஆசையால், விரும்பி - அபேட்சித்து, பின் நிற்பார் இன்மையே - (தன்) பின்னால் காத்திருக்கும்படியான புருஷரில்லாமையாகிய நற்குணத்தையே, பேணும் நறு நுதலாள் - பரிபாலனஞ் செய்கிற பெண், நன்மை துணை - (தன் நாயகனுக்கு) நல்லதுணையாவாள், எ-று.

இந்திராணிக்குச் சமானமான பெண்ணானாலும், எவள் தன்னைச் சேரவேண்டுமென்று விரும்புகிற புருஷர் தன்பின்னே நிற்காதபடி நல்லொழுக்கத்தில் நிற்கின்றாளோ அவளே தன் கணவனுக்கு நல்ல துணையானவள் என்பதாம்.

பெண்ணின் குறிப்பைக்காணாமல் எவனும் அவள் பின்னே நிற்க மாட்டானாகையால் பின்னிற்பா ரென்றார். நறுநுதலாள் — நல்ல நெற்றியை யுடையவள். அரும்பெறல்—பெறலரும் என்று சொற்களைத் திருப்பிக்கொள்க. அயிராணி—இந்திராணி என்னும் வடசொல்லின் திரிபு. (க)

குடநீரட் டுண்ணு மிடுக்கட் பொழுதுங்
கடனீ ரறவுண்ணுங் கேளிர் வரினுங்
கடனீர்மை கையாறாக் கொள்ளு மடமொழி
மாதர் மனைமாட்சி யாள்.

(இ-ள்.) குடம் நீர் - (ஒரு) குடத்து நீரை, அட்டு உண்ணும் - காய்ச்சி உண்ணும்படியான, இடுக்கண் பொழுதும் - வறுமைவந்த காலத்தும், கடல் நீர் அற உண்ணும் - சமுத்திர ஜலத்தை வற்றும்படி உண்கிற, கேளிர் வரினும் - சுற்றத்தார் வந்தாலும், கடன் நீர்மை - கடமையாகிய குணத்தை, கை ஆறு ஆ - ஒழுக்கநெறியாக, கொள்ளும் - கொள்ளுகின்ற, மடம் மொழி மாதர் - இரசமான மொழியையுடைய பெண், மனை - இல் வாழ்க்கைக்குத்தக்க, மாட்சியாள் - மேன்மையை யுடையவள், எ-று.

---

fidelity, allows not lovers to follow her in hopes of her favour.

2. That meek innocent matron is the proper housewife who, even in time of distress when the meal of the family is mere boiled water, considers it as her duty to receive with proper decorum a host of relatives who come to her house, though they are enough in number to consume the water of the sea.

Digitized by Google

குடநீரட்டுண்ணும் — அரிசிமுதலியவை யின்மையால் நீரையே காய்ச்சி யுண்கிற என்று வறுமையின் மிகுதி கூறப்பட்டது. கடனீர் வற்றும்படி யுண்கிற கேளிர் என்றால் எண்ணிக்கை யில்லாத பந்துக்க ளென்பது பொருள். கடனுவது—விருந்தோம்பல், சுற்றந்தழுவுதல் என்பன. மடமொழி—கவடு முதலியவை இல்லாத பேச்சு. இடுக்கண்—இடுக்கமுற்று நிற்பது, அதாவது துன்பம்; இங்கே அது வறுமைக்குக் கொள்ளப்பட்டது. மனை - இல்லறம். (உ)

நாலாறு மாறாய் நனிசிறிதா யெப்புறனு
மேலாறு மேலுறை சோரினு - மேலாய
வல்லாளாய் வாழுமூர் தற்புகழு மாண்கற்பி
னில்லா ளமர்ந்ததே யில்.

(இ-ள்.) நால் ஆறும் ஆறு ஆய் - நாற்றிசையும் வழியாகி, நனி சிறிது ஆய் - மிகவும் சிறியதாகி, எ புறனும் - எல்லாப்பக்கங்களிலும், மேல் ஆறு - மேல் வழியிலிருந்து, மேல் - (தன்) மேல், உறை சோரினும் - மழைத்துளி வழிந்தாலும், மேல் ஆய - மேலான தர்மங்களை, வல்லாள் ஆய் - (செய்ய) வல்லவளாய், வாழும் ஊர் - தான் வாழ்கின்ற ஊரிலுள்ளார், தன் புகழும் - தன்னைப்புகழும்படியான, மாண் கற்பின் - மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய, இல்லாள் - மனைவி, அமர்ந்ததே - வாழ்கின்றதே, இல் - மனையாகும், எ-று.

நாற்பக்கத்திலும் வழியுடையதாய் மிகவும் சிறியதாய் மேல்வழியிலிருந்து மழைத்துளி தன்மேல் வழிந்தாலும் பொறுத்து இல்லறநடாத்துவதில் வல்லவளாய் ஊரார் தன்னைப் புகழக் கற்பின்மிகுந்தவள் வசிக்குமிடமே வீடென்பதாம். வீட்டின் சீர்மை யில்லாமையைச் சொன்னது தரித்திரத்தின் மிகுதியைக் குறிப்பிப்பதற்கு. எவ்வளவும் தனக்குரிய ஒழுக்கத்தில் தவறுதல் இல்லாமல் கற்பினையுடையவள் சிறந்தபெண் என்றதாயிற்று. ஆய—பலவின்பால் வினையாலணையும் பெயர். (௩)

கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவா
ளுட்குடையா ளூர்நா ணியல்பினு - ளுட்கி

---

3. That is a respectable habitation, which though open on all the four sides, and exceedingly small in space, and so wrotten in the roof overhead as to allow the rain to pour in freely (on the occupant), is occupied by one who is still able to practice estimable charities, and who is highly praised by the village she lives in for her superior chastity.

4. That innocent and meek matron is indeed a proper house-wife, who is pleasing in appearance, who adorns herself according to the taste of her husband, who ever stands in respectful awe

Digitized by Google

யிடனறிந் தூடி யினிதி னுணரு
மடமொழி மாதராள் பெண்.

(இ - ள்.) கட்கு இனியாள் - கண்ணுக்கு இனியரூபத்தை யுடையவளாய், காதலன் - நாயகனது, காதல் வகை - ஆசையின்படி, புனைவாள் - (தன்னை) அலங்கரித்துக் கொள்பவளாய், உட்கு உடையாள் - அச்சம் உடையவளாய், ஊர் நாண் இயல்பினுள் - ஊருக்கு நாணும்படியான தன்மையுடையவளாய், [அல்லது ஊரார். நாணும்படியான தன்மை யுடையவளாய்], உட்கி - அஞ்சி, இடன் அறிந்து - சமயம் தெரிந்து, ஊடி - (நாயகனோடு) பிணங்கி, இனிதின் - பிரியமாக, உணரும் - (புணர்ச்சியைத்) தெரிந்துகொள்கிற, மடமொழி மாதராள் பெண் - கபடமில்லாத பேச்சுகளை யுடைய பெண்ணே பெண் ஆவாள், எ-று.

முகக்கோட்டம் சுடுசுடுப்பு இல்லாமல் பார்க்கப் பிரியப்படுபவளாய், நாயக னிஷ்டப்படி தன்னை அழகு செய்துகொள்பவளாய், பரபுருஷரோடு பேசுதல் முதலாகியவற்றிற்கு அஞ்சுகிறவளாய், எப்படிப்பட்டவர்களுக்கும் நாணுந் தன்மையுடையவளாய், நாயகன் மனதுக்கு என்னகோட்ட முண்டாமோவென் றஞ்சி அப்படிப்பட்ட தருணத்தில் ஊடி மறுத்தும் மூர்க்கமில்லாமல் ஊடலின் நீங்கிப் புணருங் காலம் அறிபவளே குலப்பெண்ணாவாள். "ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக், கூடலிற் றோன்றிய உப்பு" என்னுங் குறளானு முணர்க.

உவப்பிற்கு ஏதுவாகையால் இங்கே இடனறிந்தூடி என்றும், அவ்வூடலே பிடிவாதமாய் நின்றால் அது வெறுப்பைத் தருமாதலால் இனிதினுணரும் என்றுங் கூறினார். "ஒருபொருண் மேற்பல பெயர்வரினிறுதி, யொருவினை கொடுப்ப தனியு மொரோவழி" என்பதனால் இனியாள் முதலியவை 'மாதராள்பெண்' என்பதனோடு முடிந்தது. இச்சூத்திரத்தில் வினையென்றது முடிக்குஞ் சொல்லை. காதல்வகை—வகையென்பதனோடு ஆக என ஒருசொல்லை வருவித்துக் கூட்டிக் கொள்க.

ஊர்—ஊரிலுள்ளார்க்கு ஆகுபெயர். ஊர் நாண் இயல்பினுள் - ஊரிலுள்ளவர்கள் வெட்கப்படும்படியான கற்புடைமை முதலிய நற்குணமுடையாள் என உரைப்பினும் பொருந்தும். மாதர் - அழகு, அதனை யுடையவள் மாதராள். (௪)

---

of him, who is afraid of being found fault with by her own villagers, and who in all her love-quarrels knows how to conduct herself prudently.

Digitized by Google

எஞ்ஞான்று மெங்கணவ ரெந்தோண்மேற் சேர்ந்தெ
ழினு, மஞ்ஞான்று கண்டேம்போ னாணுதுமா - லெ
ஞ்ஞான்று, மென்னை கெழீஇயினர் கொல்லோ பொ
ருணசையாற், பன்மார்பு சேர்ந்தொழுகு வார்.

(இ - ள்.) எ ஞான்றும் - எந்த நாளும், எம் கணவர் - எம்மு டைய நாயகர், எம் தோண்மேல் - எம்முடைய புயங்களில், சேர்ந்து எழினும் - அணைந்தெழுந்தாலும், அ ஞான்று - அந்தநாளில், கண் டேம் போல் - (யாம்) கண்டதுபோல, நாணுதும் - நாணமடைகின் றோம்; எ ஞான்றும் - எப்பொழுதும், பொருள் நசையால் - பொ ருள் ஆசையால், பல் மார்பு - பலருடைய மார்புகளை, சேர்ந்து ஒழு குவார் - சேர்ந்து நடக்கின்ற பரத்தையர், கெழீஇயினர் - (பலர்க்கும்) உரியராயினர், என்னை - ஈதென்ன தன்மையோ? எ - று. ஆல், கொல், ஓ,—அசைகள்.

எம்முடைய நாயகர் எப்போதும் எம்மைவிட்டுப் பிரியாமலே இணைந்திருக்கிறார், ஆயினும் முதலில் கண்டபோது எப்படி நாணி னோமோ அப்படியே இன்றும் நாணுகின்றோம்; இப்படியிருக்க, பொருளாசையினால் ஒருகால் சேருகின்ற வேசிமார் சற்றும் நாணமல் சேர்ந்தவர்களை எப்படி அவ்வளவு சொந்தமாய்க் கையாளுகிறார்கள் என்பது கருத்து. இதனால் வேசிமாரைப் போல நாணம் அச்சங்க ளின்றிப் புருஷரிடத்தில் நடப்பவர்கள் குலப்பெண்க ளாகார்கள் என்பதாம்.

சேர்ந்தெழினும் - சேர்ந்தெழுந்தாலும். கண்டேம் — தன்மைப் பன்மை வினையாலணையும்பெயர். நாணுதும்—தன்மைப்பன்மை எதிர் கால வினைமுற்று; இங்கே இயல்பினால் நிகழ்காலத்தில் மயங்கியது. என்னை—எவன் என்னும் வினாவினைக் குறிப்புமுற்று, கடைக்குறை யாய் ஐகாரச்சாரியை பெற்றது. கெழீஇயினர்—இன்னிசை யளபெ டை, கெழுவு - பகுதி, இன் - இடைநிலை, அர் - விகுதி, தெரிநிலை வினைமுற்று. (ரு)

உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொரு - டெள்ளிய

---

5. Although our husbands daily embrace us in conjugal love, we feel bashful as if we met them for the first time. How then do courtesans feel who through desire of wealth associate with many when they enjoy (their pleasures) with them.

6. The riches of a generous man will shine in its effects like the learning acquired by a man of wisdom, and the beauty of

Digitized by Google

வாண்மகன் கையி லயில்வா ளனைத்தரோ
நாணுடையாள் பெற்ற நலம்.

(இ - ள்.) வள்ளன்மை - மிகுந்த ஈகையை, பூண்டான்கண் - அடைந்தவனிடத்துள்ள, ஒள் பொருள் - பிரகாசமான திரவியமானது, உள்ளத்து - மனத்தில், உணர்வு உடையான் - அறிவுடையவன், ஓதிய நூல் அற்று - படித்த நூலை ஒத்திருக்கும்; (அதுபோல) நாண் உடையாள் - நாணம் உடைய குலமகள், பெற்ற நலம் - அடைந்த அழகு, தெள்ளிய - விவேகமுள்ள, ஆண் மகன் - வீரனாகிய புருஷனுடைய, கையில் - கையிலுள்ள, அயில் - கூர்மையான வாள் அனைத்து - வாளை ஒத்திருக்கின்றது, எ-று.

இயற்கையில் தாதாவாயிருப்பவன் கையில் பணம் இருந்தால் அது விவேகமுள்ளவன் கற்ற நூற்பொருள்போல் பயன்பட்டு விளங்கும், அதுபோல இயற்கையில் நாணமுடையவளுக்குள்ள அழகானது வீரன் கையில் ஆயுதம்போல் யாவராலும் புகழப்பட்டு விளங்குமென்பதாம்.

ஆல், அரோ,—அசைகள். வள்ளல் தன்மை=வள்ளன்மை. ஒள் பொருள்—ஒண்பொருள், பண்புச்சொற்களிலுள்ள லகர ளகரங்கள் பெரும்பாலும் னகர ணகரங்களாகத் திரிந்துவருவன என அறிக. வாள் அனைத்து—அனை - உவமைச்சொல். வாளனைத்து என்பதை ஒரு சொல்லாக் கொள்ளத்தக்கது. (சு)

கருங்கொள்ளுஞ் செங்கொள்ளுந் தூணிப் பதக்கெ
ன், றொருங்கொப்பக் கொண்டானு மூர - னொருங்
கொவ்வா, நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்ப னீராடா, தென்னையுந் தோய வரும்.

(இ-ள்.) ஊரன் - ஊருக்குடையவன், கரு கொள்ளும் - கறுத்த கொள்ளையும், செம் கொள்ளும் - சிவந்தகொள்ளையும், ஒருங்கு ஒப்ப - சமானமாய் ஒத்திருக்க, தூணி பதக்கு என்று - தூணிப்பதக்கென்னும் அளவால், கொண்டானும் - வாங்கிக்கொண்டானும்; (அது

a modest woman will shine like the sharp weapon in the hands of a prudent hero.

7. Like the villager who without distinction bought the black and red grams at the same rate, my husband who with his mountain-like shoulders enjoyed the pleasures of damsels of ill repute, comes to embrace me without even washing himself.

Digitized by Google

போல்) ஒருங்கு ஒவ்வா - முழுதும் ஒத்திராத, கல் நுதலார் - அழகிய நெற்றியையுடைய வேசியரை, தோய்ந்த - அநுபவித்த, வரை மார்பன் - மலைபோன்ற மார்பையுடைய கணவன், நீர் ஆடாது - ஸ்நானஞ்செய்யாமல், என்னையும் தோய வரும் - என்னையும் அநுபவிக்க வருகிறான், எ-று.

ஒரு நாட்டுப்புறத்தான் கருங்கொள்ளையும் செங்கொள்ளையும் விலை வித்தியாச மில்லாமல் ஒரேயளவிற்கு வாங்கிக்கொண்டா னென்பார்கள், அப்படியே என் கணவன் பலபரத்தையரைப் புணர்ந்து ஸ்நானமுஞ் செய்யாமல் என்னையும் அநுபவிக்க வருகிறான், இதென்ன அக்கிரமம் என்று தலைவி கூறியதாகக் கொள்க. இதனால் தன் கணவன்செய்த அக்கிரமத்தையும் பொறுத்துக்கொள்வார் கற்புடைமகளிர் என்பதும், நீராடியாயினும் வந்தால் சேரலாமெனத் தம்முடைய சுத்தியையும் கூறினவா றாயிற்று.

ஒருங்கு—பகுதியே வினையெச்சப் பொருட்டாய் வந்தது. தூணி பதக்கு என்பன முகத்தலளவைப் பெயர்கள். தூணி - நாலுமரக்கால், பதக்கு - இரண்டுமரக்கால். ஆம் என்பது தாம் காணுமையைக் குறிக்கின்றது. ஊரன் என்பது தாரதம்மிய மறியாமையைக் குறிக்கின்றது. வரும் — இயல்பினால் வந்த கால வழுவமைதி. (எ)

கொடியவை கூறாதி பாணநீ கூறி
னடிபைய விட்டொதுங்கிச் சென்று — துடியி
னிடக்கண் ணனையம்யா மூரற் கதனால்
வலக்கண் ணனையார்க் குரை.

(இ-ள்.) பாண - பாணனே!, கொடியவை கூறாதி - கொடுமையான சொற்களைச் சொல்லாதே; (ஏனெனில்) யாம்—, ஊரற்கு - தலைவனுக்கு, துடியின் - உடுக்கையினது, இடம் கண் அனையம் - இடதுபக்கத்தைப்போல் பிரயோசனப் படாதவர்களா யிருக்கின்றோம்; அதனால் - அத்தன்மையால், நீ கூறின் - (அப்படிப்பட்ட சொற்களை) நீ சொன்னால், பைய - மெதுவாக, அடி விட்டு ஒதுங்கி சென்று - நீ இருக்குமிடத்தை விட்டு அப்புறம் போய், வலம் கண் அனையார்க்கு - அந்த (உடுக்கையின்) வலதுபக்கத்தைப் போல் அவருக்குப் பிரயோசனப்படுகிற வேசியர்க்கு, உரை - சொல்லு, எ-று.

---

8 O musician, do not tell me those harsh things for we are as useless to our husbands as the left side of the hand-drum. If you like so to speak, gently withdraw from me and go to those who are as useful as the right side of the drum.

Digitized by Google

இஃது ஒருத்தி தன் தலைவன் பரத்தையரிடத்துச் செல்வதைப் பாணன் தன்னிடத்திற் கூற, அதைக்கேட்கச் சகியாமல், பிரயோசனப்படாத வென்னிடத்திற் சொல்லவேண்டாம், பிரயோசனப்படுகிற பரத்தையரிடத்திற் சொல்லென்று சொன்னாள் என்பது கருத்து. இதனால் தன் கணவன் தூஷணையைக் காதினால் கேட்கவும் பிரியமில்லாமையாகிய நற்குணம் குலமகளிர்க் குண்டென்று கூறப்பட்டது.

உடுக்கைக்கு வலதுபக்கம் அடிபடுதலே யன்றி இடதுபக்கம் அடிபடுவதில்லை. பாணன் என்பவன் பாடுகின்ற ஓர் இழிசாதியான்; இவன் தலைவன் தலைவிகளுக்குத் தூது செல்வதுண்டு. கூறுதி — முன்னிலை யேவலொருமை வினைமுற்று; கூறு - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, தகரம் - எழுத்துப்பேறு, இ - விகுதி. பைய—குறிப்பு வினையெச்சம். அனையம்—தன்மைப் பன்மை வினைமுற்று. (அ)

சாய்ப்பறிக்க நீர்திகழுந் தண்வய லூரன்மீ
தீப்பறக்க நொந்தேனும் யானேமற் - றீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந் தணியகல
நோக்கி யிருந்தேனும் யான்.

(இ-ள்.) சாய் - கோரைப்புல்லை, பறிக்க - பிடுங்க, நீர் திகழும் - நீர் விளங்குகின்ற, தண் வயல் - குளிர்ச்சியாகிய வயல் சூழ்ந்த, ஊரன் மீது - ஊர்களையுடையவனான நாயகன் மீது, ஈ பறக்க - ஈயானது பறக்கையில், நொந்தேனும் யானே - சகியாமல் மனவருத்தப்பட்டவளும் யானே, தீ பறக்க - தழல் வீசும்படி, முலை தாக்கி - (வேசியர்) முலைகளினால் தாக்கி, பொருத - போர்செய்த, [கிரீடைசெய்த], தண் சாந்து - குளிர்ச்சியான சந்தனக்கலவையை, அணி அகலம் - தரித்த மார்பை, நோக்கி இருந்தேனும் யான் - கண்டிருந்தவளும் யானே, எ-று.

கூடியிருக்கையில் என் நாயகன்மேல் ஈ பறக்கவும் பார்த்துச் சகியாமல் அன்புகொண்டிருந்தவளும் நான், வேசிமார் தீப்பறக்கும்படி அழுத்தமாய் முலைகளால் தாக்கி கிரீடைசெய்து சந்தனக்குழம்பு அப்பிய மார்பைக்கண்டு நொந்து நிற்பவளும் யான் என்ன ஒரு குலமகள் கூறியது. இதனால் குலமகளிர் தமது நாயகர் பரத்தையரைக் கூடின

9. I am she who was afflicted when flies flew around my husband who possesses a country with cool fields where water springs up when reeds are plucked up. I am she who also bore with patience the sight of the sandle-bedaubed wide shoulders of my husband who enjoyed a conjugal fight with courtesans whose opposing breasts produced a great heat.

Digitized by Google

காலத்தும் தா மவரைத் திரஸ்காரஞ் செய்யாது இருக்கவேண்டு மென்று கூறியதாயிற்று.

பறிக்க—காரணப் பொருட்டாய் வந்த செயவெனெச்சம். மன் - அசை; மிகவும் எனவும் சொல்லலாம். பொருத—பொரு - பகுதி, த் - இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி; இறந்தகாலப் பெயரெச்சம். நொந்தேன், இருந்தேன்,—தன்மை ஒருமை வினையாலணையும் பெயர்கள். உம்—சிறப்போடு எண்ணுப் பொருளையும் தரும். ஏ—பிரிநிலை.()

அரும்பவிழ் தாரினா னெம்மருளு மென்று
பெரும்பொய் யுரையாதி பாண - கரும்பின்
கடைக்கண் ணனையநா மூரற் கதனு
லிடைக்கண் ணனையார்க் குரை.

(இ-ள்.) பாண - பாணனே!, அரும்பு அவிழ் - பூவரும்புகள் மலரும்படியான, தாரினான் - மாலையணிந்த எனது நாயகன், எம் அருளும் என்று - எமக்குக் கிருபை செய்வானென்று, பெரு பொய் - பெரிய பொய்யான வார்த்தைகளை, உரையாதி - சொல்லாதே; (ஏனெனில்) ஊரற்கு - ஊரையாளும் அவனுக்கு, கரும்பின் கடை கண் அனையம் நாம் - நாங்கள் கரும்பின் கடைசிக் கணுவை யொத்திருக்கின்றோம்; அதனால்—, (இப்பேச்சை) இடை கண் அனையார்க்கு - (அக்கரும்பின்) இடையிலுள்ள கணுக்களையொத்த பரத்தையர்க்கு, உரை - சொல்லு, எ-று.

கரும்பின் கடைக்கணுவைப்போல் உருசி குறைந்துள்ள நம்மிடத்தில் அருள்செய்து நாயகன் வருவானென்று பாணனே நீ பொய்யுரை சொல்லாதே; அக்கரும்பின் இடைக்கணுக்களைப் போல அவருக்கு ருசியுள்ள பரத்தையரிடம் இப்பேச்சைச்சொல்லு எனத் தலைவி கூறியது.

எம் அருளும்—நான்காம் வேற்றுமைத் தொகை. உரையாதி—முன்னிலை யேவல் வினைமுற்று. அனையம்—தன்மைப் பன்மை வினைமுற்று. (௧0)

---

10. O Musician! Utter not that gross falsehood saying that he who wears this garland whose buds blossom, will be kind to me. I am to him only as the top-most joint of the sugar-cane. Speak therefore these words to those courtesans who are dear to him as the middle joints of that cane.

Digitized by Google

௩ - வது.

# காமத்துப்பால்.

# ON AMOUR.

அதாவது இம்மை யின்பங்களில் சிறப்பாய்க் கொண்ட காமத்தைப் பற்றிச் சொல்லியது.

## ௪௦-வது அதிகாரம்.—Chapter XL.

### காமநுதலியல்.—Love.

அதாவது காமத்தின் பகுதிகளைச் சொல்லுகின்ற பிரிவு.

[இஃது தலைமகற்கு வாயிலில் நேர்ந்ததோழி
தலைமகள் புலவிநீங்கச் சொல்லியது.]

முயங்காக்காற் பாயும் பசலைமற் றூடி
யுயங்காக்கா லுப்பின்றுங் காமம் - வயங்கோத
நில்லாத் திரையலைக்கு நீள்கழித் தண்சேர்ப்ப
புல்லாப் புலப்பதோ ராறு.

(இ-ள்.) வயங்கு - விளங்குகின்ற, ஓதம் - கடலானது, நில்லா - நில்லாமல், திரை அலைக்கும் - அலைகளால் மோதுகின்ற, நீள் கழி - நீண்ட கழிகளினது, தண் சேர்ப்ப - குளிர்ச்சியான கரையையுடைய அரசனே!, முயங்காக்கால் - சேர்ந்திராமற்போனால், பசலை பாயும் - பசலையானது [நிறம் மாறுதல்] உடம்பில் வியாபிக்கும்; ஊடி உயங்காக்கால் - ஊடி வருந்தாதபோது, காமம் உப்பு இன்றும் - காமமானது ருசியில்லாமற்போகும்; புல்லா - புணர்ந்து, புலப்பது - ஊடுவது, ஓர் ஆறு - (காமத்துக்கு) ஓர் நன்னெறியாம், எ-று.

பசலை—விசனத்தைக் குறிக்கின்ற வேறு நிறம் [நிறம் மாறுதல்]; கூடாமற்போனால் பசலையுண்டாகின்றது. இங்கே பசலை நித்திரையின்மை, உடம்பு மெலிதல், எல்லாவற்றிலும் பிரியம் இல்லாமற்போதல், இவைகளுக்கு உபலக்ஷணம். எப்பொழுதும் சேர்ந்துகொண்டிருந்தால் காமத்தில் ருசியில்லை ஆதலால் கூடுவதும் ஊடுவதும் காமத்திற்கு அழகு.

---

1. O lord of the cool shore of the extended backwaters whose pellucid waves dash along with unceasing noise! If one enjoy not conjugal pleasure, he will become love-sick and sallow. If there be no love-quarrels, love is insipid. To unite in conjugal love and then to quarrel is a kind of amour.

Digitized by Google

முயங்காக்கால் — செய்யின் என்னும் வாய்பாட்டு எதிர்மறை வினையெச்சம். காமம் உப்பின்று — மாடுகோடு கூரியது என்பது போலக் கொள்க. 'உயர்திணைதொடர்ந்த' என்னும் சூத்திர வுரையில் இலக்கணம் காண்க. கூடலை வடநூலாரும் சம்போகமென்றும் ஊடலை விப்ரளம்பம் என்றும் சொல்லி, விப்ரளம்பத்தை மதுரதரம் என்கிறார்கள். (மதுரதரம் - மிகுந்த இனிப்பு.) (க)

தம்மமர் காதலர் தார்சூ ழணியகலம்
விம்ம முயங்குந் துணையில்லார்க் - கிம்மெனப்
பெய்ய வெழிலி முழங்குந் திசையெல்லா
நெய்த லறைந்தன்ன நீர்த்து.

(இ-ள்.) தம் அமர் காதலர் - தம்மால் விரும்பப்பட்ட நாயகருடைய, தார் சூழ் அணி அகலம் - மாலையை யணிந்த அழகிய மார்பை, விம்ம முயங்கும் - பூரிக்கத் தழுவும், துணை இல்லார்க்கு - அந்நாயகரைப் பிரிந்த மாதருக்கு, இம் என - இம்மென்னு மோசையோடு, எழிலி பெய்ய - மேகம் (நீரைச்) சொரிய, முழங்கும் - முழங்காநின்ற, திசை யெல்லாம் - திக்குகளெல்லாம், (அம்முழக்கம்) நெய்தல் அறைந்தது அன்ன நீர்த்து - சாப்பறை யறைந்தாற்போலும் தன்மையையுடைத்து, எ-று.

மழைக்காலத்தில் தம்மைத் தழுவும்படியான நாயகரைப் பிரிந்த மாதருக்கு மழை பெய்யும் ஓசை சாப்பறைபோலிருக்கும் என்றால் அவர்கள் உயிர் பொறுத்தல் கடின மென்றபடி.

அமர்—வினைத்தொகை; இச்செய்வினையைச் செயப்பாட்டு வினையாகத் திரித்துக்கொள்க. நீர்த்து—குறிப்பு முற்று. (உ)

[இஃது தலைமகன்செல்ல உடன்படாமையைத்
தலைவற்குத் தோழி சொல்லியது.]

கம்மஞ்செய் மாக்கள் கருவி யொடுக்கிய
மம்மர்கொண் மாலை மலராய்ந்து பூத்தொடுப்பாள்
கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தா டுணையில்லார்க்
கிம்மாலை யென்செய்வ தென்று.

---

2. The sound which the pouring rain produces on all sides is like a death-drum to the wife separated from her beloved husband whose broad beautiful breast is adorned with garlands.

3. In the evening when darkness forces mechanics to retire from their labor, the wife will select the best of flowers and string them up into a garland, and then having it in her hand will weep saying what is the use of this to one who is separated from her husband.

Digitized by Google

(இ-ள்.) கம்மம் செய் - கம்மியத் தொழிலைச் செய்கின்ற, மாக்கள் - மனிதருடைய, [கம்மாளருடைய], கருவி - ஆயுதங்களை, ஒடுக்கிய - வேலையில்லாமல் இருக்கச்செய்த, மம்மர் கொள் - மயக்கத்தைக் கொண்ட, மாலை - சாயங்காலத்தில், மலர் ஆய்ந்து - பூக்களை யாராய்ந்தெடுத்து, பூ தொடுப்பாள் - அம்மலர்களை (மாலையாத் தொடுத்து,) கை மாலை இட்டு - கையில் அம்மாலையை வைத்துக்கொண்டு, துணை இல்லார்க்கு - நாயகனில்லாத பெண்களுக்கு, இ மாலை என் செய்வது என்று - இந்தமாலை என்ன பிரயோசனத்தைத் தருவதென்று, கலுழ்ந்தாள் - மனம் கலங்கி அழுதாள், எ-று.

ஒருத்தி சாயங்காலம் நல்ல மலர்களை மாலைதொடுத்து நாயகன் பிரிந்து பரதேசம் செல்வதைத் தோழியாற் கேள்வியுற்று இவ்வளவு வருந்தி அன்பினால் நாயகருக்கென்று விநோதமாய்க் கட்டிய இந்த மாலை அவர் இல்லாதபோது இது ஏதுக்கும் உபயோகமில்லையென்று மனங்கலங்கி அழுதாள் எனத் தோழி தலைவற்குக் கூறினாள். இதனால் அவள் பகற்காலத்தில் நாயகனைப் பிரிந்திருந்தாலும் இரவிற் பிரிந்திருப்பது சகிக்கத்தக்கதன்று என்றால் இதுவும் கார்க்காலம்போல பெண்களுக்கு வருத்த முண்டாக்கும் என்றதாயிற்று.

மாலை என்பது பூமாலையேயல்ல போகத்துக்கு வேண்டிய மற்றக் கருவிகளுக்கும் உபலக்ஷணம். இப்படிப்பட்ட காரியங்களெல்லாம் பெண்களுக்குக் காமமிகுதியால் வரும் இன்பச்செய்கைகள். ‘கம்மஞ்செய்... ... ...ஒடுக்கிய’ என்பது அந்திக்காலத்தின் குறிப்பு. பலகுறிப்புகள் உளவாயினும் பகலெல்லாம் மிகவருந்தி வேலைசெய்யும் கம்மியரும் வேலையை நிறுத்தித் தம் நாயகிமாரிடம் செல்லுங் காலமென இக்குறிப்பைக் காட்டியது. மம்மர் என்பது காமக்களிப்பு. மம்மர்செய்—இது காலத்தின் இயற்கையைக் காட்டியது.

ஒடுக்கிய என்னும் பெயரெச்சமும் பெயரெச்சத்தின் விகாரமாகிய செய் என்னும் வினைத்தொகையும் [நன் - பொது - சூத் - ௪.] விதியால் மாலை என்னும் தம்மெச்சம் கொண்டன. கலுழ்ந்தாள்—கலுழ் - பகுதி. (௩.)

[இஃது வினைமுற்றி மீண்ட தலைமகன்
பாகன்கேட்பச் சொல்லியது.]

செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்
மெல்விரலூழ் தெறியா விம்மித்தன் - மெல்விரலின்

---

4. Will my wife reclining on her couch and counting with her soft fingers the days of my absence reproach me for my

Digitized by Google

னாள்வைத்து நங்குற்ற மெண்ணுங்கொ லந்தோதன்
றோள்வைத் தணைமேற் கிடந்து.

(இ-ள்.) செல் - (அஸ்தமிக்கச்) செல்கின்ற, சுடர் - சூரியனை, நோக்கி - பார்த்து, சிதர் - சிதறிய, அரி - இரேகைகளையுடைய, கண் - கண்கள், கொண்ட - அடைந்த, நீர் - நீரை, மெல் விரல் - மெல்லிய விரல்களால், ஊழ் - முறையில், தெறியா - எடுத்தெறிந்து, விம்மி - விம்மி அழுது, தன் மெல் விரலின் - தன்னுடைய மெல்லிய விரல் களில், நாள் வைத்து - நாள்களைக் கணக்கிட்டு, (தலைவி) அணைமேல் - படுக்கையில், தன் தோள் வைத்து - தன்புஜங்களைத் தலைக்கணையா வைத்து, கிடந்து - படுத்து, நம் குற்றம் - நமது குற்றங்களை, எண் ணும் கொல் - எண்ணுவாளோ, அந்தோ - ஐயோ! (என்று பாகனோடு தலைவன் கூறினான்,) எ-று.

ஒருதலைவன் தேசாந்தரம் போயிருந்து தன்னூர் கிட்ட வரும் போது, நம்முடைய காதலி அஸ்தமய காலங் கண்டு கண்களில் வடி யும் நீரை விரலால் எடுத்துத் தெறித்து நாம் போனநாள் இத்தனை யென்று விரல்வைத்தெண்ணி நாம் விரைவில் வருவோ மென்றும் இன்னின்னபடி செய்வோ மென்றும் சொல்லித் தவறிப்போன குற்றங்களைச் சிந்தித்து விசனப்படுவாளே யென்றிரங்கிப் பாகனோடு சொல்லியபடி.

செல் — வினைத்தொகையாகலின் ஈறுதிரியா தியல் பாயிற்று. அந்தோ—இரக்கச்சொல். "சிதரரிக்கண்கொண்டநீர்" என்பதற்கு 'இரேகைகள் படர்ந்த கண் அழகை மறைத்துக்கொண்டு நிற்கிற நீர்' என அவள் அழகை நினைத்து இரங்கினனென்பது கருத்து. (௪)

[இஃது தலைமகன் தானுற்றதைப் பாகற்குச் சொல்லியது.]

கண்கய லென்னுங் கருத்தினாற் காதலி
பின்சென்ற தம்ம சிறுசிரல் - பின்சென்று
ஊக்கி யெழுந்து மெறிகல்லா வொண்புருவங்
கோட்டிய வில்வாக் கறிந்து.

(இ-ள்.) கண் - கண்களை, கயல் என்னும் - மச்சமென்கிற, கருத் தினால் - எண்ணத்தினால், சிறு சிரல் - சிறிய சிச்சிலிக்குருவி, காதலி பின் சென்றது - மனைவியைப் பின்தொடர்ந்துபோயிற்று; பின் சென்

---

faults, while she weeps, beholding the setting sun and wipes away the tears from her eyes full of blood veins.

5. The king-fisher mistaking my wife's eyes for kayal fish flew after her, but when it saw her bow-like eyebrows, grew afraid and forbore to strike them.

Digitized by Google

றும் - பின்போயும், ஊக்கி எழுந்தும் - முயற்சிப்பட்டும், ஒள் புருவம் - பிரகாசமான புருவமாகிய, கோட்டிய - வளைத்த, வில் வாக்கு - வில்லின் வளைவை, அறிந்து - தெரிந்து, எறிகல்லா - எறியமாட்டாதிருந்தன, [பிடியாமலிருந்தன], எ-று.

தன் தலைவியினுடைய கண்களை மச்சமென்று நினைத்து, சிச்சிலிக் குருவிகள் பின்சென்று பிடிக்க முயன்றும் மேலிருக்கும் புருவத்தை வளைந்த வில்லென்று நினைத்துப் பிடியாமனின்றன வென்று தன் காதலியினுடைய அழகை வியந்து தலைவன் தோழனோடு சொல்லியது.

அம்ம — இடைச்சொல்; இது அசையுமாம்; கேளுங்கள் என்கிற பொருளையுந் தரும். "அம்மவுரையசை கேண்மினென்றாகும்" என்பது சூத்திரம். எறிகல்லா—எறி - பகுதி, கு - சாரியை, அல் - எதிர்மறைப் பண்படி, இங்கு விகுதியாவேனும் இடைநிலையாவேனும் கொள்க; ஆ - பலவின்பால் விகுதி. எறிதல் - தூக்கிப்போடல், வாக்கு—வாங்கு என்னு முதனிலைத் தொழிற்பெயர் வலிந்து நின்றது. (ரு)

[இஃது மகளைப் போக்கிய தாய் இரங்கியது.]

அரக்காம்ப னாறும்வா யம்மருங்கிற் கன்னோ
பரற்கான மாற்றின கொல்லோ - வரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின் வாங்கு மடி.

(இ - ள்.) அரக்கு ஆம்பல் - செவ்வாம்பலைப்போல, நாறும் - தோன்றுகின்ற, வாய் - இதழையுடைய, அம் மருங்கிற்கு - அழகிய இடையை யுடையவளுக்கு, அன்னோ - ஐயோ!, பரல் கானம் - பருக்காங் கற்களையுடைய காட்டை, அரக்கு ஆர்ந்த பஞ்சி கொண்டு - சிவந்தநிறமுடைய பஞ்சினால், ஊட்டினும் - (செம்பஞ்சிக்குழம்பைத்) தடவினாலும், பை என பை என என்று - மெதுவாக மெதுவாக என்று, அஞ்சி - பயந்து, பின் வாங்கும் அடி - (சகியாமல்) இழுக்கிற பாதங்கள், ஆற்றின கொல் ஓ - பொறுத்தனவோ? எ-று.

நம்மகள் காடுசென்றாளே அவள் செம்பஞ்சிக் குழம்பைப் பஞ்சினால் தடவினபோதும் அதைப் பொறுக்கமாட்டாமல் மெல்லமெல்ல என்று சொன்ன அவள் தன் தலைவன் பின்னே செல்லுகையில் அவளுடைய பாதங்கள் பருக்காம் கற்களின்மேல் எப்படி நடந்தனவோ வென் றிரங்கித் தாய் விசனப்பட்டுச் சொன்னாள் என்பதாம்.

---

6. When scented paste was applied with red cotton to the feet of my daughter with beautiful waist and reddish mouth which resemble the red lily, she would say be gentle, be gentle and withdraw her feet. How then will those feet be able to travel through the gravelly paths of the forest.

Digitized by Google

நாறும் வாய் - மணம் வீசும் வாய் எனவும் பொருள்கொள்ள லாம். அம்மருங்குல் — உரிச்சொற்றொடர்ப் புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை. அம் - உரிச்சொல்; அது பண்பாதலால் "ஐந்தொ கை மொழிமேற் பிறதொக லன்மொழி" என்பதற்கு விரோதமில்லை. அன்றோ — இரக்கச்சொல். கொல் என்பது ஐயப்பொருளில்வந்த இடைச்சொல். ஓ — வாக்கியாலங்காரத்திற்கு வந்த அசைச்சொல்; (அல்லது) "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா" என்கிற விதியினால் இரண்டும் ஐயப்பொருளையே சிறப்பித்து நின்றன வெனவுமாம்.

பைய என என்பது பையென என ஈறுதொகுத்தலாய் நின்றது. பையெனப் பையென—அச்சப்பொருள்பற்றி அடுக்கிவந்தன. (௬)

[இஃது தலைவன் பிரிவாற்றாத
தலைவி நிலைமையைத் தோழி கூறியது.]

ஓலைக் கணக்க ரொலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதின் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேற்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

(இ-ள்.) ஓலை கணக்கர் - ஓலையெழுதும் கணக்கர்களுடைய, ஒலி அடங்கும் - ஓசை ஒழிந்து போகும்படியான, புல் செக்கர் - அற்ப மான சிவப்பினையுடைய, மாலை பொழுதில் - மாலைக்காலத்தில், மணந் தார் பிரிவு உள்ளி - தலைவன் பிரிதலை நினைத்து, மாலை பரிந்திட்டு - மாலையைக் கழற்றி யெறிந்து, வனம் முலை மேல் - அழகான ஸ்தனத் தின்மேல், கோலம் செய் சாந்தம் - அலங்காரம் செய்த சந்தனப் பூச்சை, திமிர்ந்து - உதிர்த்துத்தள்ளி, அழுதாள் - துக்கித்தாள், எ-று.

சாயங்காலத்தில் தன் தலைவன் பிரிவதை எண்ணி அதைப்பொறா மல் தலைவி, தான் அணிந்திருந்த பூமாலையைக் கழற்றி யெறிந்து சந் தனக்கோலத்தைத் திமிர்த்துத் தள்ளி யழுதாள் எனத் தோழி தலை வற்குச் சொன்னாளென்பதாம்.

கணக்கர் கிராமக்கணக்கு முதலியவைகளை யெழுதிப்பேசி யோ யுங்காலமாதலால், "ஓலைக்கணக்கர் ஒலியடங்கு' என்பதைச் சாயங் காலத்தின் குறிப்பாகக் கொள்ளப்பட்டது.

---

7. In the ruddy evening when karnams who write on palm-leaves retire from their work, the wife meditating on the separation of her husband wept bitterly, casting off her garland and wiping off the sandal paste from her beautiful breasts.

Digitized by Google

அடங்கு — வினைத்தொகை. மணந்தார்—விவாகஞ் செய்தவர், வினையாலணையும் பெயர். உள்ளி—உள் அல்லது உள்ளு - பகுதி, இ- விகுதி, இதனை உகரத்தின் திரிபு என்று சொல்வாருமுளர். (எ)

[இஃது உடன்போக்குப் பொருந்தின தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

கடக்கருங் கானத்துக் காளைபின் னாளை
நடக்கவும் வல்லையோ வென்றி - சுடர்த்தொடீஇ
பெற்றா னொருவன் பெருங்குதிரை யந்நிலையே
கற்றா னஃதூரு மாறு.

(இ - ள்.) சுடர் தொடீஇ - பிரகாசமுள்ள வளைகளை யுடையவளே!, கடக்க அரு கானத்து - கடந்துபோவதற் கரிதான காட்டிலே, காளை பின் - காளைபோன்ற என்கணவன்பின், நாளை - நாளைத்தினம், நடக்கவும் வல்லையோ - நடந்துசெல்லவு மாட்டுவையோ, என்றி - என்று நீ சொன்னாய்; பெரு குதிரை - பெரிய குதிரையை, பெற்றான் ஒருவன் - பெற்றவனாகிய ஒருவன், அ நிலையே - அக்கணமே, அஃது - அதை, ஊரும் ஆறு - ஏறி நடத்து முறைமையை, கற்றான் - கற்றவனேயாவன், (ஆதலால் நாயகன் பின்போதல் அரிதன்று), எ-று.

நீ நாளைக்குக் கணவன்பின் போக வுடன்பட்டையே நடந்து செல்லமாட்டுவையோ வென்று தோழீ நீ என்னை வினாவினாய்; அதற்கு நான் சொல்லுகிறேன், ஒருவன் குதிரையை வாங்கினால் அதையேறி நடத்தவும் கற்றிருப்பானல்லவோ அப்படிப்போல ஓர் கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட நான் அவன்பின் செல்லமாட்டா திருப்பேனோ என்றாள் ஒருத்தி என்பதாம்.

கடக்க அரு — கடக்கரு என ஈறுதொக்கது. காளை—உவமையாகுபெயர். வல்லை—முன்னிலைக் குறிப்பு வினைமுற்று. ஓ—வினாவிடைச்சொல். என்றி — முன்னிலை யொருமைத் தெரிநிலை வினைமுற்று; என் - பகுதி, இடைச்சொல், றகரம் - இடைநிலை, இ - விகுதி. "ஐயாயிகர வீற்ற மூன்று மேவலின் வருஉம்" என்னுஞ் சூத்திரத்திற் காண்க. சுடர்த்தொடி — வேற்றுமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, அளபெடுத்தது விளியுருபு. (அ)

---

8. O thou adorned with shining bracelets! You asked me "will you be able to follow your husband through the paths of the forest difficult to be traversed?" A person who has purchased a horse will at the same time also know how to ride.

Digitized by Google

[இஃது மகளைப்போக்கிய தாய் கவலைப்பட்டுச் சொல்லியது.]

முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லு
மிலக்கணம் யாது மறியேன் - கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி.

(இ - ள்.) முலை கண்ணும் - முலையின் காம்புகளும், முத்தும் - முத்துமாலையும், (அழுந்த) முழு மெய்யும் - உடம்பு முழுமையும், புல்லும் இலக்கணம் யாதும் - ஆலிங்கனம் செய்துகொண்ட குறி யாதொன்றையும், அறியேன் - அறியமாட்டேன்; என் பூ பாவை - என்னுடையமகள், செய்த குறி - செய்த அடையாளம், கலை கணம் - மான்கூட்டம், வேங்கை வெரூஉம் - புலிக்கு பயப்படுகிற, நெறி - வழியில், செலிய போலும் - செல்லுதற்குப்போலும், எ-று.

நேற்று என்மகள் தன்னுடைய முலைக்கண்ணும் முத்துமாலையும் என்மெய்யிற் பொருந்தும்படி என்னை ஆலிங்கனஞ்செய்த குறி இன்னதென்று அறிந்திலேன், அது, மான்கள் புலிக்கஞ்சி யோடும்படியான வழியில் தான் தன் னாயகனோடு செல்லுதற்கு அடையாளமாகச் செய்தாளென்று இன்றறிந்தேன் என்று தாய் மகளைக்குறித்துக் கவலைப்பட்டுச் சொல்லியது.

பயத்துக் கேதுவானதை இரண்டாம் வேற்றுமையிற் கொள்வது தமிழ்ச் செய்யுளாட்சி; நான்காம் வேற்றுமையிற் கொள்வது உலக வழக்கு. வெரூஉம்—உகரம் அளபெடுத்தது இன்னோசைக்காக. செலிய—செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; செல் - பகுதி, இ - சாரியை, அ - விகுதி, இச்சாரியை பெறாதபோது செல்ல வென்றிருக்கும். போலும்—தெரிநிலை வினைமுற்று, பயனிலை. இங்குபோல் என்றது உவமையைக் காட்டினதன்று; தற்குறிப்பைக்காட்டியது. "அங்கனம் புல்லியது" என்பதை எழுவாயாக வருவித்துக்கொள்க. (௯)

கண்மூன் றுடையானுங் காக்கையும் பையரவு
மென்னீன்ற யாயும் பிழைத்ததென் - பொன்னீன்ற

---

9. I understood not (yesterday) what she meant when she so closely embraced me. Now I understand her signal to mean that she would leave me and follow her husband through the forest paths where the herd of timid deer flee away from the tiger.

10. O thou who hast breasts covered with golden colored spots and which are like the Konghoo flowers! I upbraid not the three-eyed Siva, nor the crow, nor the hooded serpent, nor

Digitized by Google

கோங்கரும் பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி.

(இ-ள்.) பொன் ஈன்ற - பொன்போலும் தேமல் பூத்த, கோங்கு அரும்பு அன்ன முலையாய் - கோங்க மலரையொத்த முலையையுடைய தோழி!, கண் மூன்று உடையானும் - மூன்று கண்களையுடைய சிவனும், காக்கையும் - காக்கைப்பறவையும், பை அரவும் - படமுடைய சர்ப்பமும், என் ஈன்ற யாயும் - என்னைப்பெற்ற தாயும், பிழைத்தது என் - (எனக்கு அவர்கள்) செய்தகுற்றம் என்ன, [ஒன்று மில்லை]; (குற்றம் செய்ததெதுவெனில்) பொருள்வயின் - பொருளினிடத்தாசையால், பாங்கனார் - என் நாயகர், சென்ற நெறி - போனமார்க்கமே (யாம்), எ-று.

அந்நெறி இல்லையாயின் அவர் செல்லார், அப்போது அவையெல்லாம் நமக்கு அநுகூலமே யாகும். நாயகர் பொருள் விருப்பத்தால் தேசாந்தரம்போன நெறியை நாம் வெறுத்துப் பழிக்கவேண்டுவதென்ன? அது நமக்கு என்ன குற்றம் செய்தது; ஆகில் யார் குற்றம் செய்தவர்களென்றால், மன்மதனை முழுதும் எரிக்காமல் உயிர்கொடுத்த சிவனும், தன் கூட்டிற் பொரித்த குயிற்குஞ்சைக் குத்தியெறியாமல் வளர்த்த காக்கையும், சந்திரனை விழுங்கிப் பின் உமிழ்ந்த அரவும், என்னைப் பெற்றபோதே கொல்லாமல்விட்டு வளர்த்த தாயுமே பிழைசெய்தனர் என்று தலைவி தன்பிரிவாற்றாமையைத் தோழியோடு சொல்லியது என்றால் கணவனைப் பிரிந்தகாலத்து மன்மதனும் குயிலும் சந்திரனும் வருத்துவதனாலும் தாய் கொன்றிருந்தால் இப்படிப் பட்ட துன்பங்களை யநுபவியாம லிருக்கலா மாதலாலும் அவர்கள் பிழைத்த தென்றாள். இப்பொழுது மன்மதன், குயில், சந்திரன், ஆகிய இவர்கள் இன்னின்னகாரியம் செய்ததனாலே பிழைசெய்தார்களென்று நாம் வெறுக்க வேண்டியதில்லை; அவர் அந்நெறியிற் செல்லாமல் நம்மிடத்தே யிருப்பராயின் அவரெல்லாம் அநுகூலமே செய்வாராவர், ஆதலால் அவர்சென்ற நெறியே நமக்குப் பிழைத்ததென நாம் கூறவேண்டிய தாயிற்று.

கண்மூன்றுடையான்—பண்புத்தொகை; மூன்றுகண் என மாற்றிக்கொள்க. பையரவு — இரண்டாம் வேற்றுமை யுருபும் பயனுமுடன்றொக்க தொகை. பிழைத்தது — தொழிற்பெயர். கண்மூன்

---

the mother that gave birth to me. I only blame the path which has taken away my husband from me, through his desire for wealth.

Digitized by Google

ருடையான் முதலானோர் பிழைத்தது என்பதனோடு முடிந்தது, அது எழுவாயாகி என் என்னும் வினாவினைக் குறிப்பு முற்றோடு முடிந்தது; பொன்—தேமலுக்கு ஆகுபெயர். மூலையாய் — ஏகாரம் யகரமானது விளியுருபு. வயின் — ஏழனுருபு. நெறி - எழுவாய், பிழைத்தது - பயனிலை. (௧0)

---

☞ இப்படி அங்கங்கே சொல்லிய இலக்கணமுதலானவைகளைக்கொண்டு சொல்லாத இடங்களிலும் இலக்கண முதலியவற்றை உய்த்து உணர்க.

---

ஆ௳ அதிகாரம் ௪0-று செய்யுள் ௪00.

---

நாலடியாருரை முற்றிற்று.

Digitized by Google

கடவுள்துணை.

# நாலடியார்

## பாட்டு முதற்குறிப்பு அகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அகத்தாரோ | ௨௬ | ஆர்த்தவறிவி | ௨௫௧ |
| அக்கேபோ | ௯௯ | ஆவாநாமாக்க | ௨௭ |
| அங்கண் | ௧௨௧ | ஆவேறுருவி | ௯௫ |
| அங்கண்விசு | ௨௬௬ | ஆற்றுந்து | ௧௫௦ |
| அங்கோட் | ௨௬௬ | ஆன்படுநெ | ௧௭௭ |
| அச்சம் | ௬௫ | இசைந்த | ௧௪௪ |
| அடுக்கன்ம | ௧௫௫ | இசையாதெ | ௧௪௯ |
| அடைந்தார்ப் | ௧௩௫ | இசையாவொ | ௯௦ |
| அத்திட்டகூ | ௨௦௩ | இசையுமெனி | ௧௨௧ |
| அம்பலயலெ | ௭௦ | இடம்பட | ௯௩ |
| அம்புமழு | ௭௧ | இடும்பைகூர் | ௮௬ |
| அரக்கா | ௨௮௫ | இட்டாற்று | ௨௦௭ |
| அருகல | ௧௯௧ | இமைக்குமள | ௨௩௧ |
| அரும்பவிழ் | ௨௮௦ | இம்மியரிசி | ௭௫ |
| அரும்பெறல் | ௨௮ | இம்மைபயக் | ௧௦௬ |
| அரும்பெறற் | ௨௭௨ | இம்மையு | ௨௧௧ |
| அருளின | ௨௩௦ | இரவலர்கன் | ௨௦௨ |
| அலகுசால் | ௧௧௨ | இருக்கையெ | ௧௧௫ |
| அவமதிப்பு | ௧௨௯ | இரும்பார்க்கு | ௯௮ |
| அவ்விய | ௨௩௦ | இலங்குநீர் | ௧௭௦ |
| அழன்மண்டு | ௧௫௪ | இல்லமிளமை | ௪௪ |
| அள்ளிக்கொ | ௧௯௧ | இல்லாமை | ௨௧௬ |
| அறம்புகழ் | ௬௬ | இல்லாவிடத் | ௭௩ |
| அறிமினற | ௧௩௫ | இழித்தக்க | ௨௧௬ |
| அறியாப்பரு | ௧௩௪ | இழைத்தநா | ௬ |
| அறியாரு | ௮௭ | இளையானட | ௫௩ |
| அறிவதறிந் | ௬௦ | இறப்பச்சிறி | ௭௯ |
| அறுசுவை | ௨ | இறப்பநினை | ௧௩௬ |
| ஆகாதெ | ௨௪௧ | இறப்பவே | ௧௬௮ |
| ஆடுகோடா | ௧௪௮ | இற்சார்வி | ௧௪௧ |
| ஆட்பார்த் | ௧௮ | இற்பிறப்பில் | ௨௨௯ |
| ஆணமினெ | ௨௬௭ | இற்பிறப்பெ | ௧௬௧ |
| ஆமாபோ | ௨௭௦ | இனநன்மை | ௧௧௭ |
| ஆர்த்தபொ | ௨௦௮ | இனியார்தம் | ௨௬௩ |


Digitized by Google

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| இன்பம் | ௬௪ | எம்மையறி | ௧௩௦ |
| இன்ருது | ௨௫௭ | எய்திய | ௨௩௩ |
| இன்றுகொ | ௩௦ | எறிநீர்ப் | ௧௯௯ |
| இன்னரினைய | ௧௫௬ | எறியென் | ௨௫௯ |
| இன்ஞுசெயினுமி | ௬௧ | எற்ருென்று | ௧௨௦ |
| இன்ஞுசெயினும்விட | ௧௬௯ | எனக்குத்தா | ௧௪ |
| இன்ஞுசெயினும்விடு | ௧௭௦ | எனதென | ௨௦௦ |
| இன்ஞுவியை | ௨௧௮ | என்பாயுகி | ௨௦௯ |
| ஈட்டலு | ௨௦௨ | என்றும் | ௨௧௯ |
| ஈண்டுநீர் | ௮௮ | என்ஞனு | ௬ |
| ஈதலிசையா | ௧௪௦ | என்னேமற் | ௨௩௬ |
| ஈனமாயில் | ௧௫௧ | ஏட்டைப்ப | ௨௫௬ |
| உடாஅது | ௧௦ | ஏதிலார் | ௧௭௧ |
| உடுக்கை | ௧௧௩ | ஏமாந்தபோ | ௨௭௦ |
| உடைப்பெரு | ௨௬௩ | ஏற்றகை | ௭௮ |
| உடையாரிவ | ௧௨௬ | ஒண்கதிர் | ௧௩௭ |
| உணரவுணரு | ௧௮௨ | ஒருநன்றி | ௨௫௫ |
| உண்டாய | ௨௦௫ | ஒருநீர்ப் | ௧௭௫ |
| உண்ஞுஞெ | ௯ | ஒருபுடை | ௧௧௯ |
| உபகாரஞ் | ௫௬ | ஒருவரொருவ | ௨௨௦ |
| உயிர்போயார் | ௪௧ | ஒக்கியவொள் | ௧௦௩ |
| உருவிற் | ௧௭௮ | ஓதியுமோதா | ௧௯௬ |
| உருவுமிளைமை | ௮௨ | ஓலைக்கணக்க | ௨௮௬ |
| உலகறிய | ௧௫௫ | கடகஞ்செறி | ௨௦௭ |
| உளநாள் | ௨௩௨ | கடக்கருங் | ௨௮௭ |
| உள்கூர்ப | ௨௦௬ | கடமாதொ | ௨௧௪ |
| உள்ளத்தா | ௧௦௨ | கடல்சார்ந்து | ௧௮௧ |
| உள்ளத்துணர் | ௨௭௬ | கடித்துக் | ௧௨௪ |
| உள்ளமொரு | ௨௭௨ | கடிப்பிடு | ௮௦ |
| உறக்குந் | ௩௧ | கடியெனக் | ௨௯௦ |
| உறற்பால | ௮௪ | கடுக்கியொரு | ௧௪௬ |
| உறுபுலி | ௧௪௮ | கடுக்கெனச் | ௨௪௯ |
| உறுபுனறந் | ௧௪௩ | கடையாயார் | ௧௬௩ |
| உறைப்பருங் | ௧௪௨ | கடையெலா | ௨௧௨ |
| ஊக்கித்தாங் | ௪௭ | கட்கினியாள் | ௨௭௪ |
| ஊரங்கணநீ | ௧௩௭ | கணங்கொண் | ௨௧ |
| ஊருளெழுந் | ௭௨ | கணமலை | ௨௫௩ |
| ஊறியுவர் | ௩௯ | கண்கயலென் | ௨௮௪ |
| ஊறுசெய் | ௨௭௧ | கண்மூன் | ௨௮௮ |
| எஞ்ஞான்று | ௨௭௬ | கப்பிகடவதா | ௨௪௪ |
| எத்துணையா | ௧௧௭ | கம்மஞ்செய் | ௨௮௨ |
| எங்கிலத்து | ௧௮௦ | கரவாததின் | ௨௧௮ |


Digitized by Google

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| கருங்கொள் | ௨௭௭ | கோடேந்த | ௨௫௩ |
| கருத்துணர்ந் | ௧௬0 | கோட்டுப்பூ | ௧௬௩ |
| கருமமு | ௧௮௪ | கோதையரு | ௫௭ |
| கருமவரிசை | ௧௮௩ | கோளாற்றக் | ௧௪௭ |
| கரும்பாட்டி | ௨௯ | சக்கரச்செல் | ௨௪௭ |
| கல்லாக்கழிப் | ௨௬௧ | சாய்ப்பறிக்க | ௨௭௯ |
| கல்லாதுபோ | ௧௩௩ | சான்றாண்மை | ௧௧௪ |
| கல்லாதுநீண் | ௧௮௭ | சான்றோரொ | ௧0௧ |
| கல்லாமை | ௧௧௬ | சிதலைதினப் | ௧௫௧ |
| கல்லாரோயா | ௧௧௨ | சிறுகாபெரு | ௮௯ |
| கல்லெறிந் | ௫௪ | சிறுகாலையே | ௨௩௫ |
| கல்லென்று | ௧௮௬ | சீரியார் | ௧௭௩ |
| கல்லோங்கு | ௨0௪ | செந்நெல்லா | ௨௬௨ |
| கல்விகரையி | ௧0௮ | செம்மை | ௬௮ |
| கழிந்தாரிடு | ௪0 | செய்கையழி | ௧௧௮ |
| கழுநீருட் | ௧௬௪ | செய்யாத | ௧௭௫ |
| களர்நிலத்து | ௧0௭ | செல்சுடர் | ௨௮௩ |
| கள்ளார்கள் | ௧௨௫ | செல்லாவிட | ௧௧௯ |
| கற்றதூஉ | ௨௨௪ | செல்வர்யா | ௮ |
| கற்றறிந்த | ௧௮௮ | செல்வுழிக் | ௧௨௩ |
| கற்றனவுங் | ௨௪௩ | செழும்பெரு | ௨௫௨ |
| கற்றாருநாக் | ௧௯0 | செறிப்பில் | ௧௭௩ |
| கனைகடற்ற | ௧௧௧ | செறுத்தோ | ௧௬௭ |
| கன்னனிநல்ல | ௨௩௯ | சென்றேயெ | ௨௧ |
| காணிற் | ௬௭ | சொற்றளர்ந்து | ௧௨ |
| காதலார்சொ | ௫௯ | சொற்றாற் | ௨௨௪ |
| காலாடுபோ | ௯௧ | தக்காருந் | ௯0 |
| காவாதொரு | ௫௧ | தக்கோலந் | ௩௬ |
| காழாயகொ | ௨௪௫ | தங்கண்மர | ௨௪௧ |
| குஞ்சியழகும் | ௧0௫ | தண்டாச் | ௫0 |
| குடநீரட் | ௨௭௩ | தமரொன்று | ௧௭௧ |
| குடங்கொ | ௩௮ | தம்மமர்காத | ௨௮௨ |
| குலந்தவங் | ௨௩௯ | தம்மையிகழ்ந் | ௪௮ |
| குற்றமுமே | ௧௭௨ | தம்மையிகழ்வா | ௯௪ |
| கூர்த்துநாய் | ௫௭ | தலையேதவ | ௨௬௧ |
| கேளாதேவந் | ௨௫ | தவலருந் | ௧௧0 |
| கொடியவை | ௨௭௮ | தளிர்மேலே | ௨௫௪ |
| கொடுத்தலுங் | ௧௯௯ | தனதாகத் | ௨0௧ |
| கொய்புற் | ௨௫0 | தாஞ்செய் | ௯௬ |
| கொலைஞரு | ௨௩௭ | தாமேயு | ௨௩௪ |
| கொல்லையிரு | ௧௩௮ | தாழாத்தளரா | ௧௩ |
| கொன்னே | ௪௫ | தான்கெடி | ௬௪ |


Digitized by Google

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| திருத்தன்னே | ௨௧௭ | நிலநலத் | ௧௩௯ |
| திருமதுகை | ௨௦௯ | நிலையாமை | ௪௩ |
| தினைத்து | ௮௫ | நின்றனநின் | ௫ |
| தினையனைத் | ௨௪௬ | நீரினுநுண் | ௨௦௪ |
| தீங்கரும் | ௧௫௨ | நீருட்பிறந் | ௨௫௭ |
| துகடீர் | ௩ | நீர்மையே | ௨௦௬ |
| துக்கத்துட் | ௯௭ | நுண்ணுணர்வினு | ௧௭௪ |
| துய்த்துக் | ௧௯௮ | நுண்ணுணர்வின் | ௧௮௫ |
| துன்பமே | ௪௯ | நெடுங்கால | ௫௫ |
| துன்பம்பல | ௪௪ | நெருப்பழற் | ௯௯ |
| தெண்ணீர்க் | ௩௬ | நேரல்லார் | ௫௮ |
| தெரியத் | ௧௩௨ | நேர்த்து | ௫௨ |
| தெளிவிலார் | ௧௬௫ | பகைவர்பணி | ௧௭௧ |
| தோணியியக் | ௧௦௯ | படுமழை | ௨௩ |
| தோற்போர் | ௩௫ | பண்டமறி | ௩௯ |
| தோற்றஞ்சா | ௭ | பரவாவெளிப் | ௭௦ |
| நச்சியார்க் | ௨௧௩ | பராஅரைப் | ௧௮௨ |
| நடுக்குற்றுத் | ௭௪ | பருவமெனை | ௧௬ |
| நடுவூருள் | ௭௭ | பலநாளும் | ௧௬௨ |
| நட்டார்க்கு | ௧௯௭ | பல்லாரறியப் | ௬௧ |
| நட்புநார | ௧௨ | பல்லாவு | ௮௧ |
| நம்மாலே | ௨௧௫ | பல்லான்றகேள்விப் பயனுணர்வார்பா | ௧௮௫ |
| நயவார்க | ௧௯௪ | | |
| நரம்பெழுந் | ௧௨௨ | பல்லான்றகேள்விப் பயனுணர்வார்வீ | ௮௫ |
| நறாவருமெ | ௧௧ | | |
| நல்லகுல | ௧௪௯ | பழமைகந் | ௨௨௧ |
| நல்லர்பெரி | ௨௧௩ | பழையரிவ | ௨௫௦ |
| நல்லவைசெ | ௧௧௬ | பனிபடு | ௧௫ |
| நல்லவைநா | ௨௪௨ | பன்றிக்கூழ் | ௧௮௮ |
| நல்லானொனத் | ௧௬௭ | பன்னாளுஞ் | ௧௨௬ |
| நல்லார்நயவ | ௯௩ | பாடமே | ௨௨௬ |
| நல்லாவின் | ௯௩ | பாம்பிற்கொ | ௨௬௮ |
| நளிகடற்றண்சேர்ப்பந | ௧௭௯ | பாலாற்கழீஇ | ௧௮௧ |
| நளிகடற்றண்சேர்ப்பநா | ௧௩௧ | பாலோடளா | ௧௩௮ |
| நறுமலர்த் | ௧௫௮ | பாவமுமே | ௨௧௧ |
| நாணிலைக் | ௧௮௩ | பிறந்தகுல | ௨௦௫ |
| நாப்பாடஞ் | ௨௨௩ | பிறர்மறை | ௧௨௫ |
| நாய்க்காற் | ௧௬௫ | புக்கவிடத் | ௬௭ |
| நார்த்தொடு | ௨௨ | புணர்கடல் | ௧௧௩ |
| நாலாறு | ௨௭௪ | புதுப்புன | ௨௬௪ |
| நாள்வாய்ப் | ௧௫௭ | புத்தகமே | ௨௨௭ |
| நாறுத்தகடே | ௧௯௪ | புல்லாப்புன் | ௧௮௭ |


Digitized by Google

| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| புல்லாவெழு | கஉங | முட்டிகை | கருஅ |
| புறத்துத் | உஉ0 | முட்டுற்ற | கஎஎ |
| புன்னுனி | உச | முயங்காக்கா | உஅக |
| பெயற்பான் | எஅ | முலைக்கண் | உஅஅ |
| பெரியவர் | க00 | முல்லைமுகை | ஙஎ |
| பெரியார்பெரு | சுஉ | முற்றற்சிறு | கஎசு |
| பெரியார்பெருமை | கஙங | முற்றுத்தூம் | கசசு |
| பெருகுவது | கஎச | முன்னரோ | எங |
| பெருங்கட | உஙஅ | மூப்புமேல் | உஙங |
| பெருநடை | உசசு | மெய்ஞ்ஞானக் | உஉஉ |
| பெருமுத்த | கருங | மெய்வாய்கண் | சஅ |
| பெருவளாநா | கசச | மெல்லிய | கசரு |
| பெறுவது | உஉஎ | மைதீர்பசும் | உசஅ |
| பெறுவதொ | உச0 | யாஅருலகத் | கூரு |
| பொத்தறூற் | உசுஅ | யாஅரொருவ | க0க |
| பொழிந்தினி | ககூ0 | யாக்கையை | உச |
| பொழிப்பகல | உஉஅ | யாமாயினெம் | உக0 |
| பொறுப்ப | கஉஎ | யானையனைய | கசுஉ |
| பொற்கலத்து | கருஎ | யானையெ | ச |
| பொற்கலத்தூ | உசஎ | வடுவிலா | கூஉ |
| பொன்னிற | ககூரு | வயாவும் | கருச |
| பொன்னே | கஉஅ | வலவைக | ககூரு |
| மக்களாலாய | ஙக | வழங்காத | உ00 |
| மடிதிரை | கசுஅ | வழுக்கெனை | உருகூ |
| மதித்திறப் | ரு0 | வளம்பட | அங |
| மரீஇப்பல | கசுசு | வற்றிமற் | சுங |
| மலைநல | உருரு | வாழ்நாட் | கக |
| மலைமிசைத் | ககூ | வானிடுவில் | க |
| மல்குதிரை | ககூஉ | விரிநிற | கஉகூ |
| மல்லன்மா | உகஉ | விருப்பிலா | கருகூ |
| மழைதிளைக் | உருஅ | விளைந்தொ | உசங |
| மறுமைக்கு | கசஉ | விளக்குப் | சஉ |
| மறுமையு | எசு | விளக்கொளி | உசுரு |
| மற்றறிவா | கஎ | வினைப்பயன் | உஅ |
| மனத்தான் | கஙகூ | வெறியயர் | கச |
| மனைப்பாசங் | க0ச | வெறுமை | உஙரு |
| மன்னுங்கறங் | உ0 | வென்றிப் | உஉரு |
| மன்னர்திருவு | கஙக | வேம்பினிலை | கஅ0 |
| மாக்கேழ்மட | ஙச | வேற்றுமை | சுக |
| மாண்டகுண | சசு | வைகலும் | ஙஉ |
| மாற்றூராய் | ருரு | வைப்புழிக் | க0அ |
| மானவருங்கல | ஙங | | |


Digitized by Google